QR6
N25

ஆறுவதுமண்டலமாகிய

# ஸ்ரீமத் - குமாரசுவாமியம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 1925
MADRAS

120803

Q26
N25

ஓம் குஹேசாய நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 1925
MADRAS

ஸ்ரீமத்

# குமாரசுவாமியமூலமும்,

திருவிளையாடற்காண்டத்துப்

# பொழிப்புரையும்,

சண்முகஞானபுரத்துத்

திருப்பத்துக்களினுரையும்,

திருமாலைமாற்றினுரையும்.

120803

Q26
N25

ஓம் குஹப்ரஹ்மணே நம:

தேவையம்பதியெனுந் திருவிராமேச்சுரத்தைச்சார்ந்த பாம்பன் :

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத

வைதிகசைவ சித்தாந்த ஞானபானு

# குமாரசுவாமியென்னும்

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்ட

# ஸ்ரீமத் - குமாரசுவாமியம்.

894.811
2237

**First Edition - 250 Copies.**

திருவாளர்

ச. சச்சிதாநந்தம்பிள்ளையவர்கள் B. A., L. T.,

(பாடசாலை டெபுட்டி இன்ஸ்பெக்டர்)

எழுதிய முதற்காண்டத்துரையோடும்,

நூலாசிரியரது திருமாலைமாற்றுரையோடும்

சென்னை : சாது அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

Copy - Right Registered

9 - 3 - 1925]

[விலை ரூ. 5.

உ

சிவமயம்.

திருமுருகன்றா ளிருமைக்குந் துணை.

# முன்னுரை.

---

ஸ்ரீமத் - குமாரசுவாமியம் என்னு மிந்நூல், நுவலும் பொருளானும் நுவன்றோன் பெருமையானுஞ் சாலச் சிறப்புடையது. என்னை? நூலின் பொருளாவான் நுதல்நாட்டத் திறைவன் குமாரனும், நுவன்றோன் அக்குமாரன் மெய்யடிமைத் திறத்தில் இஞ்ஞான்று தலை சிறந்து விளங்குமோர் தபசியுமாகலின். இவ்வாசிரியர், சுப்பிரமணியக் கடவுளின் பெருமைகளைக் குறித்துச் சாத்திர ரூபமாகவுந் தோத்திர ரூபமாகவும் பல உயரிய நூல்களை முன்னமே அருளிச் செய்துள்ளமை அறிஞர் பலரும் அறிந்த தொன்றே. இவற்றுள், சிறுநூற்றிரட்டு, பரிபூரணானந்த போதம், தகராலயரகசியம், திருப்பா, செக்கர்வேளிறுமாப்பு, செக்கர்வேள் செம்மாப்பு, சிவஞானதீபம், சுப்பிரமணிய வியாசம் என்னு நூல்கள் ஒரு சில. இவற்றின் ஆசிரியராம் சுவாமிகள் ஆழ்ந் தகன்றோங்கு மறிவும், நூலாராய்ச்சித் திட்பமும், புலமைச் சொல்வன்மையும் எழுத்து வன்மையும், நல்ல செல்வத்தினின்று நீங்கியுள்ள நேரிய துறவறநெறியும், முருகக்கடவுண் மாட்டு நிலைகலங்காப் பேரன்பு முடையார் என்பதை இந்நூல்களையுஞ் சுவாமிகளையுங் காணும் பேறுபெற்றா ரனைவரும் நன்கறிவர். இத்துணைச் சிறப்புவாய்ந்த நம் சுவாமிகள் இஞ்ஞான்றருளிச் செய்துள்ள விந்நூல், ஸ்ரீ குமாரபிரானுடைய அரும்பெருந் திருவிளையாடல்களையும் அடியார் அவன்பாற் செலுத்து மன்பின்றிறத்தையும் அவரடையும் பேறுகளையுந் தானேதும் பொருளாகக் கொண்டிருத்தலின் இதற்கு "ஸ்ரீமத் - குமாரசுவாமியம்" என்னும் பெயரெய்திற் றென்றும், குமரகுருதாசரென்னும் பெயரையுடைய சுவாமிகளை யொருதெய்வம் "குமாரசுவாமி" எனக் குறிப்பிட்டமையின் அப்பெயர் போதருமாறு இப்பெயர் இந்நூற் கெய்திற்றென்றுங் கூறலாம். குமாரசுவாமி என்னும் பெயரிய சோதிடநூல் வல்லாரொருவரியற்றிய "குமாரசுவாமியம்" என்னுஞ் சோதிட நூலொன்றுளதென்ப. அதனோடு மயங்காமைப்பொருட்டு "ஸ்ரீமத்" என்னுஞ் சிறப்புச்சொல் இந்நூற் பெயர்க்கண் சேர்க்கப்பட்டுள்ளது.

இது, திருவிளையாடற்காண்டம், க்ஷேத்திரகாண்டம், கடாவிடைக்காண்டம், வேட்கைக்காண்டம், பலதிறப் பொருட்காண்டம் என்னும் ஐந்து

பகுதிகளை யுடையது. இவற்றுள் திருவிளையாடற்காண்டம் ௯௩௦ - திருச்செய்யுள்களைக் கொண்டது. இது, குமாரபெருமான் பகிர்முகமானது முதல் வள்ளிமாதேவி திருமணத்தின் பின்னர்க் கந்தகிரிக் கெழுந்தருளுதல் வரையிலுமுள்ள சரித்திரத்தை நேர்படக் கூறுவது; மேலே பழநிமலை வரலாற்றினை யெழிலுறப் பரப்பி யியம்புவது. ௧௨௦ - திருச்செய்யுள்களைக் கொண்டது க்ஷேத்திரகாண்டம். இது, கந்தக்கடவுள் கோயில்கொண் டெழுந்தருளி யிருக்குந் தலங்களுள் சென்னையிலும் அதற்கடுத்துமுள்ள பத்துத் தலங்களைச் சுட்டி ஆசிரியர் பாடியருளிய வண்ணக் குழிப்புடைப் பாக்களையுடையது. சண்முகஞானபுரத்து ௨ - ஆம் பத்து மட்டும் அக்குழிப்புப் பெருச்சந்தமுடையது. ௧௩௦ - திருச்செய்யுள்களைக் கொண்டது கடாவிடைக்காண்டம். இஃது இருவர் தம்முள் வினவி விடுக்கும் பேச்சு வாயிலாக முருகவேளி னருட்டிறத்தை வெகு அலங்கார நயத்தோடு விளக்குவது. வேட்கைக்காண்டத்திலுள்ள திருச்செய்யுள்கள் ௧௦௦. இவை, வேலிறைவனைப் பெண்பாலார், மைந்தனாகவும் நாயகனாகவும் பாவனை செய்து அவன்பாற் பெருக்கும் வேட்கையை இனிது வெளியிடுவன. ஐந்தாங்காண்டமாகிய பலதிறப் பொருட்காண்டம் ௨௧௨ - செய்யுள்களையுடையது. இது, தன் பெயருக்கேற்பப் பல்வேறு பொருள்களைப்பற்றிக் கூறுவது. இதுதானும் முதல்வனையும், அவனடியவரையும், அருட்டிறத்தையும், அவ்வழிப்போதரு நீதி முதலியவற்றையுங் குறித்துப் பேசுவதென்னலாம்.

இந்நூற் செய்யுள்களின் சந்தநயம், சில இடங்களில் வில்லிபுத்தூரார் பாரதத்துக் குழிப்புவண்ணச் செய்யுள்களை நினைப்பூட்டுகின்றது. சில சந்த வேறுபாடுகள், புதியனவாகக் காணப்படுகின்றன. எழுத்தளவு பொருந்தி நிற்கும் பத்துக்களுள் ஒவ்வொன்றும் பலதிற வோசை பயக்குமாற்றையுங் காணலாம். யாப்பிலக்கணம் வல்லார் இத்திற மாராய்தற்குரியர். மற்றும் பொருளணியிற் புதிய வருணனைகளும், எதிர்கால நிகழ்ச்சி தானே ஒலிக்குமாறு கூறும் இரட்டுற மொழிதல்களும், வேறுபட விளம்பும் இரட்டுற மொழிதல்களும், சந்தர்ப்பத்துக்கேற்ற சந்தமும், நாடக நடிப்புக்கேற்றபடி சில இசைத்தலும் அறிஞர்க்குப் பேருவகை தருவன. சில நூல்கள் முருகவேள் சரிதங்கூற முற்பட்ட காலத்தும், வேறு பல கிளைக்கதைகளை விளங்கவுரைக்கும் ஏதுவால் அம்முதல்வன் பெருமையை விரித்தோத வாய்ப்பிலவா யமைந்துள. ஸ்ரீமத் - **குமாரசுவாமியமோ**, சரிதப்போக்கில் **ஸ்காந்த மஹாபுராணத்தைத்** தழுவுதலின் முருகவேள் புகழே யாண்டும் முனைத்துத் தோன்றுமா றமைந்துளது. இதிலோர் பகுதி சிறப்புவகையிற் போற்றற்குரியது. என்னை? வள்ளிப்பிராட்டி திருமணத் திருவிளையாடலின் மாபெருங்கருத்தை மனங்கொண்டுரைக்க மாட்டாதார் சிலர், அதனைப் பல்லாற்றானும் அழகுபடுத்தப்புகுந்து இழிவுபடுத்தி யிடர்விளைத்தமை, இறைவனிலக்கணத்தோடு முரணுதலால் அவ்விழிவுபாடுகள் எட்டுணையுங் கலவா

வண்ணம் அப்பெருந் திருவிளையாட்டைத் தூய்மையு மினிமையும் பொருந்தச் சொல்லுகின்றதாகலின். இனிமேல் இச்சரிதத்தை யெடுத்துரைப்போர், இந்நூன்முறையைத் தழுவுவாராயின் நன்மை பெருகும்.

இவ்வரிய நூலை வெளியிடுதலிற் சுவாமிகள் மற்று மோருதவி செய்துள் ளார்கள் ; கூறுவல் — தமிழ்ச் சுவையறியார் மலிந்துள்ள தற்காலத் தமிழுல கிலே தமிழ்வளஞ் செறிந்துள்ள இப்பனுவலைப் பலரும் படித்துப் பொரு ளறிதல் அரிதென்பதை யுணர்ந்த சுவாமிகள், முதல்வன் சரிதங்கூறு முதற் காண்டத்து கூருo - செய்யுள்கட்குந் தஞ்சீடரு ளொருவரைக்கொண்டு உரை வரைவித் தருளினர். இவ்வுரை சுவாமிகளாற் பார்வையிடப் பெற்றுள் ளமையின் இது, நூற் கருத்துக்கு மாறுபடாது செல்வதெனக் கொள்ளலாம். செய்யுளுக்குப் பொருள்காண முடியாதார், இப்பொழிப்புரை வாயிலாக ஆசி ரியர் கருத்தையுணர்ந்து இன்ப மெய்ப்பயன் எய்துதல் கூடும்.

கலியுகத்தும் வரதனுங் கந்தக்கடவுளின் கவினுறு சரிதத்தைக் காதலி னோது மிந்நூல், அக்கடவுள் வழிபாடு வளர்பிறை மதியென வளரு மிந் நாளிற் காலமறிந்துதவிய அமிழ்தாய்த் தோன்றியுள்ளது. இதன் அருமை பெருமை முழுதுமுணர்ந்து கற்போர் தொகை இஞ்ஞான்று சுருங்கியிருக்க லாம். ஆயினும் இனி வருநாளில் இந்நூலும் இதனாசிரியர் அருளிச் செய் துள்ள ஏனைய பல நூல்களும் பலர்க்குந் தெரிந்தனவாகிப் பெரும் பயன் தந்து மிளிருமென் றுய்த்துணர இடமுண்டு. தங் கடவுட்குந் தாய் மொழிக்குந் தாஞ்செய்யுந் தொண்டாக இந்நூலை யாத்தருளிய பெரியார், இதனைத் தம் முதுமைப் பருவத்துப் பாடத்தொடங்கி முருகநாதனருளால் விரைவில் முட்டின்றி இனிது முடித்தருளினர்கள். இதுபற்றிப் பொது வகையில் தமிழர் யாவரும் சிறப்புவகையில் முருகப்பெருமானடியாரும் சுவாமி கள்பால் என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையர். செஞ்சொற்புனை மாலை சிறக்க வணியுஞ் செந்தமிழ்ப் பரமாசாரிய னருளால் இவ்வரிய நூல் நீடூழி நிலவுவதாக.

15 - 2 - 1925.

ச. சச்சிதாநந்தன்.

ஓம்
குமாரகுருப்யோநம :

# எழுவாயுரை.

மஹாபாரதம் (விஜ்ஞாஹெ்ருதாஸ்துதுஃஜூஃஸ) "வித்யாஹ்யேதாச் சதுர்த்தச" எனக் கூறுமாறு கணக்கிடப்பட்ட பிரமாணவித்தை பதினான்காம். அவை.— இருக்கு, தைத்திரீயம், சாமம், அதர்வம், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம், புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதியென்பன. இவற்றோடு ஆயுள்வேதம், வில்வேதம், காந் தருவவேதம், அருத்தவேதமென்னும் உபவேத நான்கனையுங்கூட்டி

(ஃஷ்டாஃஸாநாஂவிஜ்ஞாநாஂ
அஷ்டாதசாநாம்வித்யாநாம்)

வித்தை பதினெட்டென்னுஞ் சைவபுராணத்து வாயுசங்கிதை. இவ்விரு திற நூல்களும் புராணத்தைப் பிரமாண வித்தையில்வைத்துக் கூறுவ வாயின. இப்புராணம்— சைவம், ஸ்காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌஷியம், மச்சம், மார்க்கண்டேயம், பிரமாண்டம், நாரதீயம், பாகவதம், காருடம், வைஷ்ணவம், பிரமம், பத்மம், பிரமகைவர்த்தம் (சூரியம்), ஆக்கினேயமெனப் பதினெட்டு வகைத்தாம். இவ்வகையுள் ஸ்காந்தம் என்பது மொன்றேயாயினும் நூறாயிரஞ் சுலோகங்களால் நிரம்பி யுள்ளதாகலின் ஏனைய புராணங்களை யெண்ணு விளமைப்படுத்துபு சிரேட் டமா யிராநின்ற மஹாபுராணமுமாம். "இப்புராண சங்கிதைகளுள், சங்கர சங்கிதை யென்பது முற்றும் வேத சம்மதமாயுள்ளது" என்பதை இச்சங் கிதையிலுள்ள சம்பவகாண்டத்து உ - ஆமத்தியாயம் —

(தத்ரயாஸஂஹிதாப்ரோக்தா ஶாஂகரீவேதஸம்மதா ।)
"தத்ரயாஸம்ஹிதாப்ரோக்தா சாங்கரீவேதஸம்மதா ।"

என்று கூறுதலாலறியலாம். இவ்வாறு பிரமாணமாயுள்ளதை ஒருவ ரங்கீகரியா தொதுக்குநராயின் அவர் செய்கை யாதாம்! இது கிடக்க. போந்த சங்கர சங்கிதையிற் புகலப்பட்டதுதான் கந்தபிரான் வரலாறு: (இந்த) "வரலாற்றோடுங் கூடிய கந்தன் புகழ்மையை முனிச்சிரேஷ்டர்காள்! கேண்மின்; இது, கலியுகத்திலுண்டாம் பாவத்தைப் படிக்கக் கேட்டலி னாலேயே பாற்றிட வல்லது" எனச் சம்பவகாண்டத்து உ - ஆமத்தியாய

மும், "வேட்ட பலனை நல்கத்தக்க கந்தனது சரித்திரத்தை நுங்கட்கியம்புவல் பிரியத்தோடு கேண்மின்" என க - ஆமத்தியாயமுங் கூறுதலை,

(𑌶𑍃𑌣𑍁𑌧𑍍𑌵𑌮𑍃𑌷𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑌥𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌶𑍁𑌭𑌾𑌮𑍍 |
𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌸𑍍𑌯𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌤𑍁𑌲𑌾𑌂 𑌕𑌲𑌿𑌕𑌲𑍍𑌮𑌷𑌨𑌾𑌶𑌿𑌨𑍀𑌮𑍍 |)

"ச்ருணுத்வம்ருஷயஸ்ஸர்வே கததோமத்கதாம்சுபாம் !
ஸ்கந்தஸ்யகீர்த்திமதுலாம் கலிகல்மஷநாசிநீம் |"

(𑌆𑌖𑍍𑌯𑌾𑌨𑍈𑌰𑍍𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌭𑍀𑌷𑍍𑌟𑌫𑌲𑌦𑌾𑌯𑌿𑌨𑍀𑌮𑍍 |
𑌆𑌦𑌰𑍇𑌣𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌶𑍃𑌣𑍁𑌧𑍍𑌵𑌂𑌕𑌥𑌯𑌾𑌮𑌿𑌵𑌃 ||

"ஆக்யானைர்பஹுபிர்யுக்த மபீஷ்டபலஸாதநம் |
ஆதரேணமுநிச்ரேஷ்டாச் ச்ருணுத்வம்கதயாமிவ꞉ ||"

என்னுஞ் சுலோகங்களா லறியலாமன்றே. இவற்றை வெறுக்க மறுக்க யாவரே வல்லார்? இந்நூலாகிய **ஸ்ரீமத் - குமாரசுவாமிய** ஆரம்பத்தில் **முதல் வன்புராணமுடிப்பு** எனத்திகழ்ந்து நிற்பதூஉம் மேலை வரலாற்றுமுறை முதலியவற்றைச் சுருங்கச்சொல்வதன்றே.

**அஃதிங்ஙனமாக; பாரத** சல்லியபர்வத்து சச - தொடக்கமாயுள்ள அத்தியாயங்களில் யாகாக்கினியையடைந்த சிவவீரியத்தினின்று கங்கையையெய்திக் காங்கேயனென்னும் பெயர்பெற்ற கந்தமூர்த்தி தேவசேனாதிபதியாகித் தெவ்வனாய தாரகனை முன்னர் முருக்கி அனேக சேனைகளையுடைய மகிஷன் முதலிய அசுரரைப் பின்னரழித்தன ரென்பதாக வருதலும், சைவ **புராணத்து** ஞானசங்கிதையின் கஅ - ஆமத்தியாயத்திற் சிவவீரியத்தினின்று கங்கையையடைந்து திருவுருக்கொண்ட கந்தபகவான் வானோருக்குச் சேனானியாகிச் சோணிதபுரத்துத் தாரன் புதல்வனாய தாரகாசுரனைச் சங்கரித்தனர் : * அத்தாரகாசுரன் மக்களே திரிபுரவாசிகளென வருதலும்,

"இறைவன் உமையை வதுவைசெய்துகொண்ட நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அவனும் அதற்குடம்பட்டு அது தப்பானுகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற் கொடுப்ப, அதனை இருடிகளுணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத்தரித்தல் அரிதாகையினாலே

* **சம்பவகாண்டத்து** சச - ஆமத்தியாயம் — "கார்ஷ்ணயஸம்ராஜதஞ்ச ஹைரண்யம் த்ரிபுரம்கிரி꞉ | வித்யுந்மாலீ தாரகாக்ஷ꞉ கமலாக்ஷோபபூவஸ꞉ ||" என்று கூறிச் செல்லுமிடத்தே கிரௌஞ்சன், இரும்பு வெள்ளி பொன்மதிலுடைத் திரிபுரமானவுடன் அவற்றுழைத் தாரகாசுரன், வித்தியுன்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷனெனவாகிக் குமாரபகவானை யெதிர்த்தான். அப்புரத்தை யப்பகவான், புன்னகைப்பினு லெரித்துவிட்டன னென்னுஞ்செய்தி பெறப்படுதலினல், தாரகாசுரனுக்கு முன்னரேயே திரிபுரவாசிக ளிருந்தவரென்ப தேற்படுகின்றது. இதனல், சங்கரிக்கப்பட்ட தாரகன் மக்களே திரிபுரவாசிகளென்பதும் பொருந்தாது. ஆகவே, தாரகாசுரப்பெயருடை யிருவர் சங்கரிக்கப்பட்டனரெனற்கும் கந்தன்சரித விசாலமாயுள்ள இப்புராண மிடங்கொடாதென்க.

இறைவன் கூறுகிய முத்தீக்கட்பெய்து அதனைத் தம்மனைவியர் கையிற்கொடுப்ப, அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக; ஆறுகூறுகி வளர்கின்ற காலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக்கொடுத்த நிலையை மறந்து ஆண்டுவந்து வச்சிரத்தான் எறிய, அவ்வாறு வடிவுமொன்ருய் அவனுடனே பொருது அவனைக்கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறுகிய வேறுபட்ட கூற்ருலே மண்டிச் சென்றதென்று **புராணங்** கூறிற்று. இதனைப் 'பாயிரும் பனிக்கடல்' என்னும் **பரிபாடற்பாட்டா** னுணர்க."

என்னுஞ் செய்திகள் நச்சினுர்க்கினியரது **திருமுருகாற்றுப்படையுரையில்** வருதலும் பேதமாகவும், விகாரமாகவும், ஒன்றற்கொன்று முரணுகவுமுள்ளனவே. இன்னுங் குமாரசம்பவம் முதலிய **வடமொழி நூல்களிலும்** வேறு **தேன்மொழி நூல்களிலும்,** சிவரகசிய மெனுமொரு புத்தகத்திலும் இவ்வாறு எத்தனை விகார சரிதைகள் காணப்படினும் அவை, பகவன் றூய்மையை வன்மையைப் பிற சிறப்புக்களைப் பேதிக்கும் ஆற்றல்பெறு. என்னை?

"புத்தகங்கள் கடவுளை யுண்டாக்க வரவில்லை; நிச்சயிக்க வந்தன; அவற்றின் பேதத்தால் அக்கடவுளும் பேதவிகாரப்படல் யாண்டுமின்றெனுந் தெளிவாற் பாடண்டவாத தருக்கங்கட்குக் காதுகொடா திருக்கக்கடவன்."

எனச் **சிவஞானதீபத்துத்** துறவறநிலையியலில் யாங்கூறினது கவனிக்கத்தக்கதாகலின். மேலெடுத்துக் காட்டியுள்ள பேதவிகார முரண்களை யொருவரே கூறினரெனக் கோடலும் அமைவுடைத்தன் றுகலின் அந்நூல்களி ஞசிரியராய வியாச மாமுனிவர் கூற்றெனற்கும் அவையியையா. பௌஷியோத்தர **புராணத்திற்** பகரப்பட்ட எதிர்காலச் செய்திகளுள் யாதும் நடைபெறுமையால் அந்தப்புராணம் எப்படி அங்கீகாரமில்லாதொழிந்ததோ அப்படியே போந்த முரண்களும் ஒழியும் பெற்றியவே. இன்னனவும் பலவே. இராமர் சரிதம் நன்கு விளக்கப்படுதலால் அஃது இராமாயணமெனவும், பரதவமிசத்தார்சரிதஞ் செவ்வன் விளக்கப்படுதலால் அது பாரதமெனவும் பெயர் பெற்றுங்கு ஸ்கந்தன் சரிதம் எழுவாய்க் கண்ணேயே இனிது விளக்கப்படுதலால் அது ஸ்காந்தம் என்னும் பெயர்பெறீஇயதென்பதை யுணர்ந்து நிருவிகாரமான கந்தபிரான்சரிதங்காணுந் தகைமை வாயா அத்தமிழ்ப்புலவர், மின்மினிமுகத்தே நெருப்புவிழைந்து நிற்பார் போல்வாராயினு ரென்னுது மற்றியாதென்பாம். இது படித்துப்பூரிக்கும் ஒருசார்த்தமிழர், முருகன், சேய், செவ்வேள், குறிஞ்சிவேந்தன் என்பனமுதலிய பெயர்கள் வருதல் கண்டே தமிழ் நூல்களான் முருகனுக்குப் பரத்துவமு மேற்பட்டுவிட்டதெனக் கூறிக்கொள்வார்போலும்.

இக்குழப்பவதரான் ஸ்காந்த மஹாபுராணமல்லாத வடமொழிகளுந் தென்மொழிகளுஞ் செவ்வேட்பரமனுடைய பல்பெருந் திருவிளையாடலாம் **வரலா**று பராக்கிரமம் முதலியவற்றை நிருவிகாரமாகச் சாலவும் விளக்குந்

தகுதுணிபுடையனவல்ல வென்னும் மரபுணர்தலோடு அம்மஹாபுராணத்தைக் கூறுமாற்ருனே மஹாமுனிவர் புரிந்த நன்றியினையன்ருே "எந்நன்றி கொன் ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை — செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னு நீதியின்படி சகலகலா நாதனுகிய அவனடியவர் மறவாதிருக்கவுங் கடன்மைப் பட்டுள்ளார். பிரதிபேதத்தானே இப்புராணத்தும் யாண்டேனும் பக வானைச் சுட்டியனவாய், தேவிகளைச் சுட்டியனவாய் நிகழ் ஆபாசச்செய்தி கள் காணப்படின் அவை,

(ஸவ-ாணாயிவ-தள தஷிநு ஶுஹெவாஉவாவநெ।

ஸர்வாண்டாதிபதௌ தஸ்மிந் குஹேபரமபாவநே।)

"மிக்க பரிசுத்தனுஞ் சருவாண்டாதிபதியுமாயுளன் குகன்" என்னும் **யுத்தகாண்டத்து** உகூ-ஆமத்தியாயக் கூற்ருேடுந் தூய்மை நிகழ்த்து பிற பிரமாணங்களோடும் முரணுமாகலின் எத்திறத்தானு புக்க நவீனமெனத் தள்ளற்பாலனவே. இன்னுங் குமாரபிரானுடைய பரிசுத்த பரத்துவ போதகத்துக்கு விரோதமாயுள்ள யாவையும் வேதம் முதலிய பிரமாணங் களைக்கொண்டு களைந்து உண்மை நாட்டியவாறெல்லாம் எந்திருப்பாவுரையாக வேதத்தமிழாற் றீட்டப்பட்ட **திட்பத்து**ழைக் கண்டுகொளலாம். வேதாதி பிரமாணங்களையும் அனுபவத்தையும் அழகொடு தன்னகத்தே கொண்டு நிகழ்கின்ற ஆருவது மண்டலமாகிய ஸ்ரீமத்-குமாரசுவாமியமெனும் பெயரிய இந்நூல், கிளந்துபோந்த சங்கரசங்கிதையினையே பெரிதுந் தழுவியுளதெனக் கோடல் சால்புடைத்து. இதன்மேற் கூறத்தக்கன பற்றியுஞ் சில கூறுவாம்—

சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்ருேர்க்கினிமை, நன் மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலக மலையாமை, விழுமியது பயத்தல், விளங்குதாரணத்தாதல் என்னும் பத்தழகினுள்ளும் ஓசையுடைமைதான் பாட்டகத்தினிது பொருந் துவது. ஓசை குறையினும் மிகினும் இயற்பாட்டாக மாட்டாது. அத் திறத்த ஓசை யூட்டப்பட்ட பாட்டுக்களே இந்நூற்க ணுள்ளன. அவற்றின் சந்தம் — கலிவிருத்தங்களுட் கசு-ம், கலிநிலைத்துறைகளுட் க௦-ம், கட் டளைக்கலித்துறை க-ம், கலித்தாழிசை க-ம், கலிப்பாக்களுள் தரவுகொச் சகக்கலிப்பா க-ம், கட்டளைக்கலிப்பா க-ம், கழிநெடிலடியாசிரிய விருத் தங்களுள் அறுசீரிற் கஉ-ம், எழுசீரிற் கக-ம், எண்சீரில் எ-ம், பதின்சீரில் உ-ம், வஞ்சி விருத்தங்களுள் உ-மாக (சுச) அறுபத்துநான்கு பேதங் கொளக்கிடக்கின்றன. பிறரியற்றியுள்ள எப்பெருங் காப்பியத்துஞ் சந்தம் ருச-பேதங்கட்கதிகங் காண்டலரிதேயாக இந்நூல் இவ்வளவு சந்தங்களோடு நிலவுதலும், நிலவுதலினுஞ் சில பத்துக்கள் தலையாகெதுகை அடியெதுகைகள் பெற்று நிற்றலும், எழுத்தளவுகள் பொருந்த நிற்றலும், இரண்டு சீர்வண் ணங்கொண்டு நிற்றலும், வண்ணக் குழிப்புடைப் பத்துக்களுட் பல

பல வோசைத்திறங்காட்டி நிற்றலும், அவற்றுளொன்று மாலைமாற்றாயிருத்த லும் பிறவும் பேரழகாம். இரண்டுசீர் வண்ணமாவது, எ - வது திருவிளை யாடன் முதற்பத்தின் ஐஞ்சீர்க் கலிநிலைத்துறைகளில் —

வானிலவு கந்தகிரி - - - -
கூனிலவ ணிந்தசிவ - - - -
தேனிலவு மீந்துளம - - - -
நீனிலவு விண்டுபிர - - - -

அஞ்சுமுக வறுமுக - - - -
மஞ்சுடையி னேரிஙன - - - -
விஞ்சுனது வேலிதுபி - - - -
செஞ்சுதன தோர்காம - - - -

போரொனல்சே விப்படலும் - - - -
கூரடல்வி ழுப்படைகள் - - - -
நேரினில நுத்தமயில் - - - -
பாரிடர்ழ னர்ச்சேலவும் - - - -

எனவருதல்போல முதலும் அயலுமான உ - சீர்கள் ச - அடியிலும் ஒரு படித் தான சந்தங்கொண்டு நிற்றலெனவுணர்க. இத்திறச் செய்யுணடைதானுஞ் சாதாரணமாகப் பாடியுள்ள எப்பெரிய புத்தகத்துந் தொடர்புடைப் பத்துச் செய்யுள்களுளேழைக் காண்டல் கூடுமோ? கூடாதன்றே. எதுகை மோனை முதலிய இலக்கணங்களைப் பொருட்படுத்தாது பொருளையே கருதுவோர், ஓசையுடைமையை மதியாரென்ப தொன்றை யிங்ஙனெழுப்பிக்கொளின் அது, வடமொழிப் பயிற்சியில்லாத் தமிழருட் சிலர் வடநூல்களையுந் தமிழ்ப் பயிற்சியில்லா வடமொழியருட் சிலர் தமிழ் நூல்களையும் இழுக்கத்துட்படுத் துங் கூற்றேபோன்ற இயலாதார் மாற்றமெனலே சால்பிற்றாம். ஓசை நய முடைப் பாவின விருத்தப்பாக்களும் பிறவும் வழங்கப்படாத் தொல்லை நாளிலே ஓங்காரவுருவினனது அனுக்கிரகமின்மையிற் செய்யுட் சந்தநடைகள் புலப்படாமையின் அவ்வியலாமை யேயுமென்றுந் துணியப்படும். என்னை? இந்நூற் பலதிறப் பொருட்காண்டத்துப் கசு - ஆம் பத்திற்றானே "குறித் துள பொருளாங் கூத்தப் பேரிய வுயிரைப் பாட்டிற் பிணைத்தயர் சிருட்டி வல்லார்" என்றபடி உடம்பு பாட்டென்றும் அவ்வுடம்பிற்குயிர் பொருளென் றுங் கொளக்கிடக்கு மாற்றானே பொருளுயர்வுடைத்தாயினும் உடம்பின்றி யுயிர் காணப்படுவ தின்றென்பதூஉம், அவ்வுடம்பும் ஈனமிலதா யெழிலிலங்கு வதா யிருத்தல்வேண்டு மென்பதூஉ மேற்புடையனவாகலின். அற்றாகலி னன்றே "ஓசையுடைமை" பத்தழகினு ளொன்றாகவைத் துரைக்கப்பட் டது. இவையேயுமன்றிப் பொருளையே கருதுவோர் வரைதல், வசன மாகவே யிருக்கலாமே, அதனைப் பாட்டெனும் பெயரிலே யேய்த்தல் யாது கருதி? என்னுங் கடாவு மிங்ஙனந் துண்ணென வெழுதலோடு வீணே வேய்ங்

குழன் முதலிய கருவிகளிற் பிறக்கு மொலியை உலகம் விழைதல் பொருள் கண்டு கொலோ? என்னுங்கடாவு மெழுதருமால். செவிக்கினிய பாட்டினோசையன்றோ **காந்தருவவேதம்** எனவும் வழங்கப்படுகின்றது. அவ்வோசை நயமும், நயமின்மையும் புலனுமாறு இங்ஙனஞ் சில வெடுத்துக் காட்டுதும்: பிறரியற்றிய நூல்களுள்—

"என்றழைத்தன ளேங்கியெ ழுந்தவன்
பொன்றழைத்த பொருவரு மார்பினை"

எனநிகழ் செய்யுளின் முதலடி தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் என்னுஞ் சீர்களால் ஓசை விழுமங்கொள வந்துளது. உ - ஆமடியோ, தேமா தேமா கருவிளம் கூவிளம் என்னுஞ் சீர்களால் வந்து ஓசை குன்றச் செய்வதாயிற்று. இது மானவே "ஆண்டை மீனமக் காகா வெனவிரை" என்னுமடியுந் தேமா கூவிளம் தேமா கருவிளம் என்னுஞ் சீர்களால் வந்து அவ்வாறு செய்வதாயிற்று. படித்துப் பார்த்தவி னுலேயே ஓசை குன்றுவதை யுணரலாமே. இன்னன பல. இப்படி நிகழலாமென்னுங் கருத்தோடே செய்ததாய் வழக்கத்தில் வந்துவிட்டதாய் இச்செய்யுள்களினடை கணித்தற்குரியது. இந்நூற் **கச-ஆந் திருவிளையாடல்** ௩ - ஆம்பத்தில்—

**"நம்பி போயபி னுதன்முன் வேடனுய்**
**எம்பி ராட்டிமுன் பேகியேற் பேணிய**
**செம்பொ னேழழ துந்தயை செய்தேனை**
**நம்பி வாவென வேநவின் றனரோ"**

என வருதல்போல வருதலே ஓசை நயமுடைத்தாம். இக்கலிவிருத்தம்—

மா கூவிளம் கூவிளம் கூவிளம்

என்னும் உதாரணவாய்பாடு கொண்டே நடக்குந் தன்மைத்தென்க. சீர்களினுறு மெய்யெழுத்தாய ஒற்றுக்களுள் ஏய்வனவொழித்தே இத்திறவாய்பாடு பெறல்வேண்டும். இது, "சொல்லாரும் வல்லின மெல்லின மோடிடைத் தோன்றுமொற்று—நில்லாது நேர்நிரை நேராய் முடியும்" என்னும் விதியானே வலியுறுமென்க. எழுத்தெண்ணலும் ஒற்றொழித்தேயென்க.

"தடித்து வாள்புடை விதிர்த்துநின் றிந்திர சாபம்
பிடித்து நீளம்பு கோடைமேற் பெய்துவெம் பெரும்போர்
முடித்து நாமென வருதல்போன் மொய்த்தன கொண்மூ"

எனநிகழ் செய்யுளின் முற்பட்டவடி, புளிமா கூவிளம் கருவிளம் கூவிளம் தேமா என்னுஞ் சீர்களா னிரம்பி ஓசைநயமுடையதாயது. பிற்பட்ட வடிகளோ, அவ்வாறுள்ளன அல்ல. "நீளம்பு" என்பது தேமாங்காய். ஒற்றொழித்துக் கூவிளம் எனக்கொள்ளினுங் "கோடைமேல்" "வருதல்போல்" என்பவற்றினீற்றில் நெடில்கள்வந்து ஓசை மிகை புரிந்து படிப்போர் அதிகமசைத்துத் தள்ளிப் படிக்கும்படியாயின. இது கடுப்பவே,

"அன்ன காலேயி லவனவட் காருயிர்த் துணையாய்
முன்னி சைந்தபே ரிசைவிஞ லேவலின் முயல்வான்"

என நிகழ்செய்யுளின் உ - ஆமடி, "சைந்தபே" "ரிசைவிஞ" என்னுஞ் சீர்களி னீற்றி னெடில்கள் வரப்பெறீஇ அதிகமசைத்துத் தள்ளிப்படிக்கும் படியாயின. பல புத்தகங்களிலும் இன்னன பல்ல. இவைகளும், இவ்வாறு நிகழலாமென்னுங் கருத்தோடே செய்யப்பட்டனவாய் வழக்கத்தில் வந்து விட்ட நடையுடையனவாய்க் கணித்தற்குரியனவே. இந்நூல் கூ - வது திருவிளையாடற் கஙு - ஆம் பத்தில் —

"இலக்கம் வாகினி சேனையோ டரிமுக னென்பான்
வலக்க முழியி னெரியெழப் பொருகளம் வாலும்
உலக்கை யாசுா வுதிட்டிா னூந்தெரிந் தொழிய
அலக்க ணேதுமில் பாரிட சிங்கனன் கறைந்தான்"

எனவருதல்போல வருதலே ஓசை நயமுடைத்தாம். இக்கலிநிலைத்துறை—

மா கூவிளம் விளம் விளம் மா

என்னும் வாய்பாடுகொண்டே நடக்குந் தன்மைத்தென்க. இதன்கட் காய்ச் சீர்வரினும் அது, நான்கடியிலும் பொருந்தி நிற்க வேண்டுமென்க. எவ் வாற்றானும் ஓசைபிழைத்தல் கூடாது.

"வந்தடி பணிந்தோன் றன்னை மலர்க்கையா லெடுத்து வாயு
தந்தபா லனைத்தன் கையாற் றடவினன் றயாவின் மிக்கான்"

எனநிகழ் செய்யுளுழை "வந்தடி" என்னு மெதுகைச்சீரி னோசையை யொன்றாமல் உ - ஆமடி யெதுகைச்சீரீறு நீண்டுளது. இவ்வோசையுடைப் பாட்டு இப்படி நடத்தல் கூடும், ஆயினும் எதுகையிலுறுசீர் நான்கு மொத்து நடத்தலே நயமுடைத்து; ("தந்தபா" என நீடல்போல) நீளினு மங்ஙன மாதல் வேண்டும். இந்நூல் கூ - வது திருவிளையாடலில்—

"நஞ்சமே யெனப்ப டர்ந்து நமரங்கட் கிடுக்கண் செய்த
வஞ்சரே யந்தத் தேவர் வாளரா வணிந்தோ னேஞ்சக்
கஞ்சமே மலர்ந்தேற் கீந்த கதழ்வுடை வரங்கள் வாளா
துஞ்சுமோ வென்றே மேலுஞ் சொல்லினன் சூர பன்மன்"

என்று கூறிச்செல்லும் ச - ஆம் பத்தானும் வேறு சில பத்துக்களானுமறிக. கழிநெடிலடியாசிரியவிருத்தங்களுள் எளிய நடையுடை யிவ்விருத்தம்—

விளம் மா தேமா விளம் மா தேமா

என்னும் வாய்பாடுகொண்டே நடக்கு நீர்த்தென்க. இன்னணமிடையிலுஞ் சிலசீர்க ணீடலால் ஓசை சிதையாது நடக்கத்தக்க இளநடையுடைச் செய் யுள்களை யிந்நூலகத்துங் காணலாம். "அருளே யடியா மதைநான் வல மாய்—வருமுன் னிவண்வந் தவருள் ளெவரென்" என நிகழடிகளின் சீர்க

வீறு ஒற்றேனும் நெடிலேனும் பெற்று நடக்கின்றவாறு நடக்குங் கலிவிருத்தம் ஓசை நயமுடைத்தே யாயினும் எதுகைச் சீர்கள், காட்டியவாறு நிகழ்தல் சிறுவர வென்றே கோடல்வேண்டும். இது பிற செய்யுள்கட்குமாம். உயிரோடும் உயிர் மெய்யோடுமணை குறிலுக்குக் குறிலும், நெடிலுக்கு நெடிலும், வல்லொற்றுக்கு வல்லொற்றும், மெல்லொற்றுக்கு மெல்லொற்றும், இடையொற்றுக் கிடையொற்றும் எதுகை மோனையோடுங் கூடிய நாலடியுமளவாகப் பொருந்து குழிப்பு வண்ணச் செய்யுள்களுக்கு இவ்வோசைக்குறைவு மிக்க யேற்படற் கிடனேயின்று. இவற்றையெல்லா முணருமாறுகவே உ - வது மண்டலத்திற் **பல்சந்தப்பரிமளம்** (திருவலங்கற்றிரட்டின் உ - ஆங்கண்டம்) என்னும் யாப்பிலக்கிய நூலும் எம்மா லியற்றப்பட்டுளது. யாம் இங்ஙனங் காட்டியவாறே இன்னுங்காட்ட முயன்றக்கால் இவ்வெழுவாயுரை யெல்லை கடந்து செல்லுமாகலின் இம்மட்டினிறுத்துந் துணிபைக் கொண்டேம். முந்தைப் பனுவல்களினின்றுங் காட்டியுள்ளன போல்வனவற்றை ஆதாரவாகக்கொண்டே இன்னுஞ் செய்யுணடையை இவ்வுலகம் அளவையின்றி நடாத்துமாயின் அது சால்புடைத்தன்றென்னுங் கருத்தாலேயே "ஓசையுடைமை" பற்றிக் கூறுவனவுங் கூறினும்.

தெய்வ நிந்தையாங் கருங்கதை படித்துக் களிகூர்வார், இக்கூற்றை விழைவரெனற்கும் இடனின்று. அவர் செய்கை யாதாயினுமாக. கூர்த்த புத்தியு நடுவுநிலைமையு முடையார், முழுதும் படித்துணருமாற்றானே இந்நூலாகிய **ஸ்ரீமத் - குமாரசுவாமியம்,** ஓசைச்சுவை சொற்சுவை பொருட்சுவை யென்பன நிறைந்து நிலாவு நீர்மையான் அழகும் ஆழமுமுடைய ஒரு முதல்வனூலென்று நிச்சயிப்பரால். இதனைப் பத்திமையிற் பாடுவோரும், பொருளுரைப்போரும், பூசிப்போரும் எல்லா நலமும் பெற்று வாழ்க; இந்நூலும் வாழ்க.

ஸுப்ரஹ்மண்யோம்.

சென்னை,
1 - 3 - 1925.

இங்ஙனம் :
**நூலாசிரியர்.**

# காண்டவகராதி.


| பெயர். | | | பக்கம். |
|---|---|---|---|
| கடாவிடைக்காண்டம் | ... | ... | உசரு |
| கேத்திரகாண்டம் | ... | ... | உகரு |
| திருவிளையாடற்காண்டம் | ... | ... | க |
| பலதிறப்பொருட்காண்டம் | ... | ... | உஅஅ |
| வேட்கைக்காண்டம் | ... | ... | உஎக |


காண்டத்துட்

# பகுப்பட்டவணை.

## க. திருவிளையாடற்காண்டம்.


| | பெயர். | | | பக்கம். |
|---|---|---|---|---|
| | முதல்வன்புராண முடிப்பு | ... | ... | க |
| க. | சரவணப்பொய்கைத் திருவிளையாடல் | | ... | ச |
| உ. | திருக்கைலாயத் திருவிளையாடல் | ... | ... | எ |
| ங. | திருக்கந்தகிரியிற்பட்டாபிடேகத் திருவிளையாடல் | | ... | கச |
| ச. | மேருகிரித் திருவிளையாடல் | ... | ... | கஎ |
| ரு. | திருக்கந்தகிரியிற் சிருட்டிகாரியத் திருவிளையாடல் | | ... | உக |
| சு. | இமயமலைச்சாரற் றிருவிளையாடல் | ... | ... | உரு |
| எ. | திருக்கைலாயத்திற் படைபெறு திருவிளையாடல் | | ... | உஅ |
| அ. | மாயாபுரித் திருவிளையாடல் | ... | ... | ஙச |
| கூ. | வீரமாகேந்திரத் திருவிளையாடல் | ... | ... | ஙஎ |
| | சூரபதுமன் மந்திராலோசனை | ... | ... | சங |
| | இரண்டாநாட்போர் | ... | ... | ருஉ |
| | மூன்றாநாட்போர், நான்காநாட்போர் | ... | ... | ருகூ |
| | ஐந்தாநாட்போர் | ... | ... | சூங |
| | பறந்தலைச்சிறப்பு | ... | ... | சூஎ |
| | ஆறாநாட்போர் | ... | ... | எச |
| | முதனாட்போர், இரண்டாநாட்போர் | ... | ... | எஎ |

| | பெயர் | பக்கம். |
|---|---|---|
| | மூன்றாநாட்போர் | அக |
| | நான்காநாட்போர் } ஐந்தாநாட்போர் } | அச |
| | ஆறாநாட்போர் | கூ0 |
| க0. | வீரமாகேந்திரபுரியில் உத்தரகிரியைக் கிடங்கொடுத்தருளிய திருவிளையாடல் | கூகூ |
| கக. | திருச்சீரலைவாய்த் திருவிளையாடல் | க0ங |
| கஉ. | திருப்பரங்கிரித் திருவிளையாடல் | க0சு |
| கங. | தேவலோகத் திருவிளையாடல் | ககஎ |
| கச. | தினைப்புனத் திருவிளையாடல் | கசஉ |
| கரு. | சுனைவளாகத் திருவிளையாடல் | கருங |
| கசு. | செழுஞ்சோலைத் திருவிளையாடல் | கசு0 |
| கஎ. | சீறூர்த் திருவிளையாடல் | கஎ0 |
| கஅ. | திருக்கந்தகிரித் திருவிளையாடல் | கஎங |
| ககூ. | திருப்பழநிமலைத் திருவிளையாடல் | கஅக |


## உ. கேத்திரகாண்டம்.


| | | |
|---|---|---|
| க. | சென்னை | உகரு |
| உ. | சண்முகஞானபுரம் | உஉ0 |
| ங. | சண்பகாடவி | உங0 |
| ச. | திருவொற்றியூர் | உஙங |
| ரு. | மயிலை | உஙச |
| சு. | திருவான்மியூர் | உஙசு |
| எ. | திருக்கழுக்குன்றம் | உஙஎ |
| அ. | யுத்தபுரி | உஙகூ |
| கூ. | பாடி | உசக |
| க0. | பாக்கம் | உசங |


## ங. கடாவிடைக்காண்டம்.


| | | |
|---|---|---|
| க. | திருக்கடாவிடை | உசரு |
| உ. | எங்களிறை | உசஎ |
| ங. | நவகணர்தோற்றம் | உசகூ |
| ச. | அசோககாலவாசம் | உருச |

## ச. வேட்கைக்காண்டம்.


| பெயர். | | பக்கம். |
|---|---|---|
| க. | வேற்குழவிவேட்கை ... ... ... | உஎக |
| உ. | வேற்கடவுள்வேட்கை ... ... ... | உஎங |
| ங. | வேற்குமரர்வேட்கை ... ... ... | உஎச |
| ச. | செவ்வேள்வேட்கை ... ... ... | உஎரு |
| ரு. | குமரவேள்வேட்கை ... ... ... | உஎஎ |
| சு. | கந்தவேள்வேட்கை ... ... ... | உஎகூ |
| எ. | வேன்மழகளிற்றுவேட்கை ... ... | உஅ0 |
| அ. | விசாலமாலைவேள்வேட்கை ... ... | உஅஉ |


## ரு. பலதிறப்பொருட்காண்டம்.


| | | |
|---|---|---|
| க. | கடவுட்சங்கவுணர்ச்சி ... ... ... | உஅஅ |
| உ. | திருவுளப்பாங்கைவினுதல் ... ... | உகூ0 |
| ங. | தியானவிசேடம் ... ... ... | உகூங |
| ச. | நாளறுபது ... ... ... | உகூச |
| ரு. | அவிரரும்பொன் ... ... ... | உகூரு |
| சு. | பெருவேண்டுகோள் ... ... ... | உகூஅ |
| எ. | பெருவிண்ணப்பம் ... ... ... | உகூகூ |
| அ. | ஆதாரவழிபாடு ... ... ... | ங0க |
| கூ. | வருகைவிழைந்திரங்கல் ... ... | ங0உ |
| க0. | பணிதலுணர்த்தல் ... ... ... | ங0ரு |
| கக. | ஆதரிப்பாரெவர் ... ... ... | ங0எ |
| கஉ. | பகைகடிதல் ... ... ... | ங0அ |
| கங. | திருவடிவயா ... ... ... | ஙக0 |
| கச. | மனச்சான்றுகொல்வார் மல்கார் ... ... | ஙகக |
| கரு. | இடையறுதுநிற்கவிழைதல் ... ... | ஙகங |
| கசு. | திருவருட்செயன்ஞாபகம் ... ... | ஙககூ |
| கஎ. | நீதிவிழைந்திரங்கல் ... ... .... | ஙஉஉ |
| கஅ. | திருமாலைமாற்று ... ... ... | ஙஉங |
| ககூ. | ஒட்பமுணர்த்தல் ... ... ... | ஙஉசு |
| உ0. | திருத்தகுதுணிபு ... ... ... | ஙஙக |
| உக. | மணிமஞ்சரி ... ... ... | ஙஙஉ |

## இந்நூலாசிரியரருளிச்செய்த
## செய்யுள்நூல்களின் விவரம்.

---

செய்யுள்.

குமரகுருதாசசுவாமிகள் பாடல் ... ... ௧௨௬௬

திருவலங்கற்றிரட்டு முதலாங்கண்டமும், இரண்டாங் கண்டமும், இவற்றின்மீது சார்த்தப்பட்ட வினவுத்தரச் செய்யுளொன்றும், நான்காரைச் சக்கரபந்தச் செய்யுளொன்றும் } ஆக ௧௧௩௫

காசி யாத்திரை ... ... ... ௬௦௮

பரிபூரணானந்தபோதம் ... ... ... ௨௩௦

தகராலயரகசியம் ... ... ... ௧௧௭

குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி ... ... ... ௧௦௦

சீவயாதனா வியாசம் ... ... ... ௨௩௫

சிறுநூற்றிரட்டு (சண்முககவசம் முதலிய நூல் பத்தினுள்ளும்) } ... ௨௫௮

திருத்தல தரிசனகாலங்களிற் பாடியருளிய கட்டளைக்கலித்துறை } ... ௩௫

சேந்தன் செந்தமிழ் ... ... ... ௫௦

பத்துப்பிரபந்தம் என்பதனுள் ... ... ... ௩௦

திருப்பா ஆயிரத்து நூறும், இதன்மீது சார்த்தப்பட்ட நூற்சிறப்பு வெண்பா ஒன்றும் } ஆக ... ௧௧௦௧

சேக்கர்வேள்செம்மாப்பு முதலாங்காண்டம்—(முழுமுதலிலக்கண வதிகாரம்) நூற்று நாற்பதும், இரண்டாங்காண்டம்—(கனவதிகாரம்) ஐம்பத்தெட்டும் } ஆக ... ௧௯௮

சேக்கர்வேளிறுமாப்பு—(வீடுபேற்றதிகாரம்) ... ௬௪

ஸ்ரீமத் - குமாரசுவாமியம் ... ... ... ௧௧௯௨

குமாரஸ்தவம் ... ... ... ௪௪

| | | | செய்யுள். |
|---|---|---|---|
| குமரகுருதாச சுவாமிகள் பாடலுள் ஆனந்தக்களிப்பு | | ... | க |
| ஷெ பாடலுள் சமாதான சங்கீதம் | ... | ... | க |
| பத்துப்பிரபந்தத்துள் தங்க ஆனந்தக்களிப்பு | | ... | க |
| | | ஆூ. | ௬௬௬௬ |

## இந்நூல்களுள் :—

(க) குமரகுருதாச சுவாமிகள் பாடலிலுள்ளவை முதன்மண்டலமாம்.

(உ) திருவலங்கற்றிரட்டு (உ - கண்டமும்) இரண்டாவது மண்டலமாம்.

(௩) காசியாத்திரை, பரிபூரணானந்தபோதம், தகராலயரகசியமென்பன மூன்றாவது மண்டலமாம்.

(ச) சிறுநூற்றிரட்டு, திருத்தல தரிசனகாலங்களிற் பாடியருளிய கட்டளைக்கலித்துறை, சேந்தன் செந்தமிழ், பத்துப்பிரபந்தம், குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி, குமாரஸ்தவம், செக்கர்வேள்செம்மாப்பு, செக்கர்வேளிறுமாப்பு, சீவயாதனுவியாசமென்பன நான்காவது மண்டலமாம்.

(ரு) திருப்பா ஐந்தாவது மண்டலமாம்.

(௬) ஸ்ரீமத் - குமாரசுவாமியம் ஆறாவது மண்டலமாம்.

இந்நூ லச்சிடும்பொருட்டு

முன்பணமாக 8 ரூபாய்க்குக் குறையாதளித்த

## சிவநேயத் திருவாளர் பேயர்கள்.

(ஏற்பாட்டின்படி பதிப்பிக்கப்படுவனவாயின)

| | | ரூபாய் |
|---|---|---|
| (1) | சுப்பிரமணிய தாசரெனும் பெயரிய பு. சின்னசுவாமிப் பிள்ளை ; பிரபலசோதிடர், திருவல்லிக்கேணி (சென்னை) | 300 |
| (2) | C. S. மதுரைமுதலியார் ; No. 59, திருப்பள்ளித்தெரு, G. T. சென்னை ... ... ... ... | 100 |
| (3) | பொ. குழந்தைவேலு முதலியார் ; உத்தியோகம், புதுப் பாக்கம் (சென்னை) ... ... ... ... | 40 |
| (4) | செ. சிவசங்கரத்தம்பிரான் ; ராஜப்பசெட்டித்தெரு, சென்னை | 48 |
| (5) | ச. சச்சிதானந்தம்பிள்ளை B. A., L. T., பாடசாலை டெபுட்டி இன்ஸ்பெக்டர் (Deputy Inspector of Schools) ... | 8 |
| (6) | ச. நடேச முதலியார் ; ஜவுளிவியாபாரம், இராயப்பேட்டை (சென்னை) ... ... ... ... | 8 |
| (7) | தா. வேங்கடாசல முதலியார் ; உத்தியோகம், (Imperial Bank of India, Mount Road Madras) ... | 8 |
| (8) | ஆ. நா. சிவஞான முதலியார் ; ஹெட் கிளார்க், ஸ்டோர் செக்ஷன், ஜெனரல் டிராபிக்மானேஜர் ஆபீஸ், M. S. M. ரெயில்வே சென்னை ... ... ... | 8 |
| (9) | குமாரதாசரெனும் பெயரிய பா. கு. பாலசுந்தரம் ; அத்தி யாச்சிரமி, சிந்தார்ப்பேட்டை (சென்னை) ... ... | 8 |
| (10) | செ. கோவிந்தராஜ முதலியார் ; கவர்ண்மெண்ட் டெல்ல கிராப் ஆபீஸ் கிளார்க், சென்னை (வைத்தியநாதமுத லித்தெரு) ... ... ... ... | 8 |
| (11) | C. ஏகாம்பர முதலியார் மனைவியாரும், சைவசித்தாந்த மஹாஸமாஜ வனிதையர் வகுப்புக் காரியதரிசியுமாகிய ஏ. ஆண்டாளம்மாளெனப் பெயரிய மங்கையர்க்கரசியார் ... | 8 |
| (12) | சண்முகப்பிரமமெனும் பெயரிய க. ஆ. இராஜமுத்துப் பிள்ளை ; உத்தியோகம், மைசூர் ... ... | 8 |
| (13) | R. வெங்கோபராவ்; ஜவுளிவியாபாரம், No. 47, சிக்கபஜார் ரோட், கண்டோன்மெண்ட், பெங்களூர் ... | 8 |
| (14) | சி. த. வெ. புன்னைவனன் செட்டியார் ; ஸ்ரீ வில்லிபுத்தூர் ... | 8 |

# குமாரஸ்தவம்.

க. ஓம் || ஷண்முகபதயே நமோநம:
உ. ஷண்மதபதயே நமோநம:
௩. ஷட்க்ரீவபதயே நமோநம:
ச. ஷட்கிரீடபதயே நமோநம:
ரு. ஷட்கோணபதயே நமோநம:
சு. ஷட்கோசபதயே நமோநம:
எ. நவநிதிபதயே நமோநம:
அ. சுபநிதிபதயே நமோநம:
கூ. நரபதிபதயே நமோநம:
கO. ஸுரபதிபதயே நமோநம:
கக. நடச்சிவபதயே நமோநம:
கஉ. ஷடக்ஷரபதயே நமோநம:
க௩. கவிராஜபதயே நமோநம:
கச. தபராஜபதயே நமோநம:
கரு. இஹபரபதயே நமோநம:
கசு. புகழ்முநிபதயே நமோநம:
கஎ. ஜயஜயபதயே நமோநம:
கஅ. நயநயபதயே நமோநம:
ககூ. மஞ்சுளபதயே நமோநம:
உO. குஞ்சரீபதயே நமோநம:
உக. வல்லீபதயே நமோநம:
உஉ. மல்லபதயே நமோநம: .
உ௩. அஸ்த்ரபதயே நமோநம:
உச. சஸ்த்ரபதயே நமோநம:
உரு. ஷஷ்டிபதயே நமோநம:
உசு. இஷ்டிபதயே நமோநம:
உஎ. அபேதபதயே நமோநம:
உஅ. ஸுபோதபதயே நமோநம:
உகூ. (வ்) வியூஹபதயே நமோநம:
௩O. மயூரபதயே நமோநம:
௩க. பூதபதயே நமோநம:
௩உ. வேதபதயே நமோநம:
௩௩. புராணபதயே நமோநம:
௩ச. (ப்) பிராணபதயே நமோநம:
௩ரு. பக்தபதயே நமோநம:
௩சு. முக்தபதயே நமோநம:
௩எ. அகாரபதயே நமோநம:
௩அ. உகாரபதயே நமோநம:
௩கூ. மகாரபதயே நமோநம:
சO. விகாசபதயே நமோநம:
சக. ஆதிபதயே நமோநம:
சஉ. பூதிபதயே நமோநம:
ச௩. அமாரபதயே நமோநம:
சச. குமாரபதயே நமோநம:

ஸ்ரீமத் - குமாரசுவாமியத்தில், எப்பாகத்தைதயேனுந் தொடங்கு முன்னர் இந்த ஸ்தவத்தைச் சொல்லிக்கொள்ளலாம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 1925
MADRAS

உ

சிவமயம்.

குஹப்ரஹ்மணேநம:

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீமத்-குமாரசுவாமியம்.

முதலாவது

# திருவிளையாடற்காண்டம்.

## முதல்வன்புராணமுடிப்பு.

அந்தாதி.

கலிவிருத்தம். (இசை)

சந்திர சேகரன் றழற்கண் ணேபொறி
வந்தன வாறவை மாசில் கங்கைசார்ந்
தைந்துட ஞென்றணை குழவி யாகியா
றந்தநன் மாதர்க ளமுத முண்டவே. (க)

உண்டவை பலபல வுருவங் காட்டுபு
பண்டுமை யாலொரு படிவ மாயவள்
கண்டென வருத்தமு துண்டு காமர்செய்
அண்டவொண் கயிலைசென் றுடல் செய்புமால். (உ)

ஆடலில் வெஞ்சுட ரசுவ மேறிய
தீடணை யம்புலி யிரத மூர்ந்தது
மூடமி லிந்திரன் முதலி னோர்கரி
சேடண வூர்ந்தது செம்பொற் சேயரோ. (௩)

செங்கரு டன்புலி சீய மோதிமஞ்
சங்குற ழேறுழை சரபம் யாடிவர்ந்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 1925
MADRAS

தெங்கணு மேகிய தெழில்கொ ளெக்கில
மங்கைய ரும்விழை மகிமைப் பிள்ளையே. (௪)

பிள்ளைமை நீத்தொரு பெருவ யோதிகம்
உள்ளவ ணுய்ச்சுர ருலகை நன்குசெய்
உள்ளமொ டங்ஙன முலாவி ஞன்வன
நள்ளிட னடைந்துகின் னரஞ்செய் தானவன். (௫)

செய்யத ஞேசையிற் சேர்வி லங்குபுள்
மெய்யைம றந்தன வேய்ங்கு ழற்ஞெனி
ஐயனெ மூப்பின னகலுண் மாதர்கள்
மையல்செய் விரகமுள் வருந்த நாளுமே. (௬)

மேலட ரண்டமு மேய சேயவன்
மாலுடல் வரையிடை வந்து வானவர்
பாலுறு வலிகளைப் பாறச் செய்துதன்
வாலிருந் தைவத வடிவு காட்டினன். (௭)

காட்டலுஞ் சதமகன் கடவு ளேயெமை
வாட்டொரு சூரனை மடித்துக் காவெனக்
கேட்டவ னஞ்சன்மின் கிருபை செய்துமென்
ருட்டரன் பாற்படை யரசை வாங்கினன். (௮)

வாங்கிமற் கணத்தொடு மகிவந் தோதியும்
வீங்குமெய்க் கயமுகன் றனையும் வீட்டுபு
பாங்குடைச் சிங்கனும் பானு கோபனும்
நீங்கிடக் கண்டவர் நிருபற் கீண்டனன். (௯)

கீளவை பரிகொடி யாய்க்கி ளர்ந்தன
ஆளொரு வரையடைந் தருணை யான்புகழ்
வாளன கண்ணியை மணந்து விண்புரந்
தாளெயின் மான்மணந் தான்ச யம்புவே. (௧௦)

கந்தசட்டி மாவிரத பூசையிற் கந்தபுராண படனஞ் செய்யவேண்டுமென்னு நியதியுண்டு. அஞ்ஞான்று அதுசெய்தற் கியலாதார், இத்திருப்பத்தையே ஒருமுறை பத்தியோடும் பாடி அப்படன புண்ணியத்தைப் பெறலாம்; ஐயமின்று.

# உ ரை.

## முதல்வன்புராணமுடிப்பு.

சிவபெருமானுடைய நெற்றிக் கண்களினின்று ஆறு நெருப்புப் பொறிகள் வெளிப்போந்தன. அவை, குற்றமற்ற சரவணப் பொய்கையென்னு நீர் நிலையை யடைந்து ஆறு குழந்தைகளாகி, (கார்த்திகைப்பெண்களென்னும்) அழகிய நல்ல ஆறு மாதர்களுடைய பாலாகிய அமுதத்தை யுண்டன. (க)

முன்னாளில் இப்படிப் பாலுண்ட அக்குழந்தைகள், பற்பல திருவுருவங்களைக் காட்டி, உமையம்மை ஒரு சேரச் சேர்த்தெடுத்தலால் ஒரு திருமேனி யுடையவாகி, அவள் கற்கண்டென்னும்படி தனது திருமுலைப்பாலை யூட்ட வுண்டு, ஆகாயத்தையளாவி நின்று அழகைத் தருகின்ற ஒள்ளிய கைலாய மலையையடைந்து பல திருவிளையாடல்கள் புரியாநிற்கும். (உ)

அத் திருவிளையாடல்களில், அழகிய சிவந்த திருமேனியையுடைய அக்குழந்தை யானது சூரியனுடைய குதிரையின்மீதேறியது. பெருமை வாய்ந்த சந்திரனது தேரி லேறிச் சென்றது. அறிவார்ந்த இந்திரன் முதலான தேவர்களுடைய யானைகளின் மிசை அழகு பொருந்த ஆரோகணித்து அவற்றை நடத்தியது. (ந)

எவ்வுலகத்து மாதரும் விரும்பும்படியான அழகு வாய்ந்த மகிமை பொருந்திய அப்பிள்ளை, சிவந்த கருடன், புலி, சிங்கம், அன்னம், சங்குபோன்ற நிறத்தையுடைய எருது, கலைமான், சரபம், யாடு என்னுமிவற்றின்மேலேறி யெங்கு முலாவியது. (ச)

(இறைவன்) இப்பிள்ளைத் திருக்கோலத்தை விடுத்து, தேவலோகத்தைச் செம் மைப்படுத்துந் திருவுளத்தோடு, ஒரு முதியோனாகி யங்குலாவினான். (அன்றியும்) செறிந்த காட்டினடுவே சென்று ஒரு வீணை யுண்டுபண்ணி அதனை வாசித்தான். (ரு)

அவ்வோசையின் இனிமையால் அங்கே வந்து கூடிய விலங்குகளும், பறவை களுந் தம்மை மறந்தன. பின்னர், நகரத்தில் வசிக்கும் மங்கையர், மயக்கஞ் செய்யும் விரக நோயால் எப்பொழுதும் வருந்துமாறு, வேணுகானத்தை யெழுப்பினான். (சு)

இத்திருவிளையாடல் புரிந்த பின்னர், எல்லா அண்டங்களிலுஞ் சென்றுலாவிய பாலசுப்பிரமணியன் மாமேரு பருவதத்தையடைந்து, (தன்னை யெதிர்த்த) தேவர்கள் வலி மையை யழித்து, (பின்னர் யான் சிறுவனல்லனென்று) தனது தூய பாரமேச்சுவர வடி வத்தை யவர்கட்குக் காட்டினான். (எ)

காட்டினவுடன் தேவேந்திரன், "எங்கள் கடவுளே! எங்களை நலிவுறுத்துஞ் சூர பதுமனைக்கொன்று எங்களைக் காத்தருள்க" என்று குறையிரக்க; அதனைக் கேட்ட

இளம்பூரணன், "அஞ்சன்மின் அருள் புரிவேம்" என்று திருவாய்மலர்ந்தருளி, ஆனந்த தாண்டவனுகிய பரமசிவனிடத்திலேயுள்ள படைக்கல நாயகமாகிய வேலாயுதத்தைப் பெற்றான். (அ)

பெற்று, வலிய பூதகணங்களோடு பூவுலகிற்கு வந்து (கிரௌஞ்ச) கிரியையும் பருத்த வுடம்பையுடைய தாரகாசுரனையும் அழித்து, அவரோடுரிமை பூண்ட பானுகோபனுஞ் சிங்கமுகாசுரனும் மடிந்தொழியக் கண்டு, அவர்கள் தலைவனுகிய சூரபதுமனை வேலாயுதத்தால் இருகூறுய்ப் பிளந்தான். (௯)

பிளக்கப்பட்ட அவை, கந்தக் கடவுளுக்கு (மயில்) வாகனமாகவுங் (கோழிக்) கொடியாகவும் விளங்கின. இப்பால், சுயம்புவாகிய அறுமுகச் சிவன், தன்னுலாளப்படுந் திருப்பரங்கிரியை யடைந்து, அருணகிரிநாத சுவாமிகள் புகழும்படியான, வாள்போன்ற கண்ணையுடைய தெய்வயானைப் பிராட்டியைத் திருமணஞ் செய்துகொண்டு இந்திரனுக்கு முடிசூட்டுதலால் விண்ணுலகை யிரக்ஷித்து, தான் ஆண்டுகொள்ளற்குரிய வேடர் குலமாதாய்த் தோன்றிய வள்ளிப்பிராட்டியையுந் திருமணங்கொண்டருளினன். (௧0)

முதல்வன்புராணமுடிப்புமுற்றிற்று.

---

முதலாவது

# சரவணப்பொய்கைத்திருவிளையாடல்.

---

**கலிவிருத்தம்.**

அடியோன்றற்குப்பதினேரக்கரம்.

வாயு செஞ்சுடர் தாங்கு மாசுடர்கள்
நாய கங்கையி னுண லோடையிலே
மேய பங்கய வீயி லாறுமுகச்
சேய னுகிய தேவர் தூவினர்பூ. (௧)

செங்கண் மாலுரை செய்த வாறறுமீன்
மங்கை மாரமு தூட்ட வேவருஞான்
றெங்க ளுயக மாறு சேயெனவாய்
அங்கை யாமலர் சார்ந்த வோரமையம். (௨)

சீர்கொள் சேய்விளை யாடல் செய்திடவென்
றேர்கொள் சிந்தையி லெண்ணி யேபலவாம்
பேர்கொள் போதொரு பிள்ளை பள்ளிகொளல்
நேர்கொள் யோகதி லேநி லாவியதால். (௩)

ஒன்ற டிக்கடி தான கைத்ததுலாய்
ஒன்று கண்மழை யோட விம்மியதால்
ஒன்று பேரொலி யோங்க வேகதறிற்
றொன்று நன்னகை யோடி ரங்கியதால். (ச)

ஒன்று கால்விர லேசு வைத்ததுலா
வொன்று கையல ரொன்ற வைத்ததுவாய்
ஒன்ற ராவென வூர்ந்த தேநொடியுள்
ஒன்று பூமித வழ்ந்த தோகையொடே. (ரு)

மூன்றி ரண்டடி முந்த வேகியதோன்
றான்று சேவடி சேப்ப வோடியதோன்
றேன்ற வாநனி யேகி யொல்கியதோன்
ருன்ற லார்நில மொன்ற டைந்ததரோ. (சு)

தாய்க ரம்பிடி சார வேகியதோன்
றேய்வி லாதெழல் வீழ லாடியதோன்
றேய்ந டாவலே யேயு ஞற்றியதோன்
ருய்வி யப்புற வொன்ற சைந்ததரோ. (எ)

தாவு தேரையி னென்று தத்தியதால்
மாவ லேழுச மல்ல ரென்னவிரண்
டோவு ருவெழி னெற்றி முட்டியுலாய்த்
தாவில் சண்டைகள் செய்த சால்புடனே. (அ)

சால்பு கேண்மினி ரண்டு தாள்புயம்வெங்
கோல்கொள் சங்கமு ழந்து கோள்விரல்கை
வால்கொண் மத்தக மார்பு கண்டமுமாம்
வேல்க ளானனி தாக்கி வீறியவே. (௯)

அந்த ரம்பல தாவி யாடிநிலன்
வந்தெ லாநனி மண்டி நின்றுநடந்
தந்த வாறுமி சைக்க டங்கிடுமோ
சந்த னேகைய வாவு தன்மையரே. (௧0)

இத்திருப்பத்து, காலை மாலை பூசிக்கப்பட்டுப் பத்திபிறங்கப் பாடப்படுமாயிற் குழந்தைகட்குற்ற பாலாரிட்ட தோடங்கணீங்கும்: சுகமுண்டாம். தாய் தந்தையருள் யாவரேனும், மற்றையருள் எவரேனும் பாடலாம்; ஐயமின்று.

---

௧. வேல் = ஆயுதப் பொதுப்பெயர்.

## முதலாவது

# சரவணப்பொய்கைத்திருவிளையாடல்.

---

வாயுதேவனும் அக்கினிதேவனுஞ் சுமந்துள்ள (சிவபிரானுடைய ஆறுநுதல் விழி) அக்கினிப் பெரும்பொறிகள், நயப்பாடுடைய கங்கைநீர் நிரம்பிய நாணற்புல்லொடுகூடிய பொய்கையிலே (விடப்பட்டபோது) பொருந்திய தாமரை மலர்களில், ஆறுதிருமுகங்களையுடைய சேயனுய்விளங்கின. இதனைக்கண்ணுற்ற தேவர்கள், மலர்மாரி சொரிந்தார்கள். (க)

திருமாலானவர் அஞ்ஞான்று கூறியவாறு கார்த்திகைப்பெண்கள் அறுவரும் அமுதூட்ட வந்தபோது, எங்களுடைய முதற்பரம்பொருளாகிய அச்சேய், ஆறு குழந்தைகளெனவாகி அப்பெண்களின் அழகிய கைம்மலர்களையடைந்திருந்தன. ஒரு சமயத்தில்,-()

அக்குழவிப் பரம்பொருள், சிறந்த பாலலீலைகள் செய்தருளவேண்டுமென்று தனது செவ்விய திருவுளத்திற் கருதி, பலவாகிய திருமேனிப்பெயர்கள் தோன்ற நின்றபோது ஒரு பிள்ளை, (கண்வளருங்கோலமாய்) யோகநித்திரையிலே அமர்ந்து விளங்கிற்று. (ங)

ஒரு குழந்தை, உலாவிக்கொண்டு அடிக்கடி சிரித்தது. ஒரு சேய், தாரைதாரையாய்க் கண்ணீர் பெருக அழுதது. ஒரு பிள்ளை, பெருங்குரலோடு கதறிற்று. ஒரு மதலை, புன்சிரிப்போ டழுதது. (ச)

ஒரு மழவு, தனது கால்விரலை வாயில்வைத்துச் சுவைத்தது. உலாவிக்கொண்டிருந்த ஒன்று, தனது தாமரைமலர் போன்ற கையினை வாயிலே வைத்துக்கொண்டது. ஒன்று, பாம்புபோல நகர்ந்தது. ஒன்று, நொடிப்பொழுதினுள் மகிழ்ச்சியோடு தரையிலே தவழ்ந்தது. (ரு)

ஒன்று, மூன்றிரண்டடிகட்கதிகமாக நடந்தது. ஒன்று, தனது ஊன்றிய திருவடி சிவக்கும்படி ஓடியது. ஒன்று, இயன்றவாறு நன்கு நடந்து அலுத்து நின்றது. ஒன்று, விசாலமான நிலத்தை யடைந்தது. (சு)

ஒன்று, தாயின்கையைப் பிடித்துக்கொண்டு சென்றது. ஒன்று, ஓய்வின்றி யெழுந்தும் விழுந்தும் விளையாடிற்று. ஒன்று, தன் பருவத்திற்கேற்றபடியே நடத்தலைச் செய்தது. ஒன்று, தன்னுடைய தாய்கண்டு அதிசயிக்கும்படி ஆட்டம் புரிந்தது. (எ)

ஒன்று, தாவிச் செல்லுந் தவளைபோலத் தத்தித்தத்திச் சென்றது. இரண்டு குழந்தைகள், மிக்க வலிமையுள்ள செம்மறிக்கடாக்களைப்போன்றும் மல்லர்களைப்போன்றுங் குறைவில்லாத் தம்முடைய அழகிய நெற்றிகளான் முட்டி உலாவிப் பெருமிதத்தோடு குற்றமற்ற சண்டைகளைச் செய்தன. (அ)

(கேட்குந்திறனுடையீர் !) இச்சண்டைகளின் பெருமையை இன்னுங்கேளுங்கள். இக்குழந்தைகள், தம்முடைய இரண்டு அகப்பாதம், மேற்புயம், முதுகு, கணையொத்த கணைக்கால், முழங்கால், வலியவிரல், ஒளிபொருந்திய கைத்தலம், சென்னி, மார்பு, கழுத்து என்னும் இவ்வுறுப்புக்களையே படைக்கலங்களாகக்கொண்டு தாக்கி வீறிநின்றன. (கூ)

சந்தக்கவியாகிய அருணகிரிநாதரது உவகையை நாடுகின்ற நன்மையுடையீர்! பல குழந்தைகள், ஆகாயவெளிகளிலே தாவி விளையாடி மீட்டும் பூமியின்கட்போந்து மற்றைக் குழந்தைகளோடும் நன்றாகக் குழுமிநின்று நடனஞ்செய்த வகையெல்லாஞ் சொல்லால் அளவிடப்படுமோ? [படாவே என்றபடி.] (க0)

சரவணப்பொய்கைத்திருவிளையாடன்முற்றிற்று.

---

## இரண்டாவது

# திருக்கைலாயத்திருவிளையாடல்.

---

### (முதற்பத்து)

கலிநிலைத்துறை.

அளவி லாவறி வன்சர வணத்தட மமல
நளின மீதறு குழவிக ளாய்மிளிர் ஞான்று
அளக நீள்சிவை யறுமுக னுயவிர் கென்றே
வளர்க ரங்களி னணைத்தது கண்டுள மகிழ்ந்தாள். (க)

அருத்தி னுடிரு வமுதமு முண்டதர ராப்பூண்
ஒருத்த னோடவ ளோடும டைந்ததொண் கயிலை
திருத்த மார்நவ வீரர்க ளிலக்கர்கள் சிதரு
அருத்தி யோடுற வாட்லுங் கொண்டதம் மழவே. (உ)

காவி னேழ்கட லுடைத்தது விடுத்தது கடின
மாவி ருவெழு வான்வரை தகர்த்தது வைசால்
வேலி னுலிருந் திசைக்கரி யாவையும் வீரிட்
டோலி டுஞ்சிறு பந்தென வாடிய துவப்பால். (ஙு)

இன்ன வாறுபல் பெருந்திரு வாடல்க ளிழைத்த
இன்ன லேதுமில் பரம்பொரு ளென்விளை யாட்டாற்
பின்ன மாயவெல் லாமுனம் போற்பிறங் குகவென்
றுன்னி யன்னண மாக்கிய மாண்பெவ ருறுவார். (ச)

பின்றை மாகயி லாயம தடைந்தெழில் பிறங்கு
மன்றன் மெய்யிளம் பூரணன் வதிதரு காலை
கொன்றை சூடியை நினைந்தொரு நாரதன் குயிலு
கின்ற வேள்வியிற் றகர்பிறந் ததுமுறை கெடலால். (ரு)

தண்டை நூபுரங் கால்களிற் றயங்குமத் தகர்தான்
கொண்ட சேவுடல் குலுக்கியெப் புவனமுங் குலுங்க
மண்டி யேவரு கிறததை யடக்கென மாண்பார்
அண்டர் மாதவர் தொழுதனர் சேயவ னடியை. (சு)

வீர பாகுதன் கைகளி னலதன் மிடன்மெய்ச்
சீர ருவணம் பிடித்ததைக் கொணர்தலுஞ் சேய்மைத்
தார மேனிய னதன்மிசை யிவர்ந்துபஃ றலமும்
ஏர ருமலு லாவியென் னூர்தியிஃ தென்றான். (எ)

அக்க டாவுமவ் வாறமர் வடைந்தபின் னளியாற்
சொக்க ருவய னரனடி களின்மலர் தூவி
மிக்க வோகையொ டேவெளி வருகையின் மிடலார்
செக்கர் வேளடி போற்றலி லாதய றிரிந்தான். (அ)

அவ்வ யன்றனை யழைத்துமுற் குடிலையி னருத்தஞ்
செவ்வ னேதுதி யெனக்குகன் கூறலுஞ் சிருட்டி
எவ்வ மின்றுசெய் நானது வென்றய னியம்ப
உவ்வி புண்ணுறப் புடைத்தன னவனையவ் வொருவன். (கூ)

குட்டி மேலுதைத் திருந்தளை யிட்டிவற் கொடுபோய்
விட்டி டாதுகந் தாசல மிருத்துமி னெனுஞ்சூள்
இட்ட வாறுசெய் தனர்கண ரீசனுக் கவ்வோம்
கட்ட தோதின னருணையன் புகழ்தனிக் கடவுள். (க0)

சிறுவர்களால் இத்திருப்பத்து, காலை மாலை பூசிக்கப்பட்டுப் பத்திபிறங்கப் பாடப் படுமாயின் அவர்கட்கு உடல்வன்மையுங் கல்வியறிவு முண்டாம்; ஐயமின்று.

---

## இரண்டாவது

# திருக்கைலாயத்திருவிளையாடல்.

## (முதற்பத்து)

முற்றறிவுடைய முதல்வன், சரவணப்பொய்கையிலே தூய்மை பொருந்திய தாமரைமலர்களின்மீது ஆறு திருக்குழந்தைகளாய் விளங்கியமர்ந்திருந்தபோது, நீண்ட கூந்தலையுடைய பார்வதிதேவி, "நீவிர் அறுமுகத்திருவுருவனுய் அமையுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளி, நெடிய தன்னுடைய திருக்கரங்களால் அக்குழந்தைகளை ஒரு சேர அணைத்தனள். அவை அவ்வாறே திரண்டது கண்டு திருவுளத்திலே மகிழ்ச்சி கொண்டருளினள். (க)

(அவ்வறுமுகக் குழந்தைக்கு) உமாதேவி தன்றிருப்பயோதரப் பாலையூட்ட அதுவுமுண்டது. பின்னர் அது, பார்வதி பரமேச்சுவரரோடு ஒள்ளிய திருக்கைலாய மலையையடைந்தது. அங்கு நலங்கள் எவற்றினுந் திருத்தமுற்ற குழந்தைப் பருவத்து (மாணிக்க நிறமுடைய வீரபாகு, தாள நிறமுடைய வீரகேசரி, புட்பராக நிறமுடைய வீரமகேந்திரன், கோமேதக நிறமுடைய வீரமகேசன், வைடூரிய நிறமுடைய வீரபுரந்தரன், வயிர நிறமுடைய வீரராக்கதன், மரகத நிறமுடைய வீரமார்த்தாண்டன், பவள நிறமுடைய வீராந்தகன், நீல நிறமுடைய வீரதீரனெனும் பெயரிய) நவவீரர்களோடும் இலக்ஷம் வீரர்களோடும் பின்னமில்லாப் பிரியத்தோடு நேயமுங் கொள்வதாயிற்று அக்குழந்தை. (உ)

அது, தனது தாளினால் எழு கடல்களையும் உடைத்துப் பெருக்கெடுக்க விட்டது. கூர்மை மிக்க ஆயுதத்தினால், பெருமை கெடாத வானளாவிய சத்த குலகிரிகளையுந் தகர்த்து விட்டது. பெரிய திசைக்கரிகள் யாவற்றையும் வீரிட்டோடுஞ் சிறபங்தெனும்படி மகிழ்ச்சியோடு விண்ணிலெறிந்து விளையாடியது. (௩)

இந்த விதமாகப் "பல்பெருந் திருவாடல்கள்" புரிந்தருளிய துன்பமணுவுமில்லாத அம்முழுமுதற் கடவுளான பெருமான், "எனது இலீலையினாற் சிதைவுற்ற எல்லாம் முன்புபோலவே பொலிவுறுவனவாகுக" என்று திருவுள்ளத்தெண்ணி, அவ்வாறே ஆக்கிய அவ்வற்புதப் பெருமையை அவனன்றி வேறெவர்தாங் கொள்ளவல்லார்! (௪)

பின்பு, அழகு விளங்குகின்ற இயற்கையாகவே கடவுண் மணம் வீசுகின்ற திருமேனியையுடைய இளம்பூரணனாகிய கடவுள், ஸ்ரீ மஹா கைலாஸத்தை யடைந்து ஆங்கமர்ந்திருக்குநாளில், "சிவபெருமானைக்குறித்து நாரதர் செய்கின்ற ஒரு யாகத்திற் செய்யுமுறை தவறின காரணத்தால் அதனினின்றும் யாட்டுக்கடாவொன்று தோன்றியது. (ரு)

தண்டையுஞ் சிலம்பும் அணிந்த கால்களோடு விளங்கும் அக்கடாவானது, தனது சிவந்த உடம்பைக் குலுக்கிக்கொண்டு எல்லாப் புவனமு நடுங்கும்படி விரைந்தார்ப்பரித்து வருகின்றது; அதனை அடக்கி யருளல்வேண்டும்" என்று மாட்சிமைவாய்ந்த தேவர்களும், முனிவர்களும் முருகப்பெருமான் சன்னிதியில் விண்ணப்பித்து அவனடிபணிந்தனர். (சூ)

அவ்வாறு வந்த யாட்டுக்கடாவை, வலிய அதன் உடற்பொலிவு அழியா வகையில் வீரபாகுதேவர் தம்முடைய கைகளாற் பிடித்துக்கொண்டு வருதலும், மக்களறிவிற்கு எட்டாததாகிய பிரணவத்தைத் தனது திருமேனியாகக் கொண்டுள்ள கந்தவேள், அதன்மேல் ஆரோகணித்து அதனுடைய நலத்தை அழிக்காமலே பல புவனங்களிலும் உலாவி வந்து, "இஃதெனது வாகனம்" என்று கூறியருளினன். (எ)

அதுகேட்ட அக்கடாவும் அவ்வாறு வாகனமா யமர்ந்தபின்பு, சிவபெருமான் றிருவடிகளை மெய்யன்போடு மலர்களைக்கொண்டருச்சித்து வணங்கி மிக்க களிப்புடன் சிவசன்னிதானத்திலிருந்து வெளியேவந்துகொண்டிருந்த அழகிய பிரமதேவன் சருவ வல்லமையும் பொருந்திய செவ்வேட்பரமன்றிருவடிகளை வணங்காது உதாசீனனாய் அப்பரமன திருக்கையினைக் கடந்துபோயினன். (அ)

---

௪. "பல்பெருந் திருவாடல்கள்"— "முதல்வன்புராண முடிப்பு" என்னும் பத்திலு மறியக்கிடக்கின்றன.

அங்ஙனஞ்சென்ற பிரமனைக் குகக்கடவுள் அழைத்து, "வேதத்தின் முற்பட்டுள்ள பிரணவத்தின் பொருளை இனிது கூறுவாயாக" என்றுபணித்தருள; அவனும் "செவ்வனே படைப்புத்தொழில் நடாத்தும் நானே அதன்பொருள்" என்று கூறினன். கூறவே, அத்தனிமுதல்வன் அயனது தலைகள் புண்ணுறும்படி நன்கு குட்டினன். (௯)

குட்டியதோடு தனது தாளால் அவ்வயனதுடம்பிலுமுதைத்து, "இவனுக்குப் பெரிய தளைகளைப் பூட்டித் தப்பவிடாது கொண்டுபோய்க் கந்தகிரியிலே சிறையிலிருத்துங்கோள்" என்று பணிக்க ; கணநாதரும் அவ்வாறே செய்துமுடித்தார்கள். (பின்னர்) அருணகிரிநாதர் புகழும்படியான ஒப்பற்ற முருகப்பெருமான், சருவேசுவரனாகிய சிவபெருமானுக்கு அப்பிரணவத்தின் உண்மைப்பொருளை உபதேசக்கிரமத்தா லெடுத்துரைத்தனன். (௧௦)

திருக்கைலாயத்திருவிளையாடன்
முதற்பத்துமுற்றிற்று.

---

# திருக்கைலாயத்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து)

திருவடி தொழாருறு பயன்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியொன்றற்கிருபத்தோரக்கரம்.

*தந்த தனதன தந்த தனதன தந்த தனதன தந்தன.*

**வி**ண்டு வெழிலுடை யுந்தி வருமயன் வெம்ப லொடுசிறை சென்றபின்
வண்டி லவன்வினை கொண்ட குகனைவ ணங்கல் விடுபவர் சண்டனூர்
கண்ட பொழுதக மஞ்ச லுழிதரு கண்கண் மழைசொரி துன்பமுந்
தொண்டை விரியவி ழுந்த லறுமொரு துன்பு மிறையும்வி டுங்கொலோ. (௧)

**அ**ம்பொ னயிலயி றங்கு கரனடி யன்பொ டனுதினம் வந்தியா
வம்பர் மரணம டைந்து நடுவைவ ழுங்கு நமனகர் கண்டகால்
கும்பி யளறுகள் கிண்டு புழுவிறல் கொண்ட கடியுயிர் தங்கிடந்
தும்பி யறைகள்கி டந்து பலபல துன்ப முறலும்வி டுங்கொலோ. (௨)

**து**ங்க விளமதி தங்கு சடையினர் தந்த சுரகுரு சுந்தரப்
பங்க யவடிக ணம்பல் விடுபவர் பஞ்ச நமனகர் கண்டகால்

---

௯. பிரணவத்திற்குப்பொருள் நானே என்று பிரமதேவன் கூறினனென்பதை, "ப்ரக்ருதச்சாஹமேவார்த்தோ விதிரஸ்யேதிவிப்ருவந் |" எனச் **சம்பவகாண்டத்து** ௩௩ - ஆம் அத்தியாயங் கூறிச்சேறலி னறியலாம்.

செங்கை கழல்பல துண்டு படுபொழு தங்கண் மழைநனி சிந்தலும்
வங்க ரெனமுக கஞ்ச நலிதலும் வந்தை கெடலுமி றுங்கொலோ. (௩)

சிந்தை வெளிநடு நின்று நடமது தந்த ருளுமொரு செங்குகன்
அந்தி ருவடியை நம்பல் விடுபவ ரந்த கனகரி கண்டகால்
வெந்து தழலிடை மண்டை யுடையவி ழுந்து சுடுகறை சிந்தவுள்
நொந்தி டுறவினர் கண்ட ழுதலுந டங்க லுமொழிவு றுங்கொலோ. (௪)

இன்சொன் மொழியினும் விஞ்சு கிளிமொழி யின்ப வுமையினி ளஞ்சுதன்
நன்சொ னெறியினை நம்ப லிலர்கறை நன்று தெரிமறல் கண்டகால்
வன்சொல் யமபடர் வந்து விழிசெவி மங்க வறைதலு மன்பிலாப்
புன்சொ லடிபிடி தந்த கருவிகள் பொன்ற வயர்தலு நந்துமோ. (௫)

தான தனதன தான தனதன தான தனதன தானன.

பீடு கெழுமயி லேறு மழகனை யாடு தகர்விடு பீடனை
நாடு மனமிலர் ஞால வுயிர்களின் ஞாய நமனகர் மேவுகால்
மோடு பிடர்தலை நாசி விழிசெவி மூர விதழ்களை யூறுகாய்
போடு படர்பலர் கீறு தொழிலொடு போழ்தல் புரிதலு மோவுமோ. (௬)

வீர வமர்புரி வீர வவுணர்கள் வீர நகரினை மாகட
ளூர முளமிழ வேசெய் குகனடி நாடு மனமிலர் காலனூர்
சார மயமட னீடு கழுமுனை தாவு சுடுதரை மேவலுங்
கோர விருணிலை தாப நளிர்நிலை கோட லுமொருவு மோவரோ. (௭)

மாய வசுரர்கண் மாய வமர்புரி மாய சிவகுரு சீரலை
வாயி லமரர்செய் பூசை கொளுமிறை மாண டிநினைகி லார்வரு
தீயர் தமைமுனி பாச தரனகர் சேரு மமையம ருவுயிர்க்
காய நனிசிதை வாக வுரலிடு காரர் தொழில்களு மோவுமோ. (௮)

வாச நயமிகு நீப வணியணி மார்ப மொளிர்குக தேவனை
ஈச னெனநினை யாது விலகிய வேசர் நமனகர் மேவுகால்
பாச தரரெதி ராகி யுடல்வலி பாற விசிதர வாரலில்
வீசு படர்தொழின் மார்பி லறைதொழில் வேலர் தொழில்களு மோவுமோ. ()

தத்த தனதன தத்த தனதன தத்த தனதன தத்தன.

மட்டில் புகழ்முனி நட்பி லவிர்குகன் மட்டு மலரடி விட்டகைத்
துட்டர் முதுகிடை மொத்து நமனக ருற்ற பினரவர் தொக்கினை
வெட்டி யுதிரந ரப்பு விளர்தசை யத்தி சருமம்வி லக்குநர்
கிட்டி வருதலு நிற்ற லெனுன்மதி கெட்ட லையுமகி லத்தரே. (௧௦)

# திருக்கைலாயத்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து)

### திருவடிதொழாநறு பயன்.

திருமாலினது அழகிய நாபியிற் றோன்றிய பிரமதேவன் துன்புற்றுச் சிறை புக்கபின், அந்தப் பிரமனது குற்றமற்ற படைப்புத் தொழிலை மேற்கொண்ட குகபெருமானை அந்தப் பிரமதேவன் வணங்கத் தவறியவாறு தவறுவோர்கள், யமபுரத்தைக் காணநேர்ந்தபொழுது நெஞ்சு நடுங்குதலும், சுழலமிடுகின்ற கண்கள் அழுகைமழை பொழியுந் துன்பமும், தொண்டைவீங்கும்படி விழுந்தலறுந் துன்பமுஞ் சிறிதேனும் விட்டொழியுமோ? [ஒழியா என்றபடி.] (க)

அழகிய பொன்மயமான கூர்மைவாய்ந்த வேலாயுதத்தினைத் திருக்கரத்தேந்தியுள்ள முருகப் பெருமானுடைய திருவடிகளை அந்தப் பிரமதேவனைப்போல அன்போடு நாடோறும் வந்தியாத வம்பர்கள், மரணமடைந்து உயிர்கட்கு நியாயம் வழங்கும் யமதருமராசனது நகரத்தைக் காணநேர்ந்த காலத்திற் கும்பியென்னு நரகத்திலும், புழுக்கள் குடையும்படியான சேறுகளிலும், வன்மைமிக்க கடியுயிர்கள் தங்கிடங்களிலும், பலதிற வண்டுகள் செறிந்திருக்கும் இடங்களிலுங் கிடந்து மிகப் பலவாகிய துன்பமடைதலினின்றுந் தப்புவார்களோ? [தப்பார்கள்.] (உ)

பரிசுத்தமான பிறைச்சந்திரன் தங்கியுள்ள சடாமண்டல மஸ்தக சிவபெருமான் தந்தருளிய சுப்பிரமணியனாகிய சுரகுருவின் அழகிய திருவடித்தாமரைகளை, அந்தப் பிரமதேவன் நம்பாது கைவிட்டவாறு விடுபவர்கள், விசாலம்பொருந்திய யமபுரத்தைக் காணநேர்ந்தபோது, (இறைவனை முன்னம் வணங்கலும் வலம்வரலுஞ் செய்யாத) அவர்தஞ் சிவந்த கைகளுங் கால்களும் பல துண்டாகத் தரிக்கப்படும்பொழுது அழகிய கண்கள் அழுதலால் நீரை மிகச் சொரிதலும், சண்டாளரைப்போல முகாரவிந்தம் வாடுதலும் பெருமை கெடுதலும் ஒழியுமோ? [ஒழியா என்றபடி.] (ங)

ஆன்மாக்களுடைய இருதயாகாயத்தின் நடுவே நின்று தாண்டவம் புரிந்தருளுஞ் சோதி சொருபனாகிய குகபெருமானுடைய அழகிய திருவடிகளை அந்தப் பிரமதேவன் நம்பாது கைவிட்டவாறு விடுபவர்கள், யமனது நகரத்தைக் காணநேர்ந்தபோது தமதுடம்பு நெருப்பில்வெந்து மண்டையோடு உடையவும் இரத்தஞ்சிந்தவுமாக விழுந்து உளம்வருந்தித் தமதுறவினரைக் கண்டழுதலும் வாடுதலும் நீங்குமோ? [நீங்கா என்றவாறு.] (ச)

கிளிமொழியினும் இனிமை சிறக்கும்படியான இன்சொல்லையுடைய உமாதேவியின் இளைய குமாரனுடைய பிரணவவேத மார்க்கத்தை அந்தப் பிரமதேவன்போல நம்பாதவர்கள், நன்று தீதுணர்ந்து உரிய நியாயங்கொடுக்கவல்ல யமனைக் காண நேர்ந்தபோது கொடுஞ் சொற்களையுடைய யமபடர்கள் எதிரே தோன்றிக் கண்ணுங் காதுங் கலங்கும்படி அறைதலும் (இறைவனடியவர் திருவுள்ளம் வருந்த) இரக்கமற்ற இழிமொழிகளையும் அடிபிடிகளையு நல்கிய வாய்முதலிய கருவிகள் அழியும்படி செய்தலுங் குறையுமோ? [குறையா.] (ரு)

வலிமை மிக்க மயிலின்மீது ஆரோகணிக்கும் அழகனும், நடனஞ் செய்யக்கூடிய யாட்டுக்கடாவை வாகனமாய்ச் செலுத்தும் பெருமையுடையவனுமாகிய குமாரக் கடவுளை அந்தப் பிரமதேவனைப்போல நாடு மனமொழிந்தவர்கள் மண்ணுலக வாசிகட்கு நியாயம் வழங்கும் நமனதூரை நண்ணும்போது, (அப் பாபாத்துமாக்களுடைய) வயிறு, பிடர், தலை, மூக்கு, கண், காது, பல்லோடுங்கூடிய பாகம், உதடு என்னு முறுப்புக்களை ஊறு காய் போடுகின்ற யமகிங்கரராகிய பலர் கீறலும் பிளத்தலுஞ் செய்தல் குறையுமோ? [குறையாது.] (சு)

வீரயுத்தம் புரிந்த வீர அசுரர்களது வீரமாகேந்திரபுரியைப் பெரிய கடலின் நீரினுள் அமிழச் செய்த குகேசனுடைய திருவடியை அந்தப் பிரமனைப்போல நாடுமன மொழிந்தவர்கள் நமனூர் சேருங்காலத்தில், வலிமிகுந்த கழுமுனைகளையும் அனல்வீசிக் கொண்டிருக்கிற சுடுதரைகளையும் அடைதலும், பயங்கரமான இருட்டிடங்களையுங் காடுகளையுங் குளிர்மிக்க இடங்களையுந் தம்முடைய இருப்பிடங்களாகக் கொள்ளுதலும் நீங்குமோ? [நீங்கா.] (எ)

மாயம்வல்ல அசுரர்கள் மாண்டொழியும்படி போர்புரிந்த எல்லா மாயமும் வல்ல சிவகுருநாதனும், திருச்செந்தூரின் கண்ணே தேவர்கள் செய்த பூசையை எற்றருளிய இறைவனுமாகிய அறுமுகச் சிவனுடைய பெருமைவாய்ந்த திருவடிகளை அந்தப் பிரம தேவனைப்போலத் தியானஞ்செய்யாதுள்ளோர் தனது முன்பாகவரும் பாவிகளைக் கோபிக்கின்ற யமனதுலகத்தைச் சேருங்காலத்தில், அழியாத உயிர்க்குறைவிடமாகிய (சூக்கும உடம்பு செவ்வையாய்ச் சிதைவுறும்படி உரலிலிடுவோர் செயல்களுங் குறைவுறுமோ? [குறைவுரு.] (அ)

வாசனையாகிய நயப்பாடு சிறக்குங் கடப்பம் பூமாலையும் ஆபரணமும் அழகிய திருமார்பில் விளங்கப்பெற்ற குகக்கடவுளைச் சருவேசுவரனென்றெண்ணுது (குறைவாகக்கருதி) அந்தப் பிரமதேவனைப்போல விலகிய (போலிச்சிவ) வேடதாரிகள் யமபட்டணத்தை யடையும்போது, பாசமேந்திய கிங்கரர்களெதிர்ப்பட்டு உடல்வலி நீங்கும்படிக் கான கட்டுதலைச்செய்ய; பின்பு எடுத்தெறியத்தக்க கிங்கரர்கள் எடுத்து நெருப்பிடை யெறியுஞ் செய்கையும், மார்பிலறையுஞ் செய்கையும், ஆயுதங்கொண்டு சிக்ஷிப்பார் செய்கையுங் குறையுமோ? [குறையா.] (கூ)

நன்மதியிழந்து திரியும் உலகாயதர்களே! எண்ணிறந்த திருப்புகழ்களைத் தம்முடைய பாடல்களில் வைத்துப் பாடிய அருணகிரிநாத முனீந்திரருடைய அன்பில் விளங்குகின்ற குகபெருமானுடைய வாசம் பொருந்திய திருவடிமலர்களை அந்தப்பிரமனைப்போல அவமதித்துத் தள்ளிவிட்ட சிறுமைக்குணமுடைய துட்டர்கள், பாவிகளுடைய முதுகிற் புடைக்குந்தொழில் நிகழுங் காலனூர் சேர்ந்தபின்னர், அவர்களுடைய உடம்பைவெட்டி, இரத்தம், நரம்பு, நிணம், தசை, எலும்பு, தோல், என்னுமிவற்றை வெவ்வேருக்குந் தொழிலையுடைய யமபடர்கள் நெருங்கி வந்தவுடன் அவர்கட்குத் தப்பி நிற்குமாறும் யாங்ஙனம்? [இல்லை யென்றபடி.] (க0)

திருக்கைலாயத்திருவிளையாடல்
இரண்டாம்பத்து முற்றிற்று.

---

மூன்றாவது

# திருக்கந்தகிரியிற் பட்டாபிடேகத்திருவிளையாடல்.

---

கலிவிருத்தம்.

சீர்முழுதொன்றிய சிறப்புடைத் தலையாகெதுகை.

அடியொன்றற்குப்பன்னீரக்கரம்.

ஏரா ருங்குழ வன்றக ரேறுமுனே
பாரா ரேமவி லங்கலி லேபனிகொள்
தாரா ரிந்திர னாதிய ராவிதடிந்
தோரா நெஞ்சுடை நீவிரு யிர்த்தெழுமின். (க)

என்றா னன்னணம் வந்தெதிர் நின்றவர்முன்
நன்றா யென்னைய றிந்துந லம்பெறுவீர்
என்றா ரண்டமெ லாமமர் பேருருவாய்
நின்றா னர்த்தப தம்வரை கண்டனரால். (உ)

கண்டா ருண்மக வானிகல் சூர்களையா
அண்டா காவென வன்னது செய்வலென
வண்டா ரேகனு ரைத்தலும் வானவர்சீர்
கொண்டா ரென்னவு ளங்குளிர் வுற்றனரே. (ங)

அவ்வா றாமணி மாயவ னாதிசுரர்
செவ்வா னேநெடு திண்கயி லைக்கருகே
எவ்வா சுந்தபு மெண்ணின்மு டிக்கிரியாய்
உவ்வா ருள்ளென மின்னிட னுற்றனரால். (ச)

அங்கா ராடக வாலய நள்ளிடையோர்
சிங்கா ரத்திரு வாளரி பீடமிடா
மங்கா வீசன்ம கன்றனை நீயிதிலே
தங்கா யென்றனர் தங்கின னேயவனும். (ரு)

---

க. ஏமவிலங்கல் = பொன்மலை = மேருகிரி.

ங. வண்டார் - வண் + தார் எனப் பிரித்துக்கொள்க.

ச. உவ்வார் = தவமுடையார்.

மாசா ராவிக ளுய்திவ ழுங்குநெறித்
தேசா ராதிம றைக்கரை கண்டதிரு
வீசா நின்றவ சிட்டன்மு தல்விளியாத்
தேசா ரந்தணர் வந்தனர் சேய்தொழுதார். (சு)

வாலே றண்டம காவுத கங்கொடவர்
நூலே றெண்சொனு வன்றுகொ டேமுருகுக்
கோலே றுங்குக னுக்கபி டேகமிழைத்
தேலே றம்முடி யுஞ்சிர சிட்டறைவார். (எ)

எஞ்சா வேதம்வ ழுத்துமி ரும்பொருளே
மஞ்சா ரித்திரு மான்முதல் வாகினிகட்
கஞ்சா ரும்பதி நீயினி யென்றவர்கள்
நெஞ்சா ரச்சொல வொப்பின னீள்விறலோன். (அ)

சேனா னீசக மாகுரு வென்றுதிரு
மானா கத்தரி றைஞ்சினர் வன்முருகும்
ஆனா வெண்கிரி புக்கதன் னூரெவருங்
கானா ராசினி காமரில் லெய்தினரால். (கூ)

வல்லார் கந்தன மர்ந்தமை யாலவ்வரை
வில்லார் கந்தப ருப்பத மாம்விபுதர்
கல்லார் நெஞ்சொடு சேயையெ திர்த்தகதை
சொல்லார் விற்புகல் வேனொவி யற்றொழுவீர். (கO)

---

## மூன்றாவது

# திருக்கந்தகிரியிற் பட்டாபிடேகத்திருவிளையாடல்.

---

அழகு பொருந்திய இளம்பரிபூரணன் (நாரதர் யாகத்துதித்த) யாட்டுக் கடாவை யடக்கி அதன்மீதேறுமுன்பே பூமியிற் பொருந்திய மேருகிரியிலே குளிர்ந்த பூமாலையணிந்த இந்திரன் முதலிய தேவர்கள் உயிரைப்போக்கி, பின்பு "உண்மை அறியமாட்டாத மனத்தை உடைய நீங்கள் எல்லீரும் பிழைத்தெழுவீர்களாக",— (க)

என்று திருவாய் மலர்ந்தருளினன். அவ்வண்ணமே, எழுந்து வந்து நின்ற தேவர்களை நோக்கி, "நம்மைச் செவ்வையாய் அறிந்து நன்மை அடைவீர்களாக" என்று

---

எ. எல், ஏலென எதுகைநோக்கி நீண்டது. எல் = ஒளி.

கூறி, நிறைந்துள்ள அண்டங்கள் யாவும் தன்மாட்டமர்ந்துள்ள மகா விசுவரூபங்கொண்டு நின்றனன். தேவர்கள் அவ்வுருவத்திற் பாதிக்கால் (=முழந்தாள்) அளவுமட்டுமே தரிசித்தனர். (உ)

அவ்வாறு தரிசித்தவர்களுள்ளே, தேவேந்திரன் (பெருமானை நோக்கி) "சருவாண்டங்களுள்ளும் நிறைந்திருக்குங் கடவுளே! எங்களைப் பகைத்த சூரபதுமனாதியோரை அழித்து எங்களைக் காத்தருள்வாயாக" என்று விண்ணப்பித்தவுடன், வளப்பம் பொருந்திய (கடப்பம்) பூமாலையை அணிந்த தனிப் பரம்பொருளாகிய கந்தனும், "அவ்வாறு செய்வேம்" என்று வாக்களித்தவுடன், தேவர்கள் அப்போதே இழந்த நலம் யாவும் பெற்றவர்போல மனங்குளிர்ந்தார்கள். (ங)

அவ்வண்ணம் உள்ளக் களிப்பெய்திய நீலநிறத்திருமால் முதலிய தேவர்கள், தேஜோமயனாகிய முருகவேளோடு வலிமை பொருந்திய திருக்கைலாயத்திற் கணித்தாய்க் குற்றமேதுமற்ற கொடுமுடிகள் பலவற்றோடுங்கூடிய பருவதமாய்த் தபோதனர் நெஞ்சுபோலப் பரிசுத்தமாய் விளங்கு மோரிடத்தை யடைந்தனர். (ச)

அங்குப்பொருந்திய ஒரு பொற்கோயிலின் நடுவிடத்தே அவர்கள் ஒரு அழகிய சிங்காசனமிட்டு மூப்பிறப்பறியா முருகவேளை நோக்கித் "தேவரீர் இதன்மீ தெழுந்தருளல்வேண்டும்" என்று வேண்டினர். அவனும் அவ்வாறு செய்தனன். (ரு)

மும்மல வழுக்கு மூடப்பெற்ற ஆன்மாக்களுக்குப் பேரின்ப நெறிகாட்டுஞ் சிறப்புடைய பழைய வேதமாகிய கடலின்கரையைக்கண்ட சிறப்புமிளிர்கின்ற வசிட்டர் முதலாகவுள்ள பிரமதேஜசுடையார் பலர், அங்குவந்து பாலரூபப்பெருமானடி பரவினர். (சு)

அவர்கள், பரிசுத்தமான ஆகாய கங்கை நீரைக்கொண்டு நல்ல வேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டே அழகிய செங்கோலேந்தி விளங்குங் குகபெருமானுக்கு அபிடேகித்து, ஒளிமிக்கதோர் அழகிய கிரீடத்தையும் அவனது திருமுடிக்கணிந்து பின்வருமாறு சொல்லத் தொடங்கினர். (எ)

"அழிவறியா வேதங்கள் துதிக்கும் பரம்பொருளே! மேகநிற மேனியனாகிய இந்தத் திருமால் முதலிய தேவசேனைகளுக்கு இனிமேல் எற்றபதி தேவரீரேயாவீர்" என்று மனமார விண்ணப்பிக்க; முடிவிலாற்றல் படைத்த முருகவேளும் அதற்கிசைந்தருளினன். (அ)

சேனானீ (=சேனைத்தலைவ!) மகாஜகத்குரு! என்று கூறிக்கொண்டு திருமாலும் ஏனைய விண்ணவர்களும் பணிந்தனர். எல்லா வல்லமையுமுடைய முருகவேளும் குறைவொன்றுமில்லா வெள்ளியங்கிரிக்கு எழுந்தருளியது. மற்றையோரும் விண்ணகத்தையும், கானகத்தையும், அழகிய இல்லங்களையும் அடைந்தனர். (கூ)

வலிமைவாய்ந்த கந்தக்கடவுள் அமர்ந்தருளிய காரணத்தால் அம்மலைக்கு ஒளிமிக்க கந்தகிரி யென்னும் பெயரெய்தியது. அருணகிரிநாதனாரடிதொழு மன்புடையீர்! இனி, அத்தேவர்கள் கன்னெஞ்சினராய்க் கந்தவேளை யெதிர்த்த அக்கதையை விருப்பத்தோடு (விளக்கிச்) சொல்லக்கடவேன். (கo)

**திருக்கந்தகிரியிற் பட்டாபிடேகத்திருவிளையாடன் முற்றிற்று.**

## நான்காவது

# மேருகிரித்திருவிளையாடல்.

---

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

### சதாக்கரம். (நூறெழுத்து)

*தனனதன தந்தா தனனதன தந்தா*
*தனனதன தந்தா தனதான.*

OFFICE OF THE REGISTRAR
19 MAY 1925
MADRAS

அரநயனம் வந்தோ னிதிகிரியி னின்றே
யதனுடைய வன்கோ டுகள்பேரா
விரிதிசையெ றிந்தா டுதலொழிய வென்றே
விபுதர்பதி விண்கா வலர்சூழ
விரைவினவண் வந்தே சதமுனையெ றிந்தான்
விறல்கொளது வெந்தே பொடியாகி
இரிவதுமு ணர்ந்தா ரிவனொருசி றந்தோ
னெனமிகவு நொந்தா னுலகீரே. (க)

திகழ்கிரியை யுஞ்சேய் கிடுகிடென வங்கே
செயலுணரும் விண்கோ தனதானை
இகலுடையொ ரம்பான் மடிதலும றிந்தா
னிதயமிக வெந்தா னதன்மேலே
பகவதியி ளங்கான் முளைவிடுமி ரண்டோ
டுறுசரமி ரண்டான் முடிபாடார்
துகில்பரமி ழந்தா ருணர்வையும கன்றோர்
சுடர்நிலம்வி ழுந்தா னுலகீரே. (உ)

உலகுயிரி ருந்தா னுடலினைவி டுங்கா
லுயிர்கவரும் வன்றோ ணமனுனோன்
பலபடைகள் கொண்டே சமரிடுதல் கண்டே
பரமபதி யின்சே யிலைபோலும்
அலகுகளி லைந்தே விடவவையு டம்பே
றிடலுமவ னொந்தே யறிவேபோய்
நிலமிசைநெ டுங்கார் மலையெனவி ழுந்தா
னிசநெறிவி ரும்பே ருலகீரே. (ங)

---

க. நிதி = பொன் ஆகலின், நிதிகிரி = பொன்மலையாகிய மேருகிரியென்க,

அளவையில டங்கா வுருவெவையும் வெந்தே
யழியவனை யுந்தே வெனுமாரல்
உளநனிவெ குண்டே சமர்தரலு நந்தா
வொருவன்மக னஞ்சா வலியோடு
மிளிர்சரமி ரண்டோ டொருசரமொ ருங்கே
விடலுமவை வந்தே யுடலுருவி
வளைபொழுது ளந்தான் வெருவவெரி யென்பான்
வரையெனவி ழுந்தா னுலகிரே. (ச)

மணியலையெ றிந்தே மிளிர்புனலு நன்காள்
வருணனும்வெ குண்டோர் வலிபேசித்
துணிதலைய றிந்தோர் நொடியினிலி ரண்டோ
டுறுசரமி ரண்டால் விறல்சோர
உணர்வதுமி ழந்தே விழவவனை வென்று
ஞெருவன்விழி வந்தோ னுயர்வாழ்வை
அணவநசை கொண்டா ரடைவதும வன்று
ளறிதிரறி யுஞ்சீ ருலகிரே. (ரு)

மலையெனவி யங்கா வெதனையும சைந்தா
டிடவயர ரும்பா டுடைவாயு
அலைவுடனெ ழுந்தே சமரதுபு ரிந்தா
னவனையுமி ரண்டா சுகமேவி
குலைநனிகு லைந்தே விழவநனம் வென்று
ஞெருகுடிலை விஞ்சோ ருருவானோன்
கலைபலதெ ரிந்தே மனவெளிய ணைந்தோர்
கருதரன வன்று னுலகிரே. (சு)

உயிர்களக மும்பே ரகிலமும்வி ளங்கே
ணுடையிரவி யென்பான் வலிபேசி
எயிறுநனி தின்றே பொருதெனவெ ழுந்தோ
ரிணையில்சம ரந்தா னயர்போது
கயிலையிறை வன்சேய் சிறுமுறுவல் கொண்டே
கணைகளிலி ரண்டே விமனுதி
செயல்களற வென்று னவனையுமி ருஞ்சீர்
தெரியமுய லுஞ்சீ ருலகிரே. (எ)

அமுதகிர ணஞ்சான் மதிநனிவெ குண்டே
யமர்தரவ வன்றேள் வலிமாழ்கி
நிமிடமுள்வி ழுந்தோ வுறவொருச ரந்தான்
விடுவினைபு ரிந்தா னிகமேனை

அமரரும்வி ழுந்தோ வுறவொருச ரஞ்சீ
றளவையில்வி டும்பே ரளியானுச்
சமரிலவ ணஞ்சே யுருவிறைபு ரிந்தா
னெனலறிதி ரன்பார் தரையீரே. (அ)

சொனபடியி ளங்கோ வெனமிளிரு மெங்கோ
சுரகிரியி னின்றே விளையாடு
வினைகுருவ றிந்தோ டிவருகைபு ரிந்தோம்
விமலசிவ வென்றே புகழ்போது
அனைவருமெ ழுந்தே வருதிரென லுங்கா
ணவர்களும்வி ழுந்தே பணிபாதன்
எனவறிதிர் கந்தா சலனையுய ரின்பே
ணெழில்களைவி ரும்பே ருலகீரே. (கூ)

சிவசுதனி ருஞ்சூர் கடிமுதல்வன் மஞ்சார்
சிகியனவ னன்பா மருளால்வே
றெவரையும்வ ணங்கே னெதனையும்வ ணங்கே
னெனுமுறுதி கொண்டே னிதுதானே
இவறல்வலி வென்றே புகழ்பலபு கன்றே
னெனுமருணை யின்பே ருடைநாதன்
நுவலுநெறி யிங்கே யிதினுமுயர் வின்றே
நொசிவறுபெ ருங்கே ளுலகீரே. (க0)

---

நான்காவது

# மேருகிரித்திருவிளையாடல்.

---

மேலோர்களே! சிவபெருமானுடைய நெற்றிக்கண்களினின்று வெளிப்பட்டுள்ள இறைவன், பொற்கிரியாகிய மேருமலைக் கெழுந்தருளி, அதன் வலிய சிகரங்களைப் பெயர்த்தெடுத்து விசாலமான திசைகளில் வீசி விளையாடினன். அதனைத் தடுக்கவேண்டுமென்னுங் கருத்தாலே தேவேந்திரன், திசைக்காவலர்சூழ விரைவிலே அங்குவந்து தனது வச்சிராயுதத்தைப் பிரயோகித்தான். பல வெற்றிகளைப் படைத்த அது வெந்து சாம்பராகி யழிவதைக் கண்டு, "இப்படிச்செய்த இவன் ஒரு மகாபுருடனே" என்று மிகவும் மனம்புழுங்கினன். (க)

மேலோர்களே! பின்பு பொன்மயமாய் விளங்குகின்ற அம்மகாமேருகிரியையுங் கிடுகிடென நடுங்கும்படி முருகப்பெருமான் அசைத்தமையை யுணர்ந்த அவ்விந்திரன், தன்னுடைய ஆனையாகிய ஐராவதமானது, இறைவன்விட்ட வலிய பாணமொன்றினாலே மடிந்து விழுதலையுங் கண்ணுற்றதோடு அவன் உள்ளங் கொதிப்பெழவு நின்

ருன். பின்பு, பார்வதிதேவியின் இளைய திருக்குமாரனாகிய முருகவேள் ஏவிய நான்கு அம்புகளால் இந்திரன் தனது கிரீடம், பெருமைவாய்ந்த கொடி, கவசமென்பவற்றையு மிழந்து ஆர்ந்த உணர்வையு மிழந்து அழகிய காந்தியோடு விளங்கும் அந்நிலத்தில் விழுந்தான். (௨)

உண்மை நெறியை விரும்பும் நன்மைவாய்ந்த உலகத்தோர்களே ! பூமியில் ஆன் மாக்கள் தமது உடம்பைவிட்டுப் பிரியும்போது அவற்றைப் பிடித்துச் செல்லும் வலிய தோள்களையுடைய யமன், பல ஆயுதங்களைக்கொண்டு சண்டை செய்வதைச் சிவகுமா ரன் பார்த்து, இலைபோலுள்ள அம்புகளில் ஐந்தை ஏவ; அவை, யமனுடம்பிலே தைத்தவுடன் அவன் நிலைகுலைந்து அறிவழிந்து பெரிய நீலகிரி யென்னும்படி தரை மேல் விழுந்தான். (௩)

உயர்ந்தோர்களே ! எண்ணிமுடியாத பல்வேறு உருவுடைப் பொருள்களும் வெந்து நீருகும்படி சூழ்பவனாகிய அக்கினிதேவன் கடுஞ்சினத்துடன் போர்புரி யத் தொடங்கினவுடன், ஈறிலாப் பரமசிவ குமாரன் அஞ்சாத ஆற்றலோடு ஒளியினைச் செய்கின்ற மூன்று பாணங்களை ஒருங்கே விட்டமாத்திரத்தில், அவை வந்து அக்கினி தேவனது உடம்பைத்தாவி வளைந்துகொண்டவுடனே, அவனும் நெஞ்சிலே திகில் கொண்டு மலைபோலக் கீழே வீழ்ந்தான். (௪)

உண்மையறியுஞ் சிறப்பையுடைய உயர்ந்தோர்களே ! முத்தம் பவள மென் பன கொழிக்கும் அலைகளைவீசி விளங்கும் நீரை இனிது ஆள்பவனாகிய வருணதேவ னுஞ் சினந்து வஞ்சினங்கூறிப் போர்க்கெழுதலைக் கண்டு, பரமசிவனது நெற்றிக்கண்ணி னின்று வெளிப்பட்ட அப்பாலன், ஒரு கணத்திலே நான்கு அஸ்திரங்களால் அத் தேவனது திறனொடுங்கி உணர்வழிந்து கீழே விழும்படி செயித்தான். சீவவாழ்க் கையை ஒதுக்கிச் சிவவாழ்க்கையை அடைய விரும்புவோர் போய் அடைவதும் அச் சிவகுமாரனுடைய திருவடிகளே யென்று அறிவீர்களாக. (௫)

மலைகளெனவிருந்து இடம்பெயராத எப்பொருளும் நிலம்பெயர்ந் தசைந்தாடும் படி சாடும் பேராற்றல் படைத்த வாயுதேவன், ஆர்ப்பரித்தெழுந்து போர்புரிந்தான். பிர ணவசொரூபனான சுப்பிரமணியனும் அவன்மேல் இரண்டம்புகளை ஏவி அவன் இத யத்தானமானது பெரிதுங்கலங்கி நிலத்தில் வீழும்படி அப்போது வென்றான். மேலோர் களே ! அவனே, சகல சாத்திரங்களையுமுணர்ந்து சிதாகாசத்தைச் சேர்ந்தவர்கள் தியா னிக்குஞ் சிவன். (௬)

இறைவனுடைய அளப்பருஞ் சிறப்புகளை அறிய முயலுஞ் செம்மைவாய்ந்த பெரியோர்களே ! சீவராசிகளின் நெஞ்சத்திலும் பெரிய புவனங்களிலும் விளங்கும் பெருமைபடைத்த சூரியன், வன்மைகள் பேசிப் பல்லை நறுநறெனக் கடித்துப் "போர் கொடாய்" என வெழுந்து சமானமற்ற பெருஞ்சண்டை நிகழ்த்தியபோது, குமார பெருமான், புன்னகை செய்து இரண்டம்புகளை விடுத்து மனம் முதலிய திரிகரணங் களும் ஒடுங்கிப்போம்படி அவனையும் வெற்றிகொண்டான். (௭)

அன்புடையுலகீர் ! பின்பு, அமுதம் பொழியுங் கிரணங்களையுடைய சந்தி ரன் மிகவும் வெகுண்டு போர்செய்ய ; குழந்தை யுருவோடுள்ள இறைவன், எதிர்த் தோனது தோள்வலிகுன்றி ஒருகணத்திற் கீழே வீழ்ந்தொடுங்கும்படி ஒரு அம்பை எவினன். ஆங்குக் காணப்படுகின்ற மற்றைய தேவர்களும் தரைமிசை வீழ்ந்து கிடக்

கும்படி நொடிப்பொழுதில் அதிக அம்புகளை விடுத்துத் துன்பஞ் செய்ய எண்ணுத் தண்ணளியுடையானுய் ஒவ்வொருவர்மீதும் ஒவ்வொரு சிலீமுகமே அந்த யுத்தத்திற் பிரயோகித்தனன் என்பதை அறிவீர்களாக. (அ)

மேலான இன்பத்தையும், ஆற்றலையும், நலங்களையும் விரும்புகின்ற பெரியோர்களே! மேற்சொன்னவாறு இளம்பெருமானென்ன விளங்கும் எம் இறைவன், மேருமலையினின்றுகொண்டு இத்திறத் திருவிளையாடல்புரிதலைத் தேவகுருவானவர் அறிந்து விரைந்தோடிவந்து, (குமாரக் கடவுளைப்பார்த்துப்) "பிரணவ சொரூபியே! அறுமுகச் சிவனே!" என்று தோத்திரித்தபோது, பெருமான், "எல்லோரும் உயிர்பெற்றெழுந்து வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினன். உடனே அவர்களும் (எழுந்து) அவனது திருவடிச்சன்னிதியில் வீழ்ந்து பணிந்தனர். அப்படிப்பட்ட திருவடியையுடையோன் கந்தகிரிப் பெருமான் என்று உணர்வீர்களாக. (கூ)

மெலிதலில்லாத உயர்ந்த நேயம்படைத்த பெரியோர்களே! "சிவகுமாரனும், பெரிய சூரபன்மனைச் சங்கரித்த முதல்வனும், அழகார்ந்த மயிலை வாகனமாயுடையவனுமாகிய அக்குமாரபிரான்பாற் செலுத்தும் அன்பினுற் கிடைத்த திருவருள் வலிமையால் அவனுக்கு வேருயுள்ள எவரையும் எப்பொருளையும் யான் வணங்கமாட்டேன் என்னும் உறுதிகொண்டுள்ளேன்." இந்நிலையில் வேட்கை கொண்டொழுகுதலே உலக நசையை வெற்றிகொண்டு, திருப்புகழ்க் கவிகள் பல சொன்னவராகிய அருணகிரிநாத முனீந்திரர் உபதேசித்தருளிய நெறியுமாம். இவ்வுலகின் இதனினுஞ் சிறந்தநெறி ஒன்றும் இல்லையே. (க0)

மேருகிரித்திருவிளையாடன்முற்றிற்று.

---

## ஐந்தாவது

# திருக்கந்தகிரியிற் சிருட்டிகாரியத்திருவிளையாடல்.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறப்புடை அடியெதுகை.

நாவ்விடத்தே மனங்கிடக்கக் குகைகிடக்கும் விதிதொழிலை நானமின்றி
எவ்விடத்தே முருகனெவ்வா றிருந்துசெய்தான் சொலல்வேண்டு மெனினல் லீர்மெய்
கவ்விடத்தே சிகனருளிற் கழறுவலக் கந்தகிரிக் கண்ணோர் வட்டம்
ஒவ்விடத்தே துவர்மணியம் பானுவென வுருவிளங்க வுறைந்தா னன்னேன். (க)

அந்தவுரு விடையபய மக்கவடம் வலக்கரங்க ளாரு மஃகாச்
சந்தமுறு கமண்டலமும் வரதமுமே யிடக்கரங்கள் சாரு மோரார்
இந்தவுரு வினுக்குமுக மிலங்குசத்தி யோசாத மெனுமொன் றேயாம்
எந்தவுரு வோன்வரமு மேற்காது படைப்பிவ்வுரு விருந்து செய்தான். (உ)

இப்பெரிய தொழிலாலே குகனயனை யொறுத்தலிற்றோ மிலையென் றோர்மின்
செப்பரிய மறைமுனிவர் திகழுமணி வண்ணனிவர் சேவூர் வோன்முன்
நப்பிரிய முடனெய்தித் தொழுதுபிர மன்சிறையி னலிகின் றானின்
றெப்பெரிய பிழையிருப்பி னும்பொறுத்தே விடுத்தருள்க வென்றார் மாதோ.

எண்கடந்த சுப்பிரம ணியனுஞ்ச தாசிவனு மெனவே கூறும்
பண்கடந்த வேதமிதை யறியாது பழுதுரைத்த பரிசி னானை
மண்கடந்த வாழ்க்கையுளீர் விடுவிக்க மார்க்கமுண்டோ வழங்கு கென்ற
விண்கடந்த பரன்முனவர் சிறைநெடுநா ளாயதினன் விடுவி யென்றார். (௪)

அம்முடிபிற் கியைந்தசிவ னந்திதனை யழைத்துமக னருகு நீபோந்
திம்முடிபைப் புகறியென லுங்கதழ்வன் னோன்முருக னிணைத்தாள் கண்டு
செம்முடிவிற் பரனுரையைக் கூறியயன் சிறைதவிர்த்தி தேவே யென்னக்
கம்முடிபிற் படுத்துவலிங் குனையுமென மழவனந்தி கலங்கி மீண்டான். (௫)

கலங்கிவரு நந்திசிவன் கழல்பணிந்து முருகனுரை கடின மென்னத்
துலங்கிவரு மிளம்பிறைதண் கங்கையணிந் தவன்சேய்முற் றோன்றி மைந்தா
விலங்கிவரு மடியயனை விடுதியென வறங்குலவும் விளையாட் டேய
இலங்கிவரு ளிளங்குழகன் சிலதரைக்கொ டயன்றளையை யிரித்து விட்டான்.

அருள்பழுத்த விவர்முனயன் போந்தடிமைத் திறத்திறைஞ்சி யறிவு மாழ்கி
மருள்பழுத்த வெனக்கருண்மி னென்றலுநின் றொழில்புரிந்து வாழியென்றான்
தெருள்பழுத்த தவர்முதல்வ னாமுருக னயனுவந்து சேர்ந்தான் றன்னில்
இருள்பழுத்த வுளங்காணாச் சிவனுமிருங் கயிலைபுகுந் திட்டா னாலோ. (௭)

சீர்படைத்த பொதிகைவளர் தவமுடைமை பொறையுடைமை சிறந்துள்ளோனீள்
பார்படைத்த குகன்சிவற்குங் குருவானா னெனுமாண்பு படர்ந்து சேய்முன்
நார்படைத்த வெழிலொடுநின் றெனக்குமருள் செய்தாடண் ணயனத் தாயென்
றேர்படைத்த கரங்கூப்பி வீழ்ந்துபணிந் திடலுமவ்வா றிழைத்தான் சேயோன்.()

ஓங்கார வுபதேச வழியகண்ட பதிஞான வுறுதி பெற்றோன்
றாங்கார முருகனது படைப்பினந்தக் கந்தகிரி சாற்றொண் ணாதை
ஓங்கார வொளிமயமா யோங்கழகுந் திருமாட வொழுங்கும் வாசந்
தேங்கார முதற்றாவ ரங்கணதி வளவழகுஞ் செறியக் கண்டே. (௯)

இச்சுவர்க்க வாயில்வதி யெழில்வீர பாகுமுத லெவரு மேலோர்
மெச்சுவர்க்க ரெனநினைந்து முருகன்விடை கொடுபொதிய விலங்கல் போந்தான்
எச்சுவர்க்க ரும்புகழ வெம்பெருமான் றிருவடிக்கே யீடா ரன்பால்
நச்சுவர்க்க வுளங்கொளுவாச் சந்தமுனி போனீரு நடந்துய் வீரே. (௧௦)

## ஐந்தாவது

# திருக்கந்தகிரியிற் சிருட்டிகாரியத்திருவிளையாடல்.

(திருக்கைலாயத் திருவிளையாடலிற் குறிப்பிட்டபடி) மனம் துன்பத்திலும், உடல் சிறையிடமான மலைக்குகைக்கண்ணும் கிடக்கப்பெற்ற பிரமதேவனது படைப்புத் தொழிலை முருகப்பெருமான் எவ்விடத்திருந்து கொண்டு எவ்வண்ணங் குறைவின்றிச் செய்தருளினான்? விளக்கவேண்டும் என்பீராகில், அன்பர்களே! சுவாமிநாதனருளால் உண்மையே பொருந்த உரைக்கக்கடவேன் (கேட்பீராக). மேற்சொன்ன கந்தகிரியிற் பீடம்பொருந்துமோரிடத்தில் மாணிக்க நிறத்து அழகிய சூரியனை நிகர்த்த தன் திருமேனி விளங்க அம்முருகன் வீற்றிருந்தான். (௧)

அத் திருவுருவத்தின் வலக் கரங்களில் அபயமும் உருத்திராக்க மாலையும் பொருந்தி நிற்கும். இடக்கரங்களில் வரதமுங் குன்றாவெழிலுடைக் கமண்டலமுந் தங்கிநிற்கும். அழகுவாய்ந்த இத்திருக்கோலத்திற்குத் திருமுகம், விளக்கமுடைச் சத்தியோஜாதமென்னு மொன்றேயாகும். கந்தக்கடவுள் எந்தத் தேவனது வரமும் பெறாமலே தன்னாற்றலினாற் படைப்புத் தொழிலை இவ்வுருவத்திருந்து கொண்டு செய்தருளினான். (௨)

குகக்கடவுள் இந்தப் பெரிய படைப்புத் தொழிலைத் தானாகவே செய்ததனால் அவன் பிரமனைத் தண்டித்த காரியத்தில் யாதொரு குற்றமு மேற்படவில்லையென்று உணர்வீர்களாக. ஓதுதற்கரிய வேதம்வல்ல முனிவர், விளக்கமுடைத் திருமால் ஆகிய இவர்கள், விடையேறும் பெருமான் முன்பாக மிக்க அன்போடு சென்று தொழுது, "பிரமன் சிறைப்பட்டு மெலிந்து கொண்டிருக்கின்றான்; அவன்மீது எவ்வளவு பெரிய குற்றமிருந்தாலும் இப்பொழுது பொறுத்து அவனைச் சிறையிலிருந்து விடுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். (௩)

மண்ணுலகத்திற்கு மேம்பட்ட வாழ்க்கையினுள்ளீர்! "அளவிற்கடங்காத சுப்பிரமணியன் ஓம்" "சதாசிவன் ஓம்" என்று சுரம் மிகுந்த வேதங்கோஷிக்கும். இதையுணராது தவறுதல் பேசிய பிரமனைச் சிறைதவிர்க்க வழியுண்டோ? கூறுங்கள் என்று வினவிய விண்ணுக்கு மப்பாலாம் விமலனுக்கு முன்னே அவர்கள், "பிரமனைச் சிறையிட்டு நீண்டகாலமாய்விட்டது; ஆதலால் இனி, விடுவித்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். (௪)

அந்த முடிபிற் கொப்பிய சிவபெருமான் நந்திதேவரை யழைத்து, "நீ நங் குமாரனிடத்திற் சென்று இம்முடிபைத் தெரிவி" என்று பணித்தவுடன், பராக்கிரமசாலியாகிய அவரும் முருகவேளின் தாளிணைகளைக் கண்டு (= வணங்கி) நன்மையான தீர்மானத்தைக்கொண்ட அச் சிவாஞ்ஞையை விண்ணப்பித்து, "பெருமானே! பிரமன் சிறையைத் தவிர்த்தருள்க" என்று கூற; அது செவிக்கொண்ட பிரான், (சிறைவாசம்

போதாதெனுங் கருத்தாலே) "உன்னையும் பிரமனுக்கிட்ட தீர்ப்பினுட்படுத்துவேன் இங்கே" என்று கூறவே, நந்திதேவர் உள்ளங்கலங்கித் திரும்பிவிட்டார். [கம் = பிரமன்.] (ரு)

இவ்வாறு கலக்கமடைந்து மீண்ட நந்திதேவர், சிவபெருமான் திருவடிகளைப் பணிந்து முருகவேளுரைத்த மாற்றம் கடினமானதாமென்று விண்ணப்பிக்கவே; விளக்கத்தோடு காணப்படும் இளஞ்சந்திரனையுங் குளிர்ந்த கங்கையையுஞ் சடையிற்றரித்த அப்பெருமான், குமாரக்கடவுள் முன்னெழுந்தருளி, "மைந்தா! விலங்கிடப்பட்ட கால்களையுடைய பிரமனைச் சிறையினின்றும் விடுவி" என்று கூற; நீதிக்கடுத்த திருவிளையாடல்களை மேற்கொண்ட இவ்விருமூர்த்திகளுள் முருகவேளும் ஏவலாளரைக் கொண்டு வேதாவின் விலங்கை நீக்கி விடுவித்தருளினன். (சா)

பேரருளாளர்களாகிய இவர் திருமுன்பு பிரமன்வந்து அடிமைத்திறம் பேணி வணங்கி, அறிவிழந்து அறியாமை வயப்பட்ட சிறியேனுக்கு அனுக்கிரகஞ்செய்தருளல் வேண்டுமென்று குறையிரந்தவுடன் தெளிந்த வுள்ளத்துத் தவசிகள் வணங்கு முதல்வனும் முருகன், "நீ உனது தொழிலைச்செய்து வாழக்கடவாய்" என்று கூறியருளினன். (அதுகேட்ட) பிரமனும் களிப்புற்றுத் தனதிருக்கை சேர்ந்தான். அஞ்ஞான மிகுந்த அகத்தினர் காணு அமல சிவபெருமானும் பெரிய கயிலைக் கெழுந்தருளினன். (எ)

மேன்மைவாய்ந்த பொதிகை மலையில் வீற்றிருக்குந் தவமுடைமையும் பொறையுடைமையுஞ் சிறந்துள்ள அகத்தியமுனிவர், அகன்ற இவ்வுலக சிருட்டியினைச் செய்த குகேசன் சிவபெருமானுக்குங் குருவாயினனென்னும் பெருமையை யுணர்ந்து அக்கடவுள் முன் அன்போடுகூடிய அழகுடன் நின்று "குளிர்ந்த அருட்கண்ணுடையாய்! அடியேனுக்கு மருள்செய்து காத்தருள்வாயாக" என்று அழகிய தமது கைகளை அஞ்சலித்துச் சாஷ்டாங்க வணக்கஞ் செய்தவுடன், அக்குருசுவாமியும் அவ்வாறே செய்தருளினன். (அ)

பிரணவோபதேசவாயிலாக அகண்ட சிவஞானமான திட்பத்தைப்பெற்ற அகத்தியனர், (கடப்ப) மலர்மாலை தரித்த முருகப்பெருமானது படைப்புத் தொழிலால் அக்கந்தகிரியானது எடுத்துரைக்கவொண்ணுப் பிரணவ சோதிமயமாய் உயரிய அழகும், அதன்கட்பொலியுந் திருமாளிகைகளின் நிரைகளும், வாசனைவிஞ்சுஞ் சந்தனமர முதலிய தாவரங்கள் யாறுகள் முதலியவற்றின் வளப்பத்தாலாகிய அழகும் ஒருங்கு பொருந்தியிருக்கத் தரிசித்து,— (கூ)

இந்தக் கந்தகிரியாகிய மகாசுவர்க்கத்தின் வாயிலிற்றங்கியுள்ள அழகிய வீரபாகுதேவர் முதலிய யாவரும், அறிஞராற் போற்றப்படுஞ் சிறப்புடைக் கூட்டத்தினராமென எண்ணி முருகப்பெருமான்பால் விடைபெற்றுக்கொண்டு, பொதிகை மலைக்குத் திரும்பினர். எல்லாச் சுவர்க்கத்திலிருப்போரும் எத்தும்படி எம்பெருமானுடைய திருவடிக்கே தலையன்பு காரணமாக, நஞ்சினினம்போன்ற உள்ளம்பற்றுத அருணகிரிநாதனர்போல நீவிரு நடந்து உய்வீர்களாக. (கo)

திருக்கந்தகிரியிற்

சிருட்டிகாரியத் திருவிளையாடன் முற்றிற்று.

## ஆறாவது

# இமயமலைச்சாரற்றிருவிளையாடல்.

---

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**மா**வுல களந்த மாலாம் வாமனன் விழிக ணின்றே
தேவுல கனைத்துஞ் சீர்த்தி சிறக்கவே யமுத வல்லி
தூவலை யாதி லங்குஞ் சுந்தர வல்லி யென்னும்
பூவலை யாத பெண்கள் புதுமையாய்த் தோன்றி னாரால். (௧)

**தோ**ன்றிய விருவ ருஞ்சீர்ச் சுடரெழின் மிக்கே வைகு
ஞான்றியம் பிடற்கொ ணாத ஞானமு மெழிலு மேனும்
ஊன்றிய வுருவி னோடே யுவகைய னாகுஞ் செவ்வேள்
தான்றிரு வோடு நம்மைச் சாருநா யகனென் றோர்ந்தார். (௨)

ஓர்ந்தகா ணமது தோற்று வாயுமவ் வொருவன் றோன்றற்
கார்ந்தவா யதுவுங் கண்ணே யாமத னாற்பொ ருத்தஞ்
சேர்ந்தவா றதுவு மீண்டுத் தீர்வைசெய் நமது நோக்கும்
நேர்ந்தநே ரமுநன் கென்னா நெடிதுள மகிழ்ந்தார் மன்னோ. (௩)

**பி**ன்னரவ் வேளை நாடிப் பெருந்தவம் புரிவா மென்று
வன்னக வேங்கை சீய மதகரி செருச்செய் சூழல்
துன்னிய பாத பங்கள் சூழவே வயங்கி நாளும்
மன்னிய விமய மென்னு மலைபர சதனைக் கண்டார். (௪)

**அ**ம்பையைப் பயந்த வந்த வான்றலங் கிரியின் சாரற்
செம்புடை நின்றோர் முஞ்சப் புற்புரி யரைக்கட் சேர்த்தி
அம்புரி யதனை யேய வணியுழைத் தோலு டீஇத்
தம்புரி வுடன்ம ரத்தோ றன்னைமேற் றாசாக் கொண்டார். (௫)

**பூ**சினார் வடிவ மெங்கும் புனிதவெண் ணீற்றை யள்ளிப்
பேசினார் குமர னாமம் பெரிதுமா வுருத்தி ராக்கந்
தேசினால் விளங்கு மேனி சேர்திரு வணியாக் கொண்டார்
ஆசினா ரறியா மாண்பா ராறெழுத் துருநோற் றாரால். (௬)

**இ**ன்னவா றிருவோ ருஞ்செய் யிருந்தவஞ் சில்வாண் டாக
மின்னுமா றுணர்ந்து தேவர் விரதரு மிறும்பூ துற்றார்

அன்னகா னுறைமான் வேங்கை யரவுவெங் கீரி மற்றும்
பன்னுமா வெல்லாங் கேண்மை யாயவப் படிவ மாண்பால். (எ)

இப்பெருந் தவத்தை யோர்ந்த வெம்பிரான் செவ்வேள் காதிற்
செப்பருங் குழைம ருங்கிற் சிரசிற்பொன் னுடை மோலி
ஒப்பறும் புயத்தே மப்பூ ணுரத்திடை மதாணி தாளில்
துப்புறுஞ் சிலம்பு கையிற் கடகமுஞ் சுடர வந்தான். (அ)

வந்தவன் பெண்கா ணுங்கண் மணவிருப் பிணைச்சின் னுண்மேல்
நந்தவி லாத பூர்த்தி புரிகுவ லமுத நங்காய்
இந்திரன் மகளாய் நின்னீ யெழிவிள நங்காய் நீதான்
சுந்தர வவனி போந்து சிவமுனி சுதையா கென்றான். (கூ)

அன்னண மயர்து மென்றே யவர்பகர்ந் திறைஞ்ச லேற்றுத்
தன்னிக ரில்லான் சென்றான் சாற்றிய வவன்சொல் லோர்வார்
மின்னியன் மாதர் வேட்கை வெல்பர னவனென் றுரோ
அன்னனே வகுப்புச் சொற்று னகத்தமர் தேவு மாதோ. (கo)

---

ஆறாவது

## * இமயமலைச்சாரற்றிருவிளையாடல்.

திரிவிக்கிரமனு யெழுந்து பெரிய வுலகங்களை ஈரடியாலளந்த வாமனமூர்த்தியின் கண்களிலிருந்து, விண்ணவருலகமெல்லாம் பெருமையடையும்படியாகப் பரிசுத்தம் பிரகாசிக்கின்ற அமுதவல்லி சுந்தரவல்லி யென்னும் இரண்டு பெண்மணிகள், தெய்வத்திரு மங்குதலில்லா வியப்பைப் பயக்குமாறு அவதரித்தார்கள். (க)

இவ்வாறவதரித்த அவ்விரு மகளிரும் சிறந்து ஒளிர் அழகின் மேம்பட்டு விளங்கும் பருவத்திலே, சொல்லுதற்கரிய ஞானமும் அழகும் ஆற்றலுந் தன்பால் நிலைத்திருக்கப்பெற்ற திருவுருவினேடு நித்தியானந்தனுப் விளங்குங் குமாரக் கடவுள்தான், மங்கலமாக நம்மை மணக்கத்தக்க நாயகனுவன் என்றுணர்ந்தனர். (உ)

அவ்வாறுணர்ந்தபோது அவர்கள், "நமக்கும் அத்தனிமுதல்வனுக்கும் அவதாரத்தலமாயிருந்தது கண்ணேயாதலால், நமக்கும் அப்பெருமானுக்கும் இயைந்துள்ள பொருத்தமும், இப்போது நாம் செய்துகொண்ட தீர்மானத்தின் நோக்கமும், இதைச் செய்வதற்கு வாய்ந்த இப்பொழுதுமாகிய யாவும் நல்லனவே" என்று உள்ளம்பூரித்தார்கள். (ங)

பின்பு அவர்கள், "அச்செவ்வேட்பரமனைக் குறித்துப் பெருந்தவஞ் செய்வோம்" என்று, வலிய நகத்தையுடைய புலிகளும், சிங்கங்களும், மதர்த்த யானைகளுஞ் சண்டை

---

* இச்சாரல், சரவணப்பொய்கையினை அடுத்துளதா யெண்ணப்படுகிறது.

செய்யும்படியான இடங்க ணெருங்கிய சோலைகள் சுற்றிலும் வயங்க எக்காலத்தும் பொலிவுடன் நிலைபெற்றிருக்கும் மலைகளுக்கரசாகிய இமயமலையினைக்கண் டடைந்தார்கள். (௪)

உமாதேவியைத் தோற்றுவித்த அந்த மாட்சிமை பொருந்திய இமயமலையின் அழகிய சாரலிற் செவ்விதான ஒரு பக்கத்தினின்று, வனப்புவாய்ந்த முஞ்சம்புல்லாற் செய்யப்பட்ட புரியைத்தமது இடுப்பிற்கட்டி அழகிய அதன்கட் பொருந்துமாறு சீர்த்த மான்றோலைக் கீழாடையாக வுடுத்து, விருப்பத்தோடு மரவுரியைத் தமக்கு மேலாடையாகக் கொண்டனர். (௫)

பரிசுத்தமாகிய திருநீற்றை யள்ளித் தமது மேனிமுழுதும் உத்தூளனஞ் செய்தனர். குமாரக்கடவுளின் திருநாமப்பெருமையைப் பெரிதும் பாராட்டித் துதித்தார்கள். காந்தியோடு விளங்குந் தமது திருமேனியிற் பெருமை பொருந்திய உருத்திராக்கத்தைத் திருவாபரணமாகக் கொண்டார்கள். இவ்வாறு, குற்றமுடையோராலறியப்படாத பெருமையுடைய முருகப்பிரானது திரு ஆறெழுத்துக்களையும் உருவாகச் செபித்தார்கள். (௬)

இந்த விதமாக அவ்விருவருஞ் செய்த அப்பெரிய தவம், சில வருடங்களாகப் பொலிவுறுதலைக்கண்டு, தேவர்களுந் தவசிகளும் அதிசயித்தார்கள். அத்தபோவனத்தில் வாழ்கின்ற மானும், வேங்கையும், பாம்பும், கொடிய கீரியும், மற்றும் பிறவிப்பகையுள்ளனவென்று குறிக்கத்தக்க எல்லாப்பிராணிகளும், அத்தவத்தின் பெருமையால், ஒன்றற்கொன்று நட்புடையனவாயின. (௭)

இப்பெருந்தவத்தைத் திருவுளத்தடைத்த எங்கடவுளாகிய செவ்வேட்பரமன், காதுகளில் வருணித்தற்கரிய மகரகுண்டலங்களும், இடுப்பிற் பீதாம்பரமும், சிரசிற் கிரீடமும், சமானமற்ற புயங்களிலே பொன்வாகுவலயங்களும், மார்பில் மதாணிப்பதக்கமும், தாள்களிலேஅழகிய சிலம்புகளும், கைகளிற் கடகங்களும் ஒளி வீசாநிற்க அவர்கள் முன்னே எழுந்தருளி வந்தனன். (அ)

இவ்வாறு எழுந்தருளிவந்த இறைவன், "பெண்காள்! உங்களது மணவிருப்பத்தைச் சிறிதுகாலஞ் சென்றபின் குறைவின்றி நிறைவேற்றுவேன்; அமுதவல்லியே! நீ தேவேந்திரன் மகளாய்த் தோன்றிநில்; இளையசுந்தரவல்லியே! நீ பொற்புடைப்பூவுலகிற்சென்று சிவமுனிவர்க்கு மகளாய் அவதரி" என்று திருவாய்மலர்ந்தருளினன். (௯)

"அவ்வாறே செய்கின்றோம்" என்று அவ்விருவருஞ் சொல்லிச் செய்த வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, தனிப்பெருங்கடவுளாங்கந்தன் மறைந்தருளினன். அவன், அத்தெய்வ மகளிர்கட்குச் சொல்லியருளியதை உய்த்துணர்வோர், மின்போலும் ஒளியையுடைய மாதர்மேல் வைக்கும் ஆசையை இயல்பாகவே வென்றுள்ள பரம்பொருள் அவன் என்று கூறுவரன்றோ? 'புயவகுப்பு' முதலிய பல வகுப்புக்களுமுள்ள திருவகுப்பென்னு நூலைப்பாடியருளிய அருணகிரிநாதனுருடைய உள்ளத்தில் வீற்றிருக்குமொரு தெய்வமும் அப்பெருஞ் சிறப்புடையோனே. (௧0)

இமயமலைச்சாரற்றிருவிளையாடன் முற்றிற்று.

ஏழாவது

# திருக்கைலாயத்திற் படைபெறுதிருவிளையாடல்.

(முதற்பத்து)

கலிநிலைத்துறை.

அடியொன்றற்குப்பதினெட்டக்கரம்.

இரண்டுசீர் வண்ணம்.

**வா**னிலவு கந்தகிரி நின்றுகயி லைத்தளியுள் வந்து
கூனிலவ ணிந்தசிவ னம்பிகைந டுக்கணெழில் கொண்டு
தேனிலவு மிந்துளம ணிந்தவன மர்ந்தவொரு செவ்வி
நீனிலவு விண்டுபிர மன்புலவ னண்டரெதிர் நின்றார். (க)

**அ**ஞ்சுமுக னாறுமுக தானவர மர்க்குனைய மைப்பான்
மஞ்சுடையி னோரிஙன மெய்தினர்க ளவ்வணம்வ னைந்தாள்
விஞ்சுனது வேலிதுபி டித்தியென வப்படைவி ழைந்தே
செஞ்சுதன தோர்கரம மர்ந்துவிறல் கொண்டதுதி கழ்ந்தே. (உ)

**வே**றுபதி னோரலகெ டுத்தசிவன் முன்புவடி வேலன்
வீறுமவை யேறுகரம் வைத்தனனு ருத்திரருள் வேகம்
ஏறுபதி னோருருவ ராமவைவ யப்புயனொ டெண்மர்
நீறுதிமிர் தேநியுத ருக்குமட லேதிகைநி றைத்தான். (ங)

**சே**யவனி லீலையிலி ருக்கவுள நீயிரதி திண்மை
மேயகண மோடுநடை கொண்டசுரர் வென்றுவரு வீரென்
றுயகலை நாதனுரை செய்துமுரு கோனுரம ணைத்தோர்
ஏயுமைகை யீயவவள் வாகைநனி சூடிவரு கென்றாள். (ச)

**அ**ந்தவுரை கண்டவுட னெந்தையவர் சன்னிதிய கன்றான்
வந்தசுரர் சம்புவைவ ணங்கிவெளி வந்தபினர் மைந்தன்
உந்திரத கந்துகவி லக்குமுந டத்துகென வொல்காக்
கந்தவக னென்பவனை வைத்தனனெள் வேலெதுயில் கண்ணன். (ரு)

**அ**ப்பெரிய தேரின்முரு கையனமர் போதமர ரானோர்
செப்பரிய வோகையரி மூழ்குபுக ரக்குமுறல் செய்தார்

---

ங. அலகு = ஆயுதம்; லகரவேதுகை காண்க.

துப்பிலகு வாசிகள்க ணைத்தனக ணைத்தவகை சொல்லின்
இப்புலவர் வாழ்வரவு ணர்க்கழிவெ னும்பொருளை யேயும். (௬)

பன்மைமறை யென்கவிவை யென்றனர்தொ டர்ந்துவரு பல்லோர்
நன்மையுறு மென்றுபலர் துள்ளினரு வந்தனர்க ணல்லோர்
வன்மைகொ டுசெங்களைய சைத்துநட மிட்டனர்பல் வல்லோர்
தொன்மைமழு கண்டகம்வி திர்த்துவிளை யாடினர்பஃ றெல்லோர். (௭)

விம்பமுக பூதர்பல ராடினர்நெ டுஞ்சடைவி ரித்துப்
பம்புவடி வோர்நபமெ றிந்துபடை பற்றினர்கள் பானு
கம்பனெழில் வால்வளைமு ழக்கினன்வி ளைந்தவிவை கண்டு
செம்பரம வேலமல தேவினிய புன்முறுவல் செய்தான். (௮)

போரெனல்செ விப்படலும் விம்முபுய பாரிடர்பொ றுத்த
கூரடல்வி ழுப்படைக ளோடவிர்க ணத்தரிவர் கூளி
நேரிநில ருத்தமயி லாணைநனி சூழ்வரவு நின்ற
பாரிடர்மு னர்ச்செலவு மாடினன ருதவுர பாகு. (௯)

அன்னணந டக்கையின டந்தயி லாணிரத மஞ்ஞான்
றின்னலறு முப்புனனி கர்த்ததெறு ழப்படையி யக்கம்
அன்னநர லைத்தொனிநி கர்த்தமுர சாதிகள ரற்றல்
இன்னுநுவ லற்குரிய கூறுவல்பி ணைசைமுனி யின்பீர். (௰)

---

ஏழாவது

# திருக்கைலாயத்திற்
# படைபெறுதிருவிளையாடல்.

---

(முதற்பத்து)

தேனுறையுங் கடப்பம் பூமாலையணிந்த செவ்வேள், எல்லாவுலகங்கட்கு மேலே விளங்காநின்ற கந்தகிரியினின்று திருக்கைலாயத்துக் கோயிலுட் போந்து பிறையணிந்த சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் நடுவே அழகோடமர்ந்திருந்த ஒரு சமயத்தில் நீலமேனி பிரகாசிக்கின்ற விண்டுவும், பிரமனும், இந்திரனும், ஏனைத் தேவர்களும் எதிர்வந்து நின்றார்கள். (௧)

(அப்போது) ஐம்முகச் சிவன் (அறுமுகச் சிவத்தை நோக்கி) "சண்முக! அசுரரோடு செய்யவேண்டிய போருக்கு நின்னையழைக்கும் பொருட்டு வலிமைவாய்ந்த

---

௯. அருத்தம் = பாதி.
ஆடல் = செய்தல்; **பிங்கலநிகண்டு.**

இத்தேவர்கள் இங்கு வந்துள்ளார்கள். அவ்வண்ணமே செய்து அவர்களை ஆண்டு கொள்வாயாக. பெருஞ்சிறப்புடைய நின் வேலிது. இதனை ஏற்றுக்கொள்'' என்று கூற; அவ்வாயுதம் விருப்பத்தோடு செவ்வேட்பரமனது தக்க திருக்கரமொன்றனைச் சார்ந்து மிக்க வலிகொண்டு விளங்குவதாயிற்று. (௨)

வேறு பதினோராயுதங்களை யெடுத்த சிவபெருமானது திருமுன்பு வடிவேலைத் தாங்கிய கடவுள், வீறுகொண்டுள்ள அப்பதினொன்றனையுந் தன் கரங்களிற்றாங்கினன். அவைகள் உருத்திரர்கட்குள் உருவலிமிக்க ஏகாதசருத்திரராம். பின்பு நீறணி கடவுளாஞ் சிவபெருமான் வலிய புயமுடைய வீரபாகுதேவர் முதலிய நவவீரர்கட்கும் இலக்ஷம் வீரர்கட்கும் பொரவல்ல ஆயுதங்களைக் கைகள் நிரம்ப வழங்கினன். (௩)

"செவ்வேளின் திருவிளையாடலி லிருக்கவுள்ள நீங்கள் பெருவலிபடைத்த பூத கணங்களோடு சென்று அசுரர்களை வென்று வருவீர்களாக'' என்று கலைகளுக்கு நாதனாகிய சிவபெருமான் வாழ்த்தி, செவ்வேளைத் தனது மார்புறத்தழுவி, அழகார்ந்த உமாபிராட்டி கையிற்கொடுக்க; பிராட்டியும் "நீ வாகைமாலை சிறப்புறச் சூடித் திரும்பி வருவாயாக'' என்று ஆசிமொழி கூறினள். (௪)

அவ்வாசி மொழிகளைக் கேட்டவுடன் செவ்வேட் பரமனாகிய எம்பிதா, அவர் சன்னிதியினின்றும் புறம்போந்தனன். அங்கு வந்து நின்ற தேவர்களும் சம்புவை வணங்கி வெளிவந்த பின்பு, ஒள்ளிய பாற்கடலிற் பள்ளிகொள்ளும் விண்டுவானவர், "முருகக்கடவுள் ஆரோகணிக்குந் தேரிற் பூட்டியுள்ள இலக்ஷங் குதிரைகளையும் நீ செலுத்துவாயாக'' என்று வலிகுன்றாத வாயுதேவன் என்பானை நியமித்தனர். (௫)

அப்பெரிய மணிரதத்தில் முருகப்பெருமான் அமர்ந்தபோது தேவர்களெல்லாஞ் சொல்லற்கரிய உவகைக் கடலுண் மூழ்கிக் கரங்கொட்டி யார்ப்பரித்தார்கள். தூய்மை மிக்க குதிரைகள் கனைத்தன. அக்கனைப்பின் பொருளைக் கூறுமிடத்து இத்தேவர்கள் வெற்றிபெற்று வாழ்வர், அவுணர்களழிவர் என்பதேயாம். (௬)

அக்குதிரைகளைத் தொடர்ந்து வந்த பலர், "அக்கனைப்பினைப் பலவாயுள்ள வேதவொலியே'' என்றனர். பலர், (இக்கனைப்பு நற்சகுனமாகலின்) நமக்கு மங்களமுண்டாமென்று துள்ளினார்கள். நல்லோர் யாவரும் மகிழ்ச்சி யெய்தினர். பலவீரர்கள், பலம் பொருந்திய கொடிகளை யசைத்துக் கூத்தாடினார்கள். வேறு பல பழைய வீரர்கள், காலங்கண்ட கோடரியையும் வாளையும் அசைத்துக்கொண்டு விளையாடினார்கள். (௭)

ஒளி முகத்தையுடைய பூதர்கள் பலர், தம்முடைய நீண்ட சடைகளை விரித்தாடினர். பரந்த வடிவினர் பலர், தம்முடைய ஆயுதங்களை விண்ணிலெறிந்து மீளப்பிடித்தனர். பானுகம்பன், தன் அழகிய ஆயிரஞ் சங்கங்களையும் முழக்கினன். இவ்வாறு நிகழ்ந்தனவெல்லாம் பரம்பொருளாம் வேலாயுதப் பெருமான் கண்ணுற்று இனிய புன்சிரிப்புக் கொண்டனன். (௮)

போரென்னுஞ் சொல்லைக்கேட்ட வளவிற் புயம் விம்மிய பூதவீரர்களும், கூரியவும் வலியவுமான சிறந்த ஆயுதங்களோடு விளங்கிய சேனைத்திரள்களுமாகிய இவர்கள் கூட்டத்திற் பாதியாகிய ஆயிரவெள்ளமும் வேலாயுதக் கடவுளை நெருங்கிச் சூழ்ந்து

வாவும், எஞ்சிநின்ற பூதர்களாகிய ஆயிரவெள்ளமு முன்னே செல்லவுந் தலைவராக வேற்பட்டுள்ள வீரபாகுதேவர் செய்தனர். (கூ)

அவ்வாறு நிகழ்கையில் முருகவேளினது இரதமும் முன்னேறிச் சென்றது. வலிமிக்க அச்சேனை தன்னியக்கத்திற் குறைவற்ற கடலுக் கொப்பாயிருந்தது. பேரிகையாதி வாத்தியங்களினேசை அக்கடலினேசையை நிகர்த்தது. அருணகிரி நாதனுர் நெறிச்சென்று இன்பங்காணு நல்லீர்! மேலுஞ் சொல்ல வேண்டியவற்றை இனிச் சொல்லுவேனுக. (௰)

திருக்கைலாயத்திற் படைபெறுதிருவிளையாடன்

முதற்பத்து முற்றிற்று.

---

# திருக்கைலாயத்திற் படைபெறுதிருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து)

கலிவிருத்தம்.

அடியோன்றற்குப் பத்தக்கரம்.

பத்தொ டொன்றெனப் பன்னி ரும்படை
எத்தி றத்தன வென்னிற் றோமரங்
குத்து மீட்டிவில் கோல்வல் வச்சிரஞ்
சுத்த தாமரை தோகை கண்டைவாள். (க)

அங்கு சம்பர சாகு மம்பிகை
அங்கு லாமர வத்திண் மாமணி
துங்க வொன்பது துள்ளி வீழ்ந்தன
துங்க மாரவண் மேனி தோன்றவே. (உ)

தோன்று சாயையம் மாம ணிச்சுடர்
ஆன்ற வொன்பது பெண்க ளாயின
தேன்ற ருங்கரைத் தெய்வ சிந்தைபோன்
மேன்றி ருக்கரு மேயி னுரவர். (ங)

---

க, உ.—இவற்றுள் வரூஉம் ஆயுதம் பதினென்றும் வடமொழிக்காந்தத்துள்ளபடி கூறப்பட்டன. இவை விகற்புறச் சிலர் கூறியனவெல்லாம் இங்ஙனம் அங்கீகரிக்கப் படுவனவல்ல. பிறவுமன்ன.

உ. அரவம் = சிலம்பு.

தொன்மை யாரணன் ருேன்றி யாங்கவர்
நன்மை நாபியம் போதி லொன்பது
வன்மை யாருதித் தாரவ் வல்லிகள்
என்மெய் வேர்விலி லக்கர் தோன்றினர். (௪)

வீர பாகுசெம் மேனி யாண்மகன்
வீர கேசரி யார மின்மகன்
வீர ராக்கதன் வெள்வை ரத்திசேய்
வீர தீரனன் னீல மின்மகன். (௫)

கோமே தக்கொடி சேய்ம கேசுரன்
பூமே வுந்திருப் புட்ப ராகிசேய்
தூமே வுந்திண்ம கேந்தி ரன்றுவர்
ஆமே னிக்கொடி சேய்வி ராந்தகன். (௬)

தேசொல் காதவை டூரி யத்திசேய்
பூசல் வீரபு ரந்த ரன்கவின்
வீசல் கூரொரு சாம மேனியாள்
மாசில் சந்ததி வீர மாலியே. (௭)

தீர மேயவித் தேவ ரேநவ
வீர ரென்னவி ளங்கி ஞரிவர்
தார வேள்பிர சன்ன மாயபின்
நார லங்கிட நன்கு தித்தவர். (௮)

ஆத லாலிவ ராறு மாமுகன்
பூத மெய்த்துணே பூக்க நிற்குநன்
னீதி யாலவ னீள்ப தாதியோ
டேதி தாங்கிமுன் னேகி ஞரரோ. (௯)

அவ்வி லக்கரு மவ்வல் வீரரைச்
செவ்வி திற்றொடர் திண்மை யுற்றனர்
நொவ்வி லான்புகழ் சொன்ன நுண்ணியன்
உவ்வு லாமிறை யுள்கு மன்புளீர். (௧௦)

---

௫. ஆரம் = தரளம்.

௬. துவர் = பவளம்.

௭. வீரமாலி = வீரமார்த்தாண்டன்; மார்த்தாண்டன், மாலி, சூரியனெனும்பொருள,

௯. பூதம் = சுத்தம் ; **பிங்கலநிகண்டு.**

# திருக்கைலாயத்திற் படைபெறுதிருவிளையாடல்.

OFFICE OF THE REGISTRAR
19 MAY 1925
MADRAS

## (இரண்டாம்பத்து)

பதினென் றெனக் கணிக்கப் பட்ட அப்பெரும் படைகள் எத்தகையன வென்று வினவில், (க) தோமரம், (உ) குத்தும் ஈட்டி, (ங) வில், (ச) அம்பு, (ரு) வலிய வச்சிராயுதம், (சு) சுத்தமான தாமரை, (எ) விருதுக்கொடி, (அ) பெருமணி, (கூ) வாள்,— (க)

(கO) அங்குசம், (கக) பரசு என்பனவாகும். (நிற்க.) பார்வதிதேவியினது திருமேனி தம்மிற் பிரதிபிம்பிக்குமாறு அத்தேவியினழகிய பாதச்சிலம்பின் பருமணி ஒன்பது துள்ளி வீழ்ந்தன. (உ)

இப்படித் தேவியின் திருவுருவப்பிம்பமாகிய சாயை, அவ்வொன்பது மணிச்சுடர் நிறைந்த ஒன்பது மகளிர் ஆயின. இனிய மொழியோடுங்கூடிய தெய்வத் திருவுளப்பாங் கின்படி மேலான தெய்வத்தன்மையுள்ள கருப்பத்தை அவர்களடைந்தார்கள். (ங)

பூர்வீகப் பிரமதேவர் விஷ்ணுவி னுந்திக்கமலத்திலே தோன்றியதுபோல அவர் களுடைய நாபிக்கமலங்களிலிருந்து ஒன்பது வீரர்கள் உதித்தார்கள். அம்மகளிர்களு டைய ஒளிமயமான உடம்பின் வேர்வையிலிருந்து இலக்ஷம் வீரர்கள் தோன்றினர்கள்.(ச)

(அவர்களுள்) வீரபாகு மாணிக்கவல்லி மகன். வீரகேசரி தரளவல்லி புதல் வன். வீரராக்கதன் வெள்ளிய வைரவல்லி புத்திரன். வீரதீரன் நல்ல நீலவல்லி சுதன்.(ரு)

வீரமகேசுரன் கோமேதகவல்லி குமாரன். பரிசுத்தம் வாய்ந்த வலிமைமிக்க வீர மகேந்திரன் புட்பராகவல்லி நந்தனன். வீராந்தகன் பவளவல்லி தனயன். (சு)

போர்விருப்புள்ள வீரபுரந்தரன் காந்தி குறையாத வைடூரியவல்லி கான்முளை. வீரமார்த்தாண்டன் மாசில்லாத அழகு பெரிதும் விளங்கும் மரகதவல்லி மைந்தன். (எ)

தீரம்பொருந்திய இவ்வொன்பது தேவர்களுமே நவவீரர்க ளென்னும்படி விளங்கி ஞர்கள். இவர்கள், பிரணவ வாச்சியனான கந்தக்கடவுள் பிரசன்னப்பட்ட பின்னர் அன்பு பொலிய நன்குதித்தவராவர். (அ)

இக்காரணத்தால் இவர்கள், சண்முகக் கடவுளுக்குச் சுத்தமான மெய்க்காவல் பொலிவுற நிற்கு முறைமைபற்றி அக்கடவுளது கடல்போனீண்ட சேனைகளோடு படைக்கலமேந்தி முன்சென்றார்கள். (கூ)

துன்பில்லாத இளம்பெருமானது புகழைப்பாடிய அருணகிரிநாத ரென்னும் நன்மதியுடையாரது தவத்தில் விளங்கிய தலைவனை உள்ளத்திருத்தும் அன்புடையீர்! மேற்சொன்ன இலக்ஷம் வீரர்களும் அந்நவ வீரர்களை நன்கு தொடர்ந்து செல்லும் வலிமையைப் பெற்றனர். (கO)

திருக்கைலாயத்திற் படைபெறுதிருவிளையாடல்
இரண்டாம்பத்துமுற்றிற்று.

எட்டாவது

# மாயாபுரித்திருவிளையாடல்.

---

கலிவிருத்தம். (இசை)

வீராதிப ராமொன்பது பேரோடயில் விமலன்
நாராருமி லக்கம்பெயர் களுநாசமில் பூத
ஈராயிர வெள்ளங்களு நூற்றெட்டெறழ் வீரர்
சூரார்திரு மாலாதியர் சூழத்தரை வந்தான். (க)

தரையிற்றிக ழேமாசல சாரிற்பெரு மாயா
புரியிற்கட கரியானன வசுரப்பொரு நன்வாழ்
பெருமைத்திற லையுமாதவர் பேணுங்குறு முனியாற்
கருமைக்கிரி யானேன்விறல் களையுங்கரு துற்ருன். (உ)

வடிவேலிறை வரவைத்தெரி தலுமானைமு கத்தான்
தடிவேனென வேதானைக ளொடுசெண்முகன் முன்னின்
றடலேயிலர் சூழ்வந்தவொர் சிறுவாவர வணைமால்
மிடலேறிய வொளிவட்டமென் மிடறுள்ளது காண்டி. (௩)

அயனத்திர மதைநற்கனி யாநுங்கல்பு ரிந்தேன்
பயனிற்றென வறியாயென வீரம்பல பாடி
உயரத்தவிர் தாரைக்குல முகவெண்டிசை யதிர
வியனுற்றவெள் வளையூதிவெ குண்டேவினன் வாளி. (ச)

அவ்வாளிகண் முருகையனை யணுகுந்திற லற்றுச்
செவ்வேணிலை சூழ்ந்தேதொழல் செயலுங்கரி முகவன்
வெவ்வீறுடை மாபாசுப தந்தூண்டினன் விரைவாய்
அவ்வேளதை யெனதேயென வார்வோடுபி டித்தான். (ரு)

அக்காலையின் மாயாகிர வுஞ்சன்றிக ழும்பொன்
சொக்கார்நய வெண்பொன்னகி யென்னச்சுட ரெயில்கள்
மிக்கார்புர மாகப்பெரு வேழானன னவையுட்
புக்கானளி ஞக்கன்முதன் முத்தானவர் போல. (சு)

இருமாயரு மிவ்வாறிக றருபோதடல் வேற்கைப்
பெருமானது சிறுமூரல்பி றந்தாடிய ததனல்
உருமாறியெ ரிந்தோடின வவைபூதரன் முகிலாய்
வருகாலிடி யானனெரு வயமாமுக வல்லான். (எ)

அம்மாயமு மழியக்குக னடன்மாருத மானன்
வெம்மாகிரி யான்மாகட லானன்விறல் வேலன்
அம்மூரியு மழியக்கர மள்ளப்பென வுண்டான்
விம்மோதியன் மிகுசக்கர வாளாசல மானன். (அ)

அப்பேரச லத்தாரிரு ளுலகாயினன் மற்றேன்
அப்போதுபல் சோதிச்சவி தாவாயவை செற்றுன்
துப்பார்மழ வன்பின்னவர் மீதீடறு சுடர்வேல்
தப்பாதெறி தந்தானசு ரக்கூளிகொல் சண்டன். (௯)

அச்சத்தியவ் விருதானவ ராகம்பகு போது
எச்சத்தமு மங்கத்தொனி யிட்டாவிது றந்தார்
நச்சித்தம தாரக்கினி நாகப்பெய ரானுள்
இச்சித்தகு மாரன்வலி யெவர்சொல்லிட வல்லார். (௧௦)

---

எட்டாவது

## மாயாபுரித்திருவிளையாடல்.

வீரர் தலைவராகிய வீரபாகுதேவர் முதலிய நவவீரர்களோடு, தன்பால் அன்பு மிக்க இலக்ஷர்களும், அழிக்கப்படாப் பூதப்படைகள் இரண்டாயிர வெள்ளமும், வலிமை மிக்க நூற்றெட்டுப் படைத்தலைவர்களும், அசுரர் கொடுமையால் அச்சம் படைத்த திருமாலாதி தேவர்களுந் தன்னைச் சூழ்ந்துவர, வேலாயுதனாகிய விமலன் இம் மண்ணுலகத்திற்கு எழுந்தருளினன். (௧)

பூமியில் விளங்குகின்ற ஏமகூட மலையின் சாரலில் அமைக்கப்பட்ட பெரிய மாயா புரியின் கண்ணே யானை முகத்தையுடைய தாரகனென்னும் அசுரவீரன் வாழ்கின்ற வாழ்வின் மேம்பாடுடைப் பராக்கிரமங்களையும், முனிவர்கள் போற்றும் அகத்திய முனிவரர் சாபத்தினுற் பெரிய கிரௌஞ்சகிரிவடிவான அசுரனுடைய வல்லமைகளையும் அவ் விமலன் திருவுளத்தே கருதுந்தன்மைய னாயினன். (௨)

வடிவேற்பரமனது வரவை அறிந்தமாத்திரத்தில், அந்தத்தாரகாசுரன், "யான் அவனைக் கொல்வேன்" என்று, அசுரசேனைகளோடு அறுமுகக்கடவுள் முன்வந் தெதிர்த்துநின்று, "அற்பஆற்றலுமில்லாத பேர்களைத் துணைக்கொண்டுவந்த சிறுவனே! சேஷசாயியாகிய திருமாலினது வலிமைமிக்க சக்கராயுதமானது (ஓராபரணம் போல) இதோ என் கழுத்திற்கிடப்பதைக் காண்பாயாக. (௩)

பிரமாஸ்திரத்தை நல்ல ஒருபழம்போல விழுங்கிவிட்டேன். நீ இப்போது இங்கு வந்ததன் பயனும் இன்னதாம் என்பதை அறியாய்" என்று பல வீரமொழிகள் கூறி, வானத்தொளிரும் நக்ஷத்திர கணங்கள் உதிரவும், எட்டுத் திக்குகளு நடுங்கவுந் தனது பெருமைபொருந்திய வெண்சங்கை முழக்கி வெகுண்டு, பாணங்களைச் சொரிந்தான். (௪)

அந்தப் பாணங்கள் முருகப்பெருமானை நெருங்கும் வலிமை இல்லாதனவாய், அவனிருக்கையை வலம் வந்து திருவடி தொழுதவுடன், தாரகாசுரன் விரைந்து கொடிய பலம் வாய்ந்த பெரிய பாசுபதாஸ்திரத்தை ஏவினன். குமரவேள் அதனைத் தன்னுடையதே யென்று சொல்லி அன்போடு கரத்தாற்பிடித்து வைத்துக்கொண்டனன். (ரு)

அப்போது, மாயாவியான கிரௌஞ்சன், விளக்கம்புரி பசும்பொன், அழகார்ந்து நயத்த வெள்ளி, இரும்பு என்னும்படி ஒளிவிடுகின்ற மதில்களோங்கிய மூன்று புரங்களாதலும், கமலாக்ஷன், தாரகாக்ஷன், வித்தியுன்மாலி என்னுந் திரிபுர அசுரர்கள் போலவே தாரகாசுரன் அவற்றுள் நுழைந்தான். (௬)

மாயாவிகளாகிய அவ்விரண்டு அசுரரும் இவ்வண்ணம் போர்புரியும்போது, சத்தி வேற்பெருமானது புன்னகை தோன்றித் தவழ்ந்தது. அதனால் அப்புரங்கள் உருவேறுபட்டு வெந்தொழிந்தன. (பின்பு) கிரௌஞ்சன் மேகங்களாகி வரும்பொழுது யானை முகத்துத் தாரகாசுரன் அவற்றின் இடிகளாயெதிர்த்தான். (எ)

அந்த மாயாரூபமும் அழியும்படி குகேசன், பிரசண்ட மாருதமானன். பின்பு கொடிய கிரௌஞ்சன், பெருங்கடலானன். வெற்றிவேலாயுதப் பெருமானே அக்கடலும் வற்றும்படி, அதனையள்ளிப்பருகும் ஒரு கையளவு சலம்போலக் குடித்துவிட்டான். இவற்றை யெல்லாங்கண்டு வெம்பின அவ்வசுரன், உயர்ந்த சக்கரவாளகிரியுருவைக் கொண்டனன். (அ)

தாரகாசுரன், அப்பெரிய மலையினுள்ளே நிறைந்த அந்தகார வுலகாயமர்ந்தனன். அப்போது தூயவனாகிய முருகப்பெருமான், பற்பல சோதிச்சூரியர்களாய்த்தோன்றி அவைகளை அழித்தான். பின்பு, அசுரகுலகாலனாகிய பெருமான், ஒப்புமுயர்வு மற்று விளங்குந் தனது வேலாயுதத்தை அவ்விருவரையுந் தவறாது கொல்லும் வகையிற் பிரயோகித்தான். (௯)

அப்படி எறியப்பட்ட அவ்வாயுதமானது அந்த இரண்டு அசுரருடைய உடலங்களைப் பிளக்கும்போது, அவர்கள் மற்றெல்லா ஒலிகளும் அடங்கிப்போம்படி பெருஞ் சத்தமிட்டு உயிர் துறந்தார்கள். நல்ல உள்ளத்தையுடைய அருணகிரி என்னும் பெயரையுடையாரது இதயதாமரையை விரும்பியமர்ந்த குமாரக்கடவுளின் ஆற்றலை எவர்தாம் முழுதுஞ் சொல்லவல்லவராவர்! [ஆகாரென்றபடி] (௧0)

மாயாபுரித்திருவிளையாடன் முற்றிற்று.

---

ஒன்பதாவது

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

---

## (முதற்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சூர னெஞ்ச நிலைய றிந்து சொல்லெ னச்செவ் வேளினால்
நீர லம்பு செந்தி நின்று போக விட்ட நெய்தைமா
வீரம் விஞ்சு வீர பாகு விண்டு கந்த மாதனம்
ஆர நின்று விசுவ ரூப மாய வாசி பாய்ந்தனன். (க)

பாய்ந்த போதி லங்கை யின்வ டாது பம்பு சேனைகள்
வாய்ந்த வீர சிங்கன் யாளி வதனன் மைந்தன் முதலினோர்
காய்ந்தெ திர்ந்து பொன்றி னார்கள் காளை சூரன் முதனகர்
ஏய்ந்த வுத்த ரங்கி மூக்கி யங்கு தானை கண்டனன். (உ)

வீரர் வெள்ள நானு மங்கு மேவு கோர னோடதி
கோர னிற்கு நிலையு ணர்ந்து கொண்டு தெற்கு வாயில்போய்
ஈர மற்ற வாயி ரங்க யச்சி ரத்த னிரியுமா
றேரலங்கு கால்கொ டேகு ழைத்து மேலை யெய்தினான். (ங)

மாவு டம்ப டக்கி மேலை வழியி னுட்பு குந்துகோன்
மேவு மன்ற மெய்தி மாண றிந்த னன்செவ் வீரன்வேற்
றேவு மந்த வீர னெண்ணு மாறொர் சீய வாசனம்
ஆவ யிற்றி கழ்ந்தி டச்செய் தானெ லாரு மெச்சவே. (ச)

மன்னு றுப்பி னெழிலெ றிப்ப வாள்கொண் மஞ்செ றிப்பநற்
புன்ன கைப்பி னொளியெ றிப்ப வப்பொ னாச னத்தமர்
கொன்ன லத்த னைக்க ணுற்று நீயு னாதி கூறடா
என்னு மத்தன் மொழிமுன் வீர னெம்பி ரானி ளம்பிரான். (ரு)

அறிதி யப்பி ரானு டம்பி லண்டம் யாவும் வந்திடும்
இறுதி னத்தி லதில டங்கு மென்னு முண்மை யுந்தெரி

---

உ. இதன்கட் போதரும் இலங்கை, சூரபதுமனுடைய தளபதிகளு ளொருவனும் ஆயிரந்தலை யாளிமுகனெனப்படுவோனுமிருந்த அவுணவீரனுக்குக் கெடிஸ்தலமாய் வீரமாகேந்திர புரத்திற்கு வடபாலுள்ள சமுத்திரமத்தியிலே காணப்படுவதாயிருந்த வொரு பெருந்தீவாம். பின்னர் இதுதான், பத்துத்தலை யிராவணனது ஆட்சியில் அவனது இராசதானியாயிருந்தது.

குறிய சொற்கள் வெளியி டற்க கோதி லாத தேவர்தஞ்
சிறைத விர்த்து நறிய கோல்செ லுத்து வாய்செ யாவிடின். (சு)

தார கன்பல் வஞ்ச கௌஞ்ச சயில னுற்ற கதியினைச்
சேர நேரு நீயு மென்று செப்ப வேநி னக்கெனைப்
பேர ருட்பி ரான்வி டுத்த பெற்றி யோர்தி யென்றலுஞ்
சூரன் மீசை தனைமு றுக்கி முரணி யீது சொல்லுவான். (எ)

சிறுவ ரைத்த டிந்த வன்மை செப்ப வந்த விவனைமுன்
தெறுதி ரென்றொ ராயி ரந்திண் வீரர் தம்மை யேவினன்
உறுமி நன்கு ருத்தெ ழுந்த வவரை யெற்றி மேல்வருந்
தறுக ணூறு தலைய னுவி பொன்ற வேச வட்டிமேல். (அ)

வரும வன்ப டைப்பெ ருக்கை வலிய கோபு ரம்பெயர்த்
தொருகை யாலெ றிந்தொ ழித்தொ ரைந்து பத்து வெள்ளமாய்
வருப தாதி யாவும் விசுவ மாமெய் கொண்டு கால்களால்
இருகை யான்மு ருக்கி ஞனி லங்கு வீர பாகுவே. (கூ)

பின்னெ திர்த்த வாயி ரம்பு யத்து வீரர் பிணமென
மன்னி லத்தில் வீழ வேம ராம ரம்பி டுங்கிமேல்
உன்னி யேய றைந்த வந்த வொருவ னுள்ள முள்ளதே
வென்னை யாளு மீச னேபு கழ்ப்பு தற்கு மீசனே. (௧௦)

---

ஒன்பதாவது

## வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

---

(முதற்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

"சூரபதுமனுடைய மனப்பான்மையை (உலகமறியுமாறு) தெரிந்துவந்து எனக்குச் சொல்லக்கடவாய்" என்று முருகப்பிரானால், திருச்சீரலைவாயினின்று அனுப்பப்பட்ட பெருமைவாய்ந்த மகாவீரத்தின் மிக்க வீரபாகுதேவர், கந்தமாதன பருவதத்திற் பாததாமரைகள் பொருந்த நின்று விசுவரூபங்கொண்டு தெற்குநோக்கிப் பாய்ந்தார். (௧)

**அ**ப்படிப் பாய்ந்தபோது, இலங்கையின் வடபாகத்திற் செறிந்த சேனைகளையுடைய வீரசிங்கன், யாளிமுகாசுரன்மகன் முதலியபேர்கள் வீரபாகுதேவரைக் கோபித்து எதிர்த்து மடிந்தார்கள். பின்னர், வீரமாகேந்திரபுரியினைச் சார்ந்த வடக்கிலுங் கிழக்கிலுஞ் சஞ்சரிக்குஞ் சேனைகளை அவ்வீரபாகுதேவர் கண்டார். (௨)

அங்கு நாலு வெள்ளம் வீரர்களோடு கோரனும் அதிகோரனு நிற்கு நிலைமையை அவருணர்ந்து கொண்டு, தெற்கு வாயிலுக்குச் சென்று ஆயிரம் யானைத்தலைகளையுடைய இரக்கமற்ற அசுரன் (=சகச்சிரகயமுகன்) மடியும்படி அழகு விளங்குகின்ற தம்முடைய கால்களினாலேயே துவைத்துவிட்டு மேற்றிசைவாயிலை யடைந்தனர். (௩)

சிவந்தமேனியினையுடைய வீரபாகுதேவர், அங்கே தமது விசுவரூபத்தை யொடுக்கிக்கொண்டு மேலைவாயிலுள்ளே புகுந்து, சூரபதுமன் வீற்றிருக்குங் கொலுமன்றத்தினை யடைந்து, அவன் வாழ்க்கைச் சிறப்பினை யறிந்தார். ஆங்கவரெண்ணியபடி திருவேலேந்து தேவனானவன், யாவரும் வியந்து பாராட்டும்படி அவ்விடத்தில் (வீரபாகுதேவருக்காக) ஒரு சிங்காசனந் தோன்றி விளங்கியிருக்குமாறு செய்தருளினன். (௪)

தமது மேனியில் அமைந்துள்ள உறுப்புக்களின் அழகு பிரகாசிக்க; கரத்தே யேந்தியுள்ள வாளினெழில் பிரகாசிக்க; நல்ல புன்சிரிப்பின் விளக்கம் பிரகாசிக்க; அச்சிங்காசனத்தில் அமர்ந்த பெருநலமுடைய வீரபாகுதேவரைச் சூரபதுமன் பார்த்து "அடா! உன் வரலாற்றைக் கூறுவாயாக" என்று கடாவிய கடாவுக்குமுன்னே வீரபாகு தேவர் "எம் பெருமான், இளம்பெருமானே,— (௫)

அறிவாயாக. படைப்புக்காலத்தில் அப்பெருமான் திருவுருவிலிருந்து எல்லா அண்டங்களுந் தோன்றுவனவாம். அழிப்புக்காலத்தில் அவைகள் அவ்வுருவின் கண்ணேயே ஒடுங்குவனவாம். இவ்வுண்மையினையும் அறிவாயாக. அடா என்பது முதலிய சிறுமொழிகளை இனி நீ செப்பற்க. குற்றமற்ற தேவர்களுடைய சிறையை நீக்கிச் செங்கோல் செலுத்தி வருவாயாக. அங்ஙனஞ் செய்யாவிடில்,— (௬)

பலவித மாயைவித்தைகளில் வல்ல தாரகாசுரனும், கிரௌஞ்சனுமடைந்த கதியை நீயுமடைய நேரும் என்னும் இவ்விடயத்தை உனக்குச் சொல்லும் பொருட்டாகவே பேரருளாளனாகிய என்னுடைய பெருமான் என்னை உன்பால் விடுத்த தன்மையினை நீ உய்த்துணர்வாயாக" என்று கூறிய வளவிலே, சூரபதுமன், தனது மீசையை முறுக்கி வெகுண்டு பின் வருமாறு புகலலுற்றான். (௭)

"சிறுவர்களைக் கொன்ற வீரத்தை என்முன் பிரஸ்தாபிக்கவந்த இவனை முன்னே கொல்லுங்கள்" என்று ஓராயிரம் வலிய வீரர்களையேவி நின்றான். வீரமும், அழகும் பொலிய விளங்கிய வீரபாகுதேவர், ஆர்ப்பரித்து மிக வெகுண்டெழுந்த அவ்வீரர்களைக் கொன்று மேலெழுந்து வந்த வன்மையுடைச் சதசிரன் உயிர் நீங்கும்படி அவனைப் புடைத்து, பின்னும்,— (௮)

எதிர்த்துவந்த அவனுடைய சேனைப் பெருக்கத்தை யெல்லாம், வலிமையுடைய கோபுரமொன்றைப் பெயர்த்தெடுத்து அதனை ஒரு கையால் வீசி எறிந்துகொன்று, பின்னரும் ஐம்பது வெள்ளமாக எதிர்த்துவந்த காலாட்படைகளையெல்லாம் விசுவரூபங் கொண்டு இருகால்களாலுங் கைகளாலும் நாசம் பண்ணினார். (௯)

இதன் பிறகும் வந்து தாக்கிய சகச்சிரபாகுகளாகிய ஆயிரம் புயம்படைத்த வீரர்கள் பிணமென நிலத்தில் விழும்படியாக மராமரத்தைப் பிடுங்கிக்கொண்டு ஆகாயத்திற் பாய்ந்து பூமியினிற்கின்ற அவர்களை அடித்த அந்த வீரபாகுதேவரின் இதயகமலத்தில் வீற்றிருக்குந்தேவனே என்னையாளும் ஈசனாவன்; திருப்புகழ்பாடியருளிய மெய்ஞ்ஞானிக்கும் ஈசனாவன். (௰)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

முதற்பத்து. வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

கலிவிருத்தம்.

**வ**ல்லசுரர் வாழ்மா கேந்திரம தர்ச்சீர்
அல்லலுறு வான்வீ ரன்புரிய வன்னேற்
கொல்லுவல்பி டித்தே யென்றசுரர் கோன்சேய்
வல்லேவயி ரத்தோ ளன்கடுகி வந்தான். (க)

**அ**ன்னவனெ டேகா லாயிரவல் வெள்ளம்
மன்னுபடை வந்தே வளைந்தவவை கண்டு
புன்னகைகொள் வீரன் புடைத்தமை பொருந்தப்
பன்னரிது சற்றே பகர்ந்திடுவ லிங்கே. (உ)

தேசணியு டம்போ டேகிவரு தீரன்
மூசவினி யெஃகான் மோதுகிழி யென்றே
பேசுமுனி வுள்ளா ரேறிவரு பீடார்
தூசியணி யெல்லாந் தூசியணி யாய. (௩)

**நீ**டுவரி சூழிந் நீணகர் புகுந்தே
சாடுமரி யின்னேன் யாரெனவு சாவும்
பீடுபரி வில்லாப் பேயனைய ரேவக்
கூடுகரி யெல்லாங் கூடுகரி யாய. (௪)

**மா**ழையணி பூணேர் மல்குமட வீர்நும்
பீழையினி யுண்டோ வென்றசிபி டித்துந்
தூழையுண ராமே யொல்லையமர் நல்குங்
கூழையணி யெல்லாங் கூழையணி யாய. (௫)

**அ**ங்கடவு ளென்பா ராளிவனை யெற்றல்
நங்கடமை யென்றே நாடிவரு சேனைச்
செங்கடல்க ளெல்லாஞ் செங்கடல்க ளாய
வெங்கழுகு சேனம் விரும்பியினி துண்பான். (௬)

பெரும்புலிகள் போலே பெருங்கரிகள் போலே
இரும்பனைய கைகா லியக்கிவலி பேசுங்
கரும்படைக ளெல்லாங் கரும்படைக ளாய
பரும்பிணம்வ கிர்ந்துண் பல்லிலகு பேய்க்கே. (௭)

இடிக்குலமெ ழுந்தார்ப் பீயுநிலை நின்றே
துடிக்குமெழி னன்கேய் சொலற்கரிய வாரல்
வடிக்கணையெய் வார்பேர் வரைந்தப னிறத்த
கொடிக்குழும லெல்லாங் கொடிக்குழும லாய. (அ)

முடைத்தசைக ளுண்டே மொய்த்துவரு வாருந்
தொடைத்துணைகை தட்டிச் சுழன்றுவரு வாரும்
படைக்கலம்வி திர்த்தே பரம்புநரு மாய்க்கூ
டிடைப்படைக ளெல்லா மிடைப்படைக ளாய. (கூ)

துப்பறிவு சோர்வா ரோடவயி ரத்தோள்
வெப்பனுமி றந்தான் மாலைவர வீரன்
அப்பதிவி டுத்தா காயவதர் பாய்ந்தான்
அப்பொருந ஞேர்கோ வருட்புகழ ஞேர்கோ. (கo)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

வலிமை பொருந்திய அசுரர்கள் வாழ்கின்ற வீரமாகேந்திரபுரத்தின் சிறந்த சீர்மை குலையும்படி வீரபாகுதேவர் செய்துவிடவே, "அங்ஙனஞ் செய்தவனைப் பிடித்துக்கொல்லுவேன்" என்று கூறிக்கொண்டு சூரபதுமன் மகனுகிய வலிய வச்சிரபாகு என்பான் விரைந்து வந்தான். (க)

அவ்வாறு வந்தவனேடு நாலாயிரவெள்ளக் கணக்குள்ள வலிய சேனைகள் வந்து வளைந்தன. அவைகளைக் கண்டு புன்னகை கொண்ட வீரபாகுதேவர், சின்னபின்னப் படுத்தினவாறெல்லாம் இங்கே வருணித்தல் இயலாத காரியம்: ஆயினுஞ் சிறிது விவரிக்கின்றேன். (உ)

"ஒளிவீசாநின்ற அழகிய உடம்போடெதிர்த்து வருகின்ற இவ்வீரன் இப்போதே மாய்ந்துபோம்படி ஆயுதங்களான் மோதுங்கள் கிழியுங்கள்" என்று கத்துஞ் சினங்கொண்ட வீரர்கள் ஏறி வருகின்ற தூசியணியென்னுங் குதிரை நிரைகளெல்லாந் தூசிநிலை யடைந்தன. [தூசி=குதிரையுந் துகளுமாம்.] (ங)

நெடிய கடல்சூழ்ந்த இம்மாநகரிற் புகுந்து நம்மைக் கொல்லுஞ் சிங்கம்போன்ற இவன் யாவன்? என்று விசாரிக்கும் பெருந்தன்மையும் இரக்கமுமில்லாத பேய்போன்ற அசுரர்கள் ஏவுதலால் எதிர்த்துக்கூட்டமாகக் கூடிய கரியென்னும் யானைகளெல்லாம் வீரபாகுதேவர் செய்கையால் வெந்து கரிக்குழுமல்க ளாயின. (ச)

"அழகிய ஆபரணங்களைத் தரித்த செவ்விமிக்க பெண்காள்! நகரமழிகின்றதே யென்னும் உங்களுடைய கலக்கம் இன்னுமுண்டோ?" என்று தேறுதல் கூறி ஆயுதங்

களை யேந்திச்சென்று தம்மைப் (பிடர்) பிடித்துத் தள்ளும் பகையை அறியாமலே விரைவிற் போர்கொடுக்குங் கூழையணியென்னும் பின்னணிப் படைகளெல்லாங் கூழையென்னுஞ் சேறென வாயின. (ரு)

"அழகிய தேவர்களின் தூதனென்று சொல்லப்படுமிவனைக் கொல்லல் நமது கடமை" என்று சொல்லிக்கொண்டு வீரபாகுதேவரைத் தேடிவருஞ் செங்நிறவுடைகளாலலங்கரிக்கப்பட்ட சிவந்த சேனுசமுத்திரங்களெல்லாங் கொடிய கழுகுகளும் பருந்துகளும் மகிழ்ந்தினி துண்ணும்பொருட்டுச் செங்கடல்களென்னும் இரத்தக்கடல்க ளாய்விட்டன. (சு)

பெரிய புலிகளைப்போலவும் பெரிய யானைகளைப்போலவுந் தம்முடைய இரும்பையொத்த கை கால்களை அசைத்துக்கொண்டு வீரமொழிகளைப் பேசுங் கருநிறவுடைகளாலலங்கரிக்கப்பட்ட கரும்படைகளெல்லாம், பருத்த பிணங்களைக் கிழித்துத் தின்னும்படியான பற்கள் பிரகாசிக்கின்ற பேய்களுக்குக் கரும்பும் அடைகளு மாயின.

[மூளை யெலும்பெல்லாங் கரும்பெனவும், நிணத்தசையெல்லாம் அடையெனவுமாயின என்க. அடை = அப்பவருக்கம்.] (எ)

இடிக்கூட்ட மெழுந்து முழக்குமெல்லை வரையிலு நீண்டு நின்று அசைதலைச் செய்யுமழகு இனிது பொருந்திய வருணித்தற்கொண்ணு வீரமுடைய வடித்தெடுத்த அம்புகளையெய்யும் வீரர்பெயர்க ளெழுதப்பெற்ற பலவகை நிறக்கொடிக் கூட்டங்களெல்லாம் (கிழிக்கப்படுஞ் செய்கையால்) பூமியிற் கிடக்கும் படர்கொடித் திரள்களெனவாயின. (அ)

புலால் நாறும் இறைச்சிகளைத் தின்று கூட்டமாகக் கூடி வரும் வீரர்களும், கைகளால் இரு தொடைகளையுந் தட்டிக்கொண்டு சக்கரம்போலச் சுழன்று வரும் வீரர்களும் யுத்தாயுதங்களை அசைத்துக்கொண்டு கடலைப்போலப் பரம்பிவரும் வீரர்களுமாகக் குழுமிய இடைப்படைகளென்னும் நடுப்படைகளெல்லாம் இடைப்பு அடையென்னுங் கொம்பரை விட்டு விலகியுள்ளனவாகிய சருகுகளெனவாயின. [அடை = இலை.] (கூ)

தம் வலிமையையும் அறிவையுமிழந்த வீரர்கள் ஓடிவிட ; மனம் புழுங்கி நின்ற வச்சிரபாகுவுமிறந்தான். அப்போது மாலைக்காலம் வந்தது. வரவே, வீரபாகுதேவர் வீரமாகேந்திரபுரமாகிய அப்பதியினை விட்டு (வடக்கு நோக்கி) ஆகாயவழியிற் பாய்ந்து சென்றார். அவ்வாறு சென்ற வீரருடைய பெருமானே திருவருட்டிருப்புகழ்கள் பாடிய அருணகிரிநாதருடைய பெருமான் [என்க.]

["மாலை" என்பது மாலைக்காலத்தை யுணர்த்துதலோடு வெற்றி மாலையையும் உணர்த்தலாம். ஆவதேல், இஃது இரட்டுறமொழிதலென்னும் உத்தியெனப்படும். இது கிடக்க; இத்திருப்பத்திலே "தூசியணியெல்லாந் தூசியணியாய" "கூடுகரியெல்லாங் கூடுகரியாய" "கூழையணியெல்லாங் கூழையணியாய" "செங்கடல்களெல்லாஞ் செங்கடல்களாய" "கரும்படைகளெல்லாங் கரும்படைகளாய" "கொடிக்குழுமலெல்லாங் கொடிக்குழுமலாய" "இடைப்படைகளெல்லா மிடைப்படைகளாய" என வரும் இருதிறப்பொருட் சொற்றொடர்களின் இன்சுவை, நல்லிசைப் புலவர்கட்குப் பேருவகை பிறப்பிக்க வுளதன்றோ?] (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

இரண்டாம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

சூரபதுமன் மந்திராலோசனை.

கலிநிலைத்துறை.

அடியொன்றற்குப்பதிறைக்கரம்.

இரண்டுசீர்வண்ணம்.

காார்தவழ் மாலெயில் சூழ்நக ருள்ளிருள் கவிகாலந்
தார்தவழ் மார்பவு ணர்க்கிறை நன்னெறி தடிபாவ
நீர்தவழ் போதன்ம தாவள புண்டரி கமதூர்நீள்
போர்தவ ழீடனென் மந்திரி யோடிது புகல்வானல். (க)

ஏனைய மந்திரி மார்படை வீரரி குளையாரை
மோனைதொ டர்ந்தழை யென்றன னவ்வண முதுவோனற்
கோனிலை வந்தவெ லார்முனு மன்னவர் குலராசன்
நானவில் கின்றதை யோசனை செய்கென நவில்வானல். (உ)

வானவ ரைச்சிறை செய்ததி றத்தினை மகவானோர்
ஆனிவ ருத்தமன் முன்முறை யிட்டன னவனோர்சேய்
மேனிய னைத்தரல் செய்திவ னுலுறு மிறைதீராய்
மானமு டைச்சசி கேள்வவெ னச்சொன வழியாலே. (ங)

சேயவ னென்பது பேர்பல வீரர்க டிரடோள்கண்
மேயவ யங்கெழு பாரிட சேனைக ளொடுமேலோர்
நேயமி குந்திட நேமியி றங்குபு நெடுவேலால்
மாயமி குந்துள தாரக சைலரை வதையாடி. (ச)

சீதள செந்திலெ னும்பதி வந்தொரு திறலோனைத்
தூதனெ னும்படி யிங்குவி டுத்தன னவனேதொன்
மாதர லங்குமி லங்கையை நூறிவிண் மணிபோலப்
போதரல் கொண்டவை வந்தவ னுதிபல் புகழ்கூறி. (ரு)

விண்ணவர் தஞ்சிறை நீக்குதி யன்றெனின் விரைவாக
அண்ணிடு முன்குல நாசமு னுவியு மழிவேயும்
எண்ணுதி யெம்பெரு மானுரை யீதென விகல்பேசித்
திண்ணிய மைந்தனை யூரொடு கொன்றுயர் திசைபோனன். (சூ)

நாளைய வன்பர னெய்துவ னென்றன னவில்வாத
காளையர் மந்திரி யாதியர் பற்பல கதைகூறும்
வேளையி னன்றுறு சிங்கமு கன்பெரு மிடலார்கோன்
தாளைவ ணங்குபு போர்தொடி னண்டர்கள் சயமார்வார். (எ)

நாசமி லாதகம் மாணையில் வீறுளர் நசிவானுர்
நாசமி லாதபி ரான்வரு சேயவ னனிதேர்வாய்
நாசமி னுகரை னைத்தெவ ருய்ந்தனர் நவினீயே
நாசமில் வாழ்வினு மல்குற வென்னுரை நயமாமே. (அ)

மண்களை மாதவர் தங்களை யோதரு மறையோரைப்
பெண்களை மோய்பிதி ரென்பரை வீடருள் பெரியோரைத்
தண்களை மேவொலி யற்சுர ரைத்தரு ணமுளாரைப்
புண்களை மேவவி ழைப்பது நோய்தரு புலமாமே. (கூ)

என்றனு மாயையின் முன்மக னன்புடை யிளையோய்சேய்
என்றவ னேவர றந்தமை யின்மிட வினனேகி
வன்றிர ளோடுவ ராமையி னண்டர்கண் மகிழ்வேயார்
என்றன னேசைய ரும்புகழ் மாமுனி யியனுரீர். (கO)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

---

## (மூன்றும்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

### சூரபதுமன் மந்திராலோசனை.

மேகங்கள் தவழும் உயர்வுவாய்ந்த மதில்கள் சூழ்ந்த வீரமாகேந்திர நகருள்ளே, இருள்சூழ்ந்த இரவிலே, மாலைபுரளு மார்பினையுடைய அசுரர்கட்கிறைவன் (=சூரபதுமன்), தரும கோபனென்னும் பெயரினனும் புண்டரீகமென்னுந் திசை மதகரியை வாகனமாகக் கொண்டவனுமாகிய போர்விருப்பும் வலிமையுமுடைய முதன் மந்திரியோடு பின்வருமாறு சொல்லத்தொடங்கினன்.

[முதன் மந்திரியின் பெயர் தருமகோபனுகலின் அவனை "நன்னெறி தடிபாவ நீர்தவழ்போதன்" என்முர் ஆசிரியர்.] (க)

"மற்றைய மந்திரிகளையும், படைவீரர்களையும், தருதியான் சுற்றத்தினரையும் வரிசைப்படி யழைப்பாயாக" என்று கூறினன். அவ்வண்ணமே பிரதான மந்திரியின் எச்சரிப்பின்படி சூரனது இருப்பிடம் வந்தெய்திய எல்லார் முன்னிலையிலும், அசுரேசன், "நான் சொல்லுவதை யோசனை செய்வீர்களாக" என்று கூறிச் சொல்லலுற்முன். (உ)

---

கூ. தருணமுளார்=இளைஞர்; தருணம்=இளமை.

"நாம் தேவர்களைச் சிறையிட்ட வகையைப்பற்றி இந்திரன், எருதேறும் இறைவன்பால் முறையிட்டான். அவன் ஒரு குழவிப் பருவமுடையானை யளித்து, கற்புடைச் சசிமணாளனே! இச்சேயவனால் உனக்குற்ற துயரைப் போக்கிக்கொள் என்று கூறிய நெறியால்,— (ந)

அவ்விளைஞன், நவவீரர்கள் பலவீரர்கள் திரண்டதோள்கள் படைத்த வலிய பூத சேனைகளாகிய இவர்களோடு தேவர்களும் நண்பு பாராட்ட வெள்ளியங்கிரியை விட்டுப் பூமியிலிறங்கித் தனது நீண்ட வேலாயுதத்தால் மாயம்வல்ல தாரக கிரௌஞ்சரென்பாரை வதைத்து,— (ச)

தட்பவளம் வாய்ந்த திருச்செந்தூரென்னும் ஊருக்கு வந்து, ஒரு வீரனைத் தூதனென்று சொல்லும்படி யிங்கனுப்பினன். அவ்வொருவனே பழமையுமழகுமிக்க இலங்கையை அழித்துச் சூரியன்போல ஆகாசவழிப் போந்து நமது அவைக்கண்வந்து தன் தலைவனுடைய பலவாகிய புகழ்களை யெடுத்தோதி,— (ரு)

தேவர்களைச் சிறையினின்று விடுவிப்பாயாக: தவறின் விரைவாக உன்குலம் நாசத்தையடையும்: உன்னுயிருமழிவடையும்: இம்முடிவு எம்பெருமானாகிய குமாரக் கடவுளுடையது. இதனைக் கவனிப்பாயாக என்று வீரம்பேசி, வலிமைமிக்க நம் புதல்வனையும் ஊரையும் நாசம்பண்ணி உத்தரதிசை நோக்கி ஆகாயமார்க்கமாய்ச் சென்றுவிட்டான். (சு)

நாளைப்பொழுது அவனுடைய தலைவன் நம்மீது படையெடுத்து வருவான்" என்று கூறி முடித்தான். அங்ஙனம், தத்தம்வாதம் பேசவல்ல இளையோரும் மந்திரிமார் முதலியோரும் பல்வேறு கதைகளைப் பன்னிக்கொண்டிருக்கும்போது நற்குணமுற்ற சிங்கமுகாசுரன், பெருவலிபொருந்திய சூரபதுமனுடைய அடிகளைவணங்கி, "நாம் போர் தொடுப்போமாயின் தேவர்களே வெற்றிபெறுவார்கள். (எ)

மரணமென்பதை யறியாத நமது ஆஞ்ஞையில் இப்போது வீரர் பலர் மாண்டு போயினர். இங்குவரும் இளைஞன் நித்தியனாகிய முழுமுதற் கடவுளேயாவன். இதை நன்குணர்வீராக. அழிவற்ற தேவர்களைத் துன்புறுத்தி எவர் வாழ்ந்தார்கள்? நீரே சொல்லும். குறைவற்ற வாழ்வை நாம் பெறுவதற்கு என் மொழிகள் பயனுடையனவாமே. (அ)

மண்ணாசைநீத்த தவசிகளையும், ஓதரிய மறை வல்லோரையும், பெண்களையும், தாயையும், தந்தையையும், ஞானசாரியரையும், குளிர்ந்த அழகுள்ள மாலைபுனைந்த தேவர்களையும், இளைஞர்களையும் நலிவுறுத்துதல் துன்பந்தரு நரகமாம்." (கூ)

சந்தஞ் சிறந்த திருப்புகழ் பாடிய முனிவர் தன்மையில் விருப்புடையீர்! இவ்வாறு அவன் சொன்னவுடன், மாயையின் தலைமகனாகிய சூரபதுமன், "அன்பார்ந்த தம்பியே! அச்சிறுவனே (யுத்தம்புரிய) வருகை செய்தமையினாலும், ஒரு வலிமிக்கோன் புறப்பட்டுப் பலம் பொருந்திய சேனையோடு வராமையினாலும் தேவர்கள் (வெற்றியடைந்து) மகிழமாட்டார்கள்" என்று கூறினன். (க0)

வீரமாகேந்திரத்திருவிளையாடன்.

மூன்றும்பத்து: வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (நான்காம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

சூரபதுமன் மந்திராலோசனை.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

நஞ்சமே யெனப்ப டர்ந்து நமரங்கட் கிடுக்கண் செய்த
வஞ்சரே யந்தத் தேவர் வாளரா வணிந்தோ னெஞ்சக்
கஞ்சமே மலர்ந்தெற் கீந்த கதழ்வுடை வரங்கள் வாளா
துஞ்சுமோ வென்றே மேலுஞ் சொல்லினன் சூர பன்மன். (க)

இம்மொழி யெல்லா முய்த்தோ ரிளவறன் முன்னோற் பார்த்துத்
தெம்மொழி யிலாது கூறுஞ் செயனனி கொண்டா னச்சேய்
எம்மொழி மறையு மெல்லை குறிக்கொணு வொளியே யீங்கு
நம்மொழி விதப்பா னெஞ்சா னவின்றள விடற்கஃ தாமோ. (உ)

செஞ்சுடர் மேனி யாகத் திகழவன் மீக்கொண் ஞான்று
வெஞ்சுட ரிரவி திங்க ளுடுவனல் விளங்கா வந்தக்
கஞ்சுடர் யாவு மின்னக் காரண மவனு டம்பாம்
அஞ்சுடர் முளரி கூற்ற னவன்சொலி னடக்கின் றூரால். (ங)

பிரமன்மா லாதி யைந்து பெயருமற் றெவரு மன்னோன்
சரதமா வுரையை மீறூர் சராசர மாமெல் லாமும்
வரதனு மவன்வல் வாக்கின் வசத்துள சடமாய்ச் சித்தாய்ப்
பரவெலாப் பொருட்சி றப்பும் பரவவன் சிறப்பு ளற்பம். (ச)

அளப்பறு முருத்தி ரர்க்கு ளவன்கடைக் காலச் செந்தீ
விளர்ப்பெரு நாகு தாங்கு விட்டுணுக் களுண்மா விண்டு
தளப்பிர சாப திப்பேர் சார்ந்தவர் களுளெண் கண்ணன்
சுளிப்பரக் கருணல் யாது சுவாயம்பு மனுக்க ளுள்ளே. (ரு)

புலவருண் மகவான் றேசுப் பொருள்களுட் கனலி வண்மை
இலகுந ருள்ளே வாயு விருந்திரு வருட்கு பேரன்
சலமுறை யுயிர்க்கு வாலுட் டகைபுடை வருண னெட்டாய்
நிலவிடு வசுக்க ளுட்பா வகனிறை நதியுட் கங்கை. (சு)

---

ரு. சுளிப்பரக்கர்—சுளிப்பு + அரக்கர் எனப்பிரிக்க. சுளிப்பு=கோபம்.
யாது=தென்மேற்றிசைப்பாலணுகிய நிருதி.

பிதிரரு ளியம னல்ல பிடகருண் மருந்துத் தேவர்
கதிரருள் விண்டு வென்னுங் கதிரவன் ககத்துள் வைனன்
பதினொரு பெயருள் ளேசங் கரன்றிசைப் பால கர்க்குண்
முதிரொளி யீசா னன்மா மொய்யுளை ராவ தந்தான். (எ)

தென்சுடர் மேனிக் காந்தர் வருட்சித்தி ரத்தேர் மன்னன்
நன்சுர விருடி தம்மு ணாரதன் பிரமப் பேரால்
இன்சுர ரேத்த வுள்ள விருடியர் தமுள்வ சிட்டன்
வன்சிர மணிநா கத்துள் வாசுகி விலங்குட் சீயம். (அ)

இன்னுமிவ் வுலகிற் றேவ ரெழினர ராதி யாக
மன்னுமெவ் வுயிர்கண் மாட்டு மருவுறு செல்வ ஞானம்
மின்னிடு காந்தி கல்வி வீறுபா டனைத்து மந்தத்
தன்னிக ரில்லாச் சேயோன் றனித்திரு மகிமை யாமே. (கூ)

என்றன னிவையெல் லாமு மேறுயர்த் தவனே கூறி
நின்றபின் சுருக்க மீது நிகழ்த்தியாங் கூற வென்னிற்
கன்றறு நூறு கோடி காலத்து நிரம்புங் கொல்லோ
என்றன னென்றான் மேலு மிரும்புகழ் முனியன் புள்ளீர். (க0)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (நான்காம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

### சூரபதுமன் மந்திராலோசனை.

அந்தத்தேவர்கள் பாற்கடல் விடம்போற் பரவி நம்மவர்க்குத் துன்பஞ்செய்த வஞ்சகர்களே யாவார்கள். அரவாபரணனாகிய சிவபெருமான் திருவுள்ள முவந்து எனக்களித்த வலிமைபொருந்திய வரங்கள் பயனிலவா யொழியுமோ? (ஒழியா) என்று சூரபன்மன் மேலுஞ் சொன்னான். (க)

இவ்வார்த்தைகளையெல்லாம் உய்த்துணர்ந்த சிங்கமுகாசுரன், தன்முன்னோனை நோக்கி விரோதமற்ற சொற்களை நன்கு சொல்லலுற்றான் :— "அச்சேய், எந்த மொழியி லுள்ள வேதத்தாலும் அளவிடவொண்ணாத பரஞ்சோதியேயாம். அது நம்முரைப்பெருக் காலே மனத்தினாலே உரைக்கவும் அளவிடவும் ஆமோ? [ஆகாது.] (உ)

செஞ்ஞாயிறுபோல் விளங்கும் அச்சேயோன் பாரமேச்சுரவடிவங் காட்டும்போது வெய்ய கிரணங்களையுடைய சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் அக்கினி ஆகிய இவையெல்

---

க0. கன்று = அற்பம் ; சூடாமணி நிகண்டு.

லாம் பிரகாசிக்கமாட்டா. அந்த ஆகாயச் சுடரெல்லாம் பிரகாசிப்பதற்குங் காரணம் அவனது திருமேனியேயாகும். அழகிய சுவாலைகளையுடைய அக்கினியும் யமனும் அவன் ஏவலின்படி நடக்கின்றார்கள். (௩)

பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகளும் மற்று முள்ளோரும் அவனது சத்திய சங்கற்பக் கட்டளை வசமாகவே யிருக்கின்றனர். இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமாகிய யாவும் வரதனாகிய அவனது வலிய வாக்கின் வசத்திலுள்ளன. உயிருள்ளனவும் இல்லனவுமாய்ப் பரந்து கிடக்குமெல்லாப்பொருளின் சிறப்பும் வியாபியாயுள்ள அவனது சிறப்பினுட் சிற்றளவையேயாம். (என்னை ?),— (௪)

எண்ணில்லாத உருத்திர கோடிகளுக்குள்ளே அவன் காலாக்கினிருத்திரன்; விட்டுணுக்களுள்ளே அவன் வெள்ளிய பெரிய ஆதிசேடனாற்றாங்கப்படும் மகாவிட்டுணு; சுவர்க்கவாச பிரசாபதிகளுள்ளே பிரமனவன்; வெகுளலுடைய அரக்கருள்ளே நல்ல நிருதியாவன்; மனுக்களுள்ளே சுவாயம்புவாவன்,— (௫)

தேவருள்ளே இந்திரனவன்; ஒளியுடைப் பொருள்களுள்ளே அக்கினியாவன்; பலவான்களுள்ளே வாயுவாவன்; பெருநிதியாளருள்ளே குபேரனவன்; நீர்வாழுமுயிர் வருக்கங்களுள்ளே பெருமை பொருந்திய வருணனவன்; அஷ்டவசுக்களுள்ளே பாவகனவன்; நதிகளுள்ளே கங்கையாவன்,— (௬)

பிதிருலகருள்ளே இயமனவன்; நல்ல மருத்துவருள்ளே அச்சுவினி தேவராவன்; துவாதசாதித்தருள்ளே விட்டுணுவென்னும் ஆதித்தனவன்; பறவைகளுள்ளே கருடனவன்; ஏகாதசருத்திரர்களுள்ளே சங்கரனவன்; அஷ்டதிக்குப் பாலகருள்ளே பெரும் பிரகாசமுடைய ஈசானனவன்; பெரிய யானைகளுள்ளே ஐராவதமாவன்,— (௭)

அழகிய காந்தியொடு கூடிய கந்தருவருக்குள்ளே சித்திரரதனவன்; நல்ல தேவவிருடியருக்குள்ளே நாரதனவன்; இனிய தேவர்களாற் போற்றப்படும் பிரமவிருடிகளுள்ளே வசிட்டனவன்; வலிய தலையில் இரத்தினம் படைத்த பாம்புகளுள்ளே வாசுகியாவன்; மிருகங்களுள்ளே சிங்கமாவன்,— (அ)

மற்று மிவ்வுலகிலுள்ள தேவர்கள் அழகிய மனிதர்கண் முதலாக வாழுமெல்லாவுயிர்களிடத்துங் காணப்படு செல்வமும், அறிவும், விளங்குகின்ற ஒளியும், கல்வியும், வீறுபாடுமாகிய எல்லாம் அந்தச் சமானரகிதனாகிய சேயோனது மகிமையேயாகும்" (௯)

என்று கூறினன். இங்குக் கூறிய யாவும் சிவபெருமானே கூறி முடித்த பின்பு "இது (குமாரனது பிரபாவத்தின்) சுருக்கம், யாம் விரித்துக் கூறுவதென்றால் நீடிய நூறுகோடி கால வெல்லையிலேனும் முடிவடையுமோ? [அடையாது] என்றுரைத் தருளினன்" எனச் சிங்கமுகன் மேலுஞ் சொல்லினன் (என்க ;) பெரும்புகழ்களைப் பாடிய முனிவர்கொண்ட தலையன்புடையீர்! (௧0)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

நான்காம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (ஐந்தாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

சூரபதுமன் மந்திராலோசனை.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டுசீர்வண்ணம்.

**வே**யின் மாமுளையை யனைய தந்தமிளிர் மிருக ராசமுகன் மேலுமா
சீய வாசனம மர்ந்த சூரன்முக தேசு முன்னரிவை சொல்லுவான்
தூய வான்மலையி லேய ரன்சொலிய சொற்க ளைப்பெரியர் பாவியான்
நேய மோடறிய லான வாறிஙனி கழ்த்தி னேனரச ராசனே. (க)

**வ**ன்மை யோடிஙனம் வந்த தூதுவன்வ ழங்கு சொன்முழுதும் வாய்மையாந்
தொன்மை யீசனையி கழ்ந்தி டுங்கரிசு தொடரு நீசிறுவ னென்பதால்
நன்மை நூறிடுமஃ தனையு மென்றனையு நமரை யுந்தெறுமொர் கோளியிற்
சின்மை யாகவரு காய லோபரல்கள் செறிய வுள்ளதிதை யுய்த்துணர். (உ)

**அ**வ்வி ளங்குழக னுக்கு மேலெதையு மறைய யாதுமில தறையினஃ
தெவ்வ மண்டொருசி வத்து ரோகமென வெண்ணு வாய்பலகு மாரருள்
உவ்வர் விஞ்சையொடு மும்மு டித்திருவு முடைய வன்றனையிவ் வாதவத்
தெவ்வன் விஞ்சுபவ னல்லன் வீரமொழி செப்பு மற்றையர்சொ லுங்கொளேல்.

**எ**ன்ற சோதரன்மு னென்றன் வாழ்விறுத லிந்த நாளெனநி னைந்திடின்
மன்றன் மாலைமழ வன்சொ லென்பதைம தித்து நானதுபு ரத்தலால்
ஒன்றி லாபமெது கூறு கென்றரச ணேதி ஞனதையு ணர்ந்துளோன்
நன்று கூறினையெ ஞநு வன்றுவிடை நவிலு வான்விதியின் முறைகொடே.(ச)

**கா**ல மென்பதயில் வேலு டைக்கடவுள் கைவ சத்துளது முன்னரே
ஆல முண்டவனி டத்து நீடுதிரு வாயுள் பெற்றபடி யிவன்முனுங்

ங. மும்முடித்திருவு முடையன்=மூன்று தலையுடைய இரணியன். இவன், சூர பதுமன் மகன், வச்சிரபாகுவுக்கு மூத்தோன். ஆதவத்தெவ்வன்=பானுகோபன்.

ரு. "காலமென்பதயில் வேலுடைக்கடவுள் கைவசத்துளது" என்பதை, **ஸ்காந்த மஹாபுராணத்தின்** சம்பவகாண்டத்து ருரு - ஆம் அத்தியாயத்தில்—

"ஸர்வம்ஜகதிதம்காலே ஸுப்ரஹ்மண்யஸ்யவேதஸ: ।
காலஸ்ஸ்ருஜதிபூதாநி காலஸ்ஸம்ஹரதிப்ரஜா: ।
ஸர்வேகாலஸ்யவசகா: ஸகாலோஸ்யவசேஸ்தித: ॥"

எனப் படிக்கப்படுதலா லறிக. இவ்வசனங்கள், பரமசிவன் றிருவாக்காகவே யுள.

கோல மங்கையுடை யணியு ளுவமளி குறைவில் வேரிகமு கின்சொலே
சால ருந்தொடர்பெ னட்ட போகம்வலி தக்க வாயுள்பெற லாமரோ. (ரு)

**அ**ரிய மாதவமி யற்ற வேண்டுமெனு மறுதி யிங்ஙனிலை நம்முனே
புரிவி னுல்வருவ னென்ன வல்லசுர புரவ லன்புரிவ ரூதவென்
உரிய சீருடைய வனுச நீசொலிய வுரைக ளின்படிய னேனொரு
பெரிய தேவனெனி னவன்வி டும்படைபி ளக்க யான்முடிதல் பெருமையே.(சு)

**பெ**ருமை யேய்வதொடு பாவ மோடுமதி பெருகு நல்லறமெ லாம்வரும்
அருமை யாகவிங னெய்தி யுள்ளபல வமைவி னும்பெரிய தெய்துமிவ்
விருமை மேன்மையடை வேன்மு திர்ந்தகழை யினையு ளுதுவிட லுண்டுகொல்
கருமை தீர்பயசில் வழுவி வீழினிய கதலி யங்கனியி தாகுமே. (எ)

**எ**னதெ ணப்படியி லேகர் சூழவரு மிளைஞ னுயினவன் வாகினி
மனதி யக்கமற வோடு மாறெனது மாணு டைப்பலபல் வெள்ளமாம்
அனிக சக்கரமெ னப்ப ருத்ததுர கம்ப தாதிரத கசமெலாம்
இனிதெ ழுப்புவலிவ் வண்ட கோளம்வரை யிதனி னும்பயன தில்லையேல்.(அ)

**எ**ன்ற னுணையிலி ருக்கு மண்டநிரை யெங்கு முள்ளளவில் சேனையால்
வென்றி மேவுவல வற்று மாவதிலை வெல்வி யென்னின்வர வேல்கொடுந்
துன்று மாயவலி கொண்டு மன்னையொரு துணைபி டித்துநனி வெல்லுவேன்
என்று கூறினனி ருந்த மந்திரியெ லாரு மேதலைகு லுக்கினர். (கூ)

**இ**வ்வி ரண்டுமுடி வுக்கு நானுமிசை வெய்தி னேனவனு ரத்தையாஞ்
செவ்வி வந்தினுமி யம்பு வேனமர்கள் செய்வல் யானுமென வரிமுகன்
உவ்வி கம்பமுற வேசெய் தோதினனு வந்து சூரனவ னைத்தழீஇ
அவ்வி தம்புரிதி யென்ற பின்னவைக லைந்த தேபுகழ னன்புளீர். (க௦)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (ஐந்தாம்பத்து· வீரபாகுதேவர்முன்னிலை)

### சூரபதுமன் மந்திராலோசனை.

மூங்கிலின் பெரிய முளைகளையொத்த தந்தங்கள் விளங்கப்பெற்ற சிங்கமுகாசுரன், பெரிய சிங்காசனத்தின்மீதமர்ந்திருந்த சூரபதுமனது சன்னிதிமுன்னே மறுபடியும் இம்மொழிகளைப் புகலுவோனாயினன் :— " மன்னர் மன்னரே ! பரிசுத்தமான கயிலைமலையிற் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய இச்சொற்களைப் பெரியோர்களிடமிருந்து யான் அன்போடுணர்ந்தபடியே இங்கெடுத்துரைத்தேன். (க)

வீரத்தோ டிங்குவந்த தூதன் கூறியயாவும் மெய்யேயாம். நீர் அக் கடவுளைச் சிறுவனென்றவமதிப்பதால் அநாதிநித்தியனான சிவபெருமானை யிகழ்ந்த பாவந்தொடரும். அது நமது நலத்தைக்கெடுக்கும். உம்மையும் என்னையும் நங்குலத்தவரையும் அழிக்கும். ஓராலமரத்திற் சிறியதாய்க் காணப்படுங் காயன்றோ விருக்ஷமூலங்களான விதைகள் நிறைந்திருக்கப் பெற்றுள்ளது. இதனை யுய்த்துணர்வீராக. (உ)

அச் சேய்ப்பருவ அழகனுக்கு மேலாகச் சொல்லுவதற்கு யாதொரு பொருளுமில்லை. சொன்னாற் பகைமை நிரம்பிய சிவத்துரோகமாகுமென்று எண்ணுவீராக. உம்முடைய புதல்வர்களுள்ளே தவமுடையாரது வித்தையோடு மூன்றுசிரம்படைத்த இரணியனுக்கு, இங்கே வலிபேசும் பானுகோபன் சிறந்தவனாகமாட்டான். வீரமொழிகூறும் ஏனையர் பேச்சையும் பொருளாகக் கொள்ளவேண்டாம்" (ந)

என்றுசொன்ன சிங்கமுகனை நோக்கிச் சூரபதுமன், "(நினதபிப்பிராய வழியாக) எனது வாழ்வு அழியுங்கால மிதுவெனக்கருதினால், மணமுடைய மாலைபூண்ட இளைஞன் (=முருகன்) சொல்லைமதித்து அதனை யான் பேணிக்கொள்ளுதலால் வரக்கூடிய இலாபம் யாது? புகலுவாய்" என்று வினவினான். அதனையுணர்ந்த சிங்கமுகன், "நன்றாகக் கூறினீர்" என்று விதிமுறைகொண்டே விடைபகரத் தொடங்கினான்,— (ச)

"காலமென்னுந் தத்துவம் இவ்வேலாயுதக் கடவுள் கைவசத்துள்ளதே. முன்பு நீர் சூலாயுதக்கடவுளிடமிருந்து நெடிய செல்வமும் ஆயுளும்பெற்றவாறே இம்முருகனிடமிருந்தும் அழகிய மங்கையர், ஆடை, ஆபரணம், உணவு, அமளி, நிரம்பிய வாசனைத் திரவியம், தாம்பூலம், இனியமொழிசெறிந்த பாடல் என்னும் அட்டபோகங்களையும், பராக்கிரமத்தையும், தகுதியான ஆயுளையும் பெறலாம். (ரு)

இப்போது நாம் அரும்பெருந் தவஞ்செய்ய வேண்டுமென்னும் முடிவு இல்லை. (நாம் விரும்பினால்) நமக்குமுன்னே அவனே யன்போடெழுந்தருளுவன்" என்று சொல்ல; வலிய சூரபன்மன், "அன்பு நீங்காத சிறப்புடைய என் தம்பீ! நீ கூறியபடியே அவன் ஒப்பற்ற பெரிய தேவனேயாயின், அவன் விடும்வேல் எனதுடம்பினைப் பிளக்க யான் முடிவடைதல் எனக்குப் பெருமையேயாம். (சு)

பெருமை வாய்ப்பதோடு, யான் செய்துள்ள பாவமெல்லாம் பாறும்; அறிவு பெருகும்; நல்ல தருமமெல்லாம் வரும்; அருமையாக நமக்கிப்போது கிடைத்துள்ள செல்வத்தினும் பெரியது கிடைக்கும். இவ்வாறு இம்மை மறுமையென்னும் இருதிறமேன்மையு முறுவேன். முதிர்ந்த கரும்பை யுண்ணாது விடுதலுமுண்டோ? இது, குற்றமற்ற பாலிலே தவறிவீழ்ந்த இனிய வாழைப்பழமாமன்றே? (எ)

யான் கருதுகின்றபடி அவன் தேவர் சூழவரும் ஒரு சிறுவனாயிருப்பின் அவன் சேனைகள் (அச்சத்தினால்) எதனையுஞ் சிந்திக்கு நிலைமையற ஓடிவிடும்படி எனது பெருமை பொருந்திய பற்பல வெள்ளக்கணக்காயுள்ள சேனா சமுத்திரமென்று சொல்லப் பூரித்த குதிரை, காலாள், தேர், யானையாகிய யாவற்றையும் இவ்வொரு அண்டகோளங்காறும் நன்கு எழுப்புவேன். இதனாலும் பயன் கிடையாவிடிலோ,— (அ)

எனது ஆட்சியிலிருக்கும் அண்ட அடுக்குகளெல்லாவற்றிலுமுள்ள எண்ணரிய சேனைகளைக் கொண்டு வெற்றியடைவேன். அவற்றாலும் வெற்றி கிடையாவிடின், வரத்தின் வழிப்பெற்ற ஆயுதங்களாலும், அடர்ந்த மாயவித்தை வன்மையாலும், நங்

தாயாகிய மாயையின் துணைவலியாலும் நன்ருக வெல்லுவேன்'' என்று கட்டுரைத்தான். அங்கிருந்த மந்திரிமார்களும் மற்றையோரும் (சரியென்று) சிரகம்பஞ் செய்தனர். (கூ)

அருணகிரிநாத முனீந்திரரின் அன்புக்குடையீர்! (இவ்விவரங்களைக் கேட்ட) சிங்கமுகாசுரன், "இவ்விரண்டு முடிவுகளுக்கும் யானுமுடம்படுகின்றேன், அவ்விளைஞனது வலிமையைத் தக்க காலத்தில்வந்து இன்னுங் கூறுவேன், யானும் பல்வகைப்போர்கள் செய்வேன்'' என்று தானுஞ் சிரகம்பஞ் செய்தவனைக் கூறினன். சூரபதுமன் மகிழ்வெய்தித் தம்பியைத் தழுவிக்கொண்டு "அவ்வண்ணமே செய்வாயாக'' என்ற பின்பு மந்திராலோசனைச் சபை கலைந்தது. (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

ஐந்தாம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (ஆறும்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மகர வாரி சூழுமா கேந்தி ரத்தி னின்றுவாற்
ககனம் வீர பாகுசெல் காலை மாலி லங்கைமே
வகல யாளி யானன னூர டாநி லென்றலும்
இகலன் வாளி னலனே னிற்று வீழ வெட்டினன். (க)

மேலெ திர்ப்பி லாமையோர் வீர பாகு செந்திபோய்
வேல வற்ப ணிந்துபோர் வேண்டு சூர னேச்சுவெங்
கோலெ டுத்து ரைத்தபின் கூடு போரி லன்னவன்
மூலம் வெற்ப னுடுமொய்ம் பெல்லை சொல்லின் முற்றுமோ. (உ)

### இரண்டாநாட்போர்.*

ஒன்றின் மேல தாகுநா ளுற்ற போரி லேயுவா
என்ற மாமு கன்முளை யாகு மிந்தி ரப்பெயர்

---

க. இகல்=வலியாகலின் வீரபாகுதேவர் "இகலன்'' எனப்பட்டனர்.

* இவ்விரண்டா நாளிற்கு முன்னதாய முதனாட்போரில் வீரபாகுதேவர் காரியம் யாதெனின்? அவர், பானுகோபனது மோகாத்திரத்தினல் எல்லாப்படைவீரரோடு தாமு மயங்கித் தரையிற் கிடப்பவராயினரென்பதும், மூன்ருநாட் போரிலுமவர் அப்பானுகோபனது மாயாத்திரத்தினல் ஆயிரவெள்ளங் கணங்களும் ஏனையெல்லா வீரர்களுங் கட்டப்பட்டபடியே தாமுங்கட்டப்பட்டு அறுகடலுக்குமப்புறத்துள்ள சமுத்திரத்திலாழ்ந்து கிடப்பவராயினரென்பதும், மேனிகழ்ந்தவைகளும் இயைபுபற்றி வீரமாகேந்திரத்திருவிளையாடற்கண் பதின்மூன்று பதினன்காம் பத்துக்களிற் கூறப்பட்டுள.

ஒன்றி னுனி லக்கர்பூ தரைமு னிந்தொ டுக்குகால்
குன்றி னேர்பு யத்துமா வயவன் வில்கு னித்தனன். (ங)

குனித்த வில்வி னின்றெழுங் கோல்கள் கண்ட பகைஞனும்
நுனித்த கோல்க ளேவிவில் லொடித்த போது நூனமே
செனித்தி டாத வயவன்வே றொருவில் கொண்டு தெவ்வன்வில்
தனித்த தேரு மழித்தொர்தோ டலையும் வாள்கொ டேகொய்தான். (ச)

வாள்பி டித்த வசுரனிவ் வாறு மாள வும்படை
தூள்பி டிக்க வேடுமா றூர்ந்து சூரன் வில்லினைக்
கோள்பி டிக்க வேகுனித் தொலியெ ழுப்பி னுனிறை
கேள்பி டிக்கு மாகணங் கீழ்வி ழுந்து மாழ்கவே. (ரு)

அதுதெ ரிந்த பாரிட வரசர் சூர பதுமநில்
மிதம்வ ரைந்து மகிழ்வுறே லென்று போர்வி ளைத்தனர்
கதிகொள் கோடி கோடிவெங் கணையி னவரை வீழ்த்தினுன்
பதும கோம ளைப்பெயர் மாது கொண்ட பரிவினுன். (சு)

பூத ராசர் வீழ்ச்சிகண் ணுறுமி லக்கர் போர்புரி
நீதி கண்ட சூரனிச் சிறுவ ரோடு நெடியபோர்
நாத னுன நான்செய நேர்ந்த தேயெ னுநவின்
றேத மேயி லாயிர மேவி னுல்வி லெற்றினுன். (எ)

வில்வி ழுந்த வவர்கள்கூ விரமெ லாம ழித்தனன்
எல்லி யங்கு பகழியா யிரத்தி னுலி லக்கமென்
சொல்லி ணைந்த வாளியா லவரு டம்பு தொளைசெய்தான்
கல்லி லங்கு தோள்களிற் கமழு மாலை யவுணர்கோன். (அ)

இலக்கர் சோர்வு கண்டமார்த் தாண்டன் வாளி யேவினுன்
அலக்க ணேயி லவன்றவ ரொடித்து மார்ப கழ்ந்துமா
நிலக்கண் வீழ்த்தி யிட்டவே நெடிய சூர்பல் பகழிகள்
கலக்க மேயில் வீரராக் கதன்வெ குண்டு சமர்செய்தான். (கூ)

காது காறும் வில்லிழுத் தம்பு மாரி கடிதுபெய்
தேதும் வென்றி யில்லையென் றெண்ணு மவ்வி ராக்கதன்
ஏதி கொண்டு வெல்வலென் றெடுத்த னன்பெ ருத்தவாள்
கோதி லோதை முனிமனங் கொண்டு ளீர்பின் னதுசொல்வேன். (கo)

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (ஆரும்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

சூருக்கள் சஞ்சரியாநின்ற கடல்சூழ்ந்த வீரமாகேந்திரத்தினின்று வீரபாகு தேவர் ஒளியுடைய ஆகாயமார்க்கமாய்ச் செல்லும்போது பெரிய இலங்கையில் வதியும் அகன்ற யாளிமுகத்தையுடைய அசுரன் "யாரடா நில்" என்று தடுத்தவுடன் வீரபாகுதேவர் அவன் துண்டாகிக் கீழே விழும்படி வாளினால் வெட்டினார். (க)

மேலே எதிர்ப்பாரின்மையை ஓர்ந்த வீரபாகுதேவர், திருச்செந்தூரையடைந்து வேலாயுதக் கடவுளை வணங்கிப் போர்செய்ய விழையுஞ் சூரபதுமன் ஒச்சு கோபக்கோன் மையினை விரித்துரைத்தபின், விளைந்த போரிலே அவ்வீரபாகுதேவர் மூலமாகக் குமார பெருமான் காட்டிய வலிமையினளவை வருணிக்கமுடியுமோ? [முடியாது.] (உ)

## இரண்டாநாட்போர்.*

இரண்டாநாளிற் பொருந்திய போரில் யானைமுகத்துத் தாரகாசுரன் புதல்வனும் அசுரேந்திரன் இலக்ஷரையும் பூதசேனைகளையுஞ் சிறியொடுக்கும்போது குன்றொத்த தோள்படைத்த வீரபாகுதேவர் தமது வில்லை வளைத்தனர். (ங)

வளைத்த வில்லினின்றெழுந்த பாணங்களைப் பார்த்த அசுரேந்திரனுங் கூரிய பாணங்களைச் செலுத்தி வீரபாகுதேவர் வில்லை யொடித்தபோது, பழுதடையப்பெறு அவ்வீரர் வேறொரு வில்லையேந்தி அவ்வசுரேந்திரனுடைய வில்லையுந் தனிப்பட்ட தேரையும் அழித்து, அவனுடைய தோளொன்றனையுந் தலையையும் வாள்கொண்டு வெட்டினார். (ச)

வாளேந்திய அசுரேந்திரன் இவ்வாறு மாண்டவுடன் சூரபதுமன், பூழிதிப்படல முடம்பெல்லாம்படிய அசுரப்படை ஓடுவதையுணர்ந்து முருகனன்பைத் தாயகமாய்ப் பற்றியிருக்குங் கணங்கள் பூமியின்கண் வீழ்ந்து மாழ்கும்படி தனது வில்லைப் பலம் பொருந்த வளைத்துக் குணத்தொனி செய்தான். (ரு)

அதனையறிந்த பூதசேனைத் தலைவர்கள், "சூரபதுமனே! நில்; அளவுக்கு அதிகமான களிப்படையற்க" என்று கூறிச் சமர்செய்தார்கள். பதுமகோமளை யென்னுந் தலைக்கற்புடைய பெண்மணியின் காதலுக்குரியனாகிய அச்சூரன், விரைந்து செல்லுதலைக்கொண்ட கோடிக்கணக்கான பாணங்களையேவி அவர்களைத் தரையில் வீழ்த்தி விட்டான். (சா)

பூதத்தலைவர்கள் வீழ்ந்துவிட்டதைக் கண்ட இலக்ஷர்கள் நியாயவழியே போர் செய்வதைப்பார்த்த சூரபதுமன், "இச்சிறுவர்களோடு மகா போர்வீரனாகிய யான் போர் செய்யும்படியு நேரிட்டதன்றோ" என்று கூறி, பழுதற்ற ஆயிரம் வாளிகளை யேவி அவர்களனைவர் வில்லையும் முறித்துவிட்டான். (எ)

---

* முதனாட்போர்ச் செய்தியை ருஉ - ஆம் பக்கத்துக் குறிப்புரையாலறிக.

**ம**லையை யொத்து விளங்குந் தோள்களில் மணங்கமழு மாலையணிந்த சூரன், பின்பு வில்லையிழந்த அவர்களுடைய தேர்களையும் ஒளிவீசும் ஆயிரமம்புகளால் அழித்து விட்டான் ; ஓரிலக்ஷங்கணைகளால் அவர்களுடம்புகளைத் தொளைத்துவிட்டான். (அ)

**இ**லக்ஷர்கள் அயர்ந்துவிட்டதைப் பார்த்த வீரமார்த்தாண்டன், சூரன்மீது பாணங் களைச் செலுத்தினன். சூரனேவிய பல பாணங்கள் துன்பத்தினையறியாத மார்த்தாண்ட னது கைவில்லை யொடித்து மார்பைப்பிளந்து அவனைப் பெரிய தரையிலே தள்ளிவிட் டன. (இந்நிகழ்ச்சியைக்கண்ட) கலக்கமறியா வீரராக்கதன் சினந்துவந்து போர்செய் தான். (கூ)

**வி**ல்லை வளைத்துக் கர்ணபரியந்தமாக இழுத்துப் பாணமழைவிடாது சொரிந்தும் பயன்காணுத அவ்வீரராக்கதன் (இனி) வாளினல் வெல்லுவேன் என்று தனது பெரிய வாட்படையைக் கைக்கொண்டனன். குற்றமற்ற அருணகிரிநாத முனீந்திரரது மனம் போன்ற மனமுடையீர் ! பின்னடந்ததைச் சொல்லுவேனுக. (க0)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

ஆறும்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

---

## (ஏழாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

கலிவிருத்தம். ( இசை)

இரண்டாமெழுத்தொன்றியசிறப்புடை அடியெதுகை.

**வா**டாங்கிய வவ்வீரனெர் சிலைதாங்கிய வன்சூர்
கோடாங்கிய தேர்பாய்ந்துவில் வெட்டுஞ்செயல் கொண்டான்
பீடாங்கிய லாவாளது வேயிற்றது பின்சூர்
தாடாங்கிய வடியாலுயர் தலைபோந்தனன் வீரன். (க)

**போ**ந்தேகிலம் வீழ்ந்தானது கண்டேபொரு தென்கீர்
ஈந்தேசர மழைபெய்யுமொ ரிந்த்ரப்பெய ரோனைச்
சேந்தேகொரு நூறம்புதெ ரித்தோய்வுப டுத்தான்
ஓந்தேவொடு போராடிட வெனவந்தவு ரத்தான். (உ)

---

க. இயலா = பொருந்தாத.
தாக்கிய எனற்பாலது எதுகை நோக்கித் ' தாங்கிய ' என மெலிந்தது.
தலை = ஆகாயம், அது பிரமாண்டத்தின் மேலுள்ள பெருவெளியென்க.
உ. சேந்தேகல் = சிவந்து செல்லல்.

வீரப்படை யவுணபடை விடுவாயென வீர
தீரப்பெய ரோனேவுபொ ழிந்தானது செவ்வி
சூரப்பெய ரினனீரெழு சுடர்வாளிகள் போந்தவ்
வீரப்பணி யணிதாளனை வீழும்படி செய்த. (௩)

பின்வீரம கேசன்பெரு வேல்வீசலு மதுதான்
பொன்வீரத னுச்சூருரம் வீழ்ந்தேபொடி யாயிற்
றென்வீறறி யாயென்றவ னேவுந்தொடை யேழாற்
கொன்வீரனு மூர்ச்சித்தன னேதோள்தொளை கொண்டு. (௪)

அங்கேசரி பல்லம்புக டேவித்திர ளசுர
வெங்கேசரி முன்றூவிய றைந்தான்விறன் மார்பில்
செங்கேசரி கைவிண்டது செருவீரனை வெஞ்சூர்
இங்கேசரி யென்றேதிசை யெறிந்தேநகை செய்தான். (௫)

சிரப்பேரணி நயப்போடெழில் செயவேயில குபுரந்
தரப்பேரின னெதிர்த்தேவிய சமனீள்படை யதுசூர்
பரப்பாரிகல் வயிரப்புதை படலும்பொடி யாயிற்
றுரச்சூர்பல வலகாலஞ ருழந்தான்விற லோனும். (௬)

மிடலார்புய வீராந்தகன் வெஞ்சூருரு நோக்கி
அடலாரெழில் வடிவோனென மெச்சிப்பல வலகு
விடலாயின னசுரேசனு மோராயிரம் வெங்கோல்
தொடலானடல் வீரன்றவர் தேர்தோள்களை யீர்த்தான். (௭)

வீராந்தக னவன்வீழ்தலு மாவீரிய பாகு
தேராந்தகை கடவிச்சுரர் செறுநன்றனை யெதிர்த்தான்
போராந்தக வுறுசூருமின் னேனேயவை போந்தென்
ஊராந்திரு வழித்தோனென வுருத்தம்புக ளெடுத்தான். (௮)

இருவோருமெய் சரமாரிக ளிருவிண்ணிடை யேகும்
பெருமாதிர மேகும்பல பிலமெங்கணு மேகுங்
கருமாகட லேகுந்தரை களிலேகுமி குங்கார்
தருமாமுகி லேகும்பல தலபாதல மேகும். (௯)

மிளிரந்திணி தோளன்சத மிடலம்பசு ரேசன்
அளிகந்தனில் வீழ்ந்திற்றன வசுரேசன திருநால்
ஒளிவன்கணை யால்வீரனொர் தோளுண்டது தொளையே
தெளிசந்தன ததர்நம்பொரு தெருளீரினு நவில்வேன். (௧௦)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (ஏழாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

வாளையேந்திய அவ்வீரராக்கதன், ஒப்பற்ற வில்லைத் தாங்கிய வலிய சூரபது மனது திண்மைகொண்ட தேரிற்பாய்ந்து அவன் வில்லை வெட்டுஞ் செயலைக் கொண்டான். அங்ஙனம் வெட்டிப் பெருமைபெற்றுக்கொள்ள இயலா அவ்வாளே முறிந்துபோயிற்று. பின்பு சூரன், கால்கொண்டு தாக்கிய அடியினால் அவ்வீரராக்கதன் பிரமாண்டத்திற்கப்பாலுள்ள வெளியை யடைந்தான். (க)

அவ்வாறு போய்த் திரும்பிய அவன் பூமிமேல் வீழ்ந்தான். அதுகண்டு "என்னோடு பொருது" என்னும் வீரமொழி விளம்பிப் பாணமழைபொழிந்த வீரமகேந்திரனைப் பிரணவசுவாமியோடு போராடிடவென வந்த நெஞ்சமுடைச் சூரபதுமன் கோபித்துச் செல்லும்படியான நூறு பாணங்களை யேவி யொடுக்கிவிட்டான். (உ)

"வீரம் பொருந்திய ஆயுதங்கள் படைத்த அசுரனே! என்மீதுன் படைகளை விடு, பார்ப்போம்" என்று வீரதீரன் அம்புகளைச் சொரிந்தான். அப்போழ்து சூரனேவிய ஒளியுடைப் பதினான்கு பாணங்கள் சென்று அவ்வீரக்கழலணிந்த வீரனை மூர்ச்சித்து வீழும்படி செய்துவிட்டன. (ந)

பின்பு, வீரமகேசன் பெரிய வேலாயுதத்தை எறிந்தவுடன் அது அழகிய வீரவில்லைத் தாங்கிய சூரன் மார்பிற்பட்டுப் பொடியாய்ப் போயிற்று. "என் வலிமையை நீ யறியாய்" என்று சூரன் கூறி ஏவிய பாணங்கள் எழினூற் சிறந்த வீரமகேசனுந் தோள்கள் துளைக்கப் பெற்றவனாய் மூர்ச்சையடைந்தனன். (ச)

(பின்பு) அழகிய வீரகேசரியானவன், பல பாணக்கூட்டங்களைச் சொரிந்து சேனையோடுங்கூடிய வெய்ய அசுர சிங்கமாகிய சூரபதுமன்முன் பாய்ந்து அவன் வலி பொருந்திய மார்பிலறைந்தான். அங்ஙனம், சிவந்த அவ்வீரகேசரியின் கைதான் பிளந்தது. இப்படிச் சண்டைசெய்த அவ்வீரகேசரியை வெய்ய சூரன் பிடித்து "இங்கே சஞ்சரிப்பாயாக" என்று கூறி ஒரு திசையிலே யெறிந்து சிரித்தான். (ரு)

தலையிலணிந்த சிறந்த ஆபரணங்கள் நல்ல அழகு செய்யும்படி விளங்கியுள்ள வீரபுரந்தரன் எதிர்த்துச் செலுத்திய யமாஸ்திரமானது சூரனுடைய பருமனும் வலிமையும் பொருந்திய வச்சிர தேகத்திற்றாக்கினவுடன் பொடி பொடியாய்ப் போயிற்று. வீரபுரந்தரனும் வன்மை பொருந்திய சூரனேவிய பல பாணங்களாற் பெருந்துன்ப மனுபவிப்பானாயினன். (சா)

வலிமை பொருந்திய தோளினனாகிய வீராந்தகன் வெய்ய சூரனது மேனியைப் பார்த்து, "இவன் வன்மையும் பேரழகுமுடைய வடிவினனாவன்" என்று மெச்சிப் பல பாணங்களைச் செலுத்தினான். சூரபதுமனும் ஓராயிரங் கொடிய பாணங்களை உந்துதலால் வலிய அவ்வீரனுடைய வில்லையும், தேரையும், தோள்களையும் பிளந்தான். (எ)

வீராந்தகனிவ்வாறு வீழ்ந்தவுடன், பெருமை வாய்ந்த வீரபாகுதேவர் தமது இரதத்தை எற்ற பெருமிதத்தோடு செலுத்தித் தேவ வைரியாகிய சூரனை யெதிர்த்தார். போராகிய மாண்புகொண்டு நின்ற சூரனும் "இவன்முன் நமது அவைக்களத்துக்குத் தூதனாக வந்து நம்மூரின் வளத்தை யழித்தவன்" என்று சினவி அம்புகளை யெடுத்தான். (அ)

இவ்விருவரும் விடுத்த பாணத்தொகுதிகள் பெரிய விண்ணுலகிலும், பெரிய மலைகளிலும், பல பிலத்துவாரங்களிலும், கரிய பெரிய கடல்களிலும், பூமியிலும், நெருங்கிய கார்மேகங்களிலும், கீழுலகங்களிலும், மற்றைத்தலங்களிலுந் தொடர்ந்து சென்றன. (கூ)

விளங்குகின்ற அழகும் வலியும் வாய்ந்த வீரபாகுதேவர் ஏவிய நூறு கணைகள் சூரபதுமனது நெற்றியிலே பட்டொழிந்தன. சூரனேவிய ஒளிவீசு மெட்டு வலிய பாணங்களால் வீரபாகுவினது தோளொன்று தொளையுண்டது. உண்மை தெளிந்த அருணகிரிநாதனுர் காட்டியருளிய நெறியை நம்பும் ஒரு விளக்கத்தை யுடையீர்! இன்னுங் கூறவேண்டியதைக் கூறுவேனாக. (க0)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

ஏழாம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (எட்டாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாகர் மெய்கள் கிஞ்சுகம் பல்கு நீர்க ணுற்றசூர்
சேக ணைந்த வீரன்மா தேரை யேவி னுலுடைத்
தோகை கோடல் கண்டவவ் வொருவன் வேறு தேரமர்ந்
தேக னீடு படைபல வேவி விண்டு முதலினோர். (க)

படைக ளோச்சி னனவை பகைஞன் மெய்வி ழுந்துதாள்
நடைய ணைந்தொ ழிந்தபி னவையில் வீர னெடியவில்
உடையு மாறு பதினைந்தம் போச்சி யிட்ட வசுரன்மெய்
குடைக வென்று வீரனே வயிலும் வீழ்வு கொண்டதே. (உ)

பின்றை மாயை மகனெறி பெரிய தண்டம் வீரன்மார்
பென்ற வங்கம் வீழ்தலுந் தேரின் மூர்ச்சை யெய்தினன்
அன்றெ ழுந்த பேர்களோ டவனு மேயெ ழுந்துமுன்
றென்ற நாளொன் னுர்களுர் மேலை வாயி லெய்தினன். (ஈ)

## மூன்றுநாட்போர்.

எய்தி வீரர் பூதர்கா ளிந்த வாயில் வளைமினே
வெய்தெ னச்சொன் முன்னரே விருது கூறி யவர்செயுஞ்
செய்கை கண்ட சூரருட் சிறந்த வெல்லு மாமுகன்
கொய்வல் சென்னி யென்றுவாள் கொண்டு தாவி வந்தனன். (ச)

அவனை வேள்க ணத்துவல் லானொர் சிங்க நாமனீ
எவன டாவெ னப்பிடித் தெற்றி ளை தன்பினே
பவன வேக வீரர்கோ வரணெ லாம்ப தத்திறுற்
கவன மாய்நொ றுக்கவென் காதை தந்து லாவினான். (ரு)

பூத ராது செய்துகோ புரங்க ளும்பெ யர்த்துளே
மோதி னார்கள் வீரர்கோ முதல்வ னார்பு குந்துவான்
மாதி ராதி யதிரமா வில்வ ளைத்து வன்னிவேல்
ஏதில் வாயு வேல்விடுத் தெரித்த னன்பல் பக்கமும். (சு)

அந்த வன்னி மாற்றுவா னசுர ராச னேவலின்
வந்த வூழி மாலெலா மாறி யோடி மறையுமா
றுந்து வன்னி மின்னுகோ லோச்சி னைவ் வீரனும்
இந்த வாது சூரனே ரிளைய மைந்த னேக்கினன். (எ)

ஏசி லந்த மைந்தனை மிரணி யன்சொல் வான்முனே
காசி லாத வீசனே கார்த்தி கேய னென்றுநான்
பேசி னேன தைப்பிதா பேணு ருதிவ் வல்லலாம்
ஆசி மேவ லாயினு ராயி னும்மொய் செய்வலே. (அ)

என்று கூறி யவ்விரா வெண்ணில் வாளி தூவியே
வென்றி பேசி னைநன் வீர பாகு சாடன்முன்
நின்றி டாம லோடிமுந் நீருண் மீன மாயினான்
பின்றை மாழ்க வன்பினு மங்கி வதனன் வந்தனன். (கூ)

## நான்காநாட்போர்.

இளமை தன்னின் மதிபிடித் தின்னல் செய்த வன்னவன்
களமுன் வந்து நின்றநா ளுலந் நாளோர் காளியை
அளியி னேவ வெண்கைவீ றவளி ழுந்து பாறமார்
பொளியன் மோதி னைனே னேகை சந்த னேகையே. (கo)

---

ச. வெல்லுமாமுகன்=புலிமுகன்; அசாமுகிக்குப் பின்னே மாயைக்குங் காசியபர்க்கும் பிறந்தவன். வெல்லுமா=புலி.

அ. அசி - "ஆசி" என நீண்டது. அசி=அவமதிச்சிரிப்பு.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (எட்டாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

தன்னுடைய தேர்ப்பாகர்களுடைய உடம்புகளிற் சிவப்புமிக்க இரத்தமானது பெருகுதலைக் கண்ணுற்ற சூரபதுமன், வீரபாகுதேவருடைய பெரிய தேரை அம்பினாலே தகர்த்து மகிழ்ச்சி கொள்ளுதலைக் கண்ட அவ்வீரபாகுதேவர், வேறொரு தேரிலமர்ந்து விரைந்து செல்லத்தக்க பல படைகளைச் செலுத்தி, நாராயணன் முதலிய தேவர்களுடைய,— (க)

படைகளையும் பிரயோகித்தார். அவைகள், சூரபதுமனுடைய உடம்பின்கண் வீழ்ந்து பொடிபொடியா யொழிந்தன. பின்பு, குற்றமில்லாத வீரபாகுதேவருடைய நீண்டவில்லானது முறியும்படி பதினைந்து பாணங்களையேவிய அசுரனதுடம்பைத் "துளைப்பாயாக" என்று வீரபாகுதேவர் எறிந்த வேலும் முனைமடங்கி வீழ்ந்து விட்டது. (உ)

இதன் பின்னே, சூரபதுமனெறிந்த பெரிய தண்டாயுதமானது வீரபாகுதேவரது மார்பின்மேலே வீழ்ந்தவுடன் அவர் தேரிலேயே மூர்ச்சையாகி விட்டார். அற்றைநாள் வீழ்ந்துகிடந் தெழுந்துகொண்டவர்களோடு அவரும் மூர்ச்சை தெளிந்தெழுந்து மூன்று நாளிற் பகைவரூரின் மேற்குவாயிலையடைந்தார். (௩)

## மூன்றுநாட்போர்.

அடைந்து, "வீரர்களே ! பூதப்படைகளே ! வெய்தென இவ்வாயிலை வளைந்து கொள்வீர்களாக" என்று கட்டளையிட்ட வளவில் அவர்கள் வஞ்சினங்கூறிச் செய்யுஞ் செய்கையினைப் பார்த்த சூரர்கட்குள்ளே சிரேட்டனாகிய புலிமுகம் படைத்த அசுரன் "இவர்கள் தலைகளைத் துணிப்பேன்" என்று வாளேந்தித் தாவி வந்தான். (௪)

அப்படி வந்தவனைச் செவ்வேட் பரமனது பூதசேனைகளுள் திறமை வாய்ந்தவனாகிய சிங்கன் என்பவன் "நீ யாவனடா" என்றுகூறி அவனைப் பிடித்துக் கொன்றுவிட்டான். அதன் பின்பு வாயுவேகமுடைய வீரபாகுதேவர், "கோட்டையரண்களையெல்லாம் நுங்கால்களால் ஒல்லையில் நொறுக்கிவிடுங்கள்" என்று பணித்து (மேல் நிகழ்வதை யெதிர்பார்த்தவராய்) உலாவிவந்தார். (௫)

பூதவீரர்கள் அக்காரியத்தைச் செய்துவிட்டுக் கோபுரங்களையும் பெயர்த்து நகருக்குள்ளே யெறிந்தார்கள். வீரபாகுதேவர், ஊருட்புகுந்து விண்ணுந் திசைகளு நடுங்கத் தமது பெரியவில்லை வளைத்து அக்கினி அஸ்திரத்தையுங் குற்றமற்ற வாயுஅஸ்திரத்தையும் ஏவிப் பல பக்கங்களையு நெருப்புக்கிரையாக்கினர். (௬)

அந்த நெருப்பைத் தணிக்கும்பொருட்டுச் சூரபதுமனேவலாற் றிரண்டு வந்த யுகாந்தகால மேகங்களெல்லாம் உருமாறிச் சிதைந்தோடி மறையும்படி நெருப்பைக் க

கும்படியான காந்திவீசும் பாணங்களை வீரபாகுதேவரும் விடுத்தார். இந்தப் போராட்டத்தைச் சூரபதுமனுடைய ஓரிளைய குமாரன் கண்ணுற்றான். (எ)

குற்றமற்ற அவ்விளைய குமாரனாகிய இரணியாசுரன் சொல்லலுற்றனன் :— "யான் முன்னரேயே குற்றமற்ற பரமசிவனே கார்த்திகேயனாய் வந்துளானென்று கூறினேன். அதனை என் தந்தையார் புறக்கணித்துவிட்டு இத்துன்பமாகிய அவமதிச்சிரிப்புக்குட்படலானார்; ஆயினும் யான் சமர்செய்வேன்" (அ)

என்று சொல்லி, அந்நாள் இராத்திரியில் யுத்தகளமெங்கணும் அஸ்திரங்களையிறைத்து மூடி வீரவார்த்தைபேசினான். அவன், அப்போது வீரபாகுதேவருடைய எதிர்ப்புக்கு முன்னிற்கமாட்டாமலோடி மீனுருக்கொண்டு கடலின் மறைந்து கொண்டான். அதன்பின்பு இவ்வாறு வீறழிந்த அவனுடைய தம்பியாகிய அக்கினிமுகாசுரன் வந்தான். (௯)

## நான்கா நாட்போர்.

தன்னிளமைப் பருவத்திற் சந்திரனைப்பிடித்துத் துன்புறுத்திய அவன், போர்க்களத்தில் வந்துநின்ற நாள் நான்காநாளாகும். அற்றைநாள் அவன் ஒரு காளியை ஆராதித்து (எதிர்க்கும்படி) அன்போடு ஏவ; அவள் தன் எட்டுக்கைகளின் பலத்தையுமிழந்து ஓடும்படி ஒளிமயமான வீரபாகுதேவர் அவளது மார்பிலே அறைந்தார். அப்படிச் செய்த அத்தேவரது மகிழ்ச்சி, சந்தச் செய்யுள்களைப்பாடிய அருணகிரிநாதனார்கொண்ட மகிழ்ச்சி யாதோ? அதுவே. (௧0)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்
எட்டாம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

---

## (ஒன்பதாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

கலிவிருத்தம். (இசை)

அடியொன்றற்குப்பதினைந்தக்கரம்.

தனதன தனதன தனதன தனன.

எரியென வருமெறு ழெரிமுகன் விடுகோல்
கரியென வொழிவது கதுவவொர் விறலோன்
துரிதர்கள் விடுபடை துகளென வழியப்
பொருதுமெ ரிமுகனு மிறநனி பொருதான். (௧)

அவனுயிர் விடுதலு மவனது கணையாற்
சிவனுல கணவிய சிறுவர்க ளெழுவர்
இவணளி யெனவொரு கணையெழு தினனு
ருவகைய னமனும தினிதுசெய் தனனால். (௨)

---

௧. துரிதர்கள் = தீவினையாளர்; துரிதம் - வடசொல்.

மறலிந லளியொடு மறைதலு மரசற்
குறுதிசொ லிடுமற முனிபவ னுரனே
டெறிசத முனையினை யிகலொடு பிடியா
விறலவ னிறவது கடவினன் விறலோன். (௩)

## ஐந்தா நாட்போர்.

கனகணர் செயமுர சறைகவின் மிகவைந்
தெனுமொரு தினமதி வினன்முனி வினன்மா
கனைகழ லொலிதர வருகன பலமோ
டனலென வமர்நிலை யணுகியி தறைவான். (௪)

பகைஞர்கள் செருவுயிர் பருகுமி னிவணீர்
ககனச மரமென தெனல்கழ றினனவ்
விகலரும் வளைவளை யெதிரெதி ரெனவே
புகலுரை யொடுபல சமர்நனி பொருதார். (௫)

பொருதும வரைமிதி துமிதுமி பொடிகண்
இருளுற வறையறை யிடையுர முதைநீள்
பெருமுடி நெரிநெரி யரியரி பிடர்தோள்
இருவரை யிடியிடி பிசைபிசை யெனவே. (௬)

புடைசெவி ரதமெடு பொடிகணை கடிகாய்
அடையென வதைவதை யகலமு ளவிர்தீக்
கடைகடை குறைகுறை கரசரண் முடியென்
புடையுடை நெடுமிட றொடியொடி யெனவே. (௭)

பிரமத கணர்சொன படிபிண மலையாய்ச்
சுரர்பகை யணிகுழு மினசுடர் வடிவாட்
பெரியவன் விணிலொலி பிளிறவொர் நடனந்
தருபொழு துதிரொடு துளியதொர் தலையே. (௮)

அதுதகு வரரசன் மகன்முடி யெனவே
கதுமென வறிசுரர் களிபெரு கினர்பாய்
மதுகைவ யவனெதிர் வருமரி முகவன்
சதசுத ரையுமசி கொடுநனி தறியா. (௯)

வருபொழு துயர்கொடி வயவர்க ளசையா
விருதுரை புகல்கையின் மிளிர்வய வனுமோம்
சரவண பவசிவ வெனநடை தரலே
அருணடம் விரவின னருணைய னிறையே. (௧௦)

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (ஒன்பதாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

ஒப்பற்ற பராக்கிரமத்தையுடைய வீரபாகுதேவர், (பின்பு) நெருப்பைப்போலெதிர்த்து வரும் அக்கினிமுகாசுரன் ஏவிய சரங்களெல்லாங் கரியைப்போலக் கருகி யொழிவடையவும், பாவிகளாகிய மற்ற அசுரர்கள் பிரயோகித்த ஆயுதங்களெல்லாம் பொடிபட்டொழியவும், போர்புரியாநின்ற அவ்வசுரன் மாய்ந்து போகவும் உக்கிரமாகச் சண்டைசெய்தார். (க)

அக்கினிமுகன் ஆவிதுறந்தவுடன், "அவனுடைய பாணங்களாற் சிவலோகஞ் சேர்ந்த (எம்முடைய தம்பிமார்களுள் வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேசன், வீரராக்ஷசன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் என்னும்) எழு சிறுவர்களையும் ஈண்டுக் கொணர்ந்து என்முன் வரும்படி செய்வாயாக" என்றொரு பாணத்திலெழுதி யமனுக்கு விடுத்தார் அரிய உவகையராகிய அவ்வீரபாகுதேவர். அது கண்ணுற்ற யமனும் அக்காரியத்தைச் செவ்வனே செய்தான். (உ)

அப்படிச் செய்த யமன் நல்லன்போடு மறைந்தவுடன், சூரபதுமனாகிய அரசனுக்கு அனுகூலவுறுதி பயக்கும் மொழிகளைக் கூறிய (அவ்வரசனுடைய முதன்மந்திரியாகிய) தருமகோபனனவன், வலிமையொடு விடுத்த வச்சிராயுதத்தை வீரபாகுதேவர் தம் வலிமையாற் பிடித்துப் பெருமையோடு வந்த அவ்வசுரன் மாண்டுபோம்படி அவன்மீது திருப்பியெறிந்தனர். (ங)

## ஐந்தா நாட்போர்.

யுத்தந் தொடங்கிய ஐந்தாநாளில், பெருமைபெற்ற பூதவீரர்கள் செயபேரிகை முழக்கும் அழகு மிகுதியாக; பானுகோபனனவன் தானணிந்துள்ள சத்திக்க வல்ல பெரிய வீரக்கழல் ஒலிக்கத் தன்னைச் சூழ்ந்துவரும் பெரும்படைகளோடு (பெருஞ் சீற்றத்தினால்) அக்கினியைப்போல அமர்க்களத்தையடைந்து (தன் சேனைகளை நோக்கிப்) பின் வருமாறு சொல்வோனாயினன். (ச)

"நீங்க ளிங்கிருந்துகொண்டு யுத்தஞ் செய்யும் பகைவர்களுயிரை வாங்குங்கள். ஆகாயத்தில் நின்றுகொண்டு சண்டை செய்வது எனது வேலை" என்றான். (அப்படியே) அப்போர் வீரர்களும் "வளை ! வளை !! எதிர் ! எதிர் !! என்றெழுஞ் சொற்களோடு பல துறைப்பட்ட யுத்தங்களையு நன்கு செய்தார்கள். (ரு)

(அப்போது) போராடும் அந்த அசுரர்களை "மிதி ! மிதி !! வெட்டு ! வெட்டு !! பொடி ! பொடி !! கண்கள் பஞ்சடையும்படி அறை ! அறை !! இடுப்பிலும் மார்பிலும் உதை ! உதை !! நீண்டு பெருத்த தலைகளை நெரி ! நெரி !! கழுத்தை அரி ! அரி !! தோள்களாகிய பெரிய மலைகளை இடி ! இடி !! (உறுப்புக்களை யெல்லாம் ஒன்றாக்கிப்) பிசை ! பிசை !!" என்றும்,— (சு)

"பக்கங்களிற் செல்கின்ற தேர்களை எடு! எடு!! அவற்றைத் தரையின் மோதிப் பொடி! பொடி!! கணைகளைக் கடி! கடி!! காய்ந்த சருகெனும்படி அத்தேராளிகளை வதை! வதை!! மார்பகத்தே தீயெழ முழங்கையாற் கடை! கடை!! கைகளையுங் கால்களையுந் தறி! தறி!! தலையையும் எலும்பையும் உடை! உடை!! நீண்ட கழுத்தை ஒடி! ஒடி!!" என்றும்,— (எ)

பிரமத கணர்கள் மொழிந்தபடியே (கொல்லப்பட்ட) அசுரசைனிய அணிகள் பிணமலைகளாய்க் குவிந்தன. ஒளி பொருந்திய வடித்த வாளேந்திய வீரபாகுதேவர், ஆகாயத்திற் பேரொலி யெழும்படி ஒரு போர்க்கூத்தாடும்போது உதிர மொழுகின வண்ணமாய் ஒரு தலை துள்ளி விழுந்தது. (அ)

அத்தலை, சூரபதுமன் மகனது சிரசேயென்று விரைவிலறிந்த தேவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். (அத்தருணத்திற்) பூமியை நோக்கிப் பாய்ந்துவரும் வெற்றியுடைய வீரபாகுதேவர், தம்மை யெதிர்த்து வந்த சிங்கமுகனுடைய குமாரர்கள் நூறு பெயரையும் வாளாயுதங்கொண்டு சாம்படி வெட்டி,— (கு)

(தம்முடைய சேனைகளிடையே) வந்தபொழுது, உயர்த்திப்பிடிக்குங் கொடிகளையேந்திய பூதவீரர்கள் ஆனந்தக்கூத்தாடி விருது மொழிகள் கூறுகையில், ஆங்கு விளங்குகின்ற வீரபாகுதேவரும் "ஓம் சரவணபவ சிவ" என்றவழுத்தி நடனஞ்செய்தலைத் தமது திருவருள்விலாச நடனத்தோடு கலந்துகொள்வோனாயினன் அருணகிரிநாத முனீந்திரருக்கு இறைவனுகிய கந்தபெருமான். (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்
ஒன்பதாம்பத்து: வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பத்தாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

இரண்டுசீர்வண்ணம்.

பானு கோபனி றந்த பின்பவ னல்வ கைப்படை வெள்ளமோர்
மான மேயில வாய்வ ளைந்தன வீர வாகுவை யப்பெருஞ்
சேனை வீரர்ம தாவ ளம்புலி சீயம் யாளியி ருல்கடா
பூனை கோடைசு வாமு தற்பல வாமு கப்பொலி வுடையரே. (க)

இன்னு மேயவர் கரசி ரஞ்சொலி னீடில் விண்டவழ் கார்கண்மேல்
மன்னு மேபல பலவெ னும்படி மாக மண்ணுமு லாவிநீர்
துன்னு மேகமெ லாமி ழுத்ததி துரித முண்டனர் நீர்விடாய்
இன்னு மேவுறின் வாரி கொள்வர னோர்க ளென்பது மேயுமால். (உ)

இன்ன வாறுசெ றிந்து சூழ்தரு சேனை கண்டெறும் வீரன்வாள்
என்னு மோர்படை தடறி ருத்தியி ரும்பு நேர்நெடு வில்லினை
மன்னு வானவி லென்ன வேநனி கோட்டி வம்பன டுங்குறக்
கொன்னு நாணொலி செய்த னேகவர் கொண்ட கோரம டக்கினன். (ங)

கோடி வெங்கணை யேவி யேபல கோடி வெங்கரி மாய்த்தனன்
கோடி வெஞ்சர மேவி யேபல கோடி வெம்பரி போக்கினன்
கோடி வெந்தொடை யேவி யேபல கோடி வன்குய வீர்த்தனன்
கோடி வெம்படை யேவி யேபல கோடி வன்பெயர் வீழ்த்தினன். (ச)

அசுர வீரர்வி டுஞ்ச ரங்களை யடுச ரங்கொட ழித்தனன்
அசுர வீரர்க ளெறிக முக்களை யடுக முக்கொட றுத்தனன்
அசுர வீரர்கள் வீசு மாழியை யடுவ லாழிகொ டெற்றினன்
அசுர வீரர்க டாவு தண்டினை யடல்கொ டண்டினொ றுக்கினன். (ரு)

வீர னேவட லேவி னுலெறும் மேய தானவர் வன்கவான்
ஆரல் போலெரி கண்ணி ருந்தலை யகல மார்புக ணைக்கழல்
ஈர னீள்குடர் மோடு தோள்விர லேசு வாய்செவி பற்கள்போய்ச்
சோரி வாரியெ ழுந்த தாயினும் வந்த சேனைதொ லைந்தில. (சு)

என்னு முண்மையு ணர்ந்த வீரனி யாது செய்குவ லென்றுளே
முன்னி முன்னவ னுய கந்தனை முன்னி விச்சுவ ரூபனாய்
மின்னி மண்ணில றைந்தும் வானிலெ றிந்தும் வம்பலில் வீசியும்
பன்னி ரன்மலை மோதி யும்பல சேனை வெள்ளம ழித்தனன். (எ)

மஞ்சு கொள்ளடி நைக்கு மாபல முறைக றங்கென வந்துமற்
றெஞ்சி யுள்ளத ளங்கு ழும்பென வாதல் கண்டரு ளைப்புகழ்ந்
தஞ்ச வில்லுரி யோரை யெய்தின னரிய சீறுரு வாகியவ்
விஞ்சு பல்லசு ரப்பி ணக்குறை வீதி தோறும்வி ழுந்தன. (அ)

அவுண மாதர்கள் கண்டி தென்மக னண்ண னப்பன ரும்பினேன்
கவன காதலன் மாது லன்மரு கன்பி தாமக னதுகொலோ
எவனி வாறுசெய் தானெ னப்பெரி துங்க லங்கின ரேவெறி
அவணி லாதெழு தருக வந்தமொ டாடி யுண்டன பல்பிணம். (கூ)

பிள்ளை யோடுவ ரும்பல் பேய்கள்பி றங்கு மூளைக வீரல்கள்
வெள்ளை யார்விளர் தாம ருத்திவி ழுத்த சைத்திர டாமுமுண்
டுள்ள மோகைபொ ருந்த வேகுதி கொண்டு சேய்துதி செய்தன
எள்ள லேதுமி லருணை யன்றிரு வெய்த வெண்ணுமெ னன்பரே. (கo)

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பத்தாம்பத்து· வீரபாகுதேவர்முன்னிலை)

பானுகோபன் மடிந்தபின்பு அவனுடைய சதுரங்க சேனசமுத்திரங்கள் அளவில்லனவாய் வந்து வீரபாகுதேவரை வளைந்துகொண்டன. அந்தப் பெரிய சேனையைச்சார்ந்த வீரர்கள் யானை, புலி, சிங்கம், யாளி, எருது, கடா, பூனை, குதிரை, நாய் முதலிய பல்வகைப்பட்ட முகப்பொலிவுடையவரே. (க)

மற்றுமவர்களுடைய புயங்களையுஞ் சிரங்களையும் புகலத் துணிந்தால், அவை ஒப்பற்ற வானத்திற் சஞ்சரிக்கும் மேகமண்டல நிலைகளின் மேல் எண்ணிகந்தனவாய் அணைந்து நிற்பனவாம். இங்ஙனம் விண்ணுமண்ணுந் திரிந்து நீர் நிறைந்த கார்மேகங்களையெல்லாமிழுத்து மிக்க விரைவோடு அவர்கள் பருகிவிட்டனர். இதற்குமேலும் நீர் வேட்கை தோன்றுமாயின் அவர்கள், கடலையே குடித்து விடுவார்களென்று கூறலும் பொருந்தும். (உ)

இவ்வண்ணமாக நெருங்கி வளைந்த சேனைகளை வலிவாய்ந்த வீரபாகுதேவர் கண்ணுற்று வாளை உறையுட் புகுத்திவிட்டு, தமது இரும்பையொத்த நீண்டவில்லை வானத்திற் பொருந்தும் இந்திரதனுசெனும்படி நன்கு வளைத்து, திசைகள் நடுக்க மடையும்படி மிக்க நாணொலிசெய்து அனேக வீரர் காட்டிய மிடுக்கை அடக்கிவிட்டார். (ங)

ஒருகோடி கொடிய பாணங்களை யேவிப் பலகோடி வலிய யானைகளையும், மற்றொருகோடி சுடுசரங்களைச் செலுத்திப் பலகோடி கொடிய குதிரைகளையும், பிறிதொருகோடி வெங்கணைகளை விட்டுப் பலகோடி தேர்களையும், வேறுமொருகோடி வெய்யகோல்களைத் துரத்திப் பலகோடி அசுரர்களையும் வீரபாகுதேவர் அழித்துவிட்டனர். (ச)

அசுரவீரர்கள் எவிய பாணங்களைக் கொலைவல்ல பாணங்களைக்கொண்டும், அவர்களெறிந்த சூலங்களை வெவ்விய சூலங்களைக்கொண்டும், அன்னூர் வீசிய சக்கராயுதங்களை வலிய அப்படைகளையே கொண்டும், அவர்கள் செலுத்திய தண்டாயுதங்களை அவ்வகைத் தண்டாயுதங்களையே கொண்டும் வீரபாகுதேவர் நாசஞ் செய்தனர். (ரு)

வீரபாகுதேவர் செலுத்திய வலிய பாணங்களால் வலிமை பொருந்திய அசுரர்களுடைய வலியதொடை, அக்கினிபோலெரியுங்கண், பெரிய தலை, அகலமான மார்பு, கணைக்கால், ஈரல், நீண்டகுடல், வயிறு, தோள், விரல், நிந்திக்கும்வாய், காது, பற்கள் ஆகிய இவையெல்லாஞ் சிதைந்தமையினல் இரத்தக்கடல் பெருகியது. ஆயினும் எதிர்த்துவந்த சேனைகள் ஒழிந்தபாடில்லை. (சு)

இவ்வுண்மையை யுணர்ந்த வீரபாகுதேவர், "இனி நாம் செய்யக்கடவதியாது?" என்று தமக்குள்ளே சிந்தித்து, (உடனே) யாவர்க்கும் முதல்வனுகிய கந்தபெருமானைத் தியானித்து, விசுவரூபியாய் விளங்கிநின்று, தரையில் மோதியும், விண்ணிலெறிந்தும், நாற்றிசைகளிலும் வீசியும், பல வரிசைகளாயமைந்த மலைகளின்மீது மோதியும், அசுர சேனைசமுத்திரங்களைத் துவமிசஞ்செய்தனர். (எ)

வலிமைகொண்ட தம்முடைய அகப்பாதங்களே (அசுரரை) நைத்து விடும்படி பலமுறையுங் காற்றுடிபோலச் சுழன்று சுழன்று வந்து, எஞ்சிநின்ற சேனைகளுங் குழம் பாகக் கலங்கி யொழிய வீரபாகுதேவர் கண்ணுற்றுத் திருவருளைப் புகழ்ந்து, தமது சாதா ரணத் திருமேனியைத் தாங்கி, அஞ்சாது நிற்குந் தமது சேனையின் பக்கலையடைந்தனர். அந்த எண்ணிலவாய அசுரப்பிணங்களின் சிதறிய உறுப்புக்கள், வீரமாகேந்திரபுரத்தின் தெருக்க ளொவ்வொன்றிலும் போய்விழுந்தன. (அ)

அவற்றை அவுணமகளிர்கள் பார்த்து, "இஃது என் மகனுடையது: இஃது என் அண்ணனுடையது: இஃது என் தந்தையுடையது: இஃது என்னருமைத் தம்பியுடை யது: இஃது என் நினைவுக்குரிய கணவனுடையது: இஃது என் மாமனுடையது: இஃது என் மருமகனுடையது: அஃது என் பாட்டனுடையது. அந்தோ ! எவன் இவ் வாறு செய்தான்?" என்று பெரிதுங் கலக்கமெய்தினர்கள். அப்போது எழுந்தாடிய முண்டங்களோடு பேய்கள் தாமுமாடிப் பல பிணங்களையு முண்டன. (௯)

பழிப்புச் சிறிதுமில்லாத அருணகிரிநாதனுரடைந்த பேற்றை அடைய நாடும் என் னன்பர்களே ! பிள்ளைகளோடு வந்த பல பெரிய பேய்கள், எங்குங் காணக்கிடந்த மூளை களையும் ஈரல்களையும் வெள்ளிய கொழுப்பையும் அப்பிள்ளைப்பேய்கட்கு ஊட்டிப் புஷ் டிப்பான மாமிசத்திரள்களைத் தாமுமுண்டு மனம் மகிழ்ச்சியடையக் குதித்துக்கொண்டு செவ்வேள் தோத்திரங்களைப் பாடின. (௧0)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

பத்தாம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

---

## (பதினோராம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

பறந்தலைச்சிறப்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டுசீர்வண்ணம்.

காரெனத் திரண்டு திமிர்குற ளுருவக் கழுதுக டகுவர்க டாளை
நேரினிற் சிறந்த காலென நிறுவி நெடியகை களைவளை யெனச்சேர்த்
தோரினத் திறங்கொ ணரம்புக ளால்யாத் துரவக லங்கொடு வேய்ந்த
பேரிருப் பமர்ந்து மகிழ்ந்தன சில்காற் பெருவெயிற் கொதுங்குநர் மான. (௧)

ஆண்டினி திருந்த வாறவை யூன்புய்த் தருந்திவெந் தாகமே தீர்ப்பான்
நீண்டினி தலம்பு குருதியுண் டேப்ப நெடிதெழ நின்றம ரார்வாய்
தீண்டிய திறங்கொள் பணிலநன் கெடுத்துத் தேமொழி யவுணநங் கையர்நூல்
ஈண்டிறு மிறும்பம் பம்மென முழக்கி யிருந்துணங் கையுமிழைத் தனவே. (௨)

**ஆ**ட்டமில் சிரசி னடிநெடுங் கரத்தை நுழைத்திசை நரம்பசைத் தேபண்
மீட்டின வினிது சிலவெறி சிலபேய் வியநறும் பழந்தரு பணையாங்
காட்டிடை யுறையெம் முணவுநுங் கென்றான் கண்களை யகழ்ந்துதுய்த் தொருவில்
கோட்டிறை படலை வாகைநாம் விழைதல் குடரென வவையணிந் தனவே. (௩)

**வி**ரிதரு நிணத்தை யரம்பையின் முருந்தாய் விரித்ததன் காய்சுரை யவரை
கரிசற வினிக்கு மாசினி முருங்கை யுருள்வழு துணையெனுங் காய்கூழ்
இரிபற வமைத்த வுணவென வரைத்தோ ளகடுநா முடிவிர லீர்ங்கண்
பரிவுறு தசைக்கொய் வலகைகள் படைக்க நுகர்ந்தது தலைப்பெரும் பாசம். (௪)

**அ**ப்பெரும் பாச மகல்கபா லத்தே யளைந்துவைத் துள்ளமச் சைகளைத்
துப்புறும் பாய சம்மென வருந்தித் துணிதர வாவயிற் கிடக்கும்
ஒப்புறுந் தேரி னுப்பணன் கமர்ந்த தொருதொழும் பசுரர்பொன் முடிபூண்
நப்பருந் தாம மதனுடம் பணிய நமவெனப் பணிந்தன பலபேய். (௫)

**அ**டித்தன பலபே யவணுள வாச்சி யம்பல வெடுத்தணி விருது
பிடித்தன பலபேய் வீரபா கடலைப் பேசுதி ரென்றவா பெரும்பேய்
படித்தன பலபேய் துதிபல வநனும் பன்மணி வாங்கியொத் தறுத்தும்
நடித்தன பலபேய் தலைப்பெரும் பேயு நடமிழைத் ததுநடு நின்றே. (௬)

சங்கரற் கிளைய மகனருள் வாய்ந்த வீரபா கெனும்படைத் தலைவா
செங்கடிக் கமல கரத்துநின் வின்மை செப்புதற் கரிதரி தம்மா
எங்களுக் கினிய வுணவுனைப் போல வுதவினர் யாரினி யுதவுந்
துங்கரைப் புகழ லெமக்கில தாமே யென்பன சிவணுமத் துதியே. (௭)

உயிரொரு வாத வுடம்பரு கணையு மொருகொடி யதன்விழி பிடுங்க
முயல்கையில் வாயின் வழிவரு முதிர மக்கொடி யுருவெலா மூடிற்
றயலுள வேணை யரிட்டம்வே றென்றே யதுதுரத் தினபின ரவற்றை
அயர்வறு பாறு மதையிருங் கழுகு மதைமுடு வலுந்துரத் தினவால். (௮)

**அ**வ்வழி யொருவு மவ்வின மினஞ்சேர்ந் தெதிரெதி ரறிந்தய ரமர்தான்
இவ்வித மெனவிம் முதலரி தஞ்ஞான் றெழுபெருங் காகமா சங்கம்
வெவ்வினை நிலையின் விண்ணிடைப் பரவ விம்மிரா வந்ததென் றிறகு
செவ்விதி னிலவு வனவகன் றனநாய் சிவைமகிழ்ந் தூளையிட் டனவே. (௯)

**நா**யொரு கோடி நரியொரு கோடி நசைஇய வூன்பசி யென்னும்
நோயரி யோட நுகர்பொழு துலகை நூக்குமோர் கடலெனச் செந்நீர்
சாயரி வேழ முதலிய மிதப்பச் சாகரம் பாய்தலுந் திமிநா
வாயரி போயொல் கினவென நவின்மின் வளரொலி முனியதர் விழைவீர். (௧௦)

---

௬. உம்பல் = யானை.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினோராம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

### பறந்தலைச்சிறப்பு.

கரிய மேகத்தைப்போலத் திரண்டு பூரித்த குறியவடிவுடைப் பேய்கள், இறந்து பட்ட அசுரர்களுடைய கால்களை ஒழுங்கிற் சிறந்துள்ள கால்களாக நாட்டி, நீண்டகைகளை வளைகளாக அக்கால்களிற் சேர்த்து, ஒரேதன்மை வாய்ந்த நரம்புகளால் அவற்றைக் கட்டி, வலிய மார்பாகிய பாகத்தைக்கொண்டு மூடுதல்செய்த பெரிய பந்த விற்றங்கி மகிழ்வுற்றன; கடிய வெயிலுக்காற்றாது சிறிது போது நிழலிலொதுங்குபவர் போல. (க)

அப்பேய்கள், அங்குச் சுகமாக இருந்தபடியே மூடுதல் செய்துள்ள மாமிசத் தைப் புய்த்தருந்தி, வெய்ய தாகத்தைத் தீர்ப்பதற்காக அலம்புதலைச் செய்து நன்கு பெருகியோடும் இரத்தத்தைக் குடித்து, அதிக ஏப்பமெழ நின்று, (மடிந்த) யுத்த வீரர்கள் வாயில் வைத்தூதியுள்ள உறுதியான சங்கங்களைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் வாயில் வைத்து "இனிய சொற்களையுடையராகிய அசுரமகளிருடைய தாலிக்கயிறுகள் இப்பொழுதே அறும் அறும் பம்! பம்!!" என்று ஊதிப் பெரிய துணங்கைக்கூத்து மாடின. (உ)

சில பேய்கள், அசைவற்றுக் கிடந்த தலையின் அடிப்பாகத்தில் நெடிய கையொன் றைப் புகுத்தி, அதனில் இசைதரு நரம்புகளைக் கட்டிப் பண் நன்கு மீட்டின. வேறு சில பேய்கள், "நல்ல பெரிய பழங்களைத்தரும் பனங்காட்டிற் சஞ்சரிக்கும் எங்கட்கு (விருப்ப மான) உணவு நுங்கே" என்று கூறிக்கொண்டு மாமிசமாகிய கண்களை (அந்நுங் கெனவே) தோண்டியுண்டு, "ஒப்பற்ற வில்லைவளைத்து வேலைசெய்த வீரபாகுவாகிய தலைவனது மாலை வாகையே: நாம் விரும்பு மாலைகள் குடல்களே" என்று கூறி அவற்றை யணிந்துகொண்டன. (ங)

பரந்த கொழுப்பைத்தானே வாழைக்குருத்தாய் விரித்து, அதன்கண்ணே கேடின்றிப் பக்குவப்படுத்தப்பட்ட உணவு இவையெனும்படி பாதிக்கையை வாழைக்கா யாகவும், வயிற்றை வட்டச் சுரைக்காயாகவும், நாக்கை அவரைக்காயாகவும், தலையைக் குற்றமில்லாமலினிக்கும் ஈரப்பலாக்காயாகவும், விரல்களை முருங்கைக்காயாகவும், குளிர்ந்த கண்களை உருண்டைக் கத்தரிக்காயாகவும், கொய்தெடுத்த நல்ல மாமிசங்களைச் சோறாக வும் அடிமைப்பேய்கள் படைக்க; அவற்றிற்கு அதிபதியாகிய பெரும்பேய் உண்டது.

[இத் திருச்செய்யுட்கட் கூறப்பட்ட மரக்கறியுவமைகட் கியையப் படைத்தற்குரிய பாசனம் வாழையிலையென்ற வுவமைப் பொருத்தம் இனிதுணரக் கிடக்கின்ற தன்றோ?] (ச)

அப் பெரும்பேயானது, விசாலித்த மண்டையோடொன்றிலே பிசைந்து வைத் திருந்த மூளைகளைச் சுத்தமான பாயசமெனக் குடித்துவிட்டுச் சிதைவுண்டு அவ்விடத்திற் கிடந்த அழகிய தேரொன்றின் நடுவில் நன்றுயமர்ந்தது. (அப்போது) ஓரடிமைப்பேய்,

மடிந்த அசுரருடைய பொற்கிரீடம், ஆபரணம், நல்ல பருத்த மாலை ஆகிய இவற்றை அப்பெரும்பேயினுடம்பில் அணிய; பலபேய்களும் அதன்முன்பாக 'நமஃ' என்று கூறிப் பணிந்தன. (ரு)

பல பேய்கள், அங்குக் கிடந்த பலதிறவாத்தியக் கருவிகளையெடுத்து அடித்தன. வேறு பல பேய்கள், அழகிய விருதுகளை எடுத்துப் பிடித்தன. தலைமைப்பேய் "வீர பாகு வீரத்தைப் புகழுங்கள்" என்று கூறியபடி பலபேய்கள், பல தோத்திரங்களைப்படித் தன. வேறு பல பேய்கள், யானை மணிகளை அங்ஙனமெடுத்துத் தாளந்தட்டிக்கொண் டும் நடனமாடின. இவைகட்கு நடுவே தலைமைப்பேயு நின்று கூத்தாடியது. (சு)

"சிவபெருமானுடைய இளையகுமாரனது திருவருள் வாய்ந்த வீரபாகு என்னுந் தளத்தலைவனே! வாசனைபொருந்திய செந்தாமரைப் போதுபோன்ற உன்கையின் விற் றிறமானது அம்மா! சொல்லுதற்கரியது அரியது. எங்கட்குப் பிரியமான உணவை உன் னைப்போற் கொடுத்தவர் இதுவரையிலு மெவருமிலர். இனிமேலேனு முதவும் பெரியா ரைப் போற்றலும் எங்கட்கு வாய்க்காது" என்னுங் கருத்துக்கள் அப்பேய்கள் செய்த தோத்திரத்திற் பொருந்தியிருந்தன. (எ)

உயிர் முற்றிலு நீங்காத ஒருடம்பி னருகிடத்தை யடைந்த ஒரு காக்கையானது அவ்வுடம்பின் கண்ணைப் பிடுங்க முயலும்போது, அவ்வுடம்பின் வாய்வழியாய்ப் பெருகிய இரத்தம் அக்காக்கையினுடம்பு முழுவதையும் மூடிவிட்டது. (இப்படி நிறமாறிய காக் கையைப்) பக்கத்திலிருந்த மற்றைக் காக்கைகள் வேற்றினஞ் சேர்ந்ததெனக் கருதித் துரத்திய பின்பு, அவைகளைச் சோர்வற்ற பருந்து துரத்தியது. அதனைப் பெரியதொரு கழுகும், அதனையொரு நாயுந் துரத்தின. (அ)

அப்படித் துரத்தப்பட்ட வழியாக நீங்கும் அந்தக்கூட்டம், தத்தமினத்தைச் சேர்ந்து எதிர்ப்புக்கெதிர்ப்பு அறிந்து செய்த சண்டையானது இவ்விதமென்றெடுத்துச் சொல்லுதற் கரிதாகும். அப்போதெழுந்து வந்த பெருங்காக்கைப் பெருந்திரள், யுத்த களத்தின் ஆகாயவெளியெல்லாம் பரவ; (அப்பரவலால்) இருணிறைந்த இராக்காலம் வந்ததென்று, சிறகுகள் நன்கமையப்பெற்ற பறவைகள் தத்தமிடங்கட்குச் சென்றுவிட் டன. நாய்களு நரிகளுஞ் சந்தோஷித்து ஊளையிட்டன. (கூ)

சந்தமுனிவராகிய அருணகிரிநாதனரது செழித்து வளருந் தெய்வநெறியை விரும்புவோர்களே! எண்ணில்லா நாய்களு நரிகளுந் தாங்கொண்டிருந்த வலிய பசிநோய் பறந்தோடும்படி விரும்பிய ஊன்களை யுண்ணும்போது, உலகத்தை மூடிக்கொள்ள வரு மொரு கடலெனும்படி இரத்தவெள்ளமானது மடிந்த சிங்கம் யானை முதலியன தன்னில் மிதக்கச் சமுத்திரத்திற் பாய்ந்தவுடன், யானை மீன்களும் மரக்கலங்களும் வலியிழந்து (அக்கடலில்) ஒடுங்கிவிட்டன என்று கூறுவீர்களாக. (க0)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

பதினோராம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பன்னிரண்டாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

### வஞ்சிவிருத்தம்.

முண்டகன் மகன்மகன் முதுசேய்
வண்டிற லுடலுயிர் வதைத்தோற்
கண்டர்க டொழுகுக னவனுள்
கண்டுதன் கழனினை வளித்தான். (க)

காசிபன் மகன்மக னுயிர்கார்
மூசுவி ணடைந்ததை மொழிந்தார்
மாசறு வேயர்செம் மலுக்கென்
றேசில ரரசிமு னிசைத்தார். (உ)

அம்புய கோமளை யதுகேட்
டம்பக நீருகுத் தாள்பின்
செம்புன றிவளவ னுறுப்பை
வெம்பினர் தரவிழுந் தழுதாள். (ங)

தொட்டிலி லுணைச்சுடும் வெயிலின்
கட்டர சினையொரு கணத்தே
இட்டனை சிறையயி லிளைஞன்
விட்டவ னுல்விளிந் தனையே. (ச)

அலர்மகள் கரக்கிளி யதையென்
மலர்கர மளித்தவென் மகனே
இலயமொய் விடுத்துனை யிழந்தேன்
இலகுறென் வயிற்றெரி யெழவே. (ரு)

முன்னவில் சிதடர்முன் முனிவர்
சொன்னமெய் துரிதமொ ருவுமா
றன்னுர முருவிய துகொல்கோல்
என்னுயி ருருவவல் லிடும்பை. (சு)

கார்மகி டமுய்குடங் களுக்குச்
சார்களி ருறழுவுன் றடிவின்

ரு. இலகு = நொய்மை.

றேர்விபு தருக்குநந் தெனக்கும்
வார்களி மடிவழங் கியதே. (எ)

பானலக் கமகளிர் பார்வைக்
கீநயப் பெருவிருந் திரற்றுன்
கானடைத் திருவெமன் காண்பேன்
தேனிணைப் பழித்ததெள் ளமுதே. (அ)

நானமுச் செவிலிய ரழுநன்
மேனகைக் களமழ வியனுர்
மானகர்த் திரளழ மரித்தாய்
கோனுமுற் றுறுமிது குறிப்பே. (௯)

பொன்னுல கெரித்தவப் போதே
உன்னுரன் வாழ்வுமின் னனவாம்
என்னிலை யுணர்ந்தன னென்றுள்
மின்னவள் புகழனை விழைவீர். (௧௦)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பன்னிரண்டாம்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

பிரமன் பௌத்திரனாகிய சூரபதுமனுடைய மூத்தமகன் (=பானுகோபன்) உடைய வளப்பமும் வலிமையும் பொருந்திய உடலையும் உயிரையும் வதைத்தவராகிய வீரபாகுதேவருக்குத் தேவர்கள் வணங்குங் குகக்கடவுள் அவரதுள்ளம் இன்னதெனவறிந்து தன்றிருவடியைத் தியானித்திருக்கும் நினைவை அளித்தருளினன்.

[மிக்க சிரத்தைகொண்டு பானுகோபனை வதைத்தொழித்த நினக்கு யாதுவேண்டுமென்று குமாரபரமேசுவரன் வீரபாகுதேவரை வினவியபோது அவர், யாதும்வேண்டா; தேவரீர் திருவடிமலரைத் தியானித்தலே வேண்டுமென் றெண்ணியதை அவ்வீசனுணர்ந்தனன் என்பார் "அவனுள்கண்டு" என்று (செய்யுட்கட்) கூறினரென்க.] (௧)

காசிப பௌத்திரனாகிய பானுகோபனுயிர் கருமேகம் படர்ந்த விண்ணகத்தே சென்றுவிட்ட செய்தியை, அசுரேசனுக்குத் தவறுதல் செய்யாத ஒற்றர்கள் தெரிவித்தனரென்று சிலர் சூரன்பத்தினிக்கு அறிவித்தனர். (௨)

அச்செய்தியை (அப்பத்தினியாகிய) பதுமகோமளை கேட்டுக் கண்ணீர் உகுத்தனள். பின்பு, இரத்தஞ்சொரியு மவனுடைய அவயவங்களைத் துக்கமுடையார் சிலர் கொண்டுவந்து சேர்க்க; அவள் அலறி அவற்றின்மேல்விழுந் தரற்றினள். (௩)

---

அ. "பார்வைக்கு நயப்பெருவிருந்து ஈ" எனக்கூட்டுக. இரற்றல் = ஒலித்தல்.

"(மகனே!) உன்தொட்டிலில் உன்னைக்காய்ந்த கிரணமுடைச் சூரியனை ஒரு நொடிப்போதிற் சிறைப்படுத்தினாய்: அத்தகைய ஆற்றலுடைய நீ இந்நாள் வேலேந்திய ஒரு சிறுவனேவிய வீரனால் மாண்டுபோயினையே! (ச)

இலக்குமி கையிலிருந்த கிளியை மலரெனமலர்ந்த என் காத்திற் சேரும்படி செய்த என் மகனே! உன்னை நாசத்திற் கேதுவாகிய போருக்குச் செல்லவிடுத்து இவ் வமைய மெளிமைப்பட்டுள்ள என் வயிற்றில் நெருப்புமூள உன்னைப் பறிகொடுத்தேன். (ரு)

கடவுட்டியானமில்லாத மூடர் முன்னே அந்த ஞானமுள்ள முனிவர் சொன்ன உண்மையுபதேசம், விரைவில் இருதயத்தை விட்டுச்சென்று விடுதல்போல ஆற்றொணுத் துன்பம் என்னுயிரில் ஊடுருவிச் செல்லும்படி வீரபாகுவிடுத்த கணை, உன்மார்பில் ஊடுருவிச் சென்றதோ? (சு)

கரிய எருமையையும் உய்யும் பசுக்களையுஞ் சார்ந்த குளிரானது எருமைக்கு இன்பத்தையும் பசுவுக்குத் துன்பத்தையுங் கொடுப்பதுபோல உன் மரணமானது, இப்போது அழகுடைய தேவர்கட்கு மிக்க இன்பத்தையும் நொந்தழியுமெனக்குத் துன்பத்தையுந் தருவதாயிற்றே. (எ)

தேனினுமினிய தெள்ளமுதம் போல்வானே! கருங்குவளையை நிகர்க்குங் கண்ணுடைய மகளிர் பார்வைக்கு நயமுடைப் பெருவிருந்தினை யீந்துள்ள வீரக்கழலொலி யோடுங்கூடிய உனது நடையின்அழகை இனி யெங்கே காண்பேன்? (அ)

நற்றாயாகிய யானழவும், செவிலித் தாய்கள் அழவும், நன்மை பொருந்திய சிறந்த அணிகள் பூண்ட நின்மனைவிகள் அழவும், மேன்மையுடைய இந்நகரவாசிகளாகிய கூட்டங்கள் அழவும் நீ மாண்டனை. (இனி) நம்மனைவர்க்குந் தலைவராயுள்ளவரும் (=சூரபதுமாவும்) முடிவடைவார். உன் மரணத்தால் இது குறிப்பிடத்தக்கதே. [குறிப்பு = கருதிக்கோடலில் வருவது.] (கூ)

தேவருலகத்தை நீ தீக்கிரையாக்கிய அப்போதே உனது வலிமையும் வாழ்வும் இன்னதன்மை யுடையனவாகும் என்னு நிலைமையினை யுணர்ந்தேன்" என்று புலம்பினாள் மின்னலைப்போன்ற காந்தியுடைய பதுமகோமளை (என்க;) அருணகிரிநாதர் நெறியினை விரும்பி நிற்பீர்!

["நீ தேவருலகத்தைத் தீக்கிரையாக்கிய அப்போதே உன் வலிமையும் வாழ்வும் இன்ன நிலைபேறுடையன வென்பதை யுணர்ந்தேன்" எனச் சிறப்பிற்கூறிய பொருளும், "தீக்கிரையாக்கிய அப்போதே உன்வலிமையும் வாழ்வும் இவ்வாறுகத்தா ஞெழியுமென்னு நிச்சயத்தையுணர்ந்தேன்" என இழிபிற்கூறிய பொருளும் இரட்டுறமொழிதலிற் பொருந்தப் "பொன்னுல கெரித்தவப் போதே—உன்னுரன் வலியுமின் னனவாம்—என்னிலை யுணர்ந்தன னென்றாள்" என்று ஆசிரியர்கூறியிருத்தல் பேருவகையினைப் பெருக்குகின்ற தன்றோ? நிலை=நிலைபேறு, நிச்சயம்.] (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

பன்னிரண்டாம்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதின்மூன்றும்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

கலிநிலைத்துறை.

இரண்டுசீர்வண்ணம்.

இலக்கம் வாகினி சேனையொ டரிமுக னென்பான்
வலக்க மூழியி னெரியெழப் பொருகளம் வரலும்
உலக்கை யாசுர வுதிட்டிர னுரனெரிந் தொழிய
அலக்க ணேதுமில் பாரிட சிங்கனன் கறைந்தான். (க)

சிங்க நாமனை யெதிர்த்தவல் லவுணர்க டீளைத்
தங்க நாமனோர் கணத்தினிற் றூரத்தினன் றகுவர்
வெங்கண் வீரதுன் முகவனை வீரவெய் யோன்மா
பங்க மேவுற வறைந்தடர் மூர்ச்சையும் பணினான். (உ)

மடங்கல் வெந்தட முகனெதிர் மறைந்துதன் வயவர்
அடங்க வுஞ்செலல் கணித்தம துகைப்புய வமரன்
தொடங்கி னன்சமர் பெரிதுமத் தோள்வலி யசுரன்
திடங்கி ளர்ந்தவொர் பாசமென் பதுசெலுத் தளவும். (ந)

### ஆறுநாட்போர்.

போர்கொ ளாறெனு நாளளப் பில்படைப் பொலிவோ
டேர்கொ ளோரெழு சகச்சிர கேசரி யிவுளி
சூர்கொள் கூளிக டொடுத்தகொன் றுசரத மென்னும்
பேர்கொ டேர்நடு விளங்கிய வசுரபி ரான்முன். (ச)

வாடை வானவ னிடம்வல நடுப்பிற வகையாய்
ஓடு மாறுக டாவொரு தேரினி லொளிவேல்
கூடு தோளிறை யமர்ந்துசெய் சிலைக்குணத் தொனியால்
ஆடல் போய்மிக மயங்கின வவுணர்க ளனிகம். (ரு)

ஒப்பி லாதவிர் செம்மணித் திருவுரு வுடையென்
அப்ப னுடல னுடலின் விடுசர மவுணர்

---

உ. தங்க நாமன் = கனகன்.

வெய்யோன், சூரியனெனும் மார்த்தாண்டனாகலின் வீரமார்த்தாண்டனே 'வீரவெய்யோன்' எனப்பட்டனன்.

தப்பெ லாமற வவர்கரங் கழல்களைத் தலையைத்
துப்ப ருவல கெங்கணு மிறைத்தன துணித்தே. (சு)

அழகு மேயவ னாகிய சூரனொ ரலகாற்
குழவு மேயவ னுயர்திருத் தேர்க்கொடி யறுத்தான்
குழவு மேயனு மவன்கொடி கடல்விழக் கொய்தான்
அழகு மேயவொ ராயிரம் வளைமுழங் கினவே. (எ)

அச்சு தன்கர சங்கமு முழங்கிய தநனே
எச்ச நின்றெரி பாவகன் வாரண மெனவாய்ச்
செச்சை யம்புய வறுமுகன் செழுமணித் தேர்மேல்
நச்சு மின்பொடு கூவின னெடுந்துச நயக்க. (அ)

மாது சங்களை யறுக்குமுன் வீரிய வாகு
கோது றும்பகை யரையன்வில் லொடித்தனன் கொடித்தேர்
மீது ரங்கொடு பாய்ந்தவன் றனைப்பிடி யாவிண்
மீதெ றிந்தன னசுரன்மொய் போந்தனன் மிடலோன். (கூ)

அடல னுயவிர் சூர்பெரு வரவலி யறிந்த
மிடல னுயவிர் வீரிய வாகயில் விமலன்
கெடலி லாலய வாயிலி லமர்கெழு தகைமைப்
படலை யானென வறிதிர்கள் புகழ்ப்புதன் படரீர். (க0)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதின்மூன்றும்பத்து. வீரபாகுதேவர்முன்னிலை)

இலக்ஷம் வாகினி சேனையோடு சிங்கமுகாசுரன் தன்னுடைய வலிய கண்கள் யுகாந்தகாலத்து நெருப்பைப்போற் கனல அமர்க்களம் வந்தவுடன், கலக்கஞ் சிறிதுமறியாத பூதகணத் தலைவனாகிய சிங்கனென்பான் கற்றிரள்போன்ற புயமுடைய உதிட்டிரனென்னும் அசுரன் மார்பொடிந்து மாளும்படி பலமாய் அறைந்தான். (க)

(இவ்வாறு செய்த) சிங்கனை யெதிர்த்து வந்த வலிய அசுரப்படைகளைக் கனக னென்னும் பூதவீரன் ஒரு நொடிப் பொழுதில் துரத்தியடித்தான். (அச்சமயம்) வீர மார்த்தாண்டன், அசுரரைச் சார்ந்தோனான கொடுங்கண் படைத்த வீரனாகிய துன்முக னைப் பெரிய பங்கம் பொருந்தும்படி புடைத்து மரணத்துக்குச் சமமாக மூர்ச்சித்து வீழவும் பண்ணினான். (உ)

தன் படைவீரர்கள் எல்லோரும் சிங்கமுகாசுரன் முன்பு வலியிழந்து மறைந்து போதலைக் கவனித்த வலிபொருந்திய தோள்களையுடைய வீரபாகுதேவர், புயவலிமிக்க

அச்சிங்கமுகாசுரன் திண்மைசான்ற ஒப்பற்ற மாயாபாசத்தை யேவுமளவும் பெரிய போர் புரிந்தார். (ங)

## ஆறுநாட்போர்.

ஆறுநாட்போரில் எண்ணில்லாத சேனைப் பெருக்கோடு அழகிய சிங்கங்களுங் குதிரைகளும் அஞ்சாமை படைத்த பூதங்களும் ஏழாயிரம் நிரலாகப் பூட்டிய பெரிய துசரதமென்னும் பேர்கொண்ட தேரிலமர்ந்து விளங்கிய அசுரர் தலைவனாகிய சூரபதுமன் முன்பு,— (ச)

இடப்பக்கம் வலப்பக்கம் நடுப்பக்கம் முதலிய பல வகைகளிலு மோடும்படி வாயு தேவன் செலுத்தும் இரதத்தின்மீது, பிரகாசிக்குந் திருவேல் சார்த்தப்பட்ட திருப்புயமுடைய பரமன் ஆரோகணித்துச் செய்த வில்லின் குணத்தொனியினால் அசுரப்படைகள் தமது களியாட்டிழந்து பெரிதுந் தியக்கமுற்றன. (ரு)

நிகரற்று விளங்குஞ் செம்மணிச் சோதித் திருவுருவுடைய என் பரமபிதாவுந் திருவிளையாடல் புரிபவனுமாகிய முருகவேள் தனது திருவிளையாட்டில் ஏவிய அம்புகள், அசுரர்கள் செய்த பாவங்களெல்லாந் தொலையுமாறு அவர் தம் கை, கால், தலைகளைக் கொய்து திறம்படைத்த உலகெங்கும் இறைத்தன. (சு)

அழகு வாய்ந்தவனாகிய சூரபதுமன், ஒரம்பினால் இளம்பெருமானது உயரிய திருத்தேர்க்கொடியை அறுத்தான். அப்பெருமானும் சூரபதுமனது தேர்க்கொடியைக் கடலில் வீழுமாறு அறுத்தெறிந்தான். பானுகம்பனுடைய ஆயிரம் வாய்களிலும் வைத்து ஊதும் அழகிய ஆயிரஞ் சங்குகளும் அப்போது முழங்கின. (எ)

அக்கணத்திலேயே விட்டுணு மூர்த்தியினது பாஞ்சசன்னியமும் முழங்கியது. யாகத்தினின்றெரி அக்கினி தேவனுங் கோழியுருவந்தாங்கி வெட்சிமாலையணிந்த அறுமுகக்கடவுளின் செழுமைவாய்ந்த மணிரதத்தின்மேல் நெடிய கொடியானது சிறக்குமாறு விரும்பு மின்பத்தோடு கூவினான். (அ)

கூறியபடி பெருங்கொடிகளை யறுக்குமுன், வீரபாகுதேவர், குற்றமுடைப் பகைஞர்க்கு அரசனான சூரபதுமனது தேர்மீது பாய்ந்து அவனது வில்லை யொடித்தனர். சூரபதுமன் அவரைப் பிடித்து ஆகாயத்திலெறிந்தனன். வீரபாகுதேவர் அங்கிருந்து தன் சேனைகள் நிற்குமிடத்திற்குத் திரும்பினார். (கூ)

திருப்புகழ் பாடிய தெய்வப் புலவனாரது செந்நெறிச் செல்வீர்! வலியோனாய் விளங்கிய சூரபதுமனது பெரிய வரபலத்தை யறிந்த பராக்கிரமசாலியாய் விளங்கும் வீரபாகுதேவர், வேலாயுதக் கடவுளது அழிவற்ற திருக்கோயில் வாயிலில் அமரும்படியான சிறப்புரிமைமாலை யணிந்துள்ளவரென அறிவீர்களாக. (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

பதின்மூன்றும்பத்து : வீரபாகுதேவர்முன்னிலைமுற்றிற்று.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினான்காம்பத்து)

**கலிவிருத்தம்.**

எழுத்தளவுடையன.

### முதனாட்போர். *

**நீ**டணிகொள் சேனையொடு நீளயிலன் வானத்
தூடதர்க டந்தலையொ லிக்குமிட னெய்தி
ஈடணவு சூரனுள மோர்ந்துமிளி ரேம
கூடமென வேகுயிலொர் பாசறைய மர்ந்தான். (க)

**மு**த்திணைசெல் பானுவைமு னிந்தவனெய் மோக
அத்திரமி லக்கர்விற லாருநவ வீரர்
மொய்த்தபடை யாவையும யக்கமுரு கையன்
சித்தமத றிந்ததுதெ ரிப்பவர்வ ரூஉமுன். (உ)

**ஆ**சறும மோகமெனு மத்திரம்வி டுத்தான்
ஈசன்மகன் யாவருமெ ழுந்துதொழு தார்கள்
நேசமலி யப்படைநி ராகுலனை யெய்திற்
றேசறும டுத்ததின மேணரிமு கன்சேய். (௩)

### இரண்டாநாட்போர்.

**அ**லைகடனி கர்த்ததள மாநியுத வெள்ளத்
தலைவனென வாய்க்கரிமு கன்றனய னோடும்
மலையனைய தேரவுணர் மாவிறைவ னோடும்
புலைகமழெஃ கங்கொடுப றந்தலைபு குந்தான். (௪)

---

* இம்முதனாட்போரோடு இனிக்கூறப்படும் ஐந்து நாட்போர்களையுங் கூட்டியுறழ ஆறுநாட் போர்களாம். **ஸ்காந்த மஹாபுராணங்** கூறியவாறே இப்போர் நாளாறுங் குறிப்பிடப்பட்டனவாகலின், வீரபாகுதேவர் வாயிலாக நிகழ்ந்த முற்போந்த ஆறுநாட் போர்களுஞ் செவ்வேட்பரமன் போராக இங்ஙனம் பிரித்துக் கூறப்படும் ஆறுநாட்போர் களுள் அடங்குவனவேயாம். போர் நாள்களை யதிகப்படுத்திக் கொண்டார் கொள்கை இந் நூலாசிரியர்க் குடம்பாடன்று. சூரசங்கார சஷ்டியென்பதையுங் கருதிக்கொள்க.

க. எமகூடமென்னும் பாசறை, மகரவாரிதி சூழக்கிடக்கும் வீரமாகேந்திரபுரத்தின் வடபுறத்திலே விசுவகன்மாவினா லமைக்கப்பட்டதென்க. சூரபன்மனது நகரம், “வீர மாஹேந்த்ரம், வீரமாஹேந்த்ரபுரம்” எனவே **ஸ்காந்த மஹாபுராணத்திற்** கொளக்கிடக் கின்றது.

அப்பொழுதி ராயிரவெள் ளங்கணமு மார்வம்
எப்பொழுது மேயபல வீரருமி யங்கோர்
செப்பமொடு மாபலன டத்துமொரு தேர்மேல்
ஒப்பறுகு மாரனுமு யுத்தகளம் வந்தான். (ரு)

தீரமுட னேயிருதி றப்படையு மேசெய்
போரிடைவி யூகவசு ரப்படைகள் பொன்றிப்
பாரவரை போற்குவித லுங்குருதி பௌவம்
நேரலுநி னைந்தசுரர் போர்நிபுணன் வந்தான். (சு)

வந்தெரிமு கப்படைவ ழங்கினன தைத்தான்
கந்தனடி யிண்டைகரு திக்கணர்க ளுள்ளோர்
சுந்தரன்வி ழுங்கியதி சூரனெனு மன்னோன்
உந்துபிற வாயுதமு முண்டவனை மாய்த்தான். (எ)

படைத்தலைவ னின்னணம டிந்தபரி சைக்கண்
டிடர்ப்படுந னுங்குகக ணந்திறல ரெல்லாம்
ஒடுக்கமுற வேசெருவு ளுற்றினனு மாய
குடைத்தலைவ னுமசுர கோகுகன்முன் வந்தான். (அ)

வந்துனடர் சேனைகளை வீழ்த்திவிறன் மல்கு
சிந்தையதி சூரனுயிர் தின்றவனை யும்போர்
அந்தமசு ரேந்திரனை யட்டவனை யுங்கோள்
நந்துவணம் வீழ்த்தியுள நானுனெதிர் வந்தேன். (கூ)

இங்கொருவ னுகியுள நீயிளைஞ னேயோர்
தங்கிமிளிர் மேனியுடை யாய்தகைமை மிக்க
வெங்கணைமு னென்புரிவை வென்றிபட ரென்றான்
செங்கிரியி னுமனிறை தேடுமதி யுள்ளீர். (க0)

---

க0. படர்தல் = போதல்; **பிங்கலநிகண்டு** காண்க. வியாபித்தலுமாம். "படர்" என்னும் ஏவல், நில்லாது செல்க என்னும் பொருளிற் கொள்ளப்படும். மற்றொரு பொருள் கொள்ளுங்கால் வியாபி எனவாம்.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினான்காம்பத்து)

நீண்ட அணிகளாய் வகுக்கப்பட்ட பூதசேனைகளோடு நெடிய வேலைப்பிடித்துள்ள பெருமான், வானவீதி வழியே போந்து அலைமுழங்கு மிடத்தை (=திருச்சீரலைவாயினை) அடைந்து, சூரபதுமனது நெஞ்சத்திட்பத்தை (வீரபாகுதேவர் வாயிலாக) உணர்ந்து ஏமகூடமென விளங்கும் பாசறையிற் றங்கியருளினன். (க)

## முதனாட்போர்.

மூன்றுலகங்களிலுஞ் சஞ்சரிக்கின்ற சூரியனைச் சிறைப்படுத்திய பானுகோபனெய்த மோகாஸ்திரமானது இலக்ஷர்களையும், வலிவாய்ந்த நவவீரர்களையும், குழுமிநின்ற மற்றைப்படைகளையும் மயக்கிவிட; இந்நிகழ்ச்சியைத் தெரிவிக்க எவரும் வருமுன்னரே முருகவேளினது திருவுள்ளமறிந்தது. (உ)

(உடனே) முருகவேள், குற்றமற்ற அமோகாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். எல்லோருமெழுந்து அவனது திருவடி பணிந்தார்கள். பெருமான்பா லன்புமிக்க அவ்வஸ்திரம் அவன் சன்னிதியினையே யடைந்தது. போர்ச்சிறப்பிற் குறைவறியாத மறுநாள் வலிமைவாய்ந்த சிங்கமுகாசுரன் மகனாகிய அதிசூர னென்பான்,— (ங)

## இரண்டாநாட்போர்.

அலைகடலை யொத்த பெரிய இலக்ஷம்வெள்ளஞ் சேனைகட்குத் தலைமை பூண்டு தாரகாசுரன் மகனாகிய அசுரேந்திரனோடும், மலைபோன்ற தேரிலமர்ந்த சூரபதுமனோடும் புலால் மணங்கமழும் ஆயுதம் பலதாங்கிப் போர்க்களத்துக்கு வந்தான். (ச)

அப்போது ஈராயிரவெள்ளம் பூதகணங்களும், பெருமானிடத்து என்ஞான்று மகலாத அன்புடைய (நவவீரர், இலக்ஷர் முதலிய) பல வீரர்களும் அணிவகுத்துச் சூழ்ந்துவரு சிறப்போடு, வாயுதேவன் செலுத்தும் ஓரிரதத்தின் மீது தன்னேரில்லாச் சண்முகப் பெருமானும் அமர்க்களமடைந்தான். (ரு)

இருபக்கத்துச் சேனைகளும் ஆண்மையோடு புரிந்தபோரிலே படை வகுப்புக்களோடு கூடிய அசுரசேனையானது சிதைவுற்றுப் பெரிய மலைகள்போற் குவிதலையும், இரத்தவெள்ளங் கடலாய்ப்பெருகுதலையும் எண்ணி அவ்வசுரசேனாபதியாகிய அதிசூரனென்னும் போர்வல்லான் எதிர்த்து வந்தான். (சு)

வந்து அக்கினி அஸ்திரத்தை யேவினன். பூதகணங்களுள் அழகுடன் விளங்கிய (உக்கிரன் என்னும் பெயரிய) ஒரு வீரன், கந்தவேளுடைய திருவடித் தாமரைகளைத் தியானித்து அந்த அஸ்திரத்தையும், அதிசூரனேவிய பிற ஆயுதங்களையும் விழுங்கி அவனையுங் கொன்றுவிட்டான். (எ)

அசுரசேனபதி இவ்வாறு மாய்ந்ததைப்பார்த்துத் துன்பப்படுபவனும், முருகவேள் பக்கத்துப் பூதவீரரெல்லாம் ஒடுங்கியடங்கும்படி அப்போது சமர் செய்தவனுமாகிய (ஒப்பற்ற) குடைகவிக்கப்பெற்ற சூரபதுமன் குகக்கடவுள் எதிரில் வந்தான். (அ)

இப்படி வந்து, "உன்னுடைய அடர்ந்த பூதப்படைகளை யழித்து, வலிமலிந்த நெஞ்சினனாகிய அதிசூரனுயிரைப் போக்கிய உக்கிரனையும் அசுரேந்திரனது போர்முடிவில் அவனைக்கொன்ற வீரபாகுவையும் வலியொழியும்படி வீழ்த்திவிட்ட நான் (இப்போது) உன் முன் வந்துளேன். (கூ)

இங்கே ஏகனாகியுள்ள நீ இளைஞனே: அழகு பொருந்தி விளங்குகின்ற மேனியையுடையாய்! பெருமைமிக்க என் கொடுங்கணைகட்கு முன்பு வெற்றியுற நீ யாது செய்ய மாட்டுவை? நில்லாதோடிப்போ" என்று கூறினன் (என்க;) அருணகிரியென்னும் பெயருடைய நாதனார் தொழுத அமலனை நாடும் அறிஞரே! (க0)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்
பதினான்காம்பத்து முற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினைந்தாம்பத்து)

### கலிவிருத்தம்.

### எழுத்தளவுடையன.

யானுனிலை நோக்களவில் யாருழையு நீபோர்க்
கானகலை கற்றுளனு மல்லையெனல் கண்டேன்
மானமுடை யாயினும தர்த்தமர்செய் வாயேல்
யானுனைவி டேனெனலு மோதினன வன்றான். (க)

என்னையிக னீயொருவ னென்றிளைஞ னென்று
சொன்னமொழி யோடுசொன யாவுநிச மாகும்
என்னுடைய வீரரழி யார்வருவர் நீதான்
சொன்னபடி நில்பொருதெ னச்சொவினன் வேலன். (உ)

கோமளகு மாரனுரை கொண்டசெவி யன்கோல்
மாமழைபொ ழிந்துபின்வ ழங்குபல பல்லம்
ஓமழகன் மொய்ம்புழைவி ழுந்ததரின் வெந்த
தூமழவ னம்புசில சூரரிவில் வீர்த்த. (ங)

இடர்ப்படும வன்புறனி ருந்ததள மெல்லாம்
மிடற்குமா ஞழிகொட ழித்தவித மோர்ந்தவ்
வடற்செறுந ஞரணன்வி ழுப்படைக ளாதி
விடுத்தனன வற்றினைவி ழுங்கியது வேலே. (ச)

தோல்விதன தென்பதுணர் சூரபது மாவவ்
வேல்வலிமை யானுமறி யேனெனவி யந்தவ்
வேல்வைகெழு பாசுபத மேவினன தைச்சேய்
வால்கிளர்த ஞதுகரம் வைகவருள் செய்தான். (ரு)

இவ்வமைய மாதிருவ ஞனவசு ரேசன்
எவ்வணிக லன்படையு மின்றிநில நின்றான்
அவ்வறிது ணர்ந்தகுகன் யாதுனக மென்றான்
அவ்வசுர ஞளயம ரென்றநன்ம றைந்தான். (சு)

## மூன்றுநாட்போர்.

நீளரசி ஞனிலைக லங்கியது மூன்றும்
நாளருண கோபனமர் நாடியவண் வந்து
கோளரியின் மிக்கபல வீரரொடு கோபம்
மூளணிகம் யாவையுமு ருக்கவென மாயை. (எ)

தந்தபடை யோச்சினனஃ தன்னவர்கள் சாம்பப்
பந்தமது செய்தறு கடற்கடைப டுத்த
தெந்தைகர வேலதையி ரித்தினைவு தீர்த்தே
வந்துவர லாறுசொலி மன்னியதை கையே. (அ)

மாலைதவழ் மார்பமவிர் மாவசுரன் மைந்தன்
வேலையலை போன்மனம லைப்புணவி ரைந்தோர்
சோலையைய டைந்தனன வற்கெளிய சோதி
மாலையின்ம றைந்திடுநர் போற்கடன்ம றைந்தான். (கூ)

கதிக்கதவ மாகவொளிர் கந்தனடி யன்பர்
துதிக்கவிதை பாடியதிர் துந்துபிய றைந்தார்
விதிக்குலமு ணர்ந்துபுகழ் பாடியவி வேகன்
பதிக்கடிமை யாபவர்சொல் யார்பகர வல்லார். (கo)

---

கo. சொல் = புகழ்.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினைந்தாம்பத்து)

"உன்னிலைமையை யான் பார்த்தவளவிலும் நீ போர்த்தொழின் முறையைப் போதிக்கு நூல்களை யாரிடத்தேனுங் கற்றவனல்லையெனப்படுதலைக் கண்டேன். மானமுடையவனே! நீ ஓடிப் போகாமலின்னுஞ் செருக்கோடு நின்றுகொண்டு போர் புரிவையாயின், உன்னை நான் விடவேமாட்டேன்" என்று சூரன் கூறினன்.

[கசு - ஆம் பத்தின் ஈற்றுச்செய்யுளீற்றடியொழிந்த ஏனை மூன்றடிகளிலும் இம் முதற் செய்யுளிலுமுள்ள **தொடர்கள்**— "இங்ஙனம் யார் துணையுமின்றி ஏகனாய் நிற்கின்றனை; இப்படி நிற்றலினும் இளைஞனுமிருக்கின்றனை. அழகு கிடந்து பிரகாசிக்கின்ற மேனியுடையாய்! மேன்மைமிக்க எங் கணைகளுக்குமுன் எவ்வெற்றியினை யடைவாய்? ஓடிவிடு. யான் உனது தன்மையினை நோக்கிய அளவாலும் நீ எவ்வாசிரியர் பாலும் ஆயுதப் பயிற்சியினைக் கற்றுக்கொண்டவனல்லை யெனலையுங் கண்டவனானேன். மானமுடையாய்! இதன் மேலுஞ் செருக்கி நின்று பொருதுவையேல் யான்உன்னை விடேன்" என்று செருக்கிச் சுவாமியை நோக்கிச் சூரன் கூறினனெனும் பொருள் பயக்கின்றன. இத் தொடர்களுள்—

"ஒருவன்" என்பது நீ ஏகனென்னுங் கடவுளென்பதையும், "இளைஞனே" என்பது நீ ஈசனுக்கு எஞ்ஞான்றும் பிள்ளையே என்பதையும், "ஏர்தங்கி மிளிர்தகைமைமிக்க மேனியுடையாய்" என்பது அழகிருந் தொளிசெய்யும் மாட்சிமையுடைப் பாரமேச்சுவர ரூபமுடையானே! என்பதையும், "வெங்கணைமு னென்புரிவை வென்றி" என்பது என் கொடுங்கணைகளுக்கு முன் நீ யாது புரிவையெனின் வெற்றியே என்பதையும், "படர்" என்பது (அவ்வெற்றித் தொழிலில்) வியாபிப்பாயாக என்பதையும், "யானுனிலை நோக்களவில் யாருழையு நீ போர்க்கு ஆனகலை கற்றுளனும் அல்லையெனல் கண்டேன்" என்பது நினது நிலையினை யானுற்று நோக்கிய அளவானும் நீ இயல்பாகவே யாவுமுணர்ந்த சுயம்பு எனல் காண்பவனானேன் என்பதையும், "மானமுடையாய் இன்னும் மதர்த்து அமர்செய்வாயேல் யானுனைவிடேன்" என்பது மாண்புடையானே! இந்நிலையி னின்றுகொண்டிருத்தலினின்றும் அதிகரித்து அமர்புரிவையேல் (அங்ஙன மாற்றுத) யான் நின்னை விட்டுவிடா மயிலுஞ் சேவலுமாய் வாழ்வேன் என்பதையும் பொருளாகப் பயக்கின்றன. இவ்வுண்மையினையே இதனடுத்த செய்யுளிலே "நீ சொன்ன யாவு நிசமாகும்" என்று சுவாமி சூரன்முன் கூறியருளினனெனலுங் கூறப்பட்டது.

இப்படி யிருதிறப்பொருள்பயக்கச் செய்யுள்களை நடாத்தின செயல், கற்றார்க்குப் பேருவகை பயக்கும் இரட்டுற மொழிதலில்வைத் தெண்ணப்படுமன்றோ?] (க)

"இங்கு நீ என்னை ஒருவனென்றும் இளைஞனென்றுஞ் சொன்ன மொழிகளோடு மேலுங் குறிப்பிட்டவையெல்லாம் மெய்யேயாம். என்னுடைய சேனைவீரர்கள் மாண்டொழிந்து போகார்கள்; மீளத்திரும்புவர். நீ சொன்னபடியே நீ ஓடிப்போகாது நில்; போர்செய்" என்று வேலிறைவன் விளம்பினன். (உ)

இளமைப் பிராயமுடைக் குமாரக் கடவுள் கூறியருளியதைக் கேட்ட செவியுடைச் சூரன், மிக்க பாணமழை பொழிந்து பின்னரோச்சிய பல அம்புகள் பிரணவப் பொருளாம் அம் முருகவேள் தோள்களின்மீது வீழ்ந்து பொடிபோல் வெந்துபோயின. நிமலனேவிய சில அம்புகள் சூரனுடைய தேரையும் வில்லையும் பிளந்தன. (ங)

இவ்வாறு சிறுமையுற்ற சூரன், தனது முதுகுப்புறனிருந்த தன்னுடைய சேனைகளையெல்லாம் போராற்றல் படைத்த குமரவேள் சக்கராயுதங்கொண் டழித்த தன்மையையுணர்ந்து, பகைமை மிக்க அவ்வலிய சூரன் நாராயணாஸ்திரம் முதலிய சிறந்த அஸ்திரங்களை விடுத்தனன். அவற்றையெல்லாங் குமாரக்கடவுளது வேலாயுதம் கவளீகரித்து விட்டது. (ச)

தனக்கு நேர்ந்தது தோல்வியென்பதை யறிந்த சூரபதுமன் "அவ்விளைஞன் கையிலுள்ள வேலின் வலிமை என்னாலு மறியப்படாததாயுள்ளது" என்று மெச்சி அவ்வமையத்தே, சிறந்த பாசுபதாஸ்திரத்தை யேவினன். செவ்வேட்பரமன், அதனைத் தனது ஒளி மிக்க திருக்கரத் தமரும்படி யருள்புரிந்தனன். (ரு)

பெருந்திருவாளனான சூரபதுமன் இவ்வமையம் எவ்வித அலங்காரமும், ஆயுதமும், படையுமில்லாமல் தரையிலே நின்றான். அவ்வெளிய நிலையினைக் கண்ணுற்ற குகக் கடவுள் "உன் கருத்து யாது?" என்று வினவினன். அசுரன் "நாளைக்குப்போர்" என்று கூறி அப்போதே மறைந்துவிட்டான். (சு)

## மூன்றுநாட்போர்.

(அப்படி மறைந்துவிட்ட பின்பு) இணையற்ற அரசுவீற்றிருந்த சூரனது நிலை கலங்கியது. மூன்றுநாள் பானுகோபன் யுத்தத்தை நாடி யுத்தகளத்திற்கு வந்து "சிங்கத்தினுஞ் சிறந்த வலிபடைத்த பல வீரர்களோடு சீற்றமிகுந்த சேனையனைத்தையும் நீ ஒழித்து விடுவாயாக" என்றோதி (தன்னுடைய பாட்டியாகிய) மாயையென்பாள்,— (எ)

தனக்குக்கொடுத்த மாயாபாச அஸ்திரத்தைச் செலுத்தினான். அஃது அவர்களெல்லோரையுந் தன்னுளடங்கப் பிணித்து ஆறுகடல்களுக்கும் அப்புறத்தே கிடக்கும்படி செய்தது. எம் பரமபிதாவாகிய தேவனது கைவேல் அப்பாசாஸ்திரத்தை யழித்து, கட்டுண்டவர்களுடைய துன்பத்தை நீக்கித் திரும்பிவந்து, செய்த காரியத்தை விண்ணப்பித்து, பரமன் திருக்கரத்தமர்ந்தது. (அ)

மாலை புரளும் மார்போடு விளங்குஞ் சூரன் புதல்வனாகிய பானுகோபன் நெஞ்சமானது, கடலினலையைப் போல அங்ஙனமலைப்புண்ண; பின்பு விரைவாகச்சென்று ஒரு பூஞ்சோலையை யடைந்தான். மாலைப் பொழுதிற் பிறர் கண்ணிற்படாது மறைந்து செல்வாரைப் போல அப்பானுகோபனாற் பரிபவப்பட்டுள்ள சூரியனும் மேலைக்கடலின் மறைந்தான். (கூ)

மோக்ஷ வீட்டின் கபாடமாக விளங்கும் முருகனடிக் கன்புடையார், அவனுடைய தோத்திரச் செய்யுள்களைப்பாடி முழங்கும்படியுள்ள தேவதுந்துபிகளை முழக்கினார்கள்.

வேதாகமக் கூட்டங்களையுணர்ந்து திருப்புகழ்பாடிய அறிஞர் வணங்கிய தெய்வத் திற்கடிமைப்பட்டவர்களுடைய புகழ்களை அளந்து கூறவல்லார் யார்? [எவருமில்லை என்றபடி.] (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்
பதினைந்தாம்பத்துமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

---

## (பதினாறும்பத்து)

### நான்காநாட்போர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

இரண்டுசீர்வண்ணம்.

நாலெ னப்படு நாளி லண்டமொ ராயி ரத்திரு நாலுமாள்
மூல னுக்கெழின் மக்க ளாயமு வாயி ரம்பெயர் கரசிரஞ்
சீல மிக்கவி லக்கர் தம்முளொர் செம்மை மல்கிய விசயனீள்
வால யிற்கணை யால றுத்தனன் வளர்ந்த வேயவை பன்முறை. (க)

வளர்தல் கண்டுவ ருந்தி யோம்சர வணப வாசிவ வென்றபோ
திளமை பொன்றுத லில்ப ராபர னுள்ளு ணர்ந்தெதிர் வந்தினோர்
நளின வெண்கணன் வரமு ளாரொரு முறையி லேநவிர் முடிகளைக்
களையின் முஞ்சுவ ரென்று பைரவ கணைகொ டுத்தும றைந்தனன். (உ)

விசயன் மொய்ம்பொடு மதுவி டுத்தவர் வீதல் கண்டுக ளித்தனன்
திசைக ளெங்குமி ருண்ட பின்றின கரனு நன்குத யஞ்செய்தான்
வசதி விஞ்சிய வடக டற்றல மாகு மாசுரம் வைகுமா
அசுர னென்றுள வரிமு கன்றமை யன்முன் வந்திது சொல்லுவான். (௩)

### ஐந்தாநாட்போர்.

ஐய னேசமர் தருப வன்சிவ னுவ னன்னவ னேடுபோர்
செய்த ரேல்விப யக்கு மென்பது திண்ண மென்றுண வுண்டபின்
வெய்ய சூரனு ரைப்ப டிச்சம ரெல்லை கண்டுளம் வெம்பினன்
தெய்வ மேயிது செய்கு வேனென வீசி னனொரு பாசமும். (௪)

மாய மாமது பூத வெள்ளமொ ராயி ரத்தையு மற்றைய
தூய வீரர்க ளோடு சுந்தர வீர பாகுவை யும்விசித்
தேயெ னுமுன மேழ்க டற்கய லாகு மாவுத யாசலம்
போயு லாயது மற்றை வெங்கண மசுரன் வாய்கள்பு குந்தன. (௫)

புக்க வாறிறை கண்டு புன்னகை கொண்டு வச்சிர வாளியொன்
றக்க ணேதொட வதும டங்கன்மு கத்தன் மார்புதொ ளைத்ததால்
நக்க ணுழியவ் வழிவ ராவண மவனெர் கைந்நனி பொத்தலுஞ்
செக்கர் வேளெய்சி வீமு கங்கதை செற்று நெற்றிபி ளந்தன. (௬)

அந்த வாதைபொ ருது தானவ னத்த ளொள்கலு மவ்வழி
வந்த பூதர்க ளரக ராவென வேது தித்தனர் மழவன்மெய்
நொந்த யாவரும் வருதி ரென்றலு நொடியில் வந்தனர் பாசமுட்
பந்த மானரும் வந்தி றைஞ்சினர் பகழி யொன்றுசெய் செயலினல். (௭)

ஆயி ரஞ்சிர னெயிறு தின்றுப லாயி ரங்கணை தூவிவேல்
ஏயி ருங்கர வீரர் காளினி யெங்ங னுய்குவி ரென்றலுஞ்
சேயி ருங்கர வாளி பற்பல சிந்தி யேயவன் முடிகைகள்
மாயி ருந்தரை வீழ்த்த வீழ்த்தவ ளர்ந்த வேயவை பன்முறை. (௮)

அதுல சிற்பர முருகன் ஹூம்மென வேய தட்டலு மவையெழா
திதர முற்றன விருக ரத்தொரு தலைய ணுயின னிகலனும்
மதர்வு மிக்கவொர் கதையெ டுத்தவன் வீசி வன்மைகள் பேசினன்
அதையும் வெட்டிய னேனு ரத்தையு மகழ்ந்த தையனெர் சதமுனே. (௯)

அந்த மாபடை யவன தாவியை யுண்டு கங்கைப டிந்துவந்
தெந்தை நீள்கர நின்ற தேயனு பூதி சொன்னவ னேதமில்
சிந்தை மேயபி ரான வன்றிறல் செவ்வ னேதுந ரெவ்வரால்
இந்த மேதினி மீது தெய்வவி சார மேபுரி யேரர்காள். (௧௰)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினாறும்பத்து)

### நான்காநாட்போர்.

யுத்தந் தொடங்கிய நாலாநாளில், ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆளுந் தலைவனுகிய சூரபன்மனுக்கு வனப்புவாய்ந்த மைந்தராகிய மூவாயிரம் பேர்களுடைய கைகளையுந் தலைகளையுஞ் சீலத்திற் சிறந்த கணுதிபர்களான இலக்கர்களுள் அளப்பரிய நலம்படைத்த விசயனென்பானெருவன், நீண்ட ஒளிமிக்க பாணத்தாற் பலமுறையும் அறுத்தெறிந்தான். அவைகளும் பலமுறை வளர்ந்தன. (௧)

---

௬. நக்கண + ஆழி = நக்கணுழி. இப்புணர்க்கை, குள + ஆம்பல் = குளாம்பல் எனப் புணர்ந்ததை யொக்குமென்க. ந - சிறப்புப்பொருடரு மிடைச்சொல்.

இவ்வாறு வளர்தலைப்பார்த்து வருத்தமுற்று, "ஓம் சரவணபவா! சிவா!" என்று, விசயன் இறைவனைச் சிந்தித்தபோது மாருக் கட்டிளமை வாய்ந்த பராபரனுயுள்ளான், நடந்ததைத் தனது திருவுள்ளத்தில் உணர்ந்து அவன் முன் எழுந்தருளி, "இவர்கள், பிரமதேவன் ஈந்த வரத்தையுடையவர்கள்: ஆயினும், ஒரே முறையிற் சிகை பொருந்திய தலைகளைக் களையின் மரணமாவர்" என்று திருவாய் மலர்ந்தருளி ஒரு பைரவாஸ்திரத்தை யளித்து மறைந்தனன். (உ)

வலிமையோடும் அவ்வஸ்திரத்தை விசயன் விடுத்து, அதனல் அம்மூவாயிரவரும் மடிந்ததைக்கண்டு மகிழ்ந்தான். அப்போது எட்டுத் திசைகளிலும் இருள் பரந்தது. பின்னர்ச் சூரியனும் விளக்கத்தோடு தோன்றினன். (இவ்வைந்தாநாளில்) வசதி மிகுந்த உத்தர சமுத்திரத்தைச் சார்ந்துள்ள தலமாகும் ஆசுரமென்னு நகரிலே, தங்கியுள்ள பேரசுரனென்னும் பெயர்படைத்த சிங்கமுகாசுரன், தன் தமையனுன சூரபதுமன் முன் வந்து பின் வருமாறு சொல்லலுற்ருன். (ந)

## ஐந்தாநாட்போர்.

"என்னெரு பெரியீர்! இப்போதும்மோடு போர்புரிபவன் சிவபெருமானே யாவன். அவனேடு சண்டை செய்வதானது நமக்குத் தோல்வியைத் தருமென்பது உறுதி" என்றுரைத்து விட்டுப் (போசனச்சாலையிற்) போசனமுட்கொண்ட பின்பு வெய்ய சூரபதுமனது கட்டளைப்படி அச்சிங்கமுகன் யுத்தகளத்தை வந்துபார்த்து (இராஜகுமாரர்முதலிய பலருமிறந்துபட்டது கருதி) மனம்புழுங்கினன். பின்பு, "தெய்வமே! இனி யான் செய்யப்போவதிது" என்று சொல்லி ஒரு பாசத்தை வீசினன். (ச)

மாயாபாசமாகிய அது, பூதசேனைகளுள் ஓராயிர வெள்ளத்தையும் மற்றைப் பரிசுத்தர்களாகிய வீரர்களோடு அழகிய வீரபாகுதேவரையுங்கூடப் பிணித்துக்கொண்டு நொடிப்பொழுதிலே சத்த சமுத்திரங்கட்கும் அப்பாலுள்ள பெரிய உதயகிரிக்குச் சென்று ஆங்குத் திரிவதாயிற்று. எஞ்சிநின்ற கோபமிக்க பூதகணங்களெல்லாம் அவ்வசுரனுடைய ஆயிரம் வாய்களுள்ளும் புகுந்தடங்கின. (ரு)

இவ்வாறு அசுரன் வாய்களுக்குட் பூதகணங்கள் புகுந்த விதத்தை இறைவன் பார்த்துப் புன்முறுவல்செய்து, ஒரு வைர வாளியை அங்ஙனே எவ; அது, சிங்கமுகன் மார்பைத் தொளைத்தது. சிறந்த சிவ கணங்களாகிய கடல்கள் அவ்வழியாக வெளிவராது தன்னுள்ளே யிருக்கும்படியாக அவன் ஒரு கையால் மார்புத் தொளையை மூடினன். மூடவே, செவ்வேட்பரமன் எவிய சிலீமுகங்கள் சிங்கமுகன்வீசிய கதாயுதத்தை முறித்து அவனுடைய நெற்றியையும் பிளந்தன. (சு)

அதனலேற்பட்ட துன்பத்தைப் பொறுக்கமுடியாத சிங்கமுகனது கை, வழியடைத்தலினின்று சோர்ந்துவிட்டவுடன், அவ்வழியாக வெளிவந்த பூதரனைவரும், "ஹரஹரா" என்று பெருமானைத் துதித்தார்கள். (அத்துதியினை யேன்றுகொண்ட) வேள், "அசுரனல் உடல் வருந்திய எல்லீரும் வருவீர்களாக" என்று அருளிய வளவிலே யாவரும் வந்தார்கள். பெருமானேவிய மற்றெரு பாணத்தின் செய்கையால் அசுர மாயா பாசத்திற் கட்டுண்ட அனைவரும் விடுபட்டு வந்து அப்பெருமானை வணங்கினர்கள். (எ)

ஆயிரந் தலைகளையுடைய அச்சிங்கமுகன், பற்களைக்கடித்துப் பல்லாயிரம் பாணங்களைச் சொரிந்து குமாரசேனைகளை வளைத்துக்கொண்டு "படைக்கலங்களை எந்திய பூத வீரர்களே! இனி நீங்கள் எப்படித் தப்பிப்பிழைப்பீர்கள்?" என்று வீரம்பேசியவுடன், குமாரபெருமான், தனது வலிய கரங்களாற் பற்பல பாணங்களைத் தூவி அவனுடைய தலைகளையுங் கைகளையும் அறுத்தறுத்துப் பெரிய தரையிலே தள்ள; அவை அத்தனை முறையும் ஓயாது வளர்ந்தன. (அ)

பின்பு, தன்னொப்பில்லாத சிற்பரனாகிய முருகவேள், ஹுங்காரசத்தஞ் செய்து அதட்டிய மாத்திரத்தில், அத்தலைகளுங் கைகளும் மீளத்தெழாது அழிந்துபோயின. புகைவனும், இரண்டு கைகளும் ஒரு தலையுமுடையவனானான். அப்பால், அசுரன் வலி பொருந்திய கதாயுதம் ஒன்றை யெடுத்தெறிந்து வஞ்சினம் புகன்றான். பெருமான் விடுத்த ஒரு வச்சிராயுதமானது அக்கதையை முறித்து அசுரன் மார்பையும் பிளந்தது. (கூ)

அப்பெருமைவாய்ந்த வச்சிராயுதமானது, சிங்கமுகனுயிரைக் கிரகித்துக்கொண்டு சென்று கங்கையாடித் திரும்பிவந்து எமது பரமபிதாவாகிய முருகவேளது நெடிய திருக்கரத்திலே தங்கியது. இவ்வுலகிலே கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியினைச் சிறப்புவகையாற் செய்கின்ற நலம் வாய்ந்தோர்களே! கந்தரனுபூதி பாடியருளிய அருணகிரிநாதருடைய திருவுள்ளத்தே வீற்றிருக்கும் அப்பெருமானது வலிய திறமைகளை நன்கெடுத்து ஓதவல்லார் யாவர்? [ஒருவருமிலரென்றபடி.] (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்
பதினாறும்பத்துமுற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினேழாம்பத்து)

கலிவிருத்தம்.

சீர்முழுதொன்றிய சிறப்புடைத் தலையாகெதுகை.

அடியொன்றற்குப்பன்னீரக்கரம்.

இரண்டுசீர்வண்ணம்.

தண்ணந் தாமரை போலெழில் சான்முகமும்
வண்ணஞ் சார்கவி நாவுமுள் ளீர்மடிந்த
திண்ணன் போர்நிலை யெய்திய செவ்விபிரான்
நண்ணங் கோலந வின்றிடு வேன்விழைமின். (க)

ஆயி ரந்தலை யாரரி மாமுகனிம்
மாயி ருந்தலம் வானதி ரும்படிபோர்

ஏயி ருந்தல வெல்லையில் வந்தனன்வேற்
சேயி ருந்தலை வாவெழல் செய்தருள்வாய். (உ)

என்று கூறிய தேவர்மு னின்றவனைக்
கொன்று பாசறை யேகுது மென்றனன்வேல்
ஒன்று நீள்கர னெண்பரி யோர்நியுதந்
துன்று தேரெதிர் தந்தன னேசுசனன். (௩)

வாயு சாரதி யாயம ரம்மணித்தேர்
நோயு றுனிவர் முன்னய னூனமிலா
தேயு மாமணிப் பாதுகை யீயவவை
ஆயு மூலன லர்க்கழல் பூண்டனவே. (௪)

மால யன்றுணர் மாரிசொ ரிந்தனர்கா
ரோல வன்கொடி யானுளிர் சாமரமேர்
ஏல வன்பொடி ரட்டின னீசதிசைப்
பால னன்குப ரித்தனன் மூவிலைவேல். (௫)

அடியொன்றற்குப்பதின்மூன்றக்கரம்.

தரள வொண்குடை தண்மதி விண்மணிதார்
புரள ரும்புய மீதணைத் தேகவித்தார்
திரள ணைந்தொளிர் தோளுறு தீக்கடவுள்
வரள வின்றெரி வத்திபி டித்தனனே. (௬)

எருமை யூர்தியெ னுஞ்சமன் வாள்பிடித்தான்
பெருமை யார்நிரு திப்பெய ராளெலியின்
பொருமை யீபல காகள மூதினன்மா
அருமை யார்நிதி யோனடைப் பைபரித்தான். (எ)

வருண னுமொரு வானவ னேபடிக்கந்
தருண மீபவ னுயின னேதகைசால்
இருண னுவொளி யேய்பிற தேவரெல்லாம்
அருண னேர்பல வட்டம சைத்தனரால். (அ)

இனைய வாறிகல் வானவர் தத்தமது
வினைய வாவொடு மேவிவ ளாவலுமே
கனைய றுதசி லம்பனி ருங்கதிரோன்
அனைய தேசச லங்கந டந்தனனால். (௯)

---

எ. இன்பொருமை,- இன்பு + ஒருமை எனப்பிரிக்க.

மணிகொள் வான்முடி காதணி மார்பணிதோள்
அணிகொள் பூணயி லாடக வாடையொடே
திணிகொ டேர்நடு வைகின னேசெகமாற்
பிணிகொள் வாரறி யாவொலி யன்பெருமான். (௧௦)

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினேழாம்பத்து)

குளிர்ச்சி பொருந்திய அழகிய தாமரை மலரைப்போற் பொலிவு மிக்க முகத்தையும் வண்ணக்கவி பாடு நாவையும் உடையீர்! மடிந்துபோன சிங்கமுகாசுரன் போர்க்களத்தை யடைந்த பொழுது முருகப்பெருமான் கொண்டருளிய அழகிய திருக்கோலத்தை வருணிக்கின்றேன், விரும்பிக் கேட்பீர்களாக. (௧)

“வேலாயுதக் கடவுளே! தேவசேனபதியே! ஆயிரந்தலை படைத்த சிங்கமுகாசுரன் இப்பெரிய மண்ணுலகும் விண்ணுலகும் அதிரும்படி பெரிய இப்போர்க்களத்தைக் குறுகிவிட்டனன். எழுந்தருளல் வேண்டும்” (௨)

என்று விண்ணப்பித்த தேவர்கள் முன்பு, வேலேந்திய காளுகிய செவ்வேட் பமன் “இற்றைப்பொழுதே அவ்வசுரனைக்கொன்று பாசறை திரும்புவம்” என்று திருவாய் மலர்ந்தருளினன். அப்போது, அழகிய குதிரைகள் ஓரிலக்ஷம் பூட்டிய தேரை வாயுதேவன் எதிர்கொண்டு வந்து நிறுத்தினன். (௩)

அவ்வாயுதேவனே சாரதியாயமர்ந்த அந்த மணிரதத்திற் பிறப்பிறப்புப்பிணி யறியாப் பெம்மான் ஆரோகணிக்கு முன்பே பிரமதேவன் பழுதிலாதமைந்த சிறந்த இரத்தின பாதுகைகளைச் சமர்ப்பிக்க; அவைகளைச் சருவகாரணனுகிய இறைவன் திருவடிகள் பூண்டு கொண்டன. (௪)

திருமாலும் பிரமனும் மலர்மாரி சொரிந்தனர். இடிக்கொடி படைத்த இந்திரன் விளங்குகின்ற கவரிகளை அழகு பொருந்த அன்போடு இரட்டினன். திக்குப்பாலகருளொருவனுன ஈசானன் சூலத்தை நன்கு தாங்கி நின்றான். (௫)

ஒள்ளிய முத்துக்குடைகளைச் சந்திரனும் சூரியனும் தம்முடைய மாலைபுரளும் பெரிய புயங்களின் மீது சார்த்திப் பிடித்தனர். திரட்சி யணைந்து விளங்குந் தோள்களையுடைய அக்கினிதேவன், அணைதலறியாத் தீவர்த்தியைப் பிடித்து நின்றான். (௬)

எருமைக்கடா வாகனனுகிய இயமன் வாளேந்தினன். பெருமை பொருந்திய நிருதியென்னும் பெயருடையான் ஒலியின்ப வொற்றுமையைத்தருங் காளங்கள் பலவற்றையும் ஊதினன். மிக்க அருமை வாய்ந்த குபேரன் அடைப்பை தாங்கினன். (௭)

வேண்டிய போதெல்லாம் படிக்கமேந்துந் தொண்டை வருணதேவன் மேற்கொண்டான். சிறப்புமிக்க காந்திவாய்ந்த மற்றைத் தேவர்களெல்லோரும் சூரியனை நிகர்த்த பல ஆலவட்டங்களையுந் தாலவட்டங்களையு மசைத்தார்கள். (அ)

சிறந்த தேவர்களெல்லாம் இவ்வண்ணமாகத் தங்கள் தங்கள் ஊழியத் தொழிலை விருப்பத்தோடு செய்து சூழ்ந்துநிற்கவும், ஒலியருத நூபுரபாதனுகிய குமாரபெருமான் பெரிய சூரியனையொத்த தேசு விளங்கத் தேரைநோக்கி நடந்தருளினன். (கூ)

இரத்தினங்கள் பதித்த சிறந்த கிரீடமும், காதணிகளும், மார்பணிகளும், கிம்புரி முதலிய அழகிய புயவணிகளும், ஆயுதங்களும், பீதாம்பரமுமாகிய இவற்றோடே, செகமயக்கமாம் நோய்வாய்ப்பட்டாரால் அறிய வொண்ணு அருணகிரிநாதருடைய கடவுளாம் முருகப்பெருமான், வலிமை பொருந்திய தேரின் நடுவிலமர்ந்தருளினன். (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்
பதினேழாம்பத்து முற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினெட்டாம்பத்து)

### ஆறுநாட்போர்.

எழசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். *

மேவுறப கற்பொழுது சூரபது மன்சிறுவர்
வீவினையு முந்து புதல்வன்
காலகதி யானதையு மன்னவன்ம ரித்தபினர்
கட்டிளவல் பொன்றி னதையுஞ்
சாலவும றிந்தலர்வி ழிப்புனலு குத்துப
சரிப்பவர்தி ருத்த வெழுதந்
தாலமென வேசினவி யானைபரி யாள்குய
வனைத்துமெழு கென்ற னனரோ. (க)

என்றலுமவ் வாறுவரு சேனையெனு மாகட
லெழுந்தனவெ ழுந்தி டலுமால்
குன்றனைய யானையணி கண்டுகிரி யானைகள்
குலைந்துதிசை யோடி னவன்மா

---

* இவ்விருத்த வடிகளின் ஈற்றுச்சீரிரண்டனையு மொன்றுபடுத்தின் அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தமுமாம்.

என்றபரி யேகலினெ ழும்புழுதி மேகமென
வெய்தினபஃ றேர்த வழ்தலால்
மன்றலுறு தார்கடவழ் வார்கடவழ் தோளர்குய
மாதர்செவி டுற்ற னனரோ. (உ)

கரிபிளிற லும்பரிகள் கனைதர லும் வேலவுணர்
கத்திடிக டத்தி டிகளும்
விரிகொடிக ளாடொலிகள் சல்லரிகண் மல்லரிகள்
விம்மல்களும் வேலை யொலியின்
உரிமையினை வென்றெழவ னந்ததளம் வெஞ்சம
ருளுற்றுகள மெய்தி யமரே
தருபொழுது வேலிறைவன் வன்றளமெ திர்ந்துநனி
சாடினமை சொல்ல வெளிதோ. (௩)

சென்னிபல கையடிய னந்தமென விண்டொடு
திறம்பெருகு டம்ப வுணராம்
பன்னரிய வெள்ளமடி வுற்றுவழி யின்றிநிறை
வுற்றபல்பி ணக்கு வடெலாம்
உன்னரிய கந்தன்விழி கள்சினவல் செய்திடலு
மொட்டறவெ ரிந்த னகொனர்
மன்னவனு டன்றிருச கச்சிரவி ழுக்கணை
வழங்கின னடுங்கி னர்சுரர். (௪)

அக்கணைகள் சத்திதரன் மொய்ம்பினில்வி ழுந்துகரி
யாயதர்க ளாய பினருந்
திக்குவெளி யண்டமுறை தானவர்பல் வெள்ளமொரு
சேயவனை மொய்த்த னவவன்
உக்கிரவு ரப்பொடுவி ழித்தடலை செய்தன
னுடன்றுபினும் வந்து வளையுந்
தக்கபல சேனைகளை முன்முறைமை போனனி
தகித்தனன் விழித்தொ ருவனே. (௫)

ஆறுமுக னுழிமுச லம்பரசு தண்டமசி
யைந்தையு மெடுத்த வுணர்கள்
வீறறந சித்தொழிமி னவ்வவேலை சென்றென
விதித்தபடி செய்த வவையும்
நூறவனை யென்றசுர னேவுதிகி ரிப்படை
நொடிக்குளிறை கைய மர்தலும்
ஏறனைய சூரனிரு கண்மலர்சி வந்திட
வெழுந்தன சினக்கு றிபெலாம். (௬)

மேலுறுப லண்டநிலை சென்றவன்வி டும்படை
விதங்களை யழித்த குகன்முன்
மாலுலவு நெஞ்சசுர னேடிமகி யெய்துபுதன்
மாநகர் மறைந்த னனயில்
வேலுடன்வி ளங்குதுரை யங்கும்வர மொய்த்தபடை
வென்றிட நகைத்த னனதை
நூலுணர்வர் கண்டுசிவ னேயிவனெ னச்சொலினர்
நோமசுரன் யாயை யெணினுன். (எ)

மாயையவள் வந்துசொன வாறுகடி திந்திர
ரதத்தையவ னுடி மரணம்
ஆயவரு யிர்க்கமலை மந்தரம ளித்தியென
வஃதுமது செய்த வுடனே
காயபல மேவியுயிர் யாவுமெழல் கண்டுசுரர்
கானுறைபுள் ளாய்வி லகினர்
சேயவனெர் பாசுபத மேவியவை செற்றுயிர்
திருத்துமலை யும்பொ டிசெய்தான். (அ)

சூரனுமை கோனிணித ளித்தவவி மானபதி
சொன்முறை யுணர்ந்து விரைவே
வீரநவ வீரர்கணம் யாவையுமி யக்கிமுடி
விண்டல மிருத்தி னசெயல்
ஓரதுலன் வாளிபல சென்றவரை யுங்குயவு
மொல்லைதரல் கண்ட பெருமான்
ஏரணவு நீயிவணி ருத்தியென வுங்கடி
திருந்ததெறும் விஞ்சி ரதமும். (கூ)

வல்லசுரர் கோன்வலிய முத்தலை கடாவியுண்
மகிழ்ந்தன னதைக்கு மரவேள்
சொல்லுணரும் வச்சிரமி ழுத்திறைகை வைத்தது
துலங்கறுகி லேறி வருசூர்
வெல்லும்வகை யாதெனநி னைந்திடுமு னம்மிருக
மீளியு முருக்கி னபிரான்
நல்லவனு பூதிபுகழ் பாடினவ னுடமல
னேயவனை நம்ப லறிவே. (கo)

---

அ. "இந்த்ரலோகரதம்", இங்கே 'இந்திரரதம்' எனப்படுவதாயிற்று. வடமொழி **ஸ்காந்தமஹாபுராணத்தின்** சிவரஹஸ்யகண்ட யுத்தகாண்டத்து ௫௩ - ஆம் அத்தியாயம் படித்தறிக.

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பதினெட்டாம்பத்து)

### ஆறுநாட்போர்.

மறுபொழுதில் (=ஆறுநாளில்), தன்னுடைய மைந்தர்கள் மூவாயிரவரும் மடிந்ததையும், சிரேஷ்ட புத்திரனான பானுகோபன் இறந்ததையும், அவன் மாண்டபின்பு தன்னுடைய உறுதித் தம்பியாகிய சிங்கமுகன் மரித்ததையும் விவரமாய் அறிந்துகொண்ட சூரபதுமன், மலரனைய தன் கண்களில் நீர் பெருக்கிச் சோகித்து, அருகிருந்துபசரிப்பவர் தேற்றத் தேறியெழுந்து, ஆலகால விஷம்போலச் சினங்கொண்டு, தன்னுடைய கரி, பரி, காலாள், தேரென்னு நால்வகைச் சேனைகளையும் போருக்கெழும் படி ஆஞ்ஞாபித்தான். (௧)

அப்படியே வருகின்ற சதுரங்கசேனையென்னும் பெருங்கடல்கள் புறப்பட்டன. புறப்படலும், பெரிய குன்றுகள் போன்ற யானைப்படைகளைக் கண்டு மலைச்சாரல்களிற் சஞ்சரிக்கின்ற யானைக் கூட்டங்களெல்லாம் அஞ்சிப் பல திசைகளிலுமோடின. வலிய மாவென்னப்பட்ட குதிரைப்படைகள் செல்வதனாலெழுந்த புழுதிப்படலங்கள் மேகங்க ளென்னும்படி விண்ணிற் பரவின. தேர்கள் ஏகுதலினான் மணம் பொருந்திய மாலை களையணிந்த தோள்களையுடைய புருடர்களுங் கச்சணிந்த தனங்களையுடைய பெண்களுஞ் செவிடு பட்டனர். (௨)

யானைகளின் பிளிறலும், குதிரைகளின் கனைப்பும், படைக்கலமேந்திய அவுணர் கள் கத்துதலினாலுந் தாண்டிப் பாய்தலினாலும் உண்டாம் இடிமுழக்கங்களும், விரிக்கப் பட்ட கொடிகளசையு மோசையும், கைத்தாளங்களும் பம்பை மேளங்களும் எழுப்புமொலி யுஞ் சமுத்திரகோஷத்தின் சிறப்பை அடிப்படுத்து விஞ்சியெழுமாறு எண்ணிலடங்காத சேனைகள், கொடும்போர் செய்யுமந்த இரணகளத்தை யடைந்து சமர்புரியும்போது வேலா யுதக்கடவுளின் வலியபடைகள் எதிர்த்து நின்று பகைவர்களை நன்றாய்ப் புடைத்ததை வருணித்தல் எவருக்கும் அரிதே. (௩)

"தலைகள் பல; கைகளுங் கால்களும் மிகப்பல" என்னும்படி ஆகாச மளாவிய வலிமைமிக்க உடலம் படைத்த அவுணர்களாகிய எண்ணிலடங்காத சேனைவெள்ளங்கள் மாய்ந்துபட்டதனாற் பிறர் சஞ்சரிப்பதற்கு வழிகாணாதபடி நெருங்கிய பல பிணமலைக ளெல்லாம், அறிதற்கரிய கந்தபெருமானது கண்கள் வெகுண்டு நோக்கிய அளவிலே அடியோடெரிந்து சாம்பராயின. பெருமை படைத்த சூரபதுமன் மிக்க சீற்றமுடைய வனாகி, சிறந்த ஈராயிரங் கணைகளை விடுத்தனன். அவற்றினைக் கண்ட தேவரனைவரும் நடுங்கினார்கள். (௪)

அந்தக் கணைகள் வேலாயுதக் கடவுளுடைய திருத்தோள்களிற் பட்டுக் கரிந்து பொடியாய் விட்டன. மறுபடியும் எல்லாத் திக்குகளிலும் புற அண்டங்களிலும் வசிக் கின்ற அவுணசேனைகளாகிய பல வெள்ளங்கள் (=எண்ணிலடங்காதன) வந்து ஒருவ

னாகிய குமார பிரானைச் சூழ்ந்துகொண்டன. பெருமான், உக்கிரமான அதட்டலோடு உறுக்கி நோக்கி அவைகளைச் சாம்பராக்கினன். பெருஞ் சீற்றங்கொண்டு மறுபடியும் வந்து வளைந்த தகுதியுள்ள அத்திறப் பல சைனியங்களையும் அவ்விதமாகப் பெருமானொருவனே விழித்துநோக்கி அறவே நீற்றிவிட்டனன். (ரு)

ஆறுமுகக்கடவுள், சக்கரம், உலக்கை, மழு, கதை, வாள் ஆகிய ஐந்தனையு மெடுத்து, "அசுரர்கள் இருக்குமிடங்கடோறும் போந்து அவர்கள் வலிமையொழிய அதம் பண்ணி வேரறுங்கள்" என்று கட்டளையிட்டபடியே அவைகளுஞ்செய்து முடித்தன. சூரபதுமன், "என்பகைவனாகிய அவனை அழிப்பாயாக" என்று கூறி ஏவிய சக்கராயுதமானது பொள்ளென இறைவன் கையிடத் தமர்ந்துவிடவே, சிங்கத்தையொத்த சூரனுடைய விழிமலர்கள் சிவந்திடுமாறு, கோபக்குறிகள் யாவும் அவன் கண்ணே தோன்றின. (சு)

வானிலுள்ள பல அண்டங்களிற் சென்று அங்கிருந்துஞ் சூரன் ஏவிய ஆயுத வகைகளையெல்லாம் அழித்த பரமன் திருமுன்பாகக் கலங்கிய மனத்தையுடைய சூரன், வெந்நிட்டோடிப் பூவுலகை யடைந்து தனது வீரமாகேந்திரபுரமென்னும் பெரிய நகரத்தில் ஒளிந்து கொண்டனன். வேலாயுதத்தோடு விளங்குகின்ற இறைவன் அங்கும் வரவே; அந்நகரத்தின் காப்புப்படைகளாயுள்ள அசுரப்படைகள் யாவு நெருங்கி இறைவனைச் சூழ்ந்துகொண்டன. அவைகளு நீருகும்படி ஒரு சிரிப்பை விளைத்தனன் பெருமான். அதனைக் கண்ட கலைவல்லோர், "சிவனே இக்குமாரன்" என்று கட்டுரைத்தார்கள். உடலும் உயிரும் நோகப்பெற்ற அசுரன், (மாயையாகிய) தன் தாயை அங்ஙன நினைத்தான். (எ)

(நினைத்த வளவில்) மாயையாகிய அவள் அவன் முன்வந்து அறிவுறுத்தியபடி, உடனே அவன் இந்திரலோகத் தேரை (வருவித்து) நோக்கி, "இறந்தோர் யாவரும் உயிர்பெறுமாறு சுதாமந்தர பருவதத்தைக் கொணர்ந்து தரக்கடவாய்" என்று பணிக்க; அதுவும் அவ்வாறே செய்தவுடன், தேவர்கள், உடலை நீங்கிய அசுரவுயிர்கள் யாவும் தேகதிடம்பெற்றெழுதலைக் கண்டு, காட்டில் வசிக்கும் பறவைக் கூட்டங்கள் போல அமர்க்களத்தை அகன்றோடினர்கள். அஞ்ஞான்று குமார பெருமான், ஒப்பற்ற பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்து, உயிர்த்தெழுந்த அசுரவெள்ளங்களையெல்லாம் வீழ்த்தி, உயிர் தரும்படியான அந்தச் சுதாமந்தர பருவதத்தையுந் தூளாக்கிவிட்டான். (அ)

பார்வதி மணாளனாலே முன்னே பிரியத்தோடு சூரனுக்களிக்கப்பட்ட விமானபதியாகிய அந்த இந்திரலோக ரதமானது, சூரனது கட்டளை முறையினை யுணர்ந்து, விரைவில் வீரமுடைய நவவீரர்களையும், கணங்களாயுள்ள எல்லாவற்றையும் மயக்கிப் பிரமாண்ட முகட்டிற் கொண்டுபோய் வைத்த செயலைத் தனது திருவுள்ளத்தே யுணர்ந்துகொண்ட ஒப்புவமையில்லானாகிய முருகன் விடுத்த பாணங்கள் பல, அங்குச் சென்று அத்தேரினுட் கிடந்தாரையும் அப்படிக் கிடக்கச்செய்த அத்தேரையும் விரைவினே தன் முன்பாகக் கொண்டுவந்ததைக் கண்ணுற்றருளிய பெருமான், அத்தேரினை நோக்கிச் "சிறப்புவாய்ந்த நீ எம்பக்கலாகிய இங்ஙனமிருப்பாயாக" என்று பணித்தவுடன் அவ்வற்புத சாமர்த்தியம் விஞ்சிய இரதமுந் தாமதஞ் செய்யாது அவ்வாறே தங்கிவிட்டது. (கூ)

வலிமைமிக்க அசுராதிபன், பலம்பொருந்திய சூலாயுதத்தையெறிந்து, அது தன் பகைவனை யழிக்குமென்றெண்ணி யகமகிழ்ந்தான். (ஆனால்), குமாரக்கடவுளின் கட்

டளைகளை யுணர்ந்து நிறைவேற்றும் வச்சிராயுதமானது அச்சூலத்தினைப்பற்றி யிழுத்து வந்து பெருமான் கையில் வைத்தது. பின்பு, கண்டோர் அஞ்சும்படி விளங்குமொரு சிங்கத்தின்மீ தேறிவருஞ் சூரபதுமன், "நாம் இனிவெல்லும் உபாயம் யாது?" என்று எண்ணி முடியுமுன், அம்மிருகேந்திரனையும் நாசப்படுத்திய பெருமானுனவன், நன்மையுடைய கந்தானுபூதியையுந் திருப்புகழையும் பாடியருளிய அருணகிரிநாதனுர் கருதிய கடவுளே. அவனை நம்புதலே சிறந்த விவேகமாம். (௪0)

Q26
N25

வீரமாகேந்திரத்திருவிளையாடல்
பதினெட்டாம்பத்து முற்றிற்று.

---

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பத்தொன்பதாம்பத்து)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**இரண்டுசீர்வண்ணம்.**

120803

சிங்க வாகனமி ழந்த சூரனொரு திகிரி யம்பறவை யாகியே
எங்கு நீள்சிறைய றைந்து பல்லுயிரு மிடரு ழந்தலற விரைதலைச்
சங்க வீசசுத னுள்ளி வாயுகட வுந்த ளுதிரதம் விட்டெழில்
மங்கு ருதெதிர்நி லாம்வ லாரியெனு மாம யிற்பரியி லேறினன். (௧)

செயசெ யாசெயவெ னும்பெ ருந்தொனி திகந்த முட்டியது கந்தனும்
வயம ருதவொரு வில்வ ளைத்தளவில் வாளி தூவிவிளை யாடினன்
மயம ருததிகி ரிக்கு ரீஇயிவன் வலிய வில்லினையொ டிப்பலென்
றியமொ டேவருதல் கண்டு வாள்கொடதை யெற்றி ஞனிணியில் பெற்றியான். (௨)

எற்ற லால்வகிர்வு பட்ட சூரனட ரெரிமண் வாயுவற லாயுமோர்
உற்ற தேவவடி வாதி பல்வடிவொ ருங்கு கொண்டுமிகல் புரிபொழு
தற்ற நூறமல னவைய டக்குமட லார்ப லம்புகளை யேவிமால்
எற்று ஞானவிழி சூர னுக்குதவி யிணையி லோர்வடிவு காட்டினன். (௩)

அப்பெ ரும்பரம வடிவி னுள்ளடியி லதல மாதியபு றத்திலே
செப்ப ருங்கடல்க ளுகிரின் மின்னலுடு செய்ய பரடுகளி னீரிறை
வெப்ப ரும்பரிதி திங்க ளாதிபலர் மிளிர்க ணைக்கழலி லிருடிகள்
துப்ப ரும்புநிதி மணிமு ழங்கழல்க டுன்னும் விஞ்சையர்வ யங்கலும். (௪)

தொடையில் வாசவச யந்த ரும்புறணி சொல்வி டத்தசுரர் தொழுதியும்
இடையி லேமறலி கால னுந்திணிவி லாவி வீடுகெழு தேவரேர்
உடைய பானமுத லாரி டத்துரக ருங்கு றிக்கணெழு சிட்டியும்
அடையை மார்பளவில் கலைமுந் நூலிவினி தாகு ஞானமத லங்கலும். (ரு)

அங்க ரத்தகில போக மும்புயவ ணைப்பி லேயயனும் விண்டுவுஞ்
செங்க ழுத்திலொலி யோதை யாவுநவில் செயலின் வாய்நடுவில் வேதமும்
பங்க ளைக்கநவி னுவி லாகமப தம்ப விற்பலவெ ழுத்துமேர்
தங்கி தழ்க்கணெழு மனுவு நாசிநிலை தன்னில் வல்லுலவை வைகலும். (சு)

கண்க ளிற்பரிதி யாதி மாசுடர்கள் காதி லார்திசைக ணெற்றியில்
எண்க ளிற்பெரிய குடிலை யுஞ்சிரசெ னுங்க ணிற்சிவமு மெய்ம்மயிர்
எண்க ளிற்சிறிய பேனின் முட்டையணி யென்ன வெண்ணரிய வண்டமாய்
விண்க ளிற்றிகழ்வ யாவு நிற்றலும்வல் விரத சூரனனி கண்டனன். (எ)

கண்டு தேவவெமை யாள்ப ராபரக டம்ப வென்றுகைமு கிழ்த்தனன்
அண்டர் கோனதும றைத்த னன்சமர வசுர னஞ்ஞனென வாகிமை
மண்டு பேரிருள்பெ ருக்கி யேயதின்ம றைந்து பல்சிரக ரங்களாய்
அண்டர் யாரையும்வி ழுங்க வுன்னுதல றிந்த கோவயில்வி டுத்தனன். (அ)

அந்த வேலொளிப ரப்பி வந்தசுர னுடல் செற்றபினு மேயவன்
சிந்து தாவியதி னின்றெ லாம்வளைசி றந்த மாமரம தாய்மிறை
தந்த போததனை வேலு டன்றுகிழி தந்த தன்னவனும் வாளொடு
வந்த காலைவடி வேலு முன்னியவன் மார்ப றைந்துடல்பி ளந்ததே. (கூ)

பிளவு தந்தபடை கங்கை மூழ்கியொளிர் பெட்பி னேடிறைகை நின்றதப்
பிளவி ரண்டுமிறை கொடியும் வாகனமு மாய பின்னிறைதன் வீரருட்
களம்வி ழுந்தவரை யுளநி னைந்துவரல் கண்டு செந்திலைய டைந்தனன்
அளவி லந்தவிறை யருள்பு கழ்ந்தபுத னுறு பற்றனலன் மைந்தரே. (கய)

# வீரமாகேந்திரத்திருவிளையாடல்.

## (பத்தோன்பதாம்பத்து)

தானேறிவந்த சிங்கவாகனத்தையு மிழந்த சூரபதுமன், ஓரழகிய சக்கரவாகப் பறவை வடிவங்கொண்டு, எட்டுத் திக்குக்களிலும் பரவிய சிறகுகளை அடித்து எல்லாச் சீவராசிகளுந் துன்புற்று அலறும்படி விரைந்து செல்லுதலைச் சபாபதியாகிய சிவகுமாரன் திருவுள்ளத்திற்கொண்டு, வாயுதேவனாற் செலுத்தப்படுகின்ற தனது இரதத்தை விட்டிறங்கி, அழகு குன்றாது தன்னெதிரே பிரகாசிக்கின்ற இந்திரனாகிய பெரிய மயில்வாகனத்தின்மேல் ஆரோகணித்தான். (க)

ஆரோகணிக்கவே, செய ! செய !! செய !!! என்னும் பேரோசை, எண்டிசை எல்லைகளையும் முட்டியது. கந்தபெருமானும் வலிமை குன்றாத ஒப்பற்ற தனது வில்லை வளைத்து எண்ணிலடங்காத பாணங்களைச் சொரிந்து விளையாடினான். அழகுகுன்றாத சக்கரவாகப் பறவையாயுள்ள சூரனும், "இப்பகைவனது வன்மைபொருந்திய வில்லையொடிப்பேன்" என்று பெருமுழக்கஞ்செய்து கொண்டே வருவதைப் பெருமான் பார்த்து, தனதுவாளாயுதத்தை வீசி அப்பறவையை இரண்டுதுண்டாக வெட்டினான். (உ)

இவ்வாறு வெட்டியதனாலே துண்டிக்கப்பட்ட சூரனானவன், அடர்ந்த நெருப்பு, நிலம், காற்று, நீர் என ஆகியும், எழில் பொருந்திய தேவவடிவு முதலிய பல வுருவங்களை ஒரே காலத்திற்றாங்கியும் போர்புரியும்போது, தன்னையடைந்தாரது அச்சத்தை அழிக்கும் அமலனான முருகவேள், அவ்வுருவங்களை அடக்கும் வலிமையுடைய பல பாணங்களைச் செலுத்திவிட்டு ; மயக்கத்தை (= அஞ்ஞானத்தை)ப் போக்கும் படியான ஞானக் கண்ணைச் சூரபன்மனுக்குக் கொடுத்தருளித் தனது ஒப்பற்ற பாரமேச்சுவரத் திருவுருவைக் காட்டியருளினன். (ங)

அப்பெரிய பாரமேச்சுவர வடிவத்தின் உள்ளங்கால்களில் அதலம் சுதலம் முதலிய கீழேழுலகங்களும், புறவடிகளிற் சொல்லற்கரிய எல்லாக்கடல்களும், காலின் நகங்களில் மின்னல்களும் நக்ஷத்திரங்களும், சிவந்த காற்பரடுகளில் வருணன் வெப்பத்தோடுங்கூடிய அருமையான சூரியன் சந்திரன் முதலிய பல தேவர்களும், விளக்கமுடைக் கணைக்கால்களில் எல்லா இருடிகளும் தூய நவநிதிகளும் சிந்தாமணியும், முழங்கால்களில் நெருங்கி வசிக்கும் விஞ்சையர்களும் இருந்து விளங்குதலையும்,— (ச)

தொடையில் இந்திரனும் அவன் மகன் சயந்தனும், முதுகெனப்படுமிடத்தில் அசுரர்கூட்டங்களும், இடுப்பில் யமனும் காலனும், திண்ணிய விலாப்புறங்களிற் பெருமைமிக்க தேவர்களும், அழகிய அபானம் முதலியனவாகப் பொருந்திய விடங்களில் நாகர்களும், சுவாதிட்டானத்தானத்தில் எழுவகையாய்ப் புலப்படும் படைப்புத்தொழிலும், அழகார்ந்த மார்பில் எண்ணிலடங்காத கலை (ஞானங்)களும், முப்புரிநூலில் இன்பமயமான ஞானமுந் துலங்குதலையும்,— (ரு)

கரதலங்களில் எல்லாப்போகங்களும், புயாகிருதியான இடங்களிற் பிரமனும் விட்டுணுவும், செய்ய கழுத்தில் ஒலிக்கும் எல்லா ஓசைகளும், பேசுந்தொழிலையுடைய வாயின்

நடுவிடத்தில் வேதங்களும், அடியவரது பரிபவத்தை நசிப்பிக்கும்படி உபதேசமருளு நாக்கிற் சிவாகம வசனங்களும், பற்களிற் பல அக்ஷரங்களும், அழகு தங்கிய உதடுகளிற் சத்தகோடி மகாமந்திரங்களும், மூக்கினிடத்தே வன்மை வாய்ந்த காற்றுந் தங்கியிருத்தலையும்,— (சு)

கண்களிற் சூரியன் முதலிய பெரிய சுடர்களும், காதுகளிற் பொருந்திய எட்டுத் திசைகளும், நெற்றியிலே மதிப்பாற் சிறந்த பிரணவமும், சிரசுத்தானத்திற் சிவபரஞ்சுடரும், மேனிமேலுள்ள மயிர்த்தொகுதிகளிற் சிறுபேன்முட்டை யடுக்குக்கள் என்னும்படி அளவிடற்கொண்ணு அண்டவடிவாய் ஆகாயத்தில் விளங்கும் பல்லாயிரகோடி அண்டங்களுந் தங்கிக்கிடத்தலையும் அனுட்டித்தற்கரிய விரதங்களை அனுட்டித்து முடித்த சூரபதுமன் நன்ருகத் தரிசித்தான். (எ)

தரிசித்து, "ஏகதேவனே! எம்மை யாண்டருளும் பராபரனே! கடம்பின் மாலையாய்!" என்று தோத்திரஞ் செய்து கைகுவித்து வணங்கினன். அவ்வமையத்திலே தேவதேவன், தனது பாரமேச்சுவர வடிவை மறைத்தான். உடனே சமர்கொடுத்தவனை சூரபதுமனும் அஞ்ஞானமறைப்பில் மீண்டும் அகப்பட்டவனுகி, கருநிறந் திணிந்த பேரிருளைப்பரப்பி அதனுழைத் தான் மறைந்துநின்று அனேகந் தலைகளையுங் கைகளையுமுடைய வடிவைக்கொண்டு தேவரனைவரையும் விழுங்கிவிட எண்ணியதைத் தெரிந்துகொண்டவனுகிய இறைவன், தனது வேலாயுதத்தைப் பிரயோகித்தான். (அ)

அந்த ஆயுதநாயகமானது எங்கணும் பிரகாசத்தைப் பரப்பிக்கொண்டு வந்து சூரனது சேட்டைகளையெல்லாம் அழித்த பின்னும், அவன் கடலிற் பாய்ந்து அதன்கணின்று கொண்டு, எல்லாப் பொருள்களையுந் தன்மாட்டடக்கிக்கொள்ளத்தக்க சிறந்த மாமர உருக்கொண்டு, அச்சுறுத்தியபோது அவ்வாயுத நாயகமானது, அம்மரத்தையெதிர்த்து இருகூருய்க் கிழித்தது. அங்ஙனமே சூரனும், தனது புராதன வடிவத்தோடு கரத்திலொரு வாளேந்தி யெதிர்த்து வந்தபோது அவ்வடிவேலாகிய ஆயுதமும் முற்பட்டு அவன் மார்பிற்பாய்ந்து அவனுடம்பைப் பிளந்துவிட்டது. (கூ)

இவ்வாறு சூரனுடலை இருகூருய்க் கிழித்துவிட்ட அப்படையரசானது, கங்கைநீராடி மிக்குப் பிரகாசிக்கும் மகிழ்ச்சியோடு இறைவன் திருக்கரத்தில் வந்தமர்ந்தது. அவ்விரண்டு கூறுகளும், பெருமானுக்குக்கொடியும் வாகனமுமான பின்பு, பெருமான் தன்னுடைய சேனைவீரர்களுள்ளே இரணகளத்தில் வீழ்ந்துவிட்டவர் யாவரும் எழுந்துவரல்வேண்டுமென்று திருவுளத்திற் கருதி, அவ்வாறே அவர்கள் வருதலையும் பார்த்தருளிய பின்னர் (அவர்களோடும்) திருச்செந்தூரை யடைந்தனன். (ஆகலின்) மைந்துடையீர்! அப்பரம்பொருளின் அளவில்லாத கருணைத்திறத்தைப் புகழ்ந்துபாடிய அறிஞராகிய அருணகிரிநாதர் காட்டிய நெறியினைப் பின்பற்றுதலே நலனும். (கo)

வீரமாகேந்திரத்திருவிளையாடல்

பத்தோன்பதாம்பத்து முற்றிற்று.

## பத்தாவது

# வீரமாகேந்திரபுரியில் உத்தரகிரியைக்கிடங்கொடுத்தருளிய திருவிளையாடல்.

---

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டுசீர்வண்ணம்.

**பொ**ருகளம் வீழ்ந்தார் தமைக்குக னெழுப்பிப் புகரறு படையொடும் பனிப்பூ
முருகினி தோங்கோர் செந்திலை யடைந்தா னெனப்புகன் றேனதன் முனரே
அருளினி லாங்கா ரியவகை யிஙனே யறைகுவ லெதிர்வரு மயிலும்
பருவுரு வாஞ்சே வலுந்தனை யெதிர்க்கும் பாழியை யறிந்தனன் பரமன். (க)

இருவரு மமைதி பெறுதிர்க ளுரிமை யெய்திய தெனவனுக் கிரகந்
திருவுள மகிழ வணைந்தெழின் மயின்மேற் செம்மணிச் சுடரென வேறிக்
குருகினை மடியில் கொடியெனக் குழகன் கோடலுங் களித்துமா மஞ்ஞை
செருநில மதிர வினிதுவந் தவன்முண் மோந்தது பயிர்த்தது சேவல். (உ)

**வ**ரத்திற லவுணர் தருந்துய ருழந்து மடிந்தவ ரெனக்கிடந் தலைந்த
புரத்துறை மிடிய ராமெமக் கரிய புதுச்சுக மளித்தபுத் தமுது
கரத்திற லயில்கொள் பரம்பொரு ளெனவே ககனர்கள் போற்றினர் பின்றைச்
சிரத்திற லசுர புரவல னொழிவைத் தெரிந்தனள் பதுமகோ மளையே. (௩)

**சே**டியர் சகிக ளாயிர நிரலாய்த் திகழ்தரு குழுவிடைச் சேலின்
நீடிய விழிகள் செவிமல ரளப்ப நெகிழிதழ் துகிரெழி லளப்ப
மூடிய முறுவன் முருந்தணி யளப்ப மிளிரவண் முகமலர்ச் செவ்வி
வாடிய நிலையிற் கரமல ரிரண்டு மணிநில மளக்கவுய்த் தயர்ந்தாள். (௪)

**சா**லியி னரிய கற்பினை யுடைய ளாகவி னயர்தலிற் சலிப்பும்
பாலினு மினிய மொழியுமுள் ளொடுங்கப் பனித்தகண் டிறந்திலண் மரித்தாள்

---

௪. சேடியர் = ஏவல்செய்யும் பெண்கள். சகிகள் = தோழிகளெனப்படு சிநேகிகள்.

௪, ௫.— விசுவகருமாவின் புத்திரியாகிய இப் பதுமகோமளை, தன்னாயகன் மரணத்தை யறிந்தவுடன் இவ்வாறு "அயர்ந்தாள்" "மரித்தாள்" என்பன மிக்க கற்புடைய

வேலினும் வசிகொள் கண்ணியர் பலரும் வெய்தென விசிறிகள் விசிறல்
கோலியு மசைதல் கண்டிலர் பெரிதுங் குலைகுலைந் தடிவிழுந் தழுதார். (ரு)

கனதன முடைய வரசிகள் போற்றுங் கனதனப் பொன்னுரு வரசீ
தினகர முனிவன் முதலிய புதல்வர் தீர்தலி லழுதிருந் தாயின்
றுனதுயி ருரியன் சேறலின் மரித்தா யொப்பறு பதிவிர தாயெங்
கினியுனை யழுபண் புடையவெம் விழிகண் டிடுமெனுந் துயருளு மாழ்ந்தார். (சு)

இவ்வழு குரலு மிறையவன் றேரி னிருந்துசங் கூவலு நெடிய
பவ்வவ குணியை யடக்கிடு தேவப் பணைமுழக் கமும்பழ மறையை
வவ்விடு குமர தோத்திரத் தொனியும் வாங்கினன் செவிப்புல மீனுய்ப்
பவ்வமு ளுறைநல் விரணிய னுடனே பறந்தலை புகுந்தெலா மோர்ந்தான். (எ)

ஓர்தலு முருமிற் கதறிமண் வீழ்ந்தென் னுரைநுழை யாச்செவி யெந்தாய்
தேர்தனில் வகுணிக் கொடியென நிலவச் சேயவன் பரியென வமர
ஏர்பிறழ் வயிரப் படிவமெவ் வாறு யீர்ந்ததந் தோபொரற் கஞ்சி
ஆர்கலி புகலுற் றேனிங னின்னே டாயையு மிழந்தழ லானேன். (அ)

என்றுள முசித்து முதுகுல குருவா யிருக்குமு சனன்றனை யடைந்தான்
பொன்றிய வெவர்க்கு மவன்றனைக் கொண்டே புரையறு முத்தர கிரியை
அன்றவ னிழைத்த வுடன்முரு கைய னடலுடைப் பாகுவை நோக்கி
என்றிரு முகத்தவ் வெஞ்சிறை கிடப்பா ரெவரையுங் கொணர்தியென் றிசைத்தான். (கூ)

அவ்விதஞ் சயந்த னுதிய சுரரை யடற்புயன் கொணர்தலு மன்னோர்
செவ்விதங் குறுங்கை யலர்சிரங் குவித்துச் சேயவற் றொழுதன ரன்னூர்
துவ்விதம் புலர்ந்து கிடந்தமை யடங்கத் தூயபுன் னகைபுரிந் தனன்வேள்
நவ்விதங் குரங்கொள் புகழ்ப்புத னமல நடைவிழை யெனக்கினி யவர்காள். (கo)

---

மாதிலக்கணத்தை வெளியிட்டு நிற்பனவாயின. இராவணன் மனைவியாகிய மந்தோதரி மரணமும் இன்னணமே நேர்ந்ததென்பதை —

"என்ற ழைத்தன ளேங்கியெ ழுந்தவன்
பொன்ற ழைத்த பொருவரு மார்பினைத்
தன்ற ழைக்கைக ளாற்றழு வித்தனி
நின்ற ழைத்துயிர்த் தாளுயிர் நீங்கினாள்" என்னுங் **கம்பராமாயணத்து** இராவணன் வதைப்படலச் செய்யுளானறிக. **கந்தபுராணச்சூருக்கத்தாரும்** "வெஞ்சூர் முதல் பட்டானென விட்டாளுயிர் தேவி" என்றே கூறினர்.

பத்தாவது

# வீரமாகேந்திரபுரியில் உத்தரகிரியைக்கிடங்கொடுத்தருளிய திருவிளையாடல்.

யுத்தகளத்தில் வீழ்ந்துபட்டவர்களை யெல்லாங் குகபகவான் எழுப்பி, குற்ற மற்ற படைகளோடுங் குளிர்ந்த பூக்களின் மணம் பெருகுமொரு திருச்செந் தூரையடைந்தன னென்று சொல்லியுள்ளேன். அதற்கு முன்னரே ஆண்டவனருளால் நிகழ்ந்த காரியத்திறங்களை யிங்கே கூறுவேன்: தனக்கெதிரே வருகின்ற அம்மயிலும் பருத்த வடிவத்தையுடைய சேவலுந் தன்னை யெதிர்க்கும் வலிமையை அந்தப் பரமன் அறிந்தனன். (க)

" நீவிரிருவீருஞ் சாந்தி பெறுவீர்களாக. உங்களுரிமை யுங்கட்கிப்போது கிடைத் தது" என்று திருவுளமகிழும் வகையாலே அனுக்கிரகஞ்செய்து, அழகிய அம்மயிலின் மீது மாணிக்கவண்ண சூரியனைப்போல் ஆரோகணித்து, சேவலைச் சோர்வறியாக் கொடியாகக் குமாரபிரான் கொண்டவுடன் மா மயிலானது மகிழ்ச்சிகொண்டு அமர்க் களம் அதிர நன்கு நடந்துவந்து ஐயன்றிருவடிகளை முத்தமிட்டது: சேவல் கொக்க ரித்தது. (உ)

" வரபலங்கொண்ட அசுரராளித்த துன்பத்தை யனுபவித்துச் செத்தவர்போற் கிடந்துழன்ற உடம்பிற்றங்கியுள்ள எளியேங்களுக்கு, அரிய புதிய இன்பத்தையளித்த புத்தமுதமே! கரத்தில் ஆற்றலுடைத் திருவேலையேந்திய பரம்பொருளே!" என்று விண்ணவர்கள் துதித்தார்கள். பின்பு நெடுநாள் வாழ்ந்த வலிபடைத்த சூரபதுமன் ஒழி வைப் பதுமகோமளை கேள்வியுற்றாள். (ங)

பணிப்பெண்களுந் தோழியர்களும் ஆயிரமாயிர நிரலாக விளங்கிய கூட்டத் திடையே, கயலினுஞ்சிறந்த கண்கள் காதணியளவாக வோடவும், மிருதுவான அதரம் பவளத்தின் அழகை வெல்லவும், மறைந்துள்ள தந்தபந்திகள் மயிலிறகின் அடிக்குருத்தை நிகர்க்கவும் விளங்குமியல்பினையுடைய பதுமகோமளை, தனது முகார விந்தத்தினழகு வாடிய நிலைமையில் தன்னுடைய மலர்போன்ற இரண்டு கைகளையும் நவரத்தின மயமான தரையின் மோதி மூர்ச்சித்து வீழ்ந்தாள். (ச)

இவள் அருந்ததிபோலக் கற்பினையுடைய ளாதலால், மூர்ச்சை மூலமாகவே உட லசைவும் பாலினு மினிய தன்பேச்சுந் தன்னுண் முடிவாயொடுங்கிவிட, நீர் சொரிந்த கண்ணை மீட்டுந் திறந்திலள்; உயிர் துறந்தாள். ஆங்குக் குழுமிநின்ற வேலினுங் கூரிய கண்ணையுடைய பெண்களுட் பலரும் விரைவாக விசிறிகளால் விசிறுங் காரியத்தைத் தொடங்கியும் பதுமகோமளை உயிர்த்தசைதலை அவர்கள் கண்டாரல்லர்; (பின்னர், மரித் தனளென்னு முண்மையுணர்ந்து) நடுநடுங்கி அவளடிப்புலம் வீழ்ந்து புலம்பினுர்கள்.

[பேரரசியாகலின், மற்றை மங்கையரெல்லாம் அவள் பாதத்தடியில் வீழ்ந்தழுதல் நியாயமென்பது கொண்டு "அடிவிழுந் தழுதார்" என ஆசிரியர் கூறியது சால்பிற் றன்றோ?] (ரு)

பெருஞ் செல்வமுடைய அரசிகளும் போற்றுந் தகைமை வாய்ந்த அழகிய வுருவ முடைத் தலைவியே! பானுகோபன் முதலிய நின்புத்திரர்கள் மாண்ட செய்தியில் நீ அழு தனையாயினும் உயிர் வைத்திருந்தனை. இப்போது உன் பிராணநாயகன் இவ்வுலகவாழ்வை நீத்தமையால் நீயுமுயிர் துறந்தாய். இணையற்ற பதிவிரதையே! நொந்தழுமெங்கள் கண் கள் இனியுன்னை யெங்கே காணப்போகின்றன என்னுந் துயர்க்கடலுளும் அப்பெண்கள் ஆழ்ந்தார்கள். (சு)

இந்தப் புலம்பலொலியையும், பெருமான்றேரிலுள்ள பெரிய கொடியின் கொக் கரிப்பையும், பரந்த கடலின் ஓசையை யடக்கி மேலெழுந்த தேவவாத்திய முழக்கத்தை யும், பழைய வேதங்களினொலியினை வாரிக்கொள்கின்ற சுப்பிரமணியத் தோத்திரவொலி யையுங் கடலுள் மீன் வடிவாய்த் தங்கியுள்ள நல்ல இரணியன் காதுகளில் வாங்கினன். உடனே அவன் போர்க்கள நண்ணி நிகழ்ந்தவற்றையெல்லா மறிந்தான். (எ)

அறிந்ததும் இடிமுழக்கம்போற் கதறித் தரைமீது வீழ்ந்து "என் மொழிக்குச் செவி சாய்க்காத என் தந்தையே! இக்குமாரனது தேரில் ஒலிக்குந் துவசமாகப் பொருந் தவும் அவனுக்கு வாகனமாக அமரவும் அழகு பிரகாசிக்கும் நின் வச்சிரதேகம் ஐயோ! எவ்வாறுப் பிளவுற்றதோ? சண்டை செய்தற்குப் பயந்து சமுத்திரத்தைத் தஞ்சமாக அடைந்த யான், இங்கே தந்தையாகிய உன்னையும் என் தாயையும் பறிகொடுத்து வெதும் புவோனுனேன்" (அ)

என்று கூறி உள்ளநொந்து தன் குலத்திற்குத் தொன்றுதொட்டே குருவாயிருக் குஞ் சுக்கிரபகவானை யடைந்தான். இறந்துபோன எல்லா அசுரர்க்கும் அவ் விரணி யனைக்கொண்டே முறையான ஈமக்கடன்களைச் சுக்கிரபகவான் அன்று செய்து முடித்த வுடனே, வலிமையுடைய வீரபாகுதேவரை முருகக்கடவுள் கண்ணுற்று "கொடிய சிறை யிற் கிடக்கின்ற யாவரையும் என்முன்பு நீ கொண்டுவருவாயாக" என்று பணித் தருளினன். (கூ)

அழகு பொருந்திய அறிவினையுட்கொண்ட திருப்புகழைப் பாடிய தெய்வப்புலவ ரது நெறியை விரும்பும் எனக்கினியவர்களே! வீரபாகுதேவர், அவ்வாறே சயந்தன் முதலிய தேவர்களைக் கொண்டுவந்து சேர்த்தவுடன் அவர்கள் தமதழகிய கைம்மலர்களைத் தலைமேற் குவித்துக் குமாரபெருமானைக் கும்பிட்டனர். அவர்கள் (சிறைவாச காலத்திற்) சுகானுபவமின்றி வாடிக்கிடந்த அயர்வு நீங்கும்படி பெருமான், பரிசுத்தமாகிய புன்முறு வல் செய்தனன். (கo)

வீரமாகேந்திரபுரியில்
உத்தரகிரியைக்கிடங்கொடுத்தருளிய
திருவிளையாடன் முற்றிற்று.

---

பதினொன்றாவது

# திருச்சீரலைவாய்த்திருவிளையாடல்.

---

கலிநிலைத்துறை.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

அடியொன்றற்குப்பதினைந்தக்கரம்.

இரண்டுசீர்வண்ணம்.

ஏணுறு மீனம கோததி யென்பதை நோக்கியிம்
மாணுறு வீரம கேந்திர மாநகர் வண்மைகள்
வீணுறு வானிலை கொள்ளென லாலவ்வி தஞ்செய்து
சேணுறு சீரலை வாயைய டைந்தவொர் செக்கர்வேள். (க)

நீளுறு மாவிருள் பாறநி ரப்பின்ம ணிக்குலக்
கோளுறு கோளரி யாசன மீதுறு கோடுடை
வாளுறு பூவன்ம ணிக்குவ டென்னவ யங்கினன்
தோளுறு மாலையி லேகர்ப ணிந்திது சொல்வரால். (உ)

தானவ ரென்பவர் செய்தத காதவி னைக்குளாய்
வானவ ரென்சொலி மூழ்ந்தன மப்பெயர் மன்னுமா
றூனவ கிங்கிணி பூணடி யாயிவ ணர்ச்சனை
தானவ மின்றியி ழைத்திட வின்னரு டாவென. (ங)

வேண்டளி கண்டபி ரானது செய்திர்வி ழுக்கதிர்
காண்டலி லங்குமு னென்றன னண்டர்க ளித்துமால்
பூண்டகு டங்களிற் கங்கைந றுந்தண்பு னற்பனீர்
வேண்டள வுங்கமழ் வாசம்வி ளைத்துநி ரப்பினர். (ச)

அவ்விரும் பொற்குட மாயிர நன்கெடுத் தாட்டினர்
செவ்விருஞ் சிற்குண வேலவன் மெய்யினிற் செஞ்சுடர்
ஒவ்விரும் பொற்றிரு வாடைகள் சார்த்தின ருட்குலாந்
தெவ்விரும் பெற்றியர் காணரும் பூண்டொடை சேர்த்தினர். (ரு)

அடியொன்றற்குப்பதினறக்கரம்.

விரைவளர் சந்தந றுந்துணர் பாசடை மென்புகை
நிரைவளர் நன்கர தீபம ணித்தொனி நீண்மறை

உரைவளர் செந்துதி கொண்டுயர் பூசையு ஞற்றினர்
வரைவளர் கந்தனு மச்செய் னீடம கிழ்ந்தனன். (௬)

பொடிதிகழ் மேனிவிண் ணுடரை நோக்கியப் பூரணன்
மடிதப நீர்செய்த பூசனை யேற்றும கிழ்ந்தநான்
சடிதியி லீவர முண்டெனிற் சாற்றுதி ரென்றலும்
அடிகளை யாமுன்ம றந்தபொல் லாங்கின டைந்தசூர். (எ)

அலகில டங்குவ தன்றத னுலுன டித்துணை
மலர்களை யென்றும றக்கவி டாதுசெய் மாவளி
நிலவிட வின்றரு ளாயெனும் வானவர் நீண்மொழி
இலகயி லெண்குணன் கேட்டது தந்தன மென்றனன். (அ)

உருநிறை தேவருய் செந்திசெந் தூரொரு வாவரும்
பொருணிறை தூயசெ யந்திவண் சிந்துபு ரங்கெடா
மருநிறை மாதளி செவ்விய சந்தன மாமலை
திருநிறை சீரலை வாயென விஞ்சலிச் செந்திலே. (௯)

கதிருத யஞ்செயல் கண்டுசி கண்டியி லேறிவான்
அதிரவ ருஞ்சுரர் சண்முனி வோரொட றைந்தவிப்
பதியைய கன்றுப ராசல மெய்தவுள் ளோனவன்
மதியன றும்புகழ் நாவணே யாடிரு மள்ளனே. (கO)

---

## பதினொன்றாவது

# திருச்சீரலைவாய்த்திருவிளையாடல்.

---

வலிமை பொருந்திய ஜலசர நிறைந்த கடலைநோக்கி "இப்பெருமை வாய்ந்த வீரமாகேந்திரமென்னும் பெரிய நகரத்தின் வளப்பங்கள் பிறரெவர்க்கும் பயன்படாதபடி அவற்றை உன்னுளடக்கிக் கொள்ளுக" என்று ஆஞ்ஞாபித்தலால் அவ்விதமே நிறைவேற்றித் தூரத்திலுள்ள திருச்சீரலைவாயை யடைந்த செவ்வேட் பரமன்,— (க)

ஒழியாப் பேரிருள் ஓடும்படி குறைவற்ற நவரத்தினக் கூட்டங்கள் பதிக்கப் பட்ட சிங்காசனத்தின்மீது ஆறு சிகரங்களையுடைய செவ்விய இரத்தின மலையைப்போல விளங்கினன். மாலையணிந்த தோளினராய்த் தேவர்கள் வணங்கிப் பின்வருமாறு விண் ணப்பிப்பா ராயினர். (உ)

அசுரர்கள் செய்த இழி செயல்களுக்காளாய் (மேலோர் என்னும் பொருடரும்) "வானவர்" என்னும் பெய்ரை யிழந்துவிட்டோம். ஒலிடுகின்ற புதிய கிங்கிணி தாங்

கிய தாளுடையாய்! அப்பெயர் மீண்டு மெங்கண்மாட்டு நிலைபெறும்பொருட்டு இங்கே நினக்குச் செய்யும் அருச்சனையை நன்குபுரிய இனிய அருளைத்தருவாய் என்று,— (௩)

வேண்டிக்கொள்ளும் அன்பினைக் கண்ணுற்ற கடவுள் "சூரியோதயத்தின் முன்னர் அங்ஙனஞ் செய்வீராக" என்று திருவாய் மலர்ந்தருளினன். தேவர்கள் மகிழ்ந்து பெருமைவாய்ந்த குடங்களிற் கங்காசலத்தையும் நல்ல குளிர்ந்த புனலாகிய பனிநீரையும் வேண்டியமட்டுஞ் சுவாசனை கமழக்கலந்து நிரப்பினார்கள். (௪)

அப்படி நிரப்பப்பட்ட பெரிய பொற்குடங்கள் ஓராயிரமெடுத்து, செல்வமும் பெருமையும் வாய்ந்த ஞானரூபியாகிய முருகனது திருமேனி குளிர அபிடேகஞ் செய்தனர். செஞ்ஞாயிற்றை நிகர்த்த சிறந்த பீதாம்பரங்களைச் சார்த்தினார்கள். உள்ளே குலாவிக்கொண்டிருக்கும் பெரும்பகைக் குணமுடையார் காண்டற்கரியனவாய திருவாபரணங்களையுந் திருத்தொடையல்களையுந் திருமேனியிற் சேர்த்தினார்கள். (௫)

மணம் பெருகிய சந்தனம், நல்ல பூக்கள், நல்ல பச்சிலை, நறுந்தூபம், வரிசையாகக் காட்டப்படுந் தீபங்கள், மணியோசை, பெரிய வேதமந்திரங்கள், நற்சொற்களார்ந்த நற்றுதி ஆகிய இவற்றாற் சிறந்த பூசை செய்தனர். குறிஞ்சிக் கிழவனாகிய கந்தபெருமானும் அவரது செய்கை பெருகுமாறு உவகை பூத்தனன். (௬)

அவ்விளம்பூரணன், விபூதி தாரணத்தால் விளங்கு மேனியினராகிய தேவர்களை நோக்கி "நீவிர் சோர்வின்றிச்செய்த பூசையை அங்கீகரித்து மகிழ்ந்த யாம் இப்பொழுதே தரவேண்டிய வரங்களுளவாயிற் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினவுடன், தேவர்கள் "உன்னுடைய திருவடிமலர்களை அடியேங்கள் முன்பு மறந்தபாவத்தால் அடைந்த துன்பங்கள்,— (௭)

கணக்கி லடங்குவனவல்ல. ஆதலால் நின் திருவடிமலர்களை ஒரு நாளும் அடியேங்கள் மறக்கவொட்டாதபடி செய்யும் பேரன்பு பிரகாசிக்க இஞ்ஞான்று அருள்புரிவாய்" என்று விண்ணப்பித்த தேவர்களுடைய ஆழ்ந்த கருத்தோடு கூடிய வார்த்தையை மின்னும் வேலேந்திய எண்குணத் திறைவன் திருச்செவியிலேற்று "அதனைத் தந்தோம்" என்று திருவாய்மலர்ந்தருளினன். (௮)

அவயவப்பழுதில்லாத தேவர்கள்வாழுஞ் செந்தி, செந்தூர், அரியசெல்வ நீங்காத் தூய்மையுடைச் செயந்தி, வளமுடைச் சிந்துபுரம், கெடாநறுமண நிரம்பிய மாதளி, செய்ய சந்தனசயிலம், அழகு நிறைந்த சீரலைவாய் என்றியம்பும்படி விஞ்சி நிற்றல் இச்செந்திலே. (௯)

பொழுது விடிதலைக் கண்டு, மயின்மீது ஆரோகணித்துத் தேவர்களும் ஆறுமுனிவர்களும் ஆகாயம் அதிரும்படி உடன்வர, திருச்சீரலைவாயென மேற்சொல்லிய இச்செந்திற்பதியைவிட்டுத் திருப்பரங்கிரியை யடையக் கருதினேன் யாவனெனில், ஞானரூபியும் இனிய திருப்புகழ்முனிவரை யாளொரு வீரனுமாகிய வெற்றிவேலனே யாவன்.

[ஆறு முனிவர் யாவரென்றலை இதனடுத்த திருவிளையாடல் இரண்டாம்பத்தினறியலாம்.] (கo)

திருச்சீரலைவாய்த்திருவிளையாடன்முற்றிற்று.

---

பன்னிரண்டாவது

# திருப்பரங்கிரித்திருவிளையாடல்.

## (முதற்பத்து)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குமரன் மொழிதலை மீக்கொளு மமுத
　　கோதை தவநிலை நீங்கியிந் திரன்முன்
அமரர் மகிழ்வுற வழகிய குழந்தை
　　யாகி வருதலு மவனெடுத் தேதன்
சமர சதுமருப் பியானைகைக் கொடுத்தென்
　　றனையை யிதுபுரப் பாயென வுரைத்தான்
அமர கயமுமவ் வாறிழைத் தமையி
　　னனையள் யானையெ னும்பெயர் தரித்தாள். (க)

தேவ சேனையு மவளெனக் காந்தந்
　　தெரிக்கு மன்னவ டனைமுரு கோற்கே
ஈவ லியானென விந்திரன் பரங்குன்
　　றெய்தி யுளமுரு கோனடி பணிந்தே
சேவ லேறுயர் கொடியிறை வாவென்
　　செல்வக் கொடியினை மணந்தருள் வேறே
ஆவ லோடிழைத் திடுபணி யறியே
　　னருடி யென்றனன் முருகனு மியைந்தான். (உ)

மேரு மால்வரை வைகுச சியையும்
　　விரைகொள் குந்தள தேவதந் தியையும்
ஏரு லாவிடு பரங்கிரி தருவித்
　　தெம்பி ராற்கிவண் மணமெனு மகவான்
சீரு லாமுசு குந்தன்மற் றுளகோல்
　　சிறந்த வரசர்க டேவர்கண் முனிவர்
யாரு மேமண முகுர்த்தம துணர்வான்
　　யாண ரொடுதெரி வித்தினி துவந்தான். (௩)

கணிக்கொ ளுவெழில் பொருந்திட விசுவ
　　கன்ம னுற்செய்த திருமணச் சாலை
மணிப்பொன் மாலைகள் கதலியங் கமுகு
　　மாழை தாழைகண் முதனறும் பொருளாற்

ச. மாழை = மாமரம். தாழை = தெங்கு.

பணித்தி றம்பட வயங்குபன் னிரலைப்
பரவை நேர்பெரும் படையொடும் வந்த
துணித்திண் முடிமுசு குந்தனன் முனிவர்
சுரர்கள் யாவருங் கணித்ததி சயித்தார். (ச)

நாக மாதர்க ணீரர மகளிர்
நவையி லணங்குக டாபத மாதர்
மேக வாகனன் மகளினை நோக்கி
மெய்ப்ப ரம்பொருட் குரியவொர் தேவி
ஆக நேர்ந்தனை யாகலி னகில
மனைத்து மேதொழ வுளையென வவடன்
தோக மில்லடி தொழுதவ ணியன்ற
தொண்டு புரிதலி னமர்ந்தன ராலோ. (ரு)

சதம கன்சொன படிதெய்வ யானை
தனையி லக்குமி முதலிய தேவ
மதர்ம லர்க்குழ லியர்புடை சூழ
வந்து சதமகன் பாங்கரி னிற்ப
இதமொ டவனுமம் மாமணச் சாலை
யிடைவி டுத்தன னெம்பெரு மாட்டி
முதலை வாயுமை யீசனை வணங்கி
முருக னைக்கடைக் கணித்துவெள் கினளால். (சு)

வெள்கி னுண்முது கினையுமை தடவி
விமல மார்திரு மணநிலை யீதென்
றுள்கி யேயலங் கரித்தபன் மணியே
னுறுமொர் பீடிகை தனிலவ ளையுநீள்
அள்கொள் வேலவ னையுநனி யிருத்தி
ஞனன் னீர்சசி வார்க்கவிந் திரனும்
னொள்க வின்றடிப் பூசைசெய் திவளை
நுனக்க ளித்தன னெனப்புன லுய்த்தான். (எ)

அதனை யேற்றமஞ் ஞையன்மண வலங்க
லங்கை தனிற்கொடு மணமக ளேநீ
எதனை நாடிமுன் னேன்பிழைத் தனையோ
வதனை முடித்தன னென்றவட் கதனை
மதனி லாவிடச் சூட்டின னகில
மங்க லப்பறை முழங்கின மாலின்
சுதனும் வைதிக சடங்கயர்ந் தனன்பின்
றொடர்க ணங்களொ டரனுமை மறைந்தார். (அ)

எரியி ராயனு நிருதியு நமனு
மெறுழ்கொள் வருணனும் வாயுவு மளகா
புரியி ராசனு மீசனு மெனவே
புகலு மாதிசைப் பாலரு மழிப்பே
புரியு மூர்த்தியு மரியுமற் றையரும்
பொருவின் மணத்திருக் கண்டுள மகிழ்ந்தோம்
பெரிய புண்ணிய மடைந்தன மிதினும்
பெரிதி யாதென நுவன்றிருப் படைந்தார். (கூ)

உலக தாரக ஞானசத் தியெனு
மொருத்தி யாலிங னெழில்செயப் பட்ட
அலகில் சேயவன் றனதடி சார்ந்தார்க்
கழிவில் வீடுநல் விருத்தியு மீயுந்
தலைவ னுகலின் வகுப்பறை புதற்குஞ்
சாமி யாகலி னறுமுனி வோர்க்கம்
மலையின் ஞானமுத் திரைவழி யழியா
மகிழ்வு செய்தன னவருமுய்ந் தனரே. (கo)

---

பன்னிரண்டாவது

# திருப்பரங்கிரித்திருவிளையாடல்.

---

(முதற்பத்து)

குமரவேளிட்ட திருக்கட்டளையைச் சிரமேற்றாங்கிய அமுதவல்லி யென்னும் பெயரையுடையாள், தந்தவநிலையினை விட்டுத் தேவேந்திரன் முன்பு வானவர் மகிழ அழகிய குழந்தையாகி வந்தவுடன், அவ்விந்திரன் தன்கைகளா லெடுத்துத் தனது போர்க்குரிய நான்கு தந்தங்களையுடைய ஐராவதத்தினிடங் கொடுத்து "இது என்புத்திரி. இவளை வளர்த்து வரக்கடவாய்" என்று கூறினன். அந்தத் தேவகஜமும் அவ்வாறு செய்தமையால் அவ்வம்மை தெய்வயானை யென்னுந் திருநாமத்தைப் பெற்றாள். (க)

"தேவசேனை" என்னும் பெயருடையாளு மவளேயென்று **ஸ்ரீ ஸ்காந்த மஹா புராணங்** கூறும். அவ்வம்மையை முருகப்பெருமானுக்கே திருமணஞ்செய்து கொடுப்பே னென்று தேவேந்திரன், திருப்பரங்குன்றையடைந்துள்ள முருகவேளின் திருவடிகளைத் தொழுது நின்று "சேவற் கொடியுயர்த்த இறைவனே! அடியேனுடைய செல்வக் கொடியினை மணந்தருள்வாயாக. விருப்பத்தோடு யான் செய்யத்தக்க பணி இதனினுஞ் சிறந்தது காண்கிலேன். (ஆதலின்) அங்கீகரித்தருள்" என்று விண்ணப்பித்தனன். அங்ஙனம் முருகப்பெருமானும் இணங்கினன். (உ)

மகா மேருகிரியில் வதிந்துள்ள இந்திராணியையும் இயற்கை நறுமணங்கமழுங் கூந்தலையுடைய தேவயானையையும் அழகு பிறங்குந் திருப்பரங்கிரிக்குத் தருவித்து, எம்பெருமானுக்கு இங்குத் திருமண நிகழுமென்றுகூறும் இந்திரன், புகழ்மிக்க முசுகுந்த சக்கரவர்த்தி முதலிய செங்கோன் மன்னருந் தேவர்களும் முனிவர்களுந் திருமண முகூர்த்தத்தை யறியும்படி மங்கலமாகத் தெரிவித்து மகிழ்ச்சியுற்றிருந்தான். (ந)

அளப்பரு மழகுபொருந்த விசுவகருமாவாற் செய்யப்பட்ட திருமணச்சாலையானது நவரத்தினங்களோடுகூடிய பொன்மாலைகள், வாழை, கமுகு, மா, தெங்கு முதலிய நற்பொருள்களால் வேலைப்பாடமைய விளங்கிய பல வரிசைகளையும் கடலை நிகர்த்த பெரும்படையோடும் வந்த ஒளிமயமான வலிய முடியணிந்த முசுகுந்த சக்கரவர்த்தியும், நல்ல முனிவர்களும், தேவர்களும், மற்றனைவரும் அளவிடு மாற்றுல் வியப்படைந்தனர். (ச)

நாகலோகப் பெண்களும், நீரில் வாழுந் தெய்வப்பெண்களும், குற்றமற்ற தேவலோக மாதரும், தபப்பெண்களும் இந்திரன் புதல்வியை நோக்கிச் "சத்தியரூபியாகிய தனிமுதற் கடவுளுக்குத் தக்க சத்தியாதற்கு வாய்த்துள்ளனையாதலால் எல்லா வுயிர்களுமே நின்னை வணங்குமாறுள்ளாய்" என்று கூறி, குற்றமற்ற அவ்வம்மையின் திருவடிகளை வணங்கி, அங்குத் தம்மாலியன்ற தொண்டுகளியற்றத் தலைப்பட்டனர். (ரு)

தேவயானையம்மை, இலக்குமி முதலிய செழுமலர்க்கூந்தற் றேவமாதர்கள் தன்னைப் புடைசூழவந்து தேவேந்திரன் கூறியிருந்தபடி அவனருகடைந்து நிற்ப; இந்திரனும் அன்போடு அவளை அத்திருமணச்சாலையிற் கொண்டுபோய்ச் சேர்த்தனன். (அங்ஙனம்) எம்பெருமாட்டியும், முதலைப்பூண்டுபோற் சிவந்த அதரமுடைய உமாதேவியையுஞ் சிவபெருமானையும் வணங்கி முருகவேளைக் கடைக்கண்ணுற் பார்த்து நாணி நின்றனள். (சு)

இங்ஙனம் நாணிநின்றுளது முதுகினை உமாதேவி தடவி, பரிசுத்தம் பொருந்திய இதுவே திருமணச்சாலையெனக் கருதி, ஆங்கலங்கரித்துள்ள உறுதியுடையொப்பற்ற நவமணிப்பீடிகையில் அந்த மணமகளையுங் கூரிய நீண்ட வேலுக்கிறைவனுகிய செவ்வேளையு நன்ருக அமர்த்திஞள். (பின்பு), இந்திரனும் இந்திராணி நீர்வார்க்கப் பெருமானுடைய திருவடிகளை நன்கு பூசித்து "இவளை நினக்குக் கொடுத்து விட்டேன்" என்று தாரைநீர் வார்த்தான். (எ)

அதனை யேற்றருளிய மயிலேறும் பெருமான் மணமாலையைத் தனது அங்கையிலெடுத்து, "மணமகளே! மேனுள் நீ எதனைக் குறித்துத் தவஞ்செய்தனையோ அதனை இன்று நிறைவேற்றினேன்" என்று திருவாய்மலர்ந்தருளி, அம்மாலையை அழகு விஞ்சப் பிராட்டிகழுத்திற் சூட்டினன். எல்லா மங்கல வாத்தியங்களும் ஒலித்தன. பிரமதேவனும் வைதிக சடங்குகளைச் செய்தனன். பின்பு, சூழ்ந்துவருங் கணங்களோடு சங்கரனுஞ் சங்கரியும் அந்தர்த்தான மாயினர். (அ)

(இப்பால்) அக்கினிதேவனும், நிருதியும், இயமனும், வலிமிக்க வருணனும், வாயுதேவனும், குபேரனும், ஈசானனும் என்று சொல்லப்படு மாட்சிமைதங்கிய திக்குப்பாலகர்களும் சங்காரத்தொழிலையுடைய குணருத்திரமூர்த்தியும், விண்டு மூர்த்தியும்,

மற்றையோர்களும் "நிகரற்ற இத்திருமணத்தின் பொலிவைக்கண்டு மகிழ்ந்தோம்: பெரும்புண்ணிய மடைந்தோம்: இதனினும் பெரிய பேறு யாதுளது" என்று கூறித் தத்தமிருக்கையை யடைந்தார்கள். (௯)

சேதனசேதனப் பிரபஞ்சங்கட்கெல்லாந் தாரகமாகிய ஞானசத்தியால் இவ்வண்ணம் அலங்கரித்துக் கொள்ளப்பட்ட அளக்கொணுத் தனிப்பெருங் குமரன், தனது திருவடியை நாடினர்க்கெல்லாம் அந்தமில் வீடும் இகலோக போகமும் ஈந்தருளுந் தலைவனுதலாலும், திருவகுப்புக்கள் பாடிய தெய்வப்புலவருக்குங் குருவாதலாலும், (பராசரமுனிவர் புத்திரராகிய) ஆறுமுனிவர்கட்கும் அத்திருப்பரங் குன்றிலேயே ஞானமுத்திரை வாயிலாகப் பொன்ருத பேரின்பத்தை யருளினன்: அவர்களு முய்ந்தனர். (க௦)

திருப்பரங்கிரித்திருவிளையாடன்
முதற்பத்துமுற்றிற்று.

---

# திருப்பரங்கிரித்திருவிளையாடல்.

---

## (இரண்டாம்பத்து)

**கலிவிருத்தம்.**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**இரண்டுசீர்வண்ணம்.**

அமரர் செந்தில டைந்தவொர் பேறும்
நிமலன் விண்டின்ம ணம்புரி நேரும்
நுமது ணம்பநு வன்றன னன்பீர்
சுமதி விஞ்சறு பேர்கதை சொல்வேன். (க)

அற்றம் வென்றப ராசர னருளிற்
பெற்ற நந்திபெ ருஞ்சதுர் முகனல்
எற்று மின்குண தத்தனம் மாலி
பற்ற னந்தனெர் சக்கர பாணி. (உ)

என்னு மாறுசி ருருமி றும்பேர்
மன்னு சானவி நாணவின் வாவி
தன்னின் மீனவி னம்பல தாம்பிற்
பின்னி யாடல்பி தாமுனி கண்டு. (௩)

---

௩. இறும்பு = தாமரைப்பூ.

அருளி லாச்செய லாற்றிய நீவிர்
தெருளி லாச்சிறு மீனென வாயிப்
பொருவி லாச்சுனை போமின்க ளென்ன
வெருவி வேர்த்தவர் மேயினர் விம்மல். (ச)

ஆங்கு மெய்யன மேன்மினிவ் வாணை
நீங்கி யுய்வது நின்மலி பீர்நீர்த்
தேங்கு செவ்விய ருந்தவி ஞலிஃ
தோங்கு செவ்வுரை தீப்புக லொக்கும். (ரு)

என்று கூறலு மேங்கலி லன்னோர்
ஒன்றி மீனுரு வாவியு றைந்தார்
மன்ற லார்குழன் மாதுமை சேயோற்
கன்று ளார்வொட ருத்திடு மாறு. (சு)

வால்பெ றும்பொல வள்ளம திற்றன்
பால்க றந்திடு போதது பம்பி
மால்பி றங்கலர் வாவியில் வீழ்ந்த
எல்வை யுண்டுமுன் மேனியு மேற்றார். (எ)

பொக்க நூறுப ரங்கிரி போய்நீர்
செக்கர் வேளடி சிந்தைசெய் கென்று
முக்க ணுதிமொ ழிந்தமை கொண்டா
றக்க ணுளரு மத்தவ நோற்றார். (அ)

சேந்த னம்மலை சென்றவ ரோடும்
போந்து நண்ணலர் பொன்றலு ஞற்றிச்
சாந்த வன்னவர் தண்டொடு மீண்டக்
காந்தி கொண்மலை கண்டவ ரேற்பான். (கூ)

வெல்ல ரும்பவம் வேறல்பி றங்கச்
சொல்ல ருஞ்சொறு லக்குகை காட்டால்
நல்ல ரும்பதி ஞானம ளித்தான்
பல்ல ரும்புக ழன்படர் செல்வீர். (க0)

---

# திருப்பரங்கிரித்திருவிளையாடல்.

## (இரண்டாம் பத்து)

அன்பர்காள்! தேவர்கள் திருச்செந்தூரிலே பெற்றுக்கொண்ட வரத்திருவையும், அனுதிமலமுத்தனாகிய அறுமுகப்பரமன் திருப்பரங்குன்றில் தெய்வயானைப் பிராட்டியைத் திருமணம்புரிந்த நேர்மையையும், உங்கள் உள்ளம் நம்பும் வண்ணஞ் சொல்லிமுடித்தேன். (இதன்மேல்), நல்லறிவிற் சிறந்த ஆறுமுனிவர்கள் சரித்திரத்தைச் சொல்லுவேனாக. (க)

(பிறப்பிறப்பென்னும்) அச்சத்தைவென்ற பராசரமுனிவர் திருவருள் வலியாற் பெற்ற நந்தி, பெருமைபெற்ற சதுர்முகன், அஞ்ஞான இருளையோட்டும் இன்குணமுடைய தத்தன், அழகிய மாலி, அன்புடைய அனந்தன், ஒப்பற்ற சக்கரபாணி,— (உ)

என்னும் ஆறு சிறுவர்களுந் தாமரை மலர்களின் அழகு தங்கியுள்ள கங்காநதியின் சரவணப்பொய்கையிலிருந்த மீன்களிற் பலவற்றைப் பிடித்துக் கயிற்றிற்கோத்து விளையாடுவதைத் தந்தையாகிய பராசரமுனிவர் பார்த்து,— (ங)

"சீவகாருண்ணியமற்ற இச்செயல் செய்த நீங்கள் தெள்ளறிவற்ற சிறுமீன்களாக வருமாறி இம்மகிமை பொருந்திய சுனையினுட் போவீராக" என்று சபிக்க; அவர்கள் பயந்து உடம்பெல்லாம் புழுங்கி அழத்தொடங்கினர். (ச)

அப்போது பராசரமுனிவர், "நீங்களழவேண்டாம். இச்சாப நீங்கி நீங்களுய்தி பெறுவது, உமாதேவியின் திருப்பயோதரப்பாற்றுளிகள் இப்பொய்கை நீரிலே தேங்கும் அமையம் அந்நீரை யருந்துதலேயாம். இந்தத் தண்டனை, மாற்றுயருஞ் செம்பொன் நெருப்பிற் புகுதலை யொக்கும்" (ரு)

என்று கூறியவுடன் அழுதலொழிந்த அவர்கள், மீனுருவடைந்து சரவணப் பொய்கையிற் றங்கினுர்கள். (பின்னர்), இயற்கை நறுமணமுடைக் கூந்தலினளாகிய உமாதேவி சேயோனுக்கு அக்காலத்தே அன்போடு ஊட்டும் பொருட்டு,— (சு)

ஒளிபொருந்திய பொற்கிண்ணத்திலே தனது திருப்பயோதரப்பாலைக் கறந்திட்டபோது அது பொங்கிப் பெருமை விளங்குமத் தாமரைப்பொய்கையில் வீழ்ந்த அமையம், அதனை அவ்வறுமுனிச்சிறுவரு மருந்திப் பண்டையுருவ்வயு மடைந்தனர். (எ)

"நீங்கள் பொய்மையை அழிக்கும் மகிமையுடைத் திருப்பரங்கிரிக்குச் சென்று செவ்வேளின் திருவடியைத் தியானித்திருப்பீர்களாக" என்று முக்கட்பரமன் கூறியருளிய மொழியை அந்த ஆறுணர்வுடையோரும் என்றுகொண்டு அவ்வித தவத்தைச் செய்தார்கள். (அ)

(சூர சங்காரார்த்தம் புறப்பட்டுவந்த) செவ்வேட் பெருமான், அம்மலையினை யடைந்து அந்த ஆறுமுனிவரையும் உடனழைத்துச் சென்று பகைவுரைச் சங்க

ரித்துச் சாந்தியடைந்துள்ள அம்முனிவர்களோடுஞ் சேனையோடுந் திரும்பி அந்த ஒளி பொருந்திய திருப்பரங்கிரியைக் கண்டு அம்முனிவர்களை (த் தன்னருளுக்குப் பாத்திராக) ஏற்றுக்கொள்ளும் பொருட்டு,— (கூ)

**வெ**ல்லலற்கரிய பிறவிப்பிணியை வெல்லுதல் விளங்கும்படி சொல்லலற்கரிய சொல்லை விளக்குஞ் சின்முத்திரையினாலே நன்மையும் அருமையும் வாய்ந்த பதி ஞானத்தை அவர்கட்களித்தனன் (என்க;) பலவரிய திருப்புகழ்களைப்பாடின முனிவரது வழிச்செல்வீர்! (கO)

திருப்பரங்கிரித்திருவிளையாடல்
இரண்டாம்பத்துமுற்றிற்று.

---

# திருப்பரங்கிரித்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியோன்றற்குப்பத்தோன்பதக்கரம்.

*தான தனதன தான தனதன தான தனதனன.*

**ஆ**ணி நவமணி மோலி யணிபர ஞறு முகனிகம
வாணி புகழ்குகன் ஞான குருவென வாகி மதனவிரும்
வேணி யறுமுனி வோரை யறிவெனும் வேத மருளியதால்
நாணி லவுமலை ஞான கிரிசுக நாக மெனவுளதே. (க)

ஓது மளவையி லாத புவனமு மோமெ னுமுதலுமா
போது மதியமு மாவி களுமதி பூத ரெனுமெவரும்
வாது களிலமை யாத பிரமமு மாசில் குகனைவிடா
ஏது வுணருண் மேய வறுவரு மேம நிறைவினராய். (உ)

*தந்த தனதன தந்த தனதன தந்த தனதனன.*

கந்த னடியர விந்த மலரைய ணிந்து கவின்முடிமேல்
எந்தை முனிவர னிங்கி லைபரம தந்தை யெனவிஙனி
வந்த கருணையெ னந்தெ மையும்வரு கென்ற கருணையெனெம்
புந்தி யலரைவி ரும்பி யினிதுபு குந்த கருணையெனே. (ந)

கண்டு மதுபல வின்ப ழமுதிர்க ரும்பி ரசமதுரம்
மண்டு கதலிப லம்ப யசதிவ ரங்க ளுடையமரர்
கொண்டு ணமுதநல் கின்பை யிகழ்சுவை கொண்ட கடலினையாம்
உண்டு மகிழவு னந்த மினுளமு வந்த கருணையெனே. (ச)

தைய தனதன தைய தனதன தைய தனதனன.

செய்ய மரைவிழி மெய்யன் மகனது செய்கை தவறெனுநாள்
உய்யு நெறியிவ னெய்தி லனெனவு ளுள்கி விரிசிறையில்
கைய வனைசெயல் கைய ரறிவர்கொ னையு மவனையுமோர்
துய்ய னெனவிடல் செய்த தொடர்பையு நொய்யர் தொடருவரோ. (ரு)

ஐய மிலளியி னையு மனமொடெ மைய நினைநினைவோர்
தைய லருறவி னாயி னுநிதிகொ டைவ மெனவெணினும்
வெய்ய தறநித முப்பெ ரியரென வைய மிலைவெளிறர்
செய்யு நுதியையு நெய்தை யெனவிழை செய்கை யுநினதரோ. (சு)

தன்ன தனதன தன்ன தனதன தன்ன தனதனன.

பொன்னி னவிர்சடை யண்ணல் பிதிர்பிதிர் புண்ணி யவுமைபிதா
அன்னை முதுபிதிர் முன்ன வனெனவு மண்ண வருளினையால்
மன்னு கலைமக ணன்னர் மலர்மகள் வண்மை யொடுபுகழும்
இன்னு வகையிப மன்னை யெனவுள ளெம்மி னுயர்பவர்யார். (எ)

எண்ணு மளவையி லெண்ணி லபுரியு மெண்ணில் வலியுடைநீ
நண்ண லரழிவு நண்ண வமர்நிலை நண்ணி வணைதொழிலுன்
தண்ண ளிநடைக ளென்ன விநனுணர் தன்மை யுமுடையயாம்
நண்ண வரிதெது கண்ண வரிதெது நன்னி புணமினியே. (அ)

தந்த தனதன தந்த தனதன தந்த தனதனு.

என்று களிநட னன்கு புரியவ ரெந்தை தலைவிமுனே
நின்று பகவதி யெங்க ணிதிகதி யென்ற டிபணியவேல்
ஒன்று கரனிவ ரென்று மிளமையு ரன்கொ ளுறுவர்மகார்
என்று கொளிவரை யென்ற படியவ ளுங்க ருணைபணினுள். (கூ)

தத்த தனதன தத்த தனதன தத்த தனதனு.

அக்க ருணைவழி யுற்ற நலனுல கத்த ரறியவெனுத்
திக்க திரநனி தொக்கு தொகுதொகு தெய்த்தெ யெனுநடமே
நக்க ணவர்களி ழைத்தி னிதுபணி நற்ச ரவணனையே
தக்க வொலிமுனி நச்சி னனறிதிர் சற்க தியைவிழைவீர். (க0)

---

க. அறமுனிவர்க் கருளிய ஞானோபதேசத்தினை யடுத்தே தெய்வத்திருமண நிகழ்ந்ததென்றுங் கூறப்படலின் "புரி" என்னும் வினைத்தொகை "புரிந்த" என்னும் இறந்தகாலப் பொருளில்வைத்துக் கூறப்பட்டதெனவுமாம்.

# திருப்பரங்கிரித்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து)

சிறந்த நவரத்தின கிரீடத்தையணிந்த முதல்வனும், ஆறு திருமுகங்களுடைய வனும், வேதவாணி புகழ்பவனுமாகிய குகபெருமான், ஞானசாரிய வடிவின ஞகி அழகு பிரகாசிக்குஞ் சடைமுடியுடைய அந்த ஆறு முனிவர்கட்கும் ஞானேபதேசத்தை யிங்குச் செய்தருளினமையால் என்றும் விளங்கி நிற்கும் இத்திருப்பரங்கிரி, ஞான கிரியென ஆனந்தகிரியெனச் சொல்லவுளதாம். (க)

சொல்லுமளவைக் கடங்காத உலகங்களும், அவற்றிற்குத் தாரகமாகிய பிரணவமும், சூரியனும், சந்திரனும், உயிர்த்திரள்களும், (பிரமன் விட்டுணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும்) பஞ்ச பூதாதி தேவர்களும், தருக்க வாதங்களிலடங்காத பரப்பிரமும் மலரகிதனுகிய குகனை நீங்கியிராப் பரமகாரணத்தை உணரும்படியான திருவருளை உபதேச வாயிலாகப் பெற்றுக்கொண்ட அந்த ஆறு முனிவர்களும் பூரணனந்தமெய்தப் பெற்றவர்களாய்,— (உ)

கந்தவேளுடைய திருவடித் தாமரை மலர்களைத் தம்மழகிய முடிகளின்மீ தணிந்து "அடியேங்களை ஈன்ற பராசர முனிவரை யிங்குக்கண்டிலம். இப்போதெங்களுக்கு நீ பரம பிதாவாய் வந்தருளிய கருணைத் திறமென்னே! எளிமைப்பட்டு நின்ற அடியேங்களையும் "என்னுடன் வருக" என்றருளிய கருணைதானென்னே! அதனேடு அடியேங்களுடைய இருதய கமலங்களை விரும்பி அவற்றினுட்புகுந்த அருட்டிறந்தானென்னே! (ங)

கற்கண்டு, தேன், பலாப்பழம், முதிர்ந்த கரும்பின் சாறு, இனிமைமிகு வாழைப் பழம், காமதேனுவின் பால், அதிக வரங்களைப் பெற்றுள்ள தேவர்கள் விரும்பியுண்ணும் அமுதம் ஆகிய இவைகள் கொடுக்கும் இன்பத்தை இகழவல்ல சுவையினைக்கொண்ட பேரின்பக்கடலினை யாங்களுட்கொண்டு களிப்பெய்த நினது பரந்த திருவுளம் இசைந்த கருணைதான் என்னே! (ச)

செந்தாமரைக் கண்ணெடுங் கூடிய வடம்புடை விட்டுணுமூர்த்தியின் மகனுகிய பிரமதேவனது (பிரணவப் பொருளுரைத்த) செய்கையைத் தவறென்று திருவாய்மலர்ந் தருளிய அந்நாளில் இப்பிரமன் உய்யுநெறி பற்றிலனெனத் திருவுளத்தினினைந்து, பெரிய சிறைக்கட்கிடந்து வருத்தமுற அவனைப் புகுத்திய நினது செயலினைக் கீழோரறிவரோ? அவ்வாறுகிடந்து வருந்திய அவனையுமொரு புனிதனுக்கிச் சிறைதவிர்த்தருளிய அன்பையுஞ் சாமானியர் உணருவரோ? [அறியார்: உணரார்.] (ரு)

எங்கள் பெருமானே! பூரண அன்பினல் உருகும் மனத்தோடு உன்னை நினைப்போர், பெண்ணுசையால் அலக்கணுறினும் பணமே நம்மை அடிமைகொண்ட தெய்வமெனக் கொள்ளினும், துன்பந்தொலைய உய்திபெறும் பெரியோரென்பதற்குச் சந்தேக

யில்லே. (எனெனில்) அறிவிற்சிறவாப் பேதையர்செய் தோத்திரங்களேயும் பெருமையாக எற்றருள் கருணைத்திறம் நின்மாட்டுளது ; ஆகலின்,— (சு)

(அடியேங்கட்குப்) பொன்போலவொளிருஞ் சடையுடைச்சங்கரன் பாட்டனுகவும், புண்ணிய ரூபியாகிய உமாதேவி பாட்டியாகவும், விநாயகமூர்த்தி பெரிய தந்தையாகவும் பொருந்த இங்ஙனம் அனுக்கிரகித்தனை. கல்வியில் நிலேபெற்ற சரச்சுவதியும் நல்ல இலக்குமியும் நிரம்பப்புகழும் இனியமகிழ்ச்சிவாய்ந்த தெய்வயானை மாதேவி அடியேங்கட்குப் பரம மாதாவாக வமைந்தாள். ஆதலால், எங்களினுஞ் சிறந்தவர் எவருள்ளார்? (எ)

எண்ணியபோதே எண்ணிலாக் காரியங்களைச் செய்யவல்ல அளப்பருமாற்றலுடையீசனுகிய நீ, அசுரர் நாசமாதற்குப் போர்க்களமடைந்து செய்த காரியங்கள் உன்னுடைய அருள்விலாசச் செயல்களேயென இப்போதுணர் பெற்றியினையு முடைய யாங்கள் இனி, அடைதற்கரிய பேறு யாதுளது? குறித்தற்கெட்டாப் பொருள்தான் யாதுளது? பேரறிஞரேயாயினேம். (அ)

என்று கூறி ஆனந்தக் கூத்துப் பெரிதுமாடிய அம்முனிவர்கள், தெய்வயானையம்மை திருமுன்புநின்று "பகவதீ! எங்கள் அழியாச்செல்வமே! யாங்களுய்யுங்கதியே!" என்று சொல்லி அவளுடைய திருவடிகளை வணங்க ; வேலேந்திய பெருமானும் "இவர்கள் எனது உபதேசவழி மாறு இளமைத்திண்மைகொண்ட முனிவர்கள். இவர்களை உன்னுடைய பிள்ளைகளாக அங்கீகரிப்பாய்" எனத் திருவாய் மலர்ந்தருளியபடியே அவளுந் திருவருள் பாலித்தாள். (கூ)

அழியாப்பதவியை நாடுமுளத்தீர்! அக்கருணையாலே தாம்பெற்ற நலத்தை உலகத்தாருமறிய வேண்டுமென்று, ஞானக்கண்ணுடைய அவர்கள், திசைகளதிரத் 'தொக்கு தொகுதொகு தெய்த்தெய்' என்று நடனம்பண்ணி நன்கு பணியப்பட்ட நல்ல சரவணத்தானையே தகுதியுடைச் சந்தமுனிவராகிய அருணகிரிநாதருந் தெய்வமாக விழைந்தனர். இதனை யுணர்வீர்களாக. (க0)

திருப்பரங்கிரித்திருவிளையாடன்

மூன்றும்பத்து முற்றிற்று.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 1925
MADRAS

பதின்மூன்றாவது

# தேவலோகத்திருவிளையாடல்

(முதற்பத்து)

கலிநிலைத்துறை.

இரண்டுசீர்வண்ணம்.

சடைகு லாமுடி யறுமுனி வோர்க்கவர் தகைநெஞ்
சிடைநி லாமுப தேசமெம் மானிழைத் தமைபோல்
விடையு லாமரன் வின்முத வியமலை காள்வேற்
படையி னுனிலை யாதிர்கொன் னெனல்பணித் திடுவான். (க)

எழுந்து நிற்பது போன்மிளிர் பரங்கிரி யின்மேற்
செழும்பு யற்றிர டம்புனல் கொடுமுழுக் கிடலால்
விழுங்க யத்தணி தரளவொண் டொடையென விளங்கிக்
கொழுந்த லத்திடை யிறங்கிநல் கினபுதுக் குளிர்மை. (உ)

அப்பெ ரும்பனி யானறுங் கடம்பர சாலார்
துப்பு றுந்தள வரம்பைவ தரிபுளி தொளைமா
கப்பு றுங்கணி கோடைசிந் தூரமகிழ் கடுக்கை
ஒப்ப லங்கொளி மரம்பிற வுஞ்செழித் தனவே. (௩)

வதன மேமலர் பொருட்டக மலர்ந்துரை வழங்கும்
இதயர் போல்விக சித்திருந் தனவிணர்ச் செடிகள்
அதிதி லாபம வாவலின் றிரப்பவர்க் களிக்கும்
விதியி னுரென வழங்கின பழம்பல விருக்கம். (ச)

கந்த வேளிவர் மஞ்ஞைகொ லிவையெனக் காயா
அந்த மார்தழை தந்தலர்ந் தனவவன் படங்காய்
உந்து சேவல்கொ லிவையெனத் தண்ணடை யுதிர்த்தே
கொந்தெ லாநனி பூத்தன கிஞ்சுகக் கூட்டம். (ரு)

மின்னல் போன்மிளிர் கொடியிடைச் செவ்வரி விழியார்
நன்ன ரார்விழி குவளையென் றிறையளி நணுகும்

---

௩. கோடை - காந்தட்போது ; "வெண்காந்தள் செங்காந்த ளென்றிரு விகற்பமுங் கொண்டே வழங்குங் கோடைப் பெயரே." என்பது சேந்தன்றிவாகரம்.

ரு. படங்கு = விருதுக்கொடி.

இன்ன னூறிறை யிங்குளன் வருதிரென் றிருகைக்
கொன்னர் யாரையு மழைக்குநர் போன்றசெங் கோடை. (௬)

கதலி மாழைபல் பலவினின் கனிகடி மலர்தேன்
உதவ லாலவை நீர்நிலை யெனவுறை தரவும்
மதன வேலைவெள் வளைக்குழு வூரவு மதனீள்
அதரெ லாம்வர ரமரவு முள்ளதப் புடையே. (௭)

நவிர மங்கிளி சேயவற் பாடிநன் காடல்
அவர றிந்திவை செயப்பிறந் திலமென வயர்வார்
அவிர ருங்கிரி யாதலி னணைதவர் வேழும்
விவர விங்கித மாதரம் படுகரில் வீழா. (௮)

இத்தி றப்பதி யிறும்புறை யிறைசில நாண்மேல்
முத்தி றத்தல மகிழவிங் திரற்கணி முடிதான்
நத்தி றத்தொடு சூட்டவெ னுப்பெரு நவிரச்
சித்தி ரப்புற மிவர்ந்தனன் றேவதந் தியொடே. (௯)

இவர்ந்த சேயவன் மகபதி யாதியி லேகர்
உவந்து சூழ்நவ வீரர்பல் பாரிட ருறுவர்
நிவந்த தோள்விற லாரொடெய் தினனுயர் நிலையைத்
தவந்த வாநிலை யருணைய னெறிவிழை தகையீர். (௧௦)

பதின்மூன்றாவது

# தேவலோகத்திருவிளையாடல்.

## (முதற்பத்து)

சடாமகுட தாரணம் பிரகாசிக்கின்ற ஆறு முனிவர்களுக்கும் அவர்களுடைய மேன்மை தங்கிய நெஞ்சிடை நின்று நிலாவும் மெய்ஞ்ஞானோபதேசத்தை எம்பெருமான், செய்ததுபோல "விருஷபத்தின்மீது விளங்கும் பரமசிவனுக்கு வில்லாகவுள்ள மேரு முதலிய மலைகளே! வேலாயுதப்பெருமானுக்கு என்போலு மிருப்பிடமாவீர்களாக; (உருவத்தா லென்னிலு முயர்ந்துள்ள உங்களுக்கு அங்ஙன மாதலே) பெருமையாம்" என்றுரைத்தலை யுபதேசிக்கும்பொருட்டு,— (௧)

எழுந்து நிற்பதுபோல விளங்குகின்ற திருப்பரங்குன்றின்மீது செழித்த மேகக் கூட்டங்கள் தமது இனிய நீரால் முழுக்காட்டுதலாலே பெருகும் புனலொழுக்கின் வரிசைகள், ஒள்ளிய முத்துமாலைகளை யொப்பப் பொலிந்து வளப்பமுடைய நிலத்திலிறங்கிப் புதுமையான குளிர்ச்சியை யீந்தன. (௨)

குறைவற்ற அந்தக் குளிர்ச்சியாலே நல்ல கடப்பமரம், அரசமரம், ஆலமரம், ஆத்திமரம், சுத்தமான முல்லைக்கொடி, வாழைமரம், இலந்தைமரம், புளியமரம், மூங்கில், மாமரம், கிளைகளையுடைய வேங்கைமரம், காந்தள்வகைகள், சிந்துரமரம், மகிழமரம், கொன்றைமரம், அழகு விளங்கும் சோதிவிருக்ஷ மென்னு மிவைகளும் பிற தாவர வருக்கங்களுஞ் செழிப்பாய் வளர்ந்தன. (ங)

பூங்கொத்துக்களோடு கூடிய செடிகள், இரப்பவர் முகம் மலரும் பொருட்டு அகமலர்ந்து பொன்னை நல்கும் நன்னெஞ்சினர்போல மலர்ந்து தோன்றின. அதிக லாபங் கிடைக்கவேண்டுமென்னு மாசையில்லாது தம்பால் யாசிப்போருக்கு வேண்டுவ தரும் விதியுடையாரைப் போலப் பலமரங்கள் தம்பழங்களைத்தந்து நின்றன. (ச)

காயாமரங்கள், தம்மைக் கண்ணுறுவோர் கந்தக்கடவுளேறும் மயில்களோ? இவை யென்னும்படி அழகிய இலைகளை வெளிப்படுத்திப் பூத்து நிற்பன வாயின. முருக்க மரங்கள், தம்மைக் காண்போர் அக்கடவுளின் கொடியாகப்பொருந்து செஞ்சேவல்களோ? இவை யென்னும்படி குளிர்ந்த இலைகளை யுதிர்த்துவிட்டுக் கொத்துக்களெல்லாம் நன்கு பூத்து நிற்பன வாயின.

[காயாவின் பச்சிலைகள் மயிலின் அடிப்பாகத்தையும், அதன்மேலுள்ள நீலநிறப் பூக்கள் மயிலின் மேற்பாகத்தையும் ஒத்திருக்குமாகலின் மயிலோவென்று ஐயுறற் கிடஞ்செய்தவை, அவையென்க.] (ரு)

மின்னலைப்போல் விளங்குந் துவளுமிடுப்பையுஞ் செவ்வரிபடர்ந்த கண்களையுமுடைய மாதர்களுடைய நல்ல கண்களைக் குவளைமலர்களென்று இறகுகளையுடைய வண்டுகள் நெருங்கும். "நுங்கள் துன்பங்களைத்துடைக்குங் கடவுள் இங்கே எழுந்தருளியுள்ளான் வருவீர்களாக" என்று இரண்டு கைகளையுடைய மனிதருள் தகுதியுள்ளாரை யெல்லாம் அழைக்குநரைப் போன்று நின்றன செங்காந்தள்கள். (சு)

அக்குன்றின் பக்கங்கள், பலவகை வாழை, மா, பலா வென்னும் இவற்றின் இனிய பழங்களும் மணமுள்ள மலர்களுந் தேன்களைத்தருதலால் அத்தேன்களே நீர்நிலைகளாகத் தேங்கவும், (தேவாசுரர்களாற்) கடையப்பட்ட பாற்கடற்கணுள்ள வெள்ளிய சங்கினங்கள் அந்நீர்நிலைகளிலே தவழவும், நீண்ட வழிகளிலெல்லாந் தேவர்கள் தங்கியிருக்கவும் பெற்றவையாகும்.

[பாற்கடற் சுவையினின்றுஞ் சுவைமிக்க இன்சுவைத் தேன்களே இப்பதிக்கண் நீர்நிலையாகலின், இந்நிலையினை அக்கடற் சங்கினங்கள் தந்தன்மைத்திறத்தா லடைந்தனவென்க.] (எ)

அத்தேவர்கள், அங்கே அழகிய மயில்களுங் கிளிகளுஞ் செவ்வேளை நாடி நன்கு ஆடுதலையும் பாடுதலையுங்கண்டு, "இக்காரியங்களைச் செய்ய யாம் பிறந்தோமில்லையே" என்று வருந்துவார்கள். ஞானகிரியென விளங்குவ திவ்வரிய குன்றாதலால், இதனைச் சார்ந்த தவசிகளாகிய யானைகள், பல்வகை யிங்கிதங்கற்ற பெண்களது மோகப்படுகரில் வீழ்வதில்லை. (அ)

இத்துணைச் சிறப்புடைய தலமாகிய பராசலத்தில் வதிந்தருளிய பெருமான், சிறிது காலங்கழித்து மூவுலகு முவக்கும்படி தேவேந்திரனுக்கு நல்ல முறைப்படி

அழகிய முடிசூட்டத் திருவுளத்தெண்ணித் தனது பெரிய மயில்வாகனத்தின் அழகிய முதுகின்மீது கஜநாயகியோடு ஆரோகணித்தான். (கூ)

குன்றாத் தவநிலையடைந்த அருணகிரிநாதர் காட்டிய வழியை விரும்பும் பெருமை யுடையீர்! அப்படியாரோகணித்த குமாரக்கடவுள் தேவேந்திரன் முதலிய தேவர்களும், மகிழ்ச்சியோடு சூழ்ந்துவரும் நவவீரர்களும், பல பூதவீரர்களும், முனிவர்களும், பூரித்த தோள்களையுடைய இலக்ஷருமாகிய இவர்களோடு சுவர்க்கலோகத்தினை யடைந்தனன். (க0)

தேவலோகத்திருவிளையாடன்
முதற்பத்து முற்றிற்று.

---

# தேவலோகத்திருவிளையாடல்.

---

## (இரண்டாம்பத்து)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

அடியொன்றற்கிருபத்தோரக்கரமுடையனவும்,
இருபதக்கரமுடையனவுமாய் நிரலேநிகழ்வன.

துறக்க மாகிய மேனிலை தன்னைத் தொன்மை விண்ணவர் பண்ணவர் யாருஞ்
சிறக்க வெய்திய செம்பெரு வேலன் செம்பொன் மேனியி லம்பணி யாரம்
உறக்க லாமதி நாணமு கத்தே ரோங்கி ளம்பிடி யைப்புது மாடம்
பிறக்க வைத்தரி யாசன மீது பெட்பர் சூழவ மர்ந்தனன் மாதோ. (க)

தேவ கம்மியன் வந்தவ னன்ற சேவ டித்துணை யேத்தியிவ் வேணல்
ஆவ லோடுவெய் யோனைமு னிந்தோ னதி தானவ ரேற்பில ழிப்பில்
தாவ டைந்தவெ லாநனி செய்தே சார்வ லிங்கென வோதியவ் வாறே
யாவு மொல்லையி யற்றிய யிற்கை யானை தாடொழு தோதியு வந்தான். (உ)

அதுதெ ரிந்தவிண் ணோர்முத லானோ ராங்க ணைத்துமி லங்கிய சீர்கண்
டிதய முட்களி கூர்ந்தன ரங்கே யேர்கொ ணுன்மருப் பும்பல வாவும்
பதமு தற்பல வீபசு சங்கம் பாழு ருப்பது மாதிநி திச்சார்
சுதன்ம மென்சவை மண்டபம் வாமஞ் சூழ்வ சந்தமென் மாளிகை யீட்டம். (ங)

ஏர்கொள் கூந்தல லங்குயர் கோடை யிடு நீடும ணிக்கணம் யாணர்த்
தார்கொள் வானவி மானமி ருமந் தார மாதிய வைந்தரு மற்றுஞ்

---

க. பிறங்க வெனற்பாலதைப் "பிறக்க" என்றது, எதுகை நோக்கிய வலித்தல் விகாரம். பிறங்கல் = ஒளிசெய்தல்.

சீர்கொள் போகப தார்த்தம னைத்துஞ் செவ்வன் மின்னின வாவயின் வானோர்
பேர்கொள் வோரெவ ருங்குடி யேறும் பேற ளித்தன னேபெரு வேலன். (௪)

இனைய தாற்றிய பின்பவன் வேந்தற் கேசி னீரின்மு ழுக்கிடு வித்தோர்
நனிகொள் பூணுடை யாரம ணிந்து நல்ல பீடமி ருக்கவி தித்துக்
கனக கர்ப்பனெ னும்விதி யைக்கூய்க் கஞ்ச நீயினி யிம்மணி மோலி
தனையெ டுத்தும ருத்துவன் மூர்த்தஞ் சார வேற்றுதி யென்றனன் மன்னோ. (௫)

ஈசன் மைந்தனு ரைப்படி வேத னிந்தி ரற்கது சூட்டின னல்ல
ஓசை வாச்சிய நன்குத முங்கி யோகை நல்கின பூமழை தேவர்
ஆசை யோடுசொ ரிந்தனர் வீணை யாதி யின்னிசை தும்புரு மற்றுந்
தேசு மெய்யரெ முப்பின ராடல் செய்து பாடுநர் பாடின ராலோ. (௬)

மறைகள் யாவுமு ணர்ந்தவி யாழன் மன்ற னீபவ லங்கல ணிந்த
இறைவ னைத்தொழு திந்திர னேநீ யிவ்வி லேகர்க ளோடுய்க நீடென்
றறைநெ டுஞ்சொன்மு ழங்கிட வாழ்த்தி னுன தன்பின்வ லாரியி ருந்த
சுறையில் பீடிகை விட்டயி லீசன் கான்முன் வீழ்ந்துப ணிந்தெழல் செய்தே. (௭)

யானு மிவ்வர சேற்றிடு வேனோ யாண ராரிவ ருள்ளெவ ருய்வார்
கூனி லாநில வுஞ்சடை யானெண் கோவில் வந்தருள் கூர்கிலை யேனீ
தேனு லாவுக டம்பநின் மெய்யிற் றிக்கொ டண்டமெ லாமுள வஃதை
ஈன வென்முது கன்றுசு மந்த வீடு முன்னரு ளென்பது ணர்ந்தேன். (௮)

உணரு ஞான்றெனு ளங்குளிர் வுற்ற துற்ற யாக்கையு மத்திற மாயிற்
றிணையி லாய்வர ரேத்தரு ளாளா வீசு ராவடி யேனுமுன் னுணன்
அணவெ லாமுனு டைப்பொரு ளேயென் னுண்ட வன்குக னேயெனல் கண்டேன்
மணம ருநின கால்களென் மேனி மாயு நாளடை வீடெனல் கொண்டேன். (௯)

என்று கூறிய பின்னுநி னன்ப ரேழை மானுட ராயினு மன்னோர்
வன்றி ருப்பத நன்குது திப்பேன் மாறு பட்டவர் யாண்டுமுய் யாரே
என்று நெஞ்சுபொ ருந்தவு ரைத்தா னெம்பி ரானருள் கொண்டனு பூதி
அன்று சொற்றவ னன்பெனும் வாரி யாடு மன்பின ரேபிற கேளீர். (௧௦)

---

௫. கனக கர்ப்பன் = இரணியகருப்பன். கஞ்ச - அண்மைவிளி.

# தேவலோகத்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து)

பழைய தேவர்களும் முனிவர்களும் ஏனையோரும் மேன்மையுறும் பொருட்டுச் சுவர்க்கமாகிய வானுலகை யடைந்தருளிய செவ்வேற் பரமன், பசும் பொன் மேனியில் அழகிய ஆபரணங்களும் முத்துமாலை முதலிய ஆரங்களும் பொருந்தப் பூரணசந்திரன் வெள்க முகத்தழகும் இளமையும் விஞ்சுகின்ற தெய்வ யானைப் பிராட்டியைப் புதியதோர் மாளிகையில் விளங்கியிருக்கும்படி அமர்த்திவிட்டுத் தானொரு சிங்காசனத்தின்மீது பெருமை பொருந்த வீற்றிருந்தனன். (க)

விசுவகர்மா அங்கு வந்து, பெருமானுடைய சிறந்த திருவடிகளைத் துதித்து, "இத்துதி வலிகொண்டு ஆவலோடு பானுகோபன் முதலிய அசுரர்களுடைய கிரகிப்பினாலும் அழிப்பினாலும் பழுதடைந்து போனவற்றை யெல்லாஞ் செப்பஞ்செய்து இங்கு வரக்கடவேன்" என்று கூறி, அப்படியே எல்லாவற்றையும் விரைவிற் புதுக்கி மீண்டுவந்து வேன்மழகளிற்றின் திருவடிகளை வணங்கி மகிழ்ந்தான். (உ)

அச்செயலையுணர்ந்த தேவர் முதலாயினோர், அவ்விடத்திருந்த பொருள்களனைத்திலும் விளங்கிய பொலிவைக்கண்டு அகமகிழ்ந்தார்கள். அங்கே அழகிய நான்கு தந்தங்களையுடைய ஐராவதமும், விரும்பத்தக்க அன்னம் முதலிய பல நன்பொருள்களைத்தருங் காமதேனு முதலிய பசுக்கூட்டமும், பாழடையாத சங்கநிதி பதுமநிதியிருக்கைகளும், சுதன்மமென்னுஞ் சபாமண்டபமும், அழகு பெருகும் வசந்தமென்னும் மாளிகைக் கூட்டமும்,— (ங)

அழகிய பிடர்மயிர் ரசையப்பெற்ற சிறந்த (உச்சைச் சிரவமென்னும்) குதிரையும், பெருமை மிக்க சிந்தாமணி சூளாமணி முதலிய கூட்டமும், புதிய மாலைகளாலலங்கரிக்கப்பட்ட ஆகாயவிமானமும், ஈறடையா மந்தார முதலிய பஞ்சதருக்களும், மற்றுமுள்ள சீருடைப்போகப் பொருள்கள் யாவும் நன்கு பிரகாசித்தன. சத்திவேற் கடவுள் அவ்விடத்தே தேவரெல்லோரும் மீண்டுங் குடியேறும் பாக்கியத்தை யளித்தருளினன்.

[மந்தாரம் முதலிய பஞ்சதருக்களாவன :— மந்தாரம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், அரிச்சந்தன மென்பன.] (ச)

இதனைச் செய்த பின்னர் இறைவன், தேவேந்திரனுக்கு மாசற்ற நீரின் அபிடேகஞ் செய்வித்து, மிக்கவழகுடைய அணிகலன்களையும் ஆடைகளையும் ஆரங்களையுமணிந்து சிறந்த ஆசனத்தின் மீதிருக்கும்படி பணித்து, இரணிய கருப்பனென்னும் பிரமனைவிளித்து, "பிரமனே! இனி நீ இந்த நவரத்தின மகுடத்தையெடுத்து இந்திரன் முடியிற் சூட்டுவாயாக" என்று பணித்தருளினன். (ரு)

சிவகுமாரன தாஞ்ஞையின்படி பிரமன் தேவேந்திரனுக்கு அந்தக் கிரீடத்தைச் சூட்டினன். இன்னோசைதரும் வாத்தியங்கள் மிகவுங் கோஷித்து யாவர்க்

கும் மகிழ்ச்சி தந்தன. தேவர்கள் பிரியத்தோடு பூமாரி பொழிந்தார்கள். தும்புரு முதலியோரும் மற்றுந்தேசுடைய மெய்யரும் வீணை முதலியவற்றிலிருந்து இன்னிசை யெழுப்பினர். நடனத்தோடு பாடவல்லுநர் பாடினர். (சு)

எல்லா வேதங்களையு முணர்ந்த பிருகற்பதி பகவான், மணமுடைய கடப்ப மலர்மாலை யணிந்த கடவுளை வணங்கி, "இந்திர ! நீ இத்தேவர்களோடு நீடுவாழிய !" என்னும் ஆசிமொழிகள் எவர்க்கும் நன்கு கேட்கும்படி கூறினார். அதன் பின்னர், தேவேந்திரன் தனது மாசற்ற ஆசனத்தினின்று நீங்கி இறைவன் திருவடிகளில் விழுந்தெழுந்து நின்று,— (எ)

"இளஞ்சந்திரன் தவழுஞ் சடையுடைப் பரமனுடைய ஒளிபொருந்திய (நெற்றிக்) கண்களினின்றும் நீ தோன்றி அடியேங்களுக் கருள்செய்யாதிருந்தக்கால், அடியேனும் இவ்வரசைப் பெற்றிருப்பேனோ? அழகொடு விளங்குமித் தேவர்களிலெவர் தாம் வாழ்வர்? தேன்பிலிற்றுங் கடப்பந்தாருடைய ஈசனே! நினது திருவுருவத்தில் எண்டிக்குகளும் எல்லா அண்டங்களு மடங்கியுள்ளன. அத்தகைய திருவுருவைப் புன்மையுடை யெனது முதுகானது சூரனுடைமராடிய காலத்துச் சுமந்த பெருமையும் நினது திருவருளாலாயதே யென்றுணர்ந்தேன். (அ)

அவ்வுண்மை யுணர்ந்தபோதே என்னெஞ்சங் குளிர்ந்தது ; உடம்பும் பூரித்தது. தனக்குவமை யில்லாத் தனிமுதலே ! மேலோர் வணங்குங் கருணைவள்ளலே ! சருவைச் சுவரிய சம்பன்னனே! அடியேனும் உன்னடிமையே. அடியேனைச் சார்ந்துள்ள பொருள்களெல்லாமும் உன்னுடையனவே. எனக்குத் தெய்வம் குகபெருமானேயன்றிப் பிறிதில்லை யென்பதையும் அனுபவத்தாற் கண்டுகொண்டேன். (ஆகலின்) அடியேன் முடிவுறுங் காலத்தில் நின்னுடைய நறுமணமாறாத் திருவடிமலர்களே யான்வதியும் வீடென்பதுங் கொண்டுள்ளேன்" (கூ)

என்று விளம்பிய பின்னரும் "நினக்கன்பராவோர் எளிய மனிதரேயாயினும் அவர்களுடைய வலிய திருவடிகளைக் கூசாதுபோற்றுவேன். நின்னன்பர் விடயத்தே அபராதமிழைத்த லென்னும் மாறுபாடுடையார், இவ்வுலகத்தும் மற்றெவ்வுலகத்தும் உய்திபெறார்" என்று மனமார மொழிந்தான். அத்தகைய எம்பிரானது திருவருளைப் பெற்றுக் கந்தரனுபூதியை முன்னுளிற்பாடி யருளினவர்பால் வைக்குமன்பென்னுங்கடலின் மூழ்கு மன்பர்களே ! மேல் நிகழ்ந்தவற்றையுங் கேண்மின். (கo)

தேவலோகத்திருவிளையாடல்
இரண்டாம்பத்துமுற்றிற்று.

# தேவலோகத்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து)

கலிவிருத்தம்.

அடியோன்றற்குப்பதினேரக்கரம்.

செல்லூர்வை வல்வச்சி ரச்செம்மல் செய்கை
எல்லாம றிந்தோரி தங்கூர்ச யந்தன்
அல்லார கச்சூர்மு னில்லாவெ னப்பன்
வல்லானை வெங்கொண்டு முன்சென்ற மாண்பை. (க)

நன்குட்பு லத்தேம தித்தாயு ஞான்றிவ்
வின்பக்கு கக்கோவி ருந்தாளெ னும்போ
தன்பிற்ப டுந்திட்ப மென்றுகு மன்றோ
துன்பத்தை வெல்சொர்க்கர் காளித்தை யோர்வீர். (உ)

விம்மார்வம் விஞ்சண்ட ரோடென்னை வென்றே
இம்மாசு வர்க்கத்தி லேதீயை யிட்ட
அம்மூட சூரற்கு முன்மைந்த னானை
இம்மேனி கூனக்க யிற்றுவி றுக்கி. (ங)

யாத்தேயி மூத்தேபு டைத்தேகு போதும்
மாத்தாள்வி லங்கிட்டு வன்காவல் வைத்து
நாத்தானு லம்பக்க ணீர்வார நாளுங்
கோத்தியர் மொத்தேகொ டுத்தேசு போதும். (ச)

நீலத்த டங்கண்ணி ல்லாமூர்வ சிப்பேர்
கோலத்த ரம்பைச்சொல் கொண்டோர்க ளாதி
ஏலக்கு ழற்பெண்க ளைப்பேய்க ளென்றில்
வேலைத்தி றத்தேவி வேதித்த போதும். (ரு)

அடியோன்றற்குப்பன்னீரக்கரம்.

இவையெய்து முன்றெவ்வ ரின்போடு தின்பான்
நவையெய்து ருமீன நாளும்பி டித்தே;

---

ரு. வேதித்தல் = விகாரப்படுத்தல்.

குவைசெய்க தூக்கிக்கொ ணர்ந்துய்க வென்றூர்
அவைசெய்முன் மோதுண்ட ணங்குற்ற போதும். (சு)

திணிதோள்வ யங்கிந்த நீல்வண்ண தேவும்
அணிமாம ரைப்போத னுயுள்ள கோவும்
பணிபூணு மேனைப்ப லத்தோரு மானம்
எணியேபு ரந்திட்ட வேணென்று மின்றே. (எ)

அயிறங்கு முள்வாய கப்பட்ட மீனாய்த்
துயர்கொண்ட யான்மாள வென்றேது ணிந்தும்
உயிர்சென்ற தின்றேம ருந்துண்ட வுய்வால்
செயிரஞ்சி யானன்று செத்தாரு மொத்தேன். (அ)

சிறையாமி டத்துற்ற செந்தேவ தூதன்
அறைதேறல் போனும்மு ளாரேய றைந்தார்
பறையீது காண்முன்பு பள்ளிக்க ணேனுஞ்
சிறையாய்க லங்கேலெ னச்செப்பி னோர்யார். (கூ)

கனசெந்தி வந்துற்ற கான்மஞ்ஞை மீதை
மனநொந்த ரற்றேன்ம யங்கேல்பு ரப்பேம்
எனறுஞ்ச விற்சொற்றெ லார்க்கும்ப கர்ந்தான்
எனநன்கி சைத்தானெ விச்சூரி யின்பீர். (க0)

---

# தேவலோகத்திருவிளையாடல்.

---

## (மூன்றும் பத்து)

மேகவாகனனுங் கூரிய வலிய வச்சிராயுதந் தாங்கினவனுமாகிய இந்திரனுடைய செயல்களையெல்லா முணர்ந்து ஓரார்வம் விஞ்சினவனான சயந்தன், "பொருந்தல ருளத்தின னாகிய சூரபதுமனுக்குப் பயந்து திரிந்த (இந்திர னாகிய)

---

அ. மீனாய் = மீன்போன்று ; ஆய் - உவமவுருபு.

க0. ஜயந்தன், தனது கனவில் இறைவன் மயில்வாகனத்தின்மிசைத் தோன்றினன் என்பது சூரன் மயிலாதற்கு முன்னராகலின் அவன் எஞ்ஞான்றும் அவ்வாகனமுடையான் ; அஃது இரகசியமென்பதே ஈண்டுணரக்கிடப்பது. இவ்விடயத்தை, **ஸ்காந்த மஹாபுராண** வீரமாகேந்த்ர காண்டத்து ரு - ஆம் அத்தியாயம் —

" அதிரூடப்ருஹத்கேகீ வாஹநஸ்தரஸாஸுராந் | " .

என்று கூறிச்சேறலினறிக. கேகி = மயில். பிருஹத்கேகி = பெரிய மயில்.

என்பிதா (இம்முருகவேளாகிய) சருவவல்லமை யுடையானைத் தன் முதுகிலே சுமந்து கொண்டு அச்சூரபதுமனுக்கு முன்பாகச் சென்ற மாட்சிமையினை,— (க)

மனத்திற் செவ்வையாய் மதித்துப் பார்க்குமிடத்து, ஆனந்தரூபியாகிய இந்தக் குகக்கடவுளுடைய சரணாரவிந்தங்கள், (அன்பின் =) தம்தயையினுன் (மகபதி) சரீரத் திற்பட்ட பலமென வாகுமன்றோ? துன்பத்தை வெல்லுந்தன்மையினை இப்போது பெற்றுள்ள விண்ணோர்களே! இவ்வுண்மையினை உய்த்துணர்வீர்களாக. (உ)

(இச்சுவர்க்க வாழ்க்கையிற்) பெரும்பற்று மேலெழப்பெற்ற தேவர்களோடு என்னையும் யுத்தத்திற்செயித்து இச்சிறந்த சுவர்க்கலோகத்திற்கு நெருப்பிட்ட அந்த மூடனாகிய சூரபன்மனுடைய மூத்தமகன் (=பானுகோபன்) ஆணையானது என் னுடம்பு வளைவுறப் பாசத்தாலிறுக்கி,— (ங)

கட்டி இழுத்தும் அடித்துஞ் சென்றபோதும், அகப்பட்ட எல்லார்கால்க ளுக்கும் பெரிய விலங்குபூட்டிக் கொடியகாவலில் வைத்து நாவலறக் கண்ணீர்வார நாடோறும் அந்த மாபாவிகள் புடைத்து வைதபோதும்,— (ச)

கரிய பெரிய கண்கள் பிரகாசிக்கின்ற ஊர்வசியென்னும் பெயரையும் அழ கிய அரம்பையென்னும் பெயரையுங்கொண்ட நறுமணங்கமழ் கூந்தலினராகிய பெண் களைப் பேய்களென்றுகூறி, அசுரராகிய தங்கள்வீட்டுக் குற்றேவல்களைச் செய்யப் பணித்து, அவர்களை விகாரப்படுத்தியபோதும்,— (ரு)

எல்லோரும் இத்துன்பங்களை யடையுமுன்னே அந்தப்பகைவர்கள், விருப்பத் தோடு தின்னும்பொருட்டு நல்லமீன்களை நாடோறும் பிடித்துக் குவியுங்கள், அவற்றைத் தூக்கிக்கொண்டுவந்து வீடுகடோறுஞ் சேர்த்துவிட்டு உயிரோடிருங்கள் என்று பணித் தார்கள். அவ்வாறு செய்து முடிக்குமுன்பு தேவர்கள் உதையுண்டு துன்புற்ற காலத்தும்,— (சு)

பலம்பொருந்திய புஜத்தோடு விளங்குகின்ற இந்த விட்டுணுமூர்த்தியும், அழகிய கமலாசனராகிய பிரமாவும், ஆபரணாலங்கிருதராகிய ஏனைய தேவவீரர்களும் தேவர்க ளுடைய மானத்தையெண்ணி அதனைக் காப்பாற்றுதற்காகச் செய்தவன்மை யாதொன்று மில்லையே! (எ)

---

ங. இந்திரன், தேவலோகத்தைவிட்டு இந்திராணியோடு புறஞ்சென்றுவிட்டமை யினால் அவ்வுலகத்தை ஆண்டுகொண்டிருந்த சயந்தன், வெள்ளையானைமீதேறிச்சென்று, தேவலோகத்தையடைந்துள்ள பானுகோபனோடு தானும் ஏனைத்தேவரும் பெரும்போர் புரிந்திளைத்தபோது, சேனைப்பெருக்கோடுமுள்ள பானுகோபனேவிய கோடிக்கணக் கான பாணங்களால் தனதுடம்பு பெரிதுந்துளையுண்டு யானையிலிருந்தபடியே மூர்ச்சை யாயினன். அந்த யானை சீற்றங்கொண்டு தன்னுடைய நான்கு கொம்புகளானும் பானுகோபன் மார்பிலேகுத்தி அவைமுரிந்து வீழ்ந்தவுடன் அப்பானுகோபன் தன் கையினால் அந்த யானையின் கதுப்பி லடித்தான்: அது மயங்கிவீழ்ந்தது. இவைகளே பானுகோபன் செயமடைந்தனனென்றவிற் கொளக்கிடப்பன.

கூர்மை பொருந்திய தூண்டிலிலகப்பட்ட மீன்போற் பதைப்புண்ட யான் சாகத்துணிந்தும், அமுதமுண்டிருந்த தன்மையால் என்னுயிர் நீங்கவில்லை. அசுரர் கோபத்துக்குப்பயந்து (சில வேளைகளில்) இறந்தவர்போலவுங் கிடந்தேன். (அ)

எங்கள் சிறைக்கோட்டத்திற்கு வந்த குமார தூதுவராகிய வீரபாகுதேவர் செப்பிய இன்சொற்களைப்போல் உங்களுள் யார் கூறினர்? யான்கூறிய நற்செய்தியை யான் காணுமுன்னே நித்திரையிற் றோன்றியேனுஞ் சிறைப்பட்டிருப்போனே! அஞ்ச வேண்டாமென்று சொன்னவர்தாம் யாவர்? (கூ)

மேன்மைபொருந்திய திருச்செந்தூரை யடைந்திருந்த காலத்தே மயில்வாகனத்தின்மிசை அக்கடவுள், "நெஞ்ச நொந்தழேல், திகைப்புறேல், நாமுன்னைக் காப்போம்" என்று எனது கனவில் வாக்களித்துப் பின்பவ்வாறே மற்றைத்தேவர்களுக்குங் கூறியருளினன்" என்று செவ்வனே யெடுத்துரைத்தான்; சந்தமுனிவாது இன்பத்தையுடையவர்களே! (கய)

தேவலோகத்திருவிளையாடன்
மூன்றும்பத்து முற்றிற்று.

---

# தேவலோகத்திருவிளையாடல்.

---

## (நான்காம்பத்து)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

தெரியலுறும் புயப்போகி மகன்பினருந் தேவர்பெருந் திரண்மு னின்றே
கரியபெரும் பகடூரிக் கரியவுருக் கடவுணகர்க் கணக்கி லேனும்
பெரியவுருந் துயருழந்த வெனையொப்பா ரிருப்பார்கொல் பேதை நாயேற்
கரியமருந் தருந்தமர னெனச்சொலற்கும் வாயுளதோ வாண்மை யுண்டோ. (க)

கோலிருக்குங் கரச்சூரன் குலத்தினரு ளொருவனுக் குலவி யேயிவ்
வேலிருக்கும் புயக்கடவு ளேதியினன் மாண்டிடினும் விமல மேய்ந்து
வாலிருக்கு மினிமையினை யணைந்திருப்பே னென்செய்கேன் வயச்சூ ரெண்ணின்
காலிருக்கு முடலுமுள்ளுங் கலங்குநனி நடுங்குமென்று கண்ணீர் விட்டான். (உ)

நெடுந்திறத்தந் திசைதரள மெனவங்கீர் முகம்வடிய நெடிய மூச்சு
விடுந்திறத்தொ டரும்பவள விதழ்துடிப்ப வுரம்பதற வியன்போ தேரிற்
படுந்துவர்த்த கானடுங்கக் கரநடுங்க வுடல்வியர்க்கப் புழிமா பாசம்
அடுந்திருச்செவ் வேள்சரண சன்னிதிமுன் வீழ்ந்திவ்வா றறைவா னன்றே. (ங)

ஐயாவோ பரமவரு ளப்பாவோ வண்ணாவோ வயில்வே ளூங்குங்
கையாவோ கமழ்கடப்பந் தாராவோ வளப்பருமோங் காரக் காமர்
மெய்யாவோ கடவுளர்கண் முதல்வாவோ விமலாவோ விரதர் போற்றுந்
துய்யாவோ சுடருநுதற் கண்ணாவோ மயிலேறுஞ் சுதந்தி ராவோ. (ச)

என்னுயிர்நா யகனேயோ வெனதுசிறை மீட்டியரு ளிகுளே யேயோ
மன்னுயிர்நே ருணர்ந்தருள்செம் மதியேயோ தேவதந்தி மகிழ்ந னேயோ
கொன்னுயர்மா னவவரசர் தெருள்விபுதர் விழைந்திடுமிக் கோல வாழ்வில்
என்னுயவூ ழிருக்கவினி யொருப்படா துனதடிக்கீ ழிருத்தி யாளே. (ரு)

என்றுசொலி யரிபீடத் திருக்குமுரு கிறைசரண மிதயம் பாவித்
தொன்றவவை தனதுமுக மணைத்துமுத்த நனியிட்டு முவ்வி சேர்த்துந்
தன்றுகளில் விழிமலரிற் சாரவைத்து மெழுந்துகரந் தலையிற் கூப்பி
நின்றிட லு மவன்மாட்டு நிகழ்ந்தவெலா முளத்தடைத்தா னெடுவேற் பெம்மான். (சு)

அச்சயந்த னிலைமையுண ரிந்திரனே டேப்லரு மழுவா ரொத்தார்
செச்சையந்த ணாரமணி மழமுதல்வன் சயந்தன்முகத் திரிவை நோக்கி
நச்சுமங்கொள் படலைமிலை தந்தையொடென் னளியனுய் நாளும் வாழும்
நிச்சயங்கொ ளெஙனமிருந் தாலுமெனக் கன்பினனுப் நிகழ்தல் வீடே. (எ)

உனதுமனத் திருந்தெழூஉ மாகுலவே ரொருங்கறுத்தே னுனக்கோர் துன்பம்
மனமுணினைத் திடுவாரு முய்திபெரு ரழிவிலன்யான் மயங்கு றேனீ
எனதடியற் பினனுறை யென்னடியர்க் கிழைத்தபிழை யிணைப்பொ ளுநான்
சினவினெதிர்த் தாடுறுவார் யாரெனலுஞ் சயந்தனருட் டிருவ ளுனன். (அ)

சயந்தனிங னெடுத்துரைத்த வெல்லாமும் வாய்மையயே தாவார் சூர்க்குப்
பயந்துளவென் முதலெவரு மென்புதல்வன் கருவேளைப் பலியா யீந்தே
நயந்தருசெவ் வேளாமிப் பரஞ்சுடரைக் கண்டனர்மே ஞளும் வாழ்வோம்
சயந்தகுறை கூறேலென் றுருதரும மோதிநின்ருன் சலசை கேள்வன். (கூ)

உள னுறுங் கடப்பகைஞர் துயரினின்று மெமைக்காத்திவ் வோகை யீந்த
தேனுறுந் திருமேனிக் குகனடியர்ப் பழித்தஞர்செய் செடியி னுரை
யானுறுஞ் சினமடங்க வொறுப்பேனென் றுன்மறலி யேனை யோரும்
வானுறுந் துணிபிதுவென் றுரைப்பிஞ ரொலிமுனிவன் வழியன் பீரே. (க0)

---

# தேவலோகத்திருவிளையாடல்.

## (நான்காம்பத்து)

இதன் மேலும், மாலை பொருந்திய தோளினனாகிய தேவேந்திரனுடைய குமாரனாஞ் சயந்தன், தேவர்பெருங் கூட்டத்தின் முன்னின்று "கரிய பெரிய எருமைக்கடாவை ஊர்தியாகவுடைய இந்த யமராஜனது நகரக் கணக்கிலாவது பெரிய அச்சத்தைத் தருந் துன்பத்தால் அலக்கணுற்ற என்னைப்போன்றார் இருப்பாரோ? பேதையான நாயேனுக்கு அரிய அமுதமுண்ட அமரன் என்று சொல்லிக் கொளற்கும் நாவெழுமோ? ஆற்றலுமுண்டோ? (க)

வில்லம்பு தாங்கிய கரங்களையுடைய சூரபதுமன் மரபினருள் ஒருவனாக யான் பிறந்திருந்து, இந்த வேல்விளங்கும் புயக்கடவுளது படையினால் மாண்டுபோயினும், யான் புனிதனாகி மாசற்ற பேரின்பத்தை யடைந்திருப்பேன். அதற்கும் விதியில்லாதவனானேன். யான் பட்டதுன்பத்தை நினைத்தாலும் பிராணவாயுவிருக்கின்ற வென்னுடம்பு பெரிதும் நடுங்கும்; உள்ளங்கலங்கும்" என்று கூறிக் கண்ணீர்சொரிந்தான். (உ)

அக்கண்ணீரானது நெடுமையும் வலிமையுமுடைய நூலிலே கோக்கப்பட்ட முத்துப்போல முகத்தின் வழிவாரவும், பெருமூச்சுவிடுந் தன்மையோடு அரிய பவளம் போன்ற உதடுகள் துடிக்கவும், மார்பு புடைகொள்ளவும், சிறந்த தாமரை மலரினழகை நிகர்க்குஞ் சிவந்தகால்கள் தள்ளாடவும், கைகள் நடுக்கங்கொள்ளவும், உடம்பு வியர்வை கொள்ளவுமாய்ப் பாவத்தையும் மாமலங்களையும் அழிக்கவல்ல திருமுருகப்பெருமானுடைய பாதசன்னிதிமுன் பணிந்துவிட்டுப் பின்வருமாறு பேசலுற்றான். (ங)

பரமாசாரியனே! அருள்படைத்த பரமபிதாவே! அண்ணனே (=முன்னோனே!) கூரிய வேலையேந்திய கையுடையானே! மணம்பொருந்திய கடப்பமலர்மாலை தரிப்போனே! அளவிடற்கரிய பிரணவ சொரூபமாகிய அழகிய திருமேனியையுடையவனே! தேவர்கள் தலைவனே! நின்மலனே! தவசிகள் துதிக்கும் பரிசுத்தனே! பிரகாசிக்கு நெற்றிக் கண்களையுடையானே! மயில் வாகனத்தின்மீது ஆரோகணிக்குஞ் சுதந்திர முடையானே! (ச)

அடியேனுயிர்க்குத் தலைவனே! தமியேனைச் சிறையினின்று மீட்டருளிய பெந்துவே! நிலைபெற்றுள்ள ஆன்மாக்களின் தகுதியையுணர்ந்து அதனதனுக்கேற்றவாறனுக்கிரகஞ் செய்யும் பேரறிவே! தேவயானை கணவனே! மிக்க சிறப்புப்படைத்த மனிதவரசர்களுந் தெளிவுபெற்ற தேவர்களும் விரும்புகின்ற இக்கோல வாழ்க்கையில் அடியேனமர்ந்திருத்தற்கு வருத்தத்தோடுங்கூடிய எனது நிலைமை இனிச் சம்மதியாது. (ஆதலாற்) சிறியேனை யுனது திருவடியிற் சேர்த்து ஆட்கொள்வாய்" (ரு)

என்று முறையிட்டுச் சிங்காசனத்தில் வீற்றிருக்கின்ற முருகப்பெருமான் திருவடிகளை உள்ளத்திலே பாவித்து அவற்றைத் தனது முகத்தோடணைத்து நன்கு மூத்தமிட்டும், தன் சிரத்திற் பொருத்தியும், தனது மாசற்ற கண்மலர்களிலொன்ற

வைத்தும் எழுந்து கைகளைச் சிரமேற் குவித்து நின்றவுடன் அவன்பால் நிகழ்ந்தவற்றை யெல்லாம் நீண்ட வேலேந்திய இறைவன் தனது திருவுளத்துக் கருதிக்கொள்வோ னாயினன். (சு)

அந்தச் சயந்தனது நிலைமையை யுணர்ந்த இந்திரனோடு பல தேவர்களும் அழு வாரையொத்தனர். அழகிய குளிர்ந்த வெட்சி மாலையணிந்த கட்டிளமைக் கந்தவேள் சயந்தன் முக வேறுபாட்டைக் கண்டருளி, "நல்ல பூக்களைக்கொண்ட மாலையணிந்த நின் பிதாவோடு என்பால் என்று மன்புடையனாய் வாழும்படியான உறுதியை நீ கொள்வாயாக. எங்கிருப்பினும் எனக்கன்பனாய் விளங்கியிருத்தலே வீடுபேறு. (எ)

உனது நெஞ்சத்திலிருந்து முளைத்தெழுங் கவலையின் வேரை அறவே அறுத்து விட்டேன். உனக்குக் கேடுசூழ நினைப்பவருமே வாழமாட்டார். உனக்கு இவ்வரம் தரும் யான் நித்தியவஸ்து. நீ மயங்க வேண்டாம். என்னடிக் கன்பினனாயினை. என்னடியவர்க்குச் செய்த அபராதத்தைப் பொறுக்காத யான் கோபித்தால், என்னை யெதிர்த்து வெற்றி பெறுவார் யாவர்?" என்று கூறியவளவில், சயந்தன் திருவருட் செல்வனாய் விளங்கினான். (அ)

"சயந்தனிப்போ தெடுத்துக் கூறிய யாவும் மெய்யே. வலிவாய்ந்த சூரபது மனுக்குப் பயந்திருந்த என்னையுள்ளிட்ட எல்லாத் தேவரும், என் மகனாகிய மன் மதனை (= கருவேளை) ச் சிவபெருமானது நெற்றிக் கண்ணெருப்பிற்குப் பலியாய்க் கொடுத்துத்தான் இம்முருகவேள் (=செவ்வேள்) என்னும் பரஞ்சோதியைக் காணப் பெற்றனர். இனி, எஞ்ஞான்றுஞ் சுகமாக வாழ்வோம். சயந்தனே! நீ எம்மனோ ரைக் குறைகூறவேண்டாம்" என்று விட்டுணுமூர்த்தி ஒரு நீதியோதி நின்றனர். (கூ)

"புலால் நாற்றம் வீசுமுடம்புடைய அசுரராகிய பகைவர் செய்த துன்பத்தி லிருந்து எங்களைக் காத்தல்புரிந்து இம்மகிழ்ச்சி யீந்தருளிய தெய்வ மணங்கமழுந் திருமேனியுடைய இக் குகபெருமானுக் கடியராவாரை நிந்தித்துத் தீங்குபுரியும் பாவி களை என்கோபந் தணியுமளவுந் தண்டிப்பேன்" என்று யமன் கூறினான். மற்றைத் தேவர்களும் இது தூய்மையோங்கு முடிபென்றே ஒப்புக்கொண்டார்கள்; அருண கிரிநாதர் காட்டிய நெறியிற் பற்று வைத்துள்ளோர்காள்! (க0)

தேவலோகத்திருவிளையாடல்
நான்காம்பத்து முற்றிற்று.

# தேவலோகத்திருவிளையாடல்.

## (ஐந் தா ம் ப த் து)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

### இரண்டுசீர்வண்ணம்.

மழைம தர்க்கண லங்கொ ணுமகண் மகிழ்ந னன்றிவை சொல்லுவான்
கழைநி கர்த்தசொ லும்பர் காண்மறை களும ளந்தறை யாவொரு
பழைய மெய்ப்பொரு ளெதிரி ருப்பது பழுதில் சேயுரு வாய்வலார்
குழையெ ருக்கிய மதுகை யொன்றுகு றிக்கி னும்புல னுமிது. (௧)

ஆத லாலவி ரிந்த மூர்த்தியி னுற்ற லெண்ணறு காலநான்
ஓதி னுலும ரன்சொ னுலும டங்கி டாதுயர் வாமினேன்
கோதி லாவர லாறு சொன்முறை குறைவி லாமுறை யாமதை
ஓதல் கூறுதல் கேள்வி கோடலு ளத்தி ருத்துதன் மாவறம். (௨)

ஆத லாலிவன் மூரி யிற்சிறி தறியு மாறரு மறைமொழிச்
சாத மாரவி வன்ப லாயிர நாம முட்சில தருவலென்
றோது வானிவ னேம னேமொளி யோஞ்ச ரீரிகு மாரனேம்
சோதி ஆதிபு லிங்க மூர்த்திசு ரேச னீசன்ம கேசுரன். (௩)

சேய வன்சர வணப வன்சிவ நந்த னன்சிவை நந்தனன்
தூய வன்பக வான னந்தனி ளம்பி ரானதி சுந்தரன்
மாய னெண்கண னறிவ ரும்பொருண் மாய வன்மரு மானெனர்
சீய மங்கள மரபி னன்சுரர் திண்மை கொன்றெழல் செய்தசேய். (௪)

கார்த்தி கேயன னேக தேகிக டம்ப னுடக வாடையன்
சீர்த்தி ஞானிசு வாமி செச்சைய னுத்து மாமலை யாளிபொன்
மூர்த்தி மாமறை யாச னன்சிவ லோகன் மாமுதி யோனரன்
ஆர்த்தி மேயவ ராத்த னுவிநி ருத்தனேக னகோசரன். (௫)

அறுமு கன்சிவ னறுமு கச்சிவ னடலு ருத்திர னித்தியன்
அறுகு ணன்குக னெண்கு ணன்சுக ஊனதொ ழிற்பர னிர்க்குணன்
அறவர் நெஞ்சுறை பிரமம் வேலிறை யளவில் விச்சுவ மேனியன்
தறுகண் விஞ்சும காம யூரபி ரானி ருந்தக ரூர்பிரான். (௬)

அன்ன மேறின வன்ப சும்பரி யமர்ப ரன்கலை மாணிவர்
மன் னன் மாபுலி யூர்பி ரான்வய மாவி வர்ந்தவன் னைனன்மேல்

மின்னு சேயிமி லேறி வர்ந்தவன் விமல குஞ்சர வூர்தியோர்
மன்னு மாசர பத்தி லேறிய மைந்தன் மால்கட விரதனுல். (எ)

வீரன் வச்சிர பாணி சுப்பிர மணியன் முத்தொழில் விண்ணவன்
சூர னெட்டுரு வாதி பூரண புண்ணி யன்சிவ சூரியன்
தார கற்றெறு சிங்கம் வீறுத யங்கு சிங்கமு காரிமா
தீரன் மற்புய சூரை யீரரி செய்ய சேவலு யர்த்தவன். (அ)

சருவ காரண காரணன்சரு வாயு தன்சரு வஞ்ஞனே
சருவ யோகனி ரந்த ரன்பதி சம்பு சங்கர னுபுரன்
சருவ பூரண வடிவன் மாதக ரால யன்பசு பதியஹம்
சருவ லோகபி ரானி ளம்பரி பூரணன்சரு வேசன்வேள். (கூ)

சொக்க மேனிலை தந்த வன்றிகழ் சோம லோகச டானனன்
செக்கர் வேள்குழ கன்று வாதச வாயு தன்சிவ தேசிகன்
மிக்க யோகவி யாபி கந்தன கண்ட னென்றுவி ளம்பினுன்
திக்கு மாமுக னேர்மி னின்புகழ் செப்பி னேனிறை யற்புளீர். (க0)

---

# தேவலோகத்திருவிளையாடல்.

## (ஐந்தாம்பத்து)

குளிர்ச்சியுங் களிப்பும் பொருந்திய கண்ணின் நலத்தையுடைய சரஸ்வதி நாயகனுகிய பிரமன் அப்பொழுது பின்வருமாறு பேசலுற்றுன்.— கரும்பு போன்ற மொழியுடைய அமரர்களே! வேதங்களுமளந்துரைக்க வொண்ணுத ஒப்பற்ற பண்டைப்பரம்பொருளே இங்கு நம்மெதிரில் எழுந்தருளியிருப்பது. நம்மால் வெல்லக் கூடாத வலியவராகிய அசுரப் பெருங்காட்டைக் குற்றமில்லாத குழந்தையுருவிற் போந்து அழித்தபலமொன்றனைக் குறிப்பிடினும் யான்சொல்லுமுண்மை தெள்ளிதின் விளங்கும். (க)

ஆகலின், விளங்குகின்ற இக்குமாரமூர்த்தியின் ஆற்றலை எண்ணில்லாத காலங்காறும் யானேதினுலும் (அல்லது) சிவபிரானே யுரைத்தாலும் அஃதளவு படாதுயரும். இப்பெருமானது மாசற்ற வரலாற்றைச் சொல்லுமுறையே நன்முறையாம். அதனைப்படித்தலும், பிறர்க்குக்கூறலும், கேட்டலும், நெஞ்சிற் பதிய வைத்தலும் பெரிய புண்ணியமாம். (உ)

இக்காரணத்தால், இப்பெருமானது பெருமையில் ஒருசிறு பாகத்தை நீங்க ளறியும்படி அரிய வேதமந்திரவுண்மை பொருந்த இவனுடைய பல்லாயிர நாமங் களுட் சிலவற்றை யிங்குக் கூறுவேனென்று சொல்லத்தொடங்கினுன்.— ஓமன், ஓம் பிரகாசன், ஓஞ்சரீரி, ஓம், 'குமாரன், சோதி, ஆதி, புலிங்கமூர்த்தி, சுரேசன், ஈசன், மகேசன். (ங)

சேயவன், சரவணபவன், சிவநந்தனன், உமைநந்தனன், தூயவன், பகவான், அனந்தன், இளம்பிரான், அதிசுந்தரன், அரியயனறியாப்பரம்பொருள், திருமான்மருகன், சத்துரு சிங்கம், மங்களமரபினன், தேவர்திண்மைகொன் றெழல்செய்த சேய். (ச)

கார்த்திகேயன், அனேகதேகி, கடம்பன், ஆடகவாடையன், சிறந்தஞானி, சுவாமி, செச்சையன், "ஆன்ம" சத்த வாச்சியன், குறிஞ்சிக்கிழவன், பொன்போலொளிர் மேனியன், மா மறையாசனன், சிவலோகன், மா முதியோன், அரன், அன்பருக்கன் பன், உயிர்களுளக் கூத்தன், ஏகன், அகோசரன். (ரு)

அறுமுகன், சிவன், அறுமுகச்சிவன், மகாருத்திரன், நித்தியன், அறுகுணன், குகன், எண்குணன், ஆனந்தன், பஞ்சகிருத்தியன், நிர்க்குணன், முனிவர் நெஞ் சுறை பிரமம், வேலிற்கிறைவன், அளவிடப்படா விச்சுவரூபி, வலிமிக்க மகா மயூர பிரான், பெரிய தகரூர்பிரான். (சா)

அன்னமூர்ந்தோன், பச்சைக்குதிரையூர் பரமன், கலைமானூர் காவலன், பெரும் புலியூர் பிரான், சிங்கமூர்ந்தோன், கருடப்பறவையூர் சேய், இமிலுடை யெருதேறி, அழகிய யானையூர்தி, அழகு நிலைபெற்ற மகா சரபத்திலேறிய வலியன், வாயுநடாத்துந் தேருடையோன். (எ)

வீரன், வச்சிரபாணி, சுப்பிரமணியன், முத்தொழில் விண்ணவன், சூரன், அட்டமூர்த்த ஆதி, பூரணபுண்ணியன், சிவசூரியன், தாரகற்றெறு சிங்கம், வீறு பாடவிர் சிங்கமுகாரி, மகா தீரன், மற்புய சூரையீரரி, செய்ய சேவலுயர்த்தவன். (அ)

சருவகாரண காரணன், சருவாயுதன், முற்றறிவினன், சருவயோகன், அழி வில்லாதவன், பதி, சம்பு, சங்கரன், நூபுர பாதன், சருவபூரண வடிவன், மா தக ராலயன், பசுபதி, அஹம், சருவலோகபிரான், இளம்பரிபூரணன், சருவேசுவரன், வேள். (கூ)

சிறந்த விண்ணுலகைத் (தேவர்கட்குத்) தந்தவன், விளங்குகின்ற சோமலோக சடானனன், செக்கர்வேள், குழகன், துவாதசாயுதன், சிவதேசிகன், மிக்க யோக வியாபி, கந்தன், அகண்டன் என்று நான்முகன் நவின்றனன்; இனிய திருப்புக ழாசிரியருடைய தெய்வத்தின்பா லன்புடையீர்! (க0)

தேவலோகத்திருவிளையாடல்
ஐந்தாம்பத்து முற்றிற்று.

# தேவலோகத்திருவிளையாடல்.

## (ஆரம்பத்து)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

ஓந்தே சிகனோ மதர்மரப னோதா தொருங்கோர் சேய்போதம்
ஈந்தோர் தொடர்ப னிராலம்ப னியைபிற் கொள்பல் பேருருவோன்
பூந்தார் நவவீ ரர்க்கிறைவன் போர்வே லிலக்கர் கோன்குமரன்
தோந்தீர் கலைஞன் மாப்பிரபு சோதிப் பெருமாள் காங்கேயன். (௧)

விற்பொன் மிளிர்தே வப்பிடியை வேட்டோ னமுதன் சத்தியசங்
கற்பன் கருணா கரனண்ணல் காலா தீதன் காலரசன்
பொற்பன் மணிமா வையமுளோன் பொறையன் சருவா பரணனடன்
நற்பங் கயவா சனமழுவு நானென் சொல்விற் குடையவனால். (௨)

தேவ கிரீடி சேனானி தேவ தேவன் மாசேனன்
தாவில் விசுவா தீதபரன் சாமி நாத னாதிபல
கோவில் வதிவோன் கலியாண கோலன் றிகிரி பிளந்தமதன்
வீவில் சருவாந் தரியாமி மேதைப் பிரம தாதிபதி. (௩)

மூந்நா னயனன் பதினெண்கண் முருகன் மூந்நான் மொய்ம்புடையன்
தென்னா றிரண்டு திருவடியன் றிறலா றெண்ணி லடிமுடிகை
துன்னோ ருருவன் கந்தகிரித் துரைசத் திதரன் பிரமணியன்
மன்னார் பரசுப் பிரமணியன் மாண்பா ரபர குமாரர்பிரான். (௪)

தரளக் குடையன் கொடியாதி தனிமால் விருதெண் ணிலவுடையான்
தெருளற் புதனா காயமிசைச் செல்சே வடிய னீர்செல்வோன்
திரளக் கினியே குநன் மான்முன் சேறல் புரிவோன் ரூர்மார்பிற்
புரளப் படர்தல் புரிதேவன் பொதியன் குருபொற் பாதுகையன். (௫)

வீணை விவேகி வேய்ங்குழலன் வியனந் தரதுந் துபிநிலயன்
மாணை விசாகன் செம்மணிமின் வண்ணன் சகல கலாநாதன்
கோணை முனான்முன் னோனேம கூடன் கருத்தா வெங்கணுமாம்
ஆணை நிதானன் சகநாத னாறக் கரசக் கரதெய்வம். (௬)

கண்ணா னீற்றி னோணைகையாற் கனலச் செய்தோன் கடலுண்டோன்
விண்ணார் கோடி திவாகரராய் மிளிர்ந்தோன் மாமா ருதமானோன்

---

௬. நிலயன் = கோயிலுடையான். நிலயம் - வடசொல்; “ நிலயங் கோட்டம் - - - - தேவர் கோயில் ” எனச் சூடாமணி நிகண்டினாருஞ் சொற்றனர்.

பண்ணோர் சொல்லா லுயிர்ப்பூட்டும் பண்பன் கடவுள் காதலிலி
தண்ணா ரழிவில் லாப்பிரம சாரி சச்சி தானந்தன். (எ)

சருவைச் சுரிய னுபாதியிலான் சருவா தார னீதியுளான்
கருவப் பிரமற் குயவருள்செய் கங்கன் சங்க னக்கினிபூ
உருவிற் புதையில் விரவுபொரு ளோவில் சதுர்த்த னிணையில்லி
துருவப் பெரிய சதாசிவனெண் டொடரா நாதா தீதனரோ. (அ)

இடுநர்க் கிடுநன் கணபதிதன் னிளையோன் றீயார் நிக்கிரகன்
கடினக் குணமில் சிட்டர்களைக் காப்போ னிபிட பராபரன்மால்
விடுநர்க் குதவுந் தேவேட்கும் விதம்போ லருள்கோ வார்துயரிற்
படுநர்க் குதவு தயாளன்சீர் பாடு வார்க்கின் பருள்வள்ளல். (கூ)

என்னுந் திருநா மங்களையு மெண்கண் மலரோ னேதலும்வான்
மின்னுஞ் சுரர்கள் களிகூர்ந்தார் விதியோ டிமையா நாட்டநலன்
மன்னும் புலவ ரெலாருமறு வதனன் கழலைத் தொழுதார்சொற்
றுன்னும் புகழாந் தமிழ்வேதஞ் சொன்னோ னெறியைத் தொடர்பெரியீர். (கo)

---

# தேவலோகத்திருவிளையாடல்.

---

## (ஆரும்பத்து)

பிரணவ தேசிகன், பிரணவ மதர்மரபன் (=பேரின்ப ஓங்காரோபதேச பரம்பரைக்குக் கடவுள்), ஓதாதொருங்குணர்ந்த சேய், தற்போதம் ஈந்தோர் தொடர்பன், நிராலம்பன், பொருந்து மாற்றூற்கொள் பல் பேருருவோன், பூமாலை புனை நவவீரர்கட்குத் தலைவன், போர்வேல் இலக்ஷரிறைவன், குமரன், தோந்தீர் கலைஞன், மகாப்பிரபு, சோதிப்பெருமாள், காங்கேயன். (க)

ஒளியுடைப் பொன்னிறம் பிரகாசிக்கின்ற தேவயானை மணாளன், அமிர்தன், சத்திய சங்கற்பன், கருணாகரன், அண்ணல், காலாதீதன், கால அரசன், பொன்னிற் பன்மணிகள் பதித்துள்ள பெரிய மணிரதன், பொறையன், சருவாபரணன், நடனன், ஙற்கமலாசன மழவு, "நான்" என்னுஞ் சொல்லிற்கு வாச்சியன். (உ)

தேவ கிரீடி, சேனானி, தேவ தேவன், மகா சேனன், குறைவற்ற விசுவாதீதபரன், சுவாமி நாதன், அனாதி, பல கோவில் வதிவோன், கலியாண கோலன், கிரௌஞ்சகிரியைப் பிளந்த மதன், சாவில்லாச் சருவாந்தரியாமி, மேன்மையுடைப் பிரமதாதிபதி. (ங)

---

அ. கங்கன் = வரம்புடையோன்; கங்கு = வரம்பு.
உரு = தூலம், புதை = சூக்குமம்.

பன்னிரு கண்ணன், (ஆறு நெற்றிக்கண்களுண்மையிற்) பதினெண்கண் முருகன், பன்னிரு புஜன், அழகிய இரண்டு திருத்தாளினன், பலம் பொருந்திய எண்ணில்சென்னி கால் கைகள் செறிந்த ஒருருவினன், கந்தகிரித்துரை, சத்திதரன், பிரமணியன், சிறப்புப் பொருந்திய பரசுப்பிரமணியன், பெருமைவாய்ந்த அபர சுப்பிரமணியர்கள் பெருமான். (ச)

முத்துக்குடையுடையோன், கொடிமுதலிய நிகரற்ற பெரிய விருது பலவுடையோன், தெள்ளிய அற்புதன், ஆகாசத்திற்செல் சிவந்த பாதன், நீர்மேல் நடப்போன், திரளக்கினி யூடுசெல்வோன், காற்றினிடை நடத்தலைச் செய்வோன், மாலைகள் திருமார்பிற் புரளும்படி நடந்தருள் தேவன், அகத்தியமுனிவர்க்கு ஆசாரியன், பிரம பொற்பாதுகை யுடையோன். (ரு)

வீணைவல்லோன், வேய்ங்குழலன், மேலான தேவதுந்துபிகள் முழங்குங்கோயில்களுடையோன், பெருமையுமழகும் வாய்ந்த விசாகன், விளங்குகின்ற மாணிக்கவண்ணன், சகலகலாநாதன், அழிவற்ற முதனூலிற்கு முன்னோன், எமகூட வாசன், (எச்செயலுக்கும்) கருத்தா, யாண்டுஞ் செல்லவல்ல ஆஞ்ஞையுடைக் கடவுள், ஜகந்நாதன், ஆறெழுத்து மந்திர யந்திர தெய்வம். (சு)

(அசுரப்பிணமலைகளையும் எண்ணிறந்த அசுரசேனைகளையுங்) கட்பார்வையாற் சாம்பராக்கினோன், (அளவிட்டுரைத்தற்கரிய அவுணத்திரள்களைச்) சிரிப்பால் எரித்தோன், சமுத்திரத்தை அங்கையளவாக்கி யுண்டோன், ஆகாயத்திற் கோடிசூரியர்களாய் விளங்கினோன், பிரசண்டமாருதமானோன், இசை பொருந்திய ஒரு மொழியினாலே இறந்தோரை யெழுப்பும் வல்லோன், (எவற்றினுள்ளுமிருந்து அவற்றைச் செலுத்துங்) கடவுள், பற்றொன்றில்லான், இரக்கமுள்ள நித்திய பிரமசாரி, சச்சிதானந்தன். (எ)

சருவைச்சுவரியன், சிவோபாதியிலி, சருவாதாரன், நீதியுள்ளோன், கருவமுள்ள பிரமனுக்கு வருத்தமும் அனுக்கிரகமும் புரிந்த வரம்புடையோன், சங்கன், அக்கினிபூ, தூலப்பொருள்களிலுஞ் சூக்குமப்பொருள்களிலுங் கலந்துள்ளோன், குறைவற்ற நான்காவது பொருள் (=பிரமாமுதலிய மும்மூர்த்திகட்கு மேலானபொருள்), தன்னேரில்லோன், நிலைபேறுடைப் பெரிய சதாசிவன், கணிதத்திற் கெட்டாத நாதாதீதன். (அ)

இடுநேர்க்கிடுநேன், கணபதிக்கிளையோன், துஷ்டநிக்கிரகன், சாந்தகுணமுள்ள சிட்டரைப் பாலிப்போன், நீக்கமற நிறைந்த பராபரன், உலகமயக்கத்தை யுதறியவர்க்கு உதவு தெய்வம், வேண்டுவார் வேண்டுமாறருள்புரி கோ, பெருகிய துயரத் தாழ்ந்து கிடப்பார்க்கு உதவிபுரி தயாளன், தன்னைப் பாடுவார்க்கின்பருள் வள்ளல். (கூ)

இன்னவாகிய திருநாமங்களையும் பிரமதேவன் எடுத்தியம்பியவுடன் ஒளிமிகுந்த தேவர்கள் உவகை பூத்தார்கள். (பின்பு) பிரமதேவனோடு இமையா நாட்டநலன் நிலைபெற்ற தேவரெல்லோருஞ் சண்முகபெருமான் சரணங்களை வணங்கினார்கள்; செஞ்சொற் செறிந்த திருப்புகழாந் தமிழ்வேதஞ் செப்பிய முனிவரது நெறியைப் பின்பற்றும் பெரியீர்! (கo)

தேவலோகத்திருவிளையாடல்
ஆரம்பத்து முற்றிற்று.

# தேவலோகத்திருவிளையாடல்.

## (ஏழாம்பத்து)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

அட்டோத்தரசதாக்கரம்.

*தனனத் தனனத் தனனத் தனனா*
*தனதன தனதன தனதன தனனா.*

செவியிற் கினிமைத் திறனைப் பெரிதீ
திறமுறு கலமுத லியகரு விகளால்
தவமிக் குறுநற் கலன்மற் றுமுளோர்
சரிகம பதநியெ னுவிவகை செயவே
புவனத் திரயத் தரசுற் றடலார்
புனிதனொ டமரர்கள் செறிதரல் புரியாக்
கவினிற் பெருகப் புதசிற் குகனே
கலகல வெனவரு மயிலிவர் துரையே. (க)

அமரற் கருளற் புடையுத் தமனே
ஹரஹர சிவசிவ வறுமுக சிவனே
சமரத் தினைபற் றவிர்துப் புளனே
சரவண பவசிவ சமரச சுகனே
குமரத் திருவிற் றிகழற் புதனே
குருமர புயரிய குருபர பதியே
மமரற் றொளிரெட் டுருவப் பொருளே
வயநவ மணிநிற வடிவர்கண் மணியே. (உ)

செயிரற் றவிர்சற் பரசிற் குகனே
சிவசிவ சிவசிவ பரசிவ வெளியே
உயிரிற் குயிரிப் பொருண்மட் டிலதா
யொளிரொளி யெனவழி படுபவர் திருவே
கயிலைச் சிகரத் தமர்கட் டழகே
கனகன கமணிக ளுறுகழ லடிகேள்
அயில்கட் கரசைப் புயம்வைத் துளனே
யகணித திருவரு ளமுதச லதியே. (௩)

---

க. தவமிக்குறு நற்கலன் = யாழ்முனியெனப்படு நாரதமுனிவர். கலம் = யாழ்.

மதுரச் சுவைமிக் குறுபுத் தமுதே
        மகபதி சசிதிரு மகண்மண மகனே
சதுரப் பெருவெற் றியணிப் புயனே
        தசசத தளகம லமுறையு மழகே
இதயக் குருடட் டிடும்வித் தகனே
        யிருமடி தெறுமுயர் பிடகர்கள் பதியே
முதுவர்க் குமறத் திறனைப் புகலோர்
        முதுமையு மிளமையு முடையதி சயமே. (ச)

கலையெற் சரணிற் கதநிற் கமகா
        ககமிசை மிளிர்பர மககன மணியே
சிலையொட் டலரைக் குலையப் புரிநாள்
        செயசெய செயசெய சிவசிவ வெனவே
தலையற் பொடிலக் கருரைத் திடவே
        தகுசில நனிவளை வுறவனை கரனே
வலையர்க் குறுகைத் தொழில்பற் றியமீ
        வரரனு ரறவரு ளியபெரு மிதமே. (ரு)

தனனந் தனனந் தனனந் தனனா
        தனதன தனதன தனதன தனனா.

முனரும் பினருந் தெருளின் றடியேம்
        முனமொழி யுடல்கொடு புரிபிழை யுளவேல்
மனநின் றருளுங் குககொண் டருள்வாய்
        மதிநனி தருகென விசையொடு சொலினர்
கனகங் குலவுங் கதிர்விஞ் சயில்வேள்
        கமழணி மிலைசுர ரறவரெ னவுளீர்
தினையும் பிழையின் றறிவும் பெரிதே
        திகழுமெ னலுமலர் மழைபெரு கியதே. (சு)

கடிமங் களதுந் துபியங் கதிர்நேர்
        கணகண வெனவளர் கரவொலி மிகநீண்
முடிவிண் டுவொடிங் கவிரந் தரர்காண்
        முதிர்பொழு தணவிய துமவுறை விடமே
அடைமின் களெனுங் கரைகந் தனிடா
        வவிர்சசி மகளுட னகல்குய வமர்கால்
இடர்நந் தவர்வந் தனமென் றிடவே
        ளினிதினி தெனுமொழி சொலியரு ளினனே. (எ)

---

ச. வெற்றியணி = வெற்றிமாலை.
ரு. "சரணிற்கதம்" என்னுந் தொடரில் அதம் = கீழிடம்.
எ. கடி = சிறப்பு.

தகுதங் கரதந் திசையெங் கணுமே
 தகதக தகவென வணியொளி செயுமா
மிகுநன் குரம்விஞ் சுபுயன் கடவோர்
 வினையுயர் வுளதுபி ரமதர்கள் குடையோர்
முகுரம் பிறழுங் கொடிகுஞ் சபடாம்
 முனநிரை கொடுசெலல் பலகணி களிலே
திகழ்குந் தளவம் புலிமண் டலமே
 செறியம தினுருவு மெழுநில வியதே. (அ)

திருவெண் கிரிசென் றவுடன் குழவோர்
 திகழ்தலை விபிணெடி ரதம்விடல் புரியா
இருணஞ் சுறைகண் டனையுஞ் சிவையா
 மிறைவியி னையுநல தரிசனை புரிவேன்
முருகன் றனையைந் துமுகன் களிசான்
 முககம லமுருக வெனமுத மகனே
வருகென் றனனம் பிகைகுஞ் சரியே
 வருதியெ னுரைசொலி மதர்பெரு கினளே. (கூ)

அழகுந் தெருளுந் திகழ்நந் தனயா
 னயர்தொழி லுனதென நிலவிய ததனுல்
விழுமம் பெருகுஞ் சரணம் பினர்பால்
 விரைவினி லெனவரன் முருகனு மகிழ்வோ
டெழில்விஞ் சொருகுஞ் சரிதிண் டிறல்வா
 கெறுழர்கண் முதலிய குழுவொடு வளம்வால்
கெழுகந் தநகந் தணையண் டினனுர்
 கிளரரு ணகிரியி னிறையடி யவரே. (க0)

---

# தேவலோகத்திருவிளையாடல்.

---

## (ஏழாம்பத்து)

காதிற் கினியவகையினை மிகுதியுந்தரும் வன்மையுடைய யாழ் முதலிய இன்னிசைக் கருவிகளால் மிக்க தவத்தையுடைய நாரதமுனிவரும் மற்றுமுள்ளோரும் சரிகமபதநி யெனுஞ் சப்த சுரவகைகளைச் செய்ய; திரிலோகாதிபதியாய் வீற்றிருக்குந் தேவேந்திரனேடு ஏனைய தேவர்களுங் கலந்துநின்று, "அழகு விஞ்சும் அற்புதமூர்த்தியே! ஞானரூபியாங் குகபெருமானே! கலகல வெனவரும் மயின்மீதெழுந்தருண் மன்னே! (க)

தேவர்கட் கனுக்கிரகஞ் செய்யும் அன்புடை யுத்தமனே! ஹர ஹர! சிவ சிவ! அறுமுக சிவனே! போரில் நிகரற்று விளங்கும் வலிமை படைத்தோனே! சரவண பவனே! யாண்டுஞ் சமரசமாய் நிற்கும் ஆனந்தசொரூபனே! குமரத்திருவில் விளங்கும் அற்புதனே! குருமரபிற் சிறந்த குருபரனே! பரமபதியே! பாசமயக்கமியல் பாகவேயற்று விளங்கும் அஷ்டமூர்த்த வஸ்துவே! வலிபொருந்திய நவவீரர்கட்குக் கண்மணி போல்வானே! (உ)

குற்றமற்று விளங்குஞ் சத்தான பரமனே! சித்தான குகனே! சிவ சிவ! சிவ சிவ!! பரசிவவெளியே! "இக்குமாரப்பொருள் நம்முயிருக்குயிரா யிருப்பது; அளவற்றதாய் விளங்குஞ் சோதி இது" என்று வழிபடுவோர்க்கு வாய்க்குஞ் செல்வமே! திருக்கைலாய பருவத சிகரத்தில் வசித்தருளுங் கட்டழகே! திண்ணிய பொன்னும் மணியும் பொருந்திய வீரக்கழல் தரித்த் தாளுடை அடிகளே! படைக்கலவரசாம் வேலாயுதத்தைத் தோளிற் சார்த்தியுள்ளோனே! கணக்கிடமுடியாத் திருவருளென்னும் அமிர்த சாகரமே! (ஙு)

தீஞ்சுவை மிக்க புதிய அமுதே! தேவேந்திரனுக்குஞ் சசி தேவிக்குந் திருமகளாகிய தேவகுஞ்சரி நாயகனே! சாமர்த்தியமுடைப் பெருவெற்றிக் கறிகுறியாம் வாகைமாலை யணிந்த தோளனே! ஆயிரவிதழ்க் கமலத்திலமரும் அழகே! ஆன்மாக்களி னிதயத்திலுள்ள அஞ்ஞானக் குருட்டுத்தன்மையை நீக்கவல்ல வித்தகனே! பெரிய நோய்களைத் தொலைக்கும் வைத்தியர்கள் தலைவனே! மூத்தோர்க்கும் அறத்திற முரைத்தருள் முதுமையு மிளமையு மொருங்குகொண்ட அதிசய வுருவே. (ச)

விந்து நாத கலைகளெல்லாம் ஒளியுடை நின் திருவடியின் கீழிடத்து நிற்குமாறு மகாகாசத்திற் பிரகாசிக்கும் மகா ஞானசூரியனே! வில்லையேந்தி நின்ற மாற்ருரை மடியச்செய்த அக்காலத்திற் செய செய! செய செய!! சிவ! சிவ!! என்று இலக்ஷர் தலையன்போடு சாற்றுமாறு தக்க நின்வில்லினை நன்கு வளையும்படி செய்த திருக்கர முடையோனே! மீன்பிடிக்குந் தொழிலை யேற்ற விண்ணுறை தேவர் துன்பு நீங்கும்படி அனுக்கிரகஞ்செய்த பெருமிதமே! (ரு)

சருவான்மாக்களின் நெஞ்சகத்திருந்து அருள்புரியுங் குகபெருமானே! இற்றைக்கு முன்னரேனும் பின்னரேனும் அடியேங்களறிவின்மையால் மனம், மொழி, உடலென்னுந் திரிகரணங்களானுஞ் செய்த பிழைகளிருக்குமாயின் (அவைகளை) மன்னித்தருள்வாயாக: எளியேங்களுக்கு நல்லறிவு நிரம்பத் தருவாயாக:" என்று இன்னிசையோடு பாடி விண்ணப்பித்தார்கள். பொன்னிறம் பொருந்துங் காந்திமிக்க வேலேந்திய வேள், "மணங்கமழ் மாலையணிந்த தேவர்களெனவும் முனிவர்களெனவு மிவணுள்ளோர்களே! உம்மிடத்துளதாக யாங்கண்ட பிழை எள்ளளவுமில்லை; உங்களுக்கு ஞானமும் மேன்மேலும் பெருகும்" என்று திருவாய்மலர்ந்தருளியவுடன் சிறந்த மங்களவாத்தியங்கள் ஒலிக்கு மொழுங்கு கணகணவெனவும், நெடிய (கைகளைத் தட்டலாலெழுங்) கரகோஷம் மிகுந்திடவும் மலர்மாரி பெருகியது. "நீண்ட கிரீடந் தரித்த விட்டுணுமூர்த்தியோடு இங்கே பிரசன்னமாயுள்ள விண்ணவர்காள்! யானிங்கு வந்து நெடும்பொழுதாயிற்று. நீங்களும் நுங்களிருப்பிடங்களை அடைவீர்களாக" என்னும் ஆஞ்ஞையைக் கந்தவேள் இட்டு, விளங்குகின்ற தேவயானைப் பிராட்டியோடு விசாலமான தேரின்மீ தமர்ந்தருளியபோது, துன்பநீக்க மெய்தியுள்ள அத்தேவர்கள்

வணக்கங்கூற; அது கருதிய செவ்வேளும் "இனிது இனிது" என்னும் மொழி கூறி (விடைகொடுத்து) அருளினன். (சு, எ)

பெருமானுக் கேற்றதாகிய தங்கத்தேரானது எண்டிசையிலும் தக தக தக வென அழகிய வொளியை வீசுமாறு, அதிக அழகுடைய வீரபாகுதேவர் அதனைச் செலுத்துங் காரியம் மேம்பாடுடையதாம். அஞ்ஞான்று குடை, அழகிய பளிங்குபோல விளங்குந் துவசங்கள், குஞ்சத்தோடுங் கூடிய பெருங்கொடிகளாகிய இவற்றைத் தேரிற்குமுன்பு அணியணியாகப் பிரமதகணங்கள் தாங்கிச் செல்லுதலானது — சன்னல்களிலே ஒளிசெய் கூந்தல்களோடுங் கூடிய (முகங்களாகிய) சந்திரமண்டலங்கள் தோன்றி நெருங்கவும், சுவர்களிற் செய்யப்பட்டுள்ள உருவங்களு மெழுந்து வரவும் விளங்குவ தாயிற்று. (அ)

திருக்கயிலாயமலையை யடைந்தவுடன், இளமையும் அழகுந் திகழ்கின்ற தேவ குஞ்சரியோடு இரதத்தினின்று மிறங்கி, பரமசிவனையும் பார்வதிதேவியையுந் தரிசித்த வேலேந்திய முருகவேளை அச்சிவபெருமான் "மகிழ்ச்சி பூத்த முகாரவிந்த முருகா! என் அமிர்த மகனே! வருக" என்று வரவேற்றனன். பார்வதிதேவி, "தேவகுஞ்சரியே! வரக்கடவாய்" என்றினிய மொழி மொழிந்து உவகை மீக்கொண்டனள். (கூ)

அன்பு பெருகிய அருணகிரிநாதனு ரிறைவனுக்கு ஆட்பட்டுள்ளீர்காள்! "அழகும் அறிவும் பூரணமாய் விளங்குங் குமார! யானிழைக்க வேண்டிய காரியம் நின்னுடையதாகப் பிரகாசித்தது; அதனால் உன் சரணங்களை நம்பினபேர்களுக்கு விரைவிற் பெருஞ்சிறப்பு மிக்கோங்கும்" என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருள; அங்ஙனம் முருகப்பெருமானும் உவகையுடன் ஒப்பிலா வனப்புமிக்க தேவகுஞ்சரிப் பிராட்டி, வலியும் வீரமும் வாய்ந்த வீரபாகுதேவர், ஏனைய வீரர்கள் முதலிய கூட்டங்களாகிய இவர்களோடு வளப்பமுந் தூய்மையு மிக்க கந்தகிரியை யடைந்தனன். (க0)

தேவலோகத்திருவிளையாடல்

ஏழாம்பத்துமுற்றிற்று.

## பதினென்காவது

# தினைப்புனத்திருவிளையாடல்.

### (முதற்பத்து)

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**இரண்டுசீர்வண்ணம்.**

செக்கர் வேண்மொழி யேற்ற சுந்தர வல்லி சீதவ நிலையொரீஇத்
தக்க தீயிடை மூழ்கி யுள்ளுட லோடெ ழுந்துத ராதலம்
மிக்க வேபுகழ் வள்ளி மால்வரை விஞ்சு பாங்கரை யெய்தியா
றக்க ரேசனை நாடி மாதவ மாற்றி னாள்சில நாட்களே. (க)

ஆழி மால்சிவ னென்னு மாமுனி யாகி யேயவண் வைகினான்
ஊழி தாமென வுள்கு மாறையு பேந்தி ரன்கொடி மால்வரைப்
பாழி லாதகு றிஞ்சி நம்பியெ னப்ப கர்ந்திட மல்கினான்
காழி ருமலர் மங்கை மான்மிரு கம்மெ னும்படி தோன்றினாள். (உ)

தோன்று மானையம் மாத வன்விழி தொடர மோகொடு தைவிகம்
ஊன்று சூலிலவ் வுள்ளு டம்பின ளொல்லை புக்கன னல்லபோ
தீன்ற தோர்மனி தக்கு ழந்தையை யேண முந்திக ழச்சிசு
ஆன்ற யாழிசை யோவெ னும்படி யங்க ணன்கழ லுற்றதால். (ந)

அழுகு ரற்செவி யேற்ற நம்பித னங்கை யாலதை யேயெடா
முழுமு தற்குக னருளின் வாய்த்ததெ னமொ ழிந்துதன் மனைவிகை
உழுவ விற்கொடை செய்த போதவ ளிருத னம்பய சூறிய
திழுமெ னக்குழ விக்க ருத்தின ளில்லம் வைத்தும்வ ளர்த்தனள். (ச)

அவ்வ ருஞ்சிசு வள்ளி மூலம கன்ற தாழ்வுகி டந்ததால்
ஒவ்வி டும்பெயர் வள்ளி யென்றவ ணோர்ப்பு ளார்தர வேற்றதந்
நவ்வி யின்சுதை குலமு றைப்படி நற்றி னைப்புன மோம்புநாள்
செவ்வி விஞ்சிவ யங்கு பன்னிரு வயத டைந்துதி கழ்ந்தனள். (ரு)

இப்பி ராயமு ணர்ந்த கந்தனெ னும்பி ரானுயர் சொர்க்கமாந்
துப்ப ருதொளிர் கந்த வோதிது றந்து வீணைதொ ளைக்குழல்

---

உ. மிருகம் = மான்: இப்பெயர் மானுக்குளதென்பதை நிகண்டுகளிற் காண்க,
ந. ஏணம் = மான்.

செப்ப மாயொலி செய்து நல்விளை யாடல் கூர்தணி கைச்சிலை
அப்ப னுய்வதி தந்து கானவ னுகி வள்ளிமு னின்றனன். (௬)

நின்ற போதவள் பரணி னின்றுக வண்க டட்டைகள் கொண்டுநேர்
ஒன்று போகில்க ளோட்டு மாறுக னுற்றி ரங்கிம னேகரீ
என்று கூவியுன் வாய்மு கம்விழி யிருக ரந்திரு வுந்திதாள்
மன்ற லீயர விந்த மாகலின் மலரு ளிண்டைசி றந்ததாம். (எ)

ஆசில் குந்தள மேக மம்பொல வணிக ளானனி மின்னியோர்
மாசின் மந்திக ளான்மு ழங்குபு மதிரை மாமழை சொரிதலின்
தேசி லங்கும ருங்கு லாமொரு சிங்கம் வாடிநு டங்கலின்
வீசி ருங்கவ ணூர்கை நங்கையுன் மேன்மை யிற்சிறி தறிகிறேன். (அ)

கரிய கொண்டல்பி றங்க விற்கன ருசிநு டங்கலின் வெஞ்சிலை
இரிய வின்றிவ ணங்க விற்றுவ ரீய ரூன்றலி னின்குமிழ்
அரிய செந்துணர் விரித விற்றர ளருவி மால்வரை வீழ்தலின்
கரிசி லுன்கன சாயன் மாமயில் களிந டம்புரி கின்றதே. (௯)

இத்தி றத்தவு ணைப்பெ ருஞ்சுர மேயு மிப்புனம் வைத்தவர்
எத்தி றக்கடு நெஞ்ச ரம்மவெ னேடு வந்திடி னியானுனை
உத்த மப்பதி யுய்த்து நன்குபு ரப்ப லென்றுரை செய்தனன்
முத்த லத்தரு மோம்பு மாபுகழ் முனிவ னுதனு மவனரோ. (௧௦)

பதினுன்காவது

# திணைப்புனத்திருவிளையாடல்.

## (முதற்பத்து)

செவ்வேட் பரமனது ஆஞ்ஞையை மேற்கொண்ட சுந்தரவல்லி யென்னுந் திருப்பெயருடையாள் இமயமலைச் சாரலிலுள்ள தனது திருந்திய தவநிலையை விட்டு, விதிப்படி வளர்க்கப்பட்ட எரியில் மூழ்கிச் சூக்குமதேகத்தோ டெழுந்து, உலகம் பெரிதும் புகழ்கின்ற உயர்ந்த வள்ளிமலையை யடுத்து விளங்கும் பிரதேசத்தை யடைந்து, சின்னுட்கள் சண்முகக் கடவுளைக் குறித்துப் பெருந்தவம் புரிந்தாள். (௧)

சக்கராயுதத்தையுடைய விட்டுணுமூர்த்தி அவ்விடத்திற் சிவ முனியென்னும் பேரோடு தங்கினர். இது முன்வினைப்பயனென் றெண்ணும்படி அழகிய உபேந்திரன் உயரிய அவ்வள்ளிமலையை யடுத்துள்ள வளம் மாருத குறிஞ்சி நிலத்தலைவனுகிய நம்பி யென்று சொல்லும்படி விளங்கினுன். விளக்கங்கெடா இலக்குமிதேவி பெண்மானுகத் தோன்றினுள். (௨)

௯. கனருசி = மின்னல். துவர் ஈயல் = செந்நிற இந்திரகோபம்.

இப்படித் தோன்றிய மானை அச்சிவமுனிவர் கண்கள் மோகத்தோடு தொடர் தலும், தெய்வீகமாயேற்படுங் கருப்பத்திற் சூக்கும வுடம்புடைச் சுந்தரவல்லி விரைவாகப் புகுந்தனள். அப்பெண்மானும் சுபவேளையில் ஒரு மனிதக்குழந்தையை யுயிர்த்தது. அழகுமிக்க அக்குழவியானது நிறை நரம்புடைய யாழினொலியோ? என்று வியக்கும் படி அவ்விடத்தில் இனிது வாய்திறந்தழத் தலைப்பட்டது. (ஙு)

இவ்வழுகை ஓசையைக்கேட்ட நம்பிராசன், தன் அழகிய கைகளால் அக் குழந்தையை யெடுத்து இது முழுமுதற் பொருளாங் குகக்கடவுளருளால் நமக்குக் கிடைத்ததாமென்று சொல்லி, தன் மனைவியின் கரங்களில் நிறைந்த அன்போடு கொடுத்தபோது அவளிருதனங்களிலும் பால்சுரந்தது. உடனே அவளப்பாலை யினிமை யுறக் குழந்தைக் கூட்டினள். தன்னில்லத்தும் வைத்து வளர்த்து வந்தனள். (ச)

அந்த அருமைக் குழந்தையானது வள்ளிக்கிழங் கெடுக்கப்பட்ட பள்ளத்திற் கிடந்தமையால் அதற்குப் பொருந்தும் பெயர் 'வள்ளி' என்பதாம் என்று அங்குள்ள வேட்டுவப் பெரியோர் அதனைச் சூட்ட அஃதேற்றது. மான்மகளாகிய அவ்வள்ளி, வேடர் குலாசாரப்படி நல்ல தினைப்புனத்தைக் காவல்செய்து வருநாளில் அழகுமிக்கு விளங்கும் பன்னிரண்டாம் வயதையடைந்து மிளிர்ந்தனள். (ரு)

இவ்வயது எய்தியதை யுணர்ந்த கந்தனென்னும் பிரான், மேலான சொர்க்கமாந் தூய்மை யருது விளங்குங் கந்தகிரியைவிட்டுப் புறப்பட்டு, வீணையையும் வேய்ங்குழ லையும் நன்கிசைத்துக்கொண்டு குற்றமற்ற திருவிளையாடல்கள் பெரிதும் புரியுந் தணிகைமலையப்பனுய்த் தங்கியருளி, பின்பு ஒரு வேடனுருவந் தாங்கி வள்ளிநாயகி முன்பு நின்றனன். (சு)

இங்ஙன நின்றபோது, வள்ளிநாயகி பரண்மிசை நின்றுகொண்டு கவணையுங் கிளிகடி கருவியையுங் கைக்கொண்டு, எதிர்ப்பட்ட பறவைகளை ஓட்டுந் திறத்தைக் கண்டு உளமிரங்கி, "மனோகரீ!" என்றழைத்து, "நினது வாய், முகம், கண்கள், அழ கிய நாபி, பாதங்களாகிய இவை யாவும் வாசனைதருந் தாமரைமலர்போன் றிருத்தலால் பூக்களுள்ளே தாமரையே சிறந்ததாயிற்று. (எ)

எறிதற்குரிய பெரிய கவணைக் கையிலேந்திய நங்கையே! குற்றமற்ற நின் கூந்தலாகிய மேகமானது அழகிய பொன்னுபரணங்களால் நன்குமின்னி ஒப்பற்ற நல்லிலக்கணம் வாய்ந்த வண்டுகளின் ரீங்காரத்தான் முழங்கித் தேன்மழை பொழித லாலும், அழகு துலங்கு நின்னிடையாகிய சிங்கம் (அம்மழைக்காற்ருது) ஒல்கித் தளர் தலாலும், நின் சிறப்புள் ஒருசிறி துணர்கின்றேன். (அ)

(நின் கூந்தலாகிய) கரியமேகம் பொலிவுறுதலாலும், (நின் இடையாகிய) மின் னல் தோன்றி மறைதலாலும், (நின்புருவமாகிய) வானவில் முறிவுருது வளைந்து நிற்ற லாலும், (நின் அதரமாகிய) இந்திரகோபமென்னும் பூச்சி தோன்றலாலும், (நின்நாசி யாகிய) அரிய குமிழம் பூவும் (நின் கால் கைகளாகிய) செங்கமலப் பூக்களும் மலர்த லாலும், (நீ கண்டத்தணிந்துள்ள முத்துமாலையாகிய) அருவி (நின்பயோதரமாகிய) உயர் தோற்றமுடைய மலைகளினின்று வீழ்தலாலும் மறுவற்ற நினது கன சாயலாகிய பெரிய மயிலானது ஆனந்த நடனஞ் செய்கின்றதே. (கூ)

இப்படிப்பட்ட சிறப்புடைய நின்னைப் பெருங்காட்டினைப் பொருந்தும் இத் திணைப்புனத்தில் வைத்தவர் அம்ம! எத்துணைக் கடினசித்தம் வாய்ந்தவராவர்! (நீ இவ் விடத்தையகன்று) என்னோடு வருவையேல், யானுன்னை உலகங்களின் மேலான பதியின்கட் சேர்த்து நன்கு காப்பாற்றுவேன்" என்று திருவாய்மலர்ந்தருளினன். மூவுலகத்தோரும் போற்றும் பெருந்திருப்புகழாசிரியரான அருணகிரிநாதருடைய கடவுளாவானு மவனே. (௧0)

திணைப்புனத்திருவிளையாடன்
முதற்பத்து முற்றிற்று.

---

# திணைப்புனத்திருவிளையாடல்.

---

## (இரண்டாம்பத்து)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருந்தம்.

அடியோன்றற்கிருபத்தாறக்கரம்.

தான தானன தான தானன — (முடுகு)
தந்த தனதனன தனதந்த தனதனன.

வேட ஞகிய வேல ஞேதுரை
மென்சொன் மறிமகள்கா துபுகுந்தி டனுமவணீர்
ஆடு பாணிந வீர மீதவி
னங்க மரபமரூர் பெயரென்கொ லெனவவனோர்
நீடுன் மாமர பாக மூர்வள
நின்று நிலவுசுரா லயகந்த மலைபெயர்தான்
காடர் நாடர்வி ணூடு ளார்தொழு
கந்த பதிபெயரார் குகநம்பி யெனவறியே. (௧)

மாம ஞர்மக ளாவை நீயுனை
மன்றல் புரியவெனு வெணிவந்த னனிசைவையே
கோம ளாகர ரூபி யேசுவை
கொண்ட சுரவமுதே யெனல்கண்ட வுடனவடான்
போமென் ஞாதியர் பால ஞேர்விடை
புங்க மொடுபுகல்வா ரெனவந்த வனசரவேள்
நாம ஞேரத மாத லேநல
னம்பி நிலைமுன்விடே லெனையென்று சொலினனரோ. (௨)

---

௧. ஆகம் = உடம்பு; இது, மரபு குறிப்பதாயிற்று.

**சாதி** சார்முறை யோதி னீர்நும
சம்பி ரமமறிவார் குழுமுன்பு செலவிசையா
தேத மாமொழி கூறு நீரினி
யிந்த விடம்விரைவாய் விடனன்றெ னவிறவுளோர்
கோதை கூறினள் வாதி லேவலி
கொண்ட குலவழகே யிதுமுன்பு வதுவைசெயாய்
நீதி யேயென வோதி னுயிங
னிங்கை புரிவதெனோ வெனமஞ்சி னன்வினவினன். (ங)

**ஏனு** னீரெனை மாலை சூடுதி
யென்றெ நனகவினே னகைகொண்ட படிறெனவாய்
பேணு வாள்சொல வேட வேள்சுடர்
பிண்டு விழினும்வரா துபொயென்ற னுரையிடைவாள்
நாணு லோசனி யேபொய் யாதுகொ
னன்கு கருதெனமே விதுவம்பு மொழியெனநான்
மாணு டேபிர மாண மாடுவல்
வஞ்ச கமதறியே னெனவஞ்சி பரவினளே. (ச)

**நானு** மேபிர மாண மாடுவ
னன்கு தெளியெனவே எவள்வஞ்ச கவடிவிதோ
கூனி லாநுத லார்ச கீயிவர்
கொண்டு வருமுரையா தெனல்கண்டு கழறுவையே
மான நாணமி லாவ லாரென
வம்பு மொழியுடையீ ரிவளெந்த விடமறிவாள்
போன நாளிவ ளோதி னுளெனல்
பொன்ற லுறுமுரையா மெனவிஞ்ச கிபரவினள். (ரு)

**ஏசி** யேபல பேசு நீவிரி
ரண்டு பெயரொருநா னிவணென்செய் குவல்பலகோள்
மூசி னுளும்வி டேன்வி டேனுனை
முன்சொன் மதிதலைவீ யெனுமெண்கு ணன்முனவள்கோள்
பேசு வீர்நும வீர மாமெறும்
பெண்கண் முனிலையிலோ பொரவந்த துவிரகினல்
மாசு பேணுவி ரேலெ னுவிம
டிந்தி டுநொடியிலே யெனறந்து சினவினளே. (சு)

ரு. யோகம் யோகென வாயவாறு விரகம் " விரகு " எனவாயிற்று.

அடியொன்றற்கிருபத்தெட்டக்கரம்.

தான தனதன தான தனதன — (முடுகு)
தத்த தனதனன தனதத்த தனதனன.

தேனி னுயர்மொழி யாயெ ழுதரிய
சித்தி ரவடிவியே யெனதற்பி னவிர்மணியே
வான லமுதகு ணுழி சினம்விடு
மத்த மொடெதையுநா னயர்சித்த முடையனலேன்
மான வனசரர் சாதி மரபினி
மட்ட றவுயரவே மிளிருத்த மிமுருகிநீ
ஏன னிலைகெழு கான விதைவிட
லெற்கி னிமைசெயுமே யெனவெற்ப னினிதுசொனன். (எ)

பூசல் வெறியில ராயி னெனதுரை
புத்தி யெனவுணர்வீ ரதுபெற்ற வருறவினர்
வாச நிலையடை யாது மதுமன
மட்டை வெளியிடலே யெனவுத்த மிசொலலுமே
தேசு திகழ்மயி லேசு ரமருவு
திட்ப மணமுளதே யதையொப்பி வருகுவையே
ஆசெ துவமண வாதெ னுமுடிவை
யற்பு தகனகமே னிமறைத்து ளனிறுவினன். (அ)

தான தனதன தான தனதன — (முடுகு)
தந்த தனதனன தனதந்த தனதனன.

கூறல் சரியென யானி னைவதிலை
கொன்று மகிழ்தொழிலோ ருடனெந்தை வருபொழுதீ
றீறு பெறுமுன மோடி விடுமென
விந்து வதனிசொன ளஙன்வந்த னரவருமே
மாறின் மறைபல நீள்பல் கிளையென
மண்டி னனிறைவனோ ரெழில்கொண்ட திமிசெனவீ
நாறு மிதன்வர லாறு நவில்கென
நம்பி முனரொருமா யமிதென்ற னளிறைவியே. (கூ)

மாய மெனினிது கூறு படவயர்
வன்கை புரிதுமென வளைகின்ற குறவரைமேல்
ஆய தலைவன டேன்மின் மகடுணை
யன்பி னுளதிதுபே ரழகென்ற பினெவருமே

கூ. திமிசு = வேங்கைமரம். வீ = மலர்.

நேய மொடுறையு ளேகி னர்திமிசி
னின்ற விறைவன்முனே நனிகொண்ட வடிவினையே
மேயி னனெலியன் வாழ்வு மவனவன்
விஞ்சை சரணருளே சுகமென்ற றிமினுலகிர். (கo)

---

# திணைப்புனத்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து)

வேடனுகி வந்த வேற்பிரான் கூறிய சொற்கள் மென்மொழியினளாகிய வள்ளிநாயகியின் செவிப்புலமானவுடன் அவள், "நீர் சொன்ன சொற்கள் நல்ல கிருபையைத் தருதலால் நுஞ் சீரமரபு, வதியுமூர், பெயரென்பன யாவை?" என்று வினவ; வேற்பிரான், "நேராகவே சிறந்த நின்மரபே என் மரபு: வளப்பம் மாருது விளங்குவதுந் தேவாலயத்தை யுடையதுமாகிய கந்தமலே எனதூர்: என் பெயரோ, காட்டிலுள்ளாரும் நாட்டிலுள்ளாரும் தேவலோகத்தாரும் வணங்குகின்ற கந்தக்கடவுளின் பெயரார்ந்த குகநம்பி என்று அறிவாயாக. (க)

நீ எனக்கு அன்புள்ள மாமன் மகளாவாய்: உன்னை மணம் புரியக் கருதி யானிங்கு வந்துள்ளேன்: மடப்பம் வாய்ந்த வடிவுடையாளே! இன்குணத்தாலினிக்குந் தேவாமுதமே! நீ இதற்கிணங்க வேண்டும்" என்று கூறுவதையுணர்ந்தவுடன் அந்நாயகி, "நீர் என் சுற்றத்தாரிடஞ் செல்லும், அவர்களுமக்குத் தக்கவிடைதருவர்" என்று சொல்ல; ஆங்கு வந்துள்ள வனசரவடிவச் செவ்வேள், "நாமிருவரு நம்முண் மனமொத்துப் போதலே நன்மையாம்: நம்பிராசன்முன்பு என்னை நிறுத்தவேண்டாம்" என்று வேண்டினன். (உ)

"உம்முடைய சாதி குலங்களை என் முன்பெடுத்துரைத்தீர்: உமது பெருமையை அறியத்தக்க என் சுற்றத்தார் முன்பு செல்லற்கு ஒருப்படாது, பழிப்புக்கிடமாகிய சொற்களைச் சொல்லிய நீர் இனி இவ்விடத்தைவிட்டு விரைவில் அகன்று போதல் நல்லது" என்று வேடர் குலமகள் விளம்பினள். பின்பு குமாவேள், "வாதஞ் செய்வதில் வல்லவளாகிய என் குலக்கொழுந்தே! இதற்கு முன்னே 'என்னை மணம்புரிந்து கொள்வாய்: இது முறையே' என்று நீ என்னிடங் கூறியுள்ளாய். இப்போது என்னை நிந்திப்பதியாது காரணம்?" என்று கேட்டனன். (ரு)

"வாதாடவில் வலிமையுடையீர்! என்னை மணம்புரிவாயென்று எவ்விடத்து (எப்போது) யானும்மை வேண்டினேன்? உமது கூற்று நகைப்பினை யுட்கொண்ட பொய்ம்மொழியே" என்று உண்மையைப் பேணுநளாகிய வள்ளிநாயகி சொல்லவே; வேடவேடந்தரித்த விமலன், "திங்களும் ஞாயிறும் பிளந்து பூமியில் வீழ்ந்தாலும் எனது பேச்சிற் பொய்ம்மை புகாது: கூரியவாளு நாணும்படியான கண்ணையுடையாளே! யான் கூறியதிற் பொய்யெங்குள்ளது? கருத்தூன்றிப்பார்" என்று புகல;

இதன்மேல் வள்ளிமாதேவி, "இது வம்புப் பேச்சேயென்று நான் சிறுமையின்றிப் பிரமாணிக்கஞ் செய்வேன்: யான் யாதொரு சூதுமறியேன்" என்று செப்பினள்.

[வம்பு என்பது அசப்பியம், நூதனமென்னும் பொருள்களைத் தரும்.] (ச)

குமரவேளும் "யானும் என்னுரை சத்தியமானதென்று பிரமாணிக்கஞ் செய்வேன்: இதை நீ நன்கு தெளிந்துகொள்" என்று கூற; (அதற்கு மறுமொழியாய்த்) தேவி, ஈதொரு வஞ்சகரூபமா யிருக்கின்றது: பிறைபோலு நுதல்படைத்த தோழீ! இவர் இங்குக் கொண்டுவந்துள்ள வழக்கு யாதென்றுராய்ந்து உண்மை தெரிவிப்பாயாக: இவர் மானமு நாணமுமில்லாத வலியர்" என்று சொல்ல; அந்த இன் குணத் தோழியானவள், "வம்புவார்த்தை வல்ல கந்தமலை ஐய! என் தலைவி இவ் விடத்தையல்லாது மற்றெவ்விடத்தை யறிவாள்? (இவளுள்ள நாளளவு முடனிருக்கின்ற என்னையறியாமல்) முன்பொருபோது உம்மை மணம்புரிய வேண்டினள் என்று நீர் இயம்புதல் அழிவுறும் (பொய்) வார்த்தையாம்" என்று கழறினள். (ரு)

"என்னைப் பலவாறு ஏசிப் பேசுகின்ற நீங்களிருவர்; யானொருவன். (என் வார்த்தையை யுறுதிப்படுத்தற்கு ஒருவரையுமழைத்து வராத) யான் இங்கு யாது செய்வேன்? (பழித்தல், சான்று முதலிய) இடையூறு எத்தனை சூழுமினும் தலைவீ! யானுன்னை விடமாட்டேன், விடமாட்டேன்: நீ முன்பு சொல்லியிருப்பதை ஞாபகஞ்செய்து மதிப்பாயாக" என்று வாதாடு மிறைவன் முன்பு, வள்ளிமாதேவி "பொய்யரே! உமது வீரமாகிய வலிமை, பெண்கண் முன்புதானோ சமர்செய்ய வந்தது! மோக விகாரத்தால் வலோற்காரமான தவறிழைக்க முயல்வீரேல் ஒருகணப்பொழுதில் என்னுயிர் மடிந்துபோம்" என்று கூறிக் கோபங்கொண்டாள். (சூ)

"தேனினு மினிய சொல்லினளே! எழுதுதற்கரிய சித்திரம் போல்வாளே! எனதன்பில் விளங்கும் இரத்தினமே! தூய்மையுடை நல்லமுதகுணக் கடலே! கோபந் தணி. துராசாரமா யெதையுஞ் செய்யுங் கருத்தெனக்கில்லை. மானமுடைய வேடர் குலமரபு இனிப் பெருஞ் சிறப்படையும்பொருட்டு விளங்குகின்ற உத்தமியே! முருகியே! நீ தினைவிளையும் இக்கானல் நிலையை விட்டகலுதல் எனக்கு உவப்பை யளிக்கும்" என்று குறிஞ்சிக்கிழவன் இனிது கூறினன்.

['முருகி' என்பது கட்டழகியெனவும் முருகன்தேவியெனவும் பொருள்படும்.] (எ)

"நீர் தருக்கச் சண்டையும் பெண்ணாசை வெறியும் இல்லாதவராயின், என் மொழி நியாயமானதென வுணர்வீர். அந்த நியாயம்:— என்னைப் பெற்றவரும் என்னுறவினரும் வசிக்குமிடத்தை நீரடைந்து உமது மனத்தின்கணுள்ளதை வெளியிடலே" என்று அத்தேவி கூறியவுடன், "அழகு பிரகாசிக்கின்ற மயிலே! காட்டிலே இருவர் மனமொத்துக் கூடிக்கொள்ளுங் காந்தருவமணமென ஒன்றுளதன்றோ? அதை நீ யொப்பி வருவாயாக. அதனாலுனக்கு எவ்வகைக் குற்றமும் பொருந்தாது" என்னும் முடிவைத் தனது அற்புதப் பொன்மேனியை மறைத்து வந்துள்ள குமாரபகவான் நிறுத்திக் கூறினன். (அ)

மதி வதனியாகிய தேவி, "நீர் கூறுவது சரியென யானெண்ணவில்லை: கொலைத்தொழில் புரிந்து மகிழும் வேடர்களோடு என் தந்தைவருஞ் சமயமிது:

அவர்களால் நீர் கொலையுண்ணு முன்னமே ஓடிவிடும்'' என்று சொன்னாள். அப்போதே அவ்விடத்தே அவர்களும் வந்தனர். (உடனே) மாறுபாடில்லாத பலவேத சாகைகளே பல நீண்ட கிளைகளென்று சொல்லுமாறு ஓரழகிய வேங்கைமரமெனப் பூரித்து நின்றனன் இறைவன். "பூமணங் கமழும் இம்மரத்தின் வரலாற்றைச் சொல்லுக'' என்று கேட்ட நம்பிராசன் முன்பு இறைவி, "இஃதொரு மாயம்'' என்று கூறினள். (கூ)

இது மாயமரமாயின், இது சிதையுமாறு செய்யும் வைராக்கியம் புரிவோமென்று கூறி அதனைச் சூழ்ந்துகொண்ட குறவர்களை நோக்கி நம்பிராசன், "இதைக்கொல்லாதீர்கள் : இது நம் மகளுக்குத் துணையாகும் : அவள்பாலுள்ள அன்பினாற்றோன்றியுள்ளது : பேரழகு வாய்ந்ததாயிருக்கின்றது'' என்று சொல்லியபின், யாவரும் அன்போடு தத்தம் இருப்பிடஞ் சென்றனர். பின்பு வேங்கைமரம்போல நின்ற விமலன், முன்பு திறம்படக்கொண்ட வேடவுருவத்தையே மீட்டும் பொருந்தினன். அறிஞர்களே! சந்தமுனிவரது வாழ்வும் அவ்விமலனே. அவனது திருநாம விஞ்சையுந் திருவடியுந் திருக்கருணையுமே நமக்குப் பேரின்பமாவதென் றறியுங்கள். (க௦)

தினைப்புனத்திருவிளையாடல்
இரண்டாம்பத்து முற்றிற்று.

---

# தினைப்புனத்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து)

கலிவிருத்தம்.

எழுத்தளவுடையன.

நம்பி போயபி னாதன்முன் வேடனாய்
எம்பி ராட்டிமுன் பேகியெற் பேணிய
செம்பொ னேமுழு துந்தயை செய்தெனை
நம்பி வாவென வேநவின் றானரோ. (க)

அரக்கி நீர்மைய டுங்குண மெற்கிலை
இரக்க நீர்மையி னும்மையி யம்பிலேன்
கரக்கு நீர்மையி னின்றுவந் திக்கதை
விரிக்கு நீர்மைவி னோதமென் றாளவள். (உ)

காது நன்குக லந்தசெங் கண்ணிநீ
வாது தந்திடென் சொற்கொளின் மாபெருந்
தீது கொன்றருண் ஞானவொண் சேய்பல
நீது லங்கிட வேபெற வீடுமே. (ங)

என்னி லத்திலெ லாநறும் பேறுமுண்
டென்னி லத்திலி லாததி யாண்டுமின்
றென்ன லத்தைய டைந்திடு வாயெனில்
உன்ன லத்தன யாவுமிஃ துண்மையே. (௪)

போதன் மீடவி லாவொரு பொற்புமுன்
பாத போதெவ ரும்பர சாக்கமும்
மோத மாய்நினக் கெய்துநின் முன்னுயிர்
நாத னுப்பிரி யாதிருப் பேனகேல். (ரு)

வேட மள்ளனிவ் வாறுவி ளம்பியும்
வேடர் கன்னிவி ழைந்திலண் மேலவன்
வாடு மேநனி மாணடி மைப்பயிர்
நீடு நின்னரு ணின்றுபெய் யாவிடின். (௬)

என்செய் கேனிரங் காயிரங் காயெனக்
கின்சொல் கூறுயி ரின்றியுய் யாதுடல்
கொன்செ யோரருள் கூரத னுலெனப்
பொன்செ யன்னவள் போதடி தாழ்ந்தனன். (எ)

யாவும் வல்லவ னென்றிரு யாய்முனம்
யாவு மெய்யுறக் கூறியிவ் வாறுசெய்
யாவு மாசில வன்றிரு வாடலாய்
யாவு மோரித யத்தவ ரெண்ணினர். (அ)

இவ்வி தம்விளை யாடிறை வேடரை
அவ்வி டம்வர வுஞ்செய்தன் னோர்களுக்
குவ்வி யாடநின் றெண்பொடி நல்கினன்
செவ்வி கூன்முது மைத்தவச் செல்வனுய். (௯)

நம்பி யங்ஙன நன்குப ணிங்தெழுந்
தெம்பி ரானிவண் வைகுக வென்றுவிட்
டம்பி றங்குபல் வாச்சிய மார்ப்பவூர்ப்
பம்பல் போயினன் சந்தற்ப ராவுவீர். (க0)

---

# தினைப்புனத்திருவிளையாடல்.

(மூன்றும்பத்து)

நம்பிராசன் தினைப்புனத்தை விட்டகன்ற பின்பு குமரநாதன், முன்புபோல வேடனுகி எம்பெருமாட்டி வள்ளிநாயகி முன்பு தோன்றி, "என்னை ஆபத்தி னின்றுங் காத்தருளிய செம்பொன்னே! இனி, முழுதுங் கிருபைசெய்து என்னை நம்பி என்பின்னே வா" என்று வேண்டினன். (க)

"அரக்கிகளின் தன்மையும் வேறு கொல்லும்பெண்களின் குணமும் எனக் கில்லை. எனக்குள்ள இரக்கத்தன்மையினுல் என் தந்தை முதலினோர்பால் உம்மைப் பற்றி யாதொன்றுங் கூறினேனல்லேன். இவ்வாறிருப்ப; யாண்டோ மறைந்திருக் குந் தன்மையிலின்று மிங்குப்போந்து யான் உம்மை விரும்பினது போன்ற பொரு ளில் இக்கதை விரிப்பது விேநாதமே" என்று அப்பெருமாட்டி கூறினள். (உ)

காதளவோடுஞ் செவ்வரிக் கண்ணுளே! உன்னோடு வாதுபுரியும் என்னுரையை என்று கொள்வையாயின், மிகப் பெரிய பாவங்களையெல்லாம் போக்கியருள வல்ல ஞானம் படைத்த தூய பல குழந்தைகளை நின் கீர்த்தி பெருகும்படி நீ பெறுதல் இடையறுது. (ங)

எனதில்லத்தில் நல்ல எவ்வகைச் செல்வமுமுண்டு. எனதூரிலில்லாத ஆக்கம் வேறெங்குமில்லை. எனது நலத்தை நீ பெறுவை யாயின், என்னைச் சார்ந்த நலங்க ளெல்லாம் நின்னைச் சார்ந்தனவாகும். இது சத்தியம். (ச)

இறப்பும் பிறப்புமில்லாத ஒரு சிரேட்ட நிலையும் உன் பாதகமலங்களை யாவரும் வணங்கும்படியான வாழ்வும் விருப்பம்போல நினக்குக்கிட்டும். உன் பிராண நாதனுக உன்னை விட்டுப்பிரியாமல் உன் முன்னிருப்பேன். (இம்மொழிகளில் ஐயங்கொண்டு) நகையாடற்க.

['நகேல்' என்பதற்கு இகழேல் எனப் பொருள்கூறினுமாம்.] (ரு)

வேடவீரன் இப்படியெல்லாங்கூறியும் வள்ளிநாயகி அன்னோன்பேச்சை விரும்ப வில்லை. அதன்மேற் பெருமான், "இயல்பிற்பெருகு நின்கிருபையாகிய மேகம் இங் ஙனங் காலூன்றிப் பெய்யாவிடின் அடிமையாகிய பயிரெல்லாம் பெரிதும் வாடுமே. (சு)

யாது செய்வேன்: தயைபுரி, தயைபுரி: எனக்கின்சொல் வழங்கு: உயி ரின்றி யுடலுய்யாது: அதனுற் பெருமைபுரியத்தக்க ஓரருள்கூர்" என்று கூறித் திருவைத்தருகின்ற அம் மகாதேவியின் அடித்தாமரைப் போதுகளை வந்தித்தான்.

[செய்யுளில் 'தாழ்ந்தனன்' என்றது வணங்கினுன் எனும்பொருட்டு; "இறைஞ்ச ருழ்தல் காண்டல் வந்தித்தல்" என்பது பிங்கலநிகண்டு.] (எ)

எல்லாம்வல்ல இறைவன், எம் திருத்தாயின் சன்னிதியில் எல்லாம் உண்மை யாகவே உரைத்து, இவ்வாறு செய்தவெல்லாங் களங்கரகிதனுன பெருமானுடைய திருவிளையாடல்களாகவே முழுதுமுணர்ந்த மூதறிஞர் எண்ணினுர்கள். (அ)

இவ்விதமாகத் திருவிளையாடல்கள் புரியுமிறைவன், நம்பிராசன் முதலிய வேடர்களைத் தினைப்புனத்திற்கு மீண்டும் வருமாறு செய்து, தான் ஒரு கூன்சேர்ந்த மூப்பையுடைய நல்ல தபசி வடிவினனாகித் தன்றலையை நடுக்கிக்கொண்டு நின்று அவ்வேடர்களணிந்து கொள்ளற்குத் திருநீறளித்தனன். (கூ)

அருணகிரிநாதரை அன்பிற் புகழ்வோர்களே! நம்பிராசன், அங்கே அத்தபசியை அன்போடு வணங்கியெழுந்து "எம்பெருமானே! நீர் இங்கேயே தங்கியிரும்" என்று கூறி அவரைவிட்டு அழகிய பல வாத்தியங்கண் முழங்கப் பொலிவுடைய தன்னூருக்குத் திரும்பினான். (கo)

தினைப்புனத்திருவிளையாடன்
மூன்றும்பத்து முற்றிற்று.

---

## பதினைந்தாவது

# சுனைவளாகத்திருவிளையாடல்.

---

### (முதற்பத்து)

கலிவிருத்தம்.

வெண்ணரைத் துறவியவ் வேலை வள்ளிநீ
உண்ணலத் துணவெஃது முதவு கென்றலும்
பண்ணலப் பணிமொழிப் பாவை தேன்கனி
நண்ணவத் தினையிடி யிவற்றை நல்கினாள். (க)

உண்டனன் கிழவனு முகந்து நீர்விடாய்
கொண்டவ னெனச்சுனை நீர்கொள் வேனெனல்
ஒண்டொடி கேட்டெழு குன்றூ ரீஇயஃ
துண்டிவண் வருதிரென் றோதி நின்றனள். (உ)

அச்சுனை காட்டுதி யளியு ளாயெனும்
அச்சரை யானெடென் னன்னை போந்திதே
அச்சுனை யெனலுமஃ தருந்தி யாயிழாய்
அச்சம்விட் டணைந்திடி லாசை தீர்வலே. (ங)

என்றனன் கேட்டவ ளிரண்டு காதுமூ
டொன்றுகை யாற்றிநன் கோடி னாளஙன்
நின்றுள னேமுரு நிகழு மாகரிக்
கன்றினை யழைத்துருங் காட்டு கென்றனன். (ச)

யானையு மதுசெய யானைக் கஞ்சுவாள்
யானையை யோட்டுதிர் யாரும் வேறிலை
நானைய மீந்தது நலிந்த தேயென
மோனையன் மொழிப்படி மொய்யும் போயதால். (ரு)

இச்செயல் கணித்தவவ் விறைவி மூப்பரும்
முற்செயல் வேடரு மோகங் கூர்தலும்
அச்சுறுத் திடலுநல் லளியிற் பேசலும்
மெச்சலும் வணங்கலும் வேங்கை போந்ததும். (சு)

சங்கிலித் தொடரெனத் தமியள் காண்டலென்
எங்குலக் கடவுளென் றிருக்கும் வேற்குக
மங்கலத் திருமுரு கைய வானவர்
தங்களைப் புரந்தவென் சாமி கூறுதி. (எ)

ஈங்கெனக் கார்துணை யாரை யெண்ணுவேன்
ஏங்கெனக் கருள்புரி யென்று நெஞ்சம்வாய்
வீங்கிடக் காண்கிழ மேனி யான்றிரு
ஓங்குதன் மெய்வடி வொளிர நின்றனன். (அ)

நின்றவன் றனையவ ணெடிது தாழ்ந்தனள்
மன்றலங் கடம்பினன் மாசில் பார்வைநெஞ்
சென்றுள கொடுதெய்வ வியக்க மாய்க்கலந்
தென்றிரு நாயகி நீயென் றோதினன். (கூ)

நீசொன வாறிங னிகழ்ந்த யாவுமென்
ஏசறு மாடல்க ளேயென் மூலநீ
பாசறை மேயதும் பலவென் றெல்கினன்
தேசனு பூதியன் சீர்கொள் செல்வரே. (கo)

---

கo. பாசறை = துன்பம்; "செல்லல் பாசறை பையுள் சூர்துயர்" என்பது சேந்தன்றிவாகரம்.

பதினைந்தாவது

# சுவணவளாகத்திருவிளையாடல்.

---

## (முதற்பத்து)

அவ்வேளையில் வெள்ளிய நரைமீதூர்ந்த தபசியாயுள்ளான் "வள்ளி! நீ உண்ணும் நல்ல உணவுகளுள் எதையேனும் எனக்குத் தருக" என்று கேட்டவுடன், பண்பயி லின்சொற் பாவையாம் அம்மை, தேன், பழங்கள், கிடைத்த புதிய தினைமா ஆகிய இவற்றை யீந்தனள். (க)

கிழவனும் உகந்து அவற்றையுண்டனன். அங்ஙனம், நீர்வேட்கை கொண்டவ னென்னும்படி "சுனைநீரினையே குடிப்பேன்" என்று அம்முதியோன் கூறுதலை அவ்வம்மை கேட்டு, "அதோ தோன்றும் எழுகுன்றுகளுக்கும் அப்பாற்சென்று அந் நீரினைக் குடித்துவிட்டு இங்கேவாரும்" என்று சொல்லி நின்றனள். (உ)

"(அளியில்லா இத்தோழிபோல்பவ ளாகாத) அளியுளாய்! அந்தச் சுனையை எனக்குக் காட்டுவாயாக" என்று வேண்டும் அக்கிழவனோடு எம் அன்னை சென்று "இதுவே அச்சுனை" என்று சுட்டிச்சொல்லலும் அக்கிழவன், அந்நீரைப் பருகி விட்டு "நல்ல ஆபரணங்களை யணிந்தவளே! அச்சம்விட்டு என்னை நீ அணைவை யானால் என்னசை தீரப்பெறுவேன்" (ங)

என்றனன். இம்மாற்றங் கேட்ட வள்ளிமாதேவி இரண்டு செவிகளையுந் தன் கைகளான் மூடிக்கொண்டு விரைந்தோடினள். அவ்விடத்து நின்றுள்ள நிமலன், பிரணவவடிவு பிரகாசிக்கின்ற ஒரு பெரிய யானைக்கன்றினை யழைத்துப் "பயங்காட் டுக" என்று சொல்லினன். (ச)

அந்த யானையும் அவ்வண்ணஞ் செய்ய; அதற்குப் பயந்த தேவி, "யானையை ஓட்டுவீராக: இங்கெனக்குதவி செய்வார் வேறெவருமில்லை: யானுமக்கிட்ட பிக்ஷை யாகிய தருமமும் இங்ஙனம் பயனில்லாதொழிந்ததே" என்று கூற; கிழவனுய் நிற் கும் முதல்வன் சொல்லின்படி அந்த யானையுந் திரும்பிப்போய்விட்டது. (ரு)

கிழ மேனியானது சொன்மாத்திரையிலேயே அந்தயானை போய்விட்ட அதி சயத்தைக் கணிதமிட்ட அவ்விறைவி, "இக்கிழவரும் இதற்கு முன்னுன செயல்களைச் செய்த வேடக்குரிசிலும் என்மீது மோகங்கூர்ந்தமையும், பயங்காட்டியதன்மையும், நல் லன்போடு பேசியதன்மையும், என்னைப் புகழ்ந்தமையும், வந்தனித்தமையும், வேங்கை மரந் தோன்றினமையும்,— (சு)

ஒன்றன்பின்னொன்றுஞ் சங்கிலித் தொடரைப்போல யான் காண்டலென்னே? எங் குலதெய்வமென விருக்கின்ற வெற்றிவேற் குகனே! மங்கலமுடைத் திருமுரு கையனே! தேவர்களைக் காத்தருளிய என் சுவாமீ! சொல்லியருள்வாயாக. (எ)

இவ்விடத்தே எனக்கு யார்துணை? இத்தருணம் மற்றியாரை எண்ணுவேன்? அழுது திகைக்குமெனக்கு நின்னருளைப் புரிவாய்'' என்று நெஞ்சும் வாயும் விம்மித் துடித்தலைக் கண்ணுற்ற கிழமேனியான், தனது திருவோங்கு முண்மைவடிவம் பிரகாசிக்க நின்றருளினன். (அ)

இப்படி முன்னிற்கு முதல்வனை அவ் வள்ளி மாதேவி, பஞ்சாங்கமும் பொருந்த வணங்கினள். வாசனை பொருந்திய அழகிய கடப்பந்தாரினனாகிய குமரவேள், தனது குற்றமற்ற திருநோக்கையுந் திருவுள்ளத்தையுங்கொண்டு தெய்வீக இயக்க அத்துவைதமாய் அவளகத்தும் புறத்துங் கலந்தருளி "நீ என் திருநாயகி'' என்றருளிச்செய்தான். (கூ)

"நீ சொன்னபடி இஞ்ஞான்று நிகழ்ந்த அனைத்தும் என்னுடைய குற்றமற்ற திருவிளையாடல்களே. என்பொருட்டு நீ துன்பப்பட்டதும் அதிகமே'' என்று உளம் வருந்துவோனாயினன் அக்குமரவேள்; ஞானவிளக்கமாங் கந்தரனுபூதி யாசிரியரது சீர்மைகொள் செல்வர்காள்! (கo)

சுனைவளாகத்திருவிளையாடன்

முதற்பத்து முற்றிற்று.

---

# சுனைவளாகத்திருவிளையாடல்.

---

## (இரண்டாம்பத்து)

**எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

அடியோன்றற்கிருபதக்கரம்.

**இரண்டுசீர்வண்ணம்.**

நீடு மங்கள வள்ளியை வேற்கை நின்ம லன்பரி வானனி நோக்கிப்
பீடு விஞ்சரு ணயகி நின்சிர் பேணு வேன்பிரி யேனினி யூரார்
கூடு மன்றிடை யோர்மண நன்கு கூடு மாகலி னீதினை யோம்பல்
நாடு கென்றன னங்கையு மொப்பி நாய கற்றொழு தேனல டைந்தாள். (க)

செந்தி னைக்கதிர் முற்றின கொய்யுஞ் செய்கை நேர்ந்தமை யாற்குற மின்னார்
வந்தெ யிற்குடி வாவென மூரன் மந்த மார்முக வள்ளியு மேகி
அந்த மிக்கவ கத்திடை வைகி னளி ராவெனை யாடுரை யின்னும்
இந்த மக்களு டம்புட னென்னை யிக்கு டிக்கணி ருத்திய தென்னே. (உ)

நின்னை நான்பிரி யேனென வோதொண் ணீதி யேபிரி வெய்திய தென்னே
பொன்னை நீங்கணி யென்பது முண்டோ பூவன் மேனிமு தாலென வோதித்
தன்னை வோங்கவு லாவினள் பள்ளி தான டைந்தில ளாடவர் சாதப்
பொன்னை மாந்தணி மாதர்து யின்றூர் புட்டு யின்ற துயின்றில ளெந்தாய். (ங)

ஈயு றங்கின வூருயிர்ப் பேத மேயு றங்கின நீருயி ரேணூர்
பேயு றங்கின பீடுடை மாவின் பேதம் யாவுமு றங்கின நீடு
வேயு றங்கின வேலைய தாவ ரங்கள் யாவுமு றங்கின வேலை
வாயு றங்கரி யோர்மகள் சீத வாண்ம லர்க்கணு றங்கில வாலோ. (ச)

இந்நி லைப்படு நுண்ணிடை கீழ்மே லெல்லை யெங்கணு நோக்கின ளேசில்
நன்னி லைப்படு வாருள மார்தன் னுய கன்வரல் கண்டிலள் பின்னர்த்
தன்னு தற்பிறை வேர்க்கவு யிர்ப்புத் தானெ ழப்பசு மைத்திரு வன்னி
இன்னு ரைத்தமி ழுந்தடு மாற வெம்பி ரானெனக் கூவினள் பல்கால். (ரு)

ஆரு மம்பொருள் பாட்டினு மேவே றுயி ருப்பது முண்டுகொல் பூவைச்
சாரும் வம்புத னிப்பொரு ளன்றே சார்க னந்தவிர் நீளமு முண்டோ
ஈரு டம்பிடை யீருயி ராக வேயி ருத்தலு மன்பிலர் போக்கைச்
சேரு மென்றுக டற்குளிர் முத்தைச் செங்கண் முத்ததி னுற்றக னித்தாள்.(சு)

நாடு மின்னுயிர் நாதவென் னுவி நாத பல்லுயிர் நாதபொன் னுடர்
தேடு நன்னர்வ ழாதரு டேவ தேவி நீயென வோதிய தேவே
வாடு மென்முக மெங்ஙனம் விண்டேர் மல்கு மென்றுபி னல்லினை நோக்கி
ஈடு ணென்னைவ ருத்துதல் போலின் பீகி லாய்கொல்வி சும்பென வென்றுள்.(எ)

பஞ்ச பாதக முஞ்செயு பாயம் பார வேணிக மண்டல நீறு
மஞ்ச ருநய தண்டுகல் லாடை மல்க நிற்றலெ னுவவை கொண்டோர்
நெஞ்சு மோமுரு காவென வுன்னி னேர்ப வந்தப வாள்வது முண்டே
துஞ்ச னூறெனவ் ழிக்கய லிங்கே துஞ்ச வென்னைம றந்ததெ னென்றுள்.(அ)

---

ங. சாதரூபம் என்னும் பொன்னே "சாதப்பொன்" எனப்பட்டது. இது, "சாத ரூபங் கிளிச்சிறை யாடகஞ் — சாம்பூ நதமிவை நால்வகைப் பொன்னே" என்று **பிங்கலந்தை** கூறுகின்ற நால்வகைப் பொன்களுள்ளும் முற்பட்டு நிற்பதாகும். சாதம் = கலப்பின்மை எனும்பொருள் பயக்கும்.

ரு. உயிர்ப்பு = பெருமூச்சு.
வன்னி = கிளி.

எ. அல் = இரவு. ஈடு = குழைவு.

உள்ளி ருந்துய்பொ லாவெளி றேமே லோடி மேனிம றைத்தென மென்மை
வெள்ளை யம்பரம் வீக்கியுள் ளாரின் மேவி யாழினு மென்மொழி யாரை
ஞெள்ளல் விஞ்சுத னத்தைநி லத்தை நெஞ்சி னைக்கவர் வோர்குக வாளென்
றுள்ளி னுங்கொள வுண்டரு ளிங்கெ னுள்ள நைய மறந்ததெ னென்றாள்.(கூ)

எற்றி னந்திதி வாரமி ராசி யேறு கோள்கர ணங்களு மற்றும்
வெற்றி விஞ்சநி லாதுத யஞ்செய் மெய்ய ருங்குக வாளெனின் வாழ்வார்
ஒற்றை யன்றிலெ யொத்திங ஞன்று னுள்ளு டைந்துபு லம்பலெ னென்றாள்
மற்றி னும்புகல் வேனனி கேண்மின் மாசில் செவ்வரை யானெறி யன்பீர்.(க0)

---

## சுவணவளாகத்திருவிளையாடல்.

---

### (இரண்டாம்பத்து)

இடையறு மங்களசொரூப வள்ளிப்பிராட்டியை வேற்கர விமலன், அன்பு கூர நோக்கி, "பெருமைமிக்க அருட்காதலீ! நின் சிறப்பைப்பேணும் யான் இனியுன்னைப் பிரியகில்லேன். நின் குறிச்சி வாழ்குநர் குழுமிடு சபை முன்னர் நமக்கொரு திருமணம் இனி நன்றாய்க் கூடுமாதலால், நீ தினைக்காவல் செய்வதை மேற்கொள்வாயாக" என்று பணித்தனன். தேவியு முடன்பட்டுத் தன்னுடைய நாயகனை வணங்கித் தினைப்புனஞ் சேர்ந்தனள். (க)

(அஞ்ஞான்று சேயவன் செயலாற்) செந்தினைக் கதிர்கண் முற்றின. அவற்றை அறக்குஞ் செய்கையு நேர்ந்தமையாற் குறப்பெண்கள் வந்து "இனி நீ நங்குறிச்சிக்கு வருதி" என்று அழைக்க; புன்னகைப் பொலிவுடை முகத்தினளாகிய அம்மையும் அவ்வாறே புறப்பட்டு அழகுமிக்க தன்னரண்மனைக்கண்ணே தங்கினாள். அன்றிராப்பொழுதில், "என்னை ஆண்டுகொண்ட துரையே! இன்னும் என்னை இம்மானுட வுடம்பில் இக் கிராதர்குடியில் வைகும்படி வைத்திருப்பது என்னே? (உ)

நின்னை யான்பிரியேனென்று அருளிய நல்ல நீதியே! இப்போது பிரிவெய்திய தென்னே? பொன்னை நீங்கிய பூடணமு முண்டோ? செம்மேனி முதலே!" என்றியம்பித் தனதுமன நைதலதிகரிக்கும்படி உலாவினாள்: படுக்கையறைக்குச் சென்றாளல்லள். ஆண்பாலாருஞ் சாதரூபப் பொன்னை மறைத்துள்ள ஆபரணமணிந்த பெண்பாலாரு நித்திரைசெய்தனர். பறவைகளுமுறங்கின. எம் அன்னையாகிய வள்ளிமாதேவி மட்டும் உறங்கினாளல்லள். (ங)

ஈயின முறங்கின. நகரும் பிராணியினமெல்லா முறங்கின. நீர்வாழ்வனவும் வலிபொருந்திய பேயினங்களு முறங்கின. பெருமையுடைய விலங்கினம் யாவுமுறங்கின. நெடிய மூங்கில்க ளுறங்கின. மற்றுமுள்ள தாவர வருக்கங்களெல்லா முறங்

---

கூ. உள்ளார் = வறுமையில்லார்.

ஙின. திருப்பாற்கடற்க ணுறங்குவோனுடைய ஒரு புதல்வியின் குளிர்ந்த விளக்க முடைய நயனமலர்கண்மட்டு முறங்கவில்லை. (௪)

இந்நிலைமையிற் றுன்புறும் எம்பெருமாட்டி, விண்ணும் மண்ணுந் திசையனைத்து மெதிர்நோக்கியும் மாசற்ற ஞானநிலை கைகூடியவருள்ளத்திற் பொருந்துந் தன்னொரு நாயகன் வருகையைக் கண்டாளல்லள். பின்பு, தனது இளஞ்சந்திரனை யொத்த நெற்றி வியர்க்கவும், நெடுமூச்செறியவும், அழகிய பைங்கிளியின் இனிய மொழிபோன்ற தன்றமிழ்ச்சொல்லுந் தமோறவும் (நின்று) "எம்பிரான்" என்று பன்முறையும் அழைத்தாள். (௫)

"பாட்டிற் பொருந்திய அழகிய பொருள் அப்பாட்டிற்கு வேறுயிருப்பது முண்டோ? பூவின்மணம் பூவிற் கன்னியமாய் நிற்கும் பொருளன்றே? ஒரு பொருளைச் சார்ந்துள்ள கனத்தை நீங்கிய நீளமு முண்டோ? இரண்டுடம்பி லிரண்டுயிரா யிருத்த லுங் காதலா லொருமியாதிருப்பவர் போக்கினையே யடுக்கும்" என்று அவள் விளம் பித் தானணிந்திருந்த கடற்படு குளிர்முத்தினை அழுகையாற் சிவந்த கண்ணின் வெந் நீர்முத்தாற் சாம்பராக்கினள். [முத்துமாலை கரிந்துபோயிற்று என்றபடி] (௬)

"உம்மைநாடும் இன்னுயிர்கட்கெல்லாந் தலைவரே! என் பிராண நாயகரே! எண்ணில்லாப் பசுக்களுக்கும் பதியே! விண்ணுலகத்தார் விரும்பு நன்மைகள் வழு வாமல் அருள்செய்த தேவே! நீ என் தேவி என்றுரைத்தருளிய தேவே! உமது பிரிவினுல் வாடியுள்ள என்முகம் எவ்வாறு மீட்டும் அழகோடு விளங்கும்?" என்று அவள்கூறிப் பின்பு இராத்திரியை நோக்கி, "பிரிவினுற் குழைவுபடுகின்ற என்னை நீ இப்பொழுது துன்புறுத்துதல்போல விடிவதற்குள்ளாக இன்பு செய்யாயோ? (உல குக்கு) மழையைப் பெய்யாமையினுல் முன்னர் இடுக்கணும் அதனைப் பெய்தலாற் பின் னர் மகிழ்ச்சியுநல்கும்) மேகம்போல" என்றுரைத்தாள். (௭)

கொலை, களவு, பொய், கள், காமமென்னும் ஐம்பெரும் பாதகங்களையுஞ் சுலப மாகச் செய்தற்கு உபாயமாவது, (பஞ்சமுத்திரை யென்னப்படுங்) கனத்தசடை, கமண் டலம், திருநீறு, வன்மையறுத நல்ல யோகதண்டம், காஷாயவுடை ஆகிய ஐந்தும் விளங்க நிற்றலேயென்று அவற்றைத் தாங்கின வஞ்சகர் நெஞ்சுதானும், 'ஓம் - முருகா' என்றுகூறித் தியானித்தால் அவர் பாவமற ஆட்கொள்வது முண்டன்றோ? துயி லொழிந்த என்கண்ணுங் கயல்கள் வாடும்படி என்னை அக்கிருபை மறந்த தெவ் வாறோ? என்று அவளிரங்கினள். (௮)

உள்ளே விம்மியிருந்த வெள்ளறிவாகிய வெள்ளை, புறத்தும்படர்ந்து மறைத்த தென்னும்படி மெல்லிய வெள்ளாடைகள் புனைந்துகொண்டு வறுமையில்லாதார் இல் லத்தையடைந்து யாழிசையினும் மிருது பாஷிதமுடைய மகளிரையும், மிக்க தனத்தை யும், நிலத்தையும், மனத்தையும் அபகரிப்போர், 'குகக்கடவுளே! ஆண்டருளுக' என்று நினைக்கினும் ஆட்கொள்ளலுண்டே. அவ்வித கருணை, இங்ஙனம் என்னெஞ் சம் நையும்படி என்னை மறந்தது யாதுபற்றி? என்றுள் அத்தேவி. (௯)

விளக்கமுடைய தினமும், திதியும், வாரமும், இராசியும், அந்த இராசிகளி லேறு கிரகங்களும், கரணங்களும், ஏனையவும் சாதகனுக்கு வெற்றி மீக்கொள் நிலையினில்லாதிருக்கப் பிறந்த வுடம்பினரும் 'குகனே! ஆண்டருள்' என்பரேல் அவ

ரும் வாழ்வரே. இங்கே நான்மட்டுந் தனிப்பட்ட அன்றிற் பறவையைப் போன்று உள்ளமுடைந்து புலம்புதலெவ்வாறு நிகழ்கின்றது? என்று நொந்தனள் அப்பிராட்டி. குற்றமற்ற அருணகிரிநாதர் நடையினிடத்தன் புடையீர்! மேல் நடந்தவற்றையுஞ் சொல்லுவேன் விருப்பத்தோடு கேட்பீர்களாக.

[தினம் = நாள். இது, நிகண்டுகள் கூறுமாறு 'முதனாள்' என்னும்பெயரிய அச்சுவினி முதலாகவுள்ள உஎ - நட்சத்திரங்களையுங் குறிக்கு மென்க.] (கO)

சுனைவளாகத்திருவிளையாடல்

இரண்டாம்பத்து முற்றிற்று.

---

பதினாறுவது

# செழுஞ்சோலைத்திருவிளையாடல்.

---

(முதற்பத்து)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

அடியொன்றற்கிருபதக்கரம்.

இரண்டுசீர்வண்ணம்.

தண்ண ருட்கட லுக்கிட மாயுஞ் சாத தன்மம தற்கிளை யாயும்
எண்ணு நர்க்கிகல் பண்ணுநர் கட்கே ணேறு கேசரி யாயும ருத
அண்ணன் மிக்கக லைக்கட லாயு மார ருங்குண மாமலை யாயும்
விண்ண வர்க்கிறை யாயுநி லாமென் வேங்தெ னல்லன்மு ருக்கில தன்றே. (க)

என்று கூறிநெ டுங்கடு வேனி லென்ப தோடழ லும்புகு வெம்மை
நின்று வாடிள மானென மானி நீடு வெம்பிய ரத்றல்க ணுற்ற
மன்ற லாரள கச்சகி மான்ம தக்கு ழம்புப னிப்புன ரேய்பொன்
துன்று பீலியி னல்விசி றிப்பைந் தோகை நீகரை காரண மோதாய். (உ)

நன்ன ரோங்கிரு நீலமு முத்து நல்ல ரத்தமு மின்னல முள்ளாய்
இன்னல் வீங்குற லென்னின தேர்நீ ராழி யைக்குக வேளெழில் கொள்ளை

---

க. இளை = வேலி.

உ. 'வேனில்' - இது, முதுவேனிலென வறியக் கிடக்கின்றது. அது, சித்திரை வைகாசியாகிய இளவேனிற் பருவத்து வசந்தகாலங் கடந்தெய்தும் ஆனி ஆடியாகிய பருவமாம். இதனையே முதுகோடை யென்றும், இதற்குரிய காற்றினை மேல்காற்றென்றுங் கூறுவோர் வசந்தகாலக் காற்றினைத் தென்றலென்ப ரென்க.

கொன்னெ டாம்படி கொண்டது கொல்லோ கூறு கென்றன ளன்னவ ளேக்கி
என்னை யாண்டருள் கோவெளி நின்று லென்னெ டங்கடை யென்றனண் மானி.

நள்ளி ராவிலிவ் வாறுத னல்லா ணைத லெண்ணிய ஞானகு ருள
வள்ளி யோன்முனி யம்புக டாங்கி மாவ னப்புறு கோவென நம்பி
ஞெள்ளன் மாளிகை வாயிலி னிற்கு நேர்மை கண்டன டோழியு மஞ்ஞான்
றுள்ளம் யாதிவ ணிற்கிற கோவே யோது கென்றுவி னுவின ளன்னுள். (ச)

ஆர்வ வஞ்சியை யேகொண ராயென் முர்வ மிக்கவ னேதலு மன்னுள்
பார்வி ணம்பளி யாளுடன் வந்தெம் பாக்கி யம்மிது காத்தருள் வீரென்
றேர்வி ளங்குபி ராட்டியை விட்டுள் ளேகி னளங் னெம்பெரு மாட்டி
தார்வ யங்குத னயக னேன்று டாழ்ந்து கண்மழை சோரவெ ழுந்தாள். (ரு)

அம்ம ழைக்கம லங்கடு டைத்தா ரன்பி னர்கவி யேதெளி நாளை
இம்ம யக்கமெ லாமிறும் வாரா யென்ற ழைத்தவ ளோடொரு சோலைக்
கொம்மை யுற்றன னெந்தையெ னம்மை கொற்ற வேலுடை யீரெனை யாளல்
செம்மை மிக்கமெய் காட்டனி னைத்தல் செய்யி னும்பிற செய்ததெ னென்றுள். (சு)

மின்னை நேரிடை யாய்பனி முல்லை மேவு மொண்ணகை யாய்நின தேசில்
கன்னி வீரமெல் லாவழி யாலுங் காட்டி னேனுல குக்குர மாகும்
என்ன லாடல னந்தம வற்று வீடில் சேய்மையு ருப்பல மூப்பும்
அன்ன வாபல விந்நிலை காளை யண்ணு மாகவி னின்முனெய் திற்றே. (எ)

வேத சாகையு மென்னுரு வென்ன வேங்கை யாகின னேசொன காளை
ஆத ருன்கும ரத்திரு வீதுன் னர்வ நாடிய காரண மாலென்
றோதன் மேயவென் மாதுல னீந்த வோவி யத்திரு நீயெனை நாடிக்
கோத னுதிரு காற்றவ நோற்றே கொள்க வென்றதெ னுவிறை சொன்னன். (அ)

சொல்வி யோகத னற்குரு சீடன் றேமி னெஞ்சுக லந்தறி விக்கும்
வல்லை போன்மட வாளுள ளாவி மன்னி முன்னைய காட்டவ றிந்த
வல்லி வாண்முக நோக்கிய காளை மாதர் கட்கர சீயுனை நீத்தெவ்
வல்வி யோடிங னேர்ந்தன செய்துண் மல்கு மிவ்வுரு வென்றுமு ரைத்தான். (கூ)

பத்தி வீடறை யுந்தமிழ் வேதம் பாடு செவ்வரை நாமனை யாளோர்
சித்த னுமயில் வேலிறை பாதந் தேவி தீண்டிவ ணங்கியென் வாயான்
உத்தி யானுமை யேசியி கழ்ந்தே னெண்மை யில்லிபொ றுத்தருள் கின்னும்
புத்தி போதர நீர்புகல் யாவும் பூவை கேட்கவு ளேனினி தென்றுள். (க0)

பதினாறுவது

# செழுஞ்சோலைத் திருவிளையாடல்.

---

(முதற்பத்து)

குளிர்ச்சி பொருந்திய கிருபா சமுத்திரத்திற்கு உறைவிடமாயும், சத்திய மான தருமத்திற்கு வேலியாயும், தம்முடைய (திருவடிகளைத்) தியானிப்போர் கட் கிடையூறு செய்வோர்கட்கு வலிமிக்க சிங்கமாயும், குறைவுபடாப் பெருமைமிக்க கலைகளின் கடலாயும், ஆர்ந்த அருங்குணப் பெருமலையாயும், தேவர்கட்குத் தலைவராயும் விளங்கும் என்தலைவர் என் துன்பத்தைத் துடைக்கவில்லை. (க)

என்று சொல்லி, நீடிய கொடிய கோடைக்காலத்தோடு நெருப்புங் கலந்துள்ள வெப்பத்திலகப்பட்டு வருந்தும் இளமானைப்போல வள்ளிமாதேவி பெரிதும் வெம்பிப் பிரலாபித்தலைப் பார்த்த நறுமணக் கூந்தலுடைத் தோழியானவள், கஸ்தூரிச்சாந்திலும் பனிநீரிலுந் தோய்க்கப்பெற்ற பொன்னு னெருக்கப்பட்ட (பிடியுடை) மயிற்பீலி விசிறியால் விசிறி, பசிய மயில்போல்வாளே! நீ இப்படி நைவதன் காரணத்தைக் கூறுவாயாக. (உ)

நலம் விளங்கும் இரண்டு நீலோற்பலங்களும் (விழிகளும்), முத்துக்களும் (பற் களும்), நீற்பவளங்களும் (இதழ்களும்) பிரகாசிக்கின்ற எழிலுடையாளே! மேலு மேலுந் துன்பமதிகரிக்க நீ நைவது யாது காரணம்? நின் எழிலாகிய பாராவாரத் தைக் குகவேளின் எழில் பெருமையோடு எற்புடையளவுங் கொள்ளை கொண்டதோ? எனக்கறிவிப்பாயாக என்று கேட்டனள். அத்தோழியைப் பார்த்து, "என்னை ஆண் டருளிய தலைவர் (நம்மில்லத்திற்கு) வெளிப்புறத்தில் நிற்பாராயின், என்னையுடன் கொண்டு அங்குப்போய்ச் சேர்வாயாக" என்று மானியாகிய வள்ளிப் பிராட்டி கூறினள்.

['மானி' என்பதற்கு மானமுடையாள், மான்வயிற்றில் வந்தாள் என்னும் பொருள்கள் கொள்ளப்படும்.] (ங)

இவ்வாறு தன்தேவி நடுநிசியில் வருத்தமுறுவதைத் திருவுளத் தெண்ணிய ஞானகுணை வள்ளல், வில்லம்புகளைத் தாங்கிப் பேரழகுடைய இராசகுமாரனென்று சொல்லும்படி நம்பிராசனது பெரிய மாளிகையின் வாயிலினிற்கின்ற ஒழுங்கினைத் தோழியும் பார்த்தனள். அப்போது, இங்கு நிற்கின்ற கோவே! உமது கருத்தென்ன என்று அவள் கேட்டனள். (ச)

எனதன்பிற்குரிய வள்ளியை இங்குக் கொண்டுவருக வென்று அன்பு மிக்க கடவுள் கழறியவுடன் அத்தோழியானவள், மண்ணவரும் விண்ணவரும் நம்பும்படி யான தயா சிந்துவாகிய வள்ளிமா தேவியோடு வந்து, "இவள் எங்கள் பெரும்பாக்கி யம். இப்பாக்கியத்தை நீர் காத்தருளக்கடவீர்" என்று கூறி அழகு விஞ்சு தன் தலைவியை அங்குவிட்டு அரண்மனைக்குட் சென்றாள். அப்போது எம்பெருமாட்டி,

மாலையணிந்த தன் நாயகனுடைய வலிய திருவடிகளை வணங்கிக் கண்ணீர்மல்க எழுந்து நின்றாள். (ரு)

எம் பரமபிதாவாகிய முருகவேள், நீர் சொரிகின்ற அக்கண்மலர்களைத் துடைத்து "என தன்புக்கடலே! கலக்கந்தவிர்: நாளைப்பொழுது இப்போதுற்ற மயக்கமெல்லாந் தீரும்: வாராய்" என்று அழைத்துப் பிராட்டியோடு ஒரு பூஞ்சோலையிலிருந்த பீடத்தின் மீதமர்ந்தனன். அப்போது எம் பரம மாதாவாகிய வள்ளிப்பிராட்டி "வெற்றி வேலுடையீர்! செவ்வண்ணம் மிகுந்த தேவரீரது திருமேனியைக் காட்டலாலுமே திருவுள்ள சங்கற்பத்தாலுமே என்னை யாட்கொள்ளல் தேவரீருக்குச் சாத்தியமாகுமே. வேறு முயற்சிகளை மேற்கொண்ட தென்னோ?" என்று வினவினள். (சு)

"மின்னலையொத்த இடையுடையாளே! குளிர்ந்த முல்லைமலரை யொத்த ஒள்ளிய தந்தபந்தியுடையாளே! நினது குற்றமற்ற கற்பின் வீரத்தை எல்லாப்படியாலும் உலகத்திற்குப் புலப்படுத்தினேன். உயிர்கட் குறுதிபயக்கும் என்னுடைய நல்ல திருவிளையாடல்கள் எண்ணில்லாதனவாம். அவற்றுள் நிகரற்ற குழந்தை யுருவங்கள் பல. மூப்புவடிவங்களும் அப்படியே பல. இப்பொழுது உனதெதிரிருக்கின்ற வடிவங் காளைப்பருவத்தைப் பொருந்துமாதலின் அது நின்முன் தோன்றிற்று. (எ)

வேதத்தின் சாகை (=பிரிவு) களும் என் உருவென்று விளக்க வேங்கைமரமாயினேன். மேற்சொன்ன காளைப்பருவ வடிவந்தான் பதினாறு பிராயமுடைக் குமாரத்திருவென்பது. இஃது உன் ஆர்வம் விரும்பிய காரணமாவது, திருமாலென்னும் பெயர்பொருந்திய என் மாமனளித்த சித்திரநிகர்த்த திருவாகிய நீ என்னைநாடிக் குற்றமொன்று மணுகாமல் இருமுறை தவங்கிடந்து என்னை மணம்புரிந்து கொள்க என்றதேயாம்" என்று இறைவன் கூறினன். (அ)

இவ்வாறு கூறி, ஒரு யோகாசாரியன் தன் சீடனது மாசகன்ற நெஞ்சிற் கலந்து உண்மையுணர்த்துஞ் சத்திபோல, பெருமானும் பிராட்டியின் உள்ளத்தில் அத்துவிதமாய்க் கலந்துநின்று அவளுடைய முன்னிலைமைகளைக் காட்டக்கண்ட அவளது ஞானகாந்தி பொருந்திய முகத்தை நோக்கிய அக் குமரநாதன், "மங்கையர்க்கரசியே! எனது இவ்வுருவமானது நின்னைநீத்து மற்றெம்மாதினோடு இங்கு நிகழ்ந்தனவற்றைச் செய்து உளமகிழ்ச்சி யெய்தும்?" என்றும் அன்புரை பகர்ந்தருளினன். (கூ)

பத்தி முத்தி பகருந் தமிழ்வேதத்தைப் பாடியருளிய அருணகிரி நாதனரை ஆண்டுகொண்ட சித்தனாகிய வேன்மயில் விமலன்றிருவடிகளைப் பிராட்டி, தொட்டு வணங்கி "அறிவிலியாகிய யான் என் வாக்காலும் மனத்தாலும் உம்மை நிந்தித் திகழ்ந்தேன்: அக்குற்றங்களைப் பொறுத்தருளல் வேண்டும்: இன்னமும் எனக்கு ஞானமோங்கும் பொருட்டு நீர் உபதேசிக்கு மெவற்றையுஞ் செவிக்கொள்ளப் பிரியத்தோடு சித்தமாயுள்ளேன்" என்றியம்பினள். (க0)

செழுஞ்சோலைத்திருவிளையாடன்
முதற்பத்து முற்றிற்று.

# செழுஞ்சோலைத்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மண்ணொடு விண்ணும் போற்ற மல்குமான் மகளை நோக்கி
எண்ணொடு விளிவு மில்லா விறைசொலும் வளைக்கை மானீ
கண்ணொடு பவள வாய்மெய் காட்டிவை குதலை யின்சொல்
பண்ணொடு கூடு நீயெற் பார்த்திகழ்ந் துரைத்த வெல்லாம். (க)

ஆதலாற் பிழையெண் ணேன்மற் றறைகுவல் கேட்டி யுன்முன்
மாதராண் முன்னு நின்றன் முன்னுமே மறுவில் காளைக்
காதலாய் நிற்கு நான்ருன் கவினுமை யேறார்ந் தோன்முன்
கோதணு வாறு சென்னிக் குழவியு மாகி நிற்பேன். (உ)

அரனெனு மொருவன் முன்னு மருந்தமிழ் முனிவன் முன்னும்
பரனவில் குரவ ஞன படியெனச் சீடர் முன்ஞன்
உரனுற நிற்பேன் கற்ற லோங்கவை தனிலே கல்வி
நிரனிகழ் கலைஞ ஞகி நிற்பனே யொட்ப நீட. (ந)

வெய்யபோர் முகத்தி லோவா வீரனாய் நிற்பே னீதிச்
செய்யகோ லோச்சு மாறு திருவமன் னவனாய் நிற்பேன்
கையரா காமா சித்தர் கணநடு வயங்கு வேற்கை
மெய்யனாய் நிற்பேன் வேத மந்திர வுருவாய் நிற்பேன். (ச)

உயிர்களை யியக்கு மாறவ் வுயிர்களி னிதய மாகக்
குயில்குகை யுள்ளே னண்ட கோடிக ளெனவா மைந்து
செயிரறு பூத மிந்து செங்கதி ருயிரெல் லாமென்
வயினுரு வாத லானுன் மன்னுதா ரகனு யுள்ளேன். (ரு)

பிருதிவி யாதி யைந்து பெரும்பொருட் கதிதே வாக
மருவய னரிதீ மேனி வளருருத் திரன்ம கேசன்
திருமலி சதாசி வன்செய் செயல்களென் ஞெழிலே யன்னோர்
இருதய நடுவண் யானே யேய்சிவ னுயு முள்ளேன். (சு)

கேடலா ராத கந்த கிரிகயி லாய மாதி
ஆடலா ரகங்க ளெங்கு மன்பருக் கருள்வா னுள்ளேன்
தேடலா ரடியார் முன்னே சிந்தைசெய் திறம்போ னிற்பேன்
ஏடலா ரிருக்கி னிற்பே னெனைச்சொல்வார் கவியி னிற்பேன். (எ)

---

எ. இருக்கு = வேதம்.

எனைமறந் தெனைவிட் டேசெய் யிருந்தவஞ் செபமற் றுள்ள
வினையறஞ் சமாதி ஞான மேம்படா வவைசெய் வாரென்
தனைவசஞ் செயுமோ ராற்றல் சார்கிலா ருழுவ லன்பால்
எனைவசஞ் செய்வார் முன்னின் றியம்புவே னிதய நிற்பேன். (அ)

என்றெரு சத்தி யாக விலங்குனைத் தொழுவா ரெல்லாம்
என்னரு ளுறுவோ ராவ ரெனக்கப ராதஞ் செய்யும்
முன்னமு ளார்கள் செய்கை பொறுப்பலென் முளரித் தாளை
முன்னடி யவர்க்காற் றேதம் பொறுத்திடேன் முனிந்து நிற்பேன். (கூ)

அம்முனி வினையே தாண்ட லமரர்க்கு மருந்த வஞ்சால்
எம்முனி வருக்கு மொல்லா தாகவி னெனையே நம்புஞ்
செம்முனி வோரைப் பேணுஞ் சீரியர்ப் புரப்பே னென்றுன்
வெம்முனி வில்லீர் செம்மால் வெற்பனு மவற்கே தொண்டன். (கo)

---

# செழுஞ்சோலைத்திருவிளையாடல்.

---

## (இரண்டாம்பத்து)

மண்ணுலகும் விண்ணுலகுந் துதிக்க விளங்கும் பிராட்டியைப் பார்த்து, அளவும் அந்தமுமில்லா ஆண்டவன் கூறுவான் :— "வளையலையணிந்த கைகளையுடைய மானியே! நீ யென்னைப்பார்த்துப் பழித்துப் பேசிய எல்லாம், கண்ணையும் பவளவாயையும் பிறவுறுப்புக்களையுங் காட்டிக்கொண்டு ஏசுங் குதலையின் சொல்லையும் நிறை நரம்புள்ள வீணையிற் பிறக்கும் பொருளொன்று மில்லா இன்னிசையையு மொக்கும். (க)

ஆகையால் அவற்றைப் பிழையாய்க் கொள்ளேன். இனிக் கூறுவதைக்கேள் : உன் மூத்தாளாகிய தேவசேனை முன்பும் உன் முன்பு மட்டுமே மாசறு காதற்காளை வடிவோடு நிற்கும் யானொருவன்றனே வனப்புடைய உமாதேவி முன்பும் பரமசிவன் முன்புங் குற்றமற்ற ஆறு சிரசுடைக் குழந்தையுமாகி நிற்பேன். (உ)

அரனென்னு மொருவன் முன்னும் அருமைவாய்ந்த அகத்திய முனிவன் முன்னும் பரம்பொருளை யுணர்த்தும் ஆசாரியனாய் நின்றபடியென்று சொல்லுமாறு சீடர்முன் ஞானசாரியனாய் நிற்பேன். கல்விமிக்க கழகத்திலே கல்விநிரல்கள் பிரகாசிக்கும் புலவனாய் அறிவு விஞ்ச நிற்பேன். (ந)

கொடிய போர்க்களத்திற் சோர்வறியா வீரனாய் நிற்பேன். நீதி பொருந்திய செங்கோல், உலகத்தில் நிகழுமாறு திருவுடை யரசனாய் நிற்பேன். கீழ்மக்க ளாகாத பெருஞ் சித்தர்கண மத்தியில் விளங்கும் வேற்கை மேனியனாகி நிற்பேன். அன்றியும் வேதமந்திர மூர்த்தியாயு நிற்பேன். (௪)

எல்லா வுயிர்களேயும் இயக்குதல் வேண்டி அவற்றின் இருதய குகையினுள்ளே குகனெனத் தங்கியுள்ளேன். பலகோடி யண்டங்களாய்ப் பரிணமித்துள்ள குற்றமற்ற பஞ்ச பூதங்களுஞ் சந்திரனுஞ் சூரியனும் ஆன்மாவுமாகிய எட்டும் எனக்கு அசித்துஞ் சித்துமான வடிவங்கள். ஆதலால் யான் நிலைபெற்ற சூக்குமப் பிரணவரூபியா யுள்ளேன். (ரு)

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்னும் ஐம்பெரும் பூதங்கட்கும் அதி தேவதைகளாக முறையே விளங்கும் பிரமன், விட்டுணு, அழல்வண்ணனுகிய உருத் திரன், மகேசன், பெருமைமிக்க சதாசிவன் ஆகிய இவர்கள் செய்யுஞ் சிருட்டி முதலிய தொழில்களெல்லாம் என் தொழில்களேயாம். இவர்கள் இருதய நடுவில் யானே பொருந்திய சிவனுய் விளங்குகின்றேன். (சு)

கேடும் இருளும் பொருந்தாத கந்தகிரி கயிலாயகிரி முதலிய என்னுடைய விளையாடல்கட்குரிய தானங்களிலெல்லாம் என்னடியார்கட் கனுக்கிரகஞ் செய்யும் பொருட்டு வீற்றிருக்கின்றேன். என்னைத் தேடுதல் பொருந்திய அடியார் முன்னே அவர் கருதும் வடிவங்கொண்டு நிற்பேன். கருத்துப்பொருந்து மந்திரங்களில் நிற் பேன். என்னைப் பழிச்சுவார் பாக்களினு நிற்பேன். (எ)

என்னை மறந்தும் என்னை நீக்கியுஞ் செய்யப்படும் பெரிய தபம், செபம், மற்றுமுள்ள தருமானுட்டானங்கள், சமாதிஞானம் என்னுமிவை யெவையும் சிறப் படையமாட்டா. அங்ஙனஞ் செய்வோர் என்னை வசப்படுத்துஞ் சக்திபெருர். விடாத அன்பினுல் என்னை வசப்படுத்திக் கொள்வார்முன் ஆசிரியனுய் நின்று மெய்ப்பொரு ளுணர்த்துவேன். அவரிதய கமலத்தை நீங்காமலும் விளங்கி நிற்பேன். (அ)

என்னொரு தேவியாக விளங்கு நின்னை வணங்குவோரெவரும் என்னருள் பெறு தற்குரியவராவர். எனக்கபராதஞ்செய்யு மெண்ணமுடையோர் செயல்களைப் பொறுப் பேன் (வேண்டப்படுமோயின்). ஆனல், என்னடிக் கமலங்களைத் தியானிக்கும் அடியவர்கட் கிழைக்கும் அபராதங்களைப் பொறேன்; முனிந்தே நிற்பேன். (கூ)

அம் முனிவைத் தடுத்தல் தேவர்கட்கும் அருந்தவமுடைய எந்த முனிவ ருக்கும் இயலாது. ஆதலின், என்னையே நம்புஞ் செம்மைவாய்ந்த முனிவர்களைப் பேணுஞ் சிறப்புடையோர்களை யான் பேணிக்கொள்வேன்'' என்று அருளிச் செய்தான். கொடிய கோபமெழாது தடுத்துள்ளீர்! அத்தகைய ஈசனுக்கே அருணகிரிநாதருந் தொண்ட ராயினர். (கО)

சேழுஞ்சோலைத்திருவிளையாடல்
இரண்டாம்பத்து முற்றிற்று.

# செழுஞ்சோலைத்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து)

**கலிநிலைத்துறை.**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**உ**லக நாயகி யாகிய தேவியொ டொருவன்
இலக லார்விண ளாஞ்செழுஞ் சோலையி லிலங்கும்
அலகி லாவழ கதுதரி சனைசெய்விண் ணவனுய்
நிலவி னுன்குண திசையினி லாயிர நிழலோன். (க)

**அ**ந்த ஞான்றிறை வனையிறை வியைச்சில வலரின்
கந்தம் வான்பனி யென்பன கலந்துழல் காற்று
வந்து மாமுழுக் காட்டுதல் செய்தது மலர்கால்
சிந்து சீகரப் பனிமழை தெளித்தசில் விணரே. (உ)

**தூ**பங் காட்டுந ரேய்ந்தசில் வெடிமணத் துணர்கள்
நீபம் போற்குளிர் தருதட நிலவரக் காம்பல்
கோபம் போற்செய்ய குவளையுங் கமலமுங் குறையாத்
தீபங் காட்டுந ரேய்ந்தன நிரைநிரை திகழ்ந்தே. (ங)

**சி**லத ருக்கள்பல் செழுங்கனி யிவர்முன ருதிர்த்தே
பலத ரச்சுவை யமிழ்துகள் படைக்குநர் நிகர்த்த
சிலத ருக்கள்பன் மலர்களைப் பலமுறை சிந்திப்
பலத ரத்திரு வருச்சனை பண்ணுந ரேய்ந்த. (ச)

**ம**ந்த மாருதஞ் சாதியென் மரத்துண ரசையா
அந்த மாகிய சாமர மிரட்டுவ தாயிற்
றிந்து போல்வளைந் திலையுதிர் கொன்றைக ளிவர்முன்
கொந்து நாவிரும் பொலங்குடை கவிக்குந ரேய்ந்த. (ரு)

**சா**கை நன்சுகம் பாடுவ சாகையொத் தனபூ
வாகை மந்திகண் முரலனல் வாச்சிய மேய்ந்த

---

ங. அரக்காம்பல் = செங்குமுதம்; இதன்முகை யென்க.
செய்ய குவளை = செங்குவளை. இது செங்கழுநீ ரெனவும்படும்.
செய்ய என்பதைக் 'கமலம்' என்பதனேடுங் கூட்டிச் செந்தாமரை யெனக் கொள்க.

ரு. வளைந்து = வட்டமாகி.

ஈகை விஞ்சருட் குரவர்க ளெனக்கிவ ரென்னுந்
தோகை யஞ்சிகி யெனநடித் தனசில தோகை. (சு)

இந்த வாறிவ ரிருவர்மு னனிநிக மேல்வை
அந்த வேடர்கள் வள்ளியெவ் வாறுசென் றுளென்
றுந்தி காடுகுன் றெங்கணு நேடியிவ் வொருகா
வந்து நோக்கியித் திருடனை வாட்டுது மென்றே. (எ)

போர்மு கச்சிலை குனித்துவெஞ் சரமழை பொழிந்தார்
நார்மு கத்தினள் வெருவுறல் கணித்தயி னுதன்
ஏர்மு கக்கொடி நுசிப்பிபல் லூழிக ளென்னோ
டோர்மு டக்குமின் றுய்குதி யஞ்சலென் றுரைத்தான். (அ)

பொழிசி லீமுக மழைகெட நிற்குமிப் புனிதன்
செழிய சேதுறு தன்கொடிச் சேவலை யழைத்தான்
ஒழிவு நாளிடி யெனவது கூவொலி யாலோர்ப்
பழிய மாய்ந்தனர் தலைவனொ டனைவரு மாலோ. (கூ)

தணிகை நின்றுள யாழ்முனி போந்திறை தாழ்ந்து
திணிகை வேலவ கருணைசெய் கென்றலுந் தேவி
அணிகொள் சீர்கொடு வேடரை யுயிர்த்தெழ வருளி
மணிகொள் பூணிறை நின்றன னருணையன் வகிரீர். (கO)

---

# செழுஞ்சோலைத்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து)

சருவலோக நாயகியாகிய வள்ளிமாதேவியோடு ஒப்பற்ற முதல்வன் விளக்க முடை விண்ணளாவிய செழுஞ்சோலையில் விளங்குகின்ற பேரழகைத் தரிசிக்குந் தேவனுய்க் கீழ்த்திசையிற் சூரியனுதயஞ் செய்தான். (க)

அச் சமயத்திற்,சில மலர்களின் மகரந்தப்பொடியையும் வானிலின்று துளிக்கும் பனியையுந் தன்னோடு கலந்துகொண்டசையுங் காற்றுனது வந்து பெருமானுக்கும் பிராட்டிக்கும் விசேட அபிடேகஞ் செய்தது. சில பூங்கொத்துக்கள், தம் அரும்புகளை யலர்த்துங்கால் அவற்றினின்று சிந்தும்படியான சிறு துளிகளை அவர்கண்மீது பனிநீராகத் தெளித்தன. (உ)

---

கO. அணிகொள் சீர் = 'யாவருமெழுதிர்' என்னுந் திருவாக்கு.

(அங்ஙனம்) வெடித்த வாசனையையுடைய சில பூக்கள் தூபமேந்துவோரை யொத்தன. கடப்பமலர்போற் குளிர்ச்சிபொருந்திய செங்குமுதமும், இந்திரகோபத்தை யொத்த செங்கழுநீரும், செந்தாமரையும் அணியணியாக விளங்கித் தத்தம் முகைகளைக்கொண்டு குறையாத் தீபங்காட்டுவோரை நிகர்த்து நின்றன. (ங)

சில மரங்கள் பல செழுங்கனிகளை இவர்கள் திருமுன்னே யுதிர்த்துப் பல்வகைச் சுவைபொருந்திய நிவேதனங்கள் படைப்போர்களை யொத்தன. வேறு சில மரங்கள் பலவகைப் பூக்களைப் பல முறையுஞ் சிந்திப் பலவிதத் திருவர்ச்சனை செய்வோரை நிகர்த்தன. (ச)

தென்றற்காற்றானது தேக்கமரத்தின் பூங்கொத்துக்களை யசைத்து அழகிய சாமர மிரட்டுவதாயிற்று. இலைகளை யுதிர்த்தியிட்ட கொன்றை மரங்கள் சந்திரனைப் போல வட்டமாகி, இவர்கள் திருமுன்னே பூங்கொத்துக்கள் தூங்கும் பெரிய பொற்குடைகள் கவிப்போர்களை யொத்தன. (ரு)

மரக்கிளைகளி லிருக்கின்ற நல்லகிளிகள் பாடும் பாட்டுக்கள் வேதமந்திரங்களைப் போன்றிருந்தன. பூவின் வாழும் அழகிய வண்டுகளின் ரீங்கார வோசையானது நல்ல வாத்தியங்களை யொத்திருந்தது. சில மயில்கள் இவர்களே எனக்கு வள்ளன்மை மிக்க அருட்குரவ ராவரென்று கூறுமொரு மயிலென (= குமாரபகவான் வாகனமென) நடனஞ் செய்தன. (சு)

இந்தவிதமான செயல்களெல்லாம் இறைவன் இறைவியென்னு மிருவர் திருமுன்பு நன்கு நடைபெற்ற சமயத்தில், நம்பிராசனும் அவனைச்சேர்ந்த வேடர்களும் வள்ளி எவ்வழிச் சென்றாளென்று நதியுங் காடும் மலையும் மற்றுள்ள இடங்களுந் தேடியலைந்து இவ்வொப்பற்ற பூஞ்சோலையை யடைந்து இருவரிருப்பையுங் கண்ணுற்று "இந்தத் திருடனை வாட்டுவோம்" என்று வஞ்சினங்கூறி,— (எ)

போர்செயற்குரிய வில்லை வளைத்துக் கொடிய பாணமழை சொரிந்தார்கள். தன்பா லன்புதிகழும் முகத்தையுடைய வள்ளிநாயகி அஞ்சுதலை வேலாயுதப்பெருமான் அளவிட்டு "அழகிய திருமுகத்தோடுங் கூடிய கொடியனைய மருங்கினளே! நீ பல்லூழி காலம் என்னோடெவ்வித இடையூறுமின்றி வாழக்கடவை: அஞ்சற்க" என்றாசீர் வதித்தருளினன். (அ)

வேடர்கள் பொழியும் பாணமழை தன்னை யணுகாது வீழ்ந்து கெடும்படி எதிர் நிற்கும் இந்த அமலன், செழுமையுடைச் சிவப்புப்பொருந்திய தனது கொடியில்வதியுஞ் சேவலை அழைத்தான். (ஆங்கு வந்த) அக்கோழி, யுகாந்தகாலத் திடியென்னும்படி கூவிய வோசையினால் நம்பிராசனும் அவனோடு வந்த வேடர்களனைவரும் மடிந்து போயினர். (கூ)

அருணகிரிநாத முனிவரது நெறியினிற்பீர்! அப்போழ்து தணிகைமலையிற் றங்கியிருந்த நாரதமுனிவர் அங்கு வந்து, இறைவனைப் பணிந்து, வலிய திருக்காத்தில்

வேற்படையுடைய ஈச! (இறந்துபட்ட இவர்கள்பாற்) கிருபை செலுத்த வேண்டுமென்று வேண்டுதல் செய்தவுடன் "யாவரும் எழுதிர்" என்னுந் தேவியினது திருவாக்கைக்கொண்டு அக்குன்றவரைப் பிழைத்தெழும்படி அனுக்கிரகித்து நவமணிப் பூணணிந்த நாயகன் நின்றனன். (௧௦)

சேழுஞ்சோலைத்திருவிளையாடன்
மூன்றும்பத்து முற்றிற்று.

---

## பதினேழாவது

# சீறூர்த்திருவிளையாடல்.

---

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

**வா**னவர் தலைவன் கருணையிற் றழுவு மானுட வடிவினை மறைத்தே
தேனமர் கடப்பந் தார்புயம் புரளச் செவ்வுரு மணமுகல் லொளியுங்
கானமும் விசும்பும் படரவெஃ கிலங்கக் கவின்சிறு முறுவல்செய் திருவா
ரூனனம் வயங்க நிமிர்ந்தனன் வேட ரனைவருங் கண்டிடு மாறே. (௧)

கண்டவர் பெரிதும் பன்முறை பணிந்து கட்புனல் சொரிந்தளி யாமின்
புண்டன ரவரு ணம்பியுள் ளுருகி யுழன்றுமண் மிசைவிழுந் தெழுந்தோர்
கொண்டவிர் பவள வாய்முக நோக்கிக் குலகுலைந் தஞ்சிநின் றெனையாள்
அண்டவென் றவனோற் றேனின பாத வலர்களைத் தரிசிக்க வினனே. (௨)

மானமிக் குடைய வனசரர் தொழுமா மல்கின னனைத்துல காளுந்
தானமிக் குடைய நினக்கொரு மகளீ தனிச்சிறப் புடையனு மானேன்
ஞானமிக் குடையாய் நான்பெறும் பேறிங் கார்பெறு வாரினி ஞால
நூனமிக் குடையார் குறைநவி லாதென் னுழைக்குடி மணந்துசெல் கென்றான். (௩)

**அ**வ்வுரைக் கிசைந்த கடவுள்சிற் றூரை யடைந்தன னடைதலும் புனவர்
எவ்வருங் கரையில் களிக்கடன் மூழ்கி யீண்டெழுந் தாரலங் கரித்தார்
செவ்விநன் கமைந்த தரக்குரி விரித்த திருமணப் பீடிகை தனிலே
நவ்வியின் மகளோ டறுமுகக் குமர நாதனு மமர்ந்தன னினிதே. (௪)

**அ**மர்ந்தவன் மண்மா தினைக்கடைக் கணித்த வளவையி லவளுரு மாறி
நிமிர்ந்தவிண் டுவினோர் மகளெனு மணங்காய் நிலவின ணம்பியு மவன்ற
சுமந்தரு வதன மனைவியுங் குமரன் றுணையடிப் பூசனை புரிந்தித்
தமந்தெறு மொளிப்பைங் கொடியைநிற் களித்தோ மென்றுதன் புனவினை விடுத்தார். (௫)

அப்புன வினையேற் றவன்மண மாலை யதையெடுத் திருபெருந் தவரீ
துப்புட னிழைத்த முறையின்மு னென்று தோன்றிய திதுபிறி தொன்றென்
றுப்புட னுவன்று சூட்டின னவளு முவகையொ டேற்றனண் முழவம்
உப்புரை யெனவங் கதிர்ந்தன வீணை யுறுவனென் மணவிதி முடித்தான். (சு)

திருமணங் காண்பான் விண்ணமர்ந் தவருட் சிவனுமை யாசிகள் புகன்றும்
மருமணப் போதன் விண்டுருத் திரன்மற் றுள்ளவிண் ணவர்மலர் சொரிந்தும்
உருமணங் காணு வணமறைந் தனரங் குற்றமின் கொடிகளு ளொருத்தி
பெருமணக் காளை யழகினை விழைந்தாள் பெரிதுமோர் தூண்மறை விருந்தே. (எ)

முயலிலா மதிவாண் முகமுமொண் முருந்தை முனிமுறு வலுமுடை யொருத்தி
அயலிலா வொளிசா லாடியை நேரின் றுகவைத் தெழின்முக நோக்குஞ்
செயலினு ளெனவா யதிற்றெரி குமரன் றிருவுரு வினைநனி பார்த்தாள்
கயலினீள் பலக ணெற்கிலை யிவர்சீர் கணிக்கவென் றெல்கின ளொருத்தி. (அ)

பலபருந் தேங்கா யுடைத்தலிற் பெருகு பனிப்புன லிடைக்குக னுருவிற்
குலவருங் காமர் நெடிதுகண் ணுறுமோர் கொள்கையி னின்றனண் மயில்போல்
இலகிருஞ் சாய லொருத்திதன் கணவ னெதிர்வரக் கண்டுதன் கரத்தால்
அலர்முகம் புதைத்து விரல்வழிச் சேர்ந்த னழகுகண் டனளொரு புதுப்பெண். (கூ)

எத்திற மதத்துந் தனக்கொரு தானே யிணையென வயங்குசெவ் வேளின்
சித்திர வடிவை நோக்குசின் மாதர் சிறுகுடி யாமிதிற் போந்தே
இத்திற மணந்தா னிவர்செய வள்ளி யெத்தவம் புரிந்திருந் தனளோ
அத்திற மறியோ மென்றன ரொவிப்பா வறைந்தவ னதர்விரும் புநரே. (கO)

---

## பதினேழாவது

# சீறூர்த்திருவிளையாடல்.

---

தேவதேவனுகிய செவ்வேள், தான் அருளாற்றுங்கிய மனிதவடிவத்தை மறைத்துத் தேன்பிலிற்றுங் கடப்பம்பூமாலை புயத்திற் புரள; தனது திவ்விய தேஜோமய வடிவின் தெய்வமணமுங் காந்தியும் அக்காடெங்கும் விண்ணெங்கும் பரவ; தனது வேலாயுதம் பிரகாசிக்க; அழகிய புன்முறுவல் பூத்த ஆறு திருமுகங்களுந் தோன்றி விளங்க; வேடரனைவருந் தரிசிக்கும்வண்ணம் பிரத்தியக்ஷமாய் நிமிர்ந்து நின்றனன். (க)

---

சு. முன்னென்று = காந்தருவ மணமாகவொன்று; இதுவுந் தெய்வீக இயக்கமாய் நிருவிகாரமாய் நிகழ்ந்ததென்க.

கO. மதம் = செருக்கு; தகரவேதுகை.

தரிசித்தோர் யாவரும் பன்முறை பெரிதும் வணங்கி ஆனந்தக்கண்ணீர் பொழிந்து இறைவனது அன்பாமின்பத்தை அனுபவித்தார்கள். அவருள் நம்பிராசன் உள்ளங் குழைவுற்றுப் பரவசனாகி நிலமீது வீழ்ந்தெழுந்து, அழகொடுவிளங்கும் பவள வாயோடுங் கூடிய திருமுகங்களை நோக்கிக் குலை குலைந்து அச்சத்தோ டெதிர்நின்று, "அடியேனை யாட்கொள்ளும் ஆண்டவனே! இப்போது நின் திருவடிக் கமலங்களை யான் தரிசித்தற்கு யானென்னதவஞ் செய்தனனோ? (உ)

இதுகாறும் மானம் மிகுந்துள்ள வேட்டுவர்கள் வணங்குமாறு ஒரு சிறப்புடைய வனாயிருந்தேன். இப்பொழுதோ எல்லா வுலகங்களையும் ஆளுஞ் சுவர்க்கத்தலங்கள் பலபடைத்த நினக்கு ஒரு கன்னிகையைத்தரும் ஒப்பற்ற பெருமையை யுடையனு மாயினேன். முழுதொருங்குண ரறிவுடையாய்! யான் பெற்றபேறு வேறிங்கே யார் பெறுவார்? இனி, உலகக் கட்டுப்பாட்டை மிகமதிக்குங் குறைபாடுடையார் பழிப்புக் கூறாதபடி, அடியேன் (இல்லமாகிய) சிறுகுடிக்கண்ணே என் திருமகளைத் திருமணம் புரிந்து சென்றருளுக" என்று வேண்டினன். (௩)

அவ்வேண்டுகோட் கிசைந்த செவ்வேட்பரமன் நம்பிராசனது சீறூரை யடைந் தான். அடைந்தவுடனே வேடரெல்லாரும் எல்லையில்லா இன்பக்கடலுண் மூழ்கிச் சீக்கிரமாகத் தம்முடைய ஊர்முழுவதையு மலங்கரித்தார்கள். அழகு பெரிதும் பொருந் திய புலித்தோல் விரித்த திருமணப் பீடிகைமீது மான்மகளோடு குமாரபிரானும் இனிது வீற்றிருந்தான். (௪)

இவ்வாறமர்ந்தவன், மணமகளைத் தன் கடைக்கண்ணாற் பார்த்த மாத்திரத்தே அவள் தன்மனிதவுருமாறித் திரிவிக்கிரமன் செல்வப்புதல்வி யென்னுந் தேவமாதாய்த் திகழ்ந்தனள். நம்பிராசனும் தாமரைப் பூப்போன்ற முகமுடைய அவன் மனைவியும் குமரவேளின் திருவடிகளைப் பூசித்து "இருள்கடிந் தொளிரும் இப்பைங்கொடியை நினக்குக் கொடுத்தோம்" என்று குளிர்ந்த நீரால் மனமொருமித்துத் தாரை வார்த்தனர். (௫)

அந்நீரைக் கையேற்ற கந்தன், தானணிந்துள்ள மணமாலையை யெடுத்து "நீ இரண்டு மாபெருந்தவங்களை மறுவின்றிச் செய்த முறைமையினால், (நினக்குமெனக் கும்) முன்னரொருமணம் நிகழ்ந்தது. இது (தேவமணமாக) மறுமுறை நிகழ்வதா யிற்று" என்று ஒப்புடைமையிற் றிருவாய்மலர்ந்து கூறிச் சூட்டினன். பிராட்டியும் அம்மாலையை மகிழ்ச்சியோ டேற்றனள். மங்கல வாத்தியங்கள் கடலொலியென முழங்கின. நாரதமுனிவர் தூய மணச்சடங்குகளை முடித்தார். (௬)

இத்திருமணத்தைக் காணும்பொருட்டு ஆகாயத்தே வந்திருந்தவர்களுள்ளே சிவ பெருமானும் உமாதேவியும் ஆசிகள் கூறியும், வாசனை பொருந்திய தாமரையாசனத் தின் மகிழ்வோடிருக்கும் பிரமனும் விட்டுணுவும் உருத்திரனும் மற்றுமுள்ள தேவர் களுங் கற்பகமலர்களைத் தூவியு நின்று பிறர் காணாதபடி அந்தர்த்தான மாயினார்கள். திருமணங் காணவந்திருந்த குறப்பெண்களுள் ஓரழகி, ஒரு தூண் மறைவிலே மறைந் திருந்து பெருமணக் கோலத்தோடுள்ள காளைக்குமரேசனது கட்டழகைப் பெரிதுங் காதலித்தாள். (எ)

மறுவற மதியென வொளிர் முகத்தையும் ஒள்ளிய மயிலிறகினடியை வென்ற பல்வரிசையையுமுடைய ஒரு பெண், தன்கண்ணே ஒளி பொருந்திய கண்ணுடியொன்றை ஒருபுறஞ் சாய்த்து வைத்துத் தன்னழகிய முகத்தைக் காண்பாள் போலாகி அதன்கட்டெரியுங் குமாரபெருமான் றிருவுருவத்தைக் கண்குளிரக் கண்டாள். மற்றொருத்தி, "இவரழகைக் காண்டற்குச் சேலொத்த நீண்ட கண்கள் எனக்கு இரண்டேயன்றிப் பலவில்லையே" என்று வருந்தினள். (அ)

மயில்போ லிலங்குஞ் சாயலையுடைய வொருமாது, பருத்த தேங்காய்கள் பல வுடைத்து அவ்வுடைத்தலினற் பெருக்கெடுத்தோடுங் குளிர்ந்த நீரிற்றோன்றிய குமர நாதனுருவப் பிரதிபிம்ப வாயிலாக அவனது விளக்கமுடைய அழகையுற்று நோக்குஞ் செய்கையிலிருந்தாள். சமீபதினத்தில் விவாகஞ் செய்யப்பட்ட மற்றொருபெண், தன் கணவனெதிரே வரக்கண்டு, நாணிக் கண்புதைப்பாள் போன்று தன் கைகளால் தாமரை மலரனைய தன் முகத்தைமூடி விரல்களி னிடைவழியே வெற்றிவேற் குமர னழகினைக் காண்பவளானாள். (கூ)

அருணகிரிநாதனர் காட்டிய வழியை நம்புவோரே! எவ்வகைச் செருக்கினும் இணையின்றி விளங்குஞ் செவ்வேளின் சித்திரவடிவை உற்று நோக்கிய சில பெண்கள், "இவர் நமது சிறுகுடியா மிவ்வூரிலெழுந்தருளி, இவ்வித மணங்கொண்டருளுதற்கு வள்ளி எவ்வகைத் தவஞ் செய்திருந்தாளோ? அவ்வகையை நாமறியோம்" என்று வியந்து மொழிந்தனர். (கo)

சீறூர்த்திருவிளையாடன் முற்றிற்று.

---

பதினெட்டாவது

# திருக்கந்தகிரித் திருவிளையாடல்.

## (முதற்பத்து)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

**இரண்டுசீர்வண்ணம்.**

குமர வேண்மண மகண றுந்துணர் கொள்க ரந்தொடல் செய்தெழுந்
தமரர் நாடொரு தணிகை யேகுவ லென்ற றைந்திட லுங்கிளர்
தமர்க ளோடொரு நம்பி தானெழ றந்து ஞானமி லாதநான்
சமர மாடிய தவறும் வேறுச மூக்கு மீசபொ றுத்தருள். (க)

வேத நாயக நவிர நாயக வேலி ணயக விந்துமா
நாத நாயக வள்ளி நாயக யானை நாயக நின்றிருப்
பாத மேயுயி ரடையு மின்பது பற்று நானுன டைக்கலம்
ஆத லாலெனை யிடைய ருவரு ளால்வி ழைந்துபு ரந்தருள். (உ)

என்று சேயவன் மரும லர்க்கழல் வீழ்ந்தெ ழுந்தன னெம்பிரான்
நன்று கூடுமெ னன்பி ருக்குமெ னப்ப கர்ந்தன னம்பிபின்
நின்ற யாயொடு தோழி தன்னைநெ ருங்கி நிற்பது ணர்ந்துநார்
ஒன்று மேயெனி ருக்கை வாழ்வுழி யுய்க்கு மென்றனனண் மானியே. (௩)

இந்நி கழ்ச்சியின் மீது மானியொ டெந்தை வானின்ம றைந்துதண்
செந்நி றக்குவ ளைத்த டங்கிரி சிங்க பீடம மர்ந்தனன்
அந்ந யத்திசை நாடி யஞ்சலி செய்து நின்றனர் குன்றவர்
பின்ன ரக்குக னெண்ணு மாறொரு பெருவி மானமுன் வந்ததே. (௪)

அதனி லற்புத வேளு நங்கையு மமர்த லுங்கக னத்திலஃ
துதய னைப்பவெ ழுந்த தங்கயி லுடைய வொன்பது வீரர்கள்
மதனி லக்கர்பல் பூத வீரர்கள் வந்தி றைஞ்சிவ ளைந்துபல்
கதலி சத்திரம் வட்ட மாதிய கணர்பி டிக்கந டந்தனர். (௫)

தேவ துந்துபி யாவும் வந்தடர் திசைந டுங்கமு ழங்கின
தேவ மண்டலர் தத்த மெல்லைதி ருத்தி யேயெதிர் கொண்டனர்
மாவ யங்குப லாயி ரஞ்சிகி வாக னங்கிளர் செங்கொடிச்
சேவ லங்குழு வந்தி ருங்களி திகழு மாறெதிர் சென்றன. (௬)

சீரி லங்கொரு வீர பாகுசி னங்கொ ளாவணம் விண்வழிக்
காரி யம்புரி வோர்க ளுட்சிலர் கந்த மால்வரை காறும்வான்
வேரி யந்துணர் தூவி னர்கள்வி மான நின்றது கந்தவேள்
நாரி நண்பொடி றங்கி னனவி லரிய சொர்க்கது வாரமுன். (௭)

திருமு தற்பல தேவ மங்கையர் தொடர வேதிகழ் யானைமுன்
வருகை யைத்திரு வள்ளி கண்டவ ளடிக டொட்டுவ ணங்கினள்
இரும லர்க்கர மணைய வன்னவ ளைத்த ழீஇயெ னைப்பிரிந்
தொருகு றக்கொடி யாயும் வந்தனை யுய்க வென்றனள் யானையும். (அ)

நவநி லாமணி யுஞ்ச லிற்குக நாதன் வைகியி டப்புறத்
துவணை யானையை வைத்து மற்றதி லுவகை மானினை வைத்துநற்
பவனம் வீசவ சைந்தி டுஞ்செயல் பார்க்க நின்றவ ருண்ணமன்
கவலன் மேயின னிருவ ருங்கன கருணை மஞ்சென வுள்கியே. (௯)

கந்த வைவரை யாதி மேனிலை காத்தி ருப்பவ ரந்நமன்
சிந்தை செய்தமை போன மக்கதி சிரம மெய்துமெ னவுளே
நொந்து ளொல்கின ருஞ்ச லாடனி றைந்த பின்பவ ரவர்நுழை
நந்த மெய்தினர் திருவ குப்பறை நாவ லன்கதி கருதுவீர். (௧௦)

---

௧௦. நத்தம் "நந்தம்" என எதுகைநோக்கி மெலிந்தது. நத்தம் = உறைவிடம்.

பதினெட்டாவது

# திருக்கந்தகிரித்திருவிளையாடல்.

(முதற்பத்து)

குமரவேள், வள்ளிப்பிராட்டியின் மணமலர்பற்றிய கரத்தைப்பிடித்தெழுந்து தேவர்விரும்புந் திருத்தணிகைமலைக்குச் செல்லுவேம் என்று கூறினவுடன், நிறைந்திருந்த சுற்றத்தார்களோடு சிறந்த நம்பிராசனெழுந்து நின்று "ஈசனே! அறிவிலியாகிய சிறியேன் நின்னோடு போர்செய்த பிழையையும் அறியாது செய்திருக்கக் கூடிய ஏனைய பிழைகளையும் பொறுத்தருளுக. (க)

வேதநாயகனே! மயிலிறைவனே! அயிலிறைவனே! மகா விந்து நாதங்களின் தலைவனே! வள்ளிநாயகனே! தெய்வயானை காதலனே! ஆன்மாக்களடையும் பேரின்பமாவது நின்றிருவடியேயாம். அதனையே பற்றியிருக்கும் அடியே னுன்னடைக்கலம். ஆதலால், தமியேனை நின் மாறுவருளால் அன்போடு காத்தளிப்பாயாக" (உ)

என்று செவ்வேளின் மணம்பொருந்திய திருவடிக் கமலங்களில் வீழ்ந்து பணிந்தெழுந்தனன். அங்ஙனம் எம்பெருமான், "நின்விருப்பமினிது நிறைவேறும்: நம் மன்பு நின்மாட்டென்று மிருக்கும்" என்று திருவாய்மலர்ந்தருளினன். பிராட்டி, நம்பியின் பின்புறமாக நின்ற தன்னைவளர்த்த தாயோடு தோழி தன்னை நெருங்கி நிற்பதையுணர்ந்து, "அன்பொன்றே என் உலகவாழ்வில் உங்களைச் சேர்க்கும்" என்று கூறியருளினாள். (ங)

இவை நிகழ்ந்த பின்னர், பிராட்டியோடு பெருமான் விண்ணிலுருக்கரந்து சென்று, குளிர்ந்த சிவந்த செங்கழுநீர்ப் பூமலருந் தணிகைத் தடவரையில் ஒரு சிங்காசனத்தமர்ந்தனன். நயப்பாடுடைய அத்திசையை நோக்கி வேடரனைவருங் கைகூப்பித்தொழுது நின்றார்கள். பின்பு குகேசன் கருதியாங்கு ஒரு பெரிய தேவவிமானமெதிர்வந்திறங்கியது. (ச)

அதில் அற்புத விக்கிரகமான செக்கர்வேளும் வள்ளிப்பிராட்டியும் ஆரோகணித்தவுடன் அது, சூரியனைப்போல விண்ணிலெழுந்தது. அவ்விடத்தே படைக்கலந்தாங்கிய நவவீரர்களும் வலிமை பொருந்திய இலக்கரும் பலபூதவீரர்களும் வந்து வணங்கிச் சூழநின்று, பலகொடிகள் குடைகள் ஆலவட்டம் தாலவட்டம் முதலிய விருதுகளைப் பூதகணங்கள் தாங்கிச்செல்ல வழி நடந்தார்கள். (ரு)

அந்தர துந்துபி யாவுந் திசைகள் செவிடுபட ஆர்த்தன. தேவ மண்டலங்களிலுள்ளோர் யாவரும் தங்கள் தங்கள் எல்லைகளை யலங்கரித்து எதிர்கொண்டார்கள்.

(சுப்பிரமணிய சாரூபகதி யடைந்தாருடைய) அழகு விளங்கும் பல்லாயிர மயில்வாக னங்களும் பொலிவுறத்தோன்றும் பல்லாயிரங் கொடிகளின் சேவற் கூட்டங்களும் பார்ப்பவர்க்குப் பெருங்களி திகழுமாறு எதிரே சென்றன. (சு)

சிறப்பு விஞ்சிய வீரபாகுதேவர் கோபங்கொள்ளக் காரணமில்லாதபடி ஆகாய மார்க்கத்திற் பணிபுரிவான் நியமிக்கப்பட்ட பெயர்களுட் சிலர், சிறந்த கந்தகிரிவரை யிலும் விண்ணுலகத்து வாசனை பொருந்திய அழகிய மலர்களை (மழையென) இறைத் தார்கள். விமானம் நின்றது. கந்தபிரான், நட்புடைப்பிராட்டியோடு சொல்லற்கரிய அச்சொர்க்கத்தின் வாயில் முன்பாக விமானத்தினின் றிறங்கினன். (எ)

இலக்குமி முதலிய பல தேவமாதர்களுந் தன்னைத் தொடர்ந்துவர விளங்குந் தேவகுஞ்சரி தனக்கு முன் வருவதைத் திருவுடைவள்ளி பார்த்து, அவள் திருவடி களைத் தொட்டுப் பணிந்தனள். தேவகுஞ்சரியும் தன்னுடைய இரண்டு மலர்க் கைகளானுந் தங்கையைத் தழுவி, "என்னை விட்டுப்பிரிந்து ஒரு குறப்பெண்ணாகியும் மீண்டும் என்பால் வந்தாய், நீ நெடிது வாழ்க" என்று ஆசி கூறியருளினள். (அ)

விளங்கு நவமணிகள் பதித்த பொன்னூஞ்சலிற் குகேசன் அமர்ந்து தன திடப்புறத்திலே தெய்வ யானையைவைத்து, வலப்புறத்தில் வள்ளி மானையிருத்தி, நல்ல காற்று வீசும்படி ஊஞ்சலாடு நிகழ்ச்சியைத் தரிசிக்க நின்றவருள்ளே யமதருமன், அத் தேவிமாரிருவருங் கருணைமேகங்களா யுள்ளாரென்பதை யுணர்ந்து (தன்றொழிலுக் கிடையூறு வருமெனக்) கவலைகொள்ள லாயினன். (கூ)

திருவகுப்பை யருளிச்செய்த தெய்வப் பெரும்புலவ ரடைந்த கதியைக்கருது வோர்களே! அழகிய கந்தகிரிமுதலிய மகா சுவர்க்கங்களைக் காத்தல் செய்வோ ரெல்லாரும் அந்த யமன் சிந்தித்தமைபோலவே (இனி எண்ணில்லாத பெயர்கள் அவ னுலகு புகாது நம்முலகு புகுவராதலின்) நமக்கதிக வேலை யேற்படு மென்றெண்ணி உளநொந்து வாடினர். ஊஞ்சலாட்டம் முடிந்தபின்னர் யாவருந் தத்த முறைவிட மெய்தினர். (௧0)

திருக்கந்தகிரித்திருவிளையாடன்

முதற்பத்து முற்றிற்று.

# திருக்கந்தகிரித்திருவிளையாடல்.

---

## (இ ர ண் டா ம் ப த் து)

### கலிவிருத்தம். (இசை)

### அடியொன்றற்குப்பதின்மூன்றக்கரம்.

### இரண்டுசீர்வண்ணம்.

சருவ வண்டமுந் தன்னுரு மன்னநிலாம்
ஒருவ னந்தவில் கந்தவொள் ளோங்கன்மணித்
திருவ ணங்குறு கோயிலிற் றெய்வமகள்
இருவ ரும்புடை வைகவி லங்கியசீர். (க)

தவள சேடனுந் தண்மலர் நான்முகனும்
நவிலொ ணாதவி ருங்குண நவ்விகளார்
பவள பூதரம் பொன்வரை பைங்கிரியாற்
கவினி யேநடு நிற்றல்க டுத்ததரோ. (உ)

பதினெண் கட்பெரி யான்றிரு மெய்பனிரண்
டுதய ருட்கவி ளங்குகு ழைச்செவியும்
வதன புட்கர மாறும்வ யங்கினபூண்
எதுவு மட்டினி லங்கின தேவிகண்மெய். (ங)

இனைய வாறுதன் சத்திக ளாலினிதே
தனைய ருவெழில் செய்தச தாசிவவேள்
எனைய வாமமு தீரருட் கோலமிது
நினையி னோகைக ணீடுமென் றோதினனால். (ச)

அரிய விப்பெருங் காட்சிமுன் னங்கலைமா
துரிய நற்கலன் மீட்டியு மாசுதனே
பெரிய வித்தகர் சித்தருள் ளேபெரியார்
தெரிய நச்சுநர் நின்றனை யேதெரிவார். (ரு)

### அடியொன்றற்குப்பன்னீரக்கரம்.

ஈச தேசிலி ளந்திரு விற்றலைமை
பேச வேபிறி தின்றுனை யன்றிநின்மா
நேச தேவிகள் பக்கமு மந்நிலையாம்
மாச ணாதவுன் மைந்தைவென் மைந்துமிலை. (சு)

வேதன் யாக்கைமெ லிந்துய்ய வெஞ்சிறைசெய்
நீத னூர்க்குணை னீயல தேவர்கொலோ
ஓதல் கேட்டலி லாதினி தோம்பொருளே
ஓத மாக்குரு வுண்டுகொ லோபிறருள். (எ)

பம்புன் வேலினு மிக்கப டைக்கலமின்
றும்பர் தார்களு ளிந்துள மொப்பதுமின்
றம்ப ராவுவை யங்களு ணீயவியால்
நம்பு மாமயில் போல்வதின் றேநயனல். (அ)

வன்ப தாகையுட் கோழியின் மல்குவதின்
றன்ப தார்வவு வப்பினு யர்ந்ததுமின்
றென்ப தாரமு தோர்தவ ரென்பவர்பேண்
இன்ப தாமென வேமறை கூறிடுமே. (கூ)

ஆக விற்சுர ராதிபன் மூன்றுடனேந்
தாக வத்தர்க ளோதுக ணம்பணிதே
நீக ளித்தரு ணீட்டெனப் பாடினளே
மோக ழித்தனு பூதிசொன் னேன்முறையீர். (கய)

---

# திருக்கந்தகிரித்திருவிளையாடல்.

## (இரண்டாம்பத்து)

எல்லா அண்டங்களுந் தன்றிருவுருவத்தின் கண்ணே நிலைபெற்றிருக்க விளங்கும் ஒப்பற்ற கந்தவேள், அழிவில்லாத தூய்மையுடைக் கந்தகிரியிலே திருவும் வணங்கும்படியான இரத்தினாலயத்திலே தெய்வ மகளிராகிய தேவிமாரிருவருமிருமருங்கினுமிருக்க விளங்கிய சிறப்பானது,— (க)

வெண்ணிறத்து ஆதிசேடனுந் தண்ணிய கமலாசனப் பிரமதேவனும் வருணித்தற்கொண்ணாத ஈசுரப்பிரபாவகுண எழிலார்ந்த பவளமலையொன்று பொன்மலையாலும் மரகதமலையாலும் அதியழகுபெற்று அவற்றின் நடுவே நிற்பதை யொத்திருந்தது. (உ)

பதினெட்டுக் கண்ணுடைய பரமனின் திருமேனியிற் பன்னிரு சூரியரு நாணும்படி பிரகாசிக்குங் குண்டலங்களுடைப் பன்னிரு செவிகளும், திருமுகத்தாமரையோராறும் விளங்கின. தேவிகள் திருமேனிகளிற் பூண்ட ஒவ்வொன்றுந் தத்தமளவையினால் மிளிர்ந்தன.

['தேவிகண் மெய்பூண் எதுவும் மட்டினிலங்கின' எனக்கூட்டித் தேவிகள் திருமேனிகளிற் பூண்ட ஒவ்வொன்றுந் தத்தமளவையினுல் மிளிர்ந்தன என்னும் பொருள் கொள்ளப்பட்டது.] (௩)

இவ்வாறு தன்னிரு சத்திகளாற் பெரிதுந் தன்னை விட்டு நீங்கா அழகு செய்து கொண்ட சதாசிவனுகிய வேள், "என்னைக் காதலிக்குந் தேவர்காள்! இப்படியானிருத்தல் திருவருட் கோலமாகும். இதை நினைப்போர்க்கு இன்பங்கள் பெருகும்" என்று கூறியருளினன். (௪)

அருமைவாய்ந்த இப்பெருங்காட்சியின் முன்பு அழகிய கலைவாணி, தனது நல்ல விபஞ்சியை மீட்டி "உமை மைந்தனே! பெரிய ஞானிகளுள்ளுஞ் சித்தர்களுள்ளுஞ் சிறந்தவரைத் தெரிய விரும்புவோர் நின்னையே அன்னவராக அறிவர். (௫)

ஈச தேசசிலும் இளமைத்திருவிலுந் தலைமைகூறுதற் கேற்புடைப் பொருள் நின்னையன்றி வேறொன்றுமில்லை. நினது அன்பார்ந்த பெருமைத்தேவிமார் பக்ஷத்திலும் இதுவேயுண்மையாம். மாசுபொருந்தாத நினது வலிமையை வெல்லவல்ல வலிமையுமில்லை. (௬)

பிரமாவினுடம்பு மெலிந்து உய்திபெறும்படி சிறைசெய்யு நீதிமானுந் தயாளுவும் நீயேயன்றிப் பிறர் யாவர்? கற்றலுங் கேட்டலுமில்லாமலே பிரணவப்பொருளை நன்கெடுத்துரைக்கப் பரமாசாரியன் (நின்னையன்றிப்) பிறருள் ஒருவருண்டோ? (௭)

யாண்டும் பிரகாசிக்கத்தக்க நின் வேலாயுதத்தினுஞ் சிறந்த ஓராயுத மில்லை. தேவரணியும் மாலைகளுள் நினது கடப்பமலர் மாலையை நிகர்ப்பதுமில்லை. அழகு பெருகிய வாகனங்களுள்ளே நீ அருளோடு விரும்பும் பெரிய மயில்போல்வது உண்மையில் இல்லை. (௮)

வலிய கொடிகளுள் நின் கோழிக்கொடியைவிடச் சிறந்துளதில்லை. நின் திருவடியன்பினுல் விளையு மின்பத்தினுஞ் சிறந்த இன்பமு மில்லையென்று யான் சொல்லுவது அருமையான தேவரும் முனிவரும் பேணிக்கொள்ளு மின்பமாமென்று வேதங் கூறும். (௯)

ஆதலால், பெரியோர் சிறப்பித்துக்கூறுந் தேவர்முதலிய பதினெண்கணங்களும் பணியுந்தெய்வம் நீ; திருவுளம் மகிழ்ந்து எனக்கருள் தருவாயாக" என்று பாடினள்; உலக மோகத்தை யொழித்துக் கந்தானுபூதி பாடிய முனிவர தொழுக்கத்தையுடையீர்!

[பதினெண் கணங்களாவன:— அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர் என்பன.] (௧௦)

திருக்கந்தகிரித்திருவிளையாடல்
இரண்டாம்பத்து முற்றிற்று.

# திருக்கந்தகிரித்திருவிளையாடல்.

## (மூன்றும்பத்து)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

### சதாக்கரம். (நூறெழுத்து)

### இரண்டுசீர்வண்ணம்.

மானென மயிலெனத் திகழ்மட மறிமகண் மனத்தெழும் விருப்பினை யோர்ந்த
தேனெனு மளியரி விழுகடம் பணிசிவன் றிருநிலை யவளொடுங் கோடி
மீனெனு மொளிகளின் பதியெனச் சுடர்குக விலங்கலின் வளங்களைக் காண்பான்
வானெனு மிருமைகொள் குணங்களுண் மறைவரு வயங்குற வெழுந்தன னோர்நாள். (க)

பல்பெரும் பொருளழி பொழுதும்விஞ் சொருதிறம் படைத்தவம் மலைக்குகைச் சேர்வும்
பல்பெருஞ் செழுமணி யழுத்திய தமனியப் பணையெயில் வளைவுமக் காப்பிற்
பல்பெரும் பரிகமு மிரணிய சிகரிபற் பலவுநற் றெருக்களி னேரும்
பல்பெருந் திருமணி வசதிகள் வரிசையும் படரறு முனிவரர் சாரும். (உ)

மாவிய னுறும்பத மிதன்மிசை யிலையென வருடுயர் சிகரியங் கேதும்
ஓவியம் வரைந்துள படிகமண் டபங்களு மொளிர்மர கதத்துகிர்த் தூணம்
மேவிய பெருஞ்சபை களுங்குக சரிதைகள் விளக்குசித் திரப்பெரு வீடுங்
தூவிரை சுருங்கலி லலரிமண் டபமெழு துகளறு வசந்தமென் காலும். (ங)

மாயிரும் புவிபுகழ் திருவுரு வடைந்தகு மரத்திரு வரரரி பீடம்
ஆயிரங் கிரணமென் கரங்கொடு குகனம ரரியணை யினைத்தொழு நேருஞ்
சேயருந் தமனிய மணிரதஞ் சிவிகைவி சிறிகணித் திலக்குடை யாதி
தூயலங் கிருதவி ருதணையில் லமுமுருத் துரைகளின் மயில்கொடிப் புள்ளும். (ச)

பொற்குழ லொலிகளுங் கலமுனி யினியதும் புருமுத வியரிசைப் பாட்டும்
நற்கலை யுணர்முனி கணம்புக லயிலிறை நறுந்துதி களுந்திசை யாவுஞ்
செற்குல மெனமுழ வினந்தரு குமுறல்கள் சிலம்பின னுறங்குத னீத்த
அற்புத மதைமரு வியல்புமவ் வருட்குண மவிர்திருத் தொடிக்கொடி கண்டாள். (ரு)

---

க. தேன் எனும் அளி = தேனென்று சொல்லப்படும் வண்டு; தேன் = பெண் வண்டு. "கரும்புளே கேச வங்தேன் கண்டபெண் வண்டி னுமம்" என்றனர் சூடாமணி நிகண்டினரும். அரி = வண்டு. இதனை ஆண்வண்டெனக் கொள்க.

உ. பரிகம் = மதிலுண்மேடை = கொத்தளம்.

சீர்மலர் குகனடி மலர்களை யருச்சனை செயவிரு தயமலர் மாலால்
நீர்மலர் கொடிமலர் நிலமலர் கவைகளி னிழன்மலர் கரமல ராலே
ஏர்மலர் வுறவினி தெடுத்தியங் கமலரு மிணையறு சடக்கர மோதிச்
சூர்மலர் வினைவலி யறுத்தநின் மலர்களுஞ் சுகஞ்சுடர் விரதர்கு ழாமும். (சு)

சேர்குலந் தொழிலுடல் கருதலின் றழகுறு சிவவியஞ் சனங்கரு தோர்ப்பால்
நார்கொளுங் குகனடி யவரையக் குகனென நனிதொழு துபசரிப் பாற்றுச்
சூர்மலங் கெழுபிறப் பறுத்தசெல் வருமிளந் துரையடி யிதயம்வைத் தோரும்
போர்விழுஞ் செயலினி லுகளமொன் றிரண்டெனப் புகறல்கொன் றறியறி வோரும். (எ)

நச்சுநர் நுகர்வுறு மடிசில்கள் கறிகணன் பிரசமின் புனன்முத லுன்காம்
உச்சித வுணவுநல் விரைதரு களபமு முறுசெவிக் கினியபல் பாணும்
வச்சிர முதலிய மணியணி யுடைதொடை வகைகளுங் கவலையொன் றில்லா
நிச்சய ருவகையு மறியெனத் தனிமுத னிமலியு மவைநனி கண்டாள். (அ)

நம்மருள் பரசிய கவிஞர்க ளிவர்நமை நனியுணர்த் தியகுரு வோடே
அம்மரு வளிகெழு சுதர்களுந் தொகைதொகை யமர்ந்தவ ரிவரவர் செவ்வேள்
எம்மதி யுளுமிவை யுளுமிருந் துளனெனு மியவையிற் சுசித்தவை துய்த்தல்
இம்மகி யெவையுமன் னவனெனக் கொளலெனு மிரண்டினு முயர்ந்தவ ரின்னோர். ()

சேயவ னலதொரு கடவுளின் றெமக்கெனுந் தெளிவினன் னயப்பெரும் பூசை
மேயவ ரிவர்மனை முதற்பல பொருணசை விடுத்துநம் மருட்டுணை நாளுந்
தூயக நிறுவின ரிணையர்க ளெனக்குகன் சுடர்த்தொடி பெருங்களி கூர்ந்தாள்
மாயவு லகைவிடல் புரிந்தரும் புகழ்சொன மதியின னெறிவிழை நெஞ்சீர். (கo)

---

# திருக்கந்தகிரித்திருவிளையாடல்.

## (மூன்றும் பத்து)

மான்போலவும் மயில்போலவும் விளங்கும் இளமைதங்கிய வள்ளிநாயகியின் உள்ளத்தெழுந்த விருப்பத்தை யுணர்ந்த பெண் ஆணென்னும் வண்டினங்கள் வீழப்பெற்ற கடப்பமலர் மாலையணிந்த அறுமுகச் சிவன், கோடி சந்திரர்களெனப் பிரகாசிக்குங் கந்தகிரியின் வளப்பங்களைக் காணும் பொருட்டுத் திருவினுக்குறைவிடமாகிய அந்நாயகியோடும் ஒருநாள் தனது மகத்துவமென்னும் பெருமை பொருந்திய எண் குணங்களுள் (விசுத்ததேகமு முண்மையாற் பிறர்காணுதபடி தன்னைப்போலவே நாயகிக்கும்) இரகசியத்திருமேனி விளங்கப் புறப்பட்டனன். (க)

பலவகைப்பட்ட பௌதிகப் பொருள்கள் நாசமுறும் பிரளயகாலத்தும் மேன்மேலோங்கி நிற்குந் திறமை வாய்ந்த அக்கந்தகிரியின் குகையிருக்கைகளையும், பல

---

சு. எடுத்தியங்கமலரும் - எடுத்து இயங்கு அமலரும் எனப்பிரிக்க.

எ. உகளம் - யுகளமென்பதன் விகாரம்; இரட்டையெனும் பொருண்மைத்து.

பெருஞ் செழுமையுடைய இரத்தினங்கள் பதித்த பெருத்த பொன் அரண்களின் வளைவுகளையும், அவ்வரண்களிற் பொருந்திய பல பெரிய கொத்தளங்களையும், பொற் கோபுரங்கள் பற்பலவற்றையும், நல்ல வீதிகளி னொழுங்குகளையும், அவற்றிலுள்ள அனேக பெரிய நவமணி மாளிகைகளின் வரிசைகளையும், துன்பந் துடைத்த முனிவரர்க ளிருக்கைகளையும்,— (உ)

பெருஞ்சிறப்புடைய இக்கந்தகிரிக்கு மேலாக யாதொரு பதமு மில்லையென்று ஆகாயத்தைத் தடவிப் புலப்படுத்தும் படியான கோபுரத்திற் கட்டிய கொடிகளையும், சித்திரங்க ளெழுதப் பெற்றுள்ள படிக மண்டபங்களையும், ஒளி வீசுகின்ற மரகதத் தூண்களும் பவளத் தூண்களும் பொருந்திய பெருஞ் சபாமண்டபங்களையும், குகபிரானுடைய மெய்த்திருவிளையாடல்களை விளக்குகின்ற பெரிய சித்திர மண்டபங்களையும், சுத்தவாசனை மாருத புஷ்ப மண்டபத்தையும், அதினின்று புறப்படுங் குற்றமற்ற மந்த மாருதத்தையும்,— (ங)

மிகப்பெரிய உலகமெல்லாம் புகழும்படியான திவ்விய சாரூபத்தையடைந்த குமரக் கோலத்தினர் வீற்றிருக்குஞ் சிங்காசனங்கள் வீசும் ஆயிரங் கிரணங்களென்னுங் கரங்களாற் சாக்ஷாத் சுப்பிரமணியமே அமர்ந்தருளும் உயரிடத்துள்ள சிங்காசனத்தைத் தொழுகின்ற நேர்மையினையும், மாற்றுயர்ந்த செழும் பொன்னானும் மணியானுமாகிய மணிரதம் முதலிய தேர்கள் சிவிகைகள் சிற்றாலவட்டங்கள் முத்துக் குடைகள் முதலிய சுத்தமான அலங்கார விருதுக ளணைந்துள்ள விடுதிகளையும், சேய்ப்பரம சாரூபம் பெற்ற வேலேந்திய அபர சுப்பிரமணியர்களுடைய வாகனங்களாகிய மயில்களையும், கொடிகளாகிய சேவல்களையும்,— (ச)

பொற்குழ லொலிகளையும், நாரதர் தும்புரு முதலியோருடைய இன்னிசைப் பாட்டுக்களையும், நல்ல சாத்திரங்களை யுணர்ந்த முனிவரர் கூட்டங்கள் செய்யும் நல்ல குமார தோத்திரங்களையும், இடிக் கூட்டம்போல வாத்தியவகைகள் செய்யு முழக்கங்கள் மலைகடோறுந் திருக்கோவில்கொள் வடிவேற் கடவுள் உறக்க நீத்திருக்கின்ற அற்புதத்தை (= ஓய்வின்றி யொலித்துக் கொண்டிருத்தலை) ப்பொருந்தியுள்ள இயல்பையும் அருட்குணம் விளங்காநின்ற வள்ளிமாதேவி கண்ணுற்றனள். (ரு)

தமது இருதயகமலப்பூவி லெழுமன்பினாற் சிறப்பு மலிந்த குகனடிக் கமலப் பூக்களை யருச்சனை செய்யும்பொருட்டு நீர்ப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, குளிர்ந்த கோட்டுப்பூ என்னு நால்வகைப் பூக்களையுங் கரமாகிய பூக்களால் அழகுமலரச் செவ்வனே யெடுத்துச் செல்கின்ற பரிசுத்தவான்களையும், தன்னேரில்லாச் சடக்கர மகா மந்திரத்தைச் செபித்துத் துன்பங் கிளைக்கும் வினைவலி தொலைத்த தூயவர்களையும், இன்பம் விளங்கு தபமுடையார் கூட்டத்தையும்,— (சு)

பிறந்தகுலம், தொழில், உடலமைப்பு என்பவற்றைக் கருதாது அழகிய சிவவேட மொன்றனையே பொருளாய்க்கொள்ளுந் தீர்மானத்தினால் அன்புடைக் குகனடியார்களை அக்குகனெனவே மனமார வணங்கிச் சோடசோபசாரமுஞ் செய்து துன்பந்தரு மும்மலவலியான் மல்கு பிறப்பையறுத்த செல்வர்களையும், இளம்பூரணன் றிருவடிகளைத் தம் இதயத்தகலாது வைத்துள்ளோர்களையும், யுத்தஞ் செய்வார் செயல் போன்று சமயவாதிகள் வஸ்து, அத்துவிதமென்றும், ஏகமென்றும், துவிதமென்றுங் கட்

டுரைத்தலை யழித்து (வாதமுஞ் சமயபேதமுங் கடந்த) பொருளை உள்ளவா றறிந்தவர்களையும்,— (எ)

விரும்புவோர் துய்க்கின்ற (உண்டற்குரிய) அடிசில்கள் (தின்றற்குரிய) கறிகள் (நக்கற்குரிய) தேன் வகைகள் (பருகற்குரிய) நீர் முதலியவைகளாம் நால்வகைச் சிறந்த வுண்டியையும், நறுமணந்தரு களபத்தையும், செவிக்கேற்புடை இனிய பல்வகை யிசைகளையும், வயிரம் முதலிய நவரத்தினாபரணங்களையும், ஆடைகளையும், மாலை வருக்கங்களையும், நம்மீது வைத்த திடபத்தியினாற் கவலை சிறிதுமில்லா வொரு நிச்சயங் கொண்டுள்ளோர் களிப்பையும் இங்குக் காண்பாயாக என்று குகப்பிரமங் கூற; பிராட்டியும் அவற்றை நன்கு கண்டனள். (அ)

இவர்கள், நம்மருளைத் துதித்த புலவர்களாவர். குழாங்குழாமா யமர்ந்துள்ள இவர்களும், அவர்களும், நம்மை யுள்ளபடி யுணர்த்திய ஆசிரியர்களோடு அழகு பொருந்திய அன்பு பெருக்கும் (சீடர்களென்னும்) புதல்வர்களுமாயுள்ளார். இவர்கள், குகன் எம்மறிவாகிய ஆன்மாவினுள்ளும் இங்குக் காணப்படும் எல்லாப் பொருள்களினுள்ளும் அமர்ந்துள்ளானென்னும் பொருத்தத்தால் அவற்றைச் சுத்திசெய்து அனுபவித்தலும், சொரூப நிறைவினால் இப்புவனமெல்லாமும் அவனேயாகின்றனனென்று கொள்ளுதலும் என்னு மிரண்டு கோட்பாட்டினு முயர்ந்துள்ளோ ராவர். (கூ)

இவர்கள், குமாரனையன்றிப் பிறிதொரு கடவுளெமக்கில்லை யென்னுந் தெளிவினால் நல்ல நயப்பாடுடைப் பெரும் பூசனையை மேற்கொண்டவர்கள். இவர்கள், மனைவி முதலிய எல்லாப் பொருள்களினும் வைத்த ஆசையைத் துறந்து நம்மருட்டுணையையே எந்நாளுந் தமது பரிசுத்தமான இதயத்தில் நாட்டியுள்ளோர்கள் என்று இறைவனியம்ப; இறைவி, முன்னினுமதிகமான மகிழ்ச்சியெய்தினள்; மாயவுலகைத் துறந்து திருப்புகழ்பாடிய அருணகிரியார் நெறியை விரும்பு முள்ளமுடையீர்! (க0)

திருக்கந்தகிரித்திருவிளையாடன்
மூன்றும்பத்து முற்றிற்று.

---

# திருக்கந்தகிரித்திருவிளையாடல்.

## (நான்காம்பத்து)

கலிநிலைத்துறை.

அமுத வாவியுங் கனகச ரோசவம் மடுவுங்
குமுத நீர்நிலை கலுமலங் குளையெழில் கூர்ந்த
சுமுக வாசிக டகர்த்ததெங் கிரும்பழத் தோயங்
கமுகி னீரளற் பிறந்திடு சேயபங் கயமும்.. (க)

---

க. அள்ளல் = சேறு; "அளல்" எனத்தொகுத்தல் விகாரப்பட்டது.

மாசி லாயிர மிதழ்ப்பெருந் தாமரை மலரும்
ஆசி லாவகல் கோட்டகங் களுமவை யணைந்து
காசி லாதபல் சுழியெழ யாறுசெல் கதியுந்
தேசி ளுமர கதக்குவ டேய்மரச் செறிவும். (உ)

விண்ண ளாயவச் சோலையிற் பலதரு மேன்மேல்
நண்ணு மாளிகை யடுக்கெனத் திகழ்தலு நபமே
கண்ணு ருவணம் புரிபல குடைமரக் கவிப்பும்
எண்ணி லாநிறத் திலைமல ரீதரு வெழிலும். (௩)

காறி லாச்சுவைக் கனிமர மீயொரு கனியில்
ஆற ருச்சுவை யடிநடு மேலுறு மாறும்
ஈறு ருக்கிளி யினமறை பாடிய லுமதைத்
தேறு மாட்சிமந் தாரமுப் பூவையின் றிரளும். (௪)

கந்த லோகெனு மீங்கடர் காவுறை குயின்முன்
வந்த வாசவன் காக்குயில் பயிர்பழ குறலும்
நொந்தி டாமுகி ழேக்கிவிண் ணொளியினை நோக்கி
அந்த வாட்டொலி செய்சிகி குருகின மனைத்தும். (ரு)

தோடம் யாதுமில் கோடையின் மதுவிழை சுரும்பர்
ஈட ருதவிந் துளநற வினையினி தெடுத்துச்
சேட ருநறுந் தேனினுக் கூட்டுபு செனித்த
ஊட நீர்த்தலும் பார்த்தன ளவ்வுயர் வுடையாள். (சு)

மானெ டுங்கட லெகினமக் கடலென மயங்கிப்
பானி றந்திக ழினங்கண்டு நடைபழ குறலும்
வான றுங்கன சாரவம் பதரென வயங்கும்
வான யஞ்சுடர் புளினமுஞ் சமநிலை வளனும். (எ)

மடங்கல் யானைகள் புலிபசு மடமறி மான்கள்
திடங்கொ ளர்வைக ளரவுகள் பகைமைசெய் யாமே
உடங்கு கூடியங் கிளம்பெரு மானையுள் ளிருத்தி
முடங்க னுறிய முனிவரன் பார்ந்துயு மூப்பும். (அ)

சோதி மாமணிச் சிலம்புக ளரற்றவொண் டொடியின்
சாதி பேதம ரவஞ்செயத் துவளிடை தயங்கக்

---

ரு. பயிர் = பறவைக்குரல்.

எ. வம்பதர் = வாசனைப்பொடி; வம்பு + அதர் எனப் பிரித்துக்கொள்க.

கோதி லாவிறை வியினுருக் கோதையர் குவிபங்
தாதி வீசிநல் லாடல்செய் யரிநெடுங் தடமும். (கூ)

மாசின் மாதவர் தவப்பயன் போற்பல வளமுந்
தாசர் நாயக னெடுமிளி ரெனக்கரு டாய்கண்
டேசன் மாமணி மாளிகை யெய்தின னுவகைத்
தேசு லாமணங் குகடொழ வொலிப்புதன் றெருளீர். (கo)

# திருக்கந்தகிரித்திருவிளையாடல்.

## (நான்காம்பத்து)

அமுத நீர்நிலைகளையும், பொற்றாமரைகள் மலரும் அழகிய பொய்கைகளையும், குமுதநிறைந்த நீர் நிலைகளையும், அசையும் பிடர்மயிரை யுடைய அதியழகிய நன்முகக் குதிரைகள் விரைந்துசெல்லுதலால் தகர்த்துடைத்த பருந்தேங் காய்களின் நீருங் கமுகம் பழங்களின் சாறுங் கலந்த சேற்றின் முளைக்குஞ் செந்தாமரைகளையும் ,— (க)

மறுவற்ற ஆயிரம் இதழ்ப்பூக்களைத்தரும் பெரிய தாமரைகள் மலர்கின்ற களங்கமில்லாத விசாலமான தடாகங்களையும், அவற்றைப் பொருந்திக் குறைபாடில்லாத பல சுழிகள் பொருந்த யாறுகளோடும் வேகத்தையும், ஒளிகுன்றாத மரகத மலைகளையொக்கும் மரச்சோலைகளையும் ,— (உ)

வானத்தையளாவிய அச்சோலைகளிலுள்ள பல மரங்கள் ஒன்றன்மீ தொன்றாகக் கட்டப்பட்ட மரகதமாளிகை யடுக்குகளென்னும்படி விளங்குதலையும், வானிடமே கண்ணுக்குப் புலப்படா வண்ணஞ் செய்யும் பல குடைமரங்களின் கவிப்பையும், பல் வேறுவேறு நிறங்களையுடைய இலைகளும் பூக்களு முண்டாக்கும் எழிலையும் ,— (ங)

அளவில்லாச் சுவைக்கனிமரந் தருமொரு பழத்திலேயே (தித்தித்தல், புளித்தல், உவர்த்தல், துவர்த்தல், உறைத்தல், கைத்தல் என்னும்) அறுவகைச் சுவைகளுள் இரண்டு அடியிலும், இரண்டு நடுவிலும், இரண்டு மேலிடத்திலுமாக அமைந்திருக்கும் விதத்தையும், கந்தலோக மகிமையால் மடியாத்தன்மை யெய்திய கிளியினங்கள் வேதமோது முறையையும், அதைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு உற்றுக்கேட்கும் தேவலோகத்துப் பெருமைபடைத்த மந்தார விருக்ஷங்களில் வாழும் நாகணவாய்ப் புட்களின் திரள்களையும்,— (ச)

கந்தலோகமென்னு மிப்புவனத்தி லடர்ந்துள்ள சோலையில் வதியுங் குயில்களின் முன்பாகப்போந்த தேவேந்திரனது கற்பகக்காவில் வாழுங் குயில்களானவை கூவுங் குரல் பழகுதலையும், சிதைவுறா மேகவிருளைக்கண்டு நடனஞ் செய்யும் மயிற்

கூ. தடம் = விசாலமான இடம்.

கூட்டங்களையும், சூரிய வெளிச்சத்தைநோக்கிக் கூவும் மற்றைப் பறவைத்தொகுதிக ளனைத்தையும்,— (ரு)

எவ்வகைத் தோஷமுமற்ற காந்தட்பூவிலுள்ள தேனைவிரும்பும் ஆண்வண்டு வளப்பங்குன்ருக் கடப்பம் பூவின் தேனைச் செவ்வனெடுத்து இளமைமாருத தன் பெண் வண்டினுக்கு ஊட்டி அதற்குண்டா யிருந்த ஊடலைத் தணித்தலையும் அம்மாட்சிமை தங்கிய வள்ளியம்மை கண்டனள். (சு)

திருமாலினுடைய பரந்த திருப்பாற்கடலை நோக்கித் திரும்பும் அன்னப்பறவைகள், கந்தலோகத்தின்கண்ணுள்ள வெண்ணிறம் விஞ்சிய அன்னப்பறவைகளைக் கண்டு அவற்றைத் தம் பாற்கடலெனக்கொண்டு மயங்கி நெருங்கினவுடன் கடலன்று தங்க ளினமெனக் கண்ட பின்பு அவற்றின் நடைகளைத் தாங்களுங் கற்றலையும், வாசனையோடுங்கூடிய ஒள்ளிய நல்ல கர்ப்பூர நுண்பொடியைப் போல விளங்கும் உயர் நயம் மிகுந்த மணற்குன்றுகளையும், அத்திற மணலார்ந்த சமவெளி வளத்தையும்,— (எ)

சிங்கங்களும், யானைகளும், புலிகளும், பசுக்களும், இளமை தங்கிய பெண் மான்களும், ஆண்மான்களும், வலியகிரிகளும், பாம்புகளுந் தம்மியல்பின்படி ஒன்றையொன்று பகைக்காமல் ஒன்று சேர்ந்து, அவ்விடத்தே இளம்பூரணனைத் தியானித்து இடும்பை நீக்கிய முனிவர்களன்பைப் பெற்று வாழும் முதுமையையும்,— (அ)

காந்திவீசும் பெரிய இரத்தினச் சிலம்புக ளார்ப்ப, ஒள்ளிய வளையல்வகைகள் ஒலிக்க, துவளும் மருங்குல் ஒளிசெய்ய, குற்ற மில்லாத தேவியின் திருவுருவத்தைப் பெற்ற மாதர்கள் ( = சத்திசாரூப கதியடைந்த பெண்கள்) குவிந்துள்ள பந்து முதலியவைகளை யெறிந்து இனிய ஆடல்கள் புரியும் விசாலமான பொற்றடங்களையும்,— (கூ)

மாசற்ற மாதவ முடையாரின் தவப்பயன் போன்ற மற்றும் பற்பலவகை வளப்பங்களையுந் தாசர் நாதனுஞ் சுப்பிரமணியனோடு விளங்கும் எனக்கருளிய அன்னை கண்டருளி, மகிழ்ச்சி யொளிபொருந்திய தேவமகளிர் எதிர்கொண்டு வந்தனிக்கத் தனது திருவூஞ்சலுள்ள பெரிய இரத்தின மாளிகையை யடைந்தனள்; அருணகிரி நாதரது தெளிவுடையோர்காள்! (கO)

திருக்கந்தகிரித்திருவிளையாடல்
நான்காம்பத்து முற்றிற்று.

---

பத்தொன்பதாவது

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

---

## (முதற்பத்து)

### கலிநிலைத்துறை.

### அடியோன்றற்குப்பதினன்கக்கரம்.

### இரண்டுசீர்வண்ணம்.

மூப்பி லாவிள வேனிலின் முந்துவ சந்தனைத்
தூப்ப டீரம தைத்தரு தென்மலைத் தொன்முனி
யாப்பு லாவுத மிழ்த்தல மேம்பட யாணரார்
பூப்பல் கோடொளிர் கந்தகி ரித்தடம் புக்கனன். (க)

புக்க மாமுனி தன்சிவன் பொன்னடி முன்னியே
அக்க ணசல மார்சிவ கோடவிர் சத்திகோ
டிக்க லாமுடி யென்றுகை நீட்டியி ழுத்தெடுத்
தெக்க லாமுமில் பூர்ச்சவ னத்தில்வைத் தேகினன். (உ)

வால லங்குதென் மால்வரை நின்றுவ யங்குகுற்
ருலம் வந்தவம் மாமுனி தன்பத மன்பொடு
சால வுந்துதி பண்ணியி றைஞ்சொரு தானவன்
கோல நன்கும தித்துன தூர்குயில் கென்றனன். (ங)

என்ற லுஞ்சிவ பத்தியின் மல்கியி லங்கவன்
தென்ற றங்கும லைப்பெரி யாயொரு செக்கர்வேள்
மன்ற லந்திரு மேனிசு மக்கும யூரமாச்
சென்ற வன்புர முன்பின ரிவ்விடர் சேர்ந்துளேன். (ச)

அப்பு ரத்துறை வார்க்குவில் வித்தைப யிற்றடல்
எப்பு லத்தரு மெச்சுகு ருத்துவ மெய்தினேன்
துப்பு டைக்குக வேள்சமர் சூழ்தலு மப்புரம்
நப்ப லத்தையு ருதெனு விவ்வன நண்ணினேன். (ரு)

---

க. வசந்தன் = தென்றற்காற்று. விவரம், கசுO-ஆம் பக்கத்துக் குறிப்புரையிலறிக.

உ. கலா = கூறுபாடு ; வடசொல்.

பூர்ச்சம் என்பது வடநூலிலே "பூர்ஜம்" என வழங்கப்படுகிறது. இம்மரத்தின் பட்டை தான் மரவுரியென்னும் வற்கலை யாக்கப்படுவதென்றுங் கூறுப.

ச. விடர் = காடு.

என்ற னுமமி டும்பனெ னப்புகல் வார்நறு
மன்ற லான்மனை யாட்டிம ருங்கினி னிற்குநள்
அன்றில் போலெனை யேபிரி யாதவ ருங்குணி
நன்ற ருதவு ளத்தின னுமமி டும்பியாம். (சு)

ஆத லாலெனை நோக்குதி யெப்பணி யாயினும்
ஓதி னுடுவ லேயென வோதின னைசைசால்
நீதி மாமுனி பூர்ச்சவ னத்திடை நேற்றுநான்
கோதி லாதுற வைத்தவி ரண்டுகு வட்டையும். (எ)

வன்மை கூறென்வ ரைத்தடம் வைத்திடு வாயெனின்
நன்மை யாவும்வி ளைந்திடு மென்றுந வின்றுமா
தொன்மை யாமனு வும்வழி பாடது வுந்துகள்
இன்மை யேய்வழி யுஞ்சொலி யேயவற் போக்கினன். (அ)

போமி டும்பனு டன்செலி டும்பிபொ ருந்தமே
தேம ரும்புப டீரமு நல்லகி லுந்திரள்
வாம வெண்டர ளத்தெயி றுங்கொடு வார்தல்போல்
ஈமு கந்தப மும்பல வாரியி வர்ந்தனள். (கூ)

ஏகு மேல்வைக யந்திக ழோர்பொழி லெய்தலும்
பாகு நேர்மொழி தீம்பழ முண்கெனப் பன்னினள்
சேகு சேர்புய னுந்தினல் செய்தன னன்னள்பின்
சோக மேகநு கர்ந்தனள் சொற்புத னற்புளீர். (கo)

---

எ. நோக்கல் = காத்தல்.

அ. தடம் = மலைப்பக்கம்.

கூ. பொருந்தம் = தாமிரபருணியெனும் யாறு.

இவர்தல் = ஏகுதல்.

கo. சொற்புதன் = திருப்புகழ்க் கவிஞன் = அருணகிரிநாத முனீந்திரர்.
சொல் = புகழ்.

பத்தொன்பதாவது

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

(முதற்பத்து)

இளவேனிற் காலத்தில் முற்பட்டுவருந் தென்றற் காற்றையுஞ் செஞ்சந்தனத்தையும் ஈயும் பொதிகைமலையில் வாழும் புராதனராகிய அகத்திய மாமுனிவர், நல்லொழுக்கக் கட்டுப்பாடுகள் நிகழ் தமிழ்நாடு சிறப்படையும்பொருட்டு நன்மையுடைய அழகிய பல கொடுமுடிகளோடு விளங்கும் உம்பரிலுள்ள கந்தகிரிச் சாரலை யடைந்தனர். (க)

அடைந்த அம் மாமுனிவர், தமது அறுமுகச் சிவனுருடைய அழகிய திருவடிகளைத் தியானித்து அந்தப் பெரிய மலையிற் பொருந்திய விளக்கமுடைச் சிவகோடுஞ் சத்திகோடும் இக்கலாமுடிகளே ஆமென்று தம்முடைய கைகளை நீட்டி அவற்றை யிழுத்தெடுத்து எவ்வகைக் கலகமுமில்லாத பூர்ச்சவனத்தில் வைத்துவிட்டுத் தம திருப்பிடத்துக்குச் சென்றார். (உ)

தூய்மை பொருந்திய பொதிகை மால்வரையினின்றும் போந்து விளக்கமுடைத் திருக்குற்றாலத்திற்கு வந்த அவ்வகத்திய மா முனிவர், தம்முடைய பாதங்களை அன்போடு பெரிதுந் துதித்து வணங்கிய ஓரசுரனது தோற்றத்தை நன்கு மதித்து உனதிருப்பிடம் யாது? சொல்லுக என்று பணித்தனர். (ங)

பணித்தவுடன் சிவபத்தியிற் சிறந்து விளங்கும் அவ்வசுரன், "தென்றற் காற்றானது தங்கியுள்ள மலையில்வாழும் மா முனிவரே! ஒப்பற்ற செவ்வேளின் வாசனை பொருந்திய அழகிய திருமேனியைச் சுமக்கும் மயிலாய்ச் சென்றுவிட்ட சூரபதுமனது வீரமாகேந்திரபுரம் எனது பழைய இருப்பிடம். பின்பு, இவ்வனத்தை யடைந்திருக்கிறேன். (ச)

அவ் வீரமாகேந்திர நகரில் வாழ்வோர்க்கு வில்வித்தை கற்பிக்குந் திறமையில் எவ்விடத்துள்ளோரும் மெச்சும்படியான ஆசிரியத்தன்மை யடைந்தேன். வலிமை பொருந்திய குமாரக்கடவுள் போர் தொடங்கினபின் அந்நகரம் நல்ல பலத்தை யடையாதென்று இக்காட்டைச் சேர்ந்தேன். (ரு)

அடியேன் பெயர் இடும்பன் என்று சொல்லுவார்கள். என் பக்கத்தில் நிற்பவள் நல்ல மணவினையாற் கிடைத்த மனைவியாவள்: அன்றிற் பேடுபோ லென்னை விட் டெப்போதும் பிரியாத அருமையான நற்குணம் வாய்ந்தவள்: நன்மை மாறாதுறையு நெஞ்சமுடையாள்: இவள் பெயர் இடும்பியென்பதாம். (சு)

ஆதலால் அடியேனைக் காத்தருளுவீராக. எக்கட்டளையாயினுமிட்டால் அதனை நிறைவேற்றத் துணிவேன்" என்று கூறினன். மகிழ்ச்சியெய்திய நீதி தவறாத

அகத்திய மா முனிவர், "நேற்றைப்பொழுது நான் பூர்ச்சவனத்திற் பழுதுரூது பொருந்த வைத்துவிட்டு வந்த இரண்டு மலைச்சிகரங்களையும்,— (எ)

பலம் பொருந்திய பொதிகைமலைப் பக்கத்திற் கொணர்ந்து வைத்திடுவையே யாயின் எல்லா நன்மைகளுமுண்டாகும்" என்று செப்பி, பழமையான மகா மந்திரத்தையும், செய்யும் வழிபாட்டின் விவரத்தையும், சிக்கற்ற நேர் வழியையும் எடுத்துரைத்து இடும்பனைச் செல்லவிட்டனர். (அ)

இப்படிச் செல்லும் இடும்பனோடு புறப்பட்ட இடும்பியானவள், தாமிரபருணியாறு வாசனை கமழுஞ் சந்தனக் கட்டைகளையும் நல்ல அகிற் கட்டைகளையுந் திரட்சியுள்ள அழகிய வெண்முத்தஞ் சிந்தும் யானைத் தந்தங்களையும் வாரிக்கொண்டு ஓடுதல்போல, பழுத்த மணங்கருதி ஈக்கள் மொய்த்த பலவகைக் கனிகளையுஞ் சேகரித்துக்கொண்டு இடும்பாசுரனைத் தொடர்ந்து சென்றனள். (கூ)

திருப்புகழ்க் கவிஞனர்மாட் டன்புடையீர்! இப்படிச் செல்லும்போது தடாகமமைந்த ஒரு பூஞ்சோலையை யடைந்தவுடன் பாகுபோன்ற சொல்லையுடைய இடும்பி, தான் கொடுவந்த இனிய பழங்களை யுண்ணும்படி வேண்டினள். வயிரம் பொருந்திய புயங்களையுடைய இடும்பனுமுண்டனன். பின்னர் இடும்பி, கணவனுண்டு மீந்த கனிகளைத் தன் களைப்பு நீங்குமாறு தானுமுண்டனள். (க௦)

திருப்பழநிமலைத்திருவிளையாடன்
முதற்பத்து முற்றிற்று.

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (இரண்டாம் பத்து)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியோன்றற்கிருபத்திரண்டக்கரம்.

தனந்தனன தந்தன தனந்தனன தந்தன தனந்த தனன.

இடும்பனுமி டும்பியு மருங்கனிக ளுண்டபி னிருங்க ளிறனுன்
நெடுஞ்சடைபி றங்குத மிழின்சொ லுறு வன்சொலை நினைந்து மகிழ்வோ
டொடுங்கலினெ டும்பொழில் கடந்துவெளி கண்டன னுலம்பு முகில்கள்
தொடுங்கிரிகள் கண்டன னவண்புகற விர்ந்ததர் தொடர்ந்த னனரோ. (க)

தொடர்ந்தவன்வலன்சிரமரிந்தவனுடம்பில்விழிதுன்றினமைநேர்
நடம்புரிசிகண்டிகள்சிகண்டநயனங்கணணிகண்டனன்மழை
தடங்கிரிவளைந்துறைவழங்கலினறுங்குணிதரங்கெழுகுயில்
மடந்திகழருங்கிளிகடங்குபணைகண்டவைவரைந்தொழுகினன். (உ)

---

உ. உறை = தலைப்பெய் மழை.
குணி = ஊமை.

சிறந்தபலசந்தகவிமுன்பொலியிழந்தகவிசிந்தைபயமே
உறுஞ்செவிகிமிர்ந்திடலுறழ்ந்துசெலுமுந்தியையணைந்தசுனையுட்
பறம்புறழ்பறம்பியர்களென்றுபொழுதம்பிறழ்பருங்கயலெனக்
குறும்பொறையிளங்கையர்தொடுஞ்செயலறிந்துநகைகொண்டொழுகினன். (௩)

அறம்புரிபெருந்தகையரந்திருவுறழ்ந்துபெருகுந்திறமணை
நறுந்துறைசெறிந்ததுறையென்பவைகள்கண்டனனவங்கொள்புளினம்
உறும்புடைகள்கண்டனனிலங்கிரவிமுன்பவிழுமொண்கமலமா
சுறுஞ்சசியின்முன்பவிழிருங்குமுதமென்பவுமுணர்ந்தனனவண். (௪)

கவின்சுடருமிந்துமுகமண்டலவரம்பையர்கள்கங்குகடவா
திவர்க்தொழுகுமுந்திகுடையும்பொழுதுதன்பொலிவுகண்டிகனிலாம்
இவன்பெரியகண்டகருண்மிண்டனெனவஞ்சிவையிலங்குபெருவேற்
சிவன்பெயர்விளம்பலுமுணர்ந்துகுமரன்றிருநினைந்தொழுகினன். (௫)

மலர்ந்தமுகமந்திகளுயர்ந்தபனசங்கதலிமஞ்சதவுமா
இலந்தைகடருங்கனிகளுண்டுகுளிர்தண்டலையிலங்குபணைகள்
கலந்தகிளைதொங்கியுழிதந்துகுதிகொண்டகலல்கண்டபினொரு
புலர்ந்ததருவின்கவடுமிங்கிலதெனுங்குயில்புகன்றொழுகினன். (௬)

வயங்கெழுமடங்கலுமடங்கலுநெடும்புலியும்வன்புலியுமே
வியங்கெழுபெருங்கிடியும்வெங்கிடியுமெண்கொடடலெண்கும்விறலாம்
நயங்கெழுமெறும்பியொடெறும்பியுமுடன்றுசமர்நன்குபுரிபோ
தயங்கெழுதனங்கமவைகண்டுவிலகுங்கொனுமறிந்தொழுகினன். (௭)

வனந்திகழும்விண்டொடுநெடுந்தவளமஞ்சுபடர்சம்புவளைவு
தினந்திகழும்விண்டலமெனும்படிவிளங்கலுமதன்சினையெலாம்
அனந்திகழருங்கனிகள்பங்குலமெனும்படியலங்கலுமெயார்
மனந்திகழருந்தவமடங்கல்கள்வயங்கலுமறிந்தனனரோ. (௮)

தனத்தனன தத்தன தனத்தனன தத்தன தனத்த தனன.

கறுப்புறுவரிக்கழுதுமிக்கறைசெழிப்பொடுகருக்கொள்செயலைத்
திறத்திரள்களைத்தமிழ்விருப்பமுனிசொற்றநன்மரச்செறிவினை
மறத்தலின்மனத்தொடுகணித்தவணிருக்கிறவரைக்குவடுகாண்
உறப்புமகிழ்வுற்றிடலுமப்புடையிருக்கமனமுற்றனனரோ. (௯)

---

௩. செவி - செவ்வி = பொழுது.
௪. துறையென்பவைகள் = யாறு என்று சொல்லப்படுவன.
௬. பனசம் = பலா. அதவு = அத்தி.
௭. கொன் = அச்சம்.
௮. நெடுந்தவள சம்புவளைவு எனக்கூட்டுக.
விண்டலம் = வானம். பம் = விண்மீன்.
௯. செயலை = அசோக மரம்.

இருக்குமவனிக்கிரிகளைத்தொடலிசைத்தலெணவிற்றினையுமோர்
விருப்புடனிழைப்பவர்நினைத்ததைமுடிப்பரெனமெச்சிமுனிதாள்
அருட்குணவுளத்திடையழுத்தினனெனக்கினியலக்கணிலையென்
றுருக்கினன்மனத்தினைவகுப்புகள்படித்தவனுவப்பைநினைவீர். (க0)

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

---

## (இரண்டாம்பத்து)

இடும்பனும் இடும்பியும் அரிய பழங்களைத் தின்றபின்பு வலிய யானையை யொத்த இடும்பன், நீள்சடை விளங்கும் இனிய தமிழ்முனிவராகிய அகத்தியனார் கூறியருளியதை எண்ணி மகிழ்ச்சியோடு வளங்குன்றாத அப்பெரும் பூஞ்சோலையைக் கடந்து வெளியிடத்தைப் பார்த்தனன். குமுறு மேகங்கள்தவழும் மலைகளையுங் கண்டனன். அவற்றினிடையே போதல் தவிர்த்து முனிவர் குறித்த வழியைத் தொடர்ந்து சென்றனன். (க)

இப்படித் தொடர்ந்து சென்றவன், இந்திரனுடம்பில் நெருங்கியுள்ள கண்களைப் போன்ற நடமாடு மயில்களினுடைய தோகைக்கண்களை நன்குபார்த்தனன். மேகங்கள் பெரிய மலைகளைச் சூழ்ந்து தலைப்பெயலைச் செய்கின்றமையால் ஊமையர் கூட்டங்களை யொத்துக் கூவாதிருந்த நல்ல குயில்களும் இளமைதங்கிய அரிய கிளிகளுந் தங்கும் மரக் கொம்புகளையுங் கண்டு அவற்றைக் கடந்து சென்றனன். (உ)

பொருட் பொலிவோடு பல சந்தங்களையும் பாடுஞ் சந்தகவிஞன்முன் அத்தகைய சந்தமில் சாதாரண கவிபாடுவோனது நெஞ்சம் பயங்கொள்ளும்பொழுது அவனோடுதல் போன்று விரைந்தோடு நதியினை யணைந்துள்ள சுனையிலே பறம்புகளை யொத்த பயோதர மாதர்களுடைய பார்வைகள் பொருந்துகையிற் றோன்றுந் தோற்றங்களை அழகு பிரகாசிக்கின்ற பருங்கெண்டை மீன்களென்று குறிஞ்சி நிலத்தூர்ச் சிறுவர்கள் பிடிக்கமுயல்வதை இடும்பனறிந்து சிரித்துக்கொண்டு மேற் செல்லும்வழிச் சென்றன். (ங)

தருமஞ்செய்யும் உதார குணமுடையாரது அழகிய செல்வத்தைப் போன்று பெருகுந் தன்மையுடைய நல்ல துறைகள் நெருங்கியுள்ள யாறுகளைப் பார்த்தனன்: புதுமையான மணற்குன்றுகள் பொருந்திய பக்கங்களைப் பார்த்தனன்: விளங்குஞ் சூரியன் முன்பு மலரும் நல்ல தாமரைகளையுங் களங்கங்கொண்ட சந்திரன் முன்பு மலரும் பெரிய குமுத மலர்களையும் நோக்கினன் அவ்விடத்தே அவ்விடும்பன். (ச)

அழகு விளங்குகின்ற திங்களையொத்த முகமண்டலத்தினராகிய அரம்பை மாதர்கள், கரைகளை மீறாது தங்கிச்செல்லும் யாறுகளில் நீராடும்போது இடும்பன், தனது தேகப்பொலிவினை அம்மாதர்கள் கண்டு "வலிமைமிகுந்த இவன் பெரிய அசுரர்களுள் திண்ணியனவன்" என்று பயந்து கூர்மைமிளிரும் பெருவேலேந்திய சண்முக சிவன் திருநாமத்தை உச்சரித்தலையுங்கண்டு குமரவேளின் பெருமையையுன்னி மேற் சென்றனன். (ரு)

மலர்ந்த முகத்தையுடைய மந்திகள் உயர்ந்த பலா, வாழை, வலிய அத்தி, மா, இலந்தை ஆகிய இம்மரங்கள் தரும் பழங்களைத் தின்று குளிர்ந்த பூஞ்சோலைகளில் விளங்கும் அரசமரங்களின் பின்னிய கிளைகளைப் பற்றித் தொங்கிச் சுழன்று குதித்து நீங்குதலையும் பார்த்த பின்பு, "இவ்விடத்தில் ஒருலர்ந்த மரக்கிளைதானுங் காண்டற்கில்லை" என்று வியந்துகூறி வழிநடந்தனன். (சு)

வலிமை மிக்க சிங்கத்தோடு சிங்கமும் நீண்ட வேங்கையோடு திண்ணிய வேங்கையும் உடல் பருத்த பெருங்காட்டுப் பன்றியோடு கொடிய் பிறிதொரு காட்டுப்பன்றியும் வலிமிக்க கரடியோடு கரடியும் வீரநயம் விஞ்சிய யானையோடு யானையும் எதிர்த்து உக்கிரமாய்ச் சண்டை செய்யும்போது இரும்பினும் மேம்பட்ட தன தவயவங்களை அவ்விலங்குகள் கண்டு சமர்நிறுத்தி விலகும் அச்சத்தையு முணர்ந்து மேற்சென்றனன். (எ)

வனத்தின்கண் விளங்குகின்றனவும் வானத்தை யளாவி அழகு பெருகியுள்ளனவுமாகிய நெடிய வெண்ணாவல் விருக்ஷங்களின் கவிப்பு, நாளும் விளங்காநின்ற நீலநிற விண்ணெனும்படி பொலிவுறுதலையும், அங்ஙனங் கொம்பர்களிலெல்லாம் அன்ன நிறம்போல அவிருங் கனிகள் நக்ஷத்திரக் கூட்டமெனும்படி ஒளி செய்தலையும், மெய்ம்மை மனம் பிரகாசிக்கின்ற அரிய தபராஜ சிங்கங்கள் ஆங்கு வீற்றிருத்தலையும் அவ்விடும்பன் கண்டனன்.

[அருந்தப அழகுடையார்க்குச் சிங்கத்தின் மேனோக்கம், சடை, மீசை, நகவளர்ச்சி முதலியனவும், வனவாசமு முண்மையின் அவர்களை அரிய தபராஜ சிங்கமென்பது சால்புடைத்தே ஆம்.] (அ)

கறுப்பு வரிகளையுடைய வண்டுகள் மிக்க ரீங்காரஞ் செய்யுஞ் செழிப்போடு அரும்பும் பருவமுடைய சிறந்த அசோகமரக் கூட்டங்களையுந் தமிழில் விருப்பமுள்ள அகத்திய முனிவர் குறிப்பிட்ட நல்ல பூர்ச்சமரக் கூட்டங்களையும் மறவாது மனத்தின்கட் கணக்கிட்டு அங்கே வைக்கப்பட்டுள்ள மலைச்சிகரங்களைக் கண்ணுற்ற தன்னுடைய கண்கள் களிகூர்ந்தவுடன் அவ் விடத்திலிருக்க அவ்விடும்பன் மனம் பொருந்தினன். (கூ)

திருவகுப்புக்கள் பாடிய அருணகிரிநாதர் பெற்ற ஆனந்தத்தைப் பொருளாக எண்ணுவோர்காள்! மேற் சொல்லியாங்கு தங்கியிருக்கின்ற இடும்பன், "இந்த மலைகளைத் தொடுதலினும், புகழ்தலினும், மதித்துச் சிந்தித்தலினும் ஒரு சிற்றளவையேனுஞ் செய்வோர் எண்ணிய எண்ணியாங்கு முடிப்போராவர்" என்று மெச்சிப் பேசி அகத்திய மாமுனிவர் திருவடிகளைத் தனதன்பு வாய்ந்த உள்ளத்திற் பதிய வைத்தனன். "இனியெனக்குத் துன்பமில்லை" என்று கூறி மனத்தை யொரு வழிப்படுத்தினன். (கய)

திருப்பழநிமலைத்திருவிளையாடல்
இரண்டாம்பத்து முற்றிற்று.

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (மூ ன் று ம் ப த் து)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செவ்வடல் வரைத்தோண் மான்மைத் திரளென விம்மிப் பீலி
ஒவ்வடன் மீசை கொண்டை யுயர்வடி வாரி டும்பன்
இவ்வட திசைக்க ணிந்த விருசிலை மாட்சி தன்னைத்
துவ்வடல் வாய்ந்த வார்வத் துணைவியென் மொழிகே ளென்றே. (க)

அரவிந்த மகளு மெச்சு மழகுடை யிடும்பி யாசில்
அரவிந்த வதன நோக்கி யறைகுவான் கேதா ரங்காண்
அரவிந்த மறச்சொ ரூப மாமிதன் பாங்கர் யாணர்
அரவிந்த தடஞ்சூ ழிக்கான் காண்விழி யதினு மேற்றும். (உ)

மெய்த்தவ முடையா னிந்த மேன்றகை யுணர்ந்து தானே
வைத்தன னிஙன மிந்த மாமணிக் கிரியி ரண்டுங்
கைத்தொளி கான்மா மேரு கயிலையே முதலா மெட்டுள்
உய்த்தறை வரைகண் டாரு மிக்கிரி யுகக்க வேண்டும். (௩)

பன்மதி யொளியாய்த் தைவப் பல்வள முளவா யீண்டே
என்மதி யளியா ருன்ற னன்மதி யிழுக்கு நீராய்ப்
புன்மதி தனையு மீச்செல் புதுமதி யாய்ச்செய் வன்மை
நன்மதி யினர்க்கு மீயு நலத்தவா யுளவிங் காகம். (ச)

பெருந்தனப் புதையல் கொண்டே பெருங்களி கூர்வார் போல
இருந்திருப் பொருளா மிந்த விறும்புகள் காணங் கண்ணும்
பொருந்திய மனமுந் தீண்டல் புரிந்தகை வாயு மின்பம்
அருந்தின பிறப்பும் வீவு மழிந்தன வசுர வல்லீ. (ரு)

எத்துய ரேய்ந்திட் டாலு மினிநமக் கதுவின் பீயும்
புத்தமு தாமே செவ்வேட் பொருளருண் முனிவன் சேவை
குத்திர வுலகில் வாளா போங்கொலோ காம வல்லிக்
கொத்துறு தருவ டுத்தார் நல்குர வடைவார் கொல்லோ. (சு)

---

க. மால் மைத்திரள் = கரிய மேகக்கூட்டம்.

பீலி ஒவ்வடல் மீசை = வட்டவார் மீசை. இது, ‘கிருதா’ எனவுந் தென்றேயத்தில் வழங்கப்படுகிறது.

இன்னண மிடும்பன் சொற்ற யாவையு மிடும்பி கேட்டுத்
தன்னுள மகிழ்ச்சி கொண்டா டானவ மீளி தென்பால்
மன்னரு ளுறுவன் சொற்ற மந்திர தவநோற் றனேர்
மின்னெரு பிரம தண்டும் விரிதிசைப் பாம்புத் தாம்பும். (எ)

எதிர்முகங் கிடக்கக் கண்டே யதிசயித் தெடுத்துத் தாம்பைக்
கதழ்வுறு குவடி ரண்டுங் கரகம்போல் வதியு மாறு
முதிருறி யாக்கித் தண்டின் மொய்ம்புற மாட்டி நாப்பண்
வதியொரு மடங்கன் மானக் குந்தினன் வலிமிக் குள்ளான். (அ)

குந்திய விரண்டு தாளு ளிடமுழந் தாளைக் குன்று
அந்திகழ் தரையி லூன்றி யமர்வுறு தண்டைத் தோண்மேற்
சுந்தர மாக வேய்த்துத் துணைக்கரந் தொடைமே லாக்கி
மந்திர நுவன்று கொண்டே யெழுந்தனன் முகத்தேர் மல்க. (கூ)

பாம்புரி யனைய வாடை பருமணிக் குழைபொற் றவி
காம்புறழ் தோண்முந் நீர்நேர் கண்ணழ குடையி டும்பி
தாம்பணை கிரியெ ழுங்கால் ஹரஹர வெனவே சாற்றித்
தோம்புண ராத கையாற் றெழுதன ளொலிய ணரீர். (க0)

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (மூன்றாம்பத்து)

செவ்வை வலி வாய்ந்த மலைபோன்ற தோள்களுங் கரிய மேகக்கூட்டம் போலப் புஷ்டித்தும் விசிறிபோல வட்டமிட்டுமுள்ள வட்டவார் மீசையும், கொண்டையும் உயரிய வடிவும் பொருந்திய இடும்பன், "இவ்வுத்தர திசையில் இவ் விரண்டு மலைச்சிகரங்களின் மாண்பினைச் செவி யனுபவஞ்செய்யும் வன்மைவாய்ந்த என் அன்பு வாழ்க்கைத் துணைவீ! யான் கூறுதல் கேட்பாயாக" என்று சொல்லி,— (க)

இலக்குமியும் புகழும் எழில்பெற்ற இடும்பியினுடைய மறுவற்ற தாமரைபோன்ற முகத்தைப் பார்த்துப் பின்வருமாறு புகலத் தொடங்கினன். "திருக்கேதாரத்தைத் தரிசிக்கப்பெற்ற கண்ணாகிய தாமரை தரும சொரூபமாகும். இக்கேதாரத்தின் பக்கத்தில் விளங்கும் பெரிய தாமரைக் கயங்கள் சூழ்ந்துள்ள இப்பூர்ச்சவனத்தைக் காணுங் கண், அத்தரும சொரூபக் கண்ணினும் மேம்பாடுடையதாகும். (உ)

உண்மைத் தபோதனராகிய அகத்தியனார் இந்த மேம்பாட்டை யுணர்ந்தன்றோ பேரழகு படைத்த மலைச்சிகரங்களிரண்டையும் இவ்விடத்தில் இருத்திவைத்தார். பொன்

ளொளியைக் காலுகின்ற மகாமேருகிரியைத் தரிசித்தோருங் கயிலைமலை முதலிய அஷ்ட கிரிகளுட் சேர்த்தெண்ணப்படும் வரைகளைத் தரிசித்தோரும் இவ்விரண்டு கிரிகளையுந் தரிசிக்க விரும்பவேண்டும்.

[கயிலையோடு இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன கூட்டியுறழ அஷ்டகிரிகளாம். கயிலையை நீக்கிப் பாரியாத்திரம் மாலியவான் என்பவற்றுளொன்று கொள்ளின் எட்டு மலைகளெனவுமாம்: இவ்வாறு கோடல் இங் ஙனம் ஏலாது.] (௩)

கூறிப்போந்த இரண்டு கிரிகளும், பல சந்திரர்களுடைய பிரகாசத்தையுடையனவாயும், தெய்வத்தன்மையுடைய நானாவித வளங்களையுடையனவாயும், இங்கே எனது மதியையும் அன்பார்ந்த உனது மதியையுங் கவருந்தன்மையவாயும், அற்ப வறிவையும் பெருநெறி குறிக்கும் புத்தறிவாகச் செய்யும் வலிமையை நன்மதியுடையார்க்கு முதவு நலமுடையனவாயும் உள்ளன. (௪)

அசுரப் பூங்கொடியே! பெரியதோர் புதையற் பொருளை யெடுத்துக்கொண்டு மிக்க களிப்பனுபவிப்பவர்களைப்போலச் சிறந்த செல்வமாயுள்ள இம்மலைகளைக் காண்கின்ற நங் கண்களும் அவற்றோடு பொருந்தியுள்ள நம் மனமும் அவற்றைப் பரிசித்த நங் கைகளும் (அவற்றைப் புகழ்) நம்முடைய நாவுங் களிப்பினையனுபவித்தன. நமக்குப் பிறப்பும் இறப்பும் ஒழிந்தன. (௫)

இனி எவ்வித துக்கம் நமக்கு வரினும், அத்துக்கம் நமக்கு இன்ப நல்கும் புத்தமுதமாகுமே. செவ்வேட்பரமனது அருள்பெற்ற அகத்தியமாமுனிவரை நாம் சேவித்தது மலைகளோடுங் கூடிய இவ்வுலகில் வீண்போமோ? காமவல்லி படர்ந்துள்ள கொத்துக்களோடு கூடிய கற்பக தருவை யடைந்தவர்கள் வறுமை வந்தடையப் பெறுவரோ? [பெறார் என்றபடி] (௬)

இவ்வாறு இடும்பன் கூறியவற்றையெல்லாம் இடும்பி கேட்டு நெஞ்சங் களிகூர்ந்தாள். இடும்பன், தென்றிசையில் வதியும் அகத்தியனார் உபதேசித்த மந்திர சகிதமான தவத்தை யனுட்டித்தான். அழகு பிரகாசிக்கின்ற ஒரு பிரமதண்டமும் பரந்த திசைப் பாம்புகளாகிய தாம்புகளும்,— (௭)

தனக்கெதிரே கிடக்கக்கண்டு வியந்து அவற்றை யெடுத்துப் பெருமை பொருந்திய இரண்டு மலைகளுங் கரகங்கள்போலத் தங்கும்படித் தாம்புகளை வலிய உறிகளாக்கித் தண்டிற் பலம்பொருந்த மாட்டி அவைகட்கு நடுவே தங்குமொரு சிங்கத்தைப்போல வலிமிக்க இடும்பன் குந்தியிருந்தான். (௮)

அப்படிக்குந்திய இரண்டு கால்களுள் இடமுழங்காலைக் குறையா அழகு விளங்குந் தரையின்மீதூன்றி, உறிகளினோடமைந்த தண்டைத் தன் தோளின்மீது எழில்பெறச் சேர்த்து, தன்னுடைய இரண்டு கைகளையுந் தொடையிலுந் தண்டிலும் பொருந்தச்செய்து மந்திரத்தைச் செபித்துக்கொண்டே தன் முகத்தெழில் விளங்க எழுந்து நின்றனன். (௯)

அருணகிரி நாதர்பா லன்புடையீர்! பாம்பின் தோலைப் போன்ற ஆடையையும் பெரிய இரத்தினக் குழைகளையும் பொற்றூவியையும் வேயனைய தோளையுங் கடல்

போன்ற கண்ணழகையு முடைய இடும்பி யானவள், தாம்புகளணைந்த மலைகள் தரையை விட் டெழும்போது "ஹர ஹர" என்று கோஷித்துக் குற்றஞ் செய்தறியாத் தன் னுடைய கைகளால் தொழுதனள். (௩0)

திருப்பழநிமலைத்திருவிளையாடன்
மூன்றும்பத்து முற்றிற்று.

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

---

## (நான்காம்பத்து)

## நடிப்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எழுத்தளவுடையன.

கனமருவு தோட்சுமையெ னும்பேர்க்
காவடியெ டுத்தேகு வாரெனந டக்கும்
மனவுறுதி கூடியவம் மீளி
வன்னெடிய பட்டிகையி றுக்கியவ ரைக்கீழ்
நனவணவு தூக்குகளி ரண்டு
நாலவெழி லார்கழல்பெ யர்த்திடலு ஞாலம்
பனிகொளவ திர்ந்ததது போது
பாரமெனி தாயதுசெவ் வேள்செயலி னாலே. (க)

அப்பொழுது பூதிதிமிர் மேனி
யவிரவுண வேறுதன தாய்வுரனி லங்கு
துப்புடைய கண்டிகைக ளாட
சுடர்கழல்க ளாடவுட லங்குழைக ளாட
ஒப்புடைய தோட்சுமையு மாட
வுவகையுட னுடலின்மு யன்றனனஃ தோடு
செப்பரிய பாடலுந வின்றுன்
றிகழுமவ னுவினவ வாணியுமு லம்ப. (உ)

---

க. பனி = அச்சம்.

உ. ஆய்வு = அகலம்.

உடல் = பொன்; "யாக்கையு மாட கமுமுட லென்ப" என்பது பிங் கலந்தை.

தனனதன தனனதன தனனு
தனனதன தனனதன தனனதன தனனு.

மலையெதினு முயர்வுடைய பெருமாண்
மருவியுயர் தலையணவி யிலகியவொர் மலைதான்
நிலையமிழ வயர்பெரிய முனிதா
ணிணையுமென திதயமலர் குளிர்மையுற மகிமா
இலகுமிரு குவடெனது சுமையா
யிஙனமுற வனைதவமெ னெளியனென வுளயான்
மலயமுனி கடல்பருகி யருளோர்
மகிமையையு முணருணர்வு மருவுவர்கொன் மடவோர். (ங)

அதிமதுர நறியகுயின் மொழியாள்
அனநடையள் வடுவனைய விழிகளவி ருமையாள்
சுதனெனவு மணிமிருக கரமா
துரைபுதல்வ னெனவுமயில் கடவிவரு பரமா
முதலையிதழ் மலர்மகடன் மருகா
முதுவிபுதர் தலைவனென விலையயில்கொண் முருகா
கதலிகளி னரசிதுகொ லெனமே
கலையொலிசெய் கொடிதுவளு மிரதமமர் கனமே. (ச)

கனகனக வணிகடிகழ் மயிலே
கலகலென வரவிவரு மழவடிவ வொயிலே
தினகரனை யிகழ்கழல்கொ ளமரா
திருமுடியு முரவணியும் வளையுமணி குமரா
மனவெளியி னடனமிடு குகனே
மதுரமொழி நவிலமல புனிதநதி மகனே
எனநுதிசெய் குறுமுனிவ னிறைவா
வினையினினை வறிவுகளென் மணியுதவு துறைவா. (ரு)

அமரர்சிறை விடுதலைசெய் விமலா
வடியவர்க டயரமுறி னதனையடு மமலா
சமநிலையர் நினைவினுறு பொருளே
தருதகையர் தொழுவிமல மலயமுனி யருளே
கமலவய னறிவரிய சிவனே
கரிமுகவ னிளவலென மிளிர்பரம பவனே
குமரகுரு குமரகுரு வெனவே
குயில்பவர்க ளிதயமன வரதம்வளர் நினைவே. (சு)

---

சு. பவன் = நிலைபரமாயுள்ளோன், சத்தாயிருப்பவன்.

மரணமுறு சனனமுமின் மழவா
        வளவியபல் வரைகளிலும் வதியுமொரு கிழவா
இரவுபகல் புகழ்பொருள்க ளுறுபா
        வினிதுநவில் பவர்சரண மடையவரு ணிருபா
சரவணமெ னளினிவரு நிதியே
        சரவசர மெவையும்வதி பெருவடிவ பதியே
சுரர்குழுமு சபையினடு மணியே
        சுகவறிஞர் பரசுகுறு முனிபரசு முனியே. (எ)

பிரமமுனி யெவருநினை தனியே
        பெரியவமு தெனுமினிமை யினிதுதவு கனியே
விரதர்விழை வனவுதவு தருவே
        மிடனுதலில் விழியலரி திகழ்குமர குருவே
இரதனம தணையுமிடை யழகே
        யினிமைதரு மழலைமொழி யினிதுகுயில் குழகே
மருமலர்கள் கமழவரு துரையே
        வழுவின்மறை புகழ்பெரிய வரியகுண வரையே. (அ)

அறவர்தொழ வவிருமறு முகனே
        அனவரத மளவிலறி வொளியின்மிளிர் சுகனே
நறவுகம ழொலியல்புர ளகலா
        நவவிறலர் கணமொடொலி யெழவருமொ ரிகலா
உறல்விலக லறுபெரிய செவியா
        வுயர்கலைகண் முழுதுமுண ரியல்புகரை கவியா
மறல்வறுமை பிணிமுதிர்வி லுருவா
        மறவிபய மறுசுகுர்தர் தொழுதடையு மொருவா. (கூ)

எனமொழியு முறைமையொடு நடமே
        யினிதுபுரி யவனெடிய தொலைசெலலு மெதிர்காண்
வனநடுவில் வழிதெரித விலனுய்
        மருள்பொழுது குமரகுரு பரனவன தெதிரே
இனிதுசெலு முறைநினைவி லெணிஞ
        னிருவினையு மலமுமற முருகனடி பரவோர்
முனியருண கிரிநெறியை விழைவீர்
        முழுமுதல்வ னருளினினி நவில்வனவு நவில்வேன். (கo)

---

அ. இனிமை யினிதுதவு அமுதெனும் பெரிய கனியே எனக்கூட்டுக.
கூ. மறல் = பகை, பிணக்கு.

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

(நான்காம்பத்து)

**பா**ரமான தோட்சுமை யென்னும் பெயரையுடைய காவடியைச் சுமந்து செல்வோரைப்போல நடக்கும் மனவுறுதி கூடிய அவ்விடும்பன், தனது வலிய நீண்ட அரைப்பட்டிகை யிறுக்கிக் கட்டப்பட்ட அரைக்குக்கீழே விளக்கம் பொருந்திய சுமைகளிரண்டுந் தொங்கும்படி அழகிய அடிகளைத் தூக்கிவைத்த அளவிலே பூமியானது உயிர்கள் நடுக்குறும்படி அதிர்ந்தது. அப்போது, செவ்வேட் பரம னருளினல் அப்பாரம், சுமத்தற் கெளியதாயிற்று. (க)

**அ**ச்சமயத்துத் திருநீற்றி னெளிவிளங்கு மேனிபடைத்த இடும்பன், தனதகன்ற மார்பில் விளங்கும் அழகிய உருத்திராக்ஷமாலைக ளாடவும் ஒளிவீசும் வீரக் கழல்கள் ஆடவும் பொன்னுலாகிய அழகிய காதணிகளாடவும் ஒப்பணைந்த தோட்சுமையு மாடவும் மகிழ்ச்சியோடு தானுமாடத் தலைப்பட்டான். இச்செய்கையோடு விளங்கு மவனது நாவின்கண்ணே தான் சொல்லியறியாத புதியசொற்களும் ஒலிடவே பாடற்கரிய பாடல்களைப் பாடினன். (உ)

**எ**ம்மலையினு முயர்வுடையதென்னும் பெருஞ்சிறப்பெய்தி உயரிய வானத்தையளாவி விளங்கிய பருவதத்தைப் பூமியிலமிழும்படி செய்த பெருமைவாய்ந்த அகத்தியமாமுனிவ ரடிகளைச் சிந்திக்கும் எனது நெஞ்சங் களிகூரும்படிக்கு மகிமை திகழுமிவ்விரு குவடுகளும் யான் சுமக்கும் பாரங்களாக இப்போது பொருந்துதற்குச் சிறியேன்செய்த தவமென்னே? அறிவிலிகளாயுள்ளோர் பொதிகை முனிவர் கடலைக் குடித்துத் தம்மை யடைந்தார்க் கருள்புரி மகத்துவத்தையும் அறியறிவைப் பெறுவர் கொல்லோ? [பெறுர் என்றபடி] (ங)

**ந**றிய அதிமதுரக் குயின்மொழியினளும் அன்னநடையுறழ்ந்த நடையினளுமாகிய மாவடுப்போன்ற விழிகள் விளங்குகின்ற உமாதேவி (அவன் என்) சுதனென்று சொல்லிக்கொள்ளவும், அழகார்ந்த மானையேந்தியுள்ள கரத்தினையுடைய மகா சிரேஷ்டன் (அவன் என்) புதல்வனென்று புகன்றுகொள்ளவும் திசைகளில் மயிலைச் செலுத்தி வரும் பரமா! செங்கிடைச்சியை யொத்த இதழ்களையுடைய இலக்குமிதேவியின் மருகா! பண்டைத்தேவர்கள் தம் தலைவனென்று சொல்லிக்கொள்ளுமாறு இலை போன்ற வேற்படையேந்திய முருகா! துசங்களின் அரசிது வென்னும்படி தேர் முடியிலே கூவுகொடி அசையுமொரு தேரில்வதியும் பெருமிதமே! (ச)

**க**னத்த பொன்னுபரணங்கள் விளங்கப்பெற்ற மயில் வாகனமானது கலகலென வர; அதன்மீதாரோகணிக்கும் இளமைப்பருவ ஒயிலே! ஞாயிற்றைப் பழிக்குங் காந்திகொண்ட வீரக்கழல் புனைந்த அமரா! சிறந்த கிரீடத்தையும் மார்பணிகளையுந் தோள்வளைகளையு மணிந்த குமரா! ஆன்மாக்களுடைய இருதயாகாசத்தின் கண்ணே நடனஞ்செய்யுங் குகனே! இனிய மொழியியம்பும் அழகிய பரிசுத்த கங்கையின் மகனே! என்று துதிக்கும் அகத்தியமாமுனிவர்க்கு இறைவனே! இணை

யில்லாத் தியான ஞானங்களென்னும் மணிகளைத் தராநின்ற திருவருட் கடற்றுறையி விருக்குந் துறைவனே ! (ரு)

அமரர் சிறைமீட்டிய விமலா ! அடியார்க ளலக்கணுறுங் காலத்து அதனை யகற்றியருளும் அமலா ! சமநிலை வாய்ந்தவர்களுடைய கருத்திலுறையும் பொருளே ! தக்க பெருமையுடையோர் பணியும் பரிசுத்தமுடைய அகத்திய மாமுனிவர்க்குக் கிடைத் துள்ள அருளே ! பிரமதேவ னறியமாட்டாத சிவனே ! விநாயகற் கிளவலென விளங்கும் பரம பவனே ! "குமாரகுரு" "குமாரகுரு" என்று ஜெபிப்பவர்களுடைய இதய கமலங் களில் எஞ்ஞான்றுமிருக்கும் நினைவே ! (சு)

சீவர்கட்குப் பொருந்து மிறப்பும் பிறப்புமில்லாத மழவா ! வளம்பொருந்திய பல மலைகளிலும் வீற்றிருக்கும் ஒரு கிழவா ! போற்றத்தக்க பொருள்செறிந்த பாக் களை இரவும் பகலும் இன்போடு பாடுவோர்கள் நின்றிருவடிகளை யடையும்படிக் கருள்செய்யும் நிருபா ! சரவணமென்னும் பெரிய தாமரை வாவியிற்றோன்றிய நிதியே ! இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய எல்லாமும் ஒருங்கு தங்கியுள்ள பாரமேச்சுர வடிவ பதியே ! தேவர்கள் குழுமு சபையின் நடுநாயக மென்னும் மணியே ! ஆனந்தானுபவ மெய்ஞ்ஞானிகள் போற்றும் அகத்திய மாமுனிவர் துதிக்கு மொரு முனியே ! (எ)

பிரம ஞானிக ளெல்லோருந் தியானிக்குஞ் சமானமற்ற தனியே ! அவர்களுக்கு இனிமையை நன்களிக்கும் அமுத சொரூபமென்னும் பெரிய கனியே ! மெய்யன் பர் விரும்புவன வெல்லாந் தந்தருளுங் கற்பக தருவே ! வலிய நெற்றிகளிற் கண்க ளாகிய மலர்கள் விளங்குங் குமரகுருவே ! அரைஞாண் கட்டிய அரையினையுடைய அழகே ! இன்பம்பயக்கும் மழலைச்சொல்லை இனிது கூறவுள்ள குழகே ! வாசனை யுள்ள மலர்கள் கமழ எழுந்தருளுந் துரையே ! பிழையற்ற வேதங்கள் போற்றும் அரும் பெருங்குண வரையே ! (அ)

முனிவரர் பணிய விளங்கும் அறுமுகனே ! எக்காலத்திலும் பேரறிவுப் பிர காசத்தின் மிளிர்சுகனே ! மணம் வீசு மாலைகள் புரளும் அகலா ! நவவீர ரோடும் பூதகணர்களோடும் ஆரவாரத்தோ டெழுந்தருளும் இகலா ! பொருந்துதல் விலகுத லென்னு மிருதன்மையு மற்று யாண்டு மிருந்து கேட்கும் பெரிய செவியா ! சிறந்த கலைகண் முழுதுமுண ரியல்பினை யுரைக்குங் கவியா ! பிணக்கு, வறுமை, நோய், மூப்பு என்னு மிவைகளில்லாத உருவா ! யமபயம் அற்ற சுகுர்தர்கள் தொழுதடையும் ஒருவா !" (கூ)

என்று போற்றிசைக்கு முறைமையோடு களி நடம்புரியு மிடும்பன் நெடுந்தூரம் வழிநடந்த பின்பு எதிரிற் றோன்றிய காட்டின் நடுவில் வழியறியாதவனாகித் திகைக் கும்போது அவனெதிரே தான் இனிது செல்லு முறையைக் குமர குருபரன் திரு வுள்ளத்துன்னினன். இருவினையும் மலமும் இரிந்தொழிய முருகனடி எத்திய அருண கிரிநாத முனீந்திரர் நெறியை விரும்புநர்காள் ! அம்முழுமுதற்கடவு ளருளால் இனிக் கூறவேண்டியவற்றையுங் கூறக்கடவேன். (க0)

திருப்பழநிமலைத்திருவிளையாடல்
நான்காம்பத்து முற்றிற்று.

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (ஐந்தாம்பத்து)

### கலிவிருத்தம்.

அடியோன்றற்குப்பதினேரக்கரம்.

காவ டித்திற லான்றனைக் காணுமா
ரேவு ருக்கருங் கச்சையொ டேகுறுந்
தாவில் சட்டைத னைத்தொடை யேரரை
மேவ யாத்தன னேவடி வேற்பிரான். (க)

ஏரு றுந்தலைச் சாலிகை யேணடி
ஆரு மந்தொடு தோலும ணிந்தவப்
பேரு ளோன்முது கிற்பிணை தூணிகை
சாரு மம்புச ராசனங் கொண்டனன். (உ)

கொண்ட கோலமு மெய்க்குறுங் கோலமும்
அண்டர் தாமும ளப்பர்கொ லோவவி
மண்டி டும்பன்முன் வந்திவை யெங்குநீ
கொண்டு போகவிங் கெய்தினை கூறுதி. (௩)

என்று கேட்டரு ளெம்பெரு மான்முனே
நின்று தென்மலை நேர்வழி கண்டிலேன்
மின்ற யங்குவில் வேலுடை நீரெவர்
என்று கேட்பதென் னுசையென் றனவன். (ச)

வாம நீடுல காளிறை வன்மகன்
யாமன் வேட்டைநி மித்தமிங் குற்றனம்
நீம யங்கலிந் நீணெறி போய்க்கிடி
நாம நாகவ ழிச்செல்கென் றன்பிரான். (ரு)

---

ரு. யாமன் - யாம் + மன் எனப் பிரித்துக்கொள்க. மன்வேட்டை = பெரிய வேட்டை. வேட்டை - வேட்டையாடற்கும் விருப்பத்திற்கும் பெயராதலின், உனது விருப்பந் தீர்க்குநிமித்தமாக இங்கு வந்தே மென்றற்கும், கொண்ட வேடத்திற்கேற்ப வேட்டையாடவந்தே மென்றற்கும் பொதுவாய்நிற்றல் காண்க.

கிடி = வராகம்,

இன்ன ணஞ்சொற்ற வீசன்ம றைந்தபின்
நன்ன ராரவ்வ ராகந கத்தின்சார்
மன்னு மோர்தல மெய்தலும் வன்பிரான்
தன்னி ழைப்பிற்ற ளர்ந்துநின் ருன்வலான். (சு)

பார மொட்டவொல் லாவவன் பைந்தரை
சார வைத்தனன் ருேட்சுமை தன்னைமேற்
பாரி நல்குப ழம்பலந் துய்த்தனன்
ஏர ருவொரு தாபத மெய்தியே. (எ)

காமர் மல்குமத் தாபதங் கட்டினேன்
வாம தேவமு னித்தலை வன்பினே
தூமல் கச்சுமை தூக்கமு யன்றனன்
வீம மேனிவி ளங்கவ்வி டும்பனே. (அ)

செக்கர் வேள்செய லாலஃதெ ழுந்தில
தக்கல் லார்புய னீதென்கொ லென்றுதன்
தக்க தோள்வலி காட்டினன் றன்னெணம்
விக்கி னங்கொளல் கண்டுளம் வெம்பினன். (கூ)

செம்பொன் யாவுமி ழந்தவர் சிந்தைபோல்
வெம்பி யேசுற்றி நோக்குழி மெய்விளர்
அம்பி றங்குநற் கண்டன னுரொலி
நம்பி யின்பின ரேசிவ நாகமேல். (க०)

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

---

## (ஐந்தாம்பத்து)

மலைக்காவடி சுமக்கும் வலியுடையிடும்பனைக் காணும் பொருட்டு வடிவேற் பெருமான் குறைவில்லாத கரியகச்சையோடு குற்றமற்ற சல்லடமென்னுங் குறுங்காற் சட்டையை அழகிய தொடை அரை யென்பனவற்றிற் பொருந்தக் கட்டினன். (க)

அழகிய தலைக்கவசத்தையும் வலிய பாதங்களிற் பொருந்தும் வனப்புவாய்ந்த தொடுதோலையுந் தரித்த அவ்வேற் பெருமான், முதுகிற் பிணைக்கப்படும் அம்பறாத் தூணியையும் கைகளிற் பொருந்தும் அம்பையும் வில்லையும் பூண்டுகொண்டனன். (உ)

---

எ. பலம் = கிழங்கு.

இவ்வாறு கொண்ட கோலத்தையுந் திருமேனியின் நல்லழகையுந் தேவர்கள் தாமும் அளவிட வல்லராவரோ? பலமிக்க இடும்பன் முன்போந்து, "இம்மலைகளை எங்குக் கொண்டுபோவதற்கு இவ்விட மடைந்தனை? சொல்லுவாயாக" (௩)

என்று வினவியருளிய எம்பெருமான் திருமுன்பில் இடும்பன் நின்றுகொண்டு, "பொதியமலைக்கு நேர்வழி தெரிந்திலேன்: ஒளிவிளங்கும் வில்லும் அம்புந்தாங்கிய நீர் யாவர் என்று கேட்க அவாவுகின்றேன்" என்றனன். (௪)

"யாம் அழகுமலிந்த உலகாளிறைவன் குமாரன்: பெரிய வேட்டை காரணமாக இங்கடைந்தேம்: நீ திகைப்புற வேண்டாம்: இந்நெடிய வழியே சென்று, வராக மலைப் பக்கமாய்ப் போவாயாக" என்று பெருமான் புகன்றனன். (௫)

இவ்வா றறிவுறுத்திய இறைவன் மறைந்த பின்பு, நன்மை பொருந்திய அவ் வராகமலையின் பக்கத்திலுள்ள ஓரிடத்தைச் சேர்ந்தவுடன் சருவ சத்திமானாகிய முருகன் செயலால் வலிய இடும்பன் வலியிழந்து தளர்ந்து நின்றனன். (௬)

தோட்சுமை சுமத்தற் காற்றாத அவ்விடும்பன் தன் காவடியைப் பசுந்தரையிற் றங்கவைத்தான். அதன் பின்பு, எழில்குன்றாத முனிவரது ஆச்சிரம மொன்றையடைந்து இடும்பி தந்த பழங்களையுங் கிழங்குகளையும் உண்டனன். (௭)

அழகு நிரம்பிய அவ்வாச்சிரமத்தை யமைத்தவர் வாமதேவ ரென்னும் முனிசிரேஷ்ட ராவர். பின்பு, பருத்துயர்ந்த மேனியோடு விளங்கு மவ்விடும்பன் பரிசுத்தமாகிய அச்சுமையை மீண்டுந் தூக்க முயன்றனன். (௮)

செவ்வேள் செய்கையால் அது மேலெழவில்லை. மலையை யொத்த புயங்களையுடைய அவ்விடும்பன் இஃதென்கொலோ என்று கருதி, தனது தக்க தோள் வலி முழுதையும் பயன்படுத்திப் பார்த்தான். தன் கருத்து நிறைவேறாமையை நோக்கி நெஞ்சம் நொந்தனன். (௯)

சந்த முனிவராகிய அருணகிரிநாதர் வழியைப் பற்றுவோர்காள்! தம்பாலுள்ள மாற்றுயர்ந்த பொன்னையும் பிறபொருள்களையும் இழந்துவிட்டவர் நெஞ்சம்போல இடும்பன் மனம் புழுங்கிச் சுற்றிப் பார்க்கும்போது இளமைத் திருமேனியெழில் பிரகாசிக்கு மொருவனைச் சிவகோட்டின்மீது கண்ணுற்றனன். (௧௦)

திருப்பழநிமலைத்திருவிளையாடல்

ஐந்தாம்பத்து முற்றிற்று.

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (ஆரம்பத்து)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவகிரிமே னிலவுகின்ற செங்கனிவாய்ச் சிறுவனையோர் குராவின் கீழ்க்காண்
தவமுடையா னரியவிந்தக் கட்டழகார் தனிமழவ னியக்கன் ருனே
புவனமெலா மிறைஞ்சுமுரு கன்ருனே யெனக்கருதி யருகு போய்ப்பார்த்
தவிர்சிறைதா னிலேமயிலின் ருதலினின் னேன்வேறென் றகஞ்செய் தானல். (க)

அவ்வாறு துணிந்தவவன் பிடர்கிடக்கும் புன்குடுமி யழகு மாசு
கவ்வாத கருணைவிழி யிரண்டுமதி காந்திகிளர் முகமு மார்பிற்
செவ்வாட கமெனவவிர் பூணூலுந் திருக்கரத்திற் றிடனர் கோலும்
எவ்வாசு மறுதிறத்த கோவணமு மிலங்கநிற்கு மிளனுற் பார்த்து. (உ)

சிறுவனீ தனித்துநிற்ற லெவன்வயவை தப்பியிந்தச் சிலேசேர்ந் தாயோ
மறுவினீ திருவனைத்து மோங்கலெனத் திரண்டனவா லிவற்றை மாண்பிற்
பெறுவனீ றறினுமெனு மாசையினுற் போந்தனையோ பேசா யென்ன
உறுகணீ றிலியாகு முருகனஙன் முகிழ்த்தநகை யொன்றே செய்தான். (ரு)

நகைகணித்தோ னிவன்வடிவு சிறுமைத்தாங் காரநனி பெரிதா மென்றோர்
தகைமையிற்காய் தலேயுடைய னுய்நாத விந்துவெனச் சாற்ற வுள்ள
சிகரிவிட்டே புறம்போயான் கொலேயவுண னென்றுசொலித் திமிறி நின்ருன்
குகனுமிக்கோ டெமதிருக்கை வலியுளதேற் கொடுபோவென் ருேதி னனல். (ச)

மலேயிரண்டுங் கடந்தப்பாற் போகாதிவ் வணஞ்சொன்ன வாயாய் வஞ்ச
நிலேயில்விஞ்சு பவன்போலு நீயெனச்சொல் பவன்கடித்த வெயிற னீண்ட
தொலேயியங்கு சிவந்தவிழி யானெறித்த புருவத்தான் சோர்வில் லாத
அலேயுறழ்ந்த வெகுளியன்கை பிசைந்தவனுக் குராவடியிற் பாய்ந்தா னம்மா. (ரு)

பாய்ந்தவுடன் வலக்கரத்தே கோலுடையக் குருந்துருவப் பகவா னன்னேன்
மாய்ந்திடவோர் விளையாடல் புரிந்தனனஞ் ஞான்றிகலன் வான்க டாகஞ்
சாய்ந்ததென வலறிநனி வீழ்ந்தனனப் பெருந்துழனி தனையுங் கேட்பான்
வாய்ந்தசெவி யிடும்பிகது மெனப்போந்து தன்கொழுநன் மருங்குற் ருளால். (சு)

அப்பொழுது பிரமதண்டும் பாம்புமிக வஞ்சியகத் தியற்கண் டெல்லாஞ்
செப்பியபின் றமவிருக்கை புக்கனவவ் விடும்பியிடும் பனிரு செங்கண்

க. இயக்கன் = கந்தருவன் ; " கந்தருவ ரியக்கர் யாழோர் காந்தருவர் " என்பது பிங்கலந்தை.

ஒப்பலரை விரல்கள்கொடு தீண்டியுநா சிகைவைத்து முயிரின் றென்றே
துப்புறுதன் றுவர்வாயிற் புடைத்துமுக மறைந்துணர்வு சோர்ந்து சாய்ந்தாள். (எ)

மூர்ச்சைதெளிந் தெழுவார்போ லெழுந்தவவ ளென்கணவா முடிந்தா யாயுள்
சீர்ச்சைல மெனவீழ்ந்திங் கென்றனைவிட் டெவ்வாறு சென்று யீட்டும்
ஆர்ச்சிதமற் றறியேனே நின்னையல்லா லிப்படிநீ யயர்த லாமோ
பூர்ச்சவன மடைந்துவந்த பலனிவ்வா றுயதுகொல் புனித வாழ்வே. (அ)

மங்கலநா ணதுபூட்டி மணந்தகளி றேயுன்னை வரைந்து செல்லேன்
எங்குமெனு வுரைத்தபடி புரிந்திஞ்ஞான் றெனைவிடுத்தா யேது குற்றம்
இங்கெளியே னிழைத்தேனென் மனமழுங்கு கின்றதரோ வெனத்தன் மார்பிற்
செங்கரமே வுறவறைந்து வயிறுபிசைந் தாளழுதா டிகைத்தாண் மன்னோ. (கூ)

கணவனது முகத்தோடு தன்முகம்வைத் தேகலுழ்ந்தாள் கரங்கண் மோந்தாள்
பிணமெனவும் விழுந்தனவோ வெனக்கழல்கண் முத்தமிட்டாள் பிரிந்தா யோவென்
றுணர்வுவதி யுரமேல்வீழ்ந் தென்னரசே யென்றிருவே யுனைநான் றேற்கப்
பணியபவ மறியேனே யெனவுமழு தாளொலியன் பரிவுள் ளீரே. (க௦)

---

## திருப்பழநிமலைத் திருவிளையாடல்.

---

### (ஆ ரு ம் ப த் து)

சிவகிரியின்மேல் விளங்குகின்ற செம்மை கனிந்த வாயையுடைய சிறு பிராய முடையானொருவனைக் குராமரத்தின் கீழே தரிசிக்குந் தவமுடைய இடும்பன், "அருமையான கட்டழகு வாய்ந்த இத்தனி நிற்கும் இளைஞன் கந்தருவனோ? அல்லது உலகமெல்லாம் வணங்குகின்ற முருகன்றானோ?" என்றெண்ணி, நெருங்கிப் போய்ப் பார்த்து, இவனுக்கு விளக்கமுடைச் சிறகுகளில்லை; மயிலுமில்லை. ஆதலா லிவன் வேறொருவனுயிருக்க வேண்டுமென்று நிச்சயித்தனன். (க)

அவ்வண்ண நிச்சயித்த அவன், பிடர்மீது கிடக்கின்ற சிறு குடுமியினழகும், குற்றமொன்று மணுகாத கருணைபொழி கண்ணிணைகளும், பேரொளிவீசுந் திருமுகமும், திருமார்பிற் செம்பொன்னென விளங்கு பூணூலும், திருக்கரத்தில் வலிய தண்டமும், அரையில் எக்குற்றமுமற்ற கோவணமும் பொலிவுற நிற்கும் இளைஞனை நோக்கி,— (உ)

"இளைஞ! நீ தனித்திங்கு நிற்றல் யாது குறித்து? வழிதப்பி இவ்வரை யடைந்தனையோ? பல்வகைச் செல்வங்களும் இம்மலைகளென ஒருங்கு திரண்டுள்ளன: ஆதலாற்றான் (இவன் தூக்கிச் செல்பவனுயினன்) உயிர்க்கிறுதி வரினும் இவற்றைக் கைப்பற்றவே னென்னும் ஆசையினுல் எழிலுடைய நீ இங்கு வந்தனையோ? யாதென்பது தெரிவிப்பாயாக" என்று கேட்க; துன்பமும் நாசமுமில்லாத முருகநாதன், அங்ஙனங் குமுநகை மட்டுமே செய்தனன். (திருவாய் திறந்தொன்றுங் கூறினு னல்லன்) (ங)

அங்ஙனம் கையினை அளவிட்ட இடும்பன், "இவன், உருவமோ சிறியது; அகங்காரமோ மிகப்பெரியதாம்" என்றுணர்ந்த பெருமையாற் கோபங்கொண்டவனாய் "நாத விந்துக்களெனச் சொல்லவுள்ள இம்மலைகளைவிட்டுப் புறத்தேசெல்: யான் கொலைத்தொழில் புரியும் அசுரன்" என்று கர்ச்சித்துத் திமிறி நின்றனன். குகனும், "இம்மலை எமதிருப்பிடமாகும்; உனக்காற்ற லிருக்குமாயின் இதனைக் கொண்டுபோ" என்றுரைத்தனன். (௪)

"இவ்விரு மலைகளையும்விட் டப்பாற் போகாது இவ்வண்ணங் கூறிய நாவுடையாய்! நீ வஞ்சகத்தன்மையிலே தலை சிறந்தவன் போலும்" என்று கழறுமிடும்பன், கடித்த பற்களையுடையவனும், நெடுந்தூரங் காணவல்ல சிவந்த விழிகளையுடையவனும், நெறித்த புருவங்களையுடையவனும், தளர்வுறாது வீசும் அலைகள் போன்ற கோபத்தையுடையவனும், பிசைந்த கைகளை யுடையவனுமாய் முருகு நிற்கின்ற குராமரத்தடியிற் பாய்ந்தனன் அம்மா! (௫)

பாய்ந்தவுடனே, வலத்திருக்கரத்திலே தண்டமுடைய இளங்கோலப் பகவான், அவ்விடும்பன் மடிந்து விழும்படி ஒரு திருவிளையாடல் புரிந்தனன். அப்போது இடும்பன், அண்ட கடாகம் வெடித்துச் சாய்ந்த தென்னப் பெரிதும் அலறி வீழ்ந்தனன். அந்தப் பெருஞ் சத்தத்தையுங் கேட்கும்பொருட்டு வாய்ந்த செவிகளையுடைய இடும்பி, கதுமென ஓடிவந்து தன் கணவனது பக்கமடைந்தனள். (௬)

அவ்வமையத்திற் பிரமதண்டமுந் தாம்பாகிய பாம்பும் பேரச்சங்கொண்டு அகத்திய மாமுனிவரைக் கண்டு நிகழ்ந்தவற்றையெல்லாந் தெரிவித்த பின்பு தம்மிருப்பிடம் புகுந்துவிட்டன. அவ்விடும்பி, இடும்பனுடைய இரண்டு சிவந்த அழகிய கண்மலர்களைப் பரிசித்துப் பார்த்தும் மூக்கிற் கைவைத் துணர்ந்தும் உயிரில்லை யென்று செம்மையுற்ற தன் பவளவாயி லடித்தும் முகத்தி லறைந்தும் உணர்வு மாழ்கி வீழ்ந்தாள். (எ)

பின்பு, மூர்ச்சைதெளிந் தெழுபவரைப் போலெழுந்த அவ்விடும்பி, "என் கணவரே! ஆயுள்முடியப் பெற்றீரோ? சிறந்த மலைபோ லிங்கு வீழ்ந்து என்னைத் தனித்திருக்கவிட்டு எங்ஙனம் போயினீர்? உம்மையன்றிச் சேமித்து வைத்த பொருள் அறியேனே! இவ்வண்ணம் நீர் செய்தன் முறையோ? பரிசுத்தமான அன்பே! நாம் பூர்ச்சவனம் போய்வந்த பல னிவ்வாறு முடிந்தது கொல்லோ? (அ)

மாங்கலிய சூத்திரத்தை என் கழுத்திற்பூட்டி யென்னை மணம்புரிந்த களிறே! நின்னைவிட்டு எவ்விடத்திற் கேனும் பிரிந்துபோகேன் என்று ஆதியிற் கூறியபடியே இதுகாறும் நடந்து என்னைவிட்டுப் பிரிந்தீர்: ஏழையேன் இங்கே யாது பிழை யிழைத்தேன்? நெஞ்சம் வருந்துகின்றதே!" என்று தன் சிவந்த கைகளால் மார்பில்மோதி வயிற்றைப் பிசைந்தாள்: அழுதாள்: திகைத்தாள். (௯)

அருணகிரி நாதனார்பா லன்புடையீர்! தன் நாயகன் முகத்தோடு தன் முகத்தை வைத்துக் கதறினள்: கைகளை யெடுத்து மோந்தாள்: ".இக்கால்கள் பிணமென்னும்படி வீழ்ந்து விட்டனவோ" என்றிரங்கி அவற்றை முத்தமிட்டாள்: உணர்விற்கிடனு

யிருந்த மார்பின்மீது "என்னைப் பிரிந்தனையோ" என்று வீழ்ந்து "என்னரசே! என் செல்வமே! உம்மை யிழக்கும்படி யான் செய்த பாவம் ஈதென அறிகிலேனே" என்றும் புலம்பினள். (கo)

திருப்பழநிமலைத்திருவிளையாடல்
ஆறாம்பத்து முற்றிற்று.

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

---

## (ஏழாம்பத்து)

கலிநிலைத்துறை.

அடியோன்றற்குப்பன்னீரக்கரம்.

கையே கூப்பித் தெய்வமி றைஞ்சல் காணேனீ
மையார் கூந்த லென்னொடு லாவு மால்காணேன்
பையா ரின்சொற் பன்னுதி றங்கள் காணேனின்
றையோ வாழ்க்கை சொப்பன மாயிற் றேமாதோ. (க)

நோவே யார்க்குஞ் செய்தில மேநன் னேன்பாவிச்
சாவே நிற்கேய் வித்தவர் யாவர் சாற்றுயென்
கோவே நின்னைக் கொன்றவ ரென்னை யுங்கோறல்
மாவே யேயச் செய்கில ரோவன் னேய்மாய்வான். (உ)

தாய்தா னில்லை தந்தையு மில்லை சார்பாமோர்
சேய்தா னில்லை சோதர மில்லை தேய்வேயோர்
பேய்போ லானே னெங்குறு வேனென் பேறேயிந்
நோய்போ மாறென் றேதுதி நுண்மா னேர்ந்தேயோ. (ங)

பூலோ கிற்கும் வானினி தென்று போனையோ
மாலோ டென்னை யுங்கொடு போகா வாமாண்போ
பாலோ கண்டோ தேனமு தோவின் பாகோவென்
றுலோ ரீன மின்றென நின்னன் பாய்ந்தேனே. (ச)

ஆறு வென்றுன் பாறுதல் கோடற் கன்பானீ
வீறு ராக்கை மேவியெ ழாயோ மேலோனே
காறு ராநன் வீதியெல் லாங்கற் றுய்பாரி
ஈறு மாறுங் கற்றனை கொல்லோ வெம்மானே. (ரு)

என்னு ராவீ யென்களை கண்ணே யீர்ம்பாகாய்த்
துன்னு ரின்பே கோடுசு மந்த தோள்வீரா
பொன்னூர் தொங்கற் பூஞ்செவி யாவிப் போதேயென்
இன்னு வோய்வா னேடிவ ராயோ வென்வாழ்வே. (௬)

செவ்வேள் பாதஞ் சிந்தையில் வைத்தே னேயாலஃ
திவ்வே ளைக்கோர் தண்ணளி செய்யா தோவேழை
நொவ்வே னேக்கா தெங்கொளித் தாயென் னேன்பேமெய்
துவ்வா விண்ணு யேனுமொ ரின்சொற் சொல்லாயோ. (எ)

எண்ணு ரோராத் தென்மலை வாழ்வோ ரேந்தாலோ
விண்ணு டய்யுந் தேவர்க ளேநும் மெய்க்கூறு
பண்ணு துய்ந்தே னேகண வன்கதி பார்த்தீரால்
தண்ணு ரென்வாழ் வைத்தரல் செய்யீ ரோவாலோ. (அ)

இச்சை லச்சீ ரெண்ணினுங் கேடின் றென்றேனேண்
கச்சை மஞ்சோ டிங்கிறந் தானே காசாராப்
பொச்சை காளென் புண்ணிய மூர்த்தி யெங்கேய்ந்தான்
பச்சை நந்தாப் பாதபங் காள்புட் காளோதீர். (௯)

என்கண் வார்நீர் பார்த்திரங் காநீ ரேய்ந்தீரே
புன்கண் போமா ருவிது றப்பே னென்றேமீன்
மின்கண் மெய்ந்நோன் பாள்புலம் புற்றாள் வீழாருந்
தன்கண் ணீர்தோய் மேனியள் சந்தன் சால்பீரே. (௧0)

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

---

## (ஏழாம்பத்து)

நீர் உம்முடைய கரங்களைக் குவித்துத் தெய்வ வணக்கம் புரிதலைக் காண்கிலேன் : கரியகூந்தலுடைய என்னேடுலாவும் அன்பைக் காண்கிலேன் : அழகிய இன்சொற் புகலும் வகைகளைக் காண்கிலேன் : அந்தோ ! நம் வாழ்க்கை இத்தினங் கனவா யொழிந்ததே ! (௧)

நாமெவர்க்கும் ஒரு துன்புஞ் செய்தோமில்லையே ! நல்ல நோன்புகளை யனுட்டித்தவரே ! உமக்கு இம் மரணத்தை யுண்டுபண்ணினவர் யாவர் சொல்லுவீராக : என்

---

எ. மெய்துவ்வா விண் = அசரீரி ; துவ்வல் = நுகர்தல்.
௯. பொச்சை = மலை.

தலைவரே ! உம்மைக் கொன்றவர் அவர்க்குப் பெருமை பொருந்த என்னையுங் கொல்ல மாட்டாரோ ? எனது துன்பந் தொலையும்படி. (உ)

எனக்குத் தாயுமில்லை : தந்தையுமில்லை : உதவியாய் நிற்க ஒரு பிள்ளையுமில்லை : உடன் பிறந்தார் தாமுமில்லை : ஏழைப் பேய்போலானேன் : எவ்விடம் புகுவேன் ? என் செல்வமே ! சிறுமை பெருமை யுணர்ந்து யான் படுந்துன்ப நீங்குதற்கு ஒருபாய முரைப்பாயாக. (ங)

மண்ணுலகத்தினும் விண்ணுலகம் இனிதென்று அங்கே போனீரோ ? ஆவதேல் அன்போடென்னையு முடன்கொண்டு போகாவாறு சிறப்பாமோ ? நுமதன்பினைப் பால், கற்கண்டு, தேன், அமுதம், இனியபாகு என்றுரைத்தால் இழுக்கில்லையென்று ஆய்ந் திருந்தேனே. (ச)

மேன்மை யுடையீர் ! எனது ஆருத்துயரத்தை ஆற்றுதற்பொருட்டு நீர் அன் போடு உமது வீறுபாடுடைய உடலிற்பொருந்தி யெழுந்திருக்கமாட்டீரோ ? எம்பெரு மானே ! அளவில்லாத நல்ல நீதிகளையெல்லாங் கற்றுள்ள நீர் உம்முடைய மனைவி உமது பிரிவினு லுயிர்துறக்கும் வழியையுங் கற்றிருந்தீர்போலும் ! (ரு)

எனது ஆருயிரே ! எனக்குற்ற துணையே ! குளிர்ந்த பாகமாய் நிரம்பிய அரிய இன்பமே ! மலைகளைச் சுமந்த தோள்படைத்த வீரரே ! பொன்பொருந்திய குண்டலங்க ளோடுங் கூடிய அழகிய காதுகளையுடையீர் ! என் வாழ்வே ! (எங்கிருப்பினும்) இப் பொழுதே என்றுன்ப நீங்கும்பொருட்டு ஒடி வரமாட்டீரோ ? (சு)

செவ்வேள் திருவடிகளைச் சிந்தையி லிருத்தினேனே : அப்பக்தி இவ்வேளை யில் எனக்கோர்கிருபை புரியாதோ ? எனது தவமே ! துன்புடை யென்னை நோக்காமே எவ்விடத்தி லொளித்துக் கொண்டனை ! இப்போது அசரீரியாகவேனும் எளியேனுக் கிரங்கி ஒரின்சொற் கூறமாட்டாயோ ? (எ)

மதியாதார் மதிக்கெட்டாப் பொதிகை மாமுனிவரே ! வானுலகில்வாழுந் தேவர் களே ! நுங்கண் மெய்ந்நெறிக்கு ஊறுென்று முளுற்றுது இல்லறவாழ்க்கை புரிந்தேனே : என் கணவனுக்குற்ற கதியைப் பார்த்தீர்களன்றோ ? அருளார்ந்த என் வாழ்வை மறுபடி யும் எனக்குக் கொடுக்கமாட்டீர்களோ ? (அ)

இக் குவடுகளின் பெருமையை மனத்திலெண்ணினும் ஒரு கேடு மணுகாது என்று கட்டுரைத்த என் கணவர் தாம் கட்டிய வலிய கச்சையினழகு குலையாதிருப்பவும் (அக்குவடுகளின் அருகிடமாகிய) இங் கிறந்துபட்டாரே ! குற்றஞ்சாராக் குவடுகளே ! பசுமை குன்று மரங்களே ! பறவைகளே ! என் கணவராகிய புண்ணியமூர்த்தி எங்குள் ளார் கூறுவீர்களாக. (கூ)

நீங்கள் என் துன்பக்கண்ணீரைக் கண்டும் மனமிரங்காத் தன்மை பொருந்தி யுள்ளீர்கள் : இனி, என்துயரந் தொலையுமாறு என்னுயிர் துறப்பேன் என்று கயல்

மீனென மிளிருங் கண்ணும் உண்மை விரதமு முடையவளும், மலையருவி யொக்குந் தன் கண்ணீரால் நனைந்த மேனியினளுமான இடும்பி புலம்பினுள்; சந்த முனிவராகிய அருணகிரிநாதர் சால்புடையீர்! (௧0)

திருப்பழநிமலைத்திருவிளையாடல்
ஏழாம்பத்து முற்றிற்று.

---

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (எட்டாம்பத்து)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

இரண்டுசீர்வண்ணம்.

**மா**சி லாதவி டும்பி சூரனுர் யாவு மோர்ந்தெழின் மாமணித்
தேசு லாமுரு வம்பி றங்குசி கண்டி மீதுபெ ருந்திறன்
மூசு மாகண நன்கு சூழ்தர மொய்த்த துந்துபி யார்ப்பவங்
கீச னேர்புதல் வன்றி கழ்ந்ததை யேரி டும்பிக ணுற்றனள். (௧)

**கா**ண்ட லுங்கலி மீன வாயினி னின்று தப்பிய கன்னிபோல்
ஆண்ட வன்றிரு முன்பு போயரு ளார்ப ராபர வென்களம்
பூண்ட லங்கிய தாலி நாளுமவி ளங்கு மாறருள் புரிதடுத்
தாண்ட வெம்பெரு மான்றெ ழும்பிவ ளாவ ளென்றுவ ணங்கினள். (௨)

**அ**ச்சொ லேற்றபி ரான்க டைக்கண ளித்த னன்பொறை மொய்ம்பனுங்
கச்ச மேற்கொளு றக்க நீத்தெழு காளை போலவெ ழுந்துபூஞ்
செச்சை வேற்பெரு மான்றி ருத்தொழல் செய்தி டுஞ்செயல் கொண்டனன்
எச்ச நீக்கிய புத்தி விஞ்சியல் பேணெ ழுந்தமை யாலரோ. (௩)

**ந**ல்ல மாமலர் பாத மாமலர் தூவி யர்ச்சனை நன்குசெய்
தல்ல லூறிறை வாச ராசரம் யாவு மாள்பர மாசிவா
செல்ல லூனுடல் புல்ல னேயுறல் செயிரி ராகமி லாமுதால்
எல்லை தீரறி வின்ப மாகவி லங்கு செஞ்சிவ சோதியே. (௪)

**ஆ**தி யந்தமு நள்ளு மில்பொரு ளென்ற றைந்திடு தொன்மறை
ஓது மந்தண னுந்தெ ரிந்துகொ ளாத வுன்றிரு வாடலை
ஆதர் சங்கமி ருந்த யானறி நீர்மை யெங்ஙன மாமரு
நீதி கொண்டெனை யாளு மாறெழ றந்த நீளரு ளெந்தையே. (௫)

---

௨. கலிமீனம் = வன்மீன் = முதலை.
௩. கச்சம் = அளவை; பிங்கலந்தை காண்க.

என்று நற்றுதி செய்த தானவ னைப்பி ரானெது வேண்டுநிற்
கென்று ரைத்தலும் யான்வ ரம்பெற லிவ்வ ரைக்கணி ருந்துகொண்
டென்று நிற்கிய லூழி யஞ்செய லென்றி ரப்பவவ் வாறுசெய்
கென்று சொற்றன னேக டம்பணி டும்ப னுண்மகிழ் வாகியே. (௬)

ஆடி னானடி பாடி னானரு ளன்பை யின்பென வெண்ணினான்
ஓடி னானனி துள்ளி னானகை புல்லி னான்பிறி தோர்பொருள்
நாடி யேபுக ழேனெ னச்சொலி னான னோனையு நாடுசீர்
தேடி னானையு முய்தி ரென்றருள் செய்து சேய்தளி யெய்தினான். (௭)

ஓம லங்குரு வேல வன்கடை விழியு வப்பினி டும்பியுள்
வீம லர்ந்ததெ னாம கிழ்ந்தனள் விண்ணு லாமொரு வாணியே
தூம லிந்தக டம்ப னால்வலி துன்றி டும்பனில் லாண்முகப்
பூம லர்ந்ததெ னாம கிழ்ந்தனள் பூமி யென்னும டந்தையே. (௮)

தென்ம லைத்திரு மாமு னித்தலை வன்றி ருக்கொளி டும்பனை
வன்ம லைத்தல நோக்கி நீயிஙன் வாழ்க வென்றயில் வேற்சிவன்
பொன்ம லர்க்கழல் போற்றி யேகின னோதி காவடி சேர்ப்பவர்
நன்ம லைத்திற லானை யுந்தொழல் செய்ய வேண்டுநன் னீரரே. (௯)

அண்டர் நாயகன் மந்தி ரம்பிற வக்க ரங்களை யொக்குநேர்
தண்ட பாணியி ருக்கு மிம்மலை தரைவி லங்கலை யொத்தன
தண்ட பாணியை யீச னீபழ மென்ற தாற்பழ நிப்பெயர்
கொண்ட தேவள வத்த லம்புகழ் கூறி னோனெறி தேருளீர். (௧௦)

இரத்தாக்ஷி௵ ஆனி௴ ௨௧௨ சுக்கிரவாரம்.

---

திருக்காவடிப் பிரார்த்தனையாளர் இல்லத்தியற்றும் ஆராதனை முடிவில் இத்திரு விளையாடல் படிக்கப்பட்டுப் பூசிக்கப்படுமேல், திருவுள மினிதுவந்தருளும்; ஐய மின்று; ஓம்.

---

அ. உள்வீ = இதயாரவிந்த மலர்.

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

---

## (எட்டாம்பத்து)

குற்றமில்லாத இடும்பி படுந்துயரம் முழுது முணர்ந்தருளி, அழகிய சிறந்த நவமணியொளி பொருந்திய வடிவோடு விளங்கும் மயிலின்மீது, பெருவன்மை படைத்த சிறந்த சிவகணங்கள் நெருக்கமாய்ச் சூழ்ந்துவரவும் நிறைந்த தேவதுந்துபிகள் முழங்கவுஞ் சிவகுமாரன் அவ்விடத்துப் பிரசன்னமானதை வனப்பு வாய்ந்த இடும்பி பார்த்தனள். (க)

பார்த்தவுடனே முதலை வாயினின்று தப்பிய இளம் பெண்போல் ஆண்டவன் திருமுன்பு சென்று "அருட்குண நிறைந்த பராபரனே! அடியாள்கழுத் தணிந்து கொண்டதும் இன்றுகாறும் இலகியதுமான தாலி எக்காலமும் (என் கழுத்தில்) இலகும் வண்ணங் கிருபை செய்வாய். துன்பத்தினின்றுந் தடுத்தாள வந்த எங்கள் பெருமானே! இவளும் நினக்கொரு தொழும்பியேயாவள்" என்று விண்ணப்பித்துப் பணிந்தாள். (உ)

அவ்விண்ணப்பத்தைத் திருச்செவியிலேற்றருளிய பெருமான், திருக்கடைக் கண்ணோக்கஞ் செய்தருளினன். மலைகளையொத்த புஜங்களுடை யிடும்பனும் அளவை மேற்கொண்ட உறக்கத்திலிருந்து விழித்தெழுங் காளைபோலவெழுந்து, குறைவு நீக்கம் பெற்ற வுணர்வு தன்பாற் சிறக்குந்தன்மை தோன்றிய காரணத்தாற் பூஞ்செச்சை வேற் பெருமானைத் தொழத் தொடங்கினன். (ங)

இறைவன் திருவடி மலர்களில் மிகச்சிறந்த மலர்களைத் தூவி முறைப்படி யருச்சித்து, "துன்பந் துடைக்கும் இறைவனே! சராசரமாயுள்ள அனைத்தையும் ஆளுமொரு பரமனே! சிவனே! மரணம் ஊனுடம்பு புல்லல் நோயுறல் குற்றம் இச்சை யிவைகளில்லாத முதற்பொருளே! அகண்ட அறிவாகவும் பூரணானந்தமாகவும் விளங்கு செஞ்சிவ சோதியே! (ச)

நீங்காத நீதியினால் அடியேனை யாட்கொள்ளுமாறு எழுந்தருளி வந்த முகிழ்த்த பெருங்கருணைத் தந்தையே! நின்னை ஆதியும் நடுவும் அந்தமுமில்லாப் பொருளென்று முழங்கும் பழைய வேதங்களை யோதும் பிரமதேவன்றானும் அறியவொண்ணாத நின் திருவிளையாட்டை, அறிவிலார் கூட்டத்திலிருந்த அடியேன் அறிந்துகொள்ளுந் தன்மை யாங்ஙனங் கைகூடும்?" (ரு)

என்று நல்ல தோத்திரஞ் செய்த இடும்பனை (நோக்கி) இறைவன், "நினக்கு வேண்டுவதியாது?" என்று வினவினவுடன், "யான் விரும்பும் வரமாவது இம்மலையின்கண்ணேயே தங்கியிருந்து நினக்குவப்பாயுள்ள தொண்டுகளை எக்காலமுஞ் செய்து கொண்டிருத்தலேயாம்" என்று அவன் விண்ணப்பிக்க; கடம்பன், "அவ்வாறே செய்யக்கடவாய்" என் றனுக்கிரகித்தனன். அத்திற வரப்பிரசாதம் பெற்ற இடும்பன் மனமகிழ்ச்சி யுடையவனாகி,— (சு)

ஆனந்தக் கூத்தாடினன் : முருகவேள் திருவடிகளைப் பாடினன் : இறைவன் தன்மாட்டுக் காட்டிய அன்பைப் பேரின்பமென்று மதித்தான் : (உவகை மிகுதியால்) ஓடினன் : துள்ளிப் பாய்ந்தான் : பெருமகிழ்ச்சியி லாழ்ந்தான் : "மற்றெப்பொருளையும் விரும்பிப் புகழமாட்டேன்" என்று கட்டுரைத்தான். அத்தகைய இடும்பனையும், அவனைக் கணவனுய்க் கொள்ளுஞ் சிறப்பினைத் தேடிக்கொண்ட இடும்பியையும் இளம் பூரணன் நோக்கி "நீவிர் வாழ்வீர்க ளாக" என்றருளிச் செய்து தனதிருக்கை சேர்ந்தனன். (எ)

பிரணவ வுருவோடு விளங்கு வேற்பிரான் கடைக்கண்பார்வை காட்டிய மகிழ்ச்சியால், இடும்பியினது இதய கமலம் மலர்ந்ததென்று சிறந்த ஆகாயவாணி மகிழ்ச்சி யுற்றனள். புனித நிறைந்த கடம்பனருளினுல், வீரஞ்செறிந்த இடும்பன் காதலியினது முக கமலம் மலர்ந்ததென்று பூமி தேவியு மகிழ்ச்சி யுற்றனள். (அ)

நல்ல தன்மையுடையீர்! (இதன்மேல்) மலயமலை வாழும் ஸ்ரீ முனி சிரேட்டராகிய அகத்தியனுர் இறைவனருளாஞ் செல்வம்பெற்ற இடும்பனை வலிய அம் மலையடிவாரத்தே பார்த்து "நீ இங்கே வாழக்கடவாய்" என்று சொல்லி, கூரிய வேலேந்திய சண்முக சிவனுடைய அழகிய திருவடித் தாமரைகளைத் தொழுது தமதிருக்கையாகிய மலையை யடைந்தனர். காவடி செலுத்துவோர்கள், மலை சுமந்து வந்த இடும்பனையுந் தொழுதல் வேண்டும். (௯)

திருப்புகழ் முனிவர் நெறியைக் கடைப்பிடித்த உளமுடையீர்! தேவ தேவனுடைய திருநாம மந்திர எழுத்துக்கள், பிற எழுத்துக்களை யொத்திருக்கும் இயல்பு போல, தண்டபாணி வீற்றிருக்கும் இம்மலைகளும் புவிமீதுள்ள ஏனைய மலைகளை யொத்திருப்பன வாயின. சிவபிரான், தண்டபாணியை நோக்கிப் "பழம் நீ" என்று கூறியதனுல் வளப்பம் பொருந்திய அத்தலமும் 'பழநி' என்னும் பெயர் பூண்டது. (௧0)

திருப்பழநிமலைத்திருவிளையாடல்
எட்டாம்பத்து முற்றிற்று.

---

## திருவிளையாடற்காண்ட முற்றிற்று.

இரண்டாவது

# கேத்திரகாண்டம்.

## க. சென்னை.

### (முதற்பத்து)

கலிநிலைத்துறை.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

அடியொன்றற்குப்பதினேழக்கரம்.

*தந்தத்தா தந்தத்தா தனதன தனதன தன்னத்தா.*

கங்கைக்கோ ரின்பச்சேய் களிகெழு நுதல்வளர் கண்ணற்சேர்
மங்கைக்கோர் செம்பொற்சேய் மணிமழ மயில்வரு சென்னைச்சேய்
செங்கைத்தா ரம்பொற்காழ் திகழுரு விறையெனு மெண்ணத்தார்
கொங்கைக்கோ ளென்கைப்பே கொளவழி யிலைகொள வின்னிக்கே. (க)

என்றக்கால் வன்கட்டா மிருமல மிறுமுத மன்னத்தான்
மன்றக்கேழ் விஞ்சைக்கோன் மழமுனி யயிலிறை பொன்னைக்கால்
குன்றக்கான் வஞ்சிக்கோர் கொழுநன சுரர்மற லென்னச்சூர்
வென்றக்கா லண்டர்க்கோர் வியனுல கருண்முதல் சென்னைச்சேய். (உ)

அடியொன்றற்குப்பதினெட்டக்கரம்.

*தன்னத்தா தன்னத்தா தனதன தனதன தனனத்தா.*

சென்னைச்சே யென்னப்போ மளவறு பவவலி திருநட்பாம்
முன்னைப்பே ரன்னத்தே யிவரயன் விறலற மொழிமுற்கோ
பொன்னைச்சே ரண்ணற்கோர் மருகன்ம லயமுனி புகழ்பொற்போன்
மன்னைப்பே ணன்னட்பார் பெரிதுறை தருமணி மனைமிக்கார். (ங)

கண்ணத்தா விண்ணத்தா கலைஞர்த லைவவுயர் கமலத்தான்
எண்ணத்தா பொன்னத்தா வெழின்மயி லிவர்பர வுலகைத்தான்

---

க. சேய் = செய்யவன் = செவ்வேள்.

ச. அத்தன் = மூத்தோன், பிதா, குரு.

பண்ணத்தா வுண்ணத்தா பனிமல ரயிலொரு குரிசிற்கீ
திண்ணத்தா சென்னைச்சே யெனநனி பரசுவர் தெருண்மிக்கார். (ச)

## அடியோன்றற்குப்பத்தோன்பதக்கரம்.

தனனத்தா தனனத்தா தனதன தனதன தன்னத்தா.

கரணத்தா வுறலிற்பே யெனவுழி தரறவிர் கண்ணர்க்கீ
சரணத்தா னருளிற்கோர் தனிமுதல் சுரர்பகை தன்னைச்சா
டரணத்தா னமலப்பே ரறிவினன் முனிவரர் முன்னிக்காண்
முரணத்தான் மகிழ்விற்கா முறுமரு மகனவிர் சென்னைச்சேய். (ரு)

அடியைக்கா முறன்மிக்கா ரடிமல ரணைதொழி லென்னச்சார்
படியிற்கோ ளெதுநட்பீர் பகருமி னெருகுரு கென்னக்காண்
கொடிபொற்போ டணைகைக்கோ குணகடன் மணிதரு வண்மைத்தான்
மிடியைப்போழ் திருமிக்கே விளைநில நிரைவளை சென்னைச்சேய். (சு)

## அடியோன்றற்குப்பதினேழக்கரம்.

தானத்தா தானத்தா தனதன தனதன தன்னத்தா.

ஆடற்கோ கூடற்கோ வரனொரு மகனறு சென்னிக்கோ
பாடற்கோ நீடெற்கோ பகரரு மொருபெரு விண்ணிற்பார்
நாடற்கோர் பீடத்தார் நவைதபு சிவமரி பெண்ணைத்தார்
சூடற்கோர் சூரட்டா னதிபதி சுடர்புரி சென்னைச்சேய். (எ)

வானிற்பா னுனிற்பான் மலைகட லெரிவளி யுண்ணிற்பான்
மேனிற்பா னூனிற்பான் மிளிருயி ரிருதய விண்ணிற்பான்
நூனிற்பார் பானிற்பா னுதிநுகர் செவியொடு பன்னக்கார்
போனிற்பா னேர்நிற்பார் பொருளருள் பெறவருள் சென்னைச்சேய். (அ)

தன்னத்தா தன்னத்தா தனதன தனதன தன்னத்தா.

மண்ணட்பார் மண்ணிற்பார் மருமல ரணிபுனை சென்னைச்சேய்
விண்ணட்பார் விண்ணிற்பார் விமலவ முதமது கொன்னிக்காய்
உண்ணப்பாய் கண்ணிற்பா ருலகம தவரவிர் கண்ணிற்கோர்
விண்ணொப்பாய் மன்னற்கோர் மிடியிலை யிடரிலை நன்னட்பீர். (கூ)

தன்னத்தா தன்னத்தா தனதன தனதன தந்தத்தா.

இன்னற்சூர் துன்னப்போர் தருபகை ஞருமிற வென்றுட்கா
வன்னற்சூ ரென்னப்போர் புரிகரி மகள்குற மங்கைக்கே
தன்னற்பான் முன்னிற்பா னெனுமுரை யினிதுயர் சந்தற்கார்
கன்னற்கே சென்னைக்கோ யிலிலுறை யெழின்மிளிர் கந்தற்கே. (கo)

சாலிவாகன சகாத்தம் கஅசச - ல் துர்மதிஹூ ஆடிமீ
உகூ ஆதித்தவாரம். (7 - 7 - 1921)

---

ச. ஒரு குரிசில் = நல்லியக்கோடன்; சிறுபாணாற்றுப்படை காண்க.

# செ ன் வை.

## (இரண்டாம்பத்து)

புதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

அடியொன்றற்கிருபத்துநான்கக்கரம்.

*தான தத்தத்த தான தத்தத்த*
*தான தத்தத்த தான தத்தத்த தன்ன தான.*

ஏக சற்சித்த தேவ மட்டற்ற
வீச பொற்புற்ற சேய பொய்ப்பற்ற செம்மை சேருந்
தேக நட்புற்ற பேர்பி றப்பெற்று
சீல சிற்சுத்த வாதி முத்தர்க்குண் மன்ன தீதா
யோக மிக்குற்ற நாத பத்தர்க்கொள்
யூக வெற்றிக்கை வேல வெற்பத்த வென்ன வோதி
மாக முப்பத்து மூவ ரர்ச்சிக்கு
மாசின் முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (க)

ஈச னெற்றிக்க ணீயொ ளிக்கற்றை
யேயு ருத்திட்ப மேவி மெய்ச்சத்தி யின்ன பேத
கூச துத்தத்தை யேயு ஞெப்பற்ற
கோம ளப்பொற்ப வேல்செ லுத்தத்த வென்ன வோதி
மூச லுற்பத்தி காவ னச்சிச்செய்
மூவ ருட்பற்றொ டேய ருச்சிக்கு மம்ம ருத
ஆசின் மட்டுற்ற பாத னக்கர்த்த
ஞணி முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (உ)

நீல மிக்குற்ற தூவி யெற்பச்சை
நீடு சொக்குக்க லாபி தத்திச்செல் சண்மு கேசா
மால ளித்திட்ட மாதர் நட்புற்று
மாலை யிட்டொப்பி லாம தர்ப்புற்ற விண்ணு ளானே
சீல நத்தத்த ராதி சிட்டர்க்கொள்
சேம சிற்சத்தி யீச வெற்பப்ப வென்ன வோதி
ஞால முக்குற்ற மீர்த மிழ்ச்சித்த
ஞடு முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (ங)

---

உ. குசம் - "கூசம்" என நீண்டது. துத்தம் = பால்.

நாட லற்புற்ற தாசர் சித்தத்தை
நாடு சிற்சத்தி யேய்க ரத்தத்த னன்னர் மேய
பாட விற்செக்க ரார்ப தத்துற்ற
பாணி விற்கைத்து நூபு ரத்தைச்சொ னன்மை நாவர்
ஏட விற்சிக்கு மீசன் வித்தைக்கெ
லாமு தற்றிட்ப வேத மெச்சொட்ப முன்மை நாதன்
வாட ரிப்பற்ற நீபம் வைத்திட்ட
மாலை முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (ச)

தூவொ ளித்துற்றை நாடி நற்செட்டை
சோர்வ றத்தட்டி யாகு லத்தைச்செய் செம்மை வீயே
மேவு சத்திச்செ வேளி ருட்டுற்ற
மேக முற்பட்டு லாய்கி ருத்தத்தின் மின்னு வீமேல்
தாவி யெத்திக்கு மேகு துப்புற்ற
சாமி பச்சைப்பொ னுடு வெற்பத்த னென்னை யாள்கோ
மாவி ளக்கப்பொ னுர மட்டுற்ற
மார்பன் முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (ரு)

ஏணி லைப்புற்ற சூரன் மட்டற்ற
வேதி பற்றுற்ற சேனை யிற்றெட்டு சுண்ண மாக
மாண கைப்பைச்செய் வாய னெற்றிக்கண்
வாழு மெத்திக்கு மேய பொற்புற்ற சண்மு கேசன்
தாணி னைப்புற்று ளாரை நச்சிக்கொ
டார மெய்ச்சித்த னீறி னக்கற்கு முன்னை வேத
வாணி முற்பட்ட தோது மற்பைக்கொண்
மாலை முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (சு)

தேசு முத்தொத்த மூரன் மட்டுற்ற
சீத மச்சொத்த வோதி யத்திக்கு மன்னு கேள்வன்
ஆசின் முக்கட்பி ரானி டத்துற்ற
வாக சத்திக்கோர் சேயு திப்பொற்க மென்னு பாதி

---

ச. பாணி = அழகு. கைத்து = பொன்; சூ - நிகண்டு.
ஏடல் = குறிப்பு, நினைவு; சூ - நிகண்டு. அரிப்பு = குற்றம்.

ரு. துற்று = கூட்டம், நெருக்கம்.
ஆகுலம் = ஒலி. வீ = பறவை.
சத்தி = விருதுக் கொடி.

எ. மஞ்சு = மேகம்; "மச்சு" என வலித்தல் விகாரப்பட்டது.
ஒற்கம் = வறுமை; சூ - நிகண்டு.

ஏசு பற்றற்ற தேவி ருப்பற்ற
வேம நச்சொட்டர் சூர்மு ருக்குத்தி மன்னு போதன்
மாசி லற்புற்ற ஞானர் சித்தத்துய்
மாலை முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (எ)

பேரி தப்பட்டை பூரி கைக்குப்பை
பேரு டுக்கைக்கு வாலி டக்கைச்சொ னண்ணு மேளம்
வாரி யொத்தெட்டு மாதி ரத்துக்கு
மோதை தத்தப்பல் சேனை மொய்த்திட்ட வொன்ன லாரூர்
நீரி னுட்பட்டெ டூாதி ழைத்திட்ட
நீப நற்சுக்கை மார்ப னிக்கொத்த சொன்ன தீயின்
நார ளப்பற்ற சேயெ னக்கப்ப
ணுதன் முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (அ)

மோதி ரக்கைச்செ வேள்ச கத்திச்சை
மூடர் கத்துட்ப டாத சத்திக்கை மின்னு தேவன்
பீத நற்சுட்டி யாரம் வித்தப்பல்
பேத கைக்கட்டி யார மத்துத்தி நண்ணு பூணோர்
கோதின் முத்துப்பொன் மோலி யிட்டிட்டர்
கூற ருட்பற்றை யோர்ந யப்புற்று முன்னு லாவு
சோதி பச்சைப்பொ னுயி பெற்றிட்ட
தூவன் முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (கூ)

நேமி சொர்க்கக்கண் யாவு மச்சத்தை
நேர முற்பட்ட மேழ கக்கொற்ற மன்னு முமே
காமர் மிக்கத்தி லேறு துப்புற்ற
காளை யற்பிட்டர் நாட ருட்சித்த னென்னை யாள்வோன்
தூமி குத்தற்பி னல்வ குப்புச்சொல்
தூய னட்புக்கு ளாய சித்தத்த னெண்ணெ ணுத
சேமன் மெய்ப்பற்றர் சூர்த புத்திட்ட
தேவன் முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே. (க0)

நதிரோற்காரி௵ கார்த்திகைமீ ஏஉ குருவாரம்.

---

அ. நதியை "நதீ" என நீட்டல் வடநூன் முடிபு. நதி = கங்கை.

கூ. ஆரம் = மணிவடம், கண்டிகை ; பி - நிகண்டு.
அத்து = அரைநாண்.
உத்தி = ஆபரணத் தொங்கல் ; சூ - நிகண்டு.

# உ. சண்முகஞானபுரம்.

---

## (முதற்பத்து)

### கட்டளைக்கலிப்பா.

அடியோன்றற்கிருபத்திரண்டக்கரம்.

*தானத் தன்னன தானன தத்தன*
*தானத் தன்னன தானன தத்தன.*

ஆதித் தன்மதி போன்மணி முத்தமா
ராணிப் பொன்முடி யாழிப தக்கமா
பூதிப் பொன்னடி சாரணி பொற்பவே
பூணற் கொன்னெடு சூரனு ரத்தையே
காதித் தன்னொரு வேலொட ருட்கணர்
கானச் சொண்மையர் சூழ்திரு வுற்றுளோன்
சூதுட் கின்னலி லாதவர் மிக்குவாழ்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (க)

மாலிற் கன்னம தூரய னுக்குமா
மாணற் சென்னியை மாவடி யைக்கொடா
தாலிற் றென்முக மானவொ ருத்தன
மாதிக் கம்மறை மூலமு ரைத்தகோ
வேலிற் கண்ணல கோசரன் வித்துவான்
வீரப் பொன்மயி லூர்திம றைக்குளேய்
தோலிற் பன்முறை யார்பர வத்துவே
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (உ)

காசைப் பன்மணி யாரணி சுட்டிவாள்
காலக் கொண்முலே யாரைநி லத்தைமே
வாசைப் புன்மதி யாளரு மற்புளோ
ராகித் தன்னடி நாடின ளப்பிலா
மாசைக் கொன்முர ணீகுவன் விட்டிடான்
வாகைக் கொன்னயி லானகி தொக்குநேர்
தூசைக் கொண்டடு வாரண நட்பருன்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (ந)

மாகத் திண்ணிய தேவரு மெச்சவே
வாழ்பொற் பண்ணுகு லாலர்வி ருப்பொடே
நாகத் தும்மிக வேசெய்கு லத்தினே
ஞானப் பொன்னயில் வேல்கைய ணைத்துமேன்
மேகத் தண்மையி னேநட னத்தைவான்
மேவப் பண்ணுக லாபிந டத்திமால்
சோகட் டுன்னுநர் சூழவி ருப்பனே
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (ச)

ஆழத் தண்மக ராலய முட்கொளா
ஆவிக் குண்மிளி ரோர்விரன் மட்டுளோன்
வாழத் தொன்மறை மூலமு ரைத்தகோன்
மாழைச் செந்நிற வாரண சத்தியான்
வேழப் பொன்மகள் வேடர்கு லத்தினுண்
மேவத் தன்மண மாலைக ளிட்டுநீர்
சூழத் துன்னகி லாசல நச்சும்வேள்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (ரு)

தாடித் தென்னுநன் மீசையு மிக்குநீ
டாமப் பின்னல்க ணீறவிர் தொக்குளீர்
கோடிக் கும்மறை யார்நெறி பற்றுவீர்
கோனச் செம்மல்க ளேதமிழ் பொற்பொடே
பாடிப் பன்முறை யேயுந லத்தரே
பாதத் தண்ணலெ லாருமு றப்பல்பூண்
சூடிச் சன்னிதி யேமிளிர் செக்கர்வேள்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (சு)

வேலிற் கென்னல மாசில்க டப்பவி
வேரிக் கென்னல மாதவர் மெச்சுநா
னூலிற் கென்னல மேயத னர்த்தமா
நூழைக் கென்னல மாமயி லுற்றவோர்
மாலிற் கென்னலம் வால்கெழு செக்கர்வேள்
வாசச் சன்னிதி மேவலொ ழிக்கினோர்
சூலிக் கம்மக னுமவன் முத்தர்சேர்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (எ)

தேவர்க் கென்னல மாழிபி டித்தவோர்
தீரற் கென்னல மாமறை சொற்றநா
ணுவற் கென்னலம் வானுல கத்துவா
ணரக் கென்னல மீதுமி ழற்றெனு

தாவற் கென்னல மூவிலை யத்தனு
ராரற் கண்ணில்வ ராவிடி லொட்பமார்
தூவற் பண்ணயில் வேல்கட ரித்தமா
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (அ)

வாசித் தென்மறை மாணவர் சித்தெலா
மானித் தென்மட வார்பதி யைச்சதா
நேசித் தென்னவ நாதரு மெச்சநா
ணீடித் தென்னிகல் காதுசு வர்க்கர்தாள்
பூசித் தென்னுயர் வார்தரு மத்தையே
போதித் தென்மயி லூர்தன்ம றைப்பனேல்
சூசிச் செம்மதி வானவர் சித்தர்சூழ்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (கூ)

வீரப் பொன்னொளி கால்கழ லுற்றகான்
மீளிப் பன்முனை யார்படை வெற்றிவேல்
சாரத் தண்ணுகை தான்மிளி ரக்கலா
தாரச் சண்முக னாகியுன் மத்தர்பேய்
கோரக் கண்ணின ரோடியொ ளிக்கமா
கோலச் செம்மலை நாமனை மெச்சியே
சூரற் குண்ணிழ லாயுமி ருக்கும்வேள்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே. (க0)

துர்மதி௵ கார்த்திகைமீ கஅ௳ சோமவாரம்.

---

# உ. சண்முகஞானபுரம்.

---

## (முதற்பத்து)

(அரும்பதக் குறிப்பு) ஆழி = மோதிரம். பூதி = செல்வம். பொற்ப = அழகு செய்ய. கொன் = பெருமை. நச்சும் = விரும்பும். ஒண்மையர் = தூய்மையுடையோர். உட்கு = அச்சம்.

(கருத்துரை) பலவகை ஆபரணங்களும் தனது திருமேனியில் அழகு செய்ய, சூரன் மார்பைப் பிளந்து, தனது ஒப்பற்ற வேலாயுதத்தோடு, மெய்யன்பர்கள் சூழ்ந்திருக்கும் பெருமையுடையான், நல்லோர் பல்கி வாழும் சண்முகஞான புரத்துக் கந்த சுவாமியே. (க)

(அ - பு) அன்னமது ஊர் அயன் = பிரமன். மா மாண் = மிக்க பெருமை பொருந்திய. நல் சென்னி = நல்ல திருமுடி. தோல் = சொல்.

(க - ரை) சனகாதி நால்வருக் குபதேசித்த தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபிரான் பிரணவப் பொருளை விரும்பியபோது அதனைக் கூறிய திருவேலன், கரணங்களுக் கெட்டாதவன்; புலவன்; மயிலிறை; வேதத்திற் பன்முறை கூறப்பட்ட பரம்பொருள்; அவனே சண்முகஞானபுரத் துறைந்துளோன். (உ)

(அ - பு) வாள் கால = ஒளியைக் கக்க. அற்பு = அன்பு. முரண் = வலிமை. அகி தொக்கு நேர் = பாம்பின் தோலை ஒத்த. தூசு = உடை. நடு = இடுப்பு. வாரணம் = (தெய்வ) யானை அம்மையார்.

(க - ரை) பொன் முதலிய மூவாசை பிடித்த புல்லறிவுடையோரும், அன்பராகித் தன்னடியை நாடினல், பாசத்தை ஒழிக்கும் வன்மையை அவர்க்குத் தந்து, விடாது காப்பவன் வேலாயுதன்; தேவயானை காதலன். அவன் சண்முகஞானபுரத்துக் கந்த பெருமானே. (ங)

(அ - பு) மாகம் = நாகம் = விண்ணுலகம். குலம் = அரண்மனை; (இங்கே) கோயில். அண்மை = சமீபம். கலாபி = மயில். சோகு - சோகம். அட்டு = போக்கி. உன்னுநர் = தியானிப்போர்.

(க - ரை) தேவர்களும் மெச்சும்படி, குலாலர்கள் விருப்பத்தோடு சிறப்பிற்செய்த கோயிலில், வேலேந்தி, மயிலைச்செலுத்தி, அன்பர் சூழவிருப்பவன், சண்முகஞானபுரத் தறுமுகனே. (ச)

(அ - பு) மகராலயம் = கடல். ஆவிக்குள் மிளிர் ஓர் விரல் மட்டுளோன் = இருதயத்திற் பெருவிரல் அளவு மட்டு முள்ள உருவினன். மாழை = அழகு. வாரண சத்தி = கோழிக்கொடி. அகிலம் = பூமி. அசலம் = மலை.

(க - ரை) அகத்தியனுருக்குப் பிரணவத்தை யுபதேசித்தவனும், கோழிக்கொடியோனும், தேவசேனை வள்ளி யென்னும் பிராட்டிகளுக்குக் காந்தனும், குறிஞ்சி நிலத்தை விரும்புஞ் செவ்வேளும், சண்முக ஞானபுரத்துக் கந்தசுவாமியே. (ரு)

(அ - பு) தென் = தாமம் = அழகு. தொக்கு = உடம்பு. கோடிக்கும் = கோஷிக்கும். ந செம்மல்: இதில் 'ந', சிறப்புப் பொருளுடைத்து. அண்ணல் = பெருமை.

(க - ரை) துறவிகளே! வைதிகர்களே! அறுமுகனுக் கன்பர்களே! தமிழ்க் கவிஞர்களே! தனது திருவடிப் பெருமையை எல்லாரு மடையும் பொருட்டுச் சருவாலங்கிருத பூஷிதனுய் விளங்குஞ் செவ்வேள், சண்முகஞானபுரத் துறையுங் கந்த சுவாமியே. (சு)

(அ - பு) வீ = பூ. வேரி = வாசனை. நூழை = நுட்பம். மால் = அழகு. சூலி = சிவன், பார்வதி. அம் மகன் = அழகிய மைந்தன்.

(க - ரை) சிவகுமாரனும் முத்தர் வசிக்குஞ் சண்முகஞானபுரத்தனுமாகிய கந்த பெருமான் தனது சாந்நித்தியத்தை மறைத்துவிடுவானுகில் வேலிற்காவது, கடப்பமாலை மணத்திற்காவது, வேதத்திற்காவது, அதன் நுட்பப்பொருளுடைய உபநிடதங்கட்காவது, மயிலின் அழகிற்காவது என்ன நலமுண்டு? [இல்லை என்றபடி] (எ)

(அ - பு) ஆழி = சக்கரம். நாரம் = கங்கை. ஒட்பம் = அழகு. ஆரல் = அக்கினி. தூ வற்பு = பரிசுத்தமும் வன்மையும். வேல் = ஆயுதம். இஃது ஆயுதங்களின் பொதுப்பெயர்.

(க - ரை) அழகும், தூய்மையும், வன்மையும் வாய்ந்த ஆயுதங்கள் தரித்த சண்முக ஞானபுரத்தானுகிய இறைவன், சூலபாணியின் நெற்றிக் கண்ணினின்றும் திருவவதாரஞ் செய்யாதிருப்பானுயின், இந்திராதி தேவர்க்கேனும், திருமாலுக்கேனும், பிரமற்கேனும் ஆகாய கங்கைக்கேனும், எனது ஆவலுக்கேனும் என்ன நலமுண்டு? [ஒன்றும் இல்லை என்றபடி] (அ)

(அ - பு) மானித்து = அளவிட்டு. பதி = கணவன். நவநாதர் = நவநாதசித்தர்கள். இகல் காது = பகையை அழிக்கின்ற. சூசி = கூர்மை.

(க - ரை) சண்முகஞானபுரத்துக் கந்தபிரான் மயிலேறுதலை மறைத்து விடுவானுல், வேதத்தை ஓதுதலாலும், தெய்வ சித்திகளை மதித்தலாலும், நீடித்த ஆயுள் பெறுதலாலும், துன்பந்துடைக்கும் பிறதேவர்களை வணங்குதலாலும், உயரிய தருமத்தையே போதித்தலாலும் என்ன பயனுண்டு? [சிறந்த பயன் கிட்டாது என்றபடி] (கூ)

(அ - பு) மீளி = வலிமை. பன்முனை ஆர் படை = நூறு முனையுள்ள வச்சிராயுதம். அத்து = சிவப்பு; தகரவேதுகை காண்க. அண்ணுதல் = நெருங்குதல். செம்மலை நாமன் = அருணகிரியென்னும் பெயருடையார். சூரன் = சூரியன்.

(க - ரை) சோதிமயமான இச்சண்முகஞானபுரத் திறைவன், உன்மத்தர் பேய் கோரக் கண்ணினரெல்லாம் ஒடி யொளிக்க; வீரக்கழலணிந்த திருவடிகள் வச்சிரப் படை வேற்படை யென்பன சார்ந்துள்ள திருக்கைகள் பிரகாசிக்க; அருணகிரிநாதரை மெச்சிக்கொண்ட ஆறுமுகனுகிச் சூரியனுக்கு உள்ளொளியாயு மிராநின்ற செவ்வேளே.

மெச்சிய என்னும் பெயரெச்ச வீறு விகாரத்தாற் ருெக்கது. மெச்சியே — ஏ - அசை. (௰)

முதற்பத்தினுரை முற்றிற்று.

———

# சண்முகஞானபுரம்.

## (இரண்டாம்பத்து)

பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியோன்றற்கு முப்பதக்கரம்.

சந்திர சேகரன் மைந்தனெ னத்திகழ் கந்தவேள்
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுவிவண்
சுந்தர நீடம விந்துள்ள மேதிகள் யாவுமே
தும்பிக ணுயக மாயவி ரும்பல்க ளாயவே
மந்திர நாடிவ ருங்கற வைக்கணம் யாவுமே
மங்களம் விஞ்சிய விண்ணவர் மண்ணர்பு கழ்ந்திடும்
இந்திரன் மாதவர் யாருமதித்திடு தேனுவே
யென்பன வாயகு கன்பத நாடிய ரன்பரே. (க)

மானில வண்டமு நீர்நிலை யண்டமு மாணரு
வாளன லண்டமு மாவளி யண்டமு மோசைசால்
வானிலை யண்டமு மாயபல் லாயிர கோடியு
மாசறு தன்பெரு மேனியி ருந்திட நின்றதே
சானவி யின்சுத னேயவ னந்தமில் கந்தவேள்
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுவிவண்
தேனலர் தண்ணிழ றந்திடு தாவரம் யாவுமே
தேவர வாவுபல் கற்பக மாதிய வாயவே. (உ)

நீரென வெந்தழ லென்னவி டந்தரு வானென
நீலென வெண்மதி செங்கதிர் புற்கல னேயெனப்
பாரென வுள்ளவொ ரெட்டுரு லங்கிள ரெட்டுருப்
பண்ணவ னண்டருண் மின்னுப ராபர னெம்பிரான்
தாரக மேனிய னென்னநி லாமொரு கந்தவேள்
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுவிவண்
சீரணி கிள்ளைபி கங்கொடி யாதிக கங்கடாந்
தேவர்து றக்கவ னப்புறு போகில்க ளாயவே. (ங)

திண்ணிய பொன்னெயி லோடுவி ளங்கம ராவதிச்
செல்வனை நான்மறை தேரெழில் வேதனை மற்றைய
விண்ணுறை வோரைய டக்கிவி ருத்தியு மாயுளும்
விஞ்சிய சூரனு ரம்பிளந் தச்சுரர் வாழவோர்

தண்ணளி செய்தப ரம்பொரு ளாகிய கந்தவேள்
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுலிவண்
பண்ணிய வில்லமெ லாமுயர் சித்திர மாளிகை
பத்திர சொர்க்கவி லாசமி குந்தளி யாயவே. (௪)

பாட்டளி மூசுந றுந்துண ரிந்துள மாலைமா
பங்கய முல்லைசு கந்தவ லங்கல ணிந்தவேள்
நாட்டிகர் மேவிய சென்னைவ ளம்பதி சாரொரு
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுலிவண்
கோட்டமி லாமன முற்றகு லாலரு மற்றைய
கோதணை யாதவர் யாவரு மேனெறி யாரருள்
ஈட்டுமி லேகர்கள் மாதவர் சித்தர்க ளாவரே
யெம்பெரு மான்முரு கன்கழல் பாடுநன் னுவரே. (௫)

நீலமும் வெள்ளையு மஞ்சளு மம்மரி செம்மையு
நெட்டுடன் மீதுமி ளிர்ந்திட வேவரு மஞ்ஞையில்
வேலணை கைகளு மாறுமு கங்களு நூபுர
மேயப தங்களு மின்னவெ ழுந்தருள் கந்தவேள்
சாலவு நல்லளி யுற்றகு லாலர்செய் கோயிலார்
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுலிவண்
தூலமு மாவியு முய்ந்திட வுட்கொளு ணுவெலாஞ்
சோதியி லேகர்வி ரும்பிய ருந்தமு தாகுமே. (௬)

ஆதவ னம்புலி நன்குக வித்திட வெண்குடை
யண்டர்க ளுதனி ரட்டிட வொள்ளிய சாமரம்
ஏதமி லக்கினி தெற்கரி தெற்கணை பச்சிம
னேறுபு னற்பதி வாயுகு பேரனெ டுங்கழு
மாதிற வீசனெ னுந்திசை நாதரு மற்றைய
வானவ ருந்தகு வூழிய மேசெய்ய வந்தசேய்
கோதறு சண்முக ஞானபு ரத்தமர் பெற்றியாற்
கூவல்கு ளங்களு மிங்குறு கங்கைக ளாயவே. (௭)

உண்முக வஞ்சக மாமலை போழொரு கொற்றவே
லொன்றுகை யானென வெங்கணு மாயவிர் கந்தவேள்
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுலிவண்
சார்தெரு வார்பல கற்களெல் லாமதி யுத்தம
வெண்மணி செம்மணி பொன்மணி சாமள மாதிபன்
மேன்மணி யாயவ வற்றினை யேநன்ம திப்பிடக்
கண்மதி யாளரை வம்மினெ னத்தமிழ் பாடுமின்
காவிய நாடக மின்னிசை செய்கவி வாணரே. (௮)

ஆருயி ருக்கருள் காரிய சத்தியெ னத்திக
 மூாசறு வள்ளியொ டுந்திரு மந்திர மாதவர்
நாருடன் மெச்சறி வாமொரு சத்தியெ னுஞ்சுர
 நங்கையொ டும்பெரு வன்மைய ருநவ வீரர்கள்
தாருட னஞ்சலி செய்யவ யங்கொரு கந்தவேள்
 சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுவிவண்
கூருணர் வோடுறை வோர்குழை கொண்டுவ ரிச்சிறைக்
 கோழியெ றிந்திடு செல்வர்க ளாய்நனி யுய்வரே. (௬)

தேவிப வானிகை யாமலர் நண்ணுறு தேனெனச்
 செவ்வெரி நாளறு மங்கையர் பீர்நுகர் சேயென
ஆவிக ளுள்ளுறை யந்தரி யாமிபி ரானென
 ஆயிர மம்பக மாமயி லேறயி லானெனத்
தாவில்பு கழ்க்கவி தேவென வேயவிர் கந்தவேள்
 சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னுவிவண்
மேவிந யப்பொடி ருப்பவர் யோகிக ளாவரே
 மெய்யறி வோடிது பாடுந லத்தரும் வாழ்வரே. (௧0)

துர்மதிஞு மார்கழிமீ ௨௨ ஆதித்தவாரம்.

---

# சண்முகஞானபுரம்.

---

## (இரண்டாம்பத்து)

(அ - பு) மேதி = எருமை. தும்பி = யானை. உம்பல் = சிறந்தயானை. மந்திரம் = வீடு. கறவைக்கணம் = கறக்கும் பசுக்கூட்டம். தேனு = காமதேனு. குகன் = ஆன்மாக்களின் இருதய குகையில் வசிக்குங் கந்தபெருமான்.

(க - ரை) சிவகுமாரனுகிய கந்தவேள் இந்தச் சண்முகஞானபுரத்தில் எழுந்தருளியிருப்பதால், அங்குள்ள எருமைகள் யாவும் சிறந்த யானைகளாகவும், கறவைப்பசுக்கள் யாவும் காமதேனுக்களாகவும் விளங்குகின்றன. (௧)

(அ - பு) மாண் = பெருமை. வாள் = ஒளி. வளி = காற்று. ஓசை சால் வான் நிலை அண்டம் = சத்தத்திற்குப் பிறப்பிடமாகிய ஆகாச அண்டம். பெருமேனி = பாரமேசுர ரூபம். தே = தெய்வம். சானவி. கங்கை. தேன் = வாசனை.

(க - ரை) ஐந்து பூதங்களாலுந் தனித்தனி ஆகிய பல்லாயிர கோடி அண்டங்களுந் தனது பாரமேசுர ரூபத்திலே இருக்கும்படி நின்றருளிய தெய்வம், காங்கேயனே. அக்கந்தவேள் சண்முகஞானபுரத்தில் அமர்ந்ததனுல், அங்குள்ள தாவரங்களெல்லாம் கற்பகம் முதலிய விருக்ஷங்களாகவும், காமவல்லி முதலிய கொடிகளாகவும் விளங்குகின்றன. (௨)

(அ - பு) நீல் = காற்று. புற்கலன் = ஆன்மா. தாரகம் = பிரணவம். பிகம் = குயில். கொடி = காக்கை. ககங்கள் = பறவைகள். போகில்கள் = பறவைகள்.

(க - ரை) பிருதிவி முதலிய எட்டிலுமிருக்கும் அஷ்டமூர்த்தியென்று தேவர்களால் இருதயார்ச்சனை செய்யப்படுபவனும், பிரணவ ரூபியுமாகிய கந்தவேள் சண்முகஞானபுரத்திலிருத்தலினுல், அங்குள்ள பறவைகளெல்லாம் தேவலோகப் பக்ஷிகளாய் விளங்குகின்றன. (ங)

(அ - பு) எயில் = மதில். வேதன் = பிரமன். பத்திரம் = அழகு. தளி = இருப்பிடம்.

(க - ரை) தேவரை யடக்கியாண்ட சிறந்த சூரனைக் கொன்று, அத்தேவரைக் காத்தருளிய கந்தவேள் சண்முகஞானபுரத்தில் அமர்ந்திருத்தலினுல், அங்குள்ள வீடுகளெல்லாம் சுவர்க்கவிலாச மிகுந்த இல்லங்களாயின. (ச)

(அ - பு) அளி = வண்டு. துணர் = பூ. இந்துளம் = கடம்பு. கோட்டம் = கோது = குற்றம். இலேகர் = தேவர். நாவர் = நாவினையுடையோர்.

(க - ரை) கடம்பு முதலிய பலவகை மாலைகளை யணிந்த கந்தவேள், சண்முகஞானபுரத்தில் அமர்ந்திருப்பதனுல், அங்கு வாழுங் குலாலர் முதலிய நல்லோர் யாவரும், தேவரும், சித்தரும், தபசிகளும், முருகனைப் பாடுவோருமாய் விளங்குவர். (ரு)

(அ - பு) அம் அரி = அழகிய பச்சை. மஞ்ஞை = மயில். நூபுரம் = சிலம்பு. அளி = இரக்கம். தூலம் = உடல். உணா = உணவு.

(க - ரை) பல நிறத்தோடு விளங்கும் மயிலின்மீது எழுந்தருளும் அறுமுகன், வேட்கோவர் கட்டிய கோயிலைக்கொண்ட சண்முகஞானபுரத்தில் அமர்ந்துள்ளான் ஆதலால், அங்குள்ளோர் உட்கொள்ளுமுணவு தேவாமுதமாகும். (சு)

(அ - பு) ஆதவன் = சூரியன். அம்புலி = சந்திரன். அண்டர்கள் நாதன் = இந்திரன். தெற்கு அரி = யமன். தெற்கு அணை பச்சிமன் = நிருதி. புனற்பதி = நீர்க்கடவுள் = வருணன். கழு = சூலம். கூவல் = கிணறு.

(க - ரை) எல்லாத் திசைநாதர்களும் பிறதேவருங் குற்றேவல் செய்ய வீற்றிருக்குங் கந்தவேள் சண்முகஞானபுரத்தில் அமர்ந்திருக்கும் நன்மையால், அங்குள்ள கிணறுகளுங் குளங்களும் பூலோக கங்கைகளாய் விளங்குகின்றன.

[தேவர் செய்யுங் குற்றேவல் விவரம் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது : சூரியனுஞ் சந்திரனும் முத்துக்குடை கவிப்பர். இந்திரன் சாமரம் இரட்டுவன். அக்கினிதேவன் தீவர்த்தி பிடிப்பன். யமன் வாளேந்தி நிற்பன். நிருதிக்கடவுள் காளமூதுவன். வருணன் படிக்கமேந்துவன். குபேரன் வெற்றிலைப்பெட்டி சுமப்பன். ஈசானன் சூலம்பிடிப்பன். பிரமன் இரத்தின பாதுகை சமர்ப்பிப்பன். விண்டுதேவர் மலர் மாரி தூவுவர்.] (எ)

(அ - பு) உண்முக வஞ்சக மா மலை = தன்னிடம் வருவோரை அலைத்துக் கொல்லவேண்டும் என்னும் வஞ்சகத்தை வைத்துக்கொண்டு மற்ற மலைகள்போல நிற்கும் கிரௌஞ்சமலை. போழ்தல் = பிளத்தல். பொன்மணி = கோமேதகம். சாமளம் = மரகதம். கண்மதியாளர் = விலை மதிப்பிடுவோர்.

(க - ரை) கவிவல்லோர்களே! கிரௌஞ்சகிரியைப் பிளந்த வேலாயுதன் சண் முகஞானபுரத் தமர்ந்திருத்தலினால், அவ்வூர்த் தெருவிற் கிடக்கும் கற்களெல்லாம் உயர்ந்த நவரத்தினங்களாயின. அவற்றை மதிப்பிட வல்லாரை வரும்படி பாடுங்கள். (அ)

(அ - பு) காரிய சத்தி = கிரியாசத்தி. அறிவாமொருசத்தி = ஞானசத்தி, தேவ குஞ்சரி. தார் = மாலை. சிறை = சிறகு.

(க - ரை) நவவீரர்கள் வணங்க வள்ளி தெய்வயானை யென்னும் பிராட்டிகளோடு விளங்கும் பிரானாகிய கந்தவேள், சண்முகஞான புரத்தில் அமர்ந்திருத்தலினால், அங் குள்ள அறிஞர்கள் தம்முடைய குண்டலங்களை வீசிக் கோழிகளை யோட்டுஞ் செல்வர் களாய் வாழ்வார்கள். (௯)

(அ - பு) எரிநாள் = கார்த்திகை. பீர் = முலைப்பால். பிரான் = பிரியாத வன், அத்துவிதமாய்க் கலந்துள்ளவன். அம்பகம் = கண். புகழ்க்கவி = திருப்புக ழாகிய தமிழ்வேதம் பாடியருளிய அருணகிரியார். (இந்திரன் கண்கள் மயிலின் பீலிக் கண்களைக் குறிப்பிடுகின்றன.)

(க - ரை) பார்வதி தேவியாரின் கையாகிய மலரிற் பொருந்துந் தேனென வும், கார்த்திகைப் பெண்களின் பாலுண்ணுங் குழந்தையெனவும், உயிர்கட்குள் வசிக் கும் அந்தரியாமியெனவும், யாண்டுமுள்ள அத்துவிதப் பொருளெனவும், ஆயிரங்கண்ணை யுடைய இந்திரனாகிய மயிலின்மீது ஏறும் வேலனெனவும், அருணகிரியாரின் கடவு ளெனவும் விளங்குங் கந்தபெருமான் சண்முகஞான புரத்தில் அமர்ந்துள்ளான். ஆத லால் இங்கு விரும்பி வசிப்போர் யோகிகளாவர். மெய்யறிவோடு இப்பதிகம் பாடு நல முடையோரெவரும் வாழ்வர். (௧௦)

இரண்டாம்பத்தினுரை முற்றிற்று.

---

ச. சச்சிதாநந்தம்பிள்ளை B. A., L. T., அவர்களது வேண்டுகோள் அங் கீகரித்து நூலாசிரியரவர்கள் பாடியருளிய சண்முகஞானபுரத் திருப்பதிகங் களின் செய்யுள்கட்கு (5 - 1 - 1922 - ல்) அப்பிள்ளையவர்கள் செய்த வுரைகளே யிங்ஙனஞ் சேர்க்கப்பட்டன வென்க.

---

# ந. சண்பகாடவி.

(திருவேட்டீசுரம்)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியோன்றற்கிருபத்திரண்டக்கரம்.

*தன்ன தானன தந்த தானதன*
*தன்ன தானன தந்த தானதன.*

பொன்மை யாயவிர் கந்த மாதனனே
புண்ணி யாமணி கண்ட னூர்மகனே
நன்மை யேயரு ளும்பர் நாயகனே
நன்னர் சால்குக சுந்த ராசிவனே
வன்மை வேலவ வென்று மாதுதியே
வண்மை யோடுசெ யண்டர் சூழ்பெரியோன்
சின்மை யேதுமில் கந்தன் மேவியவூர்
சென்னை யோடுறு சண்ப காடவியே. (க)

அடியோன்றற்கிருபத்துமூன்றக்கரம்.

*தந்த தானன தந்த தானதன*
*தனன தானன தந்த தானதன.*

இந்தி ராதியர் கொண்ட சீர்களெலா
மெளிமை யாயிற வென்ற மாவசுரர்
மந்தி போனடை தந்தி டாதெடடா
வலிய வேல்களை நின்று போர்செயடா
தந்தி ராவினி யெங்க ளோடினுமே
தடிவ னேயுனை யென்று சாடொருகோ
கந்த னேயவன் வந்து மேவியவூர்
கவின ளுதவொர் சண்ப காடவியே. (உ)

அண்டர் நோவொடு தந்த மீனமெலா
மருளி லாதுதி னங்கொ ளாவலொடே
உண்ட தானவர் நம்பு மோர்தலைவா
வுரனொ டேயெதிர் நின்று வாளெடடா

சண்ட மாருத வம்பு நேர்தொடடா
சமரி லோடுத னிந்தை யாகுமடா
கண்ட காபொரு தென்று சாடயிலாள்
கடவு ளூரிது சண்ப காடவியே. (௩)

எங்கு மேநிறை கின்ற தேவனோயோ
ரீளனு னேயென வம்பு பேசியவாய்
எங்க டாபடை யெங்க டாவிடையே
லெரிப லாயிர மம்பு மேதொடடா
சிங்க நாதமு ழங்க வூதெடடா
திகிரி மூவிலை தண்டம் யாவையுமே
மங்கு தானவ வென்று சாடியவேன்
மழவ னூரிது சண்ப காடவியே. (௪)

செங்கண் மாலையு மஞ்ச மீதினிதே
திகழ்செய் வானைய மஞ்சு மாறுசெய்தாய்
அங்க ணார்பல வண்ட மாள்வலிநீ
டசுர னுயிரை யின்று வாடுகிறாய்
பங்க மாயெதிர் நின்று போர்கொடடா
பதறு நீயினி யண்ட கோளகைபோய்த்
தங்கி னுலுமெ னென்ற சேயவனூர்
தகைமை யான்மிகு சண்ப காடவியே. (௫)

தம்பி மார்களி றந்து போயினுமே
சதுர ராகிய மைந்தர் மாளினுமே
பம்பு சேனைம டிந்து போயினுமே
பகைவெல் வீரர்ம றைந்து போவர்கொலோ
உம்பர் யாரும்வ ருந்து மாறுபொலா
வொருகு ரீஇயின் வந்து லாவுகிறாய்
வெம்பு தானவ வென்று சாடிடும்வேல்
விமல னூரிது சண்ப காடவியே. (௬)

அங்கி போலவும் விண்டு போலவுமா
வசலை போலவு முந்தி போலவுநீள்
கங்குல் போலவும் வந்து சூழசுரா
களிபெ றாயுனெ டிங்கு போர்தானுன்
செங்கை வேல்விடு முன்செ யாடலடா
தெரிய டாநனி நின்று போர்கொடடா
மங்கு றேலினி யென்று கூறியவேன்
மயில னூரிது சண்ப காடவியே. (௭)

உம்பி சாமுனம் வந்த தூதுவன்வா
யுரைகள் யாவையு நம்பி னுயிலைவீண்
வம்ப னுயிரன் வெம்பி வாடுகிறாய்
மதியி லாயினி யென்செய் வாயொழிவாய்
சம்ப ராரியொ டுங்க! வேபுரியோர்
சருவ னேயிவ னென்று காணெணீ
நம்பு தானவ வென்ற வேலவனூர்
நவைந ணுதவிர் சண்ப காடவியே. (அ)

விஞ்சை வானவ ரஞ்ச மாகடன்மேல்
விறல்கொள் சூரனு யர்ந்த மாமரமாய்
மஞ்சு லாமுல கெங்கும் வாடவளாய்
வளைத லோவுற வும்பின் வாளொடுமா
நஞ்சு நேரவு டன்று சீறவனீ
ணவையெ லாமற வுங்கொல் வேலினையே
வஞ்சு ரேசுர கந்த னூர்வமொடே
யமரு மூரிது சண்ப காடவியே. (௯)

அடியோன்றற்கிருபத்துநான்கக்கரம்.

*தந்த தானன தந்த தானதன*
*தனன தானன தனன தானதன.*

அண்ட நாயக பிண்ட நாயகவா
னமரர் நாயக சமரர் நாயகமா
தண்ட நாயக சண்ட சூரனதூழ்
தடியு நாயக குருகு வானியவாழ்
தொண்டர் நாயக வென்று தேவர்மகா
துதிசெய் வேலிறை யருணை யானையுமே
கொண்ட வாலய சண்ப காடவியோர்
குறைவி லாதுறை திரும காநகரே. (௧௦)

துர்மதி௵ மார்கழி௴ ௧௩௨ புதவாரம்.

---

அ. உம்பி = உன் தம்பி ; ஈண்டுச் சிங்கமுகாசுரன்.
௧௦. வானி = விருதுக்கொடி.

# ச. திருவொற்றியூர்.

கலிவிருத்தம்.

அடியோன்றற்குப்பத்தக்கரம்.

*தான தத்தன தான தத்தன.*

**நா**லெ னப்புகன் ஞான வித்தையின்
மூல மெய்ப்பொருண் மோத முற்றுணர்
சீல மிக்கவர் சேரு மொற்றியூர்
வேல னைப்பணி வோம்வி ருப்பொடே. (க)

**தூ**ய சித்தரு மேசில் சொர்க்கரும்
நேய முற்றுற னீடு மொற்றியூர்
மேய வற்புத வேல னைத்தொழல்
மாய வுட்கிடை மாச ழிக்குமே. (உ)

**தோ**ணி தத்துவர் சூழ்வ னப்புமொள்
ஆணி முத்தமு மாரு மொற்றியூர்
பேணி நிற்குமு பேத சத்திகொள்
பாணி யைத்தொழல் பாவ மெற்றுமே. (ங)

**வா**ன முட்டுயர் மாளி கைக்குலம்
மேன யப்பொடு மேய வொற்றியூர்
ஞான வித்தயி னுத னைத்தொழின்
ஈன மற்றக ணேறன் முற்றுமே. (ச)

**பா**ளை கக்குதென் மூடு பக்கமும்
மீளி யத்தமு மேய வொற்றியூர்
நீள யிற்கர நீத னைத்தொழல்
கோளை வெட்டருள் வாள்கொ டுக்குமே. (ரு)

**கோ**ளில் பிச்சிபல் கோடை செச்சைகள்
நாள லர்க்குல நாறு மொற்றியூர்
வேள்வ லக்கர வேல னைத்தொழின்
நீள்ப தத்திரு வேயு நித்தனும். (சா)

---

ரு. அத்தம் = வழி.
சா. கோடை = வெண்காந்தள். செச்சை = வெட்சி.

ஞான பட்டின நாத னுற்றவி
மான வெற்பமும் வாழு மொற்றியூர்
வேணி லைக்கர வீர னைத்தொழல்
ஆன வர்க்கறி வான தெட்டுமே. (எ)

மாசில் பத்தர்கள் வாழு மொற்றியூர்
ஈச புத்திர னுயி ருக்குமா
தேச யிற்கர தேவ னைத்தொழு
நேச முற்றவர் நீடி ருப்பரே. (அ)

ஆணை மிக்கவ னும கிழ்ப்பரன்
ஏணை யுற்றமர் யாண மொற்றியூர்
மாண யிற்பெரு மானை நச்சுநர்
யாணர் மிக்கன டி ருப்பரே. (கூ)

ஈடில் பொற்றளி யேயு மொற்றியூர்
கூடி நிற்குமோர் கோதில் கொற்றவேற்
பீட னைத்தொழல் பேண னப்புகழ்
பாடி னர்க்குறு பாடி ருத்துமே. (க0)

துர்மதிஞு தைமீ உஉ சனிவாரம்.

---

# ரு. மயிலை.

---

கலிவிருத்தம்.

அடியொன்றற்குப்பதினேழக்கரம்.

*தனதனன, தனதன தனன, தனதனன.*

பரிதியிலேய் பலநிற முடைய கிளிபலவோர்
சரளியினே சரிகம பதநி யெனுமிசையேழ்
வரிசையிலே செயமயி னடைசெய் மயிலையில்வாழ்
சரவணவே ளடியவர் தகுவி சயமுறுவார். (க)

கனைகடலுன் வளைவள னுடைய கவினும்வழா
வினையுடையார் விடுதியு மிளிரு மயிலையில்வாழ்
முனையுடைவே லவிர்கர னடியர் முகமலர்தாம்
இனைவணவா விதயமு மொருமை யிடமுறுமே. (உ)

மலைமகளோ டலர்மகள் கலைநன் மகளுமுலாம்
நிலையுடைமா ணிதநனி நிகழு மயிலையில்வாழ்
இலையயில்வே லிறையடி நினையு மிதயமுளோர்
மலைவிலரா யிறுதியி லுறுதி மருவுவரே. (௩)

மதிதவழ்மா டநிரைகண் மிளிரு மகமிகவே
விதியுடனே புரியிட னவிரும் வியனுறுமா
வதிபதிகோ புரநிலை யிலகு மயிலையில்வாழ்
பதியெனவே சுடர்குகன் மகிமை பகரரிதே. (௪)

குரவுதுழாய் குமுகுமு குமெனு மணமலரே
தரமிகநீள் பணைசல சலென வொலிசெயவே
பரவியவூ ரெனவொளிர் பழமை மயிலையில்வாழ்
பரசிவசேய் பதமலர் தொழுநர் பயன்வியனே. (௫)

சுடலையில்வே மதரையொர் தொடிய ளெனவனையோர்
மிடலுடையோன் விழைநல முடைய மயிலையில்வாழ்
சுடர்வடிவே லிறையடி மலர்க டொழுபவர்தாம்
இடரிலரா யிறுதியி லினிது மருவுவரே. (௬)

மகிமைவிழா வெழிலொடு நிகழு மயிலையில்வாழ்
சிகியிவர்வோய் சிவசிவ வெனுமொர் நலன்விழைவோய்
அகிலமெலா மவிரறு சுகுண வருளெனவே
புகழ்பெரியா ரளவறு பதவி புகுதுவரே. (௭)

மதுகரமூ சலர்பொழில் வளரு மயிலையில்வாழ்
நுதியவிர்வே லுறுகர குகனை னொசிவறுநூல்
பதியெனவே பகர்தரு பிரம மெதுவதுநீ
கதியதுநீ யெனவடை பவர்கள் களிபெறுவார். (௮)

மறைபயில்வோர் வதிதரு தளிம மயிலையிலே
உறைகுகவே டனையதி கருணை யுடையமகா
மறையவனே சரவண பவதை வதமனுவீ
இறையவனே யெனவழி படுந ரிடர்கடிவார். (௯)

வணிகர்வியா பகநிர ணிகழு மயிலையில்வாழ்
துணிவளர்வே லனைமிகு புகழ்கள் சொனபெரியான்
பணிபெருமாள் பருமயி விவரு மொருபெருமா
அணியிளையோ னெனநினை பரிவ ரஞரிலரே. (௧௦)

துர்மதி௵ தை௴ ௨௰௨ மங்களவாரம்.

# சூ. திருவான்மியூர்.

**எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

*சீர்முழுதொன்றிய சிறப்புடைத் தலையாகெதுகை.*

**அடியொன்றற்குப்பதினைந்தக்கரம்.**

*தான தான தான தான, தான தான தானனா.*

சீரு லாவு நீடு மாட வீதி யாதி தேவர்வாழ்
ஏரு லாவும் வேத பீட மேய்வி லாச வான்மியூர்
நாரு லாவு ஞான வேலி னாத னாத பாதமே
பாரு லாவு ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (க)

கோட ரூத சோலை தாழை கூடு நீழ லூறுநீர்
ஏட ரூத வாரி சாதி யேய்த டாக வான்மியூர்
மாட ரூத மாம யூர மூரு மாதி பாதமே
பாட ரூத ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (உ)

தேச ரூத மீனு லாவு சீத வாரி நாளுநீர்
வீச லார்வி லாச வூர்வி வேகர் வாழும் வான்மியூர்
வாச வேலி னுன்வி பூதி மாண ரூத பாதமே
பாச நூறு ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (ந)

கூடு நாரை மீனை வாரு கோலம் வான்மண் மேடுவால்
நீடு ஞாளி பூளை சேன மேர்கி லாவும் வான்மியூர்
நாடு வேல னும யூர நாத னாத பாதமே
பாடு மோகை ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (ச)

பூவு லாம்வி ணுடு மேரு பூத மேகி னூடுமே
ஓவு ரூதெ நாளு மாத ரோதி சாரும் வான்மியூர்
மேவு நீன்ம யூர மூரும் வேல னாத பாதமே
பாவு தார ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (ரு)

நாவல் வாழை தாளி பூக நாளி கேர மேயவூர்
தாவ னூர வாவி வாழ்ச காய பூதி வான்மியூர்ப்
பூவன் மேனி வேல னீத போத னாத பாதமே
பாவ னுவர் ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (சு)

---

ரு. ஓதி = கற்றோன்; **பிங்கலந்தை காண்க.**

பூணி கோக டாமை யாடு பூழி மூச வேகுமூர்
ஏணி லாவு வேத கீத வேர்கு லாவும் வான்மியூர்
வாணி லாவு ஞான வேலன் வாச நாத பாதமே
பாணி மேய ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (௭)

பேழு ணவெ ணுமை யூக மேபல் காய்கள் பீறலாற்
கூழு லாய சூழன் மேவு கோல நீடும் வான்மியூர்
வாழு மாம யூர மூரு மாக வாதி பாதமே
பாழு ருத ஞான நூலர் பாடும் வீடு மாகுமே. (அ)

பாலி ரூந லால நீள்ப லாவி ளாப ராய்களோர்
பாலி ரூம தூக மாவொர் பால ளாவும் வான்மியூர்ப்
பாலின் மேனி நாதர் சேய்கு கேச ருத பாதமே
பாலி னேய மானு நூலர் பாடும் வீடு மாகுமே. (௯)

கூன ளுகு மீன மூரல் கூடு பானல் வான்மியூர்
ஞான வேல ளூ லோதி நாம ருடு தேவனும்
மான வான்ம யூர மேறு மாக சோதி பாதமே
பான ருவி ன்னேதி நூலர் பாடும் வீடு மாகுமே. (௧௦)

துர்மதிஸூ மாசிமீ" உ௪௨ சுக்கிரவாரம்.

---

# ௭. திருக்கழுக்குன்றம்.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டாமெழுத்துமொற்று மொன்றத்தொடுத்த வெதுகை.

அடியொன்றற்குப்பத்தோன்பதக்கரம்.

*தனத்தந் தனத்தந் தனத்தந் தனத்தந் தனத்தந் தனதான.*

மணக்கஞ் சமத்தந் தரிக்கும் பரைக்குஞ் சிவற்குஞ் சுதன்மாசார்
பிணக்கந் தருக்கங் களைக்கொன் றுருக்கம் பிடிக்குங் குகதாசர்
இணக்கந் திளைக்குங் குணத்தன் பருக்கின் பிசைக்குந் தொகைகாணேர்
கணக்கன் சுபத்தெண் குணக்குன் றிருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (௧)

---

அ. உலாய = உலாவிய. உலாவல் = பொருந்தல்.
௧௦. இன்னேதி = இனிய ஞானம்.

இடித்திண் கொடிச்சம் பனுக்குஞ் சுரர்க்கும் பிறர்க்குந் துயரீசூர்ப்
பிடித்தென் பிரத்தங் கொழுப்புங் கலக்கும் பிணச்செம் புலமீதே
அடித்துந் திகற்செம் படைப்பங் கயப்பண் படக்குங் கரதேவன்
கடித்தண் கடப்பந் தொடைக்குன் றிருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (உ)

தரக்குங் கரக்குன் றுநச்சும் புரத்தந் தரற்குங் குருநாதன்
உரக்குன் றவர்க்கொன் றடக்குங் குரற்பண் புடைச்செங் குருகாடுஞ்
சிரக்குங் குமத்தம் பொலச்சந் தனத்தன் றிருச்செங் கதிர்வேலன்
கரக்குஞ் சரப்பெண் கடிக்கண் டிருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (௩)

எனைத்தந் தளித்தொண் டமிழ்ப்பண் புணர்த்தின் றிளைக்கும் படிமேனி
தனைத்தன் றயைச்சிந் தொளித்தெங் குநிற்குந் தனிச்செங் கரவேலன்
தினைத்தண் புனத்தின் குணச்சுந் தரத்தின் றிருக்கண் டருடேவன்
கனைத்தன் பழுத்துங் கழற்கண் டிருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (ச)

புலைத்துண் டெடுத்துண் டுவக்குங் குணத்தம் புரப்புண் டரம்யாவும்
தலைத்தண் களிப்புண் டுளத்தஞ் சலிக்குந் தகைத்திண் ககராசர்
நிலைத்தின் புழுக்குண் சிறப்புஞ் சுகத்தின் பனிப்புங் குகனேயக்
கலைத்தண் டமிழ்ச்சிந் திருப்பும் பெருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (ரு)

கொடைப்பங் கயற்குந் திருத்தங் கரிக்கும் பரற்குங் குணமேய
படைப்பும் புரப்புந் துடைப்புஞ் சிறக்கும் படிக்கன் றருள்சேயோன்
தொடைப்பம் புரத்தன் கொலுத்தங் கலிற்றுன் பழிக்குஞ் சுகமேதன்
கடைப்புங் கவர்க்குஞ் சுரர்க்கும் பகுக்குங் கழுக்குன் றிதுவேயோ. (சு)

புலிச்சங் கனைக்கொன் றவற்கின் பவத்தன் பொருப்பன் றிகழ்சால்பால்
ஒலிச்சங் கொலிக்குங் குளத்துந் தருக்கொந் துரத்துங் கமழ்வேரி
வலிச்சண் பகக்கும் பகத்தும் பலத்துந் தலத்துந் திருமாடக்
கலிச்சுந் தரத்துஞ் சுவர்க்கங் கடுக்குங் கழுக்குன் றிதுவேயோ. (எ)

செருக்கண் டுவக்கும் படைச்சிந் துழக்குந் திறத்தும் பரதேணை
முருக்குஞ் செருக்குந் தருக்குந் திளைத்தன் பழிக்கும் பவமூலம்
பெருக்குங் கயத்துண் டனச்சும் பொருப்பும் பிளக்கும் பெருவேலன்
கருக்கம் பலைத்துன் பெருக்கின் பிருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (அ)

---

௩. தரக்கு = புலி.
கரக்குன்று = யானை.
சயந்தனம் = தேர்; "சந்தனம்" என மருவிற்று.

ரு. புண்டரம் = கழுகு.
ககராசர் = பக்ஷிராஜராகிய கழுகுகள்.

எ. புலிச்சங்கன் = வியாக்கிரமுகாசுரன்; இவனைக்கொன்றவர் வீரபாகுதேவர்.
சங்கம் = கன்னம்; நெற்றியுமாம்.

செவிக்குஞ் சுவைத்துண் பதற்குங் கணிற்குந் திருப்புஞ் செயல்போமா
குவிக்குந் தொழிற்குஞ் சுகிக்குஞ் சுகக்குங் கொடுக்குங் கொடையோருட்
சவிக்கண் பிடிக்குந் திருச்சம் புநித்தன் றனிக்கந் தபிரானென்
கவிக்குங் கதிக்குங் குறிப்பன் பிருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (௯)

ஒளிக்குங் கருட்கும் பிழைப்பின் றழிப்பின் றுதிக்குங் குகதேசில்
புளிக்குங் கசக்குஞ் சகத்தின் பெனக்கொன் பொருப்பன் றயைவாரி
குளிக்குஞ் சுகர்க்குந் தெருட்பண் புணர்த்துங் குணச்சந் தனையாள்சேய்
களிக்குன் றெளிக்குன் றுருக்கொண் டிருக்குங் கழுக்குன் றிதுவேயோ. (௧௦)

துந்துபிஸு கார்த்திகைமீ ௩௨ சோமவாரம்.

---

# அ. யுத்தபுரி.

---

## (திருப்போரூர்)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

### அடியொன்றற்குப்பத்தோன்பதக்கரம்.

*தத்த தனதன தத்த தனதன தத்த தனதனன.*

பத்தி மறையவர் நித்த மவியெரி பற்று மகமதிலே
சத்த முகிலெனி கர்த்தெ ழுபுகைசு வர்க்கர் தலமுறவே
சுத்த முனிவரர் சித்தர் கடவுளர் சுற்றி வழிபடவே
புத்தி தருகுக னச்சு நயமிகும் யுத்த புரியிதுவே. (௧)

கற்க லசமல பொற்க லசமிவர் கச்சு ளுளவையென
நற்க விஞர்சொல நிற்கு மகளிரை நச்சு மரசரெலாம்
பற்க ளுடையவ ரைக்கொ டயர்பல விட்டி பணவிலராய்
நிற்க வொளிரயி லத்த நிகழ்குகன் யுத்த புரியிதுவே. (௨)

துற்று பகைமைபெ ருக்கி யிடர்தரு துட்டர் பலரையுமே
வெற்றி கொளவுணி னைக்கு முரனெடு வெற்பை யதன்முதலைச்
செற்று நிலவுயர் சத்தி தரனடி சித்த நினைபவர்சார்
பொற்ற ளிகளொடு நிச்ச லுநிகழும் யுத்த புரியிதுவே. (௩)

மட்டு மடலவிழ் முட்க யிதைமல ரைத்த முடல்விளரே
ஒட்டு மழுவென நச்சி வருபல கொக்கி னினமுலவும்
துட்டர் பகைவரை யெற்றி யடியர்சு கிக்க மறிமதமா
பொட்டு நுதலிடை யிட்டு மிளிர்குகன் யுத்த புரியிதுவே. (௪)

ஒட்ப முருகென வைப்ப டையனென வுட்பொ ருளெனநுதற்
கட்ப ரமனென நக்கர் குருவென முத்தர் கடவுளென
நட்பு நிலவுகொ டிச்சி சசிமக ணற்க ணவனெனவோர்
புட்ப டமனென நிற்கு மிறையுறை யுத்த புரியிதுவே. (௫)

மிக்க செழுமையு டைத்த னுடையவி ருக்க நிரைநிலையின்
பக்க னெடுகிய கற்ப கமுதல வெட்கி மகபதியூர்
புக்க மரமுனி ழைத்த பெருமைகள் பொற்ப வமரரையாள்
செக்க ரயிலனி ருக்கை யொடுதிகழ் யுத்த புரியிதுவே. (௬)

செச்சை யுடறிமிர் சொர்க்க மகளிர்தி றத்த புருடருமே
இச்சை யொடணிதி ரட்சி பவளமி றைக்கு நரலையையே
விச்சை யினர்தெரு முட்ட நகர்வலம் வெட்சி மலர்மிலைவேள்
பச்சை மயிலைந டத்த வவிர்பழை யுத்த புரியிதுவே. (௭)

எப்பொ ழுதும்விப வப்பெ ருமையிவி ருக்கு மளகையனை
ஒப்ப வருநதி ருப்பு ளெளியரெ னப்பு லமையுடையோர்
செப்ப வளர்புரி வெற்ப னமர்புரி சித்தன் வதிபுரிநீர்
இப்பி வளைக டிளைக்கு மொருபுரி யுத்த புரியிதுவே. (௮)

பொற்பொ டிவணுறை கற்பு மகளிர்கள் பொற்ப தசிறுமணி
பற்ப லவொளிப ரப்பு தலையெணி யுற்கை கணபமிசை
நற்ப தமெனநி லைத்த னவெனந யக்க விஞர்நவிலப்
பொற்ப திமுருக னச்ச வினிதவிர் யுத்த புரியிதுவே. (௯)

சிற்சு கமருவு மற்பி னுயரொரு சிற்க கனனலனுர்
சொற்சு வையொடுது தித்த பரனென துட்டு யரையடுகோன்
எற்சு ரரமல மிக்க மலரிலை யிட்டு விழையடியோன்
பொற்சு டரசல னைக்கொள் குகனுறை யுத்த புரியிதுவே. (௧௦)

துந்துபிளூ மார்கழிமீ ௧௧௨ மங்களவாரம்.

# கூ. பாடி.

## (திருவலிதாயம்)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

*சீர்முழுதொன்றிய சிறப்புடைத் தலையாகெதுகை.*

அடியொன்றற்குப்பதினெட்டக்கரம்.

*தான தானன தான தானன, தான தானன தானனா.*

**சீ**ர ருவுயர் தேவர் மானுடர் தேடி யேவரு சீருமா
கார தாய்வரு மேக மாதமு மாரி யேசொரி காரெலாம்
ஈர மாரமு தாக வேயுறை யீடு மேயது நீபவீ
ஆர மார்பகு மார னார்விளை யாட லேபுரி பாடியே. (௧)

**கோ**ல மோதம ருத மாகனி கோடு தாவியுண் வாவலும்
வால ருமலர் தோறும் வேரியுண் மாவு மூசெழின் மேயவூர்
நீல மாமயி லேறி நீபநி லாவ வானவர் சூழவே
ஏல மார்புய வேல னாரெழி லாட லேபுரி பாடியே. (௨)

நீடு பானல்க டோறு மாதர்க ணீல வாள்விழி நேரவேர்
கூடு கால்கர மாத ரார்முக மான வேமலர் கோலமார்
பீடு மேவிய வூர்ச ராசர பேதம் யாவையு மாள்குகா
ஆடு தாவெணி னீப ராபர மாட லேபுரி பாடியே. (௩)

ஈச னாரடி நாடி யேதுற வேறி னாருமி லாளொடே
வாச மேபுரி சீல நீரரு மாறு ருமல வாவுமோர்
தேச மாயது வேத மோதியல் சேர்பி தாமக னாதியோர்
நேச நாயக வேல னார்நட நீடு கோயில்கொள் பாடியே. (௪)

**வா**டல் வீடலில் வேல னாரடி மாலின் மாதுற வேறினார்
நாட லோர்தலும் வேண வாவொடு நாளு மேயவ ருணெலாம்
நேடல் கோடலு மேவி னார்நகர் நீதி யான்மலை யோடுபோர்
ஆட னோர்வழி வாகை சூடிறை யாட லேபுரி பாடியே. (௫)

---

உ. மோதம் = மணம். மா = வண்டு.

௩. ஆடு = வெற்றி.

மாலே வேளேயின் மாலே யேபுரி மாலே மாலேகொள் வேனிலான்
நூலே யேவிழை மோக மேயரு நூறு வாரதை நீபவேள்
காலே மாலேம யூர மூரிறை வாழு மாநகர் கா ணுமோர்
வேலே யாலிது வேலே சூழ்புவி மேனி லாமொரு பாடியே. (சு)

தாத்த தந்தன தாத்த தந்தன, தாத்த தந்தன தானனு.

சீர்த்த செந்துரை நாட்டம் விஞ்சிய தீர்த்தர் தந்திடு சாபமாங்
கூர்த்த வெம்படை யாய்ச்சி னந்துகொல் கூட்ட மென்றறி வார்களூர்
ஊர்த்த வண்டல வாழ்க்கை யண்டர்க ளூற்ற மண்டிட வாடியே
ஆர்த்த வஞ்சிகி மேற்பி றங்கிறை யாட்ட நன்கயர் பாடியே, (எ)

கோட்டு மென்றுணர் தீர்த்த மென்றுணர் கோப்பன் மென்றுணர் நூழிலோ்
காட்டு மென்றுணர் கோத்த ணிந்துகை காட்டு மங்கையர் கேள்கொளா
வீட்டு நங்கைகள் வேட்ட வன்பர்கள் வேற்கை யந்துரை நாடுமூர்
பாட்டு ணுஞ்செவி யேற்கொ ளன்புறை பாக்க மண்டிய பாடியே. (அ)

தந்த தத்தன தந்த தத்தன, தந்த தத்தன தானனு.

குன்ற வர்க்கிறை கண்டு நச்சுகு ழந்தை மெய்த்திரு வாகினுள்
அன்ற ருட்பரை யென்ப வர்க்கரு ளம்ப கிக்கும்வ லாரியாய்
நின்ற வற்கொரு பந்த னேப்பெயர் கொண்ட வட்குநி காதர்சூர்
வென்ற வர்க்குமி டந்தி ருக்கிளர் விஞ்சை மிக்குறு பாடியே. (கூ)

தந்த தந்தன தந்த தந்தன, தந்த தந்தன தானனு.

அண்ட ருந்தொளி மண்ட லம்பிர மன்றுேன் மண்டல மாய்துழாய்
கொண்ட கண்டனன் மண்ட லஞ்சிவை கொண்கன் மண்டலம் யாவுமேர்
மண்ட கண்டவு டம்ப வென்றுவ ணங்கு கந்தரு லாவுமூர்
கண்ட ரும்புக ழன்பு கழ்ந்தக வின்சி றந்துள பாடியே. (கo)

இரத்தாக்ஷிஹு ஆடிமீ உகஉ மங்களவாரம்.

---

எ. ஆடி = செய்து. ஆடல் = செய்த லென்பதைப் பிங்கலந்தையிற் காண்க.
அ. நூழில் = படர் கொடி.
கூ. நிகாதர் = வஞ்சகர்.

# ௧0. பா க் க ம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

அடியோன்றற்குப்பதிஞறக்கரம்.

*தாத்த தத்தன தாத்தன, தாத்த தத்தன தாத்தன.*

**சீ**ர்த்தி மிக்குறு வேற்பரா தீக்க ணக்கர்சு தாச்சுதா
கார்த்தி கைக்கறு தூப்பிளாய் காய்த்த நத்திமி சாய்க்குலாம்
மூர்த்தி விற்றிகழ் கோற்கையா மூப்ப ரப்பென வேத்துவோர்
கீர்த்தி மிக்குற வாற்றுசேய் கேழ்த்தி ருப்பதி பாக்கமே. (௧)

**நோ**ய்த்தி றத்துட னீத்தபேர் நோக்கு டைச்சட மேற்றபேர்
தாய்க்கு மிக்குயர் வாய்க்கொளோர் தாட்டிகப்பொரு ளாய்க்கெடாச்
சேய்த்தி ருப்பர மாய்க்கைவேல் சேர்த்து நிற்பவன் மூப்பிலா
வேய்க்க ரக்குற வாட்டியே வேட்ட வற்குளி பாக்கமே. (௨)

**வீ**ட்ட றத்தள வாக்கமா மேற்று றப்பள வூக்கமாம்
தீட்டல் கற்கையின் மேற்றெனு நாட்டு நர்க்கருள் சேய்ப்பிரான்
வேட்ட தைத்தரு வேற்பிரான் வேற்சு ரர்க்குயர் வாய்த்தொகா
ஆட்டு டைச்சிகி யேற்றநா டாத்த னச்சுதல் பாக்கமே. (௩)

**மோ**க்க விச்சையை யேற்றுதே மூர்க்கர் நட்பினை யோட்டுதே
வாக்கு வித்தைய ரேத்துதே வாக்கி டைப்படி யாச்செவேள்
தூக்க முட்சுக மீக்கொள்வார் சூக்கு மத்தறி வேற்பிரான்
நோக்கு நர்க்கரு ளாக்கமாய் நோக்கி நிற்பது பாக்கமே. (௪)

**யா**க்கை விட்டவர் கூட்டமே யாக்கை பெற்றவ ரீட்டமே
மாக்க ணக்கர்கள் சாற்றினு மாக்கொ ளிப்பதி யாக்கமாம்
வீக்க மட்டெவர் சாற்றுவார் வேற்கை யத்தனு லாத்தலால்
ஆக்க விப்பதி யேற்றபே ராற்றன் மிக்குறு பாக்கமே. (௫)

---

௩. வீட்டறத்தளவு ஆக்கமாம் = இல்லறத்தளவு பொருளளவாகும்.
மேல் துறப்பளவு ஊக்கமாம் = மேலான துறவறத்தளவு உடல்வலியளவாகும்.
தீட்டல் கற்கையின் மேற்று = எழுதுமளவு கற்றலளவாகும்.
சிகியேற்றம் = மயிலேற்றம்.

தாந்த தந்தன தாத்தன, தாந்த தந்தன தாத்தன.

சேந்த மந்திர மூர்த்தியே தீஞ்சொ லந்தணர் நாட்டமா
ஆந்தி கந்தமு லாத்திரு யாம்ப லின்பெய ரேற்றுளாள்
காந்த சுந்தர வேற்கையாய் காஞ்ச னந்திக ழாக்கையாய்
ஒந்த சும்பென வேத்துவா ரோம்ப ணங்கணே பாக்கமே. (சு)

சாம்பி ணங்களே வாழ்த்தியே சாம்பி ணங்களி னுட்டமால்
ஓம்பி றங்கயில் வேற்பிரா னேம்பு லம்படி பார்க்குமோ
தேம்பி றங்கல ராற்பிரா னுங்க டம்பிறை சேய்த்தபோ
தாம்ப தந்தொழ லாற்றுவா ராண்ட வன்பதி பாக்கமே. (எ)

தீங்கில் பொன்றிகழ் வேற்கரா சேந்த வொன்பது பேர்க்குளோர்
ஓங்கு செங்கலி யாற்குநா லூன்று கென்கழன் மாட்டென
ஊங்கு தந்தவ ராட்டியா வோங்க ரும்பென வேத்துவார்
பாங்கு ணர்ந்தரு ளூற்றவே ளாங்கு கன்பதி பாக்கமே. (அ)

தந்த தந்தன தாத்தன, தந்த தந்தன தாத்தன.

வந்தை தந்திடு நூற்கெலாம் வந்தை தந்தருண் மாற்றமாய்
முந்து பண்டைய வாக்கிலே முந்து மொன்றைமெ யாய்க்கொள்வேள்
இந்த மண்டல நீட்டுமா றன்றெ ழுந்தபி னீத்தமாய்
வந்த கங்கைகை யேற்றவோர் மைந்த னின்பதி பாக்கமே. (கூ)

தண்டை கிங்கிணி யார்ப்பவேர் தங்கு செங்கழ றாக்கியா
டெண்ட யங்கடல் வேற்பிரா னின்பு கொண்டினி தேற்றவூர்
அண்ட ரந்தணர் பாட்டெலா மங்கொ டண்டமி ழாய்ச்செல்வான்
பண்ட ரும்புகழ் சாற்றினே னும்பு கழ்ந்துள பாக்கமே. (கo)

இரத்தாக்ஷிஹு ஆடிமீ உசூஉ ஆதித்தவாரம்.

---

## க்ஷேத்திரகாண்ட முற்றிற்று.

---

சு. ஆம்பல் = யானை.

அ. வராட்டியா = வர + ஆட்டியா எனப்பிரிக்க. ஆட்டியன் = செல்வன்; வட கிளவி.

ஊற்றம் = மேம்பாடு.

கூ. நீத்தம் = வெள்ளம்.

மூன்றாவது

# கடாவிடைக்காண்டம்.

## க. திருக்கடாவிடை.

கலிநிலைத்துறை.

எழுத்தளவுடையன.

கட்டு மாடையி லேபல பீறலுங் காரென
ஒட்டு மாசுமிக் காரவுள் ளாரிவ ரார்கொலோ
மட்டி லாதவ ருட்கட லாமயின் மன்னனை
விட்டு வாலறு பேய்களை நம்பிய வீணரே. (க)

கையி லேதுமின் றென்றுவெண் பற்களைக் காட்டியே
ஐய கோவென் றரற்றுகின் றாரிவ ரார்கொலோ
தெய்வ யானைம ணாளனை நம்பினர் சிந்தைதான்
நைய வேசெய்த வஞ்சக ரேதலை நாளிலே. (உ)

கண்ணை யுஞ்செவி மூக்கையும் வாயையுங் காதுநோய்
அண்ணி யேயுள்வ ருந்துகின் றாரிவ ரார்கொலோ
தண்ணு லாமருட் சேயவன் சேவடி சாரவே
எண்ணு வாரையி கழ்ந்துசெ ருக்கிய வீனரே. (ங)

என்பு நாடிபு டைத்திடக் கூன்கிடை யேயவே
துன்பி னுன்மதி சோருகின் றாரிவ ரார்கொலோ
அன்பி னுன்முரு கற்றொழு வாரைய ழைத்துமக்
கின்பு றாதென நாத்திகம் போதித்த வேசரே. (ச)

உற்ற வாழ்க்கைம டந்தையு மக்களு மொக்கலும்
மற்றை யோருமி ரித்தமைக் கஞ்சிவ ரார்கொலோ
கொற்ற வேன்முரு கையனைக் கீழ்மையிற் கூறினார்
செற்ற நெஞ்சொடு லாவிய மாமறைத் தெவ்வரே. (ரு)

ங. காதுதல் = கொல்லல்.

கலைவ யாவுள ராய்த்தெரு வெங்கணுங் கஞ்சிகேட்
டலைவ தேதொழி லாகிவ ருந்திவ ரார்கொலோ
தலைவ ரேவருங் கைதொழு வாரண சத்தியான்
மலைவி லானடி யார்க்குத வாதம றத்தரே. (சு)

சீல மொல்கிய மேனியி லேபல செம்மலர்
போல மல்குபுண் ணுலுள்வ ருந்திவ ரார்கொலோ
வேல லங்குகை யண்ணல்வி ழாவிர தங்களில்
வால கன்றவி றைச்சிநு கர்ந்தும கிழ்ந்தவர். (எ)

ஈக ரங்களுஞ் செல்லிரு கால்களு மேதமே
ஆக விங்ஙன்வ ருந்துகின் றூரிவ ரார்கொலோ
மாக ஞானிக ளுடும யிற்கர மள்ளனைத்
தேக முக்குண மாருயி ரென்றுதெ ரித்தவர். (அ)

புத்தி மாழ்குற வித்தைவி ருத்திகள் பொன்றிட
அத்தி போலரற் றும்வெறி நேரிவ ரார்கொலோ
சத்தி யார்கர சண்முக வேளொரு தண்ணருட்
சித்தி யாரைம தித்துநில் லாதசெ ருக்கரே. (கூ)

புன்ம திப்பது தொக்குறு மிக்குறு புத்தகப்
பன்ம தக்கட லிற்படிந் தஞ்சிவ ரார்கொலோ
நன்ம திப்பரு ணைப்புத னம்புமெ னயகன்
வன்ம லர்க்கழன் முன்பணி யாமதி மந்தரே. (க0)

துர்மதிஞூ மார்கழிமீ᳚ எஉ புதவாரம்.

# ௨. திருக்கடாவிடை.

---

## எங்களிறை.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

### அடியோன்றற்கிருபத்தோரக்கரம்.

*தனதந்த தந்த தனதந்த தந்த, தனதந்த தந்த தனன.*

எவனுங்க ணெஞ்சி லுறுமண்ட னென்ற வெழிலன்ப ரென்சொ லுணர்வீர்
சிவனென்று சிந்தை செயுமன்பர் முன்பு திகழ்தண்க டம்ப னடியர்
கவலென்ற துன்ப மிறமஞ்சி லங்கு கழறங்கு மின்ப மருள்சேய்
இவனென்று பண்டை மறைநன்கி யம்ப வருகந்த னெங்க ளிறையே. (௧)

பவகண்ட மென்று நவிலிங்க ணங்கு பலநின்றி யங்கி யிடினும்
நவகண்ட வண்ட மெவையுந்த னங்க நனிநின்று மண்டி மிளிரப்
பவகண்ட னஞ்செய் சிவம்விஞ்சு சங்க மெவையும்ப ரிந்து பரசச்
செவகண்ட துங்க னெனநின்று நன்கு திகழ்கந்த னெங்க ளிறையே. (௨)

சகமண்ட லம்பல் பரமண்ட லங்கள் சவைமண்ட லங்கள் புகழ
நகமண்ட லங்கொண் முனிகும்ப னின்ப நடனஞ்செ யும்ப டியிருஞ்
சுகமண்ட ருங்க ணிலகுஞ்சி கண்டி மிசைநன்கு துன்று மெனது
முகமண்ட லந்த ரிசியென்று வந்து மொழிகந்த னெங்க ளிறையே. (௩)

---

௧. "கந்தன்" என்னுந் திருப்பெயர்ப்பொருள், **ஸ்காந்தமஹாபுராண** ஸம்பவ காண்டத்தின் ௩௫ - ஆம் அத்தியாயத்தில் —

(𑌆𑌕𑍍𑌰𑌮𑍍𑌯𑌚𑌯𑌤𑍋𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌤𑍍 𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌜𑌗𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌤𑍇𑌨𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍋𑌯𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌸𑍁𑌤𑌸𑍍𑌤𑍇𑌗𑌿𑌰𑌿𑌸𑌂𑌭𑌵𑍇 ॥

ஆக்ரம்யசயதோஸ்கந்தத் விக்ரமேணஜகத்த்ரயம் ।
தேநஸ்கந்தோயமாக்யாதஸ் ஸுதஸ்தேகிரிஸம்பவே ॥)

"பார்வதீ! நின்சுதன் மூவுலகிலும் பராக்கிரமத்தோடு ஆக்கிரமித்து நிற்றலினால் (ஸ்கந்த꞉) கந்தனென்று சொல்லப்படுகின்றனன்" என்று உமாதேவியை நோக்கி உமாபதி கூறியதாக வருவதன்கண் வழங்கப்பட்டுளது. ஈண்டு, (𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌂) ஸ்கந்தம் என்னும் வடமொழி 'தோள்' என்னும் பொருளில் வருதலினால் ஆக்கிரமித்தல் பராக்கிரமித்தலென்பன புஜபலமுடையானென்பதையே குறிப்பிடுகின்றனவென்றல் பொருந்தும். சருவசத்தித்துவ முடையானென்பது மிங்ஙனுணரக் கிடப்பதே. **கந்தபுராணத்தில்** "சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்றுய்ச் செய்தாய் — ஆயத னாலே கந்த னுமெனு நாமம் பெற்றான்" என்று கந்த னென்பதற்குப் பொருள் கூறினமை வடமொழிச் சுலோகத்தோடு மாறுபடுகின்றது.

௨. **அணங்கு = தெய்வம். தனங்கம் - தன் + அங்கம் எனப்பிரிக்க.**

களிமங்கு மைந்த ரிதுவின்பி னின்பு கவினென்று நம்பு மிஙனே
அளிவிஞ்சு நெஞ்ச முறுவிஞ்சை யின்ப ரணிவந்த னங்கள் புரிவார்
தெளிவன்பு ணர்ந்து மகிழ்தும்ப னெஞ்சு குடிகொண்டு சிந்தை குவிவார்க்
கெளிவந்து பந்த மறவன்பு நன்கு புரிகந்த னெங்க ளிறையே. (ச)

சிறியின்பு மண்டி யெழுதுன்பும் விஞ்சு செயல்கொண்ட விந்த வுலகில்
அறிவின்ப வண்ட முழுதும்பி றங்கு மரசம்பு சம்பு குகலும்
நெறிமஞ்ச நெஞ்ச மலர்தங்கு சம்பு நினதன்பு தஞ்ச மெனலும்
செறிவிஞ்சை யண்டர் குருவந்த னஞ்செய் சிவகந்த னெங்க ளிறையே. (ரு)

உலகெங்கு நின்று மொருபந்த மின்றி யொளிரும்ப ரம்பி ரமலும்
மலம்வென்ற சிந்தை விழைசெங்க ரும்பு வரசம்பு கஞ்ச பதலும்
நலசம்ப சிந்து குகசண்ட சண்ட நடடிம்ப கந்த வெனவே
புலம்வென்ற வண்டர் குருவன்று நின்று புகழண்ட னெங்க ளிறையே. (சு)

சுடரங்கி யந்தண் மதிசண்ட னென்ற சுடரும்ப துங்க வொளிரும்
அடல்விஞ்சு கொண்டல் வணனுஞ்ச கஞ்செ யயனும்பு ரந்த ரனுமா
உடலம்பி றங்க வுணருங்கொண் மைந்து முழுதுந்தி யங்க வுறுமும்
மிடல்கொண்ட வென்றி யயிறங்கு செங்கை மிளிர்கந்த னெங்க ளிறையே. (எ)

பணம்விஞ்ச னந்தன் முடியுந்தி கந்த கரியும்ப ரந்த புவியும்
நிணம்விஞ்சு டம்பு நிகழுந்தி மிங்கி லகிலஞ்சி லம்பு கடலுங்
குணம்விஞ்சு யர்ந்த கிரியும்ப ரண்ட முகடுங்கு லுங்க நடமீ
கணநன்சி கண்ட மயினன்க மர்ந்து கமழ்மொய்ம்ப னெங்க ளிறையே. (அ)

கடிகொண்ட சந்து மலருங்க டம்பு மணியங்கம் விஞ்ச மிளிர்கைத்
துடிடுண்டு டுண்டு டுடுடுண்டு டுண்டு தொகுதொந்த மென்று முரல
அடிநம்பு தொண்டர் முனநின்ற ரும்பொ னருளின்பி ழம்பு குருகென்
கொடியன்சி லம்ப னுயிர்நெஞ்சி லங்கு குகசம்பு வெங்க ளிறையே. (கூ)

தமிழின்பு ணர்ந்த நயம்விஞ்ச மைந்தர் தவம்விஞ்ச வின்ப நெறியாய்
இமிழ்மஞ்சு விஞ்ச வெழின்மிஞ்சு சந்த முனிவன்ப யந்த வொலியல்
கமழ்மொய்ம்பன் விந்து வொலிதங்கு தண்டை கழல்கொண்ட கஞ்ச வடியன்
அமிழ்தம்பி றங்கு மொழியன்ப றம்ப னகளங்க னெங்க ளிறையே. (க0)

துர்மதி ஞு மார்கழி மீ" ககூஉ சோமவாரம். (2 - 1 - 1922)

---

சு. சம்ப சிந்து = சுக சமுத்திரம்.
டிம்பன் (டிம்ப:) = சிறுபிராயமுடையான்.
அ. கண நன்சிகண்டமயில் = நெருங்கிய நல்ல தோகையையுடைய மயில்.

## ௩. திருக்கடாவிடை.

### நவகணர் தோற்றம்.

அகங்கார கண்டனம்.

கலிவிருத்தம்.

எழுத்தளவுடையன.

நீறு கண்டிகை தாரணஞ் செய்துநீள்
ஏறு போலவெ திர்த்தவ னாரடா
ஆறு மாமுக னைப்பணி யாதவர்
வீறு வீயப்பு டைப்பவ னனடா. (௧)

பீட ரூக்கைபி சைந்துபல் லைக்கடித்
தோடி வந்துறு மும்பட னாரடா
ஈடில் கந்தனை யேமதி யாவிருண்
மூட கந்தைமு ருக்குந னனடா. (௨)

சடல மெங்கும்வெண் சாம்பரைப் பூசிவந்
தடல்கொண் முட்டிபி டிப்பவ னாரடா
இடரில் வேற்பெரு மானையெண் ணுதவர்
நடலை மார்பிறத் தாக்குந னனடா. (௩)

கருவத் தோடுநெ டுங்கயி றேகொடு
வருமற் பூதென வந்தவ னாரடா
முருகற் போற்றலி லார்வலி முற்றுமே
ஒருவக் கட்டியு தைப்பவ னனடா. (௪)

பல்க ணுக்களு டைப்பரு வேத்திரம்
புல்கு கையவுன் பேர்புகல் வாயடா
மல்கு சீர்முரு கன்வணங் காத்தலைக்
கல்லு டைத்துக்க ளிப்பவ னனடா. (௫)

வச்சி ரத்தடி கையில்வ யங்கவே
அச்ச மின்றிமு னிற்பவ னாரடா
செச்சை வேலவன் கோயில்செல் லாதுசெல்
நச்சர் கான்முரிக் கின்றவ னனடா. (௬)

ஏணி ருப்புச்ச லாகைகை யேந்திமா
ஊணன் போலெதிர்த் துள்ளவ னாடா
கிணை மில்கும ரன்புகழ் கேட்டிடா
வீணர் காதகம் வீரமுள் ளோனடா. (எ)

இந்த நள்ளிர விற்சிறு வாள்பிடித்
தந்த னயெதிர் நிற்பவ னாடா
கந்த வேலேத்து தித்தறி யார்கறை
நந்த நாவறுக் கின்றவ னனடா. (அ)

நீள வாளுட னேயெதிர் நிற்கின்ற
கோள னேயொல்லை யுன்பெயர் கூறடா
வாள யிற்பெரு மான்றளி கும்பிடாக்
கோளர் கைகள்கு றைப்பவ னனடா. (கூ)

சூரர் காணுங்கள் சொற்படி நான்செயின்
தீர வேலிறை யின்பெனச் சேருமோ
வீர ரேயது கூடுமென் னும்விதி
சார வோதப்பு கழ்ப்புதன் சான்றரோ. (கo)

துர்மதிஷ தைமீ கஙஉ குருவாரம்.

## ச. திருக்கடாவிடை.

கலிவிருத்தம்.

லகரவெதுகை.

அடியோன்றற்குப்பத்தக்கரம்.

இரண்டுசீர்வண்ணம்.

ஓல மாய்வரி யாகியு ணங்கா
நால ருமறை யாய்நவி னலின்
மூல மாயவிர் முன்னவன் யாவன்
வேல னேயென வேதம்வி ளம்பும். (க)

ஞால போகமு ஞாலமொ டுங்கும்
மூல ஞானமு மோதொரு மோத
நூலன் யாவனெர் நூனமில் வென்றி
வேல னேயென வேதம்வி ளம்பும். (உ)

க, நவினலின் மூலம் = நவிலு நான்குவேதங்களின் மூலமாகிய பிரணவம்.

தூல மாயதி சூக்கும மாயிஞ்
ஞால மேனிலை நல்லற மோச்சு
கோல ணுய்மிளிர் கொற்றவன் யாவன்.
வேல னேயென வேதம்வி ளம்பும். (௩)

மாலை காலைவ யங்கிடை யாகும்
வேலை வாயினெ லாம்விளை யாடுங்
காலன் யாவனி ரும்பகை காதும்
வேல னேயென வேதம்வி ளம்பும். (௪)

பால மாலைப லங்கெழு மாலை
மால ருதவ யோதிக மாலைக்
கோல மேனிகள் கொள்சிவன் யாவன்
வேல னேயென வேதம்வி ளம்பும். (௫)

தால மீதுத ணுதடி நம்புஞ்
சீலர் நோவுற வேபுரி தீயர்க்
கால மாகிய ளாவுநன் யாவன்
வேல னேயென வேதம்வி ளம்பும். (௬)

வேலை சூழ்தரு மேதினி மேற்றன்
காலை யேநினை வார்மனை காக்குஞ்
சால மாய்மிளிர் தாரகன் யாவன்
வேல னேயென வேதம்வி ளம்பும். (௭)

மாலி லாமிகு மாண்புயர் கல்வி
காலி லார்நினை வென்பவர் கண்ணுஞ்
சீலன் யாவன ருவறு செஞ்சீர்
வேல னேயென வேதம்வி ளம்பும். (௮)

சேல ருவிழி மாதர்க டேவாய்
ஏல மார்புய வானவ ரேருய்ப்
பால ணுயொளிர் பண்பினன் யாவன்
வேல னேயென வேதம்வி ளம்பும். (௯)

நீல நீண்மல நீக்கிய சந்தன்
போல வீவில ராபவர் போற்றும்
வாலன் யாவன்ம யூரமு கைக்கும்
வேல னேயென வேதம்வி ளம்பும். (௧௰)

துர்மதி௵ பங்குனி௴ ௨௪௨ குருவாரம்.

---

எ. சாலம் = மதில்; கூட்டமுமாம்.

அ. காலிலார் நினைவு = திருவடியிற் பொருந்திய நினைவே. கண்ணல் = தியானித்தல்.

# ரு. திருக்கடாவிடை.

**கலிநிலைத்துறை.**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**எழுத்தளவுடையன.**

**இரண்டுசீர்வண்ணம்.**

அஞ்சுறு நிறவிண ருஞ்சுக மேயட லயில்வேளின்
மஞ்சுறு பதமதி செம்மைய ணைந்ததென் மயில்போலும்
விஞ்சுறு மதன்மலி சாயலு ளாயருள் விழைவாருள்
நெஞ்சுறு மவனவர் முன்செல னீடலி னுளதஃதால். (க)

ஆரடி யன்னண மாயினு மங்கைக ளதிசெம்மை
சாரடி யென்னைகொ லோவவை தம்முயர் தகையீசன்
நாரடி யுன்னிந றுந்துதி செய்குநர் நலியாது
சேரடி யண்ணிடு காறும்வ ழங்கொரு செயல்காட்டும். (உ)

அங்கைக ளவ்வண மாயினு நல்லித ழணைவாய்தான்
செங்கையில் பவ்வவ ரத்தந யந்திகழ் திறன்யாதாம்
கங்கைகொ ளுவ்விய ளுரவி லங்கலன் முதலோர்முன்
சங்கையில் செவ்வைபு கன்றதி லெய்திய தகையஃதால். (ங)

பாதமு மங்கையும் வாயுமி சைத்துள படியேனும்
நாதமு ழங்கடி யார்திரு மேனிமு ழுதுநாளும்
ஏதமு டங்கலில் செம்மைய தாயதெ னிருளால
பேதமு ரண்கொள்ப லுண்ணடக டாங்கொரு பிணைகாட்டும். (ச)

ஆகம தாயினு முள்ளுறை தாமரை யதிசெம்மை
ஆகநி லாவுமெ னுநவில் யோகிக ளறைசால்பேல்
நீகரை காரண மென்னெவை யுந்தெரி நினைவாலும்
ஏகமில் சேடர்வி ருப்பினு மேய்வதஃ தெனலாமே. (ரு)

திவ்விய வேண்முக மாமதி முன்மணி திகழங்கைச்
செவ்விய தாமரை கூம்புறு மோர்வுயர் திருவாரும்

---

ங. கையில் = சிறுமையில்லாத. கை = சிறுமை.
ஆரவிலங்கல் = சந்தனசயிலம் = பொதியமலை.
ச. பிணை = உடம்பாட்டு விருப்பம்.

அவ்விய ஞர்மலர் மீதள வற்றவ கிலபோகம்
அவ்விய வாதர்தொ டாதுள வாகலி னவைகூம்பா. (௬)

நீளிடை நறுமணம் வீசுமி யற்கைநி லவுமெய்யில்
நாளித முறுவிரை நீபம ணிந்தணி நயம்யாதாம்
வாளிர விமுனுடு வுய்வது முண்டுகொன் மதியாசான்
ஆளிய லறிவின்முன் மைந்தனி லங்கிட லதுமானும். (௭)

சூரன தூரில்வ ளைந்தநி சாசரர் தொறுநீற்ற
மூரனு மாகன னல்கிய தாலருண் முகமாமோ
நாரணி வானவர் மீட்சியி லந்நகை நலிவோட்டி
ஆரருண் மோதமு மீந்தது மேகலை யணிமாதே. (அ)

தார்திகழ் வடிவரி யாதியர் சந்ததி தரல்போல
ஏர்திகழ் விழிபதி னெட்டுடை வேடர விலதென்னே
நார்திக ழுயிர்களெ லாமென பிள்ளைக ளெனுநாராஞ்
சீர்திக ழுரிமையி லேயுளன் வேணிலை தெரிமானே. (௯)

கேடறு சந்தனை யாளிறை பாடொரு கிளியேநீள்
கோடணி குன்றமு டுக்கரில் வாழறு கொருமானை
நாடலி னின்றதெ னிவ்வெளி மானிறை யுநடாவென்
ஆடலு மொன்றெனல் காட்டியுய் வித்திட வதினேர்ந்தான். (௧௦)

ருதிரோற்காரிஹூ மார்கழிமீ அஉ ஆதித்தவாரம்.

---

அ. மேகலை = மாதரிடையணிகளு ளொன்று. இஃதேழுகோவை கொண்ட மணியாம்.

௧௦. முடுக்கர் = குகை.
அறுகு = சிங்கம்.
நிறை = அழிவின்மையெனுங் கற்பு.
நடாவல் = நடத்துதல்; உலகினை நடத்துதல்.

## கூ. திருக்கடாவிடை.

### அசோகசாலவாசம்.

### (முதற்பத்து)

கலிநிலைத்துறை.

காத வோதியள் சேய்விருப் புடையளிக் காலம்
யாது கூறென மதியிளந் தென்றலும் யாணர்
சீத நீரரக் காரமு மாரமென் செதும்பும்
மாதர் வீயும்வ ளாவுவ சந்தம தாகும். (க)

ஈது போதரன் மதன்முடி சூட்டிட வெனநன்
கோதி னுடலை யிணங்கியொள் ளொளியயிற் செவ்வேள்
காதன் மேயவத் தலைவியிக் காலெவண் போந்து
மோத மாய்வர லாமுணர்ந் துரையென மொழிந்தாள். (உ)

மூல வாய்வழிப் பருகற வினைத்துவர் முதிர்ந்து
கோல மார்சினை தொறுநிறங் காட்டலிற் குறையாச்
சாலம் வல்லவ ரியல்கொ ளசோகவஞ் சாலப்
பால டைந்திவண் வரனல மெனச்சகி பகர்ந்தாள். (ங)

அன்ன வாறுசெய் வாமென வணிநகர் விடுத்துப்
பொன்னின் யானநன் கலன்குடை யாதிபுற் புதமேர்
மின்னு வெண்டடி மீன்குலங் கவரிவெண் காடு
துன்னு பேனமு மூவமொவி சூழ்வரப் போந்தாள். (ச)

சிவிகை மீதுள தலைவியென் றிருக்கிள ரிகுளாய்
உவகை யேய்வுற வியப்பினு ளொன்றுசொல் கெனவக்
குவிகை யாண்முரு குவகையி னஞ்சமு மமுதாம்
உவகை யின்றெனி னமுதுநஞ் சாமென வுரைத்தாள். (ரு)

மொழிக ளுள்ளமு தீதென வுளங்கொளம் முதல்வி
பொழில்க ளுட்சிறந் துளசெய லைப்புலம் புகுந்திவ்
வெழில்கொள் சூழலிற் றலைபனித் திலதெழு காலும்
இழிவி னுற்குழம் பிலதிவற் றேதுசொல் கென்றாள். (சு)

---

ங. சாலம் வல்லவர் = மாயவித்தையில் வல்லார்.

சடந்து ளும்புயி ரனைத்தையுங் காண்டொழில் சாரா
உடந்தை யாலறி பவன்செவி யெங்கணு முடையோன்
நடந்தி டாநடை யான்குக னவன்றரி சனமால்
அடைந்து ளார்க்குறு பதநய மெனச்சகி யறைந்தாள். (எ)

வெறியுண் வண்டுக ளிவணிமிழ் காரணம் விளம்பாய்
சிறும ருங்கியென் பவண்முனந் திருப்பரங் கிரியின்
நறிய தெய்வவிந் துளமிவண் வருமெனு நசையால்
துறுமி யேயறை தருதலிஃ தென்றன டுணைவி. (அ)

நாமிப் பாங்கரை யடைதலு ஞாயிறு நரலே
போமட் டார்வமொ டுரையெனக் கோமகள் புரையில்
தூமிக் கோங்குசெவ் வேடரு சோமவொள் ளுலக
ஏமத் தோரிவ ரெனுந்தளர் வென்றன ளிகுளே. (கூ)

பரிதி யாழ்கடல் வீழ்ந்தமை யான்மரைப் பார்வை
விரிதல் கூம்பவ யர்ந்திடு மோவென வினவும்
புரிவு ளாண்முன நமையனே யாரது பொருந்தார்
தெரிக வென்றனள் சகியொலி முனியருட் டிருவீர். (கo)

இரத்தாக்ஷிஹு ஆடிமீ கவ புதவாரம்.

---

# திருக்கடாவிடை.

---

## அசோகசாலவாசம்.

## (இ ர ண் டா ம் ப த் து)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

### எழுத்தளவுடையன.

### இரண்டுசீர்வண்ணம்.

அறிவி லாமை யென்னு மந்த கார மேகம் யாவையுஞ்
செறிவு ரூத ழிக்கு மூதை யாகு செக்கர் வேளருள்
நெறியை யேவி டாது கூடு நெய்தை மல்கு கோமகள்
நறிய சோம னுமி னேனெஃ தொக்கு நாளு மென்றனள். (க)

---

எ. பதநயம் = கால நயப்பு.

அ. தெய்வ இந்துளம் = தெய்வீகக் கடம்பு.

கூ. நரலே = கடல்.

அமுத நோக்கு தோழி கண்ணர் பெட்பு ணீர மாரணி
அமல நீட்ட லான யச்சொ லாய லங்கு மொண்பொருள்
அமுத நீட்ட ருங்க லைக்க ணத்தை நல்கி யைந்திணை
அமர்த லாற்ற லான்ம திக்தொ னூனி கர்க்கு மென்றனள். (உ)

இச்சு தாக ரோத யத்தி னேது நச்சு வாண்முனர்க்
கச்ச ளாடை கொண்டு நம்மை மூடு கங்கு லாள்கலி
இச்சை யோவ வானர் மீனி சைத்தல் சால்பு ருதெனச்
செச்சை வேள்வி டுத்த தீப மாமெ னச்சொ னாள்சகி. (ங)

உண்ம கிழ்ந்த நங்கை யிந்த முண்ட கங்க ளொல்கலென்
தண்ம லிந்த நெய்தல் விள்ளல் சார்த லென்னெ னச்சகி
முண்ம லிந்த முண்ட கச்செ ருக்க டங்க மூரல்செய்
எண்ம லிந்த நெய்த னண்ப னிந்து வென்று சொல்லினாள். (ச)

இவ்வண் மூரி முல்லை யென்மு னேசி ரிக்கு மாறெவன்
செவ்வ னேது கென்ற வண்மு னீவி ரும்பு செய்யவேள்
நவ்வி சேர்கு றிஞ்சி வேட னாடி சோர்வ யோதிகன்
செவ்வி நீயெ னுங்க ருத்த தென்று செப்பி னாள்சகி. (ரு)

சொனதை யோர ணங்கு தோள்கு லுங்க மூரல் செய்துபின்
கனிக ளாறு பூநல் காத புல்லிகை தென்ற ருங்கொலோ
எனவி ராக வேள டுத்த வர்க்கொர் மூல மீதல்போல்
இனிய மூல மீயு மென்றி யம்பி னாளி ணங்கியே. (சு)

ஓங்கு சேய்பு யச்சி லம்பி லென்க ணீல வுற்பலம்
வீங்கு மோவெ னக்க டாவி னாண்மு னந்த வேள்கணின்
மூங்கி லாய தோளில் விள்ளு ஞான்று விள்ளு மோதமாய்க்
கோங்கு மாமு கைப்ப றம்பி யென்று கூறி னாள்சகி. (எ)

கரிய வேளி னேர டக்கு காமர் மிக்க சேய்முகத்
தரிய வோடை யம்பு யங்கண் முன்ன ரென்மு கத்திலே

---

உ. சொல் = வார்த்தையுங் கீர்த்தியுமாம். "சொல்லுரை கீர்த்தி நெல்லாம்" என்பது லகாரவேதுகை.

ஐந்திணை = குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதமென்பன. மதி = அறிவு.

ங. கச்சளாடை = அந்தகார ஆடை. கச்சளம் = இருள்.

கலி = வஞ்சனை ; பொருமையென்றுங் கொள்ளலாம் ; " கலிவஞ்ச மொலியே வாரி " என்பது லகாரவேதுகை.

சு. 'இராகம்' — இசை, நிறம், கீதம், சிவப்பு என்னும் பலபொருளொருசொல் ; பிங்கலந்தை.

தெரியும் வாயெ னுஞ்செ வாம்பல் பூக்கு மோதெ ரிந்துசொல்
பெரிய தோழி யென்று கூறி ளுள்பி ணக்கி லாளரோ. (அ)

செக்கர் வேளெ னுந்தெய் வீக சிங்க மண்ட கோடிமா
திக்கெ லாம டங்க மேல்வ யங்கு சோம தேசசு
மிக்கு லாம்வி ணுள்ள தாக லானு னெய்தல் விள்ளுமால்
அக்கொள் வேள்க ணுஞ்செ வாம்ப லாமெ னச்சொ ளுள்சகி. (௯)

அதுசெ விக்கொள் யாண ரையை யார்வம் விஞ்சி யெம்பிரான்
மதுர மெய்ச்சொல் கேட்கு முன்னெென் வண்ணி ரம்ப வேவிடை
கதுமெ னச்சொ ளுயெ னக்க லாப மொன்று நல்கினுள்
அதுத ரித்தி றைஞ்சி ளுளி ணங்கி சந்த னன்புளீர். (௧௦)

இரத்தாக்ஷிஸ்ரீ ஆடிமீ° சஉ சனிவாரம்.

---

# திருக்கடாவிடை.

## அசோகசாலவாசம்.

### (மூன் ரும் ப த் து)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சேடியர் குழாங்கள் சூழ வுலாத்தரு திருவன் ளுளிங்
கோடளி நதிக்கோய் வின்ருே வோதுதி யென்ருள் தோழி
நீடிய நினதுள் ளீர மாகிழ லினுக்கே நாணி
ஓடலி னேயா தேசே யுகக்குநல் லணங்கே யென்ருள். (க)

என்னுடன் மீதொள் வாச மேறுகத் தூரி சார்நீர்
தன்னையிவ் விகுளை வீசு தருணமிக் கலறிவ் வாந்தை
முன்னமென் னென்ருண் முன்ன முருகவேள் காத லாடன்
மின்னைவெல் லிடைபோ மென்றே விம்முத லென்ருள் பாங்கி. (உ)

---

௯. உன் னெய்தல் = உன்னுடைய செவ்வாம்பல்.
'வேள்கண்ணுஞ் செவ்வாம்பல் ஆம்' என்றதில் செவ்வாம்பல்=செங்குமுதம்; "அஷ்டாதச குமுதநயனன்" என்ருர் பிறரும்.

௧௦. கலாபம் = பதினுறு கோவைகொண்ட மாதரிடையணி.

க. உள்ளீரமாகிழல் = உள்ளன்பாகிய பெருங்குளிர்ச்சி.

ஏர்நிலா முகியென் முன்னே யெய்தியே கியதென் னென்றாள்
தார்நிலா முருகற் றாழ்வாள் சந்திர கிரண மாந்திச்
சீர்நிலா வுறவி னின்றுஞ் செவ்வியிம் முகம்பார்த் தோகை
ஆர்தன்மே லெனக்கண் டேகிற் றஃதென மொழிந்தாள் தோழி. (ந)

இந்தவான் மீனுட் காதி மைந்தனன் றிழைத்த சொர்க்கத்
துந்துவாண் மீன்மே லாங்கொ லுரையெனத் தலைவி தோழி
அந்தநா விருந்தக் கானீ நினதடிச் சதங்கை வேட்பான்
அந்தமா முனிவன் சேந்த னுசைகூர் திருவே யென்றாள். (ச)

கருந்தடங் கட்கோ மாதிக் கரும்புத லெலிதா ணேக்கா
விரைந்துசென் றமைகூ றென்றாள் வீக்குபைம் பாளி தத்தே
வரைந்தசொற் கதிர்க ணுடி வந்தன வடிச்சி லம்பைப்
பருஞ்சுருண் மணிப்பாம் பென்றே பாறின வென்றாள் பாங்கி. (ரு)

மரகதப் பிரம்பின் மாசில் பவளநன் மணிக ளேய்த்த
நிரலெனச் சினைநி லாமிந் நீள்வடம் பூவா தேகாய்
தரலெதைச் சிவனு மென்று டலைமகள் பிறப்பிற் றானே
புரிவுடைக் குகனைக் கேய்தல் போலுமென் றாண்மா தோழி. (சு)

அருளதர் விழையு மென்ற னுருயிர்த் தோழீ யிந்தத்
தருபுத விலையெல் லாமென் றலைவர்கை வேல்போ லாமே
உருநிலை யெனச்சொன் னுண்முன் னெளியெஃகி னடிநாப் பண்ணீ
றுருவமெப் பொருளு மாம்வே றிலையென வுரைத்தாள் தோழி. (எ)

இம்மலர் தோறுந் தேற லேறுகர் பிராணி யெல்லாம்
விம்முமின் பினவென் றேதற் கையமென் விளம்பா யென்றாள்
அம்முதன் மகளுண் டன்றி யவைமகி ழாகாண் டோறுஞ்
செம்மதி நினைக்குந் தோறுஞ் செறிவது முருகின் பொன்றே. (அ)

என்றனள் பாங்கி காம ரிறைவியென் மனக்கை யாற்றைப்
பொன்றிட விழைக்கு மோவப் புனிதவே ளென்றாள் தோழி
முன்றொடர் பாற்று சற்கு முரிந்தகால் பொருந்தச் செய்த
தொன்றனை யுளஞ்செய் தோறு முன்கையா றயுமோ வென்றாள். (கூ)

---

ந. தாழ்தல் = வேட்கைப்பெருக்கமாகலின் "தாழ்வாள்" என்றது அதனை யுடையாளென்பதை யுணர்த்துவதாயிற் றென்க.

ச. "மீன்மேலாங்கொல்" என்றதில் மீனென்னு நக்ஷத்திரங்கள், காதிமைந்தராகிய விசுவாமித்திர முனிவராற் சிருட்டிக்கப்பட்டன வெனவே "வான்மீக ராமாயணம் வழங்குகின்றது.

இன்றமிழ் முனிவ னேத்து மிறைகுக வேள்பா தப்போ
தென்றும்வி டாவா றென்முன் விடையினி தளித்த தோழீ
என்றரு வேணு ணிற்கென் றிருமணிப் பணியொன் றன்னுள்
பொன்றிகழ் கழுத்தி லிட்டாள் புகழன்வா ரியிர்கோ நங்கை. (௧0)

இரத்தாக்ஷிஞு ஆடிமீ ௧௬உ குருவாரம்.

---

# திருக்கடாவிடை.

---

## அசோகசாலவாசம்.

## (நான்காம்பத்து)

கலிநிலைத்துறை.

**கோ**ளி யின்றழை நிகர்வயி றுங்குளிர் நீரின்
கோளி லஞ்சுழி யிணைச்சுழல் கொளநனி தாக்குங்
கோளி லஞ்சியு முறுமிகு ளாய்குயி ருசன்
கோளில் கான்முரி வினிதுசொல் கென்றனள் குரத்தி. (௧)

**சா**லி வாகன சகமதொ ராயிரத் தெண்ணூ
றேலு நாற்பதொ டாறணை மார்கழி யேய்முந்
நாலி லேகுரு வாரநன் பகற்றச நாழி
மேலு றும்பதம் விளம்பிய தாசனென் விரதன். (உ)

**தா**வில் சென்னையில் வயித்திய நாதமு தலியின்
ஆவ ணந்தனி னின்றழ கிலிங்கசெட் டியதர்
மேவி மீள்பதந் தம்புசெட் டியினெடு வீதி
நாவி லேவரு ஞான்றுகந் துகநளிர்ச் சகடம். (௩)

**த**க்கி ணஞ்செல விரைந்துவந் திடுமது தாசன்
விக்கி னந்தவிர் மேனியை வீழ்த்திய ததனோர்

---

௧. கோளி = ஆல மரம்.
கோளில் அஞ்சுழி = இடையூறபடா அழகிய சுழி.
கோள் இலஞ்சி = வலிய நாபி.
கோளில் கால் = பழிப்பில்லாத பாதம்.

உ. சாலிவாகனசகம் ௧அ௪௬ - ல் நிகழ் மார்கழிமீ ௧உ - உ ஆனது, கி. பி. 1923 - ஆம் ஞு டிசம்பர்மீ 27உ ஆம். (கலியப்தம் ௫0உ௫)

௩. கந்துக நளிர்ச்சகடம் = குதிரைபூட்டிய பெரிய பண்டி.

சக்க ரஞ்செல லாவிடக் கணேச்சர ணெனும்பை
அக்க ணந்தனின் முரித்தது காண்குரு ரழவே. (௪)

கூடி நோக்கின ரொழுகையிற் கிடத்தினர் கொடுபோம்
மாடி யாதெனு மவர்முனம் யானெதும் வழங்கேன்
கேடி னீர்நினை வதுசெய்க வெனக்கிளத் தியுளே
நாடி னுன்குகன் றிருவடி மலரரு ணடையோன். (௫)

கான்மு ரிந்தது மூப்பனுர் நிலையிலென் கதிகொள்
நீன்மு ரிந்தது விடற்குள னேநிக ழுதனுல்
நான்மு ரிந்தது நவைநிலன் முரிந்தது நடலைச்
சூன்மு ரிந்ததெ னுவுவந் தனன்சொன துறவி. (௬)

கெழுமு மன்பொரு வருடனி ருந்திடக் கிளந்த
ஒழுகை செல்கையி லுதிரமிக் கேயொழு குதலைக்
கழுது நோக்கினு மழுமரைக் கடிகையிற் கருணை
தழுவு மாமருத் துவநிலை யடைந்ததச் சகடம். (௭)

பல்வி சாலவஞ் சாலைக ளுளவஙன் பணைமேல்
இவ்வி சாலமோர் மூன்றுடைத் தலத்தடி யேய்ந்த
நல்வி னேதபன் னென்றெனு மிடநணு கிடுமுன்
கல்வி கேள்விகொள் கருத்தினர் போந்தனர் கடுகி. (௮)

போந்த வன்னவர் யாரெனிற் புகழலிக் கேணி
ஆந்த லந்திகழ் சுப்பிர மணியனு மவனேர்
காந்தை யும்மெனக் கூறுவ ரவர்படர் கணித்தோம்
ஈந்த பேறினி யென்செய்து மெனவழு தனரால். (௯)

அழுகை யோபெரி தாகிய தவர்வர லடுத்துத்
தொழுகை யோரளி யானெய்தி விழிப்புனல் சொரிந்தான்
பொழுது போமுன்வந் தனர்பல ரென்றுபின் புகல்வாள்
இழுமு லாமனு பூதிய னெறிவிழை யிகுளை. (௧௦)

இரத்தாக்ஷிஸு ஐப்பசிமீ ூ௨ புதவாரம்.

---

௬. கதிகொள் நீல் = நடைகொள் (பிராண) வாயு.

௮. மூன்றுடைத்தலம்—இது, Munro ward (மன்ரோ வார்ட்) என வழங்கப் படுகின்றது.

௯. சுப்பிரமணியன் = சுப்பிரமணிய தாசர்.

ஓம் ஈந்த பேறு = குமரகுருவை யுபதேசித்த எங்கள் செல்வமே! ஓம் = ஓமென்னும் பெயரிய குமரகுரு.



# திருக்கடாவிடை.

---

## அசோகசாலவாசம்.

## (ஐந்தாம்பத்து.)

### கலிவிருத்தம்.

### அடியோன்றற்குப்பதினோரக்கரம்.

திங்க ளின்னமு தத்தைவெல் செம்மொழி
நங்கை யென்றலை வீரவின் றுள்ளநாட்
கங்குல் போய்வரு நாட்களி லேகளி
மங்கி னூர்பலர் வந்துகண் டன்பனை. (க)

அன்பி ருக்குமத் தாசனை நன்கறிந்
தின்பி சைத்தவ ருட்சில ரெய்திலர்
என்பெ றற்குரி யாரவ ரீரமார்
மன்ப தைக்கருள் வள்ளயிற் றேவன்பால். (உ)

சொன்ன வைப்பிற்சி கிச்சைதொ டங்கலுஞ்
சென்னை யிற்றிரு வல்லியங் கேணியின்
மின்னு மற்பின ரன்னமு மென்சுவை
துன்னு நற்கனி துத்தமு நல்கினர். (ந)

மூவ ரேசண்மு கக்கவ சஞ்சொலும்
நாவ ராயினர் தத்தமின் னண்ணியம்
மூவ ருள்ளுமுன் னுமல்லிக் கேணியான்
மாவு ரங்கொடு நீடுவ ழங்கினன். (ச)

காலெ னுஞ்சொலெ மூங்கடி யின்முரி
காலி ரண்டுப டாதிரு கட்டுவேல்
மேலின் மாட்டியொர் வேலினி றுத்தவக்
காலை நன்கெதிர் கண்டன னேயவன். (ரு)

என்பு கூடிடு காறுமவ் வாறெதிர்
அன்ப னேக்கியி றைஞ்சிய கத்துளே
இன்பு கூர்ந்தன னேதொழில் சோதிடம்
என்ப தாயினு மீசனை யெண்ணுவோன். (கூ)

**வி**ண்ம கிழ்ந்திட வேல்விடு வேண்மயிற்
கண்ம கிழ்ந்தெழ ருசற்குக் காட்டினன்
மண்ம கிழ்ந்திட மாகம கிழ்ந்திட
எண்ம கிழ்ந்தபன் னென்றினி ராவிலே. (எ)

**அ**ந்த மாபெருங் காட்சியி லாடியே
வந்த மாமயிற் கூந்தனல் வட்டமாய்ச்
சந்த வானம றைத்தலுஞ் சாரிடம்
வந்த தோகைந டிப்பும்வ ழங்கின. (அ)

அடியோன்றற்குப்பன்னீரக்கரம்.

**வ**லத்து மாமயி லோடிடம் வந்தவோர்
நலத்து மஞ்ஞைசின் மைத்தவை ஞாலமாம்
நிலத்தி லேயடி வைத்தில நீளுருப்
பலத்த பொன்மைம லிந்தவொர் பச்சையாம். (கூ)

**மி**ளிர்வ யித்திய சாலையின் மேற்புறன்
ஒளிர்ந பத்திலிவ் வாறுகண் டோகையாற்
குளிரு ளத்தின னய்க்கைகு வித்தனன்
தெளிதி ருப்புக ழோனடைச் சீருளோன். (கo)

இரத்தாக்ஷிஸூ ஐப்பசிமீ கசஉ குருவாரம்.

---

எ. பன்னென்றின் இரா = கால்முரிவுண்ட தினந்தொடக்கமாக வெண்ணின் வரூஉம பதினோராவது நாளிரவு. இது, மார்கழிமீ உஉஉ ஆதிவாரமும், பூர்வபக்கப் பிரதமை திதியும், பூராட நக்ஷத்திரமுங் கூடிய வொருகாலமாம்.

# திருக்கடாவிடை.

---

## அசோகசாலவாசம்.

## (ஆரும்பத்து)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

*இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.*

**இரண்டுசீர்வண்ணம்.**

**வி**ண்ணின் மாமணி வாரு ணத்தின்ம றைந்த தென்னவி ரத்தனை
நண்ணி யேமிளிர் வாய வவ்வுயர் காட்சி போதலை நண்ணிய
தண்ண லேயினி யெங்ங னின்னொரு காட்சி யாகுமெ னுவருள்
எண்ணி னனழு கண்ணி னொனென வாயி னனுல கெண்ணுறுன். (௧)

**ம**றைந்த காட்சியின் மேலு மேயுளம் வாடு தாசனு வக்குமா
நிறைந்த சேய்ப்பர னேர்சி வந்தகு ழந்தை நீட்டிய காறலை
உறைந்த சேக்கையு டன்கி டந்திடல் காட்டி னனத னொட்பமால்
அறைந்த நீப்பன றிந்த பின்றைம றைந்த தவ்வுரு வோரிரா. (௨)

**நீ**ங்கி லேனெனல் காட்டு மாறெனெ டும்ப டுக்கைகி டந்தசேய்
ஆங்கு மாரவெ னண்ட வாவென கங்க ளித்துள தாயினும்
ஈங்கு மாய்வலெ னக்க ளித்துள வென்னை யிம்மணி ஈஇய
பாங்கை யோர்கில னென்ற வன்பெயர் பன்னி னன்மகி முன்னிலான். (௩)

**எ**ன்ற னப்பத மூறு கொண்டதை யெண்ணி யெண்ணிவ சுந்தரை
என்ற னப்பன யிற்பி ரானையி ழித்து ரைத்திடு மோவிதற்
கென்ற டுப்பயர் வேனெ னப்பெரி துங்க வன்றவன் னேனளி
என்றெ ரிப்பில டங்கு மோவரு ளிறைவி யென்றுசொ னள்சகி. (௪)

**தெ**ன்பி றங்குரு நங்கை மாவிகு ளாய்தெ ரித்தச ரித்திரங்
கொன்பி றங்கிறை யாடன் மேயது கோர நெஞ்சுமு ருக்கிட
முன்பி றங்குவ தென்செ வித்துணை முன்ன மென்பன வின்னமும்
பொன்பி றங்கதில் வீழ்வ வாயின பூர ணம்பெற வேசொலாய். (௫)

**எ**ன்ற லுஞ்சொன மன்னர் மன்னன்ம ருத்து வத்தல வீடர்கள்
குன்றெ றிந்தபி ரானை நம்புகு ணத்த னேர்சர ணத்தெலும்

---

௨. ஒட்பம் மால் = அழகும், வேட்கையும். வேட்கை அன்புமாம்.

௬. ஈடர்கள் = பெருமையுடையார், தக்கோர்.

பென்ற துந்திகழ் வண்ப டங்களெ டுத்து நோக்கியொ டிந்தசூ
ரென்று கின்றது ணர்ந்து தோகமி லோகை கூர்பவ ராயினர். (சூ)

இன்னு மேபதி னைந்து நாள்களு ளேபுண் ணுறுமவ் வெல்லையும்
நன்னர் மேயம ருத்து வப்பதி நீங்கொ ணுதெனு நாதமும்
பொன்னி லாமயி லூர்சு வாமிபு லத்தி னின்றும வன்புகழ்
பன்னு நாவினன் வண்ம கிழ்ந்திட வுண்ம கிழ்ந்திட வந்ததே. (எ)

அம்ம ருத்துவ சாலை வேலைய மர்ந்த வோருய ராங்கிலை
செம்ம ணித்திரு மேனி வேள்கழல் சிந்தை செய்குநன் முன்புபோந்
தெம்ம னித்தரு முண்ணு முப்பையி கந்த நுங்கழ லாயுள்கள்
செம்மை யுற்றமை மாவி யப்பெனல் செப்பி நின்றன ளற்பொடே. (அ)

விண்ணின் மேலொரு பூத மின்றென வெண்ணு வாரென வேளின்மேல்
எண்ண வோர்பொரு ளின்றி ருப்பினு மிச்சி யேனதை யென்னுமோர்ப்
பண்ணு மானவி ரத்த னென்பட ராற விங்கண்ம ருத்துவம்
பண்ணி னுருத வல்பு ரிந்தவர் வளர்க வென்றருள் பரசினன். (சூ)

புதிய பாக்கமி ருக்கு நல்லகு ழந்தை வேல்புரை தீர்ந்தவில்
வதித லாற்றிய பின்பு சென்னைவ திந்து தாணடை கொண்டனன்
மதிகொ ணீப்பனு வன்ற சென்னையில் வைகு மன்பரு மேனைய
பதியி னுத்தரு முவகை யுற்றனர் பாட்ட னேர்பதி வேட்புளாய். (கo)

இரத்தாக்ஷிஹு கார்த்திகைமீ௳ சஉ புதவாரம்.

---

கo. "உரையிசை யிடியே நாத முரைத்தகோ சனையே பாட்டே" என்றபடி பாட்டு ஒலியாகலின், ஒலிமுனிவர் 'பாட்டன்' எனப்பட்டனர்.



# திருக்கடாவிடை.

## அசோககாலவாசம்.

## (ஏழாம்பத்து)

### கலிவிருத்தம்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

முதியவயித் தியநாதன் றெருவின் மூப்பாய்
வதியுமயிற் குகனருள்கொள் வாழ்க்கை யாளர்
கதியுணரக் குமாரகுரு தாசன் கால்போற்
புதியசுலிற் புரிந்தயிலன் றளிபுக் கீந்தார். (க)

ஈந்தார்க ளபிடேகித் தாரெம் மீசா
சேந்தாசெய் தனமியன்ற செயலென் றேத்திப்
போந்தார்க டுறவியுறும் புடையன் ஞானே
மாந்தார்வ வமுதுண்பா ரெனவந் தித்தார். (உ)

விண்வாழ்வின் முகத்தர்தொழும் வேல்வே ணுடி
மண்வாழ்வெள் குநர்க்குதவல் வாளா போமோ
கண்வாள்கள் வசிபடுத்துங் கபோலச் சானே
எண்வாள்பல் கிரண்டுடையெம் மிறைவி யேயோ. (௩)

முன்காலே யுதைத்தவன்கான் முளையாய் நின்றாய்
பின்காலே யடுத்தவரைப் பெரிதுங் காத்தாய்
என்காலே யினிதளித்தா யினியெஞ் ஞான்றும்
நின்காலே யெனக்களியென் றுனந் நீத்தோன். (ச)

உலகநடைப் புகழ்விழைந்தே யுலகைக் கூட்டல்
கலகநடைத் தெனவவருட் கலவான் கொன்னில்
விலகுநடைக் குணனம்பார் விரும்பா னேயவ்
வலகுநடைக் களத்தயிலோச் சமலன் றுசன். (ரு)

க. 'புதியசுல்' - என்னுந் தொடரிலே சுல் = வெள்ளி.

ஆரிருக்கு மாரபிரா னருள்செம் பொற்சேய்
பேரிருக்கும் யாப்பிவறல் பிறங்கத் தாசன்
சீரிருக்கு நாரிற்சொன் மலர்கள் சேர்த்தி
எரிருக்கு மாதொடுத்தீ யியல்பு முள்ளோன். (கூ)

உள்ளத்தன் பூறுமவ னுளப்பூ வாயாம்
வள்ளத்திற் சேய்மதுவுண் டதையுண் மாந்தா
தெள்ளத்தன் னேரகத்தெண் ணுயிரா மீயிவ்
வெள்ளத்தென் மேதினிமீ திருக்குங் கொல்லோ. (எ)

நீலகண்ட சிவன்மகனீ ணீல கண்டம்
மேலகண்ட னெனவருவா னவற்கு மேலோர்
காலகண்ட னிலனென்னுங் கருத்தார் தாசன்
பாலகண்ட வுணர்வில்லார் பகைகொண் டாரால். (அ)

இதப்பகைவெண் பொடிதிமிர்வார்க் கிணேவே பூக்க
மதப்பகைமற் றணேவர்க்கு மமரே பூக்கச்
சிதப்பகைவன் மலம்போழுள் ளயிலன் றீமை
விதப்பகைசெய் யவன்றாசன் மிளிர்ந்தான் மன்னே. (கூ)

எள்ளிரவ ரறியாச்சொல் லியம்பின் போனுள்
கொள்ளிரவி விழையொருவன் குணஞ்சொன் னேனென்
றுள்ளிரவு கடிசகிதா னுரைத்தாள் கேட்ட
நள்ளிரவு வதிகுழலு நயந்துட் கொண்டாள். (கO)

இரத்தாக்ஷி௵ கார்த்திகைமீ உகவ சனிவாரம்.

---

கூ. ‘பிறங்கத்தாசன்’ என்றதைப் பிறங்கு + அத்தாசன் எனப் பிரித்துக்கொள்க. நார் என்பது, நாரினையும் அன்பினையு முணர்த்திநிற்றல் காண்க.
கூ. செய்யவன் = செவ்வேள்.
கO. சொல் = புகழ் = திருப்புகழ்.

# திருக்கடாவிடை.

---

## அசோகசாலவாசம்.

## (எட்டாம்பத்து)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

### அட்டோத்தர சதாக்கரம்.

*தானதன தானதன தானதன தானதன*
*தானதன தானதன தானன.*

தேள்வருடு மாசினியி லேதினமு மேதிகழ்தி
வாகரம டாரியையுண் மாமணி
கோள்வருட னூறுகதி ரார்பவள மீழமணி
கோவைபுரி மாலைவெயில் காலவே
நாள்வருடு தேனலர்கொள் கோதைமணம் வீசவவிர்
நாகமணி யார்குழையி ளுலணி
தோள்வருடி யாடமணி மேகலையு நூபுரமொ
டேசிறிய சூழ்மணியு மாலவே. (க)

ஏருடைய மூரலொளி யேசிறிது லாவமுக
வேசறுசு தாகரனி லேயிள
நீருடைய சூதகிச மேனியெழில் வீசமின
னேரிடைகு லாவவன மேயெனச்
சீருடைய வோர்நடைகொள் கோமகணன் மாதவிசி
காதுபடர் காவணம தேகியே
நாருடைய மானசமொ டேகுமர நாதனரு
ளுடிவழி பாடதுசெய் தாளரோ. (உ)

---

க. உண் - வினைத்தொகை. உண்டல் = நுகர்தல் எனப்படுமாற்றானே இங்கே 'விழுங்கல்' என்பது பொருள்.

திவாகர மடாரி = இளஞ் சூரியகிரணம்.

மாமணி = மாணிக்கம்.

மணி = முத்து.

உ. சூதகிசம் = மாந்தளிர். மாதவி = வசந்தகால மல்லிகை. காவணம் = பந்தல்.

தானதன தத்தனன தானதன தத்தனன
தானதன தத்தனன தானன.

மாசறு கருத்தினுயர் தோழியைய மைத்தெழில்வி
மானமணே நற்படுக ராடலுங்
காசுபசு மற்றையவை யீதலுமி யற்றலெவை
காணவென வெற்றிவடி வேலன்மேல்
ஆசைகொளன் மிக்குறலின் மேவுபெரு வெப்பொழியு
மாறுகுளிர் குட்டநனி யாடலும்
ஏசினேயெ ருக்குபர வாசையதி டர்ப்படலி
லாதொலேப விக்கவவை யீதலும். (௩)

ஆமெனவு ரைத்தனள்கு கேசனுயர் பத்தியினி
தார்சகிகு ரத்திநிமிர் கேசமே
ஏமநிற முற்றசடை யாதல்வெணி றத்ததிரு
வேமமெழி லக்கவட மேனிசார்
நேமநிலே செப்புகென வோதிறைவி ருப்பினெய்த
டாவிமலர் வைத்தல்கள பாதியாங்
தேமிடன கைப்பிரிய மோயினவை யொட்டுமென
வேசகிதெ ரித்தளிப ராவினுள். (௪)

தானதன தந்தனன தானதன தந்தனன
தானதன தந்தனன தானன.

நாண்மலர்க டம்புமிலே யீசனேவி ரும்புதலே
நாரியினு மென்செவியு ளுடுமா
கேண்மலியி ணங்கிபுக லாயெனநு வின்றவிறை
கேழதுபி றங்குபெய ரேநவில்
மாண்மலிவு யர்ந்தவருண் மோனமவ னம்பினுசு
வாசமிகல் விஞ்சுபொழு தோடறீர்
கோண்மலிவி னெஞ்சணேபி ராணனுள டங்குநிலே
கோதில்கன கும்பகம தாகுமே. (௫)

---

௪. நெய்தடாவல் = எண்ணெய் தடவுதல்.
பரவல் - புகழ்தல், வணங்கல், சொல்லுதல், பரவுதலென்னும் பலபொருளொரு சொல்.

௫. அவன் நம்பின் = அவனுசையினுல், உசுவாசம் மிகல் = சுவாசம் விடுகை அதி கப்படல். இது, பெருமூச்சென்னப்படும்.
"நெஞ்சணே பிராணனுள் அடங்குநிலே"— இது, மூர்ச்சை யென்னப்படும்.

வேதரச கந்தனெனும் வேண்மிசைவி ழுந்தமனம்
　　வேறெதுநி னைந்திலையு மோசொலாய்
பாதரச சஞ்சலம தாயுழலு நெஞ்சமங
　　னேதருட ரும்பரம னேயஙன்
போதரச வின்பமருள் வானதுசி றந்தபரி
　　பூரணச மஞ்சொல்கதி யாமிதை
மாதரசி நன்குணர்தி கூறியவை யன்புவழி
　　யாமெனவி ணங்கிசொலி னளரோ. (௬)

ஆடகந றுந்தொழில்கள் சால்கடக வங்கையல
　　ராருமுறை கும்பிடுந ளாயருள்
நாடகவெ னெஞ்சிலுள நாயகசி கண்டியிவர்
　　நாதவயி றங்குகர நான்மறை
பாடகில வின்பிறைவ சேவடிவி ரும்புபவர்
　　பாடுணர்பெ ருங்கருணை யாயுனைத்
தேடகமெ னன்பிலுறு மாறருள்பு ரிந்தபடி
　　சேரவரு ளென்றிறைவி பாடினள். (௭)

ஆகநடு விஞ்சிதய தாமரையு மந்தண்முக
　　தாமரையு நன்குமலர் வாய்நறுந்
தேகவெழில் பொங்கியொளி மேயவவண் முன்றுணைவி
　　சேடியர்க ணம்பலவு மேயழைத்
தோகையொடு கொண்டதெனை யேயெனுளி ருந்ததுவு
　　மோவினசை நின்றுளது மாறெழுத்
தாகவொளிர் விஞ்சைநவி ருசனெதிர் வந்ததுவு
　　மானபொரு ளென்றுசொலி னளரோ. (௮)

தந்தனன தானதன தந்தனன தானதன்
தந்தனன தானதன தானன.

இந்தவித மோதவவௗ னெஞ்சினுழை மேயதுய
　　ரின்றொழிவ தாயதத னுலுடல்
வந்துவறி தாகவிலை கொண்டவிடன் மாசறவ
　　யங்கிடும சோகவன மாரிதே
இந்தவிட னுன்விடுவ தெந்தவண மேர்நகரை
　　யுந்திதிசெய் வேனிவணி லாவிமேல்
எந்தவிட னுன்வதியி னுங்களியு ளேனெனவி
　　யம்பியணி யாடைகொடை யாடினள். (௯)

மந்திரிகண் மாதொழிலில் விஞ்சிகுளே நீகளிம
லிந்துநனி வாழியவ ருவளி
உந்துமன வேணையரு முய்ந்திடுக வேயெனவ
ளொண்சரணே யூனமறு பூசனே
சிந்தையுற வேபணிம கிழ்ந்தருணே மாமுனிசி
றந்ததமிழ் நாடுகும ரேசுரன்
அந்தமில்வி பூதியரு ளென்பதுப ராவினர
ரும்பெரிய தோழியுமெ லாருமே. (௧௦)

இரத்தாக்ஷிஸு மார்கழிமீ ௨௨ புதவாரம்.

அசோகசாலவாச முற்றிற்று.

---

கடாவிடைக்காண்ட முற்றிற்று.

நான்காவது

# வேட்கைக் காண்டம்.

## க. வேற்குழவி வேட்கை.

கலிநிலைத்துறை. (இசை)

பதினே ழொன்றும்விழை செய்ய பாத மோவிடநன்
மதிபோன் மாமைமுக மண்ட லம்ப குக்கநகுங்
கதியே வேற்குழவீ நின்னைக் காத லாற்றழுவ
நிதியே வாராயோ கைக ணீளு கின்றனவே. (க)

சீவி முடித்தசிகை செம்பொற் சுட்டி நன்குழைகள்
மேவு முறுப்புநிழல் செய்ய வாடும் வேற்குழவீ
ஏவல் கொடுத்தருள வெண்ணி யென்முன் வாராயோ
கூவை வெறுத்தகண்க ளிச்சை கொள்ளு கின்றனவே. (உ)

பாவே றுஞ்சவையர் மெச்சிப் பாடும் வேற்குழவீ
சேவே றுன்பவளத் தெய்வ வாயை யேதிறந்து
தூவே றின்கரைக ளிங்குச் சொல்ல வாராயோ
கோவே யென்செவிக ளிச்சை கொள்ளு கின்றனவே. (ங)

பொன்னார் கண்டசர நன்கு பூண்ட தங்கவொளிக்
கொன்னார் வேற்குழவீ நல்ல கொவ்வை நின்னிதழை
என்னார் வந்தீர விங்கு நல்க வாராயோ
உன்னா ருண்ணிலையும் வாயு மூறு கின்றனவே. (ச)

எண்ணே றும்பலயி லென்ற வேல்பி டித்தசையுங்
கண்ணே செங்குழவீ யென்றன் கண்க ளுடழகே
தண்ணே றும்வதன முத்தந் தாரா யோபிறிது
நண்ணா வென்னுளந்தா னின்னை நாடு கின்றதரோ. (ரு)

---

க. பதினேழொன்றும் = பதினெண்கணமும். விவரம் :— களஅ - ஆம் பக்கத்திற் காணலாம்.

மாமை = அழகு. பகுத்தல் = ஈதல். நகுதல் = ஒளிவிடுதல்.

முத்தே மாமணியே முல்லை வெட்சி நன்கடம்பு
வைத்தா ரம்புனைந்தென் முன்னர் வாரா யோவுழனுஞ்
சித்தார் வேற்குழவீ யுச்சி செவ்வன் மோந்துகொள்ள
வித்தே யென்மூக்கி னிச்சை மீறு கின்றதரோ. (சு)

ஐயார் நல்லரையிற் பொன்வ டங்க ளாடவுழல்
வையார் வேற்குழவீ யிங்கு வாரா யோகால்கள்
மையார் கண்மலர்க ளின்பு மல்க மோந்துகொள்ள
மெய்யா யென்மூக்கி னிச்சை மீறு கின்றதரோ. (எ)

பொன்போன் மேனியிலே நல்ல பூம ணங்கமழும்
இன்பே வேற்குழவீ யிங்கு வாரா யோவிரியா
அன்பார் புன்முறுவல் செய்யு மார்விற் பல்லழகென்
துன்பீ ரம்பெனவெ னெஞ்சந் துள்ளு கின்றதரோ. (அ)

கள்ளார் செங்கரும்பே கண்டு தேனே யின்னமுதுண்
கிள்ளாய் வேற்குழவீ யன்பர் கேளே மாதுமையாள்
பிள்ளாய் கண்ணியொன்று நல்ல பெட்பி னுன்றருவேன்
தள்ளா தேகொளற்கென் முன்னர் வாரா யோதகையே. (கூ)

மாண்பார் சந்தமுனி யின்ப வாழ்வே நின்னெழிலைக்
காண்பார் வேறழகு மிங்குக் காண்பார் கொல்லோநான்
ஊண்பா டஞ்சியுனை நன்கு காண்பா னின்றுவந்தேன்
வீண்போ காதபடி யிங்ஙன் வாராய் வேற்குழவீ. (கo)

துர்மதி௵ மார்கழிமீ ககஉ ஆதித்தவாரம்.

இத்திருப்பத்து, காலை மாலை பூசிக்கப்பட்டுப் பத்திபிறங்கப் பாடப்படுமாயிற் புத்திரதோடம் நிவர்த்தியாம்; சந்ததி விருத்தியாம்.

# உ. வேற்கடவுள் வேட்கை.

பண் - கொல்லி.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

அடியொன்றற்குப்பதினெட்டக்கரம்.

சக்க ரங்கதை சங்கம் வாளுயர் சாரங் கந்தரித் தேமணி
மிக்க மேனிவி ளங்கு மாமன்வை குந்த வூர்செய்வி ருந்துண்பான்
செக்கர் மேனியி லேக டம்புசி றக்க வேமிலங் தாரருண்
மக்க ளோடுசென் றூர்கொ லோநனி கூவி யும்வரக் கண்டிலேன். (க)

முந்தை நாடெவ்வ ராற்றம் மேன்மைமு ணங்கு மாறுகண் டோடிய
இந்தி ராதியர்க் கீந்த வாழ்விது நாளெவ் வாறுள தென்றறி
சிந்தை யோடுவி சார மேசெய்யச் சேவ லங்கொடி யாரெனுங்
கந்தர் போயின ரோவிங் கேநனி கூவி யும்வரக் கண்டிலேன். (உ)

நாலு மாமறை நாளு மேபுகழ் நஞ்சு லாந்திருக் கந்தரச்
சூல பாணிவி ரும்பு மாறுமுன் சொற்ற வோம்பொரு டன்னையிக்
கால நன்குவி ரித்துக் கூறுவ லென்று மாகயி லாயமே
கோல வேலர்சென் றூர்கொ லோநனி கூவி யும்வரக் கண்டிலேன். (ங)

கானல் சான்மணி யொன்ப தும்பதித் துள்ள காஞ்சன வுஞ்சலில்
ஏனல் காத்தவ ளானை மாமக ளோடி ருந்தசை யுந்தொழில்
ஊன மின்றிநி கழ்த்து மாறுகந் தாச லந்தனை யுள்கியே
ஞான வேலர்சென் றூர்கொ லோநனி கூவி யும்வரக் கண்டிலேன். (ச)

மாத லம்பல சாரு மண்டமெ லாஞ்செ லும்பெரு மாண்பினுல்
ஏத மொன்றுமி லாத மஞ்ஞைத னிச்சை யானடஞ் செய்யத்தன்
மீது கொண்டெவண் சென்ற தோவடி யேன துள்ளம்வி ரும்புமோர்
காதல் வேற்கரத் தாரை நானனி கூவி யும்வரக் கண்டிலேன். (ரு)

உள்ளி ருந்தெழு மூச்சு நெஞ்சமு முள்ள டங்குநி லைக்கணே
கொள்ளு நல்லடி நாட்ட யோகிகள் கோதி லாவுளத் தாமரை
நள்ளி டங்களி லேகி டக்கும ருந யப்பினை நாடியே
வள்ளல் வேலர்சென் றூர்கொ லோநனி கூவி யும்வரக் கண்டிலேன். (சு)

சோம லோகம காகை லாயமொண் சோதி மேருகந் தாசல
நாம மேயம காத லங்களி லெண்ணி லார்நண நேர்ந்தனேர்
சேம மெத்துணைப் பாக வின்பமெ னக்க ணக்கது செய்தொழில்
காமர் வேலவர்க் குற்ற தோநனி கூவி யும்வரக் கண்டிலேன். (எ)

சீர்த்த தம்மடி யார்கட் கிங்குமுற் றீவி னைப்பய னகவே
ஆர்த்த நோய்க ளழிக்கத் தந்திர மந்தி ரச்செய நீர்களை
வார்த்து நன்குசெய் மாம ருந்திடு வேலை மேற்கொண்டு ளார்கொலோ
கூர்த்த வேல்பிடித் தாரை நானனி கூவி யும்வரக் கண்டிலேன். (அ)

ஆசை யோடிளஞ் செம்மை சேர்நல மார்ந்த வென்னுட லிற்றழல்
வீசு கின்றதென் செய்கு வேனுளம் வெம்பு கின்றதென் செய்குவேன்
நேச மொல்குற நான டந்தமை யானி கழ்ந்தவொர் கோபமோ
மாசில் வேல்பிடித் தாரை நானனி கூவி யும்வரக் கண்டிலேன். (கூ)

நாளு மன்புடைத் தோழி யேபுகழ் பாடு நாவல னாதது
கேள ருவித யார விந்தநன் றேற லைக்கிர கித்திடும்
வாள ருதவண் டாகி யுண்டதி லேம யங்கியுள் ளார்கொலோ
கோளில் வேல்பிடித் தாரை நானனி கூவி யும்வரக் கண்டிலேன். (க0)

துர்மதிஷு தைமீ கஉஉ புதவாரம்,

---

# ந. வேற்குமரர் வேட்கை.

---

கலிநிலைத்துறை.

அடியோன்றற்சுப்பதினைந்தக்கரம்.

அன்புய ரோர்குண நாளும்வ ழூநல னார்தோழீ
துன்புட னுனிங னைதுவ கேணனி சோராமல்
வன்புலன் மாழ்குற வேதுயில் போதிருண் மாய்வாகப்
பொன்புரை யோரிலை வேலென்முன் வந்தது பூவோடே. (க)

அவ்வொளி வேனனி பற்றிய கையுடை யார்மேனி
செவ்வொளி செய்தது பத்தொரு மூன்றொடு மூன்றுகும்
அவ்வுரு வின்வய தவ்வுரு நின்றெழு மாமோதஞ்
செவ்வனு ரைக்கவொ ணுதுதி மிர்ந்துள தேமாமோ. (உ)

சந்துக தம்பகன் மான்மத மாதிய சாரேதும்
அந்தவு டம்பிலி லாமையி னம்மண மோர்சால்பாம்
மந்தமி லம்மரு வாயுவென் மேனியி னும்வீசி
இந்தம ணந்தர லாயது வேறெது மெண்ணுய்நீ. (௩)

என்னறு நாசியு மம்மய மாயதி ஃதென்னேடீ
அன்னவர் புன்னகை கண்டன னவ்வொளி யாஞ்சாயற்
கென்னவில் வேனுவ மைத்திற முள்ளெது மேயாதென்
நன்னகை யும்மதை நாடுதல் கூர்கிற தேதோழீ. (௪)

செந்துவர் மேனியி லார்முக மாமொரு செம்பூவிற்
சுந்தர மாரிரு செம்மலர் மின்னின தோள்கால்கள்
அந்திரு மாமல ராகவ யங்கின வப்பூந்தேன்
கந்தமொ டுண்ணமு யன்றன வென்னிரு கண்கீதம். (௫)

ஓரலர் மேலிரு பூமிளிர் செம்மைக ளோவாவந்
நீரரின் வாயிதழ் கொவ்வையின் மின்னிய நேர்காணென்
சீரணி வாயெனு மின்னுரை யங்கிளி செம்மூக்கால்
வருட னேயதை யுண்குவ லென்றெழல் கண்டேனே. (௬)

எவ்வுல கும்விலை கொள்ளவர் காதணி யென்காதார்
செவ்விய பூண்களை யெள்ளிந கைத்தன தெய்வீகச்
செவ்வுரை நாடென கேள்விக டேமொழி யேகேட்பான்
அவ்வுளி நம்பின வேதுமொ ழிந்தில ரன்னுரே. (எ)

இன்னநி கழ்ச்சியி லேயவர் மேனிக ரந்தார்யான்
அன்னரி ருந்தவி டந்தட வுந்தொழி லாலேகை
கொன்னும்வ ருந்திய லுத்தன வவ்வமை யங்கூறின்
மின்னெழு வைகறை யாமென தன்புடை மென்றோளீ. (அ)

அவ்வொரு வைகறை யேசதி செய்ததன் னூர்போமா
றவ்வியல் பாரெதி ரேதெரி கின்றன ராணுலும்
இவ்விரு கைகடொ டுஞ்செய லென்பதை யேகாணேன்
நவ்விகன் ணேக்குடை யாயித னுண்மைசொன் னுன்வாழ்வான். (௯)

உண்டலை யாடையு டுத்தலை யாடலை யுண்ணுதென்
மண்டிய சிந்தையன் னூர்வச மாயது வந்தார்யார்
திண்டிறன் மேனெறி யார்புகழ் சொற்றவர் தேவாயின்
கண்டவெ லாமுள மீதுவ ரைந்தெழில் காண்பேனே. (௧0)

துர்மதிஸு பங்குனிமீ ௩௨ சனிவாரம்.

---

௫. கீதம் = வண்டு.

# ௪. செவ்வேள் வேட்கை.

---

கண்டுமகிழ்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியோன்றற்குப்பத்தோன்பதக்கரம்.

மானிகர் கண்ணினள் பூமகள் போலும்வ னப்பினள் சேடியரோ
டானல சோகுயர் சோலையி னீழல டைந்தளி சாலுநிழால்
நானின தொண்ணய மேகிர கித்திட நல்லக டம்பினிருந்
தேனணை தோளழ காலெனை யாளொரு சீரிய ரிங்கிலையே. (௧)

செந்தமிழ் மாமுனி வாழ்மலை நின்றெழு தென்றலெ னும்வளிநீ
தந்திடு சந்தன வாசமு மேயும்வ சந்தமு நானணவிச்
சிந்தைம கிழ்ந்திட நல்லக டம்புசெ றிந்தவிர் தோளுடையார்
வந்திடு மாறறி யேன்வரு வாரெனும் வாய்மைவ ழங்குவையோ. (௨)

தண்ணிழ றந்துக விந்துள விவ்வடர் தண்டலை நின்றுபல
கண்ணிதி லுண்டென வேயெழின் மேவுக லாபம்வ ளாவிநடம்
பண்ணுசி கண்டிக ளேநும பன்னட பந்தியை நான்விழைவான்
எண்ணறு மெண்குண மோடெனை யாண்மயி லேறழ கிங்கிலையே. (௩)

புன்கனி யுண்பதி லாதுப ராரைபொ ருந்துபல் சாகியெலாம்
இன்கனி யுண்டுவை குஞ்சுகம் விஞ்சியி லங்கும்வ ரிக்குயில்காள்
நன்கனி வாய்நனி கூவுநு மோதையெ னன்செவி தானுகர்வான்
என்கனி வுண்டெனை யாள்குக சம்புவெ னுந்துரை வந்திலரே. (௪)

வாள்விழி காமரி ணுடைவிர் கிஞ்சுக வாயுடை யங்கிளிகாள்
நாள்விரி போதளி யுண்டும தர்த்தெழி னன்குற மூசளிகாள்
நீள்பத மின்னிசை தந்திடு நுந்தொழி னேர்மைக ணுன்விழைவான்
ஆள்பத நாயக ராகிய செங்குடை யாடலர் வந்திலரே. (௫)

இந்நறு மாலையின் மல்லிகை முல்லைக ளேயெனை யாள்பவர்முன்
என்னகை மின்னுதல் போலவிழ் நும்மண மென்பதை நானணுகிக்
கொன்னுமு வந்திட வென்னொரு நாயகர் குங்கும மேனியரோம்
என்னுமொ ழிப்பொரு ளோதிய நாவரெ னேடுவ யங்கிலரே. (௬)

பூரண மாயொளி செய்தெழி லொண்மைபொ ருந்துக லாநிதியே
நீரண வுங்குளிர் தாமரை போலநி கழ்ந்தென தாகமெலாம்
மாரண வங்கியெ னச்சுடு கின்றனை வஞ்சக மாயனூர்செய்
காரணம் வீயவ டுங்குக தேவர்க டம்பெழில் கண்டிலனே. (௭)

சேலையும் வேலையு மோதிடு கண்மிளிர் சேடிய ரேதரள
மாலைகள் வெந்துதிர் கின்றன வென்னுடன் மல்கழ லானனிநீர்
சோலையி னுனஞர் கூர்தலு மிங்குயிர் சோர்தலு மோதியிது
காலையில் வேலிறை யைத்தர னல்லது காரியம் வேறிலையே. (அ)

நன்மண மிக்கந றுந்தொடை யேயுன யப்பினை யார்விழைவார்
சின்மய சிந்தையர் முன்னுகு ணத்தர்சி கண்டிக டாவிவரும்
பன்மணி நூபுர பாதர்ப ராசனர் பண்ணவர் சூழ்வருவோர்
என்மதி நாயக ரிங்கிலை போயொழி கென்றதை வீசினளே. (கூ)

இவ்வித மேபுரி பத்துமி ரண்டுமி யைந்தபி ராயமுளாள்
செவ்வன ணிந்தக லன்களு நீக்கின டேவருண் மாதவருள்
எவ்வரு மெச்சுதி ருப்புக ழுன்சிவ மென்றவிர் கந்தபிரான்
அவ்வுழி வந்தன னன்னவள் கண்டுள மாரம கிழ்ந்தனளே. (க0)

துர்மதிஞூ பங்குனிமீ உகூவ சனிவாரம்.

---

# ரு. குமரவேள் வேட்கை.

---

தன்னெளிமைசாற்றல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

அடியொன்றற்குப்பதினைந்தக்கரம்.

குமர வேள்செவ் வேளென்றே கூறு பேரோ டேபன்னூ
றிமிழு நாம முள்ளாரென் னேர்வி ரும்ப கில்லாரால்
விமல கோல மொல்காத வேரி யிண்டை யேயென்றன்
அமல பாதங் கட்கேநீ யஞ்சு கால மீதன்றே. (க)

துரிசில் வேத மாபேழைச் சோம வேம மாய்வேற்கைக்
குரிசி லாயுள் ளாரென்னைக் கூடல் செய்ய கில்லாரால்
கரிசி லாத செம்மாமைக் காந்த ளென்னும் பூவேயென்
அரிவில் செங்கைக் கேநீதா னஞ்சு கால மீதன்றே. (உ)

பணிகொ ளண்டர் சூர்செற்றூர் பாணர் வாழ்த்த வுள்ளார்வான்
மணிகொள் வேலர் நானன்கு வாழ மேவி னாரல்லர்
துணிகொள் யாணர் நீலந்தான் றேன்று காவி யேயென்றன்
அணிகொள் கண்ணிற் கேநீதா னஞ்சு கால மீதன்றே. (ங)

குழவு மூப்பு மில்லாநன் கோல ஞான யோகுள்ளார்
தொழவு ணேக்குள் ளார்நீபத் தோள ரென்னை யேயின்னும்
விழைவி ணேக்கி ஞரல்லர் வீவில் கூம்ப லேயென்றன்
அழகு மூக்கிற் கேநீதா னஞ்சு கால மீதன்றே. (ச)

சுமுக தேவர் வேயூதுந் தூய வாயர் வைவேலர்
கமுகு வெண்பன் னஞ்சேருங் காமர் வாய ரென்வாயாங்
குமுத நாடி ஞரல்லர் கோதில் செந்நெய் தாலென்றன்
அமுத வாயிற் கேநீதா னஞ்சு கால மீதன்றே. (ரு)

## அடியோன்றற்குப்பதினென்கக்கரம்.

மல்லார் வீணை தான்மீட்டி மையல் செய்வார் மாமாயம்
எல்லாம் வல்லார் வேல்வீர ரென்னெ டாடி ஞரல்லர்
நல்லார் பொல்லா ரெல்லாரு நாடு நாரப் பாசியென்
அல்லார் கூந்தற் கேநீதா னஞ்சு கால மீதன்றே. (சு)

மாசின் மஞ்ஞை தானூரு மாண்பு மல்கு மாமன்னர்
ஏசின் மஞ்சு ளாரென்னை யின்னு மேவி ஞரல்லர்
காசி லொண்மை சார்சீதக் காமர் முல்லை யேயென்றன்
ஆசில் பல்லிற் கேநீதா னஞ்சு கால மீதன்றே. (எ)

எங்கு மேக மாய்நின்று மெண்ணின் மேனி கொண்டார்மா
செங்கை வேல ராஞரென் சிந்தை யாரன் ஞரென்னை
இங்கு மேவி ஞரல்ல ரேசில் வள்ளை யேயென்றன்
அங்கொள் காதிற் கேநீதா னஞ்சு கால மீதன்றே. (அ)

தம்மை நாடு வாரின்பஞ் சாரு மாறு சீரியுஞ்
செம்மை யாளர் வேஞதர் சேர்ந்தா ரல்ல ரென்ஞசை
வெம்மை தீர வான்மின்போன் மின்னு மோரார் வல்லீயென்
அம்மை நுண்ணி டைக்கேநீ யஞ்சு கால மீதன்றே. (கூ)

வம்ப ரம்பின் முன்னின்றே வாகை சூடி வந்தாரால்
செம்ப றம்பின் பேராரைத் தேம்பா வின்பின் வைத்தாரென்
பம்ப ரஞ்செற் ரூரல்லர் பார சையக் கோடேயென்
அம்ப றம்பு கட்கேநீ யஞ்சு கால மீதன்றே. (க0)

துர்மதிஞு பங்குனிமீ உகூட மங்களவாரம்.

---

## ௬௦. கந்தவேள் வேட்கை.

**கலிவிருத்தம்.**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

அடியொன்றற்குப்பதினான்கக்கரம்.

*தான தத்தனனா தனதான தத்தனனா.*

**தூ**வி நச்சிகிமேல் வருதூய செச்சையனே
ஓவி லற்புதனே யொழியாவி ழுப்பதனே
சாவி னித்தியர்சார் தலையாய சித்துனையே
ஆவி மட்கினுமே யெனதாசை விட்டிடுமோ. (௧)

**ஞா**ன வித்தரனார் தருஞான ரத்தினமே
தேன யப்பமுதே சுகதேவ புத்தமுதே
வேன லக்கரவேர் மிளிர்மீளி முத்துனைநான்
ஆனல் பற்றினுமே யெனதாசை விட்டிடுமோ. (௨)

**தா**ர கச்சுரையே தணவாத சர்க்கரையே
ஏர கத்தனியே சுவையேறு முக்கனியே
சூர கப்பகையே சுரசேனை நச்சுனையே
ஆரல் பற்றினுமே யெனதாசை விட்டிடுமோ. (௩)

**மா**சில் சித்திரமே மயிலூர்வி சித்திரமே
ஏசில் சித்துருவே யிகலோர்கள் சத்துருவே
காசில் பொற்றிருமான் மகள்காதன் முத்துனைநான்
ஆசி லெய்க்கினுமே யெனதாசை விட்டிடுமோ. (௪)

**ஈ**ச சித்தகமோ வெழுதாத புத்தகமோ
தேச ருட்குயினே சுகசீவ ருட்பயனே
தாச ரற்பெனவே தகவோர்நி னைக்கவுளோய்
ஆச ழுத்தினுமே யெனதாசை விட்டிடுமோ. (௫)

*தான தந்தனனா தனதான தந்தனனா.*

**ஏ**ம மங்களனே மயிலேறு சங்கரனே
வீம மண்டிதனே வினைநூற கண்டிதனே
வாம னன்பரனே மதிநாத வுன்செயலால்
ஆம மண்டினுமே யெனதாசை பொன்றிடுமோ. (௬)

---

௧. மட்கல் = ஒளிமழுங்கல்.
௫. குயின் = மேகம்.

வேல னென்பரனே விதிவேத ரன்பரனே
வால வந்தணனே மலைமாது நந்தனனே
சீல புங்கவனே சிவபோத வுன்செயலால்
ஆல மண்டினுநா னெனதாசை பொன்றிடுமோ. (எ)

பூத வன்படையாய் புலராத வின்புடையாய்
நாத கந்ததொகா நவநாதர் நம்புகுகா
பீத கிம்புரிதா ரணிபீட வுன்றனைநா
டாத னந்தினுமே யெனதாசை நந்திடுமோ. (அ)

கீத சங்கமவாம் வெறிகேழ்கொ ளிந்துளமாம்
மோத மொய்ம்புடையாய் மொழிவேத கிஞ்சுகவாய்
நாத சுந்தரனே நதிபால வுன்றனைநா
டாத னந்தினுமே யெனதாசை நந்திடுமோ. (கூ)

ஏக வம்பரனே தகரேறு செஞ்சுரனே
மோக ரிந்தனுபூ தியையோது மொய்ம்பனையாள்
நாக விந்திரனே குருஞான மந்திரனே
ஆக நந்தினுமே யெனதாசை நந்திடுமோ. (க௦)

துந்துபிஹு சித்திரைமீ கஅஉ ஆதித்தவாரம்.

---

# எ. வேன்மழகளிற்று வேட்கை.

## நடிப்பு.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

### எழுத்தளவுடையன.

*தான தந்தன தனன, தனன தானன தனன.*

ஆழி யம்பக சகியொ டுழலு மார்வெழின் முதல்வி
யாழின் விஞ்சினி யமொழி குயில்சின் மாதர்க ளிடைகள்
பேழி யம்புபொய் புகுதல் பெறலி னுலதில் பொழிலில்
வாழி லங்கிழை யெனனம் வரும்வல் வேன்மழ களிறு. (க)

*தைய தந்தன தான, தனன தந்தன தனன.*

ஐய மென்பது மேசி லழகு மங்கைய ரிடையில்
உய்ய நின்றமை யாலஃ துறற ணந்தவிர் நகரில்
உய்யு மென்சகி யேயெ னுயிர்க வர்ந்துயி ருதவு
கையி லஞ்சிகி மீது வருவ துண்டுகொல் களிறு. (உ)

---

உ. கை = சிறுமை.

*தனன தத்தன தந்த, தனன தந்தன தனன.*

ஒளியி னேத்தரு மின்சி லொசிம ருங்கணி மகளிர்
ஒளியி டைக்கினி தஞ்சி யுறைத ருஞ்செழு முகிலுள்
ஒளியு மத்தகை நங்கை களுறை யென்புரி யுறையும்
ஒளிமு கத்தியெ னன்பி லொளிர்வ தென்றுசொல் களிறு. (௩)

*தான தந்தன தானு, தத்த தந்தன தனன.*

**தீ**மை யென்பதி லேதீ கற்ப டைந்தது திகழ்மை
மாமை யம்பக வீபோ யுற்ற தென்றறை வழியில்
தீமை பொன்றிய வூர்வாழ் திட்ட வென்சகி செறியென்
மாமை கொன்றெனை வான்மேல் வைப்ப தென்றுசொல் களிறு. (௪)

*தாத்த தத்தன தனன, தனன தந்தன தனன.*

**நா**த்தி கப்புற நகரி மகளிர் முன்பொளி நனிசெய்
காத்தி ரக்கலை நிலவு கலைகு றைந்திடு முறைமை
ஆத்தி கத்திரு மகளிர் வதன மஞ்சனு ரிவருய்
கேத்தி ரச்சகி வருகை கிளர்த லென்றுசொல் களிறு. (௫)

*தான தந்தன தான, தனன தந்தன தனன.*

**கா**ர்நி றைந்துள வாவி களினி மிர்ந்தசின் மரைகள்
எர்பி றங்குப யோத ரமென விஞ்சிந விதழ்கள்
ஆர்மு கங்களி னீல விழிய மர்ந்திட வவிரென்
ஊர்வ ருஞ்சகி யேம முதவ லென்றுசொல் களிறு. (௬)

*தந்த தத்தன தனனு, தனன தத்தன தனன.*

**கு**ங்கு மக்குரு வினையீர் குளிர்சி வப்பெழில் சுலவ
அங்கொள் கைத்தென நடுவே யணவு கைத்தல மிசைமின்
மங்கு லொத்தசில் பழமே மிளிர வைத்துள மரைகள்
தங்கு வைப்புறை சகிசூர் தடித லெற்றைசொல் களிறு. (௭)

*தைன தானன தான, தனன தந்தன தனன.*

**கை**ப டாதப டீர விதழ்க ரந்தவெ ளெயிறும்
நைப டாதப டாமு நகும டந்தைய ரிருகண்
மைப டாதகை யாட வருறை மண்டல வனிதை
பொய்ப டாதெனை யாளல் புரிவ தென்றுசொல் களிறு. (௮)

தான தத்தன தனன, தான தத்தன தனன.

மானெ னச்சில ரழகு மாவெ னச்சிலர் பிறழும்
மீனெ னச்சிலர் நவிர்வெல் வேலெ னச்சிலர் வெறியுண்
தேனெ னச்சில ரொளிசெய் சீரு றுப்புறு சகியென்
மானெ கிழ்ப்புற வனையு மோவ ழுத்திய களிறு. (கூ)

தனன தந்தன தந்த, தனன தத்தன தனன.

குசமு டைந்துவி ரிந்த மலர்மு கப்பிடி குயிலிவ்
வசன நன்குதெ ரிந்த சகிபு கழ்ப்புதன் மனமென்
அசல பங்கய நம்பு மமல வக்களி றணவு
குசல மின்றுறு மென்ப தனையு ரைத்தனள் குளிர. (க0)

இரத்தாக்ஷி௵ வைகாசி௴ கசூஉ குருவாரம்.

---

# அ. விசாலமாவலவேள் வேட்கை.

## (முதற் பத்து)

கலிநிலைத்துறை.

இரண்டுசீர்வண்ணம்.

தேறன் மாந்தியுண் மயங்கிய தேனினஞ் செறிதண்
ணேறு பூங்கரு விளைத்துண ரெனவிழை நயனீ
மாறு பூண்டதென் மலர்முக மெனுந்துணை மகண்முன்
நீறு லாங்குள முதல்விசொல் வாள்சில நிகழ்த்தி. (க)

வேரி யந்தண்வி சாலமு நறியவெட் சியும்பூண்
ஏரி லங்கயி லிறையருள் விழைசெவி யீர்ங்கண்
நார கம்புகழ் தைவிக மாமதை நாடா
நீர ணைந்தவை வலிமுகம் பிறவுயிர் நிகர்க்கும். (உ)

---

க0. குசலம் = மாட்சிமை; "குணமுமாட்சிமையுங் குசலமென்ப" என்பது பிங்கலநிகண்டு.

க. கருவிளைத்துணர் = காக்கண மலர்; கருமை, மென்மை, அழகு வடிவுகளிற் கண்ணை யொத்தது.

உ. விசாலம் = கடம்பு; "கதம்பமும் விசாலமு நீபமுங் கடம்பே" என்பது பிங்கலந்தை. சேந்தன் திவாகரத்துமுண்டு. 'ஜாலம்' எனவும் வழங்கப்படுகிறது.

ஆத லாலிழி மனிதனைக் காதல னுயென்
போத நேடல்செ யாதுசெவ் வேண்மிசைப் பொருந்திற்
றேத மேதுமி லவரிது காறும்வந் தேற்கா
நீதி யானறி யாமையி னழுங்கலென் னிலையே. (௩)

படர்வி ரோசன னிளங்கதிர் நுகர்நறும் பவள
வடநி லாமிட றுடைச்சகி யெனமவுத் திகத்தோ
டிடரி லாதவிர் பவளபந் தியினினி திமைக்கக்
கடலி னீடரு ளயிலிறை வருகைகண் டிலனே. (௪)

பூவல் வேளிட நிலங்கலை பொலம்விழை யாமே
மேவ லேவிழை யெனையவர் கருணையின் விழைந்தென்
சீவ நீர்குழ னெடுஞ்சடை யாதலுந் தெரிமா
தாவி னுர்கெழு செவிலியின் றுயர்தணித் திலரே. (௫)

கீழ்த்த லத்திடை வதியுமென் சிறுமைகள் கெடமேற்
கேழ்த்த லத்திடை யெனையயி லரசொரு கிருபை
வாழ்த்தி வைத்திட வரும்வழி யறியகில் லேனென்
ஊழ்த்தி றப்பல னெதுசெயு மோவஃது முணரேன். (௬)

தரையிற் கண்படை கொளுமெனை யமிசமென் றவிசிற்
புரையற் றின்புற வுறங்குதி யெனச்செயப் பொருவேற்
றுரையைக் கண்டில னவர்விருப் போவெனைச் சுடுமோர்
விரைவைக் கொண்டதி யானுயு மாறெது விளம்பாய். (௭)

என்று கூறுபு மடப்பிடி புழுங்கிமண் ணிரிந்தாள்
நின்ற தோழியன் னுளைநன் கிருத்திநன் னீர்மெய்
ஒன்ற வேநனி தெளித்திரு விசிறிக ளொசித்தே
நின்ற காலையு மழுங்கின ளேகொடி நெடிது. (௮)

நீதெ ளித்திடல் பேரழ லெழுப்புத னிகர்க்கும்
ஊத லொக்குமன் னனலினை விசிறிக ளொசித்தல்
கோதி லற்புத குருமணி வேளெனைக் கொளுமென்
றோதி னிப்பட ரொழியுமென் றுடைய ருழந்தாள். (௯)

---

௪. மவுத்திகத் தோடு = தாளக் குழை.
௫. மாதா = தாய்.

இன்று மாலையி னினைப்பிரி யாதிருந் திடச்செங்
குன்றி னுனிறை மணிமலை மிசைக்குரு மணிபோன்
மன்றல் வீசிட வருமெனுஞ் சகிமுனெ னேடே
என்று மேயவ ரிரார்கொலென் றுயங்கின ளிறைவி. (கo)

இரத்தாக்ஷிஸு மார்கழிமீ" கசுஉ சுக்கிரவாரம்.

---

# விசாலமாஷவேள் வேட்கை.

---

## (இரண்டாம்பத்து.)

கலிநிலைத்துறை.

இரண்டுசீர்வண்ணம்.

பண்ணில் வாலமு தினிற்றெளி தேனிலின் பாகில்
தண்ணு லாவுற வேநனி பழுத்தசொற் றலைவீ
திண்ணி லாமயி லிறைவரல் குறிப்பினிற் றெரித்தேன்
எண்ணி னுய்பிரி வீதெவ னெனச்சகி யிசைத்தாள். (க)

சேந்த மாமணி மதலையிற் றிகழ்புய வயினோர்
தோங்தொ டாதவி சாலவங் தொடையல்கள் புரளக்
காந்தி சான்முக மலரவங் துனைக்கடைக் கணிக்கும்
ஏந்த லாமெனி னஞரிறு மென்றன ளிறைவி. (உ)

வேயு றுங்குழ கினிதவிர் தோளியவ் வியன்வேள்
நீயி யம்பிய படிசெயு மெனச்சகி நினது
வாய றைந்துள வாறது கைவரு வரம்பு
சேயு றுங்கொலெ னுவிறை மகடெரித் தனண்மேல். (ந)

குமர வேளழ கினுக்கதி கோமள குழகம்
அமர வாருரு வனிதையர் மாத்திர மாசைப்
பிமர மேவுவ ரெனினது பிசகுறு மாணும்
நிமிர வாவொடு தொடருமென் பதுநிலை பெறுமே. (ச)

---

கo. குருமணி = மாமணி ; இது, மாணிக்கமாம்.
மன்றல் = மிக்க பரிமளம் ; **பிங்கலந்தை.**

உ. மதலை = தூண்.

ந. சேய் = தூரம்.

மதன தேவனும் பலமுறை சேவைசெய் மதனீ
விதன நூறிறை யிருக்கையை விடுத்துனை விரும்பி
அதன மாய்வரு கையிலவ ரழகைய வாவி
மதன னுதியர் மயின்முனர்ப் போந்ததை வணங்கி. (ரு)

அழகி னுக்கழ கினைச்சுமந் தினிதுசெல் லழகே
குழகு டைச்சிறு நடையினைக் கோடியென் றிரந்தார்
இழவி லச்சிகி யியைந்தமை யாவிறை வருகை
மழவொ ழுக்கினை யேய்ந்ததென் றுடுடி மருங்கி. (சு)

அதுசெ விப்புலம் வாங்கிய தலைவியிவ் வடியாள்
திதலை துற்றிய குரம்பையுஞ் சிறுநடைத் திறமும்
மதுகை யற்றமை யாற்றளர் கின்றன மகிமை
கதுவ யிற்றிரு வேயினும் விரித்தெது கரைவேன். (எ)

வாரி சூழ்நில நிழற்றுதண் மதிக்குடை வாழ்க்கைச்
சீரி யோர்களும் விபுதரு முனிவருஞ் சேவித்
தேரி ருவுயர் மேன்மைகள் பெறமிளி ரிணைத்தாள்
வேரி வீசவு ளீர்விரைந் திவண்வரல் விழைவீர். (அ)

பெரிய தீஞ்சுவை நுனித்தகு புலவர்கள் பெருமான்
தெரிய ருங்குர வயிலசுந் தரவெனத் தெரிக்கும்
பரியு லாந்திரு வினர்சிவ மேயெனைப் பரிவால்
உரிய ளாம்படி செயவிது தருணமென் றுரைத்தாள். (கூ)

உரைத்த நீர்தலு மணிப்பிணி முகத்திலவ் வொருவன்
அரத்த மாலையொ டவண்முனந் தோன்றின னவளுஞ்
சிரித்த வாண்முகி யாயடி தொழுதனுர் தீர்ந்தாள்
உரத்தி னீடொலி முனிநெறி விருப்பினை யுடையீர். (கo)

இரத்தாக்ஷிஹு மார்கழிமீ உஅஉ ஆதித்தவாரம்.

---

கூ. பரி = பெருமை.
கo. பிணிமுகம் = மயில்.

# விசாலமாவஸவேள் வேட்கை.

## (மூன்றும்பத்து)

கலிநிலைத்துறை.

மேலும் வாண்முக மலர்ந்தவ ளாயவவ் விறலி
நீல மானுமென் விழிநும வரவினை நினைந்து
மாலை யாய்வடி நீரது வேயதி மதுர
வேலை யாயெனை யாழ்த்திய தெனல்விறல் விடுமோ. (க)

சேகி லாவடி யவர்விருந் தாய்வரல் செய்து
சோக மோவுற வேயெனக் கொருவழி தொகுப்பான்
காகம் வாழ்மனை கரைகென நறியநெய் கலந்த
பாக மீதலு முளுற்றின னேபல பகலே. (உ)

மணிம தாணிமின் மார்புடை யீர்திரு மவுலி
அணியி ராமவவ் வியையுடை யீரரி கிரணம்
நணிய சேயவிண் ணிடைவிழு தோறுமென் னயனம்
எணிய வேலிறை வரவுகொ லெனவுநின் றிளைத்தேன். (ங)

கூர்த்த வேலிறை வருகையுண் டோவெனக் குறிகள்
பார்த்த காலையும் வருவரென் றேசொன பதியே
சீர்த்த மாதிரு வணைந்தத ரோதிரு நாமம்
ஆர்த்த நாளுநன் ஞளென வறிந்ததென் னகமே. (ச)

இழிவைப் பேணுநர் மனக்கினி யாவறத் திறையே
விழியைச் சேயிதழ் நாசிகை களையுறழ் வீகொய்
வழியைக் கோடலி விவள்கடம் பிலதென வருந்தல்
ஒழியச் செய்தது கடம்பணி மதலையி லுருண்டு. (ரு)

என்ற ஞசையி விருந்துள விளம்பெரு மானுன்
பொன்ற வாவர மியத்தல முலாத்துபு புலனை
வென்று ளாரென வுறங்கலி னிலகுறும் மேனி
இன்று மாநன விலுந்தரி சனமரு ளியதே. (சு)

அளவை யாதினு மடங்கலில் பொருளெனு நும்மை
எளிய ளாயவெ னன்புகொ டளந்தமை யினிதாம்
ஒளியை யீந்ததெ ஞநுவ லெனதுரை யுணரார்
தெளிவை யேய்வதெவ் விதமெனை யாண்டவொர் சிவமே. (எ)

---

சு. அரமியத்தலம் = நிலாமுற்றப் புடை.

அருட்பெ ருங்கட லாயநுந் தரிசன மடியேன்
பொருட்ட முங்கிய தாய்களை யிகுளையைப் பொருவில்
திருப்ப டிந்துய விழைத்தது செழுநலந் திகழ்மா
உருப்பி றங்கிய மயிற்பரி யிவர்புக ழுடையீர். (அ)

அயனு மாமறை களைமனத் தாலையிட் டரைத்து
வியன தார்பொரு ளறிந்தில னவ்விழுப் பொருளைக்
கயலி னீடென கண்கள்கண் ணுறுதகை கணிக்கும்
இயலு ளாரெவ ரெனவெடுத் திங்ஙன மிசைப்பேன். (கூ)

பூவி னுலணை நார்மண மணைந்தமை புரைய
யாவும் வல்லநுங் கடைக்கணி னேக்கெனும் யாணர்
மேவி யுய்குந ளாயின னேபுகழ் விரித்த
நாவி னுரிறை யேயெனச் சொலிநனி தொழுதாள். (க0)

இரத்தாக்ஷி௵ தைமீ௨ கடுஉ மங்களவாரம்.

விசாலமாலைவேள்வேட்கை முற்றிற்று.

---

வேட்கைக்காண்ட முற்றிற்று.

ஐந்தாவது

# பலதிறப்பொருட்காண்டம்.

## க. கடவுட்சங்கவுணர்ச்சி.

கலிவிருத்தம்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை,

இரண்டுசீர்வண்ணம்.

ஆறு வன்பீ ராகூ முடையீர்
வாறு வென்போம் வள்ளிக் கொடிகாண்
காறு வென்போங் கடவுட் பிடிகாண்
மாறு வென்போம் வல்வேற் கரனே. (க)

அண்ணு வென்போ மழகார் பன்னெண்
கண்ணு வென்போங் கழலீ யென்போம்
எண்ணு ரொன்று வீசா வென்போம்
விண்ணு வென்போம் வேற்செவ் வேளே. (உ)

அதுலத் திருவே யறிவே யென்போம்
மதுரக் கனியே மணமே யென்போம்
சதுரச் சிவமே தவமே யென்போம்
முதுமைத் துயர்போழ் முனேவே லோனே. (ங)

ஈசற் கொருசே யெனவே வந்தவ்
வீசற் குரையோ மிறையாய் நின்றான்
தாசர்க் கருள்கூர் தகுதே வானன்
பேசற் கரியோர் பிரானே யென்போம். (ச)

நாடிப் பாடேர் நாவோ ருய்வான்
கோடித் தேமார் கொடியைக் கானிற்
றேடிப் போமோர் வேளைச் சேயைக்
கூடிக் கூடார் கோமா னென்போம். (ரு)

நாடாள் வீர்வா னாகோ வாச்சேய்
தாடாழ் நீரே சார்வோர் நோய்ச்சாக்
காடார் வாரோ காடா காத்தூ
வீடா மோகால் வேளா தார்க்கே. (௬)

### மடக்கு (யமகம்).

காக்கைக் கோகைக் காக்கைக் கைகொக்
காக்கைக் கோகை கக்கக் கக்கீ
காக்கைக் கைகொக் குக்கா காக்கோ
காக்கைக் கிக்கீ கைக்கு கைக்கோ. * (௭)

மறைநச் சமரன் வாகைச் சமரன்
இறைநக் குமர னேவர்க் குமரன்
பொறைமிக் குடையன் பூவற் குடையன்
கறையைக் கடிவான் கருணைக் கடிவான். (௮)

வானா டாளி வானோ ராளி
நானா போகி நலனார் போகி
தானா டோர்கோ தவருள் கோர்கோ
ஆனா வேலை யறிவாம் வேலை. (௯)

பலமா கிரியான் பரகா கிரியான்
அலகா மயிலா னழகார் மயிலான்
இலகார் வுடையா னினிதோர் வுடையான்
நலமார் புகழ்மா னனிசூழ் புகழ்மான். (௧௦)

துர்மதி௵ ஆவணி௴ ௧௨ மங்களவாரம்.

---

* இக் ககரவிகற்ப மடக்குச் செய்யுட் சொற்பிரிவு.— காக்கைக்கு, ஓகைக்கு, ஆக்கைக்கு, ஐ, கொக்கு ஆக்கைக்கோ, கை, கக்கக் கக்கீ, காக்கைக்கு ஐ, கொக்குக்கு, ஆகாக்கோ, காக்கைக்கு, இக்கு, ஈகைக் குகைக்கோ.

பொருள் :— கொக்கு ஆக்கைக்கோ = மாமர வுருவாய் நின்ற அரசன் (சூரபன்மன்), கை = சிறுமை (தன் சிறுமைக் குணமெல்லாம்), கக்க = வெளியில் விடுமாறு, கக்கீ = வரையறை நல்கிய, ஈகைக் குகைக்கோ = ஈகையையுடைய குகையிலிருக்கும் (குகனாகிய) இறை, காக்கைக்கு = காத்தற்றொழிற்கும், ஓகைக்கு = களிப்புக்கும், ஆக்கைக்கு = படைத்தற்றொழிற்கும், ஐ = கடவுள்; காக்கைக்கு ஐ = (அவிநாசியென்னுந் தலத்துச் சிவானுக்கிரகம்பெற்ற வொரு) காக்கையினுடைய கடவுட்கும், கொக்குக்கு ஆகாக்கோ = சூரண்டாசுரனுக்கு நட்பாகாத் தலைவற்கும், காக்கைக்கு = திருமாலுக்கும், இக்கு = கரும்பு (இனிமைப் பொருள்) ஆம். என்றவாறு.

கொக்கு = மாமரம். கங்கு = வரையறை ; கக்கு - வலித்தல் விகாரம். படைப்பு முதலிய தொழில்களுட் காக்கைபுரி புத்தேளைக் ‘காக்கை’ எனவுபசரித்தாரென்க. ஐக்கு, கோவுக்கு எனக் குவ்வுருபு விரித்துரைக்க. உம்மைகள் தொக்கன.

# உ. திருவுளப்பாங்கை வினவுதல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அட்டோத்தர சதாக்கரம்.

*தனத்தன தனத்தன தனத்தன தனத்தன—(முடுகு)*
*தத்த தானன தத்தன தானன.*

**ம**றப்பிழி நினைப்பற விருக்குமி ளமைப்பெரு
வத்து வாகியு ளத்தவிர் சோதிநாங்
கறுப்பற வெளுத்தம யிரெற்பெழல் சுருக்கணை
கட்டி லாதவு றுப்புயிர் நீயெம
தறத்திரு வருட்சனி தியைப்பெறு முரித்தினி
லற்ப மேனுமு னக்களி யோமென
வெறுப்புரை யளிப்பைகொல் சிறப்புமொ கரப்பரி
வெற்றி வேலுமு டைக்கும ரேசனே. (க)

**க**ழற்பணியரைப்பணியுரப்பணிகளப்பணி
கட்ட ரூமுடி சுட்டிப லாழிகள்
தழற்கிணையெனத்திகழ்மணிக்கடகக்குழை
சத்த நூபுர மிட்டமெய் சாருநாங்
கிழத்தனவுனக்குளவுறுப்புவெறுமைத்தழ
கிற்கு ளேயுனை வைப்பதெ வாறென
மிழற்றிடவிருத்திகொல்விழிச்சலம்வடித்தழும்
வெப்ப ரூவென்ம னத்தவிர் வேலனே. (உ)

**சி**லைக்கணைமுரட்டனுசுவச்சிரமயிற்படை
திட்ப வாணெடு முட்படை மூவிலை
மலைக்கதைமுதற்பலதரித்துளமிகத்தொரு
வற்பும் வேலுமி னிற்கொளு மாறெவன்
தலைப்படுமெனத்தளவிருத்திகொலெனைச்சிகி
தத்த வேறிமு னித்தொகை யார்வொடு
கலைத்தலைமறைத்துதிபடிக்கவருதத்துவ
கர்த்த னேசிவ சிற்குரு நாதனே. (ங)

**இ**டப்புவிவசிக்குநர்மதிக்கவரிகட்டியி
ழுக்கு மூர்திப டைத்துறை யாவெனை
நடச்சரணசித்திரமிகத்திகழ்பலப்பல
நற்க லாபிக ணற்றகர் வேழமா

திடப்பொனினியற்றுமிரதக்குழுவுமிக்குள
சித்த னீயள விட்டணை யாய்கொலோ
கடப்பமலரெக்கணுமணக்குமருமத்தொரு
கர்த்த னேயெனு ரைப்பொரு ளீசனே. (௪)

உரத்தவொலியிட்டுலகடக்கடலுமொட்பமு
முற்ற சேவல ணிக்கொடி யாயொரு
முரட்கொடியுமற்றவெளிமைச்சவமிவற்குந
முட்டில் வீடுற லெத்திற ஞலென
நிரப்பறுமுளத்திடைநினைப்பைகொலருட்குண
நித்த னேபொதி கைக்குறு மாமுனி
சிரத்தையொடருச்சனையிழைக்குமடிவித்தக
செக்கர் மேனியு டைப்பர மேசனே. (௫)

தனந்தன தனந்தன தனந்தன தனந்தன—(முடுகு)
தந்த தானன தந்தன தானன.

இருங்குளிர்கறங்குபடகம்பதலைமண்டுடி
யென்ற பேரணை துந்துபி கோடணை
தருஞ்சனிதியென்பனவனந்தமுடையெம்பதி
தங்கு வாழ்வுபெ றுந்தகை யாதெனும்
அரும்பறையுளொன்றுமிலெனெஞ்சுதுயரும்படி
யன்பில் கேள்விபி றந்திடி ஞனயர்
பெருஞ்செயலுமுண்டுகொலனந்தசடலம்புகு
பிண்டர் நாயக கந்தசு வாமியே. (௬)

கலங்கியுழனெஞ்சொடுதுறந்தனைதினஞ்சிவ
கந்த வேள்குக வென்றுசொல் வாயெழில்
நலங்கொளமணந்தவளகன்றனைநிரந்தர
நன்கு மூவுல கங்களு மேதொழ
இலங்கிருமடந்தையரொடுந்திகழுமெந்திரு
வெந்த வாறணை மஞ்சுறு வாயெனச்
சொலுங்கிளவியென்செவிபுகுங்கொலினியன்பவிர்
துங்க னேசிகி தங்கொரு தேவனே. (௭)

தனந்தன தனந்தன தனந்தன தனந்தன—(முடுகு)
தந்த தானன தத்தன தானன.

தவம்பலபுரிந்தவருயும்படியெழுந்தரு
டந்தை தாயரெ மக்குளர் மேன்மையே
அவம்பலபுரிந்திழிவடைந்தவர்விரும்புல
கம்பை தாதையு னக்கிலர் கீழ்மையே

சிவம்பெருகுமெந்திருவெனுஞ்சனிதிகண்டுறை
சென்று நீதொழ லெத்திற னலெனின்
கவன்றழுமெனெஞ்சுபெரிதுங்கருணையஞ்சிவ
கந்த வாறுமு கப்பர மேசனே. (அ)

சனங்கள்பெரிதும்புகழ்பெருந்தகையுறுங்கவி
சந்தம் யாவுமி ருக்குமெம் வாயிலால்
மனஞ்சுழலநின்றுசொலுநின்றமிழ்களெஞ்செவி
மண்டி யேகிம கிழ்ச்சித ராவறி
எனுங்குயிலெழுந்திடினிவன்புரிவதென்புக
லென்று வாடிய ரற்றுமெ னவியே
அனந்தவருளின்றலைவகிங்கிணிசிலம்படி
யண்ட னேமயி லிற்றிக ழீசனே. (கூ)

தனந்தன தனந்தன தனந்தன தனந்தன—(முடுகு)
தத்த தானன தத்தன தானன.

அறம்பலவுநின்செயல்பெறும்பயனுநின்செய
லக்கி காணுல கிற்செறி வாயுள
திறம்பலவுநின்பொருளெனுந்துணிபுமொய்ம்பிது
செப்பு நானுன ளப்பறு மேன்மையை
நிறங்கொளநடந்தணைதலெங்குரைபெருந்தகை
நித்த னேயரு ணைப்பெய ரான்முதால்
மறம்பலபுரிந்திடினுமின்படையவன்புசெய்
மட்டி லாதவ ருட்கும ரேசனே. (க0)

துர்மதிஸு கார்த்திகைமீ உருஉ சனிவாரம்.

# ௩. தியான விசேடம்.

**கலிவிருத்தம்.**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**அடியோன்றற்குப்பதின்மூன்றக்கரம்.**

தனதன தந்தந் தனதன தந்தந்தா.

ஒளியது கண்டங் குறுமதி விஞ்சின்பாம்
தெளிவுறு நெஞ்சந் தினநனி தங்குஞ்சீர்
கிளிமொழி சந்தங் கிளர்சிவை மைந்தன்கோ
களிமிகு கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (க)

மலர்மழை கொண்டும் புகையொளி வம்புந்தூப்
பலமடை கொண்டும் பணிபவ ரின்புங்கோ
தலமணி யின்புந் தவமதும் விஞ்சுந்தார்
கலமணி கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (உ)

புறவம டைந்துண் புலர்சரு குண்டுந்தூத்
துறவத டைந்துஞ் சுகுர்தம யர்ந்துஞ்சார்
திறமுமு றுஞ்செந் திருவுமை மைந்தன்காய்
மறலடு கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (௩)

பதிபுகழ் சங்கம் பலபல கண்டென்றா
நதிகள்கு டைந்தங் கிடுவந யந்தென்காழ்
மதியம்வ யங்குஞ் சடையவன் மைந்தன்கேழ்க்
கதியருள் கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (௪)

மறைகளி னந்தம் புகழ்பொருண் மஞ்சன்றா
நிறைவுள னெங்குந் தொழுபவர் நெஞ்சஞ்சேர்
இறையவ னின்பன் சிவசுத னென்றுந்தே
கறையறு கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (௫)

அனககு ணந்தங் கறவர்கள் கண்டின்பால்
தனதகு தந்தந் தனதகு தந்தந்தா
கனநட னந்தந் திடவரு மெஞ்செங்கோ
கனசிவ கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (௬)

மிடியறு நெஞ்சங் களிதர விஞ்சும்பேய்
அடியொட டங்குங் கொடுமற லஞ்சுஞ்சேர்
செடியிறு மென்றுஞ் சிகியிவர் துங்கன்சூர்
கடியொரு கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (எ)

அமரன ருந்தண் பிறைமுடி யண்டன்சேய்
குமரன ரங்கன் குறமக ளன்பன்பேழ்ச்
சமரன கண்டன் சிவகுரு சம்பன்றூர்
கமழுர கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (அ)

மலைமுழை தங்குந் தவசிகள் வம்பந்தார்
மிலைகுக வெஞ்சிந் தையலர்வி ரும்பன்பே
நிலைகொளு நெஞ்சங் கொடுவெனு மொண்செங்கீர்க்
கலைவிழை கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (கூ)

சிவசிவ வென்றுஞ் செயசெய வென்றும்பேழ்க்
குவலய மெங்குங் குககுக வென்றுஞ்சூர்ப்
புவனியை வென்றின் புகழ்சொன வன்கண்காண்
கவலையில் கந்தன் கழலுனின் வஞ்சம்போம். (க0)

துர்மதிஞூ மார்கழிமீ அஉ குருவாரம்.

---

## ச. நாளறுபது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

எழுத்தளவுடையன.

நென்மு தற்பல நன்னி லத்தில்வி தைக்கு நாள்புன் னிறுத்துநாள்
பன்மு கக்களை யெற்று நாள்கதிர் வெட்டு நாள்பதி கொட்டுநாள்
நன்மு கத்துட னுண்ணு நாள்களு மோய வேநம னுள்வரின்
என்மு னைப்புறு வீர்செவ் வேளடி யெண்ணி வாழ்மினி லத்தரே. (க)

பெட்பி னேடுசெ ரக்கெ லாம்விலை பேசு நாள்பெறு கின்றநாள்
ஒட்ப மாயவை விற்கு நாள்பொரு ளீட்டு நாள்களும் வீட்டவே
திட்ப வேநம னுள்வ ரும்பொழு தென்செய் வீர்கள்செவ் வேட்பரன்
நட்பி னூர்நெறி பற்றி யுய்குதிர் நாண யம்விழை மைந்தரே. (உ)

---

அ. சம்பன் (ஶம்ப:) = சுகமுடையோன், வச்சிராயுதன்.

ஆடு நாள்களு மோடு நாள்களு மாடி நேடிம டந்தைமார்
கூடு நாள்களு மக்கள் வந்துகு லாவு நாள்களு மோயவே
வீடு நாளுற லாவ தென்னெனு மெய்யு ணர்ந்தரு ளெம்பிரான்
கேடு றுதசெவ் வேள டித்துணை கேண்மி னுளுநன் மைந்தரே. (௩)

சேகு சேர்மரம் வெட்டு நாளவை செப்ப மேவுற வெற்றுநாள்
வாகு சேரவ மைத்து மாளிகை கட்டு நாளது முற்றுநாள்
ஆகு லந்தப வாளு நாள்களு மோய வேநம னூர்முனே
போகு நாள்செய்வ தென்னெ னுவருள் போற்றி வாழ்மின்கண் மைந்தரே. (௪)

பாட மேவிழை வீர்பன் மாகலை பற்று நாளவை முற்றுநாள்
பீடர் தம்மைய டிக்கு நாள்பிழை யின்றி யேவரை கின்றநாள்
சேடர் சம்பள மேற்கு நாள்களு மோயு மேசெலு நாளிலே
ஆட லொன்றுமி லாதி றுங்குக னூர்வ மெய்தியுய் வீர்களே. (௫)

ஐந்தி லக்கண நச்சு நாளவை கற்கு நாள்கவி கட்டுநாள்
பந்த ரைத்துதி செய்த யாவையு மேப டித்துரை செய்யுநாள்
சந்த னந்துணி யேற்கு நாள்களு மோய வேசம னுள்வரும்
அந்த நாள்செய்வ தென்னெ னுவயி லானை நாடுதிர் மைந்தரே. (௬)

மண்ணி னுற்கல மேசெய் நாள்வன்ம ரத்தி னுற்பல பண்ணுநாள்
திண்ணி தாயபொன் வெள்ளி யாற்பணி செய்யு நாடுணி நெய்யுநாள்
நண்ணு நாள்களெ லாஞ்செல் வானம னுள்வ ரும்பொழு தென்செய்வீர்
அண்ண லார்முரு கைய னுரரு ளன்பி னின்மின்கண் மைந்தரே. (௭)

புரையி லோவியர் தீட்டு நாள்கரு மார்தொ ழிற்பொரு ளீட்டுநாள்
விரைசெய் மாலைகள் கட்டு நாண்மிளிர் வெண்க லம்பல தட்டுநாள்
திரைபல் கோடிக டைக்கு நாள்களு மோய வேயுயிர் தீருநாள்
தரையு ளீர்செய்வ தென்கொல் சேயிறை தாள்க ளெண்ணுதி ரன்பொடே. (௮)

ஆடு மாடுபெ ருக்கு நாளலை யாட்டு நாள்கல மோட்டுநாள்
கோடு செங்குழ லூது நாள்பறை கொட்டு நாள்படை வெட்டுநாள்
மூட நாள்களு மோய வேகண்ணை மூடு நாள்வரி னென்செய்வீர்
நாடல் செய்யுள மேவு சண்முக னண்பை நாடுதிர் மைந்தரே. (௯)

எத்து ணைத்திற லாரை யுங்கவ ரேம னுள்வரி னீவிர்செய்
உத்தி யாதுள துங்க ணுள்களு ளொன்று மின்றத னுலிந்நாள்
முத்தி மேவரு ளுச லப்பெய ரானை யாண்முரு கோனெனும்
அத்த னேமப தாம்பு யத்தைய கத்தி ருத்துதிர் மைந்தரே. (௧௦)

துர்மதிஸூ மார்கழிமீ ௧௬உ சுக்கிரவாரம்,

---

# ரு. அவிரரும்பொன்.

கலித்தாழிசை.

எழுத்தளவுடையன.

டகரவெதுகை.

தனன தந்தன தனன தந்தன
தனன தந்தன தனன தந்தன,
தனன தந்தன தனன தந்தன
தனன தந்தன தனன தந்தன தனன தந்தன.

கொடையில் விஞ்சிமா குணநி ரம்பியோர்
தடையு மின்றியாள் சகநி ரந்தரா,
உடைய நின்றொகா வுதவி யன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (க)

இடரி லந்திமா னிழிவில் சந்திமான்
கடவு ளென்றுமா கலையி யம்புவேல்,
உடைய நின்றொகா வுதவி யன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே.(உ)

கடலை யுண்டவோர் கடனு மந்தநாள்
சுடலை தங்குமீ சுரனு நம்புமோர்,
குடிலை நின்கையீ கொடையை யன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (ங)

சடைத யங்கமா தவமி ருந்துளார்
அடிவ ணங்குமா றமரு மெம்பிரான்,
மிடல்கொ ணின்றயா விழைத லன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (ச)

மடம டும்பிரான் மதித ரும்பிரான்
இடம்வ ழங்குசே யெனவுள் கன்பர்சூர்,
விடல்செய் நின்றயா விழைத லன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (ரு)

---

ங. கடன் = கும்பன் = கும்பமுனிவர்.

புடைப ரந்தநீள் புவியி னின்பெலாம்
விடவி ரும்புவார் விழைசு யம்புவே,
கடவு ணின்றனோர் கருணை யன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (சு)

உடலி ருந்துளோ யுயிரி ருந்துளோய்
சுடரி ருந்துளோய் தொனிக டந்துளோய்,
இடரி லுன்றயா விதய மன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (எ)

முடிவில் கந்தனுன் முடிவில் கங்குருன்
விடியு மென்றுளே விழைவ ரம்பினர்,
தொடரு நின்றனோர் துணையை யன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (அ)

உடல்வ ருந்தவே யுயிர்வ ருந்தவே
அடலை தங்குகா டடையி னுந்தியேன்,
முடிவி லுன்றயா மொழியை யன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே. (கூ)

அடல்கொள் வென்றிவே லமர சந்தநூற்
கடல டங்குமா கடலுன் மைந்தர்சூர்,
தடியு நின்பொனர் சரண மன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே.(க0)

துர்மதிஞு மார்கழிமீ உகூ௳ சோமவாரம்.

---

# ௬. பெருவேண்டுகோள்.

**கலிவிருத்தம். (இசை)**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

கண்ணுயிர முடையான்முளை கனவிற்சர ணர்கண்
எண்ணுயிர முடையூர்தியி ருந்தேசிறை மீட்பேன்
உண்ணுய்துய ரென்றேதிய வுடையாயொளிர் பூவல்
வண்ணவயின் மன்னுவெனை மறவேலெனை மறவேல். (௧)

அறிவேறுசை கிசெவ்விய ணர்சீடன டங்கா
நெறியாலனை யைம்பாதக நெடிலைக்களை யிறைவா
பொறியாயரு ணிலையாயதி புனிதாவயின் முதல்வா
வறிதேதுமில் குமராவெனை மறவேலெனை மறவேல். (௨)

முருகாவயின் முருகாவென மொழியும்மொரு மாதின்
ஒருகாதல னவள்கையினை யுதிரம்பெரு கரிகால்
அருளாலது வளரும்படி யயர்தண்ணளி யாளா
மருமாலைகொண் மார்பாவெனை மறவேலெனை மறவேல். (௩)

வெறிவண்டிசை பாடும்பொழில் வேலூரினை யாளும்
பொறிதங்கிய புகழானவி யக்கோடனு றங்கும்
நெறிவந்தலர் வேலேவுதி நெரியும்பகை யென்ற
மறியின்சுதை தலைவாவெனை மறவேலெனை மறவேல். (௪)

திங்கட்சடை யவன்மங்களை திகழுஞ்சிவ கோச
மங்கைக்கும ரேசற்றெழு தான்வைகிட னெய்தி
அங்கைக்கிடு வால்வல்சிய யின்றேதிம றைந்த
மங்குற்பகை மணியேயெனை மறவேலெனை மறவேல். (௫)

எளியேனவி றமிழ்மாலையி யம்போர்பொழு தென்முன்
அளியாலது வென்னுன்முடி யாதோவென வினவிக்
களியோடுக ரந்தாயிது காறுங்கொள லறியேன்
வளியூரொரு தேராவெனை மறவேலெனை மறவேல். (௬)

மாடாடுகள் பல்குந்திரு வளமேவுபி ரப்பைக்
காடாரிட மதினுனடி கருதும்பொழு தெதுவும்
ஊடாடவி லாமேயொரு மொழியோதிம றைந்த
வாடாமுக முனியேயெனை மறவேலெனை மறவேல். (௭)

---

௫. சிவகோச மங்க்க = உருத்திரகோச மங்கை.

உரனந்திய பலவைணவ ருரனூர்சிவ நெறியை
நிரல்விஞ்சிய பலநிந்தைசெய் தெற்குந்துயர் தரலைத்
திரன்விஞ்சிய வதிகாரிமு ஞெழியும்படி செய்தாய்
வரமஞ்சிகை முருகாவெனை மறவேலெனை மறவேல். (அ)

பரிவாளர்க ளங்கோதொரு பஞ்சாமிர்த வண்ணம்
இரியாவென துளநச்சினி தாமென்றொரு கிழமைப்
பெரியாண்முனம் வந்தோதிய செந்திற்பெரு மானே
வரிமாமறை யிறைவாவெனை மறவேலெனை மறவேல். (கூ)

முழுநாரொடு புகழ்பாடிய முனிவற்கரு ரேசெய்
தொழுநோயற வேசெய்தொரு சுகநல்கிய துரையே
கழுகோதிபி லமர்வேலவ கருணாகர முருகா
வழுவாவழி முதல்வாவெனை மறவேலெனை மறவேல். (க0)

துர்மதிஞூ மார்கழிமீ உஅ௳ புதவாரம்.

---

# எ. பெருவிண்ணப்பம்.

---

கலிநிலைத்துறை.

மெய்யொ டேபொய்யும் விரவிடு மாறுபன் னூலுட்
கைய ராபவர் பலநுழைத் தாரவை கணித்தே
ஐய நீக்குத லரிதரி தேயத னலிவ்
வைய நாடுவ ரோவுரி யவரயின் மதனே. (க)

பொய்யில் வேதவி யாசன துரையெனும் புராணத்
தெய்வம் வாழ்தல மீதெனப் பலகதை தெரித்தே
உய்ய லாமெனச் செய்தசு வடிகளு முளவான்
மெய்ய ரிங்குறல் விழைவர்கொ லோவயில் வேந்தே. (உ)

தனது நூதனஞ் சிறந்திடற் கோதனைச் சார்ந்தோர்
தினமு நன்குணற் கோசில சுவடிகள் செய்தோன்
அனக வீசுரன் மொழியிவை யென்றது மறிந்தேன்
இனைய பூமியை யுறனல ஞேவயி லிறையே. (ஙு)

எந்த வாணுட னெம்மட வரலும்வி ராயே
தந்த மானுட ருளரென லறிந்துமெஞ் சாதி
நந்து மோவெனும் படிறர்கள் சுவடிக ணம்பும்
இந்த மானில மினிவிழை யேனயி லிறையே. (ச)

சாதி யாற்பல திறச்சமர் விளைத்தவி னேடு
ஆதி யாம்பர சிவத்தையும் பலபொரு ளாக்கி
வாதி ஞளொழிக் கின்றவிப் புடவியில் வைகல்
சோதி வேலவ வினியடி யேனையுந் தொடுமோ. (௫)

வரலும் வீவுமில் வரைமக ளுதனை மலமார்
பிரள யாகல ரென்னவு மவற்புகழ் பெருமை
நிரலை யோதிடு தமிழிழி வென்னவு நிகழ்த்துங்
குரலர் வைகிட னறிதுகொ லோவயிற் கோவே. (௬)

உமையி னுயக னுறைதரு மொண்டளி யையுமெய்
அமையு மாறவை பாடிய தமிழரு ளாளர்
தமையு மாசினுட் படுத்துமற் றென்றுசொல் சழக்குச்
சுமைகொ ளிப்புவி நறிதுகொ லோவயிற் றுரையே. (௭)

இழிவி னூர்நினைப் பற்பல விழிவினுட் படுத்துக்
கழிவு கூறிய சுவடிகள் கண்ணுறல் கருதல்
பழிபல் கூற்றினைக் கேட்டலி னுன்படும் பாடு
மொழியின் வெந்நர காமுயர் நிலையறு முகனே. (௮)

பிரண வத்திரு மேனிவை யயிற்பெரு மானுன்
சரண நம்பெனக் குறுமிட னெதுவது தருதி
மரண மாய்ப்பிறப் புறுமெனி னிப்புவி வழங்கேல்
அரண நாயக னேபெருந் தருமமிஃ தாமே. (௯)

உன்னை யேயனு பவித்தனு பூதிநன் குரைத்தோன்
பொன்னை யாபர மாவிந்தப் புடவியி னெழிவே
மன்னர் நேடுசொர்க் கமுமுயர் வீடெனும் வாழ்வும்
என்ன வஞ்சகில் லேனுனைத் தொழுபதி யீயே. (௧0)

துர்மதி௵ தைமீ ௧௨ சனிவாரம்.

# அ. ஆதாரவழிபாடு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

அடியோன்றற்குப்பத்தோன்பதக்கரம்.

*தனனந் தனனந் தனனந் தனனந், தனனந் தனதான.*

பலநன் குறவிங் கெனுநெஞ் சொடுநன் பதிதங் கியமூலத்
தலநின் றுநிதம் பதிசிந் தைசெயுந் தகையன் புடையீர்வேல்
நிலவுங் கரசங் கரசம் புகடம் பணிகந் தனைநீடோம்
புலவன் றனையங் கெனுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (க)

செறிமண் டலைவென் றிடவென் றுதிடந் திகழுந் தலமான
குறிநின் றிடுசிந் தைநிதம் பெருகுங் குணமொன் றுடையீர்பே
ரறிவன் பிரமன் பரமன் குரவன் செருமுந் தயிலாளும்
பொறியன் றனையங் கெனுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (உ)

கனைநன் புனல்வென் றிடவென் றதுதண் கதுவுந் தலநாபி
தனைநின் றிடுசிந் தைநிதங் கிளருந் தகையொன் றுடையீர்சூர்
வினையஞ் சியவிண் டுவுநம் பிறைவன் சமர்வென் றவிர்நீபம்
புனைகந் தனையங் கெனுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (ங)

கறைநந் தழல்வென் றிடவென் றதுதங் ககநெஞ் சிடையேயோர்
குறையின் றியுனும் பருவங் குலவுங் குணமொன் றுடையீர்மேல்
இறைவன் குரவன் குகனின் பநடன் சிவனெம் பரமேசன்
பொறையன் றனையங் கெனுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (ச)

உழிதந் திடுகொண் டலைவென் றிடவென் றுறுகந் தரமேய
வழிநின் றிடுநெஞ் சநிதந் திமிருங் குணம்வந் தவரேவான்
செழியன் பரமன் பவனன் குழகன் றிருவன் சிகியேறும்
பொழிலன் றனையங் கெனுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (ரு)

விரவுங் ககனந் தனைவென் றிடவென் றளிகந் தனைமேவுந்
திரமிஞ் சியவண் பதிசிந் தைசெயுஞ் செயலொன் றுடையீர்நுங்
கரணங் களினின் றுளவிஞ் சையனெண் ககனன் குகதேவன்
புரணன் றனையங் கெனுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (சு)

துணையின் றுறுநன் கெனவன் சிரசின் றெளிநின் றுனுவீரோ
ரிணையின் றவிருஞ் சுகசிந் திவனென் றிறையும் பெருநாகத்
தணைவிண் டுவுமெண் கணனும் புகழுங் குமரன் பவவாழிப்
புணையன் றனையங் கெணுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (எ)

பகலன் றிரவன் றெனநம் பியுறும் பனிரண் டினுமேலாம்
அகநின் றிடநெஞ் சுசெயும் பருவங் குலவன் புடையீரார்
சகமும் பரமுந் திகழுஞ் சடலந் தனினின் றெளிர்சேயோன்
புகழன் றனையங் கெணுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (அ)

அதுவென் றிதுவென் றவனென் றிவனென் றலையும் புலனீர்கீர்
எதுகொண் டிடினுங் குகனங் குமிருந் துளனென் பறைவீணே
சதுரன் கலையின் றலைவன் சயிலன் சமரன் குமரேசன்
பொதுவன் றனைநன் கெணுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (கூ)

அவலங் கிளருஞ் சகம்வென் றிடவென் றலையுந் துயரீரின்
சிவமங் கியபுன் புவனம் பெரிதுந் திரியும் பலதேவ
கவனங் களொழிந் தொருசந் தயன் கருதுங் குகனீறில்
புவனன் றனைநன் கெணுமின் கணலம் பொலியும் பொலிவோடே. (க0)

துர்மதிஞு தைமீ˚ சஉ மங்களவாரம்.

---

## கூ. வருகைவிழைந்திரங்கல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியொன்றற்கிருபத்தாறக்கரம்.

இரண்டுசீர்வண்ணம்.

அமரர் நாயக னுகிவ லாசுரனை
யமரி லேயடும் வன்மைய னுய்ப்பெரிதுங்
குமுறு மேறுயர்த் தோனென வாகியிருங்
குலிச மேந்தியி யங்கொரு தேவனல்கும்
அமுத மாகிய குஞ்சரி யைப்பரமா
வசல மீதும ணந்தம னுளநெடுஞ்
சமர வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (க)

துடிபல் கோடணை நாளுமு ழங்குவளந்
துறுமு மால்வரைச் சார்பிடை யின்புறவாழ்
குடிக ளாமுயர் மள்ளர்கள் போற்றிடுவான்
குலவு மோர்தலை வன்றன தார்பெருமை
முடிவி லாதுவி ளங்கவ வன்றருமா
முருகி தன்னைம ணந்தவ னேபொருசூர்
தடியும் வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (௨)

விரைசெய் மாமலர் மாதினை மார்பிடையே
மிளிர வைத்தடல் கொள்பரி திப்படைவாள்
துரிசி லாதவில் சங்குக தாயுதமுந்
துகளில் கைகளி லேந்திந றுந்துளவத்
தெரியன் மார்பம ணிந்தெழின் மிக்கவிருந்
திருவை குந்தம மர்ந்தவ னேர்மருகா
சரையில் வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (௩)

சுருதி தேர்கலை மாதினை நாவிடையே
சுடர வைத்தும றைக்கொடி யேற்றிடுவான்
மருவ ருதச ரோசம லர்க்கணனி
வருபி தாமக னுயிரம் பேர்பரவிக்
கருது சேயவ னேகன கந்தவரை
கயிலை மேவுப ராபர னேசிவனே
சருவ வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (௪)

தொகையி லாதவிவ் வண்டவ டுக்கனைத்துஞ்
சுடரு மாரொளி கல்விசி றப்பறிவின்
வகையெ லாமுரு கன்பெரு மாண்பினிலோர்
வறிதெ னுவுமை யாளொரு கூறுடையான்
மிகையி லாதுந வின்றதை நன்குணர்வார்
வினைக ளூறுப ராபர னேகுறையாத்
தகைமை வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (௫)

உறுதி யோதுரை சத்திய சங்கல்பனென்
றுருவ னைச்சொலு மப்பெய ருந்தனதாய்ப்
பெறுப ராபர னேசிவ னேயறியார்
பெறல ரும்பொரு ளேயடி யார்திருவே

மறுவி லாமணி யேயொளி யேபசிய
மயிலின் மீதமர் செம்பவ ளப்பொறையே
தறுகண் வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (௬)

பிமர மீட்டஞ்செய் காஞ்சியி னுன்சிலநாள்
பெரிய கோயில்கள் கண்டுபு றப்படுஞான்
றமல மூர்த்தங்கொ ளாசுடை வீக்கியசெவ்
வழக னுயென்முன் வந்துநுங் காரியமென்
குமர கோட்டங்க ணுற்றதின் றிங்கெனவே
குயின்று காட்டிம றைந்தத யாநிதியே
தமசில் வேற்செங்கை யாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (எ)

புவனம் யாவையு மாக்கலுங் காத்தலுநுண்
பொடிப டுத்திய ழித்தன்ம றைத்தலுமா
ரவல நூறலு மாய்நுவ லைந்தொழிலு
மறுமு கன்வினை யாட்டென வைந்துமுகச்
சிவன்மு னோதுதி றத்தினை நன்குணர்ந்தார்
தினமு நேடொரு தைவத மேசிவமே
சவள வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (அ)

மகுட வானவர் தானவர் வாணிருதர்
மனுடர் யாவரு மாடலம் யாவையுமாள்
சுகுர்த மாவரை யாவழி யாமுருகா
துகளி லாருயி ரேயறி வேதிருவே
பகுதி மாயமெ லாமுடை யாயெனையாள்
பரம காருணி யாகும ராகுரவா
தகுதி வேலிறை வாநினை யேகருதித்
தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே. (௯)

பரத னூர்தலம் யாத்திரை செய்பரிவார்
பலரு மேகுவி சேதுவில் வாழ்மறையோன்
எரியி னுமநெ டுங்கட னீர்நிலைமே
லெளிய வென்னுள மோர்ந்துகொ டுத்தபொரு

---

எ. அமலமூர்த்தங்கொள் ஆசு = வெண்ணிறத் தலைப்பாகை. மூர்த்தம் = தலை.
௧௦. எரியினுமநெடுங்கடனீர்நிலை = சமுத்திரமாயுள்ள அக்கினிதீர்த்தம்.

ளுரிமை யேயனு பூதிபு கன்றவனுள்
　　கொருவ னேயென தாருயி ருள்ளுயிரே
சரத வேலிறை வாகினை யேகருதித்
　　தடவு கின்றநெத னெஞ்சைவ லக்கரமே. (௧0)

துர்மதிஸு தைமீ அஉ சனிவாரம்.

---

# ௧0. பணிதலுணர்த்தல்.

---

கலிநிலைத்துறை.

அட்டாட்டாக்கரம்.

*தனனத் தனனத் தனனத் தனனத், தனதான.*

**உ**ரனச் சுரர்மெச் சிடுபொற் புடைமுற் படுவேத
நிரனக் குடிலைக் குகனித் தனெனச் சொலுமாறு
சிரனைக் கலவப் பரியற் புதனைச் சிவசேயென்
பரனைப் படைகட் கரசுக் கரனைப் பணிவோமே. (௧)

**ந**தியைக் கிடையிற் படியச் செயுமற் புதநாதன்
எதிரிற் கலைமுற் படுசொற் பொருளைச் சொனவேசில்
அதியற் புதனைக் குருகுக் கொடியத் தனையானை
பதியைச் சிகியைக் கடவுத் தமனைப் பணிவோமே. (௨)

**ம**ணியுற் றகழுத் தரனெற் றிவாற் குரியானைத்
திணியத் திமுகத் திறன்மிக் குளனைத் தெறுதேவைத்
துணிபட் டுவிழப் பகைமைத் தொகைதுப் பயர்வானைப்
பணியற் புடையர்க் கருள்சிற் குகனைப் பணிவோமே. (௩)

**உ**யிரிற் குமுயிர்த் தொழிலிற் குமுயிர்ப் பருடேவை
அயில்கட் கரசைக் குடிலப் பெருவெற் பறவேவுஞ்
செயலுற் றவனைத் திருமிக் கவனைச் சிவசாகை
பயிலற் பினருக் கருள்சிற் குகனைப் பணிவோமே. (௪)

**கு**வடொத் தபுயத் தசுரப் படையைக் கொடிநாய்பேய்
உவணக் குழுபற் பலசத் தநரிக் குணவாமா
றவிரத் திரம்விட் டவனைச் சுரர்கட் கமுதீயும்
பவளத் திருமெய்ச் சுகனைக் குகனைப் பணிவோமே. (௫)

---

௩. துப்பு = பகை.

நகைமுத் துதிரப் புருவச் சிலைகொட் டிடுநாரி
முகைநச் சுதல்விட் டருண்முத் தனையத் தொழுவார்தந்
தகைநட் புளனைச் சிகியிற் றிகழ்பொற் சரணனைப்
பகைசெற் றவயிற் கரசிற் பரனைப் பணிவோமே. (௬)

இதயச் சவையைத் தரிசித் திடலுக் கிகலேசெய்
மதனப் பயலைத் தலையைத் திருகிக் கொலுமானர்
நிதநச் சொருசற் குருவைப் பெரிதைத் திருநீடு
பதநித் தியனைச் சிவசிற் குகனைப் பணிவோமே. (௭)

மலமிக் ககுணப் பொலிவிற் பதிநட் பொருமாசில்
பலனைத் தருமிக் கலைகற் றயரப் படுமேலென்
றுலகத் தலையற் பரியற் றுரையுட் படுவாராம்
பலகத் தரைவிட் டொருசிற் குகனைப் பணிவோமே. (அ)

மடவிற் படுநற் பிரசத் தினைவட் டினையார
வடிகட் டியசர்க் கரைமுக் கனியைத் திருவானோர்
அடைபுத் தமுதைப் பயசைப் பொருமற் புதவேத
படனக் கிளவிக் குருவைக் குகனைப் பணிவோமே. (௯)

கலிவற் பறமெய்ப் பொருண்மிக் குறவக் கரைசார்முன்
வலியுற் றசகக் கொடிகட் டியபத் திரிவாய்முன்
பொலிவுற் றபலப் பலவிச் சையுடைப் புலமேதி
பலியிட் டபுகழ்ப் புலவற் கிறையைப் பணிவோமே. (௰)

துர்மதி௵ தைமீ ௨௨ ஆதித்தவாரம்.

---

அ. மலம் மிக்க குணப்பொலிவின் = (தம்முடைய) ஆணவம் மிகுந்த இயல்புப் பெருக்கத்தினால்.

பதி நட்பு = இராச நேசமும். ஒருமாசில் பலனை = ஒரு குற்றமுமில்லாத பலனையும்.

௰. மேதி = எருமை = எருமைக் கடா,

# கக. ஆதரிப்பாரெவர்.

**கலிநிலைத்துறை. (இசை)**

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**வா**க்கும னங்களுக்கண் ணுத மாவருட் சேயவனே
ஆக்கும்வி ரிஞ்சனையுந் தந்த வாதிமு தற்பரனே
காக்கும னந்தனையு நன்கு காக்குமோர் தாரகவிவ்
வாக்கைவி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (க)

**தே**கநு ழைந்தவுயிர் யாவுஞ் சேர்பிர தானத்தினை
ஏகனெ னுந்தனது சன்னி திக்கணி ருத்தியுள்ள
மாகப ராபரனே யென்னுண் மல்கொரு சண்முகவிவ்
வாகம்வி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (உ)

**த**ங்கம ணிக்குழைக ணன்கு தங்கிய காதுடையாய்
செங்கையில் வேலுடையா யென்றன் செய்யுள்கண் மேயபிரான்
இங்கலை பேய்போல நிற்கு மேழையு ளந்தளர்ந்திவ்
வங்கம்வி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (ஙு)

**அ**ச்சுதன் மாமருகா வைம்மு கன்றரு வேன்முருகா
பச்சைம யிற்பரியா வென்று பாவலர் தோத்திரிக்குஞ்
செச்சைம ணங்கமழுந் திண்மை மொய்ம்பநி னுள்ளமல்லால்
அச்சுவி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (ச)

**கா**வியங் கண்ணியென்ற னன்னை கானர்கு லக்கொடியைத்
தேவியெ னக்கொள்பிரா னிந்தத் தேயத்தி லாரிருந்தென்
மேவிடு நோய்க்கிடனு யுற்ற மேனிய னுனேனிவ்
வாவிவி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (ரு)

**வீ**ட்டில்வை கேல்வையிலும் விட்டு வந்தபிற் போதுமுற்ற
வாட்டமெ லாஞ்செகுத்த மட்டின் மாக்கரு ணைக்கடலே
கோட்டமில் வேற்பெருமா னிச்சைக் கொட்புடை யற்பவுயிர்
ஆட்டம்வி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (சு)

**பா**சடை மொய்த்ததிமி சென்னப் பைந்தினை காத்தவண்முன்
ஏசற நின்றபிரா னென்னை யுந்தடை செய்தபிரான்
தேசவிர் வேற்பொருநா வொப்பில் சிற்பர நின்னையல்லால்
ஆசகம் விட்டவுட னென்னை யாதரிப் பாரெவரே. (எ)

முகிலைம ருட்டுகுழற் றெய்வ யானைகொண் முத்தேசெஞ்
சிகியிலெ ழுந்தருளுந் தெய்வ நாயக மேசிவமே
மகிமைத ரும்பொருளே நெஞ்சம் வாடிவ ருந்தியிந்த
அகிலம்வி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (அ)

பவமற வென்றுனது செய்ய பாதந்தி னந்துதித்தேன்
சிவமளி யென்றுனையே சிந்தை யுஞ்செய்ய லானேனென்
கவலைய டுங்குகனே யிந்தக் காயம தோம்பிநிற்கும்
அவலம்வி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (கூ)

குவலயம் வென்றுபுகழ் சொற்ற கொன்னுடை யானிதயம்
இவருமி எம்பெருமா னென்னு மெண்குண மேயவனே
புவனம னைத்துமிருந் துள்ள புண்ணிய சண்முகவிவ்
வவதிவி டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே. (௧0)

துர்மதிஸு தைமீ ௧0௨ சோமவாரம்.

## ௧௨. பகைகடிதல்.

தரவுகொச்சகக்கலிப்பா. (இசை)

அடியொன்றற்குப்பதினெட்டக்கரம்.

*தனதன தனதனனு, தனதன தனதனனு.*

திருவளர் சுடருருவே சிவகர மமருருவே
அருமறை புகழுருவே யறவர்க டொழுமுருவே
இருடபு மொளியுருவே யெனநினை யெனதெதிரே
குருகுகண் முதன்மயிலே கொணர்தியு னிறைவனையே. (௧)

மறைபுக ழிறைமுனரே மறைமுதல் பகருருவே
பொறைமலி யுலகுருவே புனநடை தருமுருவே
இறையிள முகவுருவே யெனநினை யெனதெதிரே
குறைவறு திருமயிலே கொணர்தியு னிறைவனையே. (௨)

இதரர்கள் பலர்பொரவே யிவணுறை யெனதெதிரே
மதிரவி பலவெனதேர் வளர்சர ணிடையெனமா
சதுரொடு வருமயிலே தடவரை யசைவுறவே
குதிதரு மொருமயிலே கொணர்தியு னிறைவனையே. (௩)

பவநடை மனுடர்முனே படருறு மெனதெதிரே
நவமணி நுதலணியோர் நகைபல மிடறணிமால்
சிவணிய திருமயிலே திடனெடு நொடிவலமே
குவலயம் வருமயிலே கொணர்தியு னிறைவனையே. (௪)

அழகுறு மலர்முகனே யமரர்கள் பணிகுகனே
மழவுரு வுடையவனே மதிநனி பெரியவனே
இழவில ரிறையவனே யெனநினை யெனதெதிரே
குழகது மிளிர்மயிலே கொணர்தியு னிறைவனையே. (௫)

இணையறு மறுமுகனே யிதசசி மருமகனே
இணரணி புரள்புயனே யெனநினை யெனதெதிரே
கணபண வரவுரமே கலைவுற வெழுதருமோர்
குணமுறு மணிமயிலே கொணர்தியு னிறைவனையே. (௬)

எளியவெ னிறைவகுகா வெனநினை யெனதெதிரே
வெளிநிகழ் திரள்களைமீன் மிளிர்சினை யெனமிடைவான்
பளபள வெனமினுமா பலசிறை விரிதருநீள்
குளிர்மணி விழிமயிலே கொணர்தியு னிறைவனையே. (௭)

இலகயின் மயின்முருகா வெனநினை யெனதெதிரே
பலபல களமணியே பலபல பதமணியே
கலகல கலவெனமா கவினெடு வருமயிலே
குலவிடு சிகைமயிலே கொணர்தியு னிறைவனையே. (௮)

இகலறு சிவகுமரா வெனநினை யெனதெதிரே
சுகமுனி வரரெழிலார் சுரர்பலர் புகழ்செயவே
தொகுதொகு தொகுவெனவே சுரநட மிடுமயிலே
குகபதி யமர்மயிலே கொணர்தியு னிறைவனையே. (௯)

கருணைபெய் கனமுகிலே கடமுனி பணிமுதலே
அருணைய னரனெனவே யகநினை யெனதெதிரே
மருமல ரணிபலவே மருவிடு களமயிலே
குருபல வவிர்மயிலே கொணர்தியு னிறைவனையே. (௧௦)

துர்மதி௵ தைமீ௳ கருஉ சனிவாரம்.

இத்திருப்பத்தைக் காலை மாலை பூசித்துப் பத்திபிறங்கப் பாடுவோர், திருமயின் மீது செவ்வேட்பரமனைத் தரிசிப்பர்; பகையை வெல்வர். **சண்முககவச** பாராயணத்திற்கு இது வேரும்.

# கந. திருவடிவயா.

### கலிவிருத்தம்.

**ப**ஞ்சா முதவண் ணமதென் பரிவாய்
விஞ்சா ரமுதென் றுவிளம் பியவாய்
மஞ்சா ரொருசெந் திலன்மா ணடியை
நெஞ்சா லொருசீ வனிணைந் ததரோ. (க)

**அ**க்கால் விழியவ் வடியா மலரின்
மிக்கா ரழகே யழகாம் வியனும்
அக்கா லுளதே யதுகண் டிடுவேன்
இக்கா னனியென் றெழல்செய் ததரோ. (உ)

**நா**ற்றங் கிரகித் திடுநா சிகணே
ஊற்றம் புகலுன் செயரு ளெருநான்
ஆற்றுஞ் செயலவ் வடியிற் செலுமுன்
எற்றம் பெறுமோ விசையென் றதரோ. (ங)

**இ**துதேர் செவிநா சியைநன் கெதிரா
அதுநீ புரிமுன் பமலங் கிளரப்
பதமீ தெழுமின் பரவங் கொளலென்
மதமே யெனும்வா துவழங் கியதால். (ச)

**ந**ன்னு வதுகா திணைநன் கெதிரா
என்னு சையினவ் வடிமல் கெழிலைத்
துன்னே சைகளைப் பெரிதுந் துதிசெய்
முன்னீ முயலேன் முடிகென் றதரோ. (ரு)

**நீ**டங் கரநா விணைநில் லெனுமோர்
சூடந் தவிருந் துணரா மடிதொட்
டேடொன் றுமரும் பெனவஞ் சலிசெய்
ஈடென் றெழில்கா ணெனமுந் தினவே. (சு)

---

க. இதன்கட் கூறப்பட்ட இறைவன் செய்கையினைப் **பஞ்சாமுதவண்ண**மென்பத னடியிலே நன்கு காணலாம். இந்த வண்ணம், இந்நூலாசிரிய ரருளிச்செய்த **சிறுநூற்றிரட்டு** என்பதி லுளது.

ச. இன்பரவம் = இனியவோசை ; அரவம் = ஓசை.

சு. சூடந்து = ஆணையிட்டு ; சூள் + தந்து எனப் பிரிக்க.

உடலிற் றலைமைக் கதையா லுயர்வே
அடைநற் றலையவ் வடிமா மலரென்
நடுவிற் கவினே யுறநன் கிடுமுன்
தடவிக் கரவூழ் தவிர்கென் றதரோ. (எ)

அருளே யடியா மதைநான் வலமாய்
வருமுன் னிவண்வந் தவருள் ளெவரென்
புரிவா ரெனநல் லடிநன் பொருளே
மருவும் படிகூ றிமகிழ்ந் ததரோ. (அ)

அச்சொல் லுணர்கண் ணடியே யெனைநீத்
தெச்செய் கையுமின் றிருளே யுமெனும்
மெய்ச்செய் தியையோர் மனமென் வினைநீத்
தெச்செய் கையுறாஉ மிசையென் றதரோ. (கூ)

அப்போ துயிர்நல் லகமே பிறநீத்
தெப்பா டறிவா யதனு விறைதாட்
டுப்பா ரவொரே துணிபா திர்புகழ்
நப்பா முனிநன் குமிதென் றதுவே. (க0)

துர்மதிஞூ பங்குனிமீ கஅஉ சுக்கிரவாரம்.

---

# கச. மனச்சான்றுகொல்வார்மல்கார்.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடியொன்றற்குப் பத்தொன்பதக்கரம்.

தனத்தா தனத்தா தனத்தா தனத்தா, தனத்தா தனத்தான.

கழற்கால் பிடித்தே களிப்பார் களிப்பே கடிப்போ திணைப்பாதந்
தொழற்கே விதித்தா யெனக்கூ டுவப்பே தொடிப்பே தையர்க்காளாய்
விழற்கோ வினித்தான் விதிப்பாய் மிழற்றாய் விரைப்போ துடைத்தாரார்
குழற்கோ மகட்கே குறக்கோ மகட்கே குணத்தா வினித்தோனே. (க)

எனக்கார் விருப்பே சுவைப்பான் மதர்ப்பே யினிப்பார் பழச்சாறே
மனக்கார் மதிப்பே மதிப்பார் மதிப்பே மறைத்தே னிடைத்தேனே
சினக்காய் விலர்க்கா ருவப்பே துதிப்பார் திருத்தா ளெனக்கியே
வனக்கா னவர்க்கா மகட்கேய் செருக்கே மணிக்கே கயத்தானே. (உ)

படைப்பாய் புரப்பா யழிப்பாய் மறைப்பாய் பதப்பே றளிப்பாயென்
னுடைக்கா தலிப்பே கருத்தே நினைப்பே யுளத்தார் கழைச்சாறே

---

எ. இக்கரம் = இந்தக் கை.

முடைத்தா வரத்தே ருகப்பா ருனைத்தான் முதற்றே வெனத்தோரார்
கடைப்போ மவர்ச்சார் வதற்கோ விதிப்பாய் களிக்கே கயத்தானே. (௩)

குடச்சீர் முனிக்கோ ரருட்டே சிகப்பேர் கொடுத்தாய் தமிழ்ப்பாடை
படித்தே மறைச்சீர் வடக்கா ரியக்கீர் பழித்தே களிப்பாரும்
வடக்கா ரியக்கீர் படித்தே தமிழ்ச்சீர் மறுத்தே களிப்பாருந்
திடச்சேய் நினக்கே வெறுப்பீ மடத்தார் செயற்கா ருவப்பாரே. (௪)

திருப்பே றளித்தா ளுனற்சீ ரடிக்கேள் சிறப்பாய் மதிப்பார்வை
கிருப்பே சுவர்க்கா லயத்தா ரிருப்பா மெரிப்பான் மனச்சாதம்
நெரிப்பே யுறத்தா னிழைப்பா ரிருப்பே நெருப்பா றுடைச்சாராம்
மருப்பே ரணித்தோ ளுடைத்தூ மனத்தாய் மணிக்கே கயத்தானே. (௫)

கணத்தே கணத்தே குணப்பே றுடைச்சூர் களைச்சார் விருப்பாருட்
பணத்தா வினத்தான் மிகுத்தோர் தமைக்கோள் படக்கூ றிடற்கேயாக்
குணத்தா ரிருப்பா ருனைத்தே வெனற்கேய் குணச்சீ ரவர்க்கேதப்
பிணத்தா ரிடத்தே மதிப்பே தெனக்கூழ் பிரித்தா ளயிற்கோவே. (௬)

உழக்கே புசித்தா யிரக்கான் மனத்தா லொதிப்பே யெனத்தாவி
விழற்கே யிருப்பார் வழிக்கே யெனைத்தான் விடத்தா னினைப்பாயோ
கிழக்கே வடக்கே தொழற்கே யிருப்பார் கிடைத்தூ யரைச்சீறுஞ்
சழக்கோர் கசப்பா மடிப்போ தளித்தாள் தனிக்கே கயத்தானே. (௭)

மழுத்தே வினுக்கே நினக்கே விகற்பாம் வழுப்பே சிடர்ப்பேயும்
எழுத்தேய் மறைக்கே பகைச்சூ துடைப்பே யிகற்பேய் நினைத்தாழா
முழுப்பே யரைப்பேய் மடப்பே யடப்பேய் முடப்பேய் சடப்பேயுங்
கொழுத்தே யெனக்கூ றிடற்கோ விதிப்பாய் குணக்கே கயத்தானே. (௮)

அருட்டே சரற்கே முதற்பீ டுரைப்பே மயிற்சே யினுக்கோதேம்
பரிக்கா தையிற்கீழ் நடைக்கீர் குகற்கே படித்தே மெனப்பேசும்
முரட்பே தகத்தார் சிவச்சேய் சிறப்பே முழுப்பீ டெனத்தாணு
உரைத்தா னதைத்தான் விடுத்தா ரவர்க்கே துரைப்பே னயிற்கோவே. (௯)

அயற்கே யரிக்கே சுரர்க்கே பகைப்பா மடற்சீர் மிகுத்தாள்சூர்
வியப்பா யிறப்போர் தொடுத்தாய் நினைப்பார் வினைக்கோ தறுத்தாள்வோய்
நயப்பே றெனக்கீ யெனப்பே ரொலிப்பா நயப்போ டுரைத்தானைச்
செயப்பே றுறச்சூ ழுருட்கோ வயிற்கோ திருத்தா ளெனற்சீரே. (௧௦)

துந்துபி௵ சித்திரைமீ᠎ ௨௨ சுக்கிரவாரம்.

---

௩. தாவரத்தேர் = உடம்பினழகு ; தாவரத்து + ஏர் எனப் பிரிக்க.
௪. மடத்தார் = இளைஞர்.

# கரு. இடையறாதுநிற்கவிழைதல்.

## (முதற்பத்து)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

அடியொன்றற்கிருபத்துமூன்றக்கரம்.

ரு, சு, எ, அ - ஆஞ் சீர்கள், தம்முள்வண்ணம்.

வேரி நீபமார் தெரியன் மார்பவோம்
விதிசெய் சித்தேனை யுதவு கர்ப்பமுள்
சூரி லேவெளிப் படுகை யிற்பினே
தோடர்பி ணிக்கணே யொருகு ளத்தினுழ்
நீரி லேசிறூர் பயில்ப ளிக்கணோர்
நெடியன் வீழ்த்தலின் முடிபு ணுய்ப்படும்
பீரி லேபுரங் தருளி ணுயிங்ஙன்
பிழைபோ றேமேனின் விளைவ தேதுகோல். (க)

தீப பந்தியா யுரைசெய் பண்டிகைச்
செயலி னேவேடி யுறலி னேதலே
நாபி யந்தமுங் கனன்ற துன்பிலே
நடுநி சிக்கணோர் குறடு தத்துகால்
மாப லத்தயிற் கவைக்கொ துங்குமோர்
வகையி லேயுயி ரருளி ணுயிங்ஙன்
கோப மேபுரிந் தொதுங்கி னென்செய்கேன்
குழக ணுதனே குமர நாதனே. (உ)

தந்தை சிந்தைதான் வருந்து மென்னுமோர்
சலத்தி னஞ்சைநா னுணக்கோ ணர்ந்தகால்
தந்தை சென்றபின் பெணைவ ருத்துவார்
தமைச்சே யிக்கநா னினைத்த பிற்போலாச்
சிந்தை யாரெனு துளம்வ ருந்தவே
திரவி யம்பெற வனைபல் வம்புகள்
வந்த கான்முனே யணைந்து காத்தநீ
மறக்கு மாறெனே மலர்க்கை வேன்மனே. (ங)

---

உ. அயிற் கவை = (ஒருதலை) கூரிய கழி.

ங. சலம் = சஞ்சலம், மனக்கவலை. கொணர்ந்தகால் = கொணர்ந்த காலத்தும். வந்தகால் = வந்தகாலத்தும்.

அத்த மேபெறற் கெனைப்பி டிக்கவென்
றயர்மு யற்சியி லேனையி சைத்திலே
செத்த மேனிபோல் வமன பேதிநோய்
தீளைத்த போதுநீ றளித்து மேவினாய்
பத்தர் வாழுமூர் முகவை யிற்சிறைப்
படுத்து வேனென மிழற்றி னுரையே
சுத்த போதியென் றெனைவி டச்செய்த
துறைவ நீயிங்ன் மறைவ தேதுகோல். (௪)

சொன்ன தீர்வையைப் பெறுமு னேயெனைத்
துயிற்றி யேநவ சிலைக்கண் மூழ்கெனப்
பன்னி யன்னவா றிவனு மாடவிற்
பழிகள் பேனென வொழிய வாடினை
பின்ன ரங்கர்த் தலைவர் நீதியைப்
பிழைத்து மாபொருள் பெறச்செய் காரியம்
மன்னு றாதுசெய் தருளி னயிஙன்
மறப்ப தேன்னைவேல் பிடித்த சொன்னமே. (௫)

அடியொன்றற்கிருபத்துநான்கக்கரம்.

முடிந்த தீர்வைமே லுயர்ந்த தாக்கனோர்
முயன்ற போதுநான் மயங்கு றுமனீ
இடந்த ராதுவே றிதனை நோக்கென
வினிது தீட்டியோர் முடிவு காட்டினாய்
விடிந்து போமுனே மதுரை நீதியார்
விளம்பு தீர்வும விதங்கு லாவிய
துடங்கு கோடவின் றிஙன்வி டுப்பையோ
வுயிரி னுதனே யயிலி னுதனே. (௬)

கொடிய கோடையிற் சுடும ணற்கணே
குருதி பாயவே னடியி லேறுமுள்
வடிக ணீரிலே நனைத லுள்கியம்
மழவ னுக்கணி குறட ளித்தியேன்
றடியை நாடுமோர் தபதி பாற்புகன்
றருளோர் தண்ணளி யிறைவ வென்னையும்
மிடிய னுகவே விடுவை யோவயின்
மிளிர்கை யாளியே விபுதர் மீளியே. (௭)

---

௫. நவசிலை = நவபாடாணம்; தேவிபட்டினத்துளது.
அங்கர் = முன்மொழிந்த முகவை. தலைவர் = ஜமீன்தார் மானேஜர்.

இவணி ருந்திடின் மனம டங்கிடா
தேனத்து ணிந்துநா னிசைத்தி ருந்தபா
உவகை யோடுமேன் மனைய மர்ந்தியா
னுரைத்த போதுநீ புறப்ப டேலருக்
கவன மோடிரா யெனமொ ழிந்துபின்
கரந்த வென்னுரு கரும்பு கண்ணறை
அவல மெய்தவோ புரிவை நீபமார்
பழக னேயரு மழவ னேசோலாய். (அ)

நிலவ ளந்தரும் பிரப்பை யிமமா
நிலனி ருந்துநா னினைநி னைந்தபோ
தலகை யைந்துநா ளெனைவ ளைந்துபே
மதுவி ளைத்தகா லவைது ரத்தினுய்
வலய வாவிபோ லணுகி யென்னைமேல்
வருதி யென்றெழல் புரிவி யந்தரம்
விலக வேசெய்தை யிகன நீயெனை
விடுவ தேன்கோல்சூ ரமே டங்கலே. (கூ)

அறுதி னத்திலே மனம டங்கிமே
லணுகு நாளிரு முனிவ ரோடிகல்
உறுக ணேதமில் வடிவ ணுகிவந்
துரைத்த வுன்பறை பிடித்த வென்றனை
இறுதி வைகன்முப் பதுட னைந்திலே
யெழவ யர்ந்தவோர் கனைக ணிங்கெனைத்
தறுக ணாளர்போற் கழிப்ப தென்புகழ்த்
தமிழ னீசனே யவிர்கு கேசனே. (க0)

துந்துபிஸூ சித்திரைமீ கூ௨ மங்களவாரம்.

---

கூ. வலய ஆவி = வலிய நீராவி ; அயம் = நீர்.
வியந்தரம் = பெரிய பேய்.

க0. உரைத்த வுன்பறை = (இதுவே) தகாரலய ரகசியம்.

# இடையறாதுநிற்கவிழைதல்.

## (இரண்டாம்பத்து)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)

அடியொன்றற்கிருபத்திரண்டக்கரம்.

ரு, சு, எ, அ - ஆஞ் சீர்கள், தம்முள்வண்ணம்.

சீர்த்த செல்வர்வா ழூர்பி ரப்பையென்
றிணையை நீங்கிநீ ரணவு பாம்பனேய்
கூர்த்த வுள்ளுளா ரோடொர் வற்சரங்
குலவி நின்றுதா யவள்பி றந்துளார்
நார்த்த வில்லினுண் மக்க ணட்பெலா
நழுவ வேகியோர் கிழிச லோடுனேர்
பூர்த்தி நல்குதா ணம்பி னேனெனைப்
புரந்தி டாய்கொலோ கடம்பின் மாலையாய். (க)

நம்பு நான்முனே சொல்பி ரப்பையே
நணுகி யேகுகா லனையுள் வாடினுள்
எம்பி ரான்குகன் றன்னை நம்பனே
னிதய நின்றதே முதிரு மென்றுபோய்
அம்பி றங்குநா டால வாய்சென்முன்
னடல்கோள் பண்டியா லடிம டங்கியே
வெம்பி வாடலிற் காத்த நீயிவன்
விடுகை யென்கொலோ முருக நம்பியே. (உ)

சென்னை சேர்முனே யவ்வி ராவவ்வூர்த்
திருவி னேர்கோனுர் தவமு ளாள்கனுத்
தன்னி லென்னுடம் போடு நின்றனக்
தருதி யென்றுநே ரருளி யந்தவீ
டென்னை யெய்துமா ருற்றி யங்குளா
ரேவரை யுந்தோட ரடிமை கொண்டனை
பொன்னை யாவிங னீத்து நிற்பதென்
புரையி ருப்பினு நிறைவி னைழத்தருள். (ங)

---

ந. 'அங்குளார்'—இவர்களே, அசோககாலவாசத்து எழாம்பத்தின் க - ல் "குகனருள்கொள் வாழ்க்கையாளர்" என்றுங் கூறப்பட்டார்.

மாசின் மந்திரப் பேர்ந கர்க்கணன்
வதியு நாள்விடா விரும னேயையே
வசில் பண்டிதஞ் செய்து தீர்த்தசெந்
திநகர் மன்னையா வெழில்கொள் சென்னைசேர்
வாசி யானகா லூரு மீதுகோண்
மருவு கட்டிநை வறுந லற்புறை
பூசி நின்றவோர் பிள்ளை யேயிநன்
புரிவி லார்கள்போன் மறைவ தேதரோ. (௪)

மற்றொர் காலைவெங் காது நோயினை
மருவி வாடினே னுறுவை சூரியால்
அற்ற மெய்தினே னங்கு முன்றயா
வணைந்த ளித்ததே குடந்தை யிற்சிகா
துற்ற மன்பதைக் குண்ணெ ருங்கிநா
னுயிர்த்த துன்செய லேனற்கு மேன்றடை
இற்றை நாண்மறந் தாலுய் வேன்கொலோ
விறைவ னேவெல்வே லிறைவ னேவிடேல். (௫)

யாக்கை யேபனிப் பென்று சென்னைவிட்
டேறுழோ டேகியோல் குறுமோர் கானிலுன்
நோக்கி னுளிரண் டொன்று காறுமு
னுகர்வில் வேப்புமோர் நிகழோர் குப்பமே
பார்க்க வுற்றபோ தூணில் புன்கணும்
படிய வேவனை கடவு ளேயெனைக்
காக்க வென்னெடும் போத ருந்தனிக்
களைக ணேயிநா ளுளைவ தேதரோ. (௬)

வார்வி சாகனா ரேய்து யர்க்கணும்
மதனுய் காசிவா னதியின் மேலிராக்
கார்பெய் காலையும் வேறு மோர்நிசிக்
கணிறை சோனையின் மதுரை வீதியிற்

---

௪. மந்திரப்பேர் நகர் = திருமந்திர நகர், தூற்றுக்குடி.
உறை = மருந்து.
௫. குடந்தை = கும்பகோணம்.
௬. ஓர்கான் = பழவேற்காடு.
ஓர்குப்பம் = ஆண்டார்குப்பம்.
௭. மதுரை = மதுரா ; சத்தபுரியுளொன்று.

சூர்கொள் காலையுஞ் செய்ச காயமென்
சோலில டங்குமோ விஙன மன்பிலாப்
பேர்கள் போன்மறைந் தாலுய் வேன்கொலோ
பிரச வோதிநீ ளிருவர் காதலே. (எ)

காட்டு மன்னனு ரூருய் வைணவர்
கடிதி னென்னையே கோலைசே யெண்ணமே
கூட்டி னாதுந் தில்லை பின்னைவாழ்
குடில நாமர்கள் கோடிய சூனியம்
ஊட்டி னர்கொலற் கேயஃ துங்கெடுத்
துவகை சேற்றுலா மவர்வ ழக்கேலாம்
ஓட்டி யேயெனக் கீந்த வென்றியிவ்
வுலகு கூறுமே யலகில் வேன்முதால். (அ)

அவ்வ ழக்கெலா மாங்தொ றும்விசா
ரணையி லெற்குமோர் தவிச ளித்துநேர்
எவ்வ ருத்தமும் பொன்ற வாண்டவா
வெழிலி ருதுலாம் வளைய லாளிலாம்
செவ்வை மார்க்கநா னேகி ராவிலே
திருடர் கைப்படா தேனையு நட்புளார்
எவ்வ ரும்புரந் திட்ட தண்ணளீ
யிஙன்வே றுப்பையேல் கதழ்வ டேக்குமோ. (கூ)

அன்பர் வாழ்சிவக் குன்றி ருந்துமா
லணவு நன்னரே பெருகு சேன்னையே
இன்பொ டார்தலுந் தாள்கு றங்கிலே
யிரணம் விஞ்சுமா பிளவை கண்டுேனன்
துன்பு கூருநா ளுண்ம கிழ்ந்துளோர்
துயரு மாறினி தருளி னுயிஙன்
அன்பி லார்கள்போ னிற்றல் யாணரோ
வருணை நாதனேர் மருவும் வேதனே. (௧0)

துந்துபிஹூ சித்திரைமீ ௨௨ சுக்கிரவாரம்.

---

அ. பின்னை = பின்னத்தூர்; சிதம்பரத்திற்குக் கிழக்கேயுள்ளது.
கூ. வளையலாள் இல் = வளையன்மாதேவியென்னு மூர்.

# கசு. திருவருட்செயன்ஞாபகம்.

**எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

**இரண்டுசீர்வண்ணம்.**

நல்வி நயவரர் பெருமவென் னறிவே
நவிர மிவர்பெரும் பரமவென் னுயிரே
கல்வி பயினல நீத்திள மையிலோர்
கரிசில் வெள்ளியி னுதயநின் மீது
பல்க விதைநனி பாடிட வருள்செம்
பறம்பன் பெயரும்வைப் பேனென வெணிநான்
சொல்க விதையது கங்கையென் மொழியிற்
றொடங்கு மங்கல முணர்ந்துபின் மகிழ்ந்தேன். (க)

பாடி யேயறி யாவெளி யேன்வாய்
பாட லுன்கிரு பையெனவு நினைந்தேன்
நேடி யேயறி யாதவென் னினைவு
நினைநி னைந்திடல் கருதியு மகிழ்ந்தேன்
பாட லோர்சத மாயபின் றேவைப்
பனவன் மாதவன் சயதச மியினுன்
பீட ருமனு நல்கவென் னிதயம்
பிடித்த துங்குக நினதரு ளன்றோ. (உ)

வனப்பு மிக்கவொர் சைவரென் கனவில்
வந்தெ னைக்கொடு போய்ப்பய சடிசில்
இனிப்பு றப்பிசைந் தனரதை யென்னோ
டினித ருந்தியு மேகின ரதுதொட்
டுனைப்ப ழிச்சிடு கவிதையு நூலோ
ருணர்வும் வளர்ந்தன விவையுமு னருளே
தனிப்ப திப்பொரு ளேதிரி புரத்தைத்
தகித்த புன்னகைச் சண்முக சிவமே. (ங)

---

க. பெரும = பெருமானே; "வந்தேன் பெரும வாழிய நெடிதென" என்றார் **பெரும்பாணாற்றுப் படையினரும்.**

உ. விஜயதசமியிலே சூரியோதயத்திலே இந்நூலாசிரியர் திருவாறெழுத்து மந்திர முபதேசிக்கப்பெற்றாராகலின் அத்தசமி, இங்கே "சயதசமி" எனப்பட்டது. இடம், **இந்நூலிற்** 'பரதனூர்தலம்' என்றற் றொடக்கத்துச் செய்யுட்கண்ணும், **திருப்பாவில்** 'அருணையம் பெயர்' என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரையுழையு மறிந்துகொள்ளலாம்.

பின்ன ரப்பன வன்சொன படியோர்
　　பெண்ணை மணந்தன னவளுநல் லவளே
என்னி லற்புடைத் தந்தைபொன் றிடனு
　　மில்லின் காரிய மெனைநனி சூழ்ந்த
அன்ன நற்பகல் கமலனென் முனிவ
　　னருந்த மிழ்ப்பனு வலிலெனைக் குறித்துச்
சொன்ன கட்டுரை யுணர்ந்தன னதுவுஞ்
　　சுரேச நின்செய லேயென நினைந்தேன். (௪)

இயல்பி னேமறை வாகியென் மாட்டே
　　யிருந்த தூஉமப் பனுவலிற் கண்டேன்
உயர்வொ டோமனைப் பாடிடு வான்பல்
　　லொண்மை நூல்குயில் வான்பல சீடர்
இயலொ டார்குவ ராடலி றுறவா
　　மிவன்க ரத்தொர்க பாலிமுக் கோணக்
கயிலை யிரேகையென் றதுசொன தானீ
　　கடவு ளாயது மூழ்வழி யன்றே. (௫)

புந்தி கடினமி லாதுறற் குப்பைப்
　　புளியை நீக்கியுண் டேனிருங் காஞ்சி
வந்து நினதொரு கோட்டம தணைவான்
　　மனமு வந்தது காட்டின வளியை
எந்த வழிமறப் பேனுயிர்த் துணையே
　　யெம்பி முத்தையப் பெயருடை யானென்
சொந்த தவநெறி பழித்துவை வேற்றுத்
　　தொலைந்த தையுமறிந் தேன்குக தேவே. (௬)

ஆன்மப் பேறடை காரணந் துறவை
　　யடையு மாகவி படித்திடு ஞான்றவ்
வான்மப் பேறென தருளிலின் றேவென்
　　றறைந்த தண்ணளிக் குகவருங் காசி

---

௬. நினதொரு கோட்டம் = குமரகோட்டம். இக்கேத்திரத் தெய்திய தண்ணளி நிகழ்ச்சி, இந்நூலிலே "பிமர மீட்டஞ்செய் காஞ்சியில்" என்றற் றொடக்கத்துச் செய்யுட்க ணினிதுணரக் கிடக்கின்றது.

௭. "கவிபடித்திடு ஞான்று" என்றது இந்நால், 'இவணிருந்திடின்' என்றற் றொடக்கத்துச் செய்யுட்கண் "யானுரைத்தபோது" எனவருவதே யாகலின், இவ் விருதிறக் கவிகளிலு முறசெய்திக ளொன்றற்கொன்று சம்பந்த முள்ளனவேயாம்.

காசியினிகழ்ந்த நிகழ்ச்சியினைக் **காசியாத்திரையில்** ௩௨, ௩௩, ௩௪, ௩௫ - ஆஞ் செய்யுள்களாலே நன்கறியலாம்.

வான்மைப் பேழ்மடத் திரண்டுகல் லாடை
　　வழங்கி னதுந்திரு வல்லியங் கேணி
நான்மற் றூர்பொழு தெட்டணை தினமெண்
　　ணுன்வி ளிந்தது நான்மறப் பேனே. (எ)

பின்னை தனிற்பகை நாரணப் பெயரான்
　　பெரிது மிகழ்ந்தெனைத் தன்மத தருக்கந்
துன்ன வழைத்தனன் யானுமவ் வாறே
　　துணிந்த போதவன் மறைந்துபொல் லாங்கு
முன்னி யுருத்தனன் யாரிடம் பிழைதான்
　　முளைத்த தோவவன் வாயிலிம் மணல்வீழ்
கென்ன வெடுத்தகைம் மணல்விடுத் தேனவ்
　　வெதிரி மாண்டதிவ் வுலகமு மறிமே. (அ)

தங்க மார்சுகக் களிப்பினை யெடுத்தே
　　சாற்று ஞான்றுசி தம்பரத் திடையோர்
துங்க நாரரு ணின்றிதை யணிந்தே
　　சொல்க வென்றுகண் மணிவட மெனக்கீ
செங்கை வேலவ பின்னையி லடியேன்
　　செய்த கந்தசட் டியிலெதிர் வழக்குப்
பங்க மாமடை வாய்செய மெனவே
　　பணித்த வாய்மையு நான்மறப் பேனே. (கூ)

அருணை நீள்கிரிப் பெயரின னரசே
　　யமுத மடப்பிடி நாயக முருகே
கருணை நாடெனை யெந்தவெவ் வளவாய்க்
　　கணிக்கு மானுட ருளரவ ரவர்க்காம்
பொருளை யீதலு முன்கடன் பிறிதென்
　　புகலு வேனடி யவர்க்கெளி யாயிவ்
வெருவை யூனுயிர்க் காப்புநின் னதுவென்
　　றிங்ங னம்பியுள் ளேனரு ணிதியே. (க0)

துந்துபிஞூ சித்திரைமீ கருஉ குருவாரம்.

---

எ. எண்ணுன் = பகைஞன் ; புறமதப் பகைஞன்.
கூ. தங்கமார் சுகக்களிப்பு = தங்க ஆனந்தக்களிப்பு ; பத்துப்பிரபந்தத் துளது.
　துங்காரர் = தூயஅன்பர் ; அவர்பெயர், பொன்னுச்சுவாமிப்பிள்ளை.

# கஎ. நீதிவிழைந்திரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரண்டுசீர்வண்ணம்.

**தா**யி ழுந்தனந் தாதையை யிழந்தனந் தாரமு மிவணில்லை
சேயி ழுந்தனந் தேசமு மிழந்தனந் திரவிய வினைநீத்தோம்
நோயி ழுந்திலம் பகைமை கடந்தில னொசிவறு வேற்பெருமான்
நேய மென்பது மறந்தது நாம்புகு நெறியெது புகனெஞ்சே. (க)

பேய்க ளேசிட நாய்கள் குரைத்திடப் பிணக்கினர் களிகூர
நோய்கண் மூசிட வாய்வலி மாழ்கிட நொதுமலர் பலபேச
வேய்கொ டோண்மட மானியங் குஞ்சரி விழைமணத் தலைவனெனுஞ்
சேய்கொண் மேனிய னமைமறந் தானினிச் செய்வதென் புகனெஞ்சே. (உ)

சீட ரெனப்பலர் சேர்ந்தன ரவருளந் திருவுள மேயறியுங்
கேடர் மிகுத்துள விப்பெருந் தேசமுட் கெழுவருட் சேயவனை
நேடி யிருப்பவர் நெஞ்சகன் கலைவுற நெடுந்துயர் நாமணவி
வாட வயிற்கர னமைமறந் தான்புகும் வழியெது புகனெஞ்சே. (ஙூ)

**அ**ளப்பில் பாதக மிழைப்பினும் பொறுத்தரு ளாரருட் கடவுளென
வளப்ப நீடொரு கந்தவில் லோங்கலில் வதியிறை தனதடியைப்
பிளப்பி லாதொரு கானினைத் தாரையும் பேணுவ னமைமறந்தான்
களிப்ப ருநலம் யாமுறல் யாண்டுறுங் கழறுதி யளிநெஞ்சே. (ச)

**பொ**ய்க ளாப்பல வரைந்துள முறைகளின் பொலிவுடைப் புடவியிது
மெய்க ளேக்குத லரிதுபல் லாயிரம் விளம்பினுந் தமகபடக்
கைக ணீட்டுவ ராகலி னம்புதல் கவலையென் றமரார்கோள்
கொய்க ராற்புத வேலனை நம்பினங் கோளெது குயினெஞ்சே. (ரு)

**ந**வைகொ ணெஞ்சினர் சிலபல வாண்டுக ணம்பர மனைநம்மை
அவைகொ ளன்பரை யின்பரை நவிலவொண் ணுவுரை யாலேசுஞ்
சுவைகள் கண்டன மவையடங் கிடச்சில சொல்வின மிவைமேலாங்
குவைகள் பொங்குற நம்பரன் மறந்தவொர் கோலமென் புகனெஞ்சே. (சூ)

**ஏ**சல் கண்டுளம் வருந்திடச் சைவரு ளேசிலர் பகைச்சைவர்
பேசல் கண்டுக ரும்பென நிகழ்ந்திடப் பெருமயில் கடவியயில்
வீசல் கொண்டெறுழ் வாகைமி லைந்தவன் மெய்யரு ணமையொருவின்
வாசல் கண்டெங னுழைந்துய்கு வோமினி மதியொடு புகனெஞ்சே. (எ)

மூவஞ் சாண்டினுள் வைணவர் சைவர்கண் முனிந்தவ மதிப்புமுளே
நோவுஞ் சார்ந்திட முயல்வினை யடக்கிய நோன்கழற் கழற்பெம்மான்
சேவிஞ் சாண்டகை வேளிஙன் மறைந்திடத் தேடிய நஞ்செய்கை
யாவுஞ் சான்றுற வோதுதி யோதினும் யாதுசெய் குதுநெஞ்சே. (௮)

நீதி மன்றினர் நீள்பொழு தலைத்தனர் நீதியும் வழங்கிலர்நாள்
ஆதி யந்தமி லாநெடு வேற்பர னருட்கட னிணைநெஞ்சே
பூதி கண்டிகை யணிமழ மேனிகள் பொன்னடி புகழ்வாருட்
சோதி யண்டனு மறந்தன னம்மையித் துயரமெவ் வாறொழியும். (௯)

அத்தி காதல னன்றியொர் தெய்வநம் மகத்திலை யவன்றாட்கே
பத்தி மேயவ ருள்ளமும் வதனமும் பன்முறை நனிவாட
முத்தி யேதரு ளேதென நாத்திக மொழிபவர் நடமாடச்
சத்தி சார்கர னருணையன் சிவனமைத் தணந்ததென் புகனெஞ்சே. (௧௦)

ருதிரோற்காரி௵ சித்திரைமீ ௨௯௳ சனிவாரம்.

---

# ௧௮. திருமாலைமாற்று.*

**வஞ்சிவிருத்தம். (இசை)**

ஒற்றிலாச்செய்யுள்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

**அடியொன்றற்கோன்பதக்கரம்.**

தானன தானா தானதனா.

சேரர சீமா சீரரசே
தாரம தாமா தாமரதா
நாரவ நானா நாவரநா
காரயி லாவே லாயிரகா. (௧)

வேதக மீயே மீகதவே
நாதக னாளா னாகதநா
சீதசு சீலா சீசுதசீ
மேதக வீசா வீகதமே. (௨)

* மாலைமாற்றாவது—முதலொடுத்துங் கடைதொடுத்தும் வாசிக்க ஒரு படித்தாய் நிற்கும் பாட்டு. இத்திருப்பத்திலுள்ள விருத்தங்களின் ஒவ்வோரடியும் அவ்வாறு நிற்றல் காண்க.

ஏதிப லேசா லேபதியே
நீதிம னேசா னேமதிநீ
கோதில கோரா கோலதிகோ
சீதிர சேயா சேரதிசீ. (௩)

மாமயி லாகோ லாயிமமா
தாமபி தாமா தாபிமதா
பூமக பூமா பூகமபூ
காமக தேவா தேகமகா. (௪)

கானவ மானே மாவனகா
நானவ நாடா நாவனனா
தீனத யாளு யாதனதீ
கானக காகா காகனகா. (௫)

### அடியொன்றற்குப்பத்தக்கரம்.

தானன தானன தானதனா.

வாசிவ லாவிவி லாவசிவா
தாசிர ரீசச ரீரசிதா
ஈசிசு தாவிவி தாசுசியீ
ஏசின லோவவ லோனசியே. (௬)

வேலவ வேரர வேவலவே
மாலச மாசச மாசலமா
நீலக லாபிபி லாகலநீ
காலவ காமம காவலகா. (௭)

நாயன நானினி நானயநா
மேயன லேனன லேனயமே
மாயவ மாலிலி மாவயமா
சேயப ணீகக ணீபயசே. (௮)

பூமண மாருரு மாணமபூ
மாமற மானினி மாறமமா
தூமது காமம காதுமதூ
தாமத னீபப னீதமதா. (௯)

தேனட வீறுறு வீடனதே
தீனத நாதத நாதனதீ
தாநக வீசச வீகநதா
மேனக மீதிதி மீகனமே. (௧௰)

ருதிரோற்காரிஸு ஆடிமீ ௯௨ சனிவாரம்.

இத்திருமாலைமாற்று (ஒப்புமைபற்றிவந்த கலித்தாழிசையேனும்)

வேறுபாட்டாகவும் பாடப்படும்; அது வருமாறு :—

---

தானன தானு தானன - தானு தனனு தானு தனனு.

சேரர சீமா சீரர - சே, தா ரமதா மாதா மரதா
நாரவ நானு நாவர - நா, கா ரயிலா வேலா யிரகா (க)

வேதக மீயே மீகத - வே, நா தகணு ளாணு கதநா
சீதசு சீலா சீசுத - சீ, மே தகவீ சாவீ கதமே. (உ)

ஏதிப லேசா லேபதி - யே, நீ திமனே சானே மதிநீ
கோதில கோரா கோலதி - கோ, சீ திரசே யாசே ரதிசீ. (ந)

மாமயி லாகோ லாயிம - மா, தா மபிதா மாதா பிமதா
பூமக பூமா பூகம - பூ, கா மகதே வாதே கமகா. (ச)

கானவ மானே மாவன - கா, நா னவநா டாநா வனநு
தீனத யானு யாதன - தீ, கா னககா காகா கனகா. (ரு)

தானன தானன தானன - தானு தனனு தனனு தனனு.

வாசிவ லாவிவி லாவசி - வா, தா சிரரீ சசரீ ரசிதா
ஈசிசு தாவிவி தாசுசி - யீ, ஏ சினலோ வவலோ னசியே. (சு)

வேலவ வேரர வேவல - வே, மா லசமா சசமா சலமா
நீலக லாபிபி லாகல - நீ, கா லவகா மமகா வலகா. (எ)

நாயன நானினி நானய - நா, மே யனலே னனலே னயமே
மாயவ மாலிலி மாவய - மா, சே யபணீ ககணீ பயசே. (அ)

பூமண மாருரு மாணம - பூ, மா மறமா னினிமா றமமா
தூமது காமம காதும - தூ, தா மதனீ பபனீ தமதா. (கூ)

தேனட வீறுறு வீடன - தே, தீ னதநா ததநா தனதீ
தாநக வீசச வீகந - தா, மே னகமீ திதிமீ கனமே. (க0)

எனவாம்.

---

# திருமாலைமாற்றுப்பொருள்.

சேரரசீமாசீரரசே தாரமதாமாதாமரதா
நாரவநாஞநாவரநா காரயிலாவேலாயிரகா.

சேர்அர = எப்பொருட்கண்ணுங் கலந்துள்ள இறைவனே, சீமா = செல்வ முடைய மன்னனே, சீர்அரசே = மிகு புகழரசே, தார = பிரணவனே, மதா = களிப் புடையானே, மா தாமரதா = பெரிய மணிவடங்களால் அலங்கரிக்கப்பட்ட தேரை யுடையானே, நாரவ = அன்புடையானே, நாஞ நாவர = பலவகை மொழிகட்குந் தலைவனே, நாகுஆர் அயிலா = என்று மிளமையுடைய வேற்பெருமானே, வேல் ஆ யிர = பற்பல ஆயுதங்களையுடையானே, கா = என்னைக் காத்துக்கொள்.

சீமன் என்னும் பெயர் விளியுருபேற்றது "சீமா" என்பதென்க. வேல் - ஆயு தப் பொதுப்பெயர். (க)

வேதகமீயேமீகதவே நாதகஞளாஞகதநா
சீதசுசீலாசீசுதசீ மேதகவீசாவீகதமே.

வேதக மீ = ஞான வெளியே, எம் ஈ கதவே = பேரின்பத்தைத் திறந்து காட் டத்தக்க கபாடமே, நாத = நாதனே, கண்ஞள்ஆள் = சரசுவதியையும் ஆளும்படி யான, நாக தநா = தெய்வயானையையுந் தனது சம்பத்தாகக் கொண்டவனே, சீத சுசீலா = குளிர்ந்த நற்குணமுடையானே, சீ சுத = பார்வதி மகனே, சீ = பேரொளி யே, மேதக ஈசா = பரமேசா, ஈ கதம் = யான் நலனெய்துமாறு நல்கியருள். ஏ - ஈற்றசை.

ஏமம் - எம் எனநின்றது. நாகம் = யானை = கஜநாயகி. (உ)

ஏதிபலேசாலேபதியே நீதிமனேசானேமதிநீ
கோதிலகோராகோலதிகோ சீதிரசேயாசேரதிசீ.

பல் ஏசு ஏதி = பலவகைக் குற்றங்களையும் அறுக்கத்தக்க வாளே, பதியே = பசுக் களை யாளும் பரமபதியே, நீதி மன்னே = நீதியையளிக்கத்தக்க பெரியோனே, சால்நே = (அன்பர்க்கு) மிக்க அன்பே, கோதில் அகோரா = குற்றமில்லாத அகோரமுகமுமுடை யானே, கோல் அதிகோ = செங்கோலோச்சுதலிற் சிறந்த இராசாவே, சீ திர = திரு வார் திரமுடையானே, சேயா = சேயவனே, மதி நீ = எனதுணர்வு நீ, (ஆகலின்) சேர் அதிசீ = உயர்திருவிலே என்னைச் சேர்த்தருள். ஆல், ஏ - அசைகள்.

பலேசு ஏதி எனக்கூட்டுக. "ஸ்திர" என்னும் வடசொல்லின் விகாரமே திர. (ந)

மாமயிலாகோலாயிமமா தாமபிதாமாதாபிமதா
பூமகபூமாபூகமபூ காமகதேவாதேகமகா.

மாமயிலா = பெரிய மயில்வாகனு, கோலாய் = தண்டபாணியே, இமமா தாம = குளிர்ந்த பெரிய மாலைகளை யணிந்துளோய், பிதா = பரமபிதாவாகவுள்ளவனே, மாதா = பரம மாதாவாகவு மிருப்பவனே, அபிமதா = அன்பென்னும் பேரருளுடை யாய், பூ மக = பொலிவுடைய உற்சவமுடையானே, பூமா = (பிரமனது தொழிலைச்

செய்த) பிரமனே, பூ = (அட்டமூர்த்தங்களுள்) பிருதிவியாயிருப்பவனே, கம = நீரா யிருப்பவனே, பூ = எல்லா வுற்பத்திக்குங் காரணனே, மக தேவா = வேள்விகளுக்குத் தேவனே, தேக மகா = உடலொளி யுடையோனே, கா = என்னைக் காத்தருள்.

மாதா + அபிமதா = மாதாபிமதா எனப்புணர்தல் தீர்க்கசந்தி. மக (மஹ:) = உற்சவம், ஒளி. (௪)

கானவமானேமாவனகா நானவநாடாநாவனனு
தீனதயாளுயாதனதீ கானககாகாகனகா.

**கா**னவ மான் ஏமா = வேடர்குல நங்கையாகிய வள்ளிப்பிராட்டியின் திருமண இன்பனே, அனகா = பாவமில்லாதவனே, நவ நால் நாடா = புதுமையுள்ள நால்வகை நாட்டையு முடையானே, நாவன் நனு = நடுவனாகிய யமனுடைய நியாயப்பிரமாணத் தெளிவே, தீன தயாளு = ஏழைகண் மீதிரக்க முடையாய், யாஅதன் = சூரபதுமனது சிங்கவாகனத்தை அதஞ் செய்தவனே, நதீ கால் = கங்காநதிக்கு மகனெனப்படுவோனே, நக = (உன்னதத் தானமாகிய) கந்தகிரி முதலிய மலைகளிலிருப்போனே, கா = வேண் டிற்றெல்லாந்தருங் கற்பகக் காவே, கனகா = பொன்னனைப்பானே, கா கா = என்னைக் காத்துக்கொள் காத்துக்கொள்.

செல்வமுடையான் செல்வனெனப்படுமாறு ஏமமுடையான் "ஏமன்" எனப்பட்டனன். ஏமம் = இன்பம். நவ நால் நாடா எனக்கூட்டுக. நால்வகை நாடு = குறிஞ்சி, நெய்தல், மருதம், முல்லையெனு நிலங்களிலுள்ள ஊர். நா = நடுவாகலின் நடுவனாகிய யமன் "நாவன்" எனப்பட்டனன். நதியை "நதீ" என்பது வடநூன்முடிபு. 'யா அதன்' என்பவற்றில் யா = வாகனம்; இரண்டும் வடசொற்களே. (௫)

வாசிவலாவிவிலாவசிவா தாசிரரீசசரீரசிதா
ஈசிசுதாவிவிதாசுசியீ ஏசினலோவவலோனசியே.

**வா**சிவலா = (மூங்கிலாற் செய்யப்பட்ட) இசைக்குழல் வல்லவா, வீவில் ஆவ = முடிவில்லாத பசுக்களையுடையாய், சிவா = சிவனே, தா = வன்மையே, சிரர் ஈச = நெடுங்கால மிருப்பவர்க்கும் ஈசுரனே, சரீர = விசுத்ததேக முடையானே, சிதா = சாந்த குணத்தனே, ஈசி சுதா = பார்வதி மைந்தனே, விவிதா = பல்வடிவ பேதத்து மிருப்ப வனே, வலோன் = வல்லோனே, சுசி ஈ = எனக்குத் தூய்மையை நல்கியருள். ஏசு இன்னல் ஓவ = எனக்குள்ள குற்றமுந் துன்பமு நீங்க, நசி = அவற்றைக் கெடுத் தருள். ஏ - ஈற்றசை.

வாசி = இசைக்குழல். வீவு - விவு எனக்குறுகிற்று. இன்னல் - இனல் எனத் தொகுத்தல் விகாரப்பட்டது. பிறவற்றிற்கும் இது கொள்க. (௬)

வேலவவேரரவேவலவே மாலசமாசசமாசலமா
நீலகலாபிபிலாகலநீ காலவகாமமகாவலகா.

**வே**லவ = வேலாயுதக் கடவுளே, வேர்அர = மூலஅரனே, ஏவல = எல்லா வுயிர்களையுந் தன்னாணைவழி நிற்க நடத்துவோனே, மால = பெருந்தன்மை யுடையோனே, சமாச சமாசல = தொகைப்பட்டு நிற்கும் இந்திரிய நிக்கிரகத் தன்மையால் அசையாதிருப்போனே, மாநீல கலாபி பிலா = பெரிய் நீலநிற மயிலையுடைய பில

மெனுங் குகையிலிருக்கின்ற குகனே, கால = காலத்துக்கதிபனே, அகாம = ஆசையில் லாதவனே, மகாவல = பெரிய சத்தியுடையாய், கலம் நீ = பிறவிக்கடலைக் கடக்க மரக்கலமாயுள்ள நீ, கா = என்னைக் காத்தருள். ஏ - அசை. (எ)

நாயனநானினினானயநா மேயனலேனனலேனயமே
மாயவமாலிலிமாவயமா சேயபணீககணீபயசே.

இனி நாய் அன்ன நான் = இனி நாயைப்போன்ற யான், நால் நய நா = நால் வகை நயமுடைக் கவியை, மேயன் அல்லேன் = உடையவனல்லேன், அனலேன் = உட்டியராகிய வெப்பு நீங்கப்பெறாதவன், (ஆகலின்) நயமே = சிவத்திருவே, மாயவ = எல்லா மாயமுமுள்ளவனே, மாலிலி = மயக்கமில்லாதவனே, மா வயமா = வலிய தேவ சிங்கமே, பயசே = பாலெனு மமிழ்தே, சேய = செவ்வேளே, பண் ஈக = நினக்குப் பணிசெய்தலை யெனக்கீந்தருள்வாயாக. கண் ஈ = ஞானக்கண்ணையுங் கொடுத்தருள்.

இனி நாயன நான் எனக்கூட்டுக. நால்வகைக்கவி = ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். பண் - முதனிலைத் தொழிற்பெயர்; பண்ணல் = பணி செய்தல், செய்தல். (அ)

பூமணமாருருமாணமபூ மாமறமானினிமாறமமா
தூமதுகாமமகாதுமதூ தாமதனீபபனீதமதா.

பூ மணம் ஆர் உரு = பொலிவுடைத் தெய்வமணம் பொருந்திய திருவுருவே, மாண் அம்ம = சிறந்த அழகினனே, பூ மா = எழிலும் பெருமையுமுடைய, மற மானினி = குறவர்குல மாதின், மால் = பெருமையே, தம மா = இருளைப்பெருக்குஞ் சூரபதுமனாகிய மாமரத்தின், தூ = பகையே, மதுகா = இன்பசொரூபனே, மம = (கைப்பாகிய) மமகாரத்தை, காது மதூ = அழிக்குந் தேனே, நீப = கடம்பணி கடவுளே, பல் நீத மதா = பலவகை நீதத்தோடுங் கூடிய மதமுடையோனே, தா மதன் = எனக்கு நல்ல வன்மையை நல்கியருள். (௯)

தேனடவீறுறுவீடனதே தீனதநாததநாதனதீ
தாநகவீசசவீகநதா மேனகமீதிதிமீகனமே.

தேன் நட = பேரின்ப நடனா, வீறு உறு வீடு அன்ன (பிரபஞ்சத்தை வெல்லும்) வீறுபாடார்ந்த வீடுபேறு போன்ற, தே = சொரூப தேவே, தீன = எளியனிடத்து மிருப்பவனே, தநா = செல்வனிடத்து மிருப்பவனே, தத நாதன் = சுவானுபூதி வியாபக அருணகிரிநாத ருடைய, அதீதா = கடவுளே, நக ஈச = குறிஞ்சிக்கிழவனே, சவீ = பரஞ்சுடரே, கந = நிறைந்துள்ளோனே, மீ = சிதாகாசமே, கனமே = சீர்மையே, மேல் நகம் தா = எனக்கு மேலான இடத்தைக் கொடுத்தருள். ஈ திதி = அங்ஙனங் காத்தலையுஞ் செய். 

ததம் = விசாலம். நகம் = மலை, பூமி; பிங்கலந்தை காண்க. மேனகம் தா எனக்கூட்டுக. (௧0)

திருமாலைமாற்றுப்பொருண் முற்றிற்று.

## ககூ. ஒட்பமுணர்த்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மரத்தழை மலர்க ணீளங் குறுமைபன் மதர்ப்பு நொய்து
விருத்தமை பசுமை செம்மை வெண்ணிற முதல வாய்ச்செய்
கருத்தினை யெவரே கண்டார் காசினி படைத்த வேது
விரித்திடல் பொருந்த வென்றோ தெனைக்கொள்கோ வேற்பெம் மானே. (க)

அளவையி லடங்கா தெல்லா மாற்றடல் வாய்ந்த தெய்வங்
கிளருரு வருளிற் கொள்ளா தெனல்சிற வாது கேடில்
உளமவிர் கடவு ளுேக்கி லுலகமா முலகர் போக்கில்
வளர்தலஃ தாரா தென்றோ தெனைக்கொள்கோ மலர்வேற் றேவே. (உ)

வதனமும் விழியுந் தோளும் வாய்சுழி யிலஞ்சி தாளும்
மதனுறு நளின மாயே வயங்குற மணிமால் பார்வைப்
பதுமநின் றுதித்த மாதர் மணந்தவன் பாலத் தேய்கட்
பதுமம்வந் துளனன் னுேன்சீர் பாடுத லெனது பேறே. (ங)

கமலேசா தார ணக்கோ கனதம்வந் தேற்ரு ளப்பேர்
நிமலன்மா தேவி மார்க டோன்றுபூ நிகழ்சித் தாயே
கமழுமே துவினன் னுேர்மா கமலேக ளாவ ரென்னு
இமிழல்வே ளாண்மை யென்றோ தெனைக்கொள்கோ விலேவேற் றேவே. (ச)

தாமரை மலரில் வைகுந் தன்மையான் மலரோ னுஞன்
ஓமறை யோது வோனன் னுேனரி பிறவான் மாக்கள்
வாமவு ளிதய மாமுண் டகந்தொறும் வதிகு கேசன்
மாமல ரோனே யென்றோ தெனைக்கொள்கோ வடிவேற் றேவே. (ரு)

---

உ. "மலர்வேல்" என்னுமிதுவே இக்காண்டத்து கூ-வது பத்தின் ச-ல் "அலர்வேல்" எனவும், கேத்திரகாண்டத்து முதற்பத்தின் ச-ல் "பனிமல ரயில்" எனவும் வந்துளது. வரலாறும் அவற்றின் கண்ணேயே காணலாம்.

ச. "இலேவேல்" என்னுமிது, கதிர்காமந் தரிசிக்கப்போந்தாரை அத்தலச் சார்வான அடவியில் யானேயொன்று மறித்துக் கொல்ல முயன்றபோது அவருள், **சிகண்டி முனிவர்**, ஒரு வெற்றிலேயையெடுத்து 'நீ இறைவன் வேலாகச் சென்று கொல்க' என்றெறிந்தபோது அந்த யானேயைக் கொன்றருளியதாம்.

இமிழ்தல் — "இமிழ்தல் விம்மல் - - - - யாழ்நரம் போசை" எனப் **பிங்கல நிகண்டார்** கூறுமாற்ருனே ஒலித்தலில் வைத்துரைக்கப்படும். 'இமிழ்' ஒலியெனப்படுமாறு "தெரியிமிழ் கொண்டநு மியம்போல்" என்ருர் **மலேபடுகடாந்தினரும்**. இங்கே கூறலின் மேற்று.

**கூ**ரிய மனத்தின் கண்ணே குறித்துள பொருளாங் கூத்தப்
பேரிய வுயிரைப் பாட்டிற் பிணைத்தயர் சிருட்டி வல்லார்
வீரிய முருக வேளை விலக்கிடின் விரிஞ்சன் போற்பல்
சூரிட ரடைவா ரென்றே தெனைக்கொள்கோ சுடர்வேற் றேவே. (௬)

**பொ**ன்றினர் தமையோர் கூற்றா லுயிர்த்தெழப் புரிந்த தேவின்
மன்றலா ரடியை நாடி மகிவரைந் தகைப்பா டாற்றால்
என்றுமே கிழியா தென்பாட் டென்பதைப் புலமை யோடு
நின்றுளீ ருணர்மின் மேலே நிகழ்த்திய தேவேற் றேவே. (௭)

**பு**ழுக்குடை யுடம்பின் றேற்றப் பொலிவினுக் குணவு வேண்டல்
இழுக்கமில் செயல்போற் றேவ விறைஞ்சனு முயிர்க்கா மாற்றா
அழுக்குள மெறும்பு கோச மணைத்துமே டுறனு முள்கா
வழுக்கொளு மன்றோ வென்றோ தெனைக்கொள்கோ மயிலூர் தேவே. (௮)

**பொ**ய்யழுக் காறு கோபம் பூரணற் பழித்தல் கீர்த்தி
வெய்யசொற் புகற லென்னு மைந்தையும் விடுத்தன் பானே
செய்யறப் பலனைக் காண்பார் தேவரே யாவ ரேனைக்
கையரைக் கழிக்கு மென்கோ கதிர்மணி வேற்பெம் மானே. (௯)

**ப**சியினு மிகுந்த வாதை யிலதெனும் பான்மை தேர்ந்தார்
பிசியறு மயில்வே டொண்டர்ப் பேணுவா ருணவே யூட்டி
நிசிதபு புகழாம் வேத நிகழ்த்திய முனிவ னேத்தும்
உசிதவ ளாகத் தாள்பங் கனதுள முவப்ப வாழ்வார். (௧0)

இரத்தாக்ஷி௵ மார்கழி௴ ௨௪௳ புதவாரம்.

—

௬. கூத்தப் பேரிய வுயிர் = கூத்தனென்னும் பெயரையுடைய உயிர்.

௧0. 'வளாகத்தாள் பங்கன்' என்பது வள்ளிபங்கன், வள்ளி வயாவன் எனும் பொருளைத்தரும். பங்கம் (ஸஜ்ஞ:) = விருப்பம்; நிகண்டு - **விச்வமேதினி** காண்க, வளாகம் = தினைப்புனம்.

# ௨0. திருத்தகுதுணிபு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐகாரமொழிந்தநெடிலும் ஒற்றுமிலாச்செய்யுள்.

இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடை அடியெதுகை.

அட்டோத்தர சதாக்கரம்.

*தனதன தனதன தனதன தனதன*
*தனதன தனதன தனன.*

சுரமக ளெழிலுறு குறமக ளெனுமிரு
சுகுண மடவியரை வதுவை
குரவரெ வருமடி தொழுமிளி ரடனுதி
கொளுமயி லிறைபுரி தகைமை
தரணியு முவணேயு மிடரிலு வகையளி
தழுவவ ஊதலெனு முடிவு
விரதநி புணருமை யுளதும டவரறி
விதியில ரெனறகு துணிபு. (க)

பழுதறு மெழுமுனி வருநணி தொழவுள
பகவனெ னுமுருக னடியை
உழுவலி னிணேபவ ரழுகைப லவழுகை
யொழியவ ஊயுமித ஞெழிவு
தழுவுறு பதடிக டொழுதகை யுளுமசி
சவிசெய வருமிவ ணருளே
எழுதுரை களிலிழி வெழுதுத லதிசய
மிலேயென லுமடிக டுணிபு. (௨)

இழிமொழி களேயெணி முருகனே விடறடி
யுளியடி நிலேயுற லெனவை
கழிதல றுதிருவு மருகும வனமல
கமலச ரணிணேவு பெருகி

௨. அசி = ஆயுதம்; **சகரவேதுகை.**

௩. தடி உளியடி நிலேயுறல் என = உலக்கை (தேய்வினல்) உளிப்பிடியளவைப் பொருந்துதல் போல.

ஐ கழிதலறு திருவும் = அழகு நீங்காத செல்வமும்.

அழிவில முதமுற லொலிமுனி மருவின
னறையிவ னுமளவி னடலை
ஒழிதலி னணவின னுவகையெ னவுணரு
முளமுமு வகையுற றுணிபு. (௩)

இரத்தாக்ஷிவரு தைமீ ௨௨உ சனிவாரம்.

## ௨௧. மணிமஞ்சரி.

கட்டளைக்கலித்துறை.

வெம்பந்த நீத்தருள் வேலா யுதனை விரும்பெனக்குச்
செம்பந்த ரிட்டு மிடாதும் வடதிசை தென்றிசைக்கண்
அம்பந்த மாக வளித்த வுணவல்லிக் கேணியில்வாழ்
சம்பந்த னில்லத்தி லிட்டவுண் டிக்குச் சமமல்லவே. (௧)

சைவஞ் சிறந்த தெனும்வாய்மை தேர்ந்து சழக்கரவாம்
பொய்வஞ் சகவதர் நீத்தா ரிதயப் பொருட்டுறசேய்த்
தெய்வந் தணவா வருள்செய்க நாற்பது சேர்வருடந்
தைவந் திலகுசென் னைத்தமிழ் வேத சபைதனக்கே. (௨)

நீற்றிற்குங் கண்மணி மாலைக்கு நின்றிரு நாமசெப
ஆற்றிற்கு மாசைப் படுமெங்க ணெஞ்ச மறிந்தணைப்பார்
பேற்றிற் குரியபி ரானேயெங் தாய்வள்ளி பேணுமின்பே
சோற்றிற்கு நான்படும் பாடிங்குச் சொல்லி முடிவதன்றே. (௩)

ஊர்வெறுத் தேனுற வோர்வெறுத் தேன்மனை யோடுசெல்வச்
சீர்வெறுத் தேன்பிர சங்கங்கள் கூடுந் தெருவெறுத்தேன்
ஏர்வெறுத் தேன்வயிற் றுப்பசி யாக வியம்புமொரு
சூர்வெறுத் தேனல்ல னென்செய்கு வேனயிற் றூயவனே. (௪)

கூடல் விதிக்கின்ற வேதம் வழுத்துங் குமரநின்றாள்
பாட விதித்த கருணையெங் கேயயிற் பாகுவெங்கே
தேட விதித்த பெருமையெங் கேசுர சேனையெங்கே
நாட விதித்த நலனதெங் கேநெஞ்ச நைகின்றதே. (௫)

---

௧.— இச்செய்யுளு மிதன்கட்குறிப்பிடு செய்கையும் 24 - 3 - 1910 - ல் திருவல்லிக்கேணியில் நிகழ்ந்தன.

௩.—இச்செய்யுள் 2 - 12 - 1921 - சுக்கிரவாரத்திரவு புதுப்பாக்கத்தில் நிகழ்ந்தது.

௪, ௫.—இச்செய்யுள்கள் 3 - 12 - 1921 - சனிவாரம் புதுப்பாக்கத்தில் நிகழ்ந்தன.

நாட்டுத் தலைவ ரிருந்தென்கொல் போயென்கொ ணுகரிக
வீட்டுத் தலைவ ரிருந்தென்கொல் போயென்கொல் வேண்டுமென்றன்
பாட்டுத் தலைவன் மயிலூர் பிரான்றிருப் பாதநட்பே
ஏட்டுத் தலைமையும் வீட்டுத் தலைமையு மீபொருளே. (௬)

ஊட்டங் கடக்க வியலார் கருப்பத் துதித்திரண்டு
நாட்டந் திகழிக் குழவியைக் காவென நாரணன்மேற்
பாட்டம் பிறங்கப் படிப்பதைச் செவ்வேட் பரமனுக்குங்
கூட்டும் புலமையென் போல்வார் கொளார்கதி குன்றுமென்றே. (௭)

வாக்கி னினைப்பா லளவிடற் கொண்ணுத மானவள்ளி
நோக்கி னுளத்தை யறிந்துண் மகிழ்ந்து நுதியயிலோன்
பூக்கிளர் மாலை புனைந்து மகிழ்ந்ததைப் புல்லர்கதை
ஆக்கி நடித்திடு நாடகம் பார்ப்ப தருளழிவே. (௮)

மாலா யுதத்து மடங்கா வசுரனை மாய்த்தசெம்மால்
காலா யுதத்தைக் கொடியாய்ப் பிடித்தோய் கனசந்தற்கொள்
கோலா யுதக்குக னேயெனை நைக்குங் கொடும்படர்மேல்
வேலா யுதத்தைச் செலுத்தாமைக் குன்றன் விடையெதுவே. (௯)

## பலதிறப்பொருட்காண்ட முற்றிற்று.

---

| | |
|---|---|
| திருவிளையாடற்காண்டச்செய்யுள் | ௬௩௦ |
| கேத்திரகாண்டச்செய்யுள் | ௧௨௦ |
| கடாவிடைக்காண்டச்செய்யுள் | ௧௩௦ |
| வேட்கைக்காண்டச்செய்யுள் | ௧௦௦ |
| பலதிறப்பொருட்காண்டச்செய்யுள் | ௨௧௨ |
| ஆகக்காண்டம் ரு - க்குந் திருச்செய்யுள் | ௧௧௯௨ |

## ஸ்ரீமத் - குமாரசுவாமிய முற்றிற்று.

---

குமாரகுருபரன் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

# புத்தகவிஷயறிவிப்பு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| (1) செக்கர்வேள் செம்மாப்பு முதற்காண்டமும், செக்கர்வேளிறுமாப்பும் ஒன்ருனது | 0 | 6 | 0 |
| (2) திருப்பா ; திட்பமெனும் உரையோடுங்கூடிய 2 - புத்தகமும் (இதன் அருமை பெருமை இங்ஙன மெழுதி முடியா) | 10 | 0 | 0 |
| (3) தகராலயரகசிய மூலமுமுரையும் ; (சைவரும் பிறரும் படித்துணரத்தக்கன. வேதத்தாற்பெரிது மாதரிக்கப்பட்டது. சுப்பிரமணிய பரத்துவபோதகமாம்) | 2 | 8 | 0 |
| (4) பரிபூரணனந்த மூலமுமுரையும் ; (சைவமஹா சாஸ்திரம்) | 2 | 0 | 0 |
| (5) 3 - 4 - ஆம் புத்தகங்களும் வசன சுத்தாத்வைத நிர்ணயமும் ஒன்ருன காலிகோ பைண்டு | 4 | 0 | 0 |
| (6) சிவஞானதீபம் ; (10 - இயல்களாய் வசனவடிவாயுள்ள இஃது அனுட்டான விதியியலிற் குமாரக்கடவுள் வழிபாடு மந்திரசகிதமாகக் கூறுவது) | 0 | 8 | 0 |
| (7) சிறுநூற்றிரட்டு ; (சண்முககவசம் முதலிய 10 - நூல்களுள. கவசம் அனேகரைக் காத்தருளிய மகிமையுடைத்து. பஞ்சாமிர்தவண்ணமோ, குமாரபகவான் தனக்குப் பிரியமானதென்று உவந்து கொள்ளப்பட்ட பாராயணநூல். 3 - ஆம் பதிப்பு) | 0 | 6 | 0 |

இன்னும் பலவுள ; பெரிய பிரகடனங்களி லறிக.

பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளா லருளிச்செய்யப்பட்ட இவைகளும், ஸ்ரீமத் - குமாரசுவாமியமும்— சென்னைத் திருவல்லிக்கேணி வீரராகவ முதலித் தெரு 135 - வது வீட்டில் மகா - ா - ா - ஸ்ரீ V. இராஜாபாதர் முதலியாரிடத்திற் கிடைக்கும்.

120803